பொதிகைத் தென்றல் பொன்மனச் செம்மல்
மதியால் மகிழ்வுடன் மணிவிழாக் கண்டவர்
வள்ளுவர் குறளை வாழ்வாய்க் கொண்டவர்
என்போ லானார் ஏல மானார்
கள்ளம் கபட மில்லாப் புலவர்
உள்ள முயர வுரைபல தந்தவர்
தேவ நேயம் தெளித்துத் தந்தவர்
மூவர் போல முத்தமிழ் காத்தவர்
தமிழ்நலம் காத்திடும் தமிழ்ப்பற் றாளர்
அமிழ்த மழைபோ லாக்கினார் நூற்கடல்
அன்னைத் தமிழின் அருந்தமிழவடி வவரே!

- ஆ. நெடுஞ்சேரலாதன்

2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017


இளங்குமரனார் தமிழ்வளம்

4

இளங்குமரனார்

# தமிழ்வளம்

4



## இலக்கண அகராதி

(ஐந்திலக்கணம்)

இளங்குமரனார்

# தமிழ்வளம்

## 4

### இலக்கண அகராதி

*(ஐந்திலக்கணம்)*

1. எழுத்து, உ. சொல், ௩. பொருள்,
4. யாப்பு, ௫. அணி

*ஆசிரியர்*

*முது முனைவர்* **இரா. இளங்குமரன்**

**வளவன் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

*நூற் குறிப்பு*

| | |
|---|---|
| நூற்பெயர் | : **இளங்குமரனார் தமிழ்வளம் –4** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : இ. இனியன் |
| பதிப்பு | : 2009 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 14+ 538 = 552 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **515/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை ஓவியம் | : ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

## பதிப்புரை

இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர் **அய்யா இளங்குமரனார்** அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.

அந்த வகையில் 2010 - ஆம் ஆண்டு இப்பெருந் தமிழாசான் 81 - ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் தமிழ்மொழி - இன - நாட்டின் காப்பிற்காகவும், மீட்பிற்காகவும், மேன்மைக்காகவும் இவர் எழுதிய அனைத்து அறிவுச் செல்வங்களையும் தொகுத்துப் பொருள் வழிப் பிரித்து 20 தொகுதிகளாக வெளியிட்டுள்ளோம். மதுரைத் தமிழ்ச் சங்கச் **செந்தமிழ் இதழுக்கும்,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திவரும் **செந்தமிழ்ச் செல்வி, குறளியம்** மற்றும் பிற இதழ்களுக்கும், மலர்களுக்கும் இவர் எழுதிய அறிவின் ஆக்கங்களைத் தொகுத்துத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளோம்.

இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.

இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர்.

தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப்பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.

இவர் எழுதிக் குவித்த தமிழ் அறிவுச் செல்வங்களை அவரிடமே வேண்டிப் பெற்று 20 தொகுதிகளாக **இளங்குமரனார் தமிழ் வளம்** எனும் தலைப்பில் பொருள்வழிப் பிரித்து வெளியிடுகிறோம். தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப் பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற்குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழி நூல் கதிரவன் பாவாணரையும், தமிழ்க் மொழிக் காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ் நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்த் சான்றோராக விளங்கும் ஐயா இளங்குமரனார் வாழும் காலத்திலேயே அவர் நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத்தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.

> **“ ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்**
> **முன்னேற்றம் ஒவ்வொன்றும்**
> **உன்முன் னேற்றம்!**

.......... .....

**இதுதான்நீ செயத்தக்க**
**எப்பணிக்கும் முதற்பணியாம்**
**எழுக நன்றே."**

*எனும் பாவேந்தரின் தமிழியக்க உணர்வுகளை நெஞ்சில் ஏந்தி வாழ முற்படுவோம்.*

***- பதிப்பாளர்.***

# பெறும் பேறு

**வளம்** *எங்கே இருக்கிறது?*

*வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!*

*வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?*

*வளத்தைத் தேடும்* **உளம்** *இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?*

*வளத்தின் அளவு என்ன?*

***வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!***

*உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!*

*வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!*

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

*தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?*

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம். (உரி.7) உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்; "**வளம் பட** வாழ" வேண்டாதார் எவர்? **வளம் பெற** வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு, "**அளந்து கடை அறியாவளம்**" என்பது (25:33-34)*

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்! **எளிமை, இனிமை, இறைமை, நிறைமை** என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

***வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.** ஆனால்,*

*வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!*

*பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன!* ***பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தார்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!***

*புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,*

**"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

*என்னும்* ***நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!***

*என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.*

*பிறந்தநாள் :* ***30.01.1930***

*ஆசிரியப் பணி ஏற்ற நாள்:* ***08.04.1946***

*கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால்* ***1949, 1950, 1951*** *ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர் இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ* ***43*** *ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!*

*புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன்.*

பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச்செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ.சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

“அன்பும் அறிவும்” என்னும் நூல் தொடங்கிச் செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம் எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை

காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப்பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வாராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்** (ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது. அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம்

அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பதே, **“இளங்குமரனார் தமிழ்வளம்”** என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பல்லபல. தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். “நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா” என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!

“நெல்லுக்கு உமியுண்டு”

“நீருக்கு நுரையுண்டு”

“புல்லிதழ் பூவுக்கும் உண்டு”

“குறைகளைந்து நிறை பெய்து”

“கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை”

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்


பதிப்புரை ........ iii

பெறும் பேறு ........ vi

## நூல்

**இலக்கண அகராதி**

ஐந்திலக்கணச் சுருக்கம் ........ 1

1. எழுத்து ........ 5

2. சொல் ........ 79

3. அகப்பொருள் ........ 160

புறப்பொருள் ........ 221

4. யாப்பு ........ 349

5. அணி ........ 419

# இலக்கண அகராதி

*(ஐந்திலக்கணம்)*

*எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி*

# ஐந்திலக்கணச் சுருக்கம்

*தமிழ் இலக்கணம்,* **எழுத்து சொல் பொருள்** *எனத் தொல்காப்பியத்தில் நடையிட்டது.*

*எழுத்தும் சொல்லும் அந்நிலையிலே நின்றன.*

*பொருள் முக்கூறுபடுவன ஆயிற்று .*

*தொல்காப்பியர் கூறும் அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல் என்பவை இறையனார் களவியல், நம்பியகப்பொருள், மாறன் அகப்பொருள் என* **அக நூல்கள்** *ஆயின.*

*புறத்திணை இயல் அகத்திணை நூல்கள் போல் விரிவுறாமல்* **புறப்பொருள் வெண்பா மாலை** *என்று அமைந்தது. அதன் பின்னர்ப் புறப் பாடல்களைத் திரட்டிய புறத்திரட்டு என்று ஒரு தொகை நூல் உருவாகியது. ஐந்திலக்கணங்களையும் கூறும் நூல்களில் ஓரளவால் சொல்லப்பட்டு அமைந்து நின்றது.*

***யாப்பு நூல்****, காக்கை பாடினியம் சிறு காக்கைபாடினியம் அவிநயம் நற்றத்தம் எனப் பலப்பல நூல்களாய்க் கிளர்ந்தன.*

*எனினும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்பவை தோன்றிய பின் - அவற்றுக்கு அரிய பெரிய உரை விளக்கம் வாய்த்த பின் - பழைய யாப்பு நூல்களையெல்லாம் அவ்வுரைகளின் வழியாக அறியுமாறு அமைந்தன. தொல்காப்பியச்* **செய்யுளியல் கொண்டு கிளர்ந்தனவே யாப்பு நூல்களாம்**.

*இனித் தொல்காப்பிய* **உவமை இயல்** *கொண்டு கிளர்ந்தன தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பவை. விரிய விரிய அணிகளைப் பெருக்கின; அதனை ஒட்டி வடமொழி வழியே அணி இலக்கணப் பெருக்கம் ஏற்பட்டு, உவமை என்னும் தாயணியின்* **இயற்கை எழில் சிதையலாயிற்று. சொல்லணி** *என்னும் நயமிக்க அணி, மொழி நலனுக்கு எத்தகு கேடு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்ய அணி நூல்கள் இடம் தந்தன.*

**பாட்டியல்** நூல்கள் எழுத்து பா முதலியவற்றுக்கும் வருணம் காட்டியும் நச்செழுத்து, அமுத எழுத்து, பொருத்தம் கணியம் என இயற்கைக்கு மாறாக நடையிட்டுச் சில நூற்றாண்டுகள் (18, 19) இலக்கியத்தின் **இயற்கைவளம்** - **பொருள் நயம்** - கெடுத்தன.

இந்நிலைக்குப்பின் இயற்கையொடு தழுவிய எளிய நடை, இடரிலா வகையில் பொருளறி வாய்ப்பு என்பவை அமையப் பாட்டியற்றும் நிலை படிப்படியே அமைந்தது. உரைநடை யாக்கமும் உருப்பெற்றது.

பாடலொடு, உரைப்பா, உரைவீச்சு, புதுப்பா, ஐக்கூ, துளிப்பா எனப் பல்லபல கிளர்ந்தன.

இவ்வகையில் **ஆக்கமும் கேடுமாம் வகையில் தமிழ் இலக்கண இலக்கியங்கள் வளர்ந்து கொண்டுள.**

எல்லா வகைப் பாவகைக்கும் இடம் தர, எல்லா வகைப் புதுமைக்கும் வளர்ச்சிக்கும் இடம் தர அமைந்த நூல் தொல் காப்பியம். அதன் வரம்பு - மொழிக் காவல் வரம்பு - ஒன்றே ஒன்று. **"மொழிக்கேடு ஆகா வகையில் மொழியைப் பயன் படுத்துக"** என்பதே!

"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்" என்பது சான்றோர் ஆணை!

விரிவு பட்ட இலக்கணங்களில் ஓரளவால் சிலவற்றைத் தொகுத்து **எழுத்து, சொல், அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, அணி** என்னும் முறையில் அகரப்படுத்தி வேண்டும் அளவால் பொருளும் விளக்கமும் எடுத்துக் காட்டும் தரப்பட்ட நூல் இஃதாகலின் **"ஐந்திலக்கணச் சுருக்கம்"** எனப்பட்டதாம்!

இதன் எழுத்தும் சொல்லும் முன்னரே **சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக** வழியே வெளிப்பட்டது. இதுகால், ஐந்திலக் கணங்களும் ஒரு மொத்தமாக **வளவன் பதிப்பக** வழியே வெளிப்படுகின்றது.

தொல்காப்பிய உரைகள், அகராதிகள், இலக்கணப் பேரகராதி எனக் கருவி நூல்களைத் தொகுதி தொகுதியாக வெளியிட்ட தமிழ்மண் பதிப்பகம், இச்சுருக்க அகராதியையும் வெளியிடுகின்றது. இவ்வெளியீட்டுப் பொறுப்பை மேற் கொண்ட தமிழ்த்தொண்டர், தமிழ்ப் போராளி, தமிழ்க் கொடைஞர்

***கோ.இளவழகனார்க்குப்*** *பதிப்பாளர் இனியர்க்கும் நன்றியுடையேன்.*

*இந்நூல் தொகுப்பை உளங்கொண்டு திரட்டிய புலமையர் கருப்பக்கிளர் புலவர்* ***சு.அ.இராமசாமி, புலவர் வே.வடுகநாதன்*** *என்பார். அத்தொகையை வேண்டும் அளவால் தொகுத்தும் விரித்தும் எடுத்துக் காட்டுத் தந்தும் விளக்கிய அளவே எம் பணியாம். அவர்கட்கு எம் நன்றியறிதல் உடையது.*

***அணியிலக்கணப் பகுதியின் விரிவு ஆய்வு செய்வார் ஆய்வுக்கு இடமாகுதல் கருதியதென அமைதி கூறுதல் சாலும்!***

தமிழ் உவமைத்தாய் தனிப்பேரெழிலும்,
அதனைச் நூார் தண்ணொளிக் கதிர்வீச்சும்
எத்தனை எத்தனை மயக்கப் பளிச்சுகளுக்கு
இடம் தந்து ஆரிய வழிப்பட்டன என்பதை
முற்றிலும் இன்றேனும் ஓரளவேனும் அறிந்து
கொண்டு இயற்கை எழிலணி சிறக்க உதவுமென
வகை பல எடுத்துக் காட்டப்பட்டுள
விலக்கலாமே எனின், கேட்டையும்
விலக்கலாமே எனின், கேட்டையும்
விளங்கி விலகலாமே என்பது உள்ளீடாம்

*காலந்தோறும் வளரும் மொழி இலக்கணக் கூறுகள், தொகையாக்கப் படுத்துதல் கட்டாயத் தேவை. அதனைச்,* ***செம்மொழி அமைப்பு*** *மேற்கொண்டு தக்கவர்கள் கூட்டுழைப்பால் உருவாக்கப்படின், எதிர்கால மொழி நலப்பாட்டுக்கு அரிய கருவியாக அமையும் என்பது உறுதியாம்.*

*வாழிய நலனே! வாழிய நிலனே!*

***இன்ப அன்புடன்***

***இரா.இளங்குமரன்***

# 1. எழுத்து

## அ

*தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் வரும் முதல் எழுத்து. உயிர் முயற்சியாற் பிறக்கும் எழுத்துக்களுள் வாயைத் திறந்த அளவிலே ஒலிக்குங் குற்றெழுத்து. அஃறிணைப் பன்மைப் பெயரீறு. அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதி. ஆறாவதன் பன்மையுருபு; பெயரெச்ச வினையெச்ச வியங்கோள் விகுதி. இன்மை, எதிர்மறை, குறைவு, உடன்பாடு, தடை, பிறிது, வியப்பு இவற்றைக் காட்டும் ஒரு துணை வரவு (உபசர்க்கம்) எட்டென்னுந் தமிழ் எண்ணாக வருவதும் இவ்வெழுத்தே. பண்டறி சுட்டு அகச்சுட்டுகளுக்கு முன்னும் வரும். எடுத்துக்காட்டு : அக்காலம்; அந்த மனிதன், அந்தக் கோயில். இவ்வெழுத்து அகரம்; அகாரம், அஃகான் எனச் கரச்சாரியையும் காரச்சாரியையும் கான்சாரியையும் பெற்று வழங்கும்.*

***அகச்சுட்டு*** *- அ, இ, உ என்னும் எழுத்துகள் சொற்களுக்கு உள்ளேயே நின்று பொருளைச் சுட்டிக் காட்டுமாயின் அப்பொழுது அவ்வெழுத்துகள் அகச்சுட்டு என்று கூறப்பெறும்.*

**(எ.டு) அவன், இவன், உவன்.**

**அகலவுரை :**

*விரித்துரை. அஃது இலக்கணமும் இலக்கியமும் எடுத்துக் காட்டிப் பொருள் விரித்துரைக்குஞ் சிறப்புரை.*

**அகவினா :**

*சொற்களுக்குள்ளேயேயிருந்து வினாப் பொருள் தரும் சொற்களுக்கு அகவினா என்று பெயர். (எ.கா) எவன், யாது, ஏது?*

***'அகம்' என்பதற்குச் சிறப்பு விதி :***

*அகம் என்னும் உள்ளிடப் பெயர் முன் செவி, கை என்னும் சினைப் பெயர்கள் வந்தால் நிலை மொழியிறுதி மகரம் வன்மைக்கு இனமாகத் திரிதலேயன்றி அதன் நடுவில் நின்ற ககர மெய்யும் அதன் மேலேறிய அகரவுயிருங் கெடும்.*

**(எ.டு) அகம் + செவி = அஞ்செவி "அஞ்செவி நிறைய"**

**அகம் + கை = அங்கை "அங்கையுள் நெல்லி"**

*அகம் முன் வரும் கண், தண், சிறை என்பனவும் அவ்வாறு வரும்.*

*அகம் + கண் = அகங்கண் ; அங்கணர் = சிவபெருமான்.*

*அகம் + தண் = அந்தண் ; அந்தணர் = அருளாளர்.*

*அகம் + சிறை = அஞ்சிறை ; அஞ்சிறைத் தும்பி*

**" அகம்முனர்ச் செவிகை வரின் இடையன கெடும்."**

**- நன் 222.**

**அகன் :**

*அகன்ற என்னும் பொருளில் வரும் பெயரெச்சம். (எ.டு) அகன்மனை, அகன் நிலம்.*

**அக்குச் சாரியையின் ஈறு திரிதல் :**

*எவ்வகைப்பட்ட பெயர் முன்னும் வல்லெழுத்து வருமிடத்து அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முடியத் தோன்றாது. அதனாற் பற்றப்பட்ட வல்லெழுத்தாகிய மெய் தனக்கு மேல் நின்ற மெய்யொடும் கெடும். (எ.டு) குன்றத்துக் கூகை > குன்றக் கூகை, மன்றத்துப் பண்ணை > மன்றப் பண்ணை.*

**அசை நிலை ஒகாரம் :**

*செய்யுளின் ஈற்றில் ஓகாரம் அசையாக நிற்பது. (எ.டு) கேண்மினோ*

**அசை நிலையளபெடை :**

*அசை கோடற்பொருட்டுக் கொண்டதோர் அளபெடை.*

**(எ.டு) "ஓ ஓ இனிதே எமக்கிந் நோய் செய்தகண்"**

**தாஅ மிதற்பட் டது.**

**திருக். 1176**

**'அது' என்பதற்குச் சிறப்பு விதி :**

*'அது' என்னுஞ் சுட்டுப் பெயரின் முன் வருமொழியாக வருகிற 'அன்று' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று செய்யுளில் 'ஆன்று' என முதல் நீளும்.*

(எ.டு) அது + அன்று = அதான்று.

**"அதுமுன் வரும்அன்று ஆன்றாம் தூக்கின்"**

**- நன். 180**

**அத்துச் சாரியையின் திரிபு :**

*அத்துச் சாரியையின் அகரம் அகரவீற்றுச் சொல்முன் கெடும்.*

**(எ.டு) மகத்துக்கை**

**"அத்தின் அகரம் அகரமுனை இல்லை"**

**- நன். 252**

**அந்தில் ஆங்கு என்னும் இடைச் சொற்கள் :**

*அந்தில், ஆங்கு என்னும் இடைச் சொற்கள் அசை நிலைப் பொருளாகவும் இடப் பொருளாகவும் வரும்.*

**(எ.டு) "அந்தில் கழலினன் கச்சினன்" – அசை நிலை**

**"வருமே சேயிழை அந்தில் கொழுநற்காணிய" – இடம்**

**"ஆங்கத் திறனல்லயாம் கழற" – அசைநிலை**

**"ஆங்காங் காயினும் ஆக" – இடம்**

**"அந்தில் ஆங்கு அசை நிலை இடப் பொருளவ்வே"**

**நன். 437**

**அம் என்னும் இறுதி உணர்த்தும் பொருள்கள் :**

*அம் என்னும் இறுதி, வினைமுதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப் பொருளையும் உணர்த்தும்.*

**(எ.டு) எச்சம் – வினைமுதற் பொருள்**

**தேட்டம் – செயப்படுபொருள்**

**நோக்கம் – கருவிப் பொருள்**

**'அம்ம' என்னும் இடைச் சொல் :**

*அம்ம என்னும் இடைச் சொல் உரையசைப் பொருளதாகியும், கேளும் என்ற ஏவற் பொருளதாகியும் வரும்.*

**(எ.டு) 'அது மற்றம்ம' – உரையசை**

*அம்ம வாழி தோழி - இதில், "ஒன்று சொல்வேன் கேள்" என்னும் ஏவற் பொருளதாய் வந்தது.*

**"அம்ம உரையசை கேண்மின்என் றாகும்"**

**- நன். 438**

**அம்மின் இறுதி திரிதல் :**

*அம்மின் இறுதியாகிய மகர மெய் கசதபக்கள் வருமொழியாக வந்த காலத்துத் தன் வடிவு திரிந்து ங ஞ நக்களாகும்.*

**(எ.டு) புளியங்கோடு, புளியஞ்செதில், புளியந்தோல்**

**அல்வழிப் புணர்ச்சி :**

*வேற்றுமை அல்லாத வழிப் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாகும். அதுவினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்னும் ஐந்து தொகை நிலைத் தொடரும், எழுவாய்த் தொடர், விளித் தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், இடைச் சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத் தொடர் என்னும் ஒன்பது தொகாநிலைத் தொடர்களுமாகப் பதினான்கு வகைப்படும்.*

(எ.டு) தொகை நிலைத் தொடர்கள் :

| | | |
|---|---|---|
| **கொல்யானை** | – | **வினைத்தொகை** |
| **கருங்குதிரை** | – | **பண்புத் தொகை** |
| **பனைமரம்** | – | **இருபெயரொட்டுப் பண்புத் தொகை** |
| **மதிமுகம்** | – | **உவமைத் தொகை** |
| **கபிலபரணர்** | – | **உம்மைத் தொகை** |
| **கருங்குழல்** | – | **அன்மொழித் தொகை** |

தொகா நிலைத் தொடர் :

| | | |
|---|---|---|
| **வளவன் வந்தான்** | – | **எழுவாய்த் தொடர்** |
| **முருகா வா** | – | **விளித்தொடர்** |
| **வந்தாள் கோதை** | – | **தெரிநிலை வினைமுற்றுத் தொடர்** |

| | | |
|---|---|---|
| **பொன்னிவன்** | **–** | **குறிப்புவினைமுற்றுத்தொடர்** |
| **வந்த பொன்னி** | **–** | **பெயரெச்சத் தொடர்** |
| **வந்து போனான்** | **–** | **வினையெச்சத் தொடர்** |
| **மற்றொன்று** | **–** | **இடைச் சொற்றொடர்** |
| **நனி பேதை** | **–** | **உரிச்சொற்றொடர்** |
| **பாம்பு பாம்பு** | **–** | **அடுக்குத் தொடர்** |

***அல்வழியில் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் புணர்தல் :***

*வன்றொடரொழிந்த ஐந்து தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வருகிற வல்லினம் அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகும்.*

**(எ.டு) ஆறு + தலை = ஆறுதலை – நெடிற்றொடர்**

**எஃது + பெரிது = எஃது பெரிது? – ஆய்தத் தொடர்**

**வரகு + சிறிது = வரகுசிறிது – உயிர்த்தொடர்**

**வந்து + தந்தான் = வந்துதந்தான் – மென்றொடர்**

**எய்து + பொருள் = எய்து பொருள் – இடைத்தொடர்**

***அல்வழிப் புணர்ச்சி :***

*வேற்றுமை அல்லாத வழிப் புணர்வது அல்வழிப் புணர்ச்சி.*

***'அழன்' என்பதற்குச் சிறப்பு விதி :***

*அழன் என்னும் சொல்லின் னகரவீறு கெட வல்லெழுத்து மிக்கு முடியும்.*

**(எ.டு) அழன் + குடம் = அழக்குடம்.**

***அளபெடை :***

*செய்யுளில் ஓசை குறைந்து வருமாயின் அவ்வோசையை நிறைக்கும் பொருட்டு உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குரிய ஒலி அளவினும் மிகுந்தொலிக்கும். அவ்வாறு மிகுந்து ஒலிப்பது அளபெடை எனப்படும். உயிரெழுத்து அளபெடுப்பது உயிரளபெடை என்றும், ஒற்றெழுத்து அளபெடுப்பது ஒற்றளபெடை என்றும் ஆகும். அளபெடை என்பது மாத்திரை மிகுதல் என்று பொருள் படும். இவையேயன்றி இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை, அசைநிலை அளபெடை என்ற வேறு அளபெடைகளும் உண்டு.*

**அளவு கடந்து ஒலிக்கும் எழுத்துக்கள் :**

இசைத்தலும், அழைத்தலும், பண்ட மாற்றுதலுமாகிய விடத்து உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும் தமக்குச் சொல்லிய அளவைக் கடந்து ஒலிக்கும்.

**அஃகிய இ :**

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம். இவ்விகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிற் குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும். இதன் விளக்கத்தைக் குற்றியலிகரம் என்ற தலைப்பில் காண்க.

**அஃகிய உ :**

குற்றியலுகரம். குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம். ஓசை குறுகி ஒலிக்கும் உகரம் குற்றியலுகரமாகும். இது தனக்குரிய ஒரு மாத்திரையிற் குறைந்து அரை மாத்திரையாய் ஒலிக்கும். இது ஆறு வகைப்படும். இதன் விளக்கத்தைக் குற்றியலுகரம் என்ற தலைப்பில் காண்க.

**அஃகிய ஐ :**

ஐகாரக் குறுக்கம். அஃகுதல் = குறைதல். ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிற் குறைந்து ஒலிக்குமிடத்து ஐகாரக் குறுக்கம் எனப் பெயர் பெறும். இதன் விளக்கத்தை ஐகாரக் குறுக்கம் என்னுந் தலைப்பில் காண்க.

**அஃகிய ஔ :**

ஔகாரக் குறுக்கம். ஔகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிற் குறைந்து ஒலிக்குமிடத்து ஔகாரக் குறுக்கம் எனப் பெயர் பெறும். இதன் விளக்கத்தை ஔகாரக் குறுக்கம் என்னுந் தலைப்பில் காண்க.

**அஃகிய தனி நிலை :**

ஆய்தக் குறுக்கம். ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாய் ஒலிக்குமிடத்து ஆய்தக் குறுக்கம் எனப் பெயர் பெறும். இதன் விளக்கத்தை ஆய்தக் குறுக்கம் என்னுந் தலைப்பில் காண்க.

**அஃகிய மஃகான் :**

மகரக் குறுக்கம். மகரம் தனக்குரிய அரை மாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாய் ஒலிக்குமிடத்து மகரக் குறுக்கம்

*எனப் பெயர் பெறும். இதன் விளக்கத்தை மகரம் குறுக்கம் என்னுந் தலைப்பில் காண்க.*

**அஃகேனம் :**

*உயிர் எழுத்து வரிசையின் இறுதியில் வரும் புள்ளி வடிவான எழுத்து அஃகேனம் ஆய்தம் என்பதும் அது (ஃ).*

**அஃறிணையிற் பாற் பொதுப் பெயர் :**

*து என்னும் ஒருமை விகுதியையாயினும் வை, அ, கள் என்னும் பன்மை விகுதிகளையாயினும் பெறாது வரும் அஃறிணைப் பெயர்களெல்லாம், அத்திணை ஒன்று பல என்னும் இருபாற்கும் பொதுப் பெயர்களாம். இவை பால் பகா அஃறிணைப் பெயர்கள் எனவும், அஃறிணையியல் பெயர் எனவுங் கூறப்படும்.*

**(எ.டு) யானை வந்தது – யானை வந்தன**

**மரம் வளர்ந்தது – மரம் வளர்ந்தன**

**கண் சிவந்தது – கண் சிவந்தன**

**அஃறிணை ஒன்றன் பாற் படர்க்கைப் பெயர்கள் :**

*துவ் விகுதியை இறுதியிலுடைய பெயர்கள் அஃறிணை ஒன்றன் பாற்படர்க்கைப் பெயர்களாகும்.*

**(எ.டு) குழையது; கோட்டது.**

**ஆகாரத்தின் முன் வல்லினம் புணர்தல் :**

*அல்வழிப் புணர்ச்சியில் ஆ என்னும் பெயர்க்கும், மா என்னும் பெயர்க்கும், மியா என்னும் முன்னிலையசை இடைச் சொல்லுக்கும், ஆகார வீற்று எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்றுக்கும், காட்டுப் பசு என்னும் பொருளைத் தரும் ஆமா என்பதற்கும் ஆகார வீற்றை இறுதியாகவுடைய வினையாலணையும் பெயர்க்கும் முன் வருகின்ற வல்லினம் இயல்பாகும்.*

**(எ.டு) ஆ குறிது, மா சிறிது – ஆ, மா முன் வல்லினம் இயல்பாயிற்று.**

**ஆமா பெரிது – ஆமா முன் வல்லினம் இயல்பாயிற்று.**

**கேண்மியா தேவா – மியா முன் வல்லினம் இயல்பாயிற்று.**

**உண்ணா பன்றிகள் – முற்று முன் வலி இயல்பாயிற்று.**

**ஆப் பீ முன் நாற்கணமும் புணர்தல் :**

'ஆ' என்னும் பெயரின் முன் நின்ற பகர ஈகாரம் இரு வழியிலும் நாற்கணமும் வந்தால் குறுகி இகரமாகும். அல்வழியில், குறுகிய அதன் முன் வருகிற வல்லினம் இயல்பாகும்.

**(எ.டு) ஆப்பியரியது : ஆப்பி அருமை**

**ஆப்பிகுளிரும் : ஆப்பி குளிர்ச்சி**

**ஆப்பிநன்று : ஆப்பி நன்மை**

**ஆப்பி வலிது : ஆப்பி வன்மை**

**ஆய்த எழுத்துப் பிறக்குமிடம் :**

வாயைத் திறத்தலுடனே தலையை இடமாகக் கொண்டு ஆய்த எழுத்துப் பிறக்கும். ஆய்தம் நீங்கிய மற்றைச் சார்பெழுத்துகள் அனைத்தும் தம் முதலெழுத்துகளை ஒப்பனவாம்.

**ஆய்தக் குறுக்கம் :**

லகர ளகர ஈற்றுப் புணர்ச்சியில் தோன்றும் ஆய்தம் தன் மாத்திரையில் குறுகி ஒலிக்கும். அஃது ஆய்தக் குறுக்கம் எனப்படும். இட வகையால் இரண்டு வகைப்படும்.

**(எ.டு) கல் + தீது – கஃறீது**

**முள் + தீது – முஃடீது**

**ஆன்சாரியை பொருட் புணர்ச்சிக் கண் திரிதல்**

நாட் பெயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாக வுடைய வினைச் சொற்கண் வரும் ஆன்சாரியையின் அகரமும், அந்நான்கனுருபின்கண் வரும் ஆன்சாரியையோடு ஒரு தன்மைத்தாய் னகாரம் றகாரமாகும்.

**(எ.டு) பரணியாற் கொண்டான்.**

**இ என்னும் ஈறு உணர்த்தும் பொருள்கள் :**

*இ என்னும் ஈறு வினைமுதற் பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப் பொருளையும் உணர்த்தும்.*

**(எ.டு) அலரி – வினைமுதற் பொருள்**

**ஊருணி – செயப்படு பொருள்**

**மண்வெட்டி – கருவிப் பொருள்**

**இகர வீற்றுச் சிறப்பு விதி :**

*'அன்றி' 'இன்றி' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களின் இறுதியிலுள்ள இகரம் செய்யுளில் உகரமாய்த் திரிந்து வந்தால் வருகிற கசதபக்கள் இயல்பாகும்.*

**(எ.டு) "நாளன்று போகி"**

**"உப்பின்று புற்கை யுண்கை"**

**இகரவீற்றுச் சிறப்பு விதி :**

*அல்வழிப் புணர்ச்சியில் நிலைமொழியீற்று இகரத்தின் முன் வல்லினம் வந்தால் இயல்பாதலும் மிகுதலும் விகற்பித்தலும் ஆகும்.*

**(எ.டு) புலி + சிறிது = புலி சிறிது – அல்வழியில் இயல்பாயின.**

**மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள் – வலி மிக்கது.**

**கடி + கமலம் = கடிகமலம், கடிக்கமலம் – விகற்பித்தன.**

**இகரம் பிறக்குமிடம் :**

*இகரம் வாய் திறத்தலுடனே மேல்வாய்ப் பல்லை அடிநாக்கினது ஓரமானது பொருந்தப் பிறக்கும்.*

**இக்குச் சாரியையின் திரிபு :**

*இக்குச் சாரியையின் இகரம் இகரவீற்றுச் சொல் முன்னரும், ஐகாரவீற்றுச் சொல் முன்னரும் கெடும்.*

**(எ.டு) ஆடிக்குக் கொண்டான்**

**சித்திரைக்குக் கொண்டான்**

**இசை நிறை அளபெடை :**

*செய்யுளில் தளை சிதையுமிடத்தில் உயிர் நெட்டெழுத்து தனக்குரிய அளவினின்றும் மிகுந்து ஒலிப்பது இசை நிறை அளபெடையாகும்.*

**(எ.டு) "ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்."**

- திருக். 14

**இடைச் சொற்களின் முன் வல்லினம் புணர்தல் :**

*உயிரீற்று இடைச் சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாயும் மிக்கும் முடியும்.*

| | | | |
|---|---|---|---|
| **(எ.டு)** | **அம்ம** | **–** | **அம்ம கொற்றா!** |
| | **அம்மா** | **–** | **அம்மா சாத்தா!** |
| | **மியா** | **–** | **கேண்மியா பூதா!** |
| | **மதி** | **–** | **சென்மதி பெரும!** |
| | **என** | **–** | **புள்ளெனப் புறம் வேரார்** |
| | **இனி** | **–** | **இனிச் செய்வேன்** |
| | **ஏ** | **–** | **அவனே கண்டான்?** |
| | **ஓ** | **–** | **அவனோ போனான்?** |

**இடைநிலை மயக்கம் :**

*பதினெட்டு மெய்களிற் கசதப என்னும் நான்கையும் நீக்கி மற்றைய பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடும் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும். ரழ என்னும் இரண்டையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களும் தம்மோடு கூடுங்கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கமாகும். இவ்விரண்டு வகை மயக்கமும் ஒரு மொழிக்கு நடுவிலும் தொடர் மொழிக்கு நடுவிலும் வரும். உயிருடன் மெய்யும் மெய்யுடன் உயிரும் மயங்கும் மயக்கத்திற்கு அளவின்று.*

**இடையெழுத்து :**

*மெய்யெழுத்துகளில் யரலவழள என்ற ஆறு எழுத்து களும் வல்லினம் மெல்லினங்கட்கு இடைத்தரமாக ஒலிக்கின்றன வாதலால் இடையெழுத்துகளாகும். மேலும் வல்லினம் பிறக்கும்*

இடமாகிய மார்பிற்கும் மெல்லினம் பிறக்கும் இடமாகிய மூக்கிற்கும் இடையிடமாகிய கழுத்தினின்று பிறத்தலால் இடையெழுத்தெனப்பெயர் வந்ததென்பதும் தகும்.

**இயல்பு புணர்ச்சி :**

நிலைமொழியும் வருமொழியும் வேறுபாடு இன்றிப் புணர்வது இயல்பு புணர்ச்சியாகும்.

**(எ.டு) மண் + பெரிது = மண்பெரிது.**

**இயற்பெயர் முன்னர் தந்தை என்னும் முறைப் பெயர் புணர்தல் :**

னகரவீற்று இயற்பெயர் முன்னர் தந்தை என்னும் முறைப் பெயர் வருமொழியாய் வரின் முதற்கண் மெய்கெட அதன் மேல் ஏறிநின்ற அகரம் கெடாது நிலைபெறும் நிலைமொழியாகிய இயற்பெயர் அல் அன் என்னும் சொல்லில் அகரம் ஏறிநின்ற மெய்யை நீக்கி அல் அன் கெட்டு முடியும்.

**(எ.டு) சாத்தன் + தந்தை = சாத்தந்தை**

**கொற்றன் + தந்தை = கொற்றந்தை**

**'இலம்' என்னும் சொல்முன் 'படு' என்னுஞ்சொல் புணர்தல் :**

இலம் என்னும் சொல்லிற்குப் படு என்னும் சொல் வருமொழியாய் வருங்காலத்து செய்யுளிடத்து மகரவிறுதி கெடாது இயல்பாய் முடியும்.

**(எ.டு) "இலம் படு புலவ ரேற்றகை நிறைய"**

**'இல்'என்பதற்குச் சிறப்பு விதி :**

இல் என்னும் இன்மைப் பண்பை உணர்த்துகின்ற சொல்லுக்கு ஐகாரச் சாரியை பொருந்த அவ்விடத்து வருகிற வல்லினம் விகற்பித்தலும் ஆகாரச் சாரியை பொருந்த வல்லினம் மிகுதலும் இவ்விரு விதியும் பெறாமல் இயல்பாதலும் ஆகும்.

**(எ.டு) இல்லைப் பொருள்**

**இல்லை பொருள்**

**இல்லாப் பொருள்**

**இல் பொருள்**

**இன் சாரியையின் திரிபு :**

*இன் சாரியையின் இகரம் ஆ என்னும் சொல்லீற்று முன்னர்த்திரியும். அளவுப் பெயராகும் மொழி முதற்கண் உயிர்க்கு மேலாய் நின்ற இன் சாரியையது னகரம் றகரமாகத் திரியும்.*

**(எ.டு) ஆனை, பதிற்றகல், பதிற்றுழக்கு.**

**இனமென்றதற்குக் காரணம் :**

*பிறப்பிடமும், முயற்சியும் மாத்திரையும், பொருளும், வடிவமுமாகிய இவற்றுள் ஒன்று முதலாக ஒருபுடை ஒத்திருத்தல் இனமாதற்குக் காரணமாகும்.*

**இன்னிசையளபெடை :**

*செய்யுளில் ஓசை குறையாவிடினும் இனிய ஓசை உண்டாகும் பொருட்டு அளபெடுப்பது இன்னிசையள பெடையாகும்.*

**(எ.டு) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே**
**எடுப்பதூஉ மெல்லா மழை.**

**- திருக். 15**

**இறந்தகால இடைநிலை :**

*தகர டகர றகர மெய்களும் (த்,ட்,ற்) இன் என்பதும், ஆண்பால் முதலிய ஐந்து பால்களிலும், தன்மை முதலிய மூன்று இடங்களிலும் இறந்த காலத்தைத் தரும். வினைப் பகுபதங்களின் இடைநிலைகளாம்.*

**(எ.டு) நடந்தான், உண்டான், சென்றான், உறங்கினான்**
**என்பவை போல.**

**ஈ காரம் பிறக்குமிடம் :**

*ஈ என்னும் எழுத்து வாய்திறத்தலுடனே மேல்வாய்ப் பல்லை நாக்கின் அடிப்பாகம் பொருந்தப் பிறக்கும்.*

**உதடுகுவிதலால் பிறக்கும் எழுத்துகள் :**

*உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்து எழுத்துகளும் உதடு குவிதலால் பிறக்கும் எழுத்துகளாகும்.*

**(எ.டு) "உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே" - நன். 78**

**உடம்படு மெய் :**

*நிலைமொழியீற்றினும் வருமொழி முதலினும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய் உடம்படும் மெய்யாம்.*

*(எ.டு) ய், வ் என்பவை உடம்படுமெய்கள்.*

**மணி அடித்தான் – மணியடித்தான்**

**மண அழகு – மணவழகு**

**உடனிலை மெய்ம் மயக்கம் :**

*பதினெட்டு மெய்களில் ர, ழ என்னும் இரண்டையும் நீக்கி மற்றைப் பதினாறு மெய்களும் தம்மோடு கூடுங்கூட்டம் உடனிலை மெய்ம் மயக்கம்.*

**(எ.டு) பக்கம், பட்டம்.**

**உயிரளபெடை :**

*மொழிக்கு முதலிலும், இடையிலும் கடையிலும் நின்ற நெட்டுயிர்கள் ஏழும் செய்யுளில் ஓசை குறையும் பொழுது அவ்வோசையை நிறைக்கத் தம் அளவில் மிகுந்து ஒலிக்கும். அவ்வாறு மிகுந்து ஒலிப்பதைக்குறிக்க அந்தந்த நெட்டுயிர்களின் இனமாகிய குற்றெழுத்துகள் வரிவடிவில் எழுதப்படும். இவ்வாறு உயிர் நெட்டெழுத்துகள் தம்மளவில் மிகுந்து ஒலிப்பது உயிரளபெடை எனப்படும். நெட்டெழுத்துகள் ஏழனுள் ஒளகாரம் மொழிக்கு முதலில் மட்டும் அளபெடுக்கும். இடையிலும் ஈற்றிலும் அளபெடுக்காது. ஏனைய நெட்டெழுத்துகள் ஆறும் மூன்றிடத்தும் அளபெடுக்கும். எனவே உயிரளபெடை பத்தொன்பதாம். அப்பத்தொன்பதோடு இன்னிசையளபெடை, சொல்லிசை அளபெடை இரண்டையும் கூட்டி உயிரளபெடை இருபத்தொன்று என்பர்.*

**(எ.டு) ஓ ஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர் திருக்.653**

**ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால் திருக். 14**

**அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு**
**நல்ல படாஅ பறை. திருக். 1115**

**உயிரெழுத்துகள் :**

*அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டும் உயிரெழுத்துகளாகும். இவை உயிர் போலத் தனித்தியங்கும் ஆற்றலும், மெய்யை இயக்கும் தன்மையும் உடையனவாதலால் உயிர் எழுத்துகள் என்று பெயர் பெற்றன.*

**உயிர் முன் வல்லினம் புணர்தல் :**

*இயல்பினாலாவது விதியினாலாவது மொழிக்கு ஈறாக நின்ற உயிர்களின் முன், வருமொழி முதலில் வருகின்ற கசதபக்கள் பெரும்பாலும் மிகும்.*

**(எ.டு) ஆடச் சென்றான், நேற்றைப் பொழுது, வாழைப்பழம், மரக்கிளை.**

**உயிர்மெய்யெழுத்துத் தோன்றும் விதம் :**

*மெய் அகர உயிரோடு கூடிய பொழுது புள்ளியை நீக்கி, அவ்விட்டவடிவாகியும், 'ஆ' முதலிய மற்றைய உயிர்களோடு கூடும் பொழுது புள்ளியை விடுதல் மாத்திரமே யன்றி வடிவு வேறுபட்டும், உயிர் எழுத்திற்குரிய அளவையே பெற்று, வரி வடிவில் உயிர் வடிவை ஒழித்து, உயிரும் மெய்யுமாகிய இரண்டிடத்தும் பிறந்த உயிர்மெய் என்னும் பெயருடன் மெய்யொலி முன்னும் உயிரினொலி பின்னுமாகி உயிர்மெய் எழுத்து வரும். பன்னிரண்டு உயிர் எழுத்துகளுடன் பதினெட்டு மெய்யெழுத்துகள் தனித்தனியேசேர்வதால் உயிர்மெய் யெழுத்து இருநூற்றுப் பதினாறாகும்.*

**உயிர்முன் உயிர் புணர்தல் :**

*வருமொழி முதலில் உயிர்வந்தால், இகர ஈகார ஐகாரங் களின் பின்னே யகர மெய்யும், அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் இவ்வேழு உயிர்களின் பின்னே வகரமெய்யும், ஏகாரத்தின் பின்னே யகரமெய்யும், வகரமெய்யும் உடம்படுமெய்யாக வரும்.*

**(எ.டு)**

**கிளி + அழகு = கிளியழகு**
**தீ + எரிந்தது = தீயெரிந்தது**
**மலை + அழகிது = மலையழகிது**
**யகர உடம்படு மெய்**

**பல + அணி = பலவணி**
**பலா + இலை = பலாவிலை**

| | |
|---|---|
| **திரு + அடி = திருவடி** | |
| **பூ + அரும்பு = பூவரும்பு** | **வகர** |
| **நொ + அழகிது = நொவ்வழகிது** | **உடம்படு** |
| **கோ + அழகு = கோவழகு** | **மெய்** |
| **கௌ + அழகு = கௌவழகு** | |

**அவனே + அழகன் = அவனேயழகன்**

**தே + அடியாள் = தேவடியாள்**

**உரிச்சொற்களின் முன் வல்லினம் புணர்தல் :**

*உயிரீற்று உரிச்சொற்களின் முன் வல்லினம் வந்தால், மிக்கும் இயல்பாயும் இனமெல்லெழுத்து மிக்கும் புணரும்.*

| | | | |
|---|---|---|---|
| **(எ.டு)** | **தவ** | **–** | **தவப்பெரியோன்** |
| | **குழ** | **–** | **குழக்கன்று** |
| | **கடி** | **–** | **கடிக்கமலம்** |
| | **கடி** | **–** | **கடிகா** |
| | **தட** | **–** | **தடக்கை** |
| | **தட** | **–** | **தடந்தோள்** |
| | **கம** | **–** | **கமஞ்சூல்** |
| | **நனி** | **–** | **நனிபேதை** |
| | **கழி** | **–** | **கழிகண்ணோட்டம்** |

**'ஊன்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*ஊன் என்னும் பெயரின் இறுதி னகரம் வேற்றுமையில் இயல்பேயாகும்.*

**(எ.டு) ஊன் + தீமை = ஊன்றீமை**

**ஊன் + பெருமை = ஊன்பெருமை**

**எகரம் பிறக்குமிடம் :**

*வாய்திறத்தலுடனே மேல்வாய்ப்பல்லை நாக்கின் அடிப்பாகம் பொருந்த எகரம் பிறக்கும்*

**எகரவினாவின் முன் நாற்கணமும் புணர்தல் :**

*எகரவினாவிடைச் சொல்லின் முன்னே உயிரெழுத்துகளும், யகரமும் வந்தால் வகரமெய் தோன்றும் யகரம் ஒழிந்த மெய்கள் வந்தால் அவ்வந்த மெய்களே தோன்றும்.*

**(எ.டு) எ + அணி = எவ்வணி**

**எ + குதிரை = எக்குதிரை**

**எ+ நாடு = எந்நாடு**

**எ + யானை = எவ்யானை**

**'எகின்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*அன்னப் பறவையின் பெயராகிய எகின் என்னுஞ்சொல் அல்வழியில் இயல்பாதலேயன்றி, வேற்றுமைப் புணர்ச்சியிலும் வல்லினம் வர இறுதி னகரம் இயல்பாதலும், இரு வழியிலும் அகரச் சாரியை பொருந்த வல்லெழுத்தாவது அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகுதலும் விதியாகும்.*

**(எ.டு) எகின் + சிறை = எகின்சிறை**

**எகின் + தலை = எகின்தலை**

**எகின் + புள் = எகினப்புள்**

**= எகினம்புள்**

**எச்சம் :**

*பிறிதோர் சொல்லொடும், பிறிதோர் குறிப்பொடும் முடிவு கொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சமாகும். எனவே, எச்சம் சொல்லெச்சம் குறிப்பெச்சம் என இருவகைப்படும்.*

**(எ.டு) எச்சம் = குறைச் சொல்;**

**பிறிதொன்றைத் தழுவும் சொல்**

**எச்சத் தொடர் மொழி :**

*முடிவு பெறாது முற்றுத்தொடர் மொழிக்கு உறுப்பாக வருந்தொடர் மொழி, எச்சத் தொடர் மொழியாகும்.*

**(எ.டு) யானைக் கோடு**

**யானையது கோடு**

**எட்டாம் வேற்றுமை உருபுகள் ஏற்கும் பொருள் :**

*எட்டாம் வேற்றுமை உருபுகள் தம்மையேற்ற பெயர்ப் பொருளை முன்னிலையின் விளிக்கப்படு பொருளாக வேறு படுத்தும். அவ்வாறு வேறுபட்ட விளிக்கப்படு பொருளே இவ்வுருபுகளின் பொருளாகும்.*

| | | | |
|---|---|---|---|
| **(எ.டு)** | **சாத்தனே கேளாய்** | – | **ஏ மிகுந்தது** |
| | **அப்பனோ உண்ணாய்** | – | **ஓ மிகுந்தது** |
| | **வேனிலாய் கூறாய்** | – | **ஈறு திரிந்தது** |
| | **தோழ செல்லாய்** | – | **ஈறுகெட்டது** |
| | **தந்தை வாராய்** | – | **ஈறுஇயல்பாயிற்று** |
| | **மக்காள் கூறீர்** | – | **ஈற்றயலெழுத்துத் திரிந்தது** |

**எட்டாம் வேற்றுமையின் உருபுகள் :**

*எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகள், படர்க்கைப் பெயரீற்றில் ஏ, ஓ மிகுதலும் அவ்வீறு திரிதலும், கெடுதலும் இயல்பாதலும், ஈற்றயல் எழுத்துத் திரிதலுமாம்.*

**எட்டு என்பதற்குச் சிறப்பு வழி :**

*இறுதியுயிர் மெய்கெட நின்ற எட்டென்னும் எண்ணியது டகர மெய், வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் ஆகிய நான்கு கணமும் வர ணகரமாகத் திரியும்.*

**(எ.டு)** **எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்**

**எட்டு + கழஞ்சு = எண்கழஞ்சு**

**எட்டு + வகை = எண்வகை**

**எட்டு + நாழி = எண்ணாழி**

**எண்ணுப் பெயரோடு எண்ணுப் பெயர் புணர்தல் :**

*ஒன்று என்னும் எண் முதலாக எட்டு என்னும் எண் இறுதியாகவுள்ள எல்லா எண்ணுப் பெயர்களும், பத்து என்னும் எண்ணுப் பெயர்முன் வரின் அப்பத்து என்னும் சொல்லில் உள்ள குற்றியலுகரம் தான் ஏறிநின்ற மெய்யோடும் கெட்டு முடியும்.*

**(எ.டு) பத்து + ஒன்று = பதினொன்று**

**பத்து + இரண்டு = பன்னிரண்டு**

**பத்து + மூன்று = பதின்மூன்று**

**பத்து + நான்கு = பதினான்கு**

**பத்து + ஐந்து = பதினைந்து**

**பத்து + ஆறு = பதினாறு**

**பத்து + ஏழு = பதினேழு**

**பத்து + எட்டு = பதினெட்டு**

**எண்ணுப் பெயர்முன் நிறைப்பெயரும் அளவுப் பெயரும் புணர்தல்:**

*பத்து என்னும் எண்ணுப்பெயர்முன் நிறையும் அளவும் வருங்காலத்து இன் என்னும் சாரியை பெற்று முடியும்.*

**(எ.டு) பத்து + கழஞ்சு = பதின்கழஞ்சு**

**பத்து + தொடி = பதின்றொடி**

**பத்து + பலம் = பதின்பலம்**

**பத்து + கலம் = பதின்கலம்**

**பத்து + பானை = பதின்பானை**

**எதிர்காலங்காட்டும் விகுதிகள் :**

*'இ' என்னும் முன்னிலை வினைமுற்று விகுதி ஒன்றும், ப, மார் என்னும் படர்க்கை வினைமுற்று விகுதியிரண்டும், க, இய, இயர், அல் என்னும் வியங்கோள் வினைமுற்று விகுதி நான்கும், ஆய், இ, ஆல், ஏல், காண், மின், உம், ஈர் என்னும் முன்னிலையேவல் வினைமுற்று விகுதியெட்டும் ஆகிய பதினைந்தும் எதிர்காலங்காட்டும் விகுதிகளாகும்.*

**(எ.டு) சேறி, நடப்ப, நடமார், வாழ்க, வாழிய, வாழியர், உண்ணல், நடவாய், உண்ணுதி, மறால், அழேல், சொல்லிக்காண், நடமின், உண்ணும், உண்ணீர்.**

**எதிர்மறைக் குறிப்பு வினைப் பெயரெச்சங்கள் :**

*இவை, அல் இல் என்னும் பண்படியாகத் தோன்றி ஆகாரச் சாரியையுந் தகர வெழுத்துப் பேற்றோடு கூடிய அகர விகுதியும் பெற்று வரும்.*

**(எ.டு) அல்லாத குதிரை, இல்லாத பொருள்**

**இவை, அல்லாக் குதிரை, இல்லாப் பொருள் என ஈற்றுயிர்மெய் கெட்டுவரும்.**

**எதிர்மறை இடைநிலை :**

*இல், அல், ஆ என்னும் மூன்றும் எதிர்மறையிடை நிலைகளாகும். இவற்றுள் ஆகாரவிடைநிலை, வருமெழுத்து மெய்யாயிற் கெடாதும் உயிராயிற்கெட்டும் வரும்.*

**(எ.டு) நடந்திலன் நடக்கின்றிலன் நடக்கிலன் நடவாதான் நடவான் நடவேன்.**

**எதிர்கால இடை நிலை :**

*பகர மெய்யும், வகரமெய்யும் ஆண்பால் முதலிய ஐந்து பால்களிலும் தன்மை முதலிய மூன்று இடங்களிலும் நிகழ் காலத்தைக் காட்டுகின்ற வினைப் பகுபதங்களின் இடைநிலை களாம்.*

**எதிர்மறைத் தெரிநிலை வினைப் பெயரெச்சங்கள் :**

*இவை எதிர்மறை ஆகாரவிடை நிலையும் தகரவெழுத்துப் பேற்றோடு கூடிய அகரவிகுதியும் பெற்றுவரும்.*

**(எ.டு) செய்யாத**

**எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்கள் :**

*இவை, அல் இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றி - றி, து, மல், மே, மை, ஆல், கால், கடை, வழி, இடத்து என்னும் விகுதிகளைப் பெற்று வரும்.*

**(எ.டு) றி – அறமன்றிச் செய்தான் – அருளன்றிச் செய்தான்**

**து – அறமல்லாதில்லை – அருளில்லாது செய்தான்**

**எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சங்கள் :**

*இவை எதிர் மறை ஆகார விடை நிலையோடு உ, மல், மே, மை, மைக்கு, கால், கடை, வழி, இடத்து என்னும் விகுதிகளைப் பெற்று வரும்.*

**எழுத்தின் சாரியைகள் :**

*தனி மெய்கள் அ என்னும் சாரியை பெறும். உயிர் நெடில்கள் காரம் என்னும் சாரியை பெறும். ஐகார ஔகாரங்கள் காரம்*

என்னும் சாரியையுடன் கான் என்னும் சாரியையும் பெறும். உயிர்க்குறிலும், உயிர்மெய்க்குறிலும் காரம் கான் என்னும் சாரியையுடன் கரம் என்னும் சாரியையும் பெறும்.

**எழுத்துகளின் பிறப்பின் பொதுவிலக்கணம் :**

ஒலியெழுத்திற்கு வேண்டுங் காரணங்களிற் குறை வில்லாமல் உயிரினது முயற்சியால் உள்ளே நின்ற காற்றானது எழுப்ப எழுகின்ற செவிப்புலனாம் அணுக்கூட்டம், மார்பும், கழுத்தும், தலையும் மூக்கும் ஆகிய நான்கிடத்தையும் முதலிற் பொருந்தி, பின்பு உதடும் நாக்கும் பல்லும் வாயும் ஆகிய நான்கினுடைய முயற்சி வேறுபாட்டினால், வேறு வேறு வகைப் பட்ட எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் பிறப்பாம்.

**எழுத்தும் எழுத்துவகையும் :**

சொற்கள் உண்டாவதற்கு முதற் காரணமாயும் அணுத்திரல் களின் காரியமாயும் உள்ள ஒலியே எழுத்து எனப்படும். அவ்வெழுத்து முதல் எழுத்து சார்பெழுத்து என இரு வகைப்படும்.

**எழுத்துகளுக்குரிய மாத்திரைகள் :**

உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று. நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டு. ஐகாரக்குறுக்கத்திற்கு மாத்திரை ஒன்று. ஔகாரக்குறுக்கத்திற்கு மாத்திரை ஒன்று. ஒற்றளபெடைக்கும் மாத்திரை ஒன்று. குற்றெழுத்திற்கு மாத்திரை ஒன்று. மெய்யெழுத் திற்கும், குற்றியலுகரத்திற்கும், குற்றியலிகரத்திற்கும், முற்றாய்தத் திற்கும் தனித்தனியே அரை மாத்திரையாகும். மகரக் குறுக்கத் திற்கும், ஆய்தக் குறுக்கத்திற்கும் தனித்தனியே மாத்திரை காலாகும்.

**'என்' என்பதற்குச் சிறப்பு விதி :**

என் என்னும் வேறுபாட்டு மொழியின் இறுதி னகரம் வல்லினம் வரின் ஒருபோது திரிந்தும் ஒரு போது திரியாதும் வரும்.

**(எ.டு) என் + பகை = என்பகை, எற்பகை.**

**(யான், நான் என்பவை 'என்' என வேறுபடுதல்)**

**'ஏ' என்னும் சாரியை பெறும் அளவுப் பெயர்கள் :**

*உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய எண்ணுப் பெயர், நிறைப்பெயர், அளவுப்பெயர்களின் முன், அவ் வவற்றிற்குக் குறைந்த அவ்வப் பெயர்கள் வரின், பெரும்பாலும் 'ஏ' என்னும் சாரியை பெறும்.*

**(எ.டு) ஒன்று + கால் = ஒன்றேகால்**

**தொடி + கஃசு = தொடியேகஃசு**

**கலன் + பதக்கு = கலனேபதக்கு**

**கால் + காணி = காலேகாணி**

**கழஞ்சு + குன்றி = கழஞ்சேகுன்றி**

**உழக்கு+ ஆழாக்கு = உழக்கேயாழாக்கு**

**ஏகாரம் பிறக்குமிடம் :**

*வாய் திறத்தலுடனே மேல்வாய்ப்பல்லை நாக்கின் அடிப்பாகம் பொருந்த ஏகாரம் பிறக்கும்.*

**'ஏழ்' என்னும் எண்ணுப்பெயர் முன் அளவுப் பெயர் புணர்தல் :**

*ஏழ் என்னும் எண்ணுப்பெயர் முன் அளவுப் பெயர் வருமொழியாய் வருமிடத்து நெடுமுதல் குறுகலும் உகரம் பெறுதலும் ஆகும்.*

**(எ.டு) ஏழ் + பலம் = எழுபலம்**

**ஏழ் + கழஞ்சு = எழுகழஞ்சு**

**'ஏழ்' என்னும் எண்ணின் முன் நிறைப்பெயர் புணர்தல் :**

*ஏழ் என்னும் எண்ணுப்பெயர் முன் நிறைப் பெயர் வருமொழியாய் வருமிடத்து நெடு முதல் குறுகலும் உகரம் பெறுதலும் ஆகும்.*

**(எ.டு) ஏழ் + கலம் = எழுகலம்**

**'ஏழ்' என்னும் எண்ணுடன் பத்து என்னும் எண் புணர்தல் :**

*ஏழ் என்பதனோடு பத்து என்னும் எண் புணருமிடத்து அப் பத்து என்னும் சொல்லின் இடை யொற்றுக் கெட்டு ஆய்தமாகிய புள்ளி நிற்றல் வேண்டும்.*

**(எ.டு) ஏழு + பத்து = எழுபஃது மூ எழுபது**

**'ஏழ்' என்னும் எண்ணுடன் ஆயிரம் புணர்தல் :**

*ஏழ் என்பதன் முன் ஆயிரம் என்னும் எண் வந்து புணரு மிடத்து உகரம் பெறாது முடியும்.*

**(எ.டு) ஏழாயிரம்.**

**'ஏழ்' என்னும் எண்ணின் முன் ஐ, அம், பல் என்பன புணர்தல்:**

*ஏழ் என்னும் எண்ணின் முன் ஐ என்றும் அம் என்றும் பல் என்றும் வருகின்ற இறுதிகளையுடைய பொருட்பெயர் அல்லாத எண்ணுப் பெயராகிய தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன வந்தால் நெடுமுதல் குறுக்கம் இன்றி உகரம் பெறாது இயல்பாய் முடியும்.*

**(எ.டு) ஏழ்தாமரை, ஏழ்வெள்ளம், ஏழாம்பல்.**

**'ஏழ்' என்பதன் முன் நூறாயிரம் என்னுஞ்சொல் புணர்தல் :**

*ஏழ் என்பதன் முன் நூறாயிரம் என்னுஞ்சொல் புணருங்கால் நெடுமுதல் குறுகாதும் உகரம் பெறாதும், இயல்பாய் முடியும்.*

**(எ.டு) ஏழ் + நூறாயிரம் = ஏழ்நூறாயிரம்.**

**'ஏழ்' என்பதன் முன் உயிர் புணர்தல் :**

*ஏழ் என்பதன் முன் உயிர் முதல் மொழி முன் வரினும் நெடுமுதல் குறுகாதும் உகரம் பெறாதும் முடியும்.*

*(எ.டு) ஏழகல், ஏழுழக்கு, ஏழொன்று, ஏழிரண்டு.*

**'ஏழ்' என்னும் எண்ணுப் பெயர் முன் எண்ணுப்பெயர் புணர்தல் :**

*ஏழ் என்னும் எண்ணுப்பெயர் முன் எண்ணுப் பெயர் வருமொழியாய் வருமிடத்து நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும் ஆகும்.*

**(எ.டு) ஏழ் + மூன்று = எழுமூன்று.**

**'ஐ' என்னும் விகுதி உணர்த்தும் பொருள்கள் :**

*ஐ என்னும் விகுதி வினைமுதற்பொருளையும் செயப்படு பொருளையும் கருவிப் பொருளையும் உணர்த்தும்.*

**(எ.டு) பறவை – வினைமுதற் பொருள்**

**தொடை– செயப்படுபொருள்**

**பார்வை – கருவிப்பொருள்**

**ஐகாரக் குறுக்கம் :**

*ஐகாரம் தன்னைக் குறிக்குமிடத்தும் அளபெடுக்கு மிடத்தும் தனக்குரிய இரண்டு மாத்திரையைப் பெறும் சொல்லுக்கு முதல் இடை கடை ஆகிய எங்கே நின்றாலும் தன் இரண்டு மாத்திரையிற் குறுகி ஒரு மாத்திரையாய் ஒலிக்கும். இதுவே ஐகாரக்குறுக்கமாகும்.*

**(எ.டு) ஐப்பசி**

**இடையன்**

**குவளை.**

**ஐகாரம் பிறக்குமிடம் :**

*வாய் திறத்தலுடனே மேல் வாய்ப்பல்லை நாக்கின் அடிப்பாகம் பொருந்த ஐகாரம் பிறக்கும்.*

**ஐகாரத்தின் முன் மெய் புணர்தல் :**

*ஐகாரவீற்றுச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வந்தால் ஈற்று ஐகாரம் கெடுதலுடனே 'அம்' சாரியையும் பெற்று முடியும்.*

**(எ.டு) தாழை + பூ = தாழம்பூ**
**எலுமிச்சை+மரம்=எலுமிச்சமரம்**
**ஆவிரை + வேர் = ஆவிரவேர்**
} *ஐ அழிவோடு 'அம்' சாரியை ஏற்றன*

**புன்னை+கானல்=புன்னையங்கானல்**
**முல்லை+தொடை=முல்லையந்தொடை**
} *அல்வழில் அகரம் வர வல்லினத்திற்கு இனமான மெல்லினம் மிக்கன*

**ஐகார வீற்றுச் சிறப்புவிதி :**

*அல்வழிப் புணர்ச்சியில் நிலை மொழி யீற்று ஐகாரத்தின் முன் வல்லினம் வந்தால் இயல்பாதலும், மிகுதலும் விகற்பித்தலும் ஆகும்.*

**(எ.டு) யானை+பெரிது=யானைபெரிது – ஐ முன் அல் வழியில் இயல்பாயது.**

**பனை+கை=பனைக்கை – வலிமிக்கது.**

**தினை+சிறிது= தினைசிறிது, தினைச்சிறிது – விகற்பித்தன.**

**ஐந்து என்பதற்குச் சிறப்பு விதி :**

*இறுதியுயிர்மெய் கெட நின்ற ஐந்தென்னும் எண்ணினது நகரமெய், வருமொழியில் மெல்லினம் வருமிடத்து வருமெய்யாகத் திரியும். வல்லினம் வருமிடத்து இனமாகத் திரியும். உயிரும் இடையினமும் வருமிடத்துக் கெடும்.*

**(எ.டு) ஐந்து + மூன்று = ஐம்மூன்று – நகரமெய், வருமெய்யாகத் திரிந்தது.**

**ஐந்து + பால் = ஐம்பால் – நகரமெய்வரும் எழுத்திற்கு இனமாயிற்று.**

**ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்**
**ஐந்து + வகை = ஐவகை** } *நகர மெய் கெட்டது*

**ஒத்து நடத்தல் :**

*ஒரோவிடத்து மொழிக்கு முதலிலும் சிலவிடத்து ஐகாரத்தின் பின்னும், யகர வொற்றின் பின்னும், நகரம் நின்ற விடத்து ஞகரம் வந்து பொருள் வேறுபடாதவாறு ஒத்து நடக்கும்.*

**(எ.டு) நண்டு – ஞண்டு**
**நெண்டு = ஞெண்டு**
**நமன் = ஞமன்** } *மொழி முதல் ஒத்து நடந்தது*

**ஐந்நூறு – ஐஞ்ஞூறு**
**மைந்நின்றகண் – மைஞ்ஞின்றகண்** } *ஐகாரத்தின் பின் ஒத்து நடத்தல்*

**சேய்நலூர் – சேய்ஞலூர்**
**செய்ந்நின்ற நீலம் – செய்ஞ்ஞின்ற நீலம்** } *யகரத்தின் பின் ஒத்து நடத்தல்*

**ஒரு பாலைக் குறிப்பது பிறபாலுக்கும் வருவது :**

*ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் ஐம்பாலில் ஒருபாலைக் குறித்தனவாயினும் ஏனைய பால்களையும் குறித்து வருவது உலக வழக்கமாகும்.*

**(எ.டு) அவன் வந்தான்; அவள் வந்தாள்; அவர் வந்தார்;**

**அது வந்தது; அவை வந்தன;**

**அவன் வாழ்க; அவள் வாழ்க; .....**

**பால் பருகியவன் வலிமை பெறுவான்; பெறுவாள்;...**

**ஒற்றளபெடை :**

செய்யுளில் ஓசை குறையுமிடத்துச் சொல்லின் இடையிலும் கடையிலும் நிற்கும் ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள் என்னும் பத்து மெய்களும், ஆய்த எழுத்தும் அவ்வோசையை நிறைக்கத் தம் அளவில் நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதைக்குறிக்க, அவற்றின் பின் அவ்வவ்வெழுத்துகளே அறிகுறியாக எழுதப் படும். இவ்வாறு ஒற்றெழுத்துகள் தம் ஓசையளவில் மிகுந்து ஒலிப்பது ஒற்றளபெயடையாகும். இவ்வொற்றளபெடை ஒரு குற்றெழுத்தின் கீழும் இரண்டு குற்றெழுத்தின் கீழும் வரும். குறிலிணைக் கீழிடை, குறிற்கீழிடை, குறிலிணைக் கீழ்க்கடை, குறிற் கீழ்க்கடை என்னும் நான்கிடத்தும் மேற்கூறிய பதினோர் எழுத்தும் அளபெடுககும். எனவே ஒற்றளபெடை நாற்பத்து நான்காம். ஆனால் ஆய்தம் மொழியின் இடையில் மட்டுந்தான் வரும். ஆதலால் ஆய்தத்திற்கு மட்டும் குறிலிணைக் கீழ்க்கடை குறிற்கீழ்க்கடை என்னும் இரண்டு இடத்தையும் விலக்க வேண்டும். விலக்கினால் ஒற்றளபெடை நாற்பத்திரண்டாம்.

**(எ.டு) இலங்ங்கு வெண்பிறை**

**மடங்ங் கலந்த**

**கண்ண் கருவிளை**

**பொன்ன் பொறி**

**ஒற்று இடையே மிகும் நெடிற்றொடர் உயிர்த்தொடர் :**

நெடிற்றொடர்களும் உயிர்த்தொடர்களுமாகிய குற்றியலுகர மொழிகளுள் அவ்வுகரம் ஏறிநின்ற டகர, றகரமெய்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டும்.

**(எ.டு) ஆட்டுக்கால்**
**சோற்றுவளம்** } நெடிற்றொடர்

**முரட்டுமனிதன்**
**வயிற்றிடை** } உயிர்த்தொடர்

**ஒன்றன் பாற் படர்க்கை வினைமுற்று :**

து று டு என்கின்ற குற்றியலுகரவீற்று மூன்று விகுதி களையும் இறுதியில் உடைய மொழிகள் அஃறிணை ஒன்றன் பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆம். இவற்றுள் டு என்ற விகுதி குறிப்பு வினைமுற்றில் வரும்

*தெரிநிலை வினைமுற்றில் வராது. மேலும் 'று' விகுதி தெரிநிலையில் நிகழ்கால எதிர்காலங்களுக்கு வராது.*

**(எ.டு)**

| **இறப்பு** | **நிகழ்வு** | **எதிர்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| நடந்தது | நடக்கின்றது | நடப்பது | குழையது |
| ஆயிற்று | – | – | குழையிற்று |
| – | – | – | பொருட்டு |

**ஒத்திற்கு இலக்கணம் :**

*ஒத்தவினத்தவாகிய மணியை ஒருங்கே கோவைப் பட வைத்தாற் போல ஓரோரினமாக வரும் பொருளை ஓரிடத்தே சேரவைத்தல் ஓத்தென்பதாம்.*

**ஔகாரக் குறுக்கம் :**

*ஔகாரம் தன்னைக் குறிக்குமிடத்தும் அளபெடுக்கு மிடத்தும் குறுகாமல் தனக்குரிய இரண்டு மாத்திரையைப் பெறும். சொல்லில் வரும் பொழுதெல்லாம் ஒரு மாத்திரை யாய்க் குறுகி ஒலிக்கும். இதுவே ஔகாரக் குறுக்கமாகும்.*

**(எ.டு) ஔவை.**

**ககரம் பிறக்குமிடம் :**

*நாக்கின் அடிப்பாகம் மேல் வாயடியைச் சேர்தலாற் ககரம் பிறக்கும்.*

**'கன்' என்னும் சொல்லிற்குச் சிறப்பு விதி :**

*கன் என்னும் சொல் முதனிலைத் தொழிற் பெயர் போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச் சாரியை பொருந்தும் வல்லினம் வந்தால் உகரச் சாரியையே யன்றி அகரச் சாரியையும் பெற்று மெல்லெழுத்தோடு வேறுபட்டுவரும் (வருகிற வல்லெழுத்தாவது அல்லது அதற்கு இனமான மெல்லெழுத்தாவது மிகப்பெறும்)*

**(எ.டு) கன் + நன்மை = கன்னுநன்மை**

**கன் + தட்டு = கன்னத்தட்டு,கன்னந்தட்டு – அகரம் பெற்று மென்மையோடு உறழ்ந்தது.**

**காலங்காட்டும் பகுதி :**

*கு, டு, று என்னும் மூன்றுயிர் மெய்களை இறுதியாக வுடைய சில குறிலிணைப் பகுதிகள் வேறுபட்டு இறந்தகாலங் காட்டும்.*

**(எ.டு) புக்கான், விட்டான், பெற்றான்.**

**காண்டிகை யுரையின் இலக்கணம் :**

*கருத்துரையும் பதவுரையும் எடுத்துக்காட்டுமாகிய மூன்றனையுஞ் சொல்லுதலாலும் அம்மூன்றனோடு வினா விடை என்னும் இரண்டனையுங் கூட்டிச் சொல்லுதலாலும் சூத்திரத்துளிருக்கின்ற பொருளை விளக்குவன காண்டிகையுரை யாகும்.*

**காலங்காட்டு மிடைநிலைகள் :**

*காலங்காட்டு மிடை நிலைகள், தெரிநிலைவினைப் பகுபதங் களுக்கு வரும். அவை இறந்தகால விடைநிலை, நிகழ்கால விடை நிலை, எதிர்கால விடை நிலை என மூன்று வகைப்படும்.*

**'கீழ்' என்பதற்குச் சிறப்புவிதி :**

*கீழ் என்னுஞ் சொல்லின் முன் வருகிற வல்லினம் ஒரு கால் இயல்பாகியும், ஒரு கால் மிக்கும் வரும்.*

*(எ.டு) கீழ் + குளம் = கீழ்குளம், கீழ்க்குளம்*

**குணசந்தி :**

*வடசொற்களில், அ ஆ வின்முன் இ ஈ வரின் ஈறு முதலுங்கெட 'ஏ' தோன்றுவதும், அ, ஆ வின் முன் உ ஊ வரின் ஈறும் முதலுங்கெட 'ஓ' தோன்றுவதும் குணசந்தி எனப்படும்.*

**(எ.டு) நர + இந்திரன் – நரேந்திரன்**

**சுர + ஈசன் – சுரேசன்**

**தரா + இந்திரன் – தரேந்திரன்**

**மகா + ஈசன் – மகேசன்**

**பாத + உதகம் – பாதோகம்**

**ஞான + ஊர்ச்சிதன் – ஞானோர்ச்சிதன்**

**கங்கா + உற்பத்தி – கங்கோற்பத்தி**

**தயா + ஊர்ச்சிதன் – தயோர்ச்சிதன்.**

**குயின் என்பதற்குச் சிறப்புவிதி :**

*குயின் என்னும் பெயரின் இறுதி னகரம் வேற்றுமையில் இயல்பேயாகும்.*

*(எ.டு) குயின் + கடுமை = குயின்கடுமை*

*குயின் + சிறுமை = குயின்சிறுமை*

**குறிலணைந்த ஆகாரத்துக்குச் சிறப்பு விதி :**

*குற்றெழுத்தின் கீழ் நின்ற ஆகாரம் அகரமாகக் குறுகுதலும், அவ்வாறு குறுகுதலுடன் உகரம் பெறுதலும், இயல்பாதலும் ஆகிய மூன்று விதியும் செய்யுளில் வரும்.*

**(எ.டு) "நிலவிரிகானல்" – குறியதன் கீழ் ஆ குறுகிற்று. (நிலா)**

**"என் செய்யுமோ நிலவு" – குறுகி உகரமேற்றது.**

**"நிலா வணங்கு" – இயல்பாயிற்று.**

**குற்றியலுகரம் :**

*தனிநெடில், ஆய்தம், உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய இவற்றுள் ஒன்று ஈற்றுக்கு அயலெழுத்தாய்த் தொடர்ந்து வர, வல்லின மெய்களின் மேல் ஊர்ந்து வரும் உகரம் குற்றியலுகரமாகும். இவ்வுகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிற் குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும்.*

*(எ.டு) நாடு, அஃது, வயிறு, சுக்கு, நண்டு, தெள்கு*

**குற்றியலிகரம் :**

*இரு சொற்கள் புணரும் போது வருமொழிக்கு முதலில் யகரம் வர, நிலை மொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரம் இகரமாய்த் திரியும். இந்த இகரமும், 'மியா' என்னும் முன்னிலை அசைச் சொல்லில் உள்ள இகரமும் குற்றியலிகரங்களாகும். இவ்விகரம் தனக்குரிய மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும்.*

**(எ.டு) நாடு + யாது – நாடியாது**

**வரகு + யாது – வரகியாது**

**கேண்மியா சாத்தா.**

**குற்றியலுகரத்தின் வகை :**

ஈற்றுக்கு அயலெழுத்தை நோக்கக் குற்றியலுகரம் ஆறுவகைப்படும்.

அவை.

1. நெடிற்றொடர்க்குற்றியலுகரம் - நாகு
2. ஆய்தத் தொடர்க்குற்றியலுகரம்- கஃசு
3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்- வரகு
4. வன்றொடர்க் குற்றியலுகரம் - கொக்கு
5. மென்றொடர்க் குற்றியலுகரம் - பஞ்சு
6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்- சால்பு.

**குற்றியலுகரத்தின் முன் உயிரும் யகரமும் புணர்தல் :**

குற்றியலுகரமானது, வருமொழி முதலில் உயிர் வந்தால் தனக்கு இடமாகிய மெய்யை விட்டுக் கெடும். யகரம் வந்தால் இகரமாகத் திரியும்.

**(எ.டு) ஆடு + அரிது – ஆடரிது**

**நாகு + யாது – நாகியாது.**

**குற்றெழுத்து :**

உயிரெழுத்துகளில் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துக்களும் குறுகிய ஓசையுடையனவாய் ஒலிக்கின்றன. இவற்றுக்குக் குற்றெழுத்துக்கள் என்று பெயர். இவ்வெழுத்துகள் தனித்தனி ஒரு மாத்திரை பெறும்.

**கெடுதல் :**

உயிர் மெய்யாயினும் மெய்யாயினும் விதியின்றிக் கெடுதற்குக் கெடுதல் என்று பெயர்.

**(எ.டு) யாவர் – யார்**

**யார் – ஆர்**

**யானை – ஆனை**

**யாடு – ஆடு**

**யாறு – ஆறு.**

**ஙகரம் பிறக்குமிடம் :**

*நாக்கின் அடிப்பாகம் மேல் வாயடியைச் சேர்தலால் ஙகரம் பிறக்கும்.*

**ஙகரத்தின் முன் மயங்கும் எழுத்து :**

*ஙகரத்தின் முன் ககரம் மயங்கும்.*

**(எ.டு) தங்கம்**

**சகரம் பிறக்குமிடம் :**

*நாக்கின் நடுப்பாகம் மேல்வாயின் இடையைச் சேர்தலாற் சகரம் பிறக்கும்.*

**சந்தி :**

*வடமொழித் தொகைப் பதங்கள் தமிழில் ஆங்காங்கு வருமிடத்துப் பெரும்பாலும் அவ் வடநூற் புணர்ச்சியே பெறும். வட நூலார் புணர்ச்சியைச் 'சந்தி' என்பர். அது உயிரோடு புணர்கையில் தீர்க்க சந்தி, குணசக்தி, விருத்தி சந்தி என மூவகைப் படும்.*

*மேலும் தமிழில் புணரியலிற் சொல்லப்படுவன வாகிய தோன்றல் முதலிய புணர்ச்சி வேறுபாடுகள் சந்திகளாகும்.*

**'சாவ' என்பதற்குச் சிறப்பு விதி :**

*சாவ என்னுஞ் செயவென் வாய்பாட்டு வினையெச் சத்தினுடைய இறுதியில் உள்ள வகர உயிர்மெய் வருமொழி யோடு புணர்கையில் கெடுதலும் உண்டு.*

**(எ.டு) சாவ + குத்தினான் = சாக்குத்தினான்**

**'சார்' என்னுங் கிளவிக்குச் சிறப்புவிதி :**

*சார் என்னும் சொல் காழ் என்னுஞ் சொல்லோடு புணருமிடத்து வல்லெழுத்து மிக்கு முடியும்.*

**(எ.டு) சார் + காழ் = சார்க்காழ்.**

**சில ஈகாரவீற்றின் முன் வல்லினம் புணர்தல் :**

*இடக்கர்ப் பெயராகிய பகர ஈகராத்துக்கும், நீங்கு தலென்னும் பொருள் கொண்ட நீ என்ற முதனிலைத் தொழிற் பெயர்க்கும், மேலாகிய பண்பையும் மேலிடத்தையும் உணர்த்தும 'மீ' என்ற சொல்லுக்கும் முன்னே அல்வழிப் புணர்ச்சியில்*

*வருகிற வல்லினம் இயல்பாகும். ‘மீ’ என்னும் சொல்லுக்கு வல்லெழுத்து மிகுதலும் மெல்லெழுத்து மிகுதலும் உண்டு.*

**(எ.டு) மீ + குறிது = மீகுறிது**

**நீ + கடிது = நீ கடிது**

**மீ + கான் = மீகான்**

**மீ + கூற்று = மீக்கூற்று – வலிமிக்கது**

**மீ + தோல் = மீந்தோல் – மெலிமிக்கது.**

***சில முற்றியலுகரங்களின் முன் உயிரும் யகரமும் புணர்தல் :***

*சில முற்றியலுகரங்கள் வருமொழி முதலில் உயிர்வந்தால் தனக்கு இடமாகிய மெய்யை விட்டுக் கெடும்; யகரம் வந்தால் இகரமாகத் திரியும்.*

**(எ.டு) கதவு + அழகு = கதவழகு**
**கதவு + யாது = கதவியாது.** } *இயல்பாயின*

***சில முற்றியலுகரங்களின் முன் வல்லினம் புணர்தல் :***

*‘ஒடு’ என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுக்கும், ‘அது’ என்னும் ஆறாம் வேற்றுமை உருபுக்கும் இயல்பாயும் விகாரமாயும், வினைத்தொகைக்கும், சுட்டுப்பெயர்கட்கும் இறுதியாகிய முற்றியலுகரத்திற்கும் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.*

**(எ.டு) அவனொடு + கொண்டான் = அவனொடு கொண்டான்.**

**பொன்னது + செவி = பொன்னனது செவி**

**ஏழு + தலை = ஏழுதலை**

**விடு + கணை = விடுகணை**

**அது + கண்டாண் = அதுகண்டான்**

**இது + குறிது = இதுகுறிது**

**உது + குறிது = உதுகுறிது**

***சுட்டுப்பெயர் வருமிடம் :***

*படர்க்கைப் பெயரோடு சுட்டுப் பெயர் சேர்ந்துவரின், அப்படர்க்கைப் பெயர் முடிக்குஞ் சொற் கொள்ளுமிடத்து*

*அதற்குப் பின்வரும்; முடிக்குஞ் சொற் கொள்ளாவிடத்து, அதற்குப் பின்னும் முன்னும் வரும்.*

**(எ.டு) 1. சாத்தன் வந்தான்; அவனுக்குச் சோறிடுக.**
**எருது வந்தது; அதற்குப் புல்லிடுக.**

**2. நம்பியவன்; அவனம்பி.**

**சுட்டெழுத்துகள் :**

*அ, இ, உ என்னும் மூன்று எழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் நின்று சுட்டுப் பொருளைத் தருமானால் சுட்டெழுத்து களாகும். இவ்வெழுத்துகளுள் அகரம் தொலைவிலுள்ள பொருளையும் இகரம் அருகில் உள்ள பொருளையும் உகரம் மேல் நிற்கும் பொருளையும் சுட்டுதற்கு வரும். இச்சுட்டு அகச்சுட்டு, புறச்சுட்டு என இருவகைப்படும்.*

**(எ.டு) அவன் இவன் உவன் – அகச்சுட்டு**

**அம்மனிதன், இம்மனிதன், உம்மனிதன் – புறச்சுட்டு.**

**சுட்டு முதலாகிய வகரவீறு, மென்கணத்தோடு புணர்தல் :**

*சுட்டு முதலாகிய வகரவீறு மென்கணம் வந்து இயைந்த விடத்து அவ்வகரம் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும்.*

**(எ.டு) அவ் + ஞாண் = அஞ்ஞாண்**

**இவ் + ஞாண் = இஞ்ஞாண்**

**உவ் + ஞாண் = உஞ்ஞாண்**

**சுட்டுமுதலாகிய வகரவீறு வன்கணத்தோடு புணர்தல் :**

*சுட்டுமுதலாகிய வகரவீறு வன்கணம் வந்தால் அல்வழிப் புணர்ச்சியில் அவ் வகரம் ஆய்தமாகத் திரியும்.*

**(எ.டு) அவ் + கடிய = அஃகடிய**

**இவ் + கடிய = இஃகடிய**

**உவ் + கடிய = உஃகடிய.**

**சுட்டுமுதலாகிய வகரவீறு இடைக்கணம் உயிர்க்கணம் ஆகியவற்றோடு புணர்தல் :**

*சுட்டுமுதலாகிய வகரவீற்றுடன் இடைக்கணமும் உயிர்க்கணமும் வந்து புணர்ந்தால் இயல்பாய் முடியும்.*

**(எ.டு) அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ்**

**அவ்வாடை, இவ்வாடை, உவ்வாடை**

**சுட்டுப் பெயர்க்குச் சிறப்புவிதி :**

*அஃது, இஃது, உஃது என்னும் மூன்று சுட்டுப் பெயர்களில் மொழிமுதற் சுட்டெழுத்தின் முன் நின்ற ஆய்தம், அச்சுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து அன்சாரியை வந்தால் கெடும்.*

**(எ.டு) அஃது + ஐ = அதனை**

**இஃது + ஐ = இதனை**

**உஃது + ஐ = உதனை**

**சூத்திரத்தின் இலக்கணம் :**

*அளவில் பெரிய மலை முதலியவற்றின் நிழலைத் தன்னுள்ளே செவ்வையாக அடக்கி இனிதாகக் காட்டும் சிறிய கண்ணாடியைப் போலச் சில வகை எழுத்துகளாலாகிய தொடர்களிலே பலவகைப் பட்ட பொருள்களைச் செவ்வையாக அடக்கி இனிதாகக் காட்டிக்குற்றமில்லாமையாற் சொல்வலி பொருள்வலிகளும் ஆழமுடைமையாற் பொருண் நுணுக்கங்களும் சிறந்து வருவன சூத்திரங்களாகும்.*

**சூழ்த்திரம், சூழ்ச்சியம் என்பவற்றின் ழகர ஒற்றுக்கெட்டு வந்தது சூத்திரம்.**

**"முன்பயில் சூத்திரம் இதுவென" என்பது கம்பர்வாக்கு.**

**செயின் என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சங்கள் :**

*இவை, இன், ஆல், கால், கடை, வழி, இடத்து, உம் என்னும் விகுதிகளை இறுதியிற் பெற்றுக் காரணப் பொருளில் வந்து, தன் கருத்தாவின் வினையையும், பிற கருத்தாவின் வினையையும் கொண்டு முடியும்.*

**(எ.டு) வரின், வந்தால் – போல**

**செய்கின்ற வென்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சங்கள் :**

*இவை நிகழ்கால இடைநிலையோடு அகர வீறு பெற்று வரும்.*

**(எ.டு) உண்ணா நின்ற குதிரை**

**உண்கின்ற குதிரை**

**உண்கிற குதிரை**

**செய்த வென்னும் வாய்பாட் டிறந்தகாலப் பெயரெச்சங்கள் :**

*இவை, இறந்த கால இடை நிலையோடும் வேறுபட்டு இறந்த காலங்காட்டும் முதனிலையோடும் அகர ஈறு பெற்று வரும்.*

| | | |
|---|---|---|
| **(எ.டு)** | **வந்த எருமை** | **போய குதிரை** |
| | **உண்ட எருமை** | **புக்க குதிரை** |
| | **தின்ற எருமை** | **விட்டகுதிரை** |
| | **வருந்தின எருமை** | **உற்றகுதிரை** |

**செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள் :**

*இவை, உ, இ, இய என்னும் ஈறுகளை இறுதியில் பெற்றுத் தன் கருத்தாவின் வினையையே கொண்டு முடியும்.*

**(எ.டு) வந்து, எண்ணி, காணிய**

**செய்யுள் வேற்றுமை (விகாரம்) :**

*மெல்லொற்றை வல்லொற்றாக்கலும் வல்லொற்றை மெல்லொற்றாக்கலும் குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை வருவித்தலும், உள்ள எழுத்தை நீக்கலும், ஒரு சொல்லினுடைய முதல், இடை, கடை என்னும் மூன்றில் ஓரிடத்துக் குறைந்து வருதலும் ஆகிய இவை செய்யுள் வேறுபாடுகளாகும்.*

**(எ.டு) "முத்தை வரூஉங்காலம்" – முந்தை என்பது வலிந்து நின்றது.**

**"தண்டையினக்கிளி கடிவோள்**

**பண்டையல்லள் மானோக்கினளே" – இங்குத் தட்டை என்பது மெலிந்து நின்றது.**

**"கற்பக நீழல்" – நிழல் என்பது நீண்டு நின்றது.**

**"நன்றென்றேன் தியேன்" தீயேன் என்பது குறுகி நின்றது.**

**"நெல்விளையும்மே" விளையுமே யென்பது மகரமெய் விரிந்து நின்றது.**

**"மரையிதழ்" தாமரை என்பது முதல் குறைந்தது**

**"ஒதி முது போத்து" ஒந்தி என்பது இடை குறைந்தது.**

**"நீலுண் துகிலிகை" நீலம் என்பது கடை குறைந்தது.**

**செய்யுமென்னும் வாய்பாட் டெதிர்காலப் பெயரெச்சங்கள் :**

*இவை, இடை நிலையின்றித் தாமே எதிர்காலங்காட்டும் உம் விகுதிபெற்று வரும்.*

**(எ.டு) உண்ணுங் குழந்தை**

**நடக்கும் மாடு**

**செய்யுளிசை யளபெடை :**

*செய்யுளில் ஓசை குறையுமிடத்து அவ்வோசையை நிறைக்க வருவது செய்யுளிசை யளபெடையாம்.*

**(எ.டு) ஓ ஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை ஆ அதும் என்னு மவர்.**

**ஓதல், ஆதும் என நின்று அளபெடை வாராக்கால் மாமுன் நேர் ஆகி வெண்டளை பிழைபட்டுப் போகும்.**

**சொல்லிசையளபெடை :**

*செய்யுளில் ஓசை குறையாவிடத்தும் பெயர்ச்சொல் வினையெச்சத் தன்மையடைதற் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசையளபெடையாகும். (அளபெடுப்பதால் பொருள் மாறுபடும்)*

**(எ.டு) "உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்!**

**வரனசைஇ யின்னு முளேன்"**

*இதில் விருப்பம் எனப்பொருள்படும் நசை என்னும் பெயர்ச்சொல், விரும்பி என வினையெச்சப் பொருள் படும் பொருட்டு 'நசைஇ' என அளபெடுத்தது.*

**ஞ முன் மயங்கும் எழுத்துகள் :**

*ஞகரத்தின் முன் அவற்றுக்கினமாகிய சகரமும் யகரமும் மயங்கும்.*

**(எ.டு) கஞ்சன், உரிஞ்யாது**

**உரிஞ்யாது என்பதை ஒருசொல் நீர்மைத்தாய்க் கொண்டுரைத்தது. இவ்வாறு வருவன பிறவும் உண்டு.**

**ஞகரம் பிறக்குமிடம் :**

*நாக்கின் நடுப்பாகம் மேல் வாயின் இடையைச் சேர்தலால் ஞகரம் பிறக்கும்.*

**ஞகர மெய்யை முதலாகப் பெற்று வரும் எழுத்துகள் :**

*அ, ஆ, எ, ஒ ஆகிய நான்கு உயிர் எழுத்தோடு சேர்ந்து ஞகரமெய் சொல்லுக்கு முதலாக வரும்.*

**(எ.டு) ஞமலி, ஞான்றது**

**ஞெண்டு, ஞொள்கிற்று**

**ஞகார வீறு மென் கணத்தோடும் வகரத்தோடும் புணர்தல் :**

*ஞகாரவீறு வன்கணத்தோடு மட்டுமன்றி, ஞ ந ம வ முதன்மொழி வருமொழியாய் வந்தாலும் நிலைமொழிக்கண் உகரம் பொருந்தும்.*

**(எ.டு) உரிஞ் + ஞான்றது – உரிஞு ஞான்றது**

**உரிஞ் + நீண்டது – உரிஞூ நீண்டது**

**உரிஞ் + மாண்டது – உரிஞூ மாண்டது**

**உரிஞ் + வலிது – உரிஞூ வலிது.**

**ஞகார வீறு இருவழியிடத்தும் வன் கணத்தோடு புணர்தல் :**

*ஞகர மெய்யை இறுதியாகவுடைய தொழிற்பெயர் முன்னர், வேற்றுமை அல்வழி ஆகிய இரண்டிடத்தும் வல்லெழுத்து வருமொழியாய் வருமாயின் மிக்குமுடியும். ஆண்டு நிலை மொழி உகரம் பெறும்.*

**(எ.டு) உரிஞ் + கடிது – உரிஞுக் கடிது.**

**டகரம் பிறக்குமிடம் :**

*நாக்கின் நுனிப்பாகம் மேல்வாயைச் சார்தலால் டகரம் பிறக்கும்.*

**'ட' முன் மயங்கும் எழுத்துகள் :**

*டகரத்தின் முன் க ச ப என்னும் மூன்று மெய்களும் இணங்கி மயங்கும்.*

*(எ.டு) வெட்கம், கட்சி, திட்பம்*

**ண முன் மயங்கும் எழுத்துகள் :**

*ணகரத்தின் முன் அதற்கு இனமாகிய டகரமும் க, ச, ஞ, ப, ம, ய, வ ஆகிய ஏழு மெய்களும் மயங்கும்.*

**(எ.டு) விண்டு, உண்கு, வெண்சோறு, வெண் ஞமலி, பண்பு, வெண்மை, மண்யாது, மண் வலிது.**

**ணகரம் பிறக்குமிடம் :**

*நாக்கின் நுனிப்பாகம் மேல்வாயைச் சார்தலால் ணகரம் பிறக்கும்.*

**ணகர வீற்றின் கேடு :**

*தனிக் குற்றெழுத்தைச் சாராத ணகரம் வருநகரந்திரிந்த விடத்து, அல்வழி வேற்றுமை ஆகிய இருவழியிலும் கெடும்.*

**(எ.டு)**

**அல்வழி**

**தூண் + நன்று – தூணன்று**

**அரண் + நன்று – அரணன்று**

**வேற்றுமை**

**தூண் + நன்மை – தூணன்மை**

**அரண் + நன்மை – அரணன்மை**

**ணகர வீற்றின் இயல்பும் திரிபும் :**

*வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் ணகரம் டகரமாகத் திரியும். மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும். அல்வழிப் புணர்ச்சியில் மூன்றின் மெய்களும் வந்தாலும் இயல்பேயாம்.*

**(எ.டு) கண் + களிறு = கட்களிறு – வேற்றுமையில் ண, வல்லினம் வர ட வாயிற்று.**

**மண் + மாட்சி – மண்மாட்சி; மண் + வண்ணம் = மண்வண்ணம் – வேற்றுமையில் பிறவர இயல்பாயிற்று.**

| | |
|---|---|
| **மண் + பெரிது = மண்பெரிது** | *அல் வழியில்* |
| **மண் + மாண்டது = மண்மாண்டது** | *பலவும் வர* |
| **மண் + யாது = மண்யாது** | *இயல்பாயிற்று* |

**ணகர வீற்றுப் பெயர்கட்குச் சிறப்புவிதி :**

*சாதி பற்றி வரும் பெயர்கட்கும் கூட்டம் பற்றி வரும் பெயர்கட்கும், பரண், கவண் என்னும் பெயர்கட்கும் இறுதியிலுள்ள ணகரமானது வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழிப் புணர்ச்சியிலும் வல்லினம் வந்தால் இயல்பாகும். உணவிற்குரிய ( எள் என்னும் பொருளையுடைய) எண் என்னும் பெயர்க்கும் சாண் என்னும் நீட்டலளவைப் பெயர்க்கும் இறுதி ணகரமானது அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் வந்தால் டகரமாகத் திரிதலும் பொருந்தும்.*

**(எ.டு) பாண் + தொழில் – பாண் டொழில் – சாதிப்பெயர்**

**அமண் + சேரி – அமண் சேரி – குழூஉப்பெயர்**

**பரண் + கால் – பரண்கால் – பரண் பெயர்**

**கவண் + கடுமை – கவண் கடுமை – கவண்பெயர்**

| | |
|---|---|
| **எண் + பெரிது – எட்பெரிது – எண் பெயர்** | *அல்வழியில்* |
| **சாண் + கோல் – சாட்கோல் – சாண்பெயர்** | *திரிந்தன* |

**'தகரம்' பிறக்குமிடம் :**

*மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்தத் தகரம் பிறக்கும்.*

**'தமிழ்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*தமிழ் என்னுஞ் சொல் வேற்றுமைப் புணர்ச்சியில் (வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்க்கணம்) நாற்கணமும் வந்தால் அகரச் சாரியை பொருந்தவும் பெறும்.*

**(எ.டு) தமிழ் + பிள்ளை = தமிழப்பிள்ளை**

**தமிழ் + நாதன் = தமிழநாதன்**

**தமிழ் + வளவன் = தமிழவளவன்**

**தமிழ் + அரசன் = தமிழவரசன்**

**தமிழ் எழுத்திற் சிறப்பெழுத்தும் பொதுவெழுத்தும் :**

*முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்துகளில் (40) றகர னகர ழகர எகர ஒகரங்களைந்தும், உயிர்மெய்யும் உயிரளபெடையு மல்லாத சார்பெழுத்தெட்டும் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பெழுத்துகளாம். எஞ்சிய இருபத்தேழு எழுத்துகளும் வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் உரிய பொது எழுத்து களாகும். இது நன்னூல் உரைக்கும்முறை. தொல்காப்பியம் முதல் எழுத்து முப்பது சார்பெழுத்து மூன்று; ஆக முப்பத்து மூன்று எழுத்துகள் என்னும்.*

**தற்கிழமைப் பொருள் :**

*தன்னோடு ஒற்றுமையுடைய பொருள் தற்கிழமைப் பொருளாம். அது உறுப்பும், பண்பும், தொழிலும், ஒன்றன் கூட்டமும், பலவின் கூட்டமும், ஒன்று திரிந் தொன்றாயதும் என அறுவகைப்படும். கிழமை = உரிமை.*

**(எ.டு) சாத்தனது கை = உறுப்புத்தற்கிழமை**

**சாத்தனது கருமை = பண்புத்தற்கிழமை**

**சாத்தனது வரவு = தொழிற்றற்கிழமை**

**நெல்லது குப்பை = ஒன்றன்கூட்டத்தற்கிழமை**

**சேனையது தொகுதி = பலவின்கூட்டத்தற்கிழமை**

**மஞ்சளது பொடி = ஒன்றுதிரிந்தொன்றாயதன் தற்கிழமை**

**தற்பொருட்டுப் பொருள் உணர்த்தும் விகுதி :**

*கொள் என்னும் விகுதி தற்பொருட்டுப் பொருளை யுணர்த்தும்*

**(எ.டு) அடித்துக் கொண்டான்**

**தற்சமம் :**

*வடமொழிக்குந் தமிழ் மொழிக்கும் பொதுவெழுத் தாலாகி வேற்றுமையின்றித் தமிழில் வந்து வழங்கும் வடசொல் தற்சமம் எனப்படும்.*

**(எ.டு) அமலம், கமலம், குங்குமம்.**

**(தற்பவக்குறிப்பு நோக்குக)**

**தற்பவம் :**

*வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துகளாலும், பொதுவும் சிறப்புமாகிய இவ்விருவகை எழுத்துகளாலும் அமைந்துள்ளன வான வடமொழிச் சொற்கள் தமிழில் திரிந்தும் திரியாமலும் வந்து வழங்குவன தற்பவம் எனப்படும்.*

**(எ.டு) சுகி, போகி – சிறப்பெழுத்தால் இயைந்தன**

**அரி, அரன், சமயம் – ஈரெழுத்தாலும் இயைந்தன.**

**(இவையும் தமிழ் மூலங்களே என்பது வேர்ச்சொல் ஆய்வால் விளங்கும்)**

**தனிமொழி :**

*பகாச்சொல்லேனும் பகுசொல்லேனும் ஒன்று, நின்று தம்தம் பொருளைத் தருவது தனிமொழியாம்.*

*(எ.டு) நிலம், நடந்தான்.*

**தனிக் குற்றெழுத்தின் கீழ் நின்ற மகரம் ஞ, ந க்களுக்கேற்பத் திரிதல் :**

*தனிக் குற்றெழுத்தின் கீழ் நின்ற மகரம், வருமொழி முதலில் ஞ, நக்கள் வருமாயின் அவ்வெழுத்தாகத் திரியும்.*

**(எ.டு) எம் + ஞானம் = எஞ்ஞானம்**

**எம் + நூல் = எந்நூல்**

**நும் + ஞானம் = நுஞ்ஞானம்**

**தம் + நூல் = தந்நூல்**

**நம் + நூல் = நந்நூல்.**

**தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த ளளக்கள் வல்லினத் தோடு புணர்தல் :**

*தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த லகர ளகரங்கள் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் எழுவாய்த் தொடரினும், உம்மைத் தொகையினும், ஒருகால் இயல்பாயும். ஒரு கால் திரிபாயும் வரும்.*

| | | | | |
|---|---|---|---|---|
| **(எ.டு)** | **கல் + குறிது** | = | **கற்குறிது** | *எழுவாய்த் தொடர்* |
| | **முள் + சிறிது** | = | **முட்சிறிது** | |

அல் + பகல் = அற்பகல் } பண்புத்
உள் + புறம் = உட்புறம் } தொகை

**தனிக்குற்றெழுத்தின் கீழ் நின்ற மகரம் வல்லினத்தில் திரிதல் :**

*தனிக்குற்றெழுத்தின் கீழ் நின்ற மகரம், அல்வழி வேற்றுமை ஆகிய இருவழியிலும் வரும் வல்லெழுத்திற்கு இனமாகத் திரியும்.*

| | | |
|---|---|---|
| **(எ.டு)** | **அல்வழி** | **வேற்றுமை** |
| | **கங்குறிது** | **கங்குறுமை, அஞ்சிறுமை** |
| | **அஞ்செவி** | **நங்கை,** |
| | **செங்கோழி** | **தஞ்செவி,** |
| | | **எந்தலை.** |

**தனிக்குறில் மெய்க்குச் சிறப்பு விதி :**

*தனிக்குற்றெழுத்தை யடுத்து நின்ற மெய் வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் இருவழியிலும் இரட்டித்து நிற்கும்.*

**(எ.டு) மண் + அழகிது = மண்ணழகிது – அல்வழி**

**பொன் + அணி = பொன்னணி – வேற்றுமை**

**'தன்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*தன் என்னும் மொழியின் இறுதி னகரம் வல்லினம் வரின் ஒருகாற்றிரிந்தும், ஒரு காற்றிரியாதும் நிற்கும்.*

**(எ.டு) தன் + பகை = தன்பகை, தற்பகை.**

**தன்மைப் பன்மை வினைமுற்று :**

*அம், ஆம், எம், ஏம், ஓம் என்பவற்றை இறுதியில் உடைய வினைச்சொற்கள் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றுங் குறிப்பு வினைமுற்றுமாம். செய்யுளில் தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றுக்கு இவ்விறுதிகள் அன்றி கும், டும், தும், றும் என்னும் இறுதிகளும் வழங்கும்.*

*(எ.டு)*

| இறப்பு | நிகழ்வு | எதிர்வு | குறிப்பு | |
|---|---|---|---|---|
| உண்டனம் | உண்கின்றனம் | உண்பம் | தாரினம் | *யாம்* |
| உண்டாம் | உண்கின்றாம் | உண்பாம் | தாரினாம் | *யானும் நீயும்* |
| உண்டனெம் | உண்கின்றனெம் | உண்பெம் | தாரினெம் | *யான்* |
| உண்டேம் | உண்கின்றேம் | உண்பேம் | தாரினேம் | *யானும்* |
| உண்டோம் | உண்கின்றோம் | உண்போம் | தாரினோம் | *அவனும்* |

| இ. தெரி | எ. தெரி | |
|---|---|---|
| – | உண்கும் | |
| உண்டும் | – | *யாம் யானும் நீயுமவனும்* |
| வந்தும் | வருதும் | |
| சென்றும் | சேறும் | |

**தன்மைப் பெயர்கள் :**

*தன்மைப் பெயர்கள் நான், யான், யாம், நாம் என நான்காம். இவற்றுள் நான், யான் இவ்விரண்டும் ஒருமைப் பெயர்கள். நாம், யாம் என்பன பன்மைப் பெயர்கள். இப்பெயர்கள் உயர்திணை, ஆண்பால், பெண்பால்களுக்குப் பொதுவாகி வருவன.*

**(எ.டு) யானம்பி, யானங்கை – தன்மை யொருமை**

**யாமைந்தர், யாமகளிர் – தன்மைப் பன்மை.**

**தன்மைப் பொருள் உணர்த்தும் இறுதி :**

*மை இறுதி தன்மைப் பொருளை யுணர்த்தும்.*

**(எ.டு) பொன்மை, ஆண்மை.**

**தன் வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாய் நிற்கும் முதனிலைகள் :**

*அழி, கெடு, வெளு, கரை, தேய் என்பன தன்வினை பிறவினை ஆகிய இரண்டிற்கும் பொதுவாய் நிற்கும் முதனிலை களாகும்.*

**தன்வினை :**

*தன் வினையாவது, தன்னெழுவாய்க் கருத்தாவின் தொழிலை உணர்த்தி நிற்கும் முதனிலை அடியாகத் தோன்றும் வினையாகும். இத்தன்வினை இயற்றுதற் கருத்தாவின் வினையெனப் படும்.*

*(எ.டு) முகிலன் நடந்தான்.*

**'தான்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*தான் என்னும் விரவுப் பெயர் நெடுமுதல் குறுகித் தன் என்றாயும், அல்வழியில் இயல்பாயும், வேற்றுமையில் நெடுமுதல் குறுகி இறுதி திரிதலும் நிகழும்.*

**(எ.டு) தான் + கை = தன்கை**

**தான் + குறியன் = தான்குறியன்**

**தான் + புகழ் = தற்புகழ்**

**'தாழ்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லோடு புணருமிடத்து வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச்சாரியை இடைவந்து முடியும்.*

**(எ.டு) தாழ் + கோல் = தாழக்கோல்.**

**திரிதல் :**

*ஒரெழுத்து மற்றோரெழுத்தாக விதியின்றித் திரிதற்குத் திரிதல் என்று பெயர்.*

| | | | |
|---|---|---|---|
| **(எ.டு)** | **மாகி** | – | **மாசி** |
| | **மழைபெயின் விளையும்** | – | **மழைபெயில்விளையும்** |
| | **கண்ணகல் பரப்பு** | – | **கண்ணகன் பரப்பு** |
| | **உயர்திணை மேல** | – | **உயர்திணைமேன.** |

**திசைப் பெயர்க்குச் சிறப்பு விதி :**

*திசைப் பெயரோடு திசைப்பெயரும் பிற பெயர்களும் புணருமிடத்து நிலைமொழியீற்றிலே நின்ற உயிர்மெய்யும் அதன் மேனின்ற ககர மெய்யுங் கெடுதலும், அவ்விடத்து நின்ற றகரமெய் னகரமெய்யாகவும், லகர மெய்யாகவுந் திரிதலுமாகும்.*

| | | |
|---|---|---|
| (எ.டு) | வடக்கு + கிழக்கு = வடகிழக்கு<br>குடக்கு + திசை = குடதிசை<br>குணக்கு + நாடு = குணநாடு | *உயிர் மெய்யும் ககர மெய்யும் கெட்டுவந்தன* |
| | தெற்கு + மேற்கு = தென்மேற்கு<br>தென் + யாறு = தென்யாறு | *உயிர் மெய்கெட றகரம் னகரமாயிற்று* |
| | மேற் + காற்று = மேல்காற்று<br>மேற்கு + ஊர் = மேலூர் | *உயிர் மெய்கெட றகரம் லகரமாயிற்று* |
| | கிழக்கு + காற்று = கீழ்காற்று<br>கிழக்கு + நாடு = கீழ்நாடு | *உயிர் மெய்யும் ககர வொற்றும் அகரமும் கெட்டு முதல் நீண்டது* |

**தீர்க்கசந்தி :**

*வடசொல்லில் அ ஆ வின் முன் அ ஆ வரின் ஈறுமுதலுங் கெட ஆ வொன்று தோன்றுவதும், இ, ஈ யின் முன் இ, ஈ வரின் ஈறுமுதலுங்கெட ஈ வொன்று தோன்றுவதும், உ, ஊ - வின் முன் உ, ஊ வரின் ஈறுமுதலுங்கெட ஊவொன்று தோன்றுவதும் தீர்க்க சந்தியாகும்.*

**(எ.டு)** **பத + அம்புயம் = பதாம்புயம்**

**சிவ + ஆலயம் = சிவாலயம்**

**சேநா + அதிபதி = சேநாதிபதி**

**சதா + ஆனந்தம் = சதானந்தம்**

**கவி + இந்திரன் = கவீந்திரன்**

**கிரி + ஈசன் = கிரீசன்**

**மகி + இந்திரன் = மகீந்திரன்**

**நதி + ஈசன் = நதீசன்**

**குரு + உதயம் = குரூதயம்**

**சிந்து + ஊர்மி = சிந்தூர்மி**

**சுயம்பூ + உபதேசம் = சுயம்பூபதேசம்**

**சுயம்பூ + ஊர்ச்சிதம் = சுயம்பூர்ச்சிதம்.**

**'தெங்கு' என்பதற்குச் சிறப்பு விதி :**

*வருமொழியில் காயென்னுஞ் சொல் வருமாயின் தெங் கென்னும் நிலைமொழி முதல் நீண்டு ஈற்றில் உள்ள உயிர்மெய் நீங்கும்.*

**(எ.டு) தெங்கு + காய் = தேங்காய்**

**(நீர் தேங்கி நிற்கும் காய் ஆதலால் தேங்கு + காய் = தேங்காய் ஆதல் கண்கூடு.)**

**'தெவ்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*தெவ் என்னும் பகைமையை யுணர்த்தும் பெயர், யகர மல்லாத மெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர்போல உகரச்சாரியை பெற்று முடியும். மகரம் வரின் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒரோவிடத்து வகரமெய் மகரமெய்யாகத் திரியவும் பெறும்.*

**அல்வழி**

**(எ.டு) தெவ் + கடிது = தெவ்வுக்கடிது**

**தெவ் + மாண்டது = தெவ்வுமாண்டது**

**தெவ் + வந்தது = தெவ்வு வந்தது**

**தெவ் + மன்னர் = தெவ்வுமன்னர்**

**தெவ் + மன்னர் = தெம்மன்னர்**

**தெவ் + கடுமை = தெவ்வுக்கடுமை**

**தெவ் + மாட்சி = தெவ்வுமாட்சி**

**தெவ் + வன்மை = தெவ்வுவன்மை**

**தெவ் + முனை = தெவ்வு முனை**

**தெவ் + முனை = தெம்முனை**

**'தேன்' என்னும் மொழிக்குச் சிறப்பு விதி :**

*தேன் என்னுஞ் சொல் மூன்றின மெய்களும் வருமொழி முதலில் வந்தால் இறுதியிலுள்ள னகரமெய் இயல்பாதலும், மெல்லினம் வந்தால் அவ்விறுதி னகர மெய் இயல்பாதலேயன்றிக் கெடுதலும், வல்லினம் வந்தால் அவ்வீற்று னகரமெய் இயல்பாதலேயன்றிக் கெடவந்த வல்லினமாவது அதற்கு இனமான மெல்லினமாவது மிகுதலும் விதியாகும்.*

**(எ.டு) தேன் + கடிது = தேன்கடிது**

**தேன் + மாண்டது = தேன்மாண்டது**
**தேன் + யாது = தேன்யாது** } *அவ்வழியில் இயல்பாயின*

**தேன் + மொழி = தேன்மொழி,**

**தேமொழி – அல்வழியில் இயல்பும் அழிவும்.**

**தேன் + குழம்பு = தேன்குழம்பு**
**தேக்குழம்பு**
**தேங்குழம்பு** } *அல் வழியில் இயல்பும் வலி மிகலும், மெலி மிகலும்.*

**தேன் + செம்மை = தேன்செம்மை**
**தேன் + மாட்சி = தேன்மாட்சி**
**தேன் + யாப்பு = தேன்யாப்பு** } *வேற்றுமையில் இயல்பு*

**தேன் + மலர் = தேன்மலர்**
**தேமலர்** } *வேற்றுமையில் இயல்பும் அழிவும்*

**தேன் + குடம் = தேன்குடம்**
**தேக்குடம்**
**தேங்குடம்** } *வேற்றுமையில் இயல்பும் வலிமிகலும் மெலிமிகலும்*

**தோன்றல் :**

*எழுத்துஞ் சாரியையும், விதியின்றித் தோன்றுவது தோன்றலாகும். இஃது எழுத்துப் பேறுமாம்.*

**(எ.டு) யாது – யாவது**

**குன்று – குன்றம்**

**செல்உழி – செல்வுழி**

**விண்அத்து – விண்வத்து**

**'ந' முன் மயங்கும் எழுத்துகள் :**

*நகரத்தின் முன் அவற்றுக்கினமாகிய தகரமும் யகரமும் மயங்கும்.*

**(எ.டு) கந்தன், பொருந் யாது?**

**நகரம் பிறக்குமிடம் :**

*மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்த நகரம் பிறக்கும்.*

**நகர வீறு வன்கணம், மென்கணம், இடைக்கணம் ஆகியவற்றோடு புணர்தல் :**

*நகரவீறு வன்கணத்தோடு புணருங் காலத்து வல்லெழுத்து மிக்கும் நிலை மொழியிறுதி உகரம் பெற்றும் முடியும். மென்கணம், இடைக்கணம் ஆகியவற்றோடு புணருங் காலத்து நிலை மொழி இறுதி உகரம் பெற்று முடியும்.*

**(எ.டு) பொருந் + கடிது – பொருநுக் கடிது**

**பொருந் + ஞான்றது – பொருநு ஞான்றது**

**பொருந் + வலிது – பொருநு வலிது.**

**'நாழி', 'உரி' என்பவற்றிற்குச் சிறப்பு விதி :**

*உரி என்னும் முகத்தலளவுப் பெயர் வருமொழியாக வந்தால், நிலைமொழியாக நின்ற நாழி என்னும் முகத்தலளவுப் பெயரினது ஈற்றிலுள்ள 'ழி' என்னும் உயிர்மெய் நீங்க, டகர மெய் வரும். நிலைமொழியாய் நின்ற உரி என்னும் முகத்தலளவுப் பெயரின் பின் அவ்வுயிர் மெய் வருவதற்கேற்ற மொழிகள் வருமொழியாக வந்து புணர்ந்தால் யகர வுயிர் மெய் வரும்.*

**(எ.டு) நாழி + உரி = நாடுரி = 'ழி' கெட, டகரம் தோன்றிற்று**

**உரி + உப்பு = உரியவுப்பு**

**உரி + பயறு = உரியபயறு**

**உரி + மிளகு = உரிய மிளகு**

**உரி + வரகு = உரிய வரகு**

} *உரியின்பின் யகரவுயிர்மெய் தோன்றிற்று.*

**நான்கு என்பதற்குச் சிறப்பு விதி :**

*இறுதி யுயிர்மெய் கெட நின்ற நான்கென்னும் எண்ணினது னகரமெய் வருமொழி முதலில் உயிரும் இடையினமும் வருமிடத்து லகரமாகவும் வல்லினம் வருமிடத்து றகரமாகவும் மெல்லினம் வருமிடத்துத் திரியாமலும் வரும்.*

| | | |
|---|---|---|
| **(எ.டு) நான்கு + ஆயிரம் – நாலாயிரம்**<br>**நான்கு + வகை – நால்வகை** | } | *உயிரும் இடையினமும் வர ஈறுகெட்டு னகரம் லகரமாயிற்று* |
| **நான்கு + கவி – நாற்கவி**<br>**நான்கு + பால் – நாற்பால்** | } | *வலிவர ஈறு கெட்டு னகரம் றகரமாயிற்று* |
| **நான்கு + மணி – நான்மணி**<br>**நான்கு + நாழி – நானாழி** | } | *மெலிவர ஈறு கெட்டு னகரம் திரியாது நின்றது* |

**நிகழ் கால இடைநிலை :**

*கிறு, கின்று, ஆநின்று ஆகிய இம்மூன்றும் ஆண்பால் முதலிய ஐந்து பால்களிலும், தன்மை முதலிய மூன்று இடங்களிலும், நிகழ்காலத்தைக் காட்டுகின்ற வினைப் பகுபதங்களின் இடைநிலைகளாம்.*

**(எ.டு) படிக்கிறான், படிக்கின்றான், படியாநின்றான்.**

**நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டும் விகுதி :**

*உம் என்னுஞ் செய்யு மென் முற்று விகுதி நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டும்.*

**(எ.டு) உண்ணும்.**

**நிலைமாறுதல் :**

*எழுத்துகள் ஒன்று நின்றவிடத்து வேறோர் எழுத்துச் சென்று மாறி நிற்றற்கு நிலை மாறுதல் என்று பெயர்.*

**(எ.டு) மிஞிறு – ஞிமிறு**

**தசை – சதை**

**கொப்பளம் – பொக்களம்**

**'நின்' என்பவற்றிற்குச் சிறப்புவிதி :**

*நின் என்னும் மொழியின் இறுதி னகரம், வல்லினம் வரின் இயல்பாகும்.*

**(எ.டு) நின் + பகை = நின்பகை – இயல்பாயிற்று.**

**நீளல் :**

*விதியின்றிக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீளுவதற்கு நீளல் என்று பெயர்.*

**(எ.டு) பொழுது – போழ்து**

**பெயர் – பேர்.**

**நெட்டெழுத்துகள் :**

*உயிரெழுத்துகளில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துகளும் இரண்டு மாத்திரை பெற்று நீண்ட ஓசை உடையனவாதலால் நெட்டெழுத்துகளாகும்.*

**பகரம் பிறக்குமிடம் :**

*மேலுதடும் கீழுதடும் தம்மிற் பொருந்த 'ப' என்னும் எழுத்துப் பிறக்கும்.*

**பகாப்பதம் (பதம் = சொல்) :**

*பிரிக்கப் படுதலினால் பயனில்லாமல் காரணமின்றி இடப்பட்ட குறியாகித் தோன்றிய காலத்திலிருந்தே ஒன்றாகி முடிந்து நடக்கின்ற பெயர்ச் சொல்லும், வினைச் சொல்லும், இடைச் சொல்லும், உரிச் சொல்லுமாகிய நான்கும் பகாப் பதங்களாகும்.*

**(எ.டு) காற்று – பெயர்ப் பகாப்பதம்**

**உண் – வினைப் பகாப்பதம்**

**கொல் – இடைப்பகாப்பதம்**

**உறு, கழி – உரிப்பகாப்பதம்.**

*(தொல்காப்பிய மரபில் பொருள் குறியாச் சொல் எதுவும் இல்லை)*

**பகுதி (முதனிலை) :**

*பெயர்ப் பகுபதங்களுள்ளும் வினைப் பகுபதங்களுள்ளும் அவ்வவற்றின் முதலில் நிற்கின்ற பகாப்பதங்களே பகுதியாகும். (பதம் - சொல்)*

**பகுபதவுறுப்புக்கள் :**

*முதல் நிலை, இடைநிலை, இறுதிநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறும் பகுபத வுறுப்புக்களாகும்.*

**பகுபதம் :**

*பொருளும் இடமுங் காலமுஞ் சினையுங் குணமுந் தொழிலுங் காரணமாக வருகின்ற பெயர்ச் சொற்களும்,*

தெரிநிலையாகவுங் குறிப்பாகவுங் காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும் பகுபதங்களாகும்.

**பதம் :**

எழுத்துகள் தாமே ஒவ்வொன்றாகத் தனித்தும் இரண்டு முதலாகத் தொடர்ந்தும் பொருள் தருமாயின் பதமாம். அப்பதம் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

**பத்துடன் இரண்டு புணர்தல் :**

பத்தென்னும் எண்ணுப் பெயர் முன் இரண்டென்னும் எண்ணுப் பெயர் வருமாயின், பத் தென்னும் நிலைமொழியிலுள்ள துகரவுயிர் மெய் கெடத் தகரமெய் னகர மெய்யாகத் திரியும்.

**(எ.டு) பத்து + இரண்டு = பன்னிரண்டு.**

**பத்து என்னும் எண்ணுப் பெயர் முன் ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் புணர்தல் :**

பத்து என்னும் எண்ணுப் பெயர் முன்னால் ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வந்தாலும் ஈறு கெட்டு இன் பெற்று இயல்பில் திரியாது நிற்கும்.

**(எ.டு) பத்து + ஆயிரம் = பதினாயிரம்.**

**பலசில என்பவற்றிற்குச் சிறப்பு விதி :**

பல சில என்னும் இவ்விரு சொல்லும் தமக்கு முன்னே தாமே வருமாயின் வருமொழி இயல்பாதலும், மிகுதலும், இறுதியில் நின்ற லகரமெய் றகர மெய்யாகத் திரிதலும். இவ்விரு சொற்களின்முன்னே வேறு சொற்களிலொன்று வந்தால் நிலைமொழியிறுதியில் நின்ற அகரம் விகற்பித்தலும் உள்ளனவாம்.

**(எ.டு) பல பல, சிலசில – இயல்பாயின**

**பலப்பல, சிலச்சில – மிக்கன**

**பற்பல, சிற்சில – அகரம்கெட லகரம் றகரமாயிற்று.**

**பனை என்பதற்குச் சிறப்பு விதி :**

பனை என்னும் பெயரின் முன் கொடி என்னும் பெயர் வருமாயின் வந்த ககரமே மிகுதலும், கசதபக்கள் வருமாயின் நிலைமொழியீற்று ஐகாரம் கெட்டு ‘அம்’ சாரியை பெறுதலும், திரள் என்னும் பெயர் வருமாயின் வந்த தகரம் மிகுந்தும், ‘ஐ’

*கெட்டு 'அம்' சாரியை பெற்றும், அட்டு என்னும் பெயர் வருமாயின் நிலை மொழியீற்று ஐகாரம் கெட்டு வருமொழி முதலில் உள்ள அகரம் ஆகாரம் ஆதலும் ஆகும்.*

**(எ.டு) பனை + கொடி – பனைக்கொடி – மிக்கது**

**பனை + காய் – பனங்காய்.**
**'ஐ' கெட்டு 'அம்' பெற்றது.**

**பனை + திரள் – பனைத்திரள், பனந்திரள் உறழ்ந்தது**

**பனை + அட்டு – பனாட்டு**
**'ஐ' கெட்டு அகரம் ஆகாரமாக நீண்டது.**

***'பன்' என்பதற்குச் சிறப்பு விதி :***

*பன் என்னும் சொல் முதனிலைத் தொழிற்பெயர் போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச் சாரியை பொருந்தும்.*

**(எ.டு) பன் + வலிது = பன்னுவலிது.**

*( பன், பருத்தி)*

***'பாழ்' என்னுஞ் சொல்லிற்குச் சிறப்பு விதி :***

*பாழ் என்னுஞ் சொல் வல்லெழுத்தோடு மெல்லெழுத்து உறழ்ந்து முடியும்.*

**(எ.டு) பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு.**

***'பின்' என்பதற்குச் சிறப்பு விதி :***

*பின் என்னும் சொல் முதனிலைத் தொழிற் பெயர் போல யகரமல்லாத மெய்கள் வந்தால் உகரச் சாரியை பொருந்தும்.*

**(எ.டு) பின் + நன்று = பின்னுநன்று.**

***'பீர்' என்னுங்கிளவிக்குச் சிறப்புவிதி :***

*பீர் என்னுஞ் சொல் மெல்லெழுத்தேயன்றி அம்முச் சாரியையும் பெற்று முடியும்.*

**(எ.டு) பீர்ங்கோடு, பீரங்கோடு.**

***புணர்ச்சி :***

*மெய்யையும் உயிரையும் முதலும் இறுதியுமாகவுடைய பகாப்பதம் பகுபதம் என்ற இரண்டு பதங்களும் தன்னோடு தானும் பிறிதொடு பிறிதுமாய் அல்வழிப் பொருளினாலாவது*

*வேற்றுமைப் பொருளினாலாவது பொருந்து மிடத்து நிலை மொழியும் வருமொழியும் இயல்பாகவாயினும் விகாரமாக வாயினும் பொருந்துவது புணர்ச்சியாகும்.*

**புள் என்பதற்குச் சிறப்பு விதி :**

*புள் என்னுஞ் சொல் இருவழியும் யகரமல்லாத மெய்கள் வந்தால் பொது விதியான் முடிதலே யன்றித் தொழிற் பெயர் போல உகரச் சாரியையும் பெற்று முடியும்.*

*(எ.டு) புள்ளுக் கடிது, புள்ளுக் கடுமை.*

**புளி என்பதற்குச் சிறப்பு விதி :**

*அறுசுவையுள் ஒன்றையுணர்த்தும் புளி என்னும் பெயரின் முன் வல்லினம் வந்து புணர்ந்தால், அவ்வல்லெழுத்து மிகுதலன்றி அதற்கு இனமாகிய மெல்லெழுத்து மிகுதலும் ஆகும்.*

**(எ.டு) புளிங்கறி**

**புளிஞ்சோறு**

**புளிம்பாளிதம்**

**புளிந்தயிர்.**

**புறவினா :**

*எம்மனிதன், யாங்ஙனம் என்பன போன்ற சொற்களில் எ, யா என்ற வினா எழுத்துகள் சொற்களுக்கு வெளியே இருந்து வினாப்பொருளைத் தருகின்றன. இவ்வாறு பிரிக்கக் கூடியதாய் சொற்களுக்கு வெளியே இருந்து வினாப்பொருளைத் தரும் சொற்களுக்குப் புறவினா என்று பெயர்.*

**புறச்சுட்டு :**

*அ, இ, உ என்ற சுட்டெழுத்துகள் சொற்களுக்கு வெளியே நின்று சுட்டுப் பொருளைத் தருமானால் புறச்சுட்டு எனப்படும்.*

**(எ.டு) அவ்வரசன், இவ்வழகன், உவ்வரண்.**

**பூவின் முன் வல்லினம் புணர்தல் :**

*பூ என்னும் பெயர்ச் சொல்லின் முன் வரும் வல்லினம் பொது விதியால் மிகுதலேயல்லாமல் அவற்றிற்கு இனமாகிய மெல்லினமும் மிகும்.*

**(எ.டு) பூ + கொடி = பூக்கொடி; பூ + கொடி = பூங்கொடி**

**பொன் என்பதற்குச் சிறப்பு விதி :**

*பொன் என்னுஞ் சொல் பகரமுதன்மொழி வந்தவிடத்துத் தன் ஈற்றின் னகரம் கெட அதன் முன்னர் முறையானே லகரமும் மகரமும் தோன்றி முடியும் செய்யுளிடத்து.*

**(எ.டு) பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி.**

**போலியின் இலக்கணம் :**

*ஒரு சொல்லின் ஓர் எழுத்து உள்ள விடத்தில் அவ்வெழுத்துக்கீடாக வேறோர் எழுத்து நின்றாலும் பொருள் வேறுபடாமல் ஒத்திருப்பது போலியாகும். அது மொழி மூன்றிடத்தும் வரும். (போலி - போல)*

**(எ.டு) பசல் – பைசல் – முதற்போலி**

**அரயர் – அரையர் – இடைப்போலி**

**கலம் – கலன் – கடைப்போலி**

**ஐந்து – அஞ்சு – முற்றும்போலி**

**மகரத்தின் முன் மயங்கும் எழுத்துகள் :**

*மகரமெய்யின் முன் ப, ய, வ என்கின்ற மூன்று மெய்யெழுத்துகளும் மயங்கும்.*

**(எ.டு) கொம்பு; கலம்யாது கலம்வலிது.**

**முதலதே மெய்ம்மயக்கம் ஒரு சொல்லிலே வந்தது.**

**மற்றவை சொற்புணர்ச்சி, இவ்வாறே வருவன பிறவும் உள.**

**மகரத்தின் முன் மெல்லினம் புணர்தல் :**

*மகரத்தின் முன் மெல்லினம் வருமாயின் இறுதியில் நின்ற மகரம் இருவழியிலுங்கெடும்.*

**(எ.டு)**

**அல்வழி**

**மரம் + ஞான்றது = மரஞான்றது**

**மரம் + நீண்டது = மரநீண்டது**

**மரம் + மாண்டது= மரமாண்டது**

**வேற்றுமை**

**மரம் + ஞாற்சி = மரஞாற்சி**

**மரம் + நீட்சி = மரநீட்சி**

**மரம் + மாட்சி = மரமாட்சி**

***மகரவீற்றுப் புணர்ச்சி :***

*மகரத்தின் முன் வல்லினம்வரின் வேற்றுமையிலும், அல்வழியிலே பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும், இறுதிமகரங்கெட்டு வரும் வல்லினம் மிகும். எழுவாய்த் தொடரிலும், உம்மைத்தொகையிலும், செய்யுமென்னும் பெயரெச்சத் தொடரினும், வினைமுற்றுத் தொடரினும், இடைச் சொற்றொடரினும், இறுதிமகரம் வரும் வல்லெழுத் திற்கு இனமாகத் திரியும்.*

**(எ.டு) மரம் + கோடு = மரக்கோடு** *வேற்றுமையில்*
**நிலம் + பரப்பு=நிலப்பரப்பு** *வல்லினம் மிக்கது*

**வட்டம் + கல் = வட்டக்கல்**
**சதுரம் + பலகை = சதுரப்பலகை**
**கமலம் + கண் = கமலக்கண்** } *அல்வழியில் பண்புத்தொகையில் வல்லினம் மிக்கது*

*அல்வழியிலே உவமைத்தொகையில் வல்லினம் மிக்கது.*

**மரம் + குறிது = மரங்குறிது**
**யாம் + கொடியேம் =யாங்கொடியேம்** } *எழுவாய்த் தொடரில் இறுதி மகரம் வல்லெழுத்திற்கு இனமாகத்திரிந்தது*

**நிலம் + தீ = நிலந்தீ**
**பணம் + காசு = பணங்காசு** } *உம்மைத் தொகையில் இறுதி மகரம் வல்லெழுத்திற்கு இனமாகத் திரிந்தது*

**செய்யும் + காரியம் = செய்யுங்காரியம்**
**உண்ணும் + சோறு = உண்ணுஞ்சோறு** } *பெயரெச்சத் தொடர்*

**உண்டனம் + சிறியேம் = உண்டனஞ்சிறியேம்**
**தின்றனம் + குறியேம் = தின்றனங்குறியேம்** } *வினை முற்றுத் தொடர்*

**சாத்தனும் + கொற்றனும் = சாத்தனுங் கொற்றனும்**
**பூதனும் + தேவனும் = பூதனுந்தேவனும்** } *இடைச் சொல் தொடர்*

**மகரம் பிறக்குமிடம் :**

மேலுதடும் கீழுதடும் தம்மிற் பொருந்த 'ம' என்னும் எழுத்துப் பிறக்கும்.

**மகரத்தின் முன் உயிரும் இடையினமும் புணர்தல் :**

மகரத்தின் முன் உயிரும் இடையினமும் வரின், வேற்றுமையினும், அல்வழியிலே பண்புத்தொகையினும், உவமைத் தொகையினும் இறுதி மகரங் கெடும். எழுவாய்த் தொடரினும், உம்மைத் தொகையினும் செய்யுமென்னும் பெயரெச்சத் தொடரினும், வினைமுற்றுத் தொடரினும், இடைச் சொற்றொடரினும் இறுதி மகரம் கெடாது நிற்கும்.

| (எ.டு) | | |
|---|---|---|
| | **மரம் + அடி = மரவடி**<br>**மரம் + வேர் = மரவேர்** | வேற்றுமை |
| | **வட்டம் + ஆழி = வட்டவாழி**<br>**வட்டம் + வடிவம் = வட்ட வடிவம்** | பண்புத் தொகை |
| | **பவளம் + வாய் = பவளவாய்**<br>**பவளம் + இதழ் = பவளவிதழ்** | உவமைத் தொகை |
| | **மரம் + அரிது = மரமரிது**<br>**மரம் + வலிது = மரம்வலிது** | எழுவாய்த் தொடர் |
| | **வலம் + இடம் = வலமிடம்**<br>**நிலம் + வானம் = நிலவானம்** | உம்மைத் தொகை |
| | **உண்ணும் + உணவு = உண்ணுமுணவு**<br>**ஆளும் + வளவன் = ஆளும்வளவன்** | பெயரெச்சத் தொடர் |
| | **உண்டனம் + அடியோம் = உண்டனமடியோம்**<br>**உண்டனம் + யாம் = உண்டனம்யாம்** | வினை முற்றுத் தொடர் |
| | **அரசனும்+ அமைச்சனும் = அரசனுமைச்சனும்**<br>**புலியும் + யானையும் = புலியும் யானையும்** | இடைச் சொல் தொடர் |

**மகரக் குறுக்கம்**

ளகர லகரம் திரிந்த ணகர னகர மெய்களில் ஒன்றன் முன்னும், வருமொழி முதலில் நின்ற வகரவுயிர் மெய்யின் பின்னும் மகர மெய் தன் அரை மாத்திரையிற் குறுகிக் கால் மாத்திரையாய் ஒலிக்கும். இதுவே மகரக் குறுக்கமாகும்.

**(எ.டு) "மருண்ம்", "போன்ம்", "தரும் வளவன்"**

**'மகன்' என்னும் சொல்லிற்குச் சிறப்பு வழி :**

*தாய் என்னும் சொல் மகனது வினையைக் கிளந்து சொல்லுமிடத்து வல்லெழுத்து மிக்கு முடியும்.*

**(எ.டு) மகன்றாய்க் குலம்**

**மங்கலம் :**

*இது தகுதி வழக்கின் வகைகளுள் ஒன்று. மங்கலமல்லாத சொல்லை ஒழித்து மங்கலமான சொல்லாற்கூறுவதற்கு மங்கலம் என்று பெயர்.*

**(எ.டு) செத்தான் – துஞ்சினான்**

**சுடுகாடு – நன்காடு**

**மரப் பெயர் முன் வல்லினம் புணர்தல் :**

*உயிரீற்றுச் சில மரப் பெயர் முன் வல்லினம் வந்தால் இனமெல்லெழுத்து மிகும். இகர, உகர, லகர, வீற்று மரப் பெயர் முன் வல்லினம் வந்தால் அம்முச் சாரியையும், ஐகார வீற்று மரப் பெயர் முன் வல்லினம் வந்தால், நிலை மொழியீற்று ஐகாரங் கெட்டு அம்முச் சாரியையும் தோன்றும்.*

**(எ.டு)**

**மா+ காய் = மாங்காய்**
**விள + காய் = விளங்காய்** } *இனமெல்லெழுத்து மிகுந்தது*

**புளி + காய் = புளியங்காய்**
**புன் + காய் = புன்கங்காய்**
**ஆல் + காய் = ஆலங்காய்** } *அம்முச் சாரியை தோன்றியது*

**எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்**
**மாதுளை + காய் = மாதுளங்காய்** } *ஐ கெட்டு அம்முச் சாரியை தோன்றியது*

**மாத்திரையின் இலக்கணம் :**

*இயற்கையாக மனிதருக்கு உண்டாகின்ற கண்ணிமைப் பொழுதும் கை நொடிப் பொழுதும் ஒரு மாத்திரை என்னுங் கால வரையறைப் பொழுதாம்.*

*கை நொடி மாத்திரையை நான்கு கூறாக்கிக் கூறுவர். நொடிக்க நினைத்தல் கால்; விரல் ஊன்றல் அரை; விரல் முறுக்கல் முக்கால்; நொடித்தல் ஒன்று.*

**"உன்னல் காலே ஊன்றல் அரையே**
**முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே"**

*என்பது அது.*

**'மின்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*மின் என்னும் சொல் முதனிலைத் தொழிற் பெயர் போல யகர மல்லாத மெய்கள் வந்தால் உகரச்சாரியை பொருந்தும்.*

**(எ.டு) மின் + கடிது = மின்னுக் கடிது**

**'மீன்' என்னும் மொழிக்குச் சிறப்பு விதி :**

*மீன் என்னும் பெயரின் இறுதியிலுள்ள னகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து வந்தால் றகரத்தோடு விகற்பித்து நிற்கும்.*

**(எ.டு) மீன் + கண் = மீன்கண், மீற்கண்**

**மீன் + செவி = மீன்செவி, மீற்செவி**

**முதலெழுத்து :**

*அகரம் முதலிய உயிர் பன்னிரண்டும் ககரம் முதலிய மெய் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகளாகும்.*

*"உயிரும் மெய்யுமாம் முப்பது முதலே"*

**முதல் போலியும் இடைப் போலியும் :**

*அகரமும் ஐகாரமும் சொல்லுக்கு முதலிலும் நடுவிலும் சகர, ஞகர, யகரங்களுக்கு முன் தம்முள் வேறுபாடில்லாமல் போலியாக வரும்.*

| (எ.டு) | முதற்போலி | இடைப்போலி |
|---|---|---|
| | பசல் = பைசல் | அரசு = அரைசு |
| | மஞ்சு = மைஞ்சு | இலஞ்சு = இலைஞ்சு |
| | மயல் = மையல் | அரயர் = அரையர் |

**முடிக்குஞ் சொன் னிற்கு மிடம் :**

*ஆறாம் வேற்றுமை ஒழிந்த வேற்றுமை யுருபுகளையும், வினைமுற்றையும், வினையெச்சத்தையும் முடிக்க வருஞ் சொற்கள், அவற்றுக்குப் பின்னன்றி முன் வருதலுமுண்டு.*

**(எ.டு) வந்தான் சாத்தான்**
**வெட்டினான் மரத்தை**
**வெட்டினான் வாளால்**
**கொடுத்தான் புலவர்க்கு**
**நீங்கினா னூரின்**
**சென்றான் சாத்தன்கண்**
**வா சாத்தா**
} வேற்றுமையுருபு

**சாத்தன் போயினான் – வினைமுற்று**
**போயினான் வந்து – வினையெச்சம்**

**முற்றியலுகரம் :**

*தனி உகரமும், தனிக்குறிலைச் சார்ந்து வரும் உகரமும், மொழியீற்று வல்லின மெய்களின் மேல் ஊர்ந்து வரும் உகரமும், மொழியீற்று இடையின மெல்லின மெய்களின் மேல் ஊர்ந்து வரும் உகரமும் முற்றியலுகரங்களாகும். இவ்வுகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறையாது ஒலிக்கும்.*

**முற்றும்மை :**

*இவ்வளவென்று அளவறியப் பட்ட பொருளையும், எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளையும் முடிக்குஞ் சொல்லோடு கூட்டிச் சொல்லும்போது, அவை முற்றும்மை பெற்று வரும்.*

**(எ.டு) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்**
**ஒளி முன்னிருள் எங்கும் இல்லை**

**முற்றெச்சம் :**

*தெரிநிலை வினைமுற்றுங் குறிப்பு வினைமுற்றுந் தமக்குரிய பயனிலை கொள்ளாது வினையெச்சத்திற்குரிய பயனிலை கொள்ளு மிடத்து வினையெச்சப் பொருளையும் பெயரெச்சத்திற் குரிய பயனிலை கொள்ளுமிடத்துப் பெயரெச்சப் பொருளையுந் தரும்.*

**(எ.டு) சாத்தான் வில்லினன் வந்தான்.**

**மூன்று என்பதற்குச் சிறப்பு விதி :**

*இறுதி யுயிர்மெய் கெட நின்ற மூன்றென்னும் எண்ணினது னகர மெய் கெடுதலும் வருமெய்யாகத் திரிதலும் ஏற்குமிடத்து ஆகும்.*

**(எ.டு) மூன்று + ஆயிரம் = மூவாயிரம்**
**மூன்று + உலகு = மூவுலகு**
} *உயிர் வர முதல் குறுகாமல் ஈற்றுயிர் மெய்யும் னகர மெய்யும் கெட்டன*

**மூன்று + கலம் = முக்கலம்**
**மூன்று + நூறு = முந்நூறு**
**மூன்று + வட்டி = முவ்வட்டி**
} *மெய் வர முதல் குறுகி ஈற்றுயிர் மெய் கெட்டு னகர மெய் வந்த மெய்யாகத் திரிந்தது.*

**மெய்யீற்றின் முன் உயிர் புணர்தல் :**

*தனிக்குற்றெழுத்தைச் சாராத மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் வந்தவுயிர் அந்த மெய்யின் மேல் ஏறும். தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் அந்த மெய் இரட்டிக்கும். இரட்டித்த மெய்யின் மேல் வந்தவுயிர் ஏறும்.*

**(எ.டு) ஆண் + அழகு = ஆணழகு**
**மரம் + உண்டு = மரமுண்டு**
} *உயிர் மெய்யின் ஏறியது*

**கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்**
**பொன் + அழகிது = பொன்னழகிது**
} *மெய் இரட்டித்து, இரட்டித்த மெய்யின் மேல் உயிர் ஏறியது.*

**மெய்யெழுத்துகள் :**

*க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டும் மெய்யெழுத்துகளாகும். இவை உடம்பு போல உயிரோடு கூடியல்லாது இயங்காவாதலால் மெய்யெழுத்து என்று பெயர் பெற்றன.*

*மெய், ஒற்று, புள்ளி, உடம்பு எனவும் பெயர் பெறும்.*

**மெய்யெழுத்துகள் பிறக்குமிடம் :**

*மெய்யெழுத்துகளுள் இடையினம் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லினம் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும். வல்லினம் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும்.*

**மெல்லெழுத்து உறழும் மொழிகள் :**

*வல்லெழுத்தினோடு மெல்லெழுத்து மிக்கும் உறழ்ந்தும் முடியும் மொழிகளும் உள.*

**(எ.டு) வேய்ங்குறை, வேய்க்குறை.**

**மெல்லெழுத்து மிக்கு முடியும் மொழிகள் :**

*ஆர் என்னுஞ் சொல்லும், வெதிர் என்னுஞ் சொல்லும் சார் என்னுஞ் சொல்லும், பீர் என்னுஞ் சொல்லும் மெல்லெழுத்து மிக்கு முடியும் சொற்களாகும்.*

**(எ.டு) ஆர்ங்கோடு, வெதிர்ங்கோடு, சார்ங்கோடு, பீர்ங்கோடு (கோடு – கிளை)**

**மெல்லெழுத்துகள் :**

*மெய்யெழுத்துகளில் ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு எழுத்துகளும் மென்மையான ஒலியைப் பெற்றுள்ளனவாதலால் மெல்லெழுத்துகள் எனப் பெயர் பெற்றுள்ளன. இவற்றை மெலி, மென்மை, மென்கணம் எனவும் வழங்குவர்.*

**மென்றொடரின் முன் இருவழியிலும் நாற்கணமும் புணர்தல் :**

*மென்றொடர்க் குற்றியலுகர மொழிகளுள் சில நிலை மொழிகள் வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமாகிய வன்றொடர்க்குற்றியலுகர மொழிகளாகத்திரியும். பல நிலை மொழிகள் அவ்வாறு வன்றொடர்க் குற்றியலுகர மொழி களாகத் திரியா.*

**(எ.டு)**

**மருந்து + பை – மருத்துப்பை**
**குரங்கு + மனம் – குரக்குமனம்**
**இரும்பு + வலிமை – இருப்புவலிமை**
**கன்று + ஆ – கற்றா**
} *வேற்றுமையில் வன்றொடராயின*

**வண்டு + கால் = வண்டுக்கால்**
**பந்து + நலம் = பந்துநலம்**
**ஞெண்டு + வளை = ஞெண்டுவளை**
**சங்கு + இனம் = சங்கினம்**
} *வேற்றுமையில் வன்றொடர் ஆகாதன*

**மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் :**

*தனித்தும், மெய்யோடு கூடியும் வரும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினோருமெய்யெழுத்துகளும், குற்றியலுகரமும் ஆகிய இருபத்து நான்கு எழுத்துகளும் மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளாகும்.*

**மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் :**

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், க,ச, த, ந, ப, ம என்னும் ஆறு மெய் எழுத்துகளும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளோடு கூடி வருதலால் அவை எழுபத்திரண்டும் வகரமெய் எட்டு உயிரோடு கூடி வருதலால் அவை எட்டும், யகரமெய் ஆறு உயிரோடு கூடி வருதலால் அவை ஆறும், ஞகரம் நான்கு உயிரோடு கூடி வருதலால் அவை நான்கும் ஙகர மெய் ஓர் உயிரோடு கூடி வருதலால் அது ஒன்றும் ஆக நூற்றுமூன்று எழுத்துகளே மொழிக்கு முதலாகும் எழுத்துகளாகும்.

**மொழி புணரியல்பு :**

நிலை மொழியின் இறுதியோடு வருமொழி முதல் பொருந்த, பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லைப் புணர்க்குங் காலத்தும், பெயர்ச் சொல்லோடு வினைச் சொல்லைப் புணர்க்குங் காலத்தும், வினைச் சொல்லோடு பெயர்ச் சொல்லைப் புணர்க்குங்காலத்தும், வினைச் சொல்லோடு வினைச் சொல்லைப் புணர்க்குங் காலத்தும் திரியும் இடம் மூன்றும், இயல்பு ஒன்றும் ஆகிய நான்கே மொழிகள் தம்மிற் புணரும் இயல்பாகும்.

**யகர மெய்யை முதலாகப் பெற்றுவரும் எழுத்துகள் :**

அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்தோடும் சேர்ந்து யகரமெய் சொல்லுக்கு முதலாக வரும்.

**யகரம் பிறக்குமிடம் :**

நாக்கின் அடிப்பாகம் மேல்வாயடியைப் பொருந்த யகரம் பிறக்கும்.

**யகரம் ஒழிந்த மெய்களின் முன் யகரம் புணர்தல் :**

யகரத்தை ஒழிந்த மொழிக்கு இறுதியில் வரும் ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்னும் பத்து மெய்களின் முன்னும் இகரம் இடையில் வந்து சேரும்.

**(எ.டு) வேள் + யாவன் = வேளியாவன் – அல்வழி**

**மண் + யாப்பு = மண்ணியாப்பு – வேற்றுமை.**

**யகர வீற்றின் முன் வல்லினம் புணர்தல் :**

யகரமெய்யின் முன் க ச த ப வரின் அல்வழியிலே எழுவாய்த் தொடரிலும், உம்மைத் தொகையிலும், வினைத் தொகையிலும்

*இயல்பாதலும், பண்புத் தொகை உவமைத்தொகைகளில் மிகுதலும் வேற்றுமையில் வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதியாகும்.*

**(எ.டு)**

**வேய் + கடிது = வேய்கடிது – அல்வழியில் இயல்பாயது.**

**மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி – வேற்றுமையில் மிக்கது.**

**நாய் + கால் = நாய்க்கால் – வேற்றுமையில் வலி மிக்கது.**

**வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல் – வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தது.**

**யரழ என்னும் மூன்று மெய்களின் முன் மயங்கும் எழுத்துகள் :**

*யரழ என்னும் மூன்று மெய்களின் முன்னே க ச த ப ங ஞ ந ம என்கின்ற எட்டு மெய்களும் உயிர்மெய்யாகி மயங்குதலு மல்லாமல் தாமே மெய்யாய் நின்று இரண்டு ஒற்றாயும் மயங்கும். ரகர ழகர மெய்கள் மொழிக்கு உறுப்பாகத் தனிக் குற்றெழுத்தின் பின்னே மயங்காவாம்.*

**'யான்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*யான் என்னும் உயர்திணைப் பெயர் யகரம் கெட்டு ஆகாரம் ஏகாரமாய் 'என்' என்றாயும், அல்வழியில் இயல்பாயும், வேற்றுமைக் கண் யகரம் கெட்டு ஆகாரம் ஏகாரமாவதோடு திரிதலுமாம்.*

**(எ.டு) யான் + கை = என்கை**

**யான் + குறியேன் = யான்குறியேன்**

**யான் + பணி = எற்பணி.**

**ரகரம் பிறக்குமிடம் :**

*மேல்வாய் நுனியை நாக்கின் நுனியானது தடவ ரகரம் பிறக்கும்.*

**ரகர வீற்றின் முன் வல்லினம் புணர்தல் :**

*ரகர மெய்யின் முன் கசதப க்கள் வரின் அல்வழியில் எழுவாய்த்தொடர், உம்மைத்தொகை, வினைத்தொகை ஆகிய வற்றில் இயல்பாதலும், பண்புத்தொகை உவமைத் தொகை களில் மிகுதலும், வேற்றுமையில் மிகுதலும், வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதியாகும்.*

**(எ.டு)**

**வேர் + சிறிது = வேர் சிறிது – அல்வழியில் இயல்பானது**

**கார் + பருவம் = கார்ப்பருவம் – வேற்றுமையில் வலிமிக்கது.**

**தேர் + தட்டு = தேர்த்தட்டு – வேற்றுமையில் வலிமிக்கது**

**ஆர் + கோடு = ஆர்க்கோடு, ஆர்ங்கோடு – வேற்றுமையில் இனத்தோடு உறழ்ந்தன.**

**'ல' என்னும் எழுத்தின் முன் மயங்கும் மெய்கள் :**

*லகர மெய்யெழுத்தின் முன் க ச ப வ ய என்னும் ஐந்து மெய்யெழுத்துகளும் மயங்கும்.*

*(எ.டு) நல்கி, வல்சி, சால்பு, செல்வம், கல்யாணம்.*

**லகரம் பிறக்குமிடம் :**

*மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் ஓரம் தடித்துப் பொருந்துதலால் லகரம் பிறக்கும்.*

**லகர வீற்றுப் புணர்ச்சி :**

*மொழி யிறுதியிலுள்ள லகர மெய், வல்லினம் வந்தால் வேற்றுமையில் றகரமாகத் திரியும். அல்வழியில் றகரமாகத் திரிந்தும், திரியாமலும், விகற்பித்தலுமாகும். வேற்றுமை அல்வழி இரண்டிலும் மெல்லினம் வந்தால் ணகர மெய்யாகத் திரியும். இடையினம் வந்தால் இயல்பாகும்.*

**(எ.டு)**

**கால் + குறை = காற்குறை – வேற்றுமையில் வலிவர றகரமாகத் திரிந்தது.**

**கால் + குறிது = கால்குறிது, காற்குறிது – அல்வழியில் வலி வர உறழ்ந்தது.**

**கல் + நெரிந்தது = கன்னெரிந்தது**
**கல் + மாலை = கன் மாலை** } *இருவழியிலும் லகரம் னகரமாகத் திரிந்தது.*

**கால் + யாது = கால்யாது**
**கல் + யானை = கல்யானை** } *இடையினம் வர இருவழியிலும் இயல்பாயின.*

**லகரத்தின் கேடு :**

*தனிக்குற்றெழுத்தைச் சாராத லகரம், வரும் தகரந் திரிந்த விடத்து, அல்வழியில், எழுவாய்த் தொடர், விளித்தொடர், உம்மைத்தொகை வினைமுற்றுத்தொடர், வினைத்தொகை ஆகியவற்றில் கெடும்.*

**(எ.டு) வேல் + தீது = வேறீது**

**தோன்றல் + தீயன் = தோன்றறீயன்** } *எழுவாய்த் தொடர்*
**தோன்றாறொடராய் – விளித்தொடர்**

**காறலை – உம்மைத்தொகை**
**உண்பறமியேன் = வினைமுற்றுத்தொடர்**

**பயிறோகை – வினைத்தொகை**

**லகர வீற்றின் முன் வல்லினம் புணர்தல் :**

*லகரத்தின் முன் வல்லினம் வருமாயின், வேற்றுமையிலும், அல்வழியில் பண்புத் தொகையிலும், உவமைத் தொகையிலும் இறுதி லகரம் றகரமாகத் திரியும். எழுவாய்த் தொடரிலும் உம்மைத் தொகையிலும் திரியாதியல்பாகும்.*

**(எ.டு)**

**கல் + குறை = கற்குறை – வல்லினம் வர வேற்றுமையில் றகரமாகத் திரிந்தது.**

**வேல் + படை = வேற்படை; வேல் + கண் = வேற்கண் – வல்லினம் வர அல்வழியில் – பண்புத்தொகையில் றகரமாகத் திரிந்தது.**

**குயில் + கரிது = குயில்கரிது – எழுவாய்த் தொடர்**
**கால் + கை = கால்கை – உம்மைத் தொகை** } *வல்லினம் வர அல்வழியில் எழுவாய்த் தொடர் உம்மைத்தொகை ஆகியவற்றில் இயல்பாய் நின்றன*

*பால் குடித்தான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், கால்குதித்தோடினான் என மூன்றாம் வேற்றுமைத் தொகையிலும் வருமொழி வினையாயவிடத்துத் திரியா வெனக் கொள்க.*

**லகரத்திற்குச் சிறப்பு விதி :**

*தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த லகரம் அல்வழியில் வருந்தகரந் திரிந்தவிடத்து றகரமாகத் திரிதலேயன்றி ஆய்தமாகவுந்திரியும்.*

**(எ.டு) கல் + தீது = கற்றீது, கஃறீது.**

**லகர ளகரங்களின் முன் தகரம் புணர்தல் :**

*அல்வழி, வேற்றுமை இரண்டிலும், லகரத்தின் முன்வரும் தகரம் றகரமாகவும், ளகரத்தின் முன் வரும் தகரம் டகரமாகவும் திரியும்.*

| (எ.டு) | அல்வழி | வேற்றுமை |
|---|---|---|
| | கல் + தீது = கற்றீது | கல் + தீமை = கற்றீமை |
| | முள் + தீது = முட்டீது | முள் + தீமை = முட்டீமை |

**வகரத்தின் முன் மயங்கும் எழுத்து :**

*வகரத்தின் முன் யகரம் மயங்கும்.*

**(எ.டு) தெவ் + யாது = தெவ்யாது.**

**வகர மெய்யை முதலாகப் பெற்றுவரும் எழுத்துகள் :**

*அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரோடுங் கூடி வகரமெய் சொல்லுக்கு முதலாக வரும்.*

**(எ.டு) வண்டு, வாழை, விலை, வீடு, வெட்சி, வேட்கை, வையகம், வௌவால்.**

**வகரம் பிறக்குமிடம் :**

*மேல்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்த வகரம் பிறக்கும்.*

**வகரவீற்றுப் புணர்ச்சி :**

*அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பலவின் பாலை உணர்த்தி வருஞ்சுட்டுப் பெயர்களின் இறுதியில் உள்ள வகரமெய் அல்வழியில் வல்லினம் வரின் ஆய்தமாகத்திரியும்; மெல்லினம் வரின் வந்த எழுத்தாகத் திரியும்; இடையினம் வரின் இயல்பாம்.*

| (எ.டு) | | |
|---|---|---|
| | **அவ் + கடிய = அஃகடிய**<br>**இவ் + கடிய = இஃகடிய**<br>**உவ் = கடிய = உஃகடிய** | வல்லினம் வர ஆய்தமாயிற்று |
| | **அவ் + ஞானம் = அஞ்ஞானம்**<br>**இவ் + ஞானம் = இஞ்ஞானம்**<br>**உவ் + ஞானம் = உஞ்ஞானம்** | மெல்லினம் வர வருமெழுத்தாகத் திரிந்தது. |

**அவ் + யாவை = அவ்யாவை**
**இவ் + யாவை = இவ்யாவை**
**உவ் + யாவை = உவ்யாவை**
} *இடையினம் வர இயல்பாயிற்று.*

**வகரவீற்றுச் சுட்டுப் பெயர்க்குச் சிறப்பு விதி :**

*அஃறிணைப் பலவின் பாலாகிய அவ், இவ், உவ் என்னும் வகரமெய்யீற்று மூன்று சுட்டுப் பெயர்கட்கும் உருபுகள் புணரு மிடத்து அற்று என்னும் சாரியை பொருந்தும்.*

**(எ.டு) அவ் + ஐ = அவற்றை**
**இவ் + ஐ = இவற்றை**
**உவ் + ஐ = உவற்றை.**

**வட மொழியாக்கம் :**

*வடமொழியில் உள்ள உயிர் எழுத்துகள் பதினாறனுள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்கின்ற பத்து எழுத்துகளும் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொது எழுத்துகளாகும்.*

**வடமொழி விகாரம் :**

*வடமொழி தமிழில் வரும் பொழுது ரகரத்தை முதலிலே யுடைய மொழிக்கு அ, இ, உ என்னும் மூன்று குற்றெழுத்துகளில் ஒன்றும், லகரத்தை முதலிலேயுடைய மொழிக்கு இ, உ என்னும் எழுத்துகளில் ஒன்றும், யகரத்தை முதலிலேயுடைய மொழிக்கு இகரமும் மொழிக்கு முதலாகிவரும். மேலும் வடமொழியுள் இரண்டெழுத்து இணைந்து ஓரெழுத்தைப் போல் நடக்கும் போது பின்நின்ற யகர, ரகர, லகரங்கட்கு இகரமும் மகர வகரங்கட்கு உகரமும், நகரத்திற்கு அகரமும் முன்னேவரும்.*

**(எ.டு) ரங்கம் = அரங்கம், ராமன் = இராமன்**
**ரோமம் = உரோமம், லாபம் = இலாபம்,**
**லோபம் = உலோபம்.**
**காவ்யம் = காவியம்**
**வக்ரம் = வக்கிரம்**
**சுக்லம் = சுக்கிலம்**
} *ய ர ல க்கு இகரம் மவ் வுக்கு உகரம்*
**பத்மம் = பதுமம்**

**ரத்னம் = அரத்னம்**

**அர்த்தம் = அருத்தம்**

**வருமொழி முதலில் நகரம் திரிதல் :**

*னகர லகரங்களின் முன் வருகிற நகரம் னகரமாகத் திரியும் ணகர ளகரங்களின் முன் வருகிற நகரம் ணகரமாகத் திரியும்.*

**(எ.டு) பொன் + நன்று = பொன்னன்று – னகரத்தின் முன் நகரம் னகரமாயிற்று**

**கல் + நன்று = கன்னன்று – லகரத்தின் முன் நகரம் னகரமாயிற்று.**

**மண் + நன்று = மண்ணன்று – ணகரத்தின் முன் நகரம் ணகரமாயிற்று.**

**முள் + நன்று = முண்ணன்று – ளகரத் தின் முன் நகரம் ணகரமாயிற்று.**

**வருமொழிமுதலில் தகரம் திரிதல் :**

*னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகத் திரியும். ணகர ளகரங்களின் முன் வருகிற தகரம் டகரமாகத்திரியும்.*

**(எ.டு) கல் + தீது = கற்றீது – லகரத்தின் முன் தகரம் றகரமாயிற்று**

**மண் + தீது = மண்டீது – ணகரத்தின் முன் தகரம் டகரமாயிற்று.**

**வருமொழி முதலில் தகர நகரங்கள் திரிதல் :**

*னகர லகரங்களின் முன் வருகிற தகரம் றகரமாகத் திரியும். னகரலகரங்களின் முன் வருகிற நகரம் னகரமாகத் திரியும்.*

**வல்லினம் :**

*க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறு மெய்யெழுத்துகளும் வன்மையான ஓசையைப் பெற்றுள்ளதால் வல்லின மெய்யெழுத்துகளாகும். இவ்வெழுத்துகள் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும்.*

**வழா நிலை :**

*சொற்கள் தொடருமிடத்து முடிக்கப் படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை, பால், இடம், காலம், வினா, விடை,*

*மரபு என்னும் இவ்வேழிலும் மாறுபடாமல் தொடர்ந்து நிற்பது முறையாகும். அவ்வாறு தொடர்ந்து நிற்பன வழா நிலை எனப்படும்.*

**வழி நூல் :**

*முனைவன் செய்த முதல் நூல் வழியே அதனை ஒட்டிச் செய்யப்படுவது வழி நூலாகும். முதல் நூல் ஆசிரியன் விரித்துச் செய்ததைத் தொகுத்துக் கூறுதலும், அவன் தொகுத்துக் கூறியவற்றை விரித்துக் கூறுதலும், அவ்விரு வகையினையும் தொகைவிரியாகக் கூறுதலும் பிற மொழி நூலை மொழி பெயர்த்துத் தமிழினாற் செய்தலும் என வழி நூல் நான்கு வகைப்படும்.*

**'வள்' என்பதற்குச் சிறப்பு விதி :**

*வள் என்னுஞ் சொல் இருவழியும் யகர மல்லாத மெய்கள் வந்தாற் பொதுவிதியான் முடிதலேயன்றித் தொழிற்பெயர் போல உகரச்சாரியையும் பெற்றுப்புணரும்.*

*(எ.டு) வள்ளுக் கடிது, வள்ளுக் கடுமை.*

**வற்றுச்சாரியையின் திரிபு :**

*சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகாரவீற்றுச் சொல் முன்னர் வற்றுச்சாரியை தன் வகர மாகிய மெய்கெட அகரம் நிற்கும்.*

*(எ.டு) அவையற்றை, இவையற்றை, உவையற்றை.*

**வன்றொடர் முன் அல்வழியில் வன்கணம் புணர்தல் :**

*வன்றொடர்க் குற்றிய லுகரத்தின் முன் வல்லெழுத்தை முதலாகவுடைய சொல் வருமொழியாய் வருமாயின் மிக்கு முடியும்.*

**(எ.டு) கொக்குக் கடுமை, கொக்குக்கடிது.**

**'வாழிய' என்பதற்குச் சிறப்பு விதி :**

*வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றின் இறுதியில் உள்ள யகர உயிர்மெய் நீங்கிவருதலும் உண்டு. அவ்வுயிர்மெய் நீங்கி இகர ஈறாய் நின்றாலும் இயல்பாகும்.*

**(எ.டு) வாழிய + கொற்றா = வாழிகொற்றா**

**வாழிய + சாத்தா = வாழிசாத்தா**

**வாய் திறந்தவுடன் பிறக்கும் எழுத்துகள் :**

*அ ஆ ஆகிய இரண்டு எழுத்துகளும் வாய் திறந்தவுடனேயே பிறக்கும்.*

**விகாரம் (வேறுபாடு) :**

*மெல்லின மெய்யை வல்லின மெய்யாக்கலும் வல்லின மெய்யை மெல்லின மெய்யாக்கலும் குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை விரித்தலும், உள்ள எழுத்தைத் தொகுத்தலும் விகாரங்களாகும்.*

**விகாரப்புணர்ச்சி :**

*நிலைமொழியேனும்,வருமொழியேனும், இவ்விரு மொழியேனும் தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் மூன்று விகாரங்களுள் ஒன்றேயாயினும் பலவற்றையாயினும் பெற்றுப் புணர்வது விகாரப் புணர்ச்சியாகும்.*

**(எ.டு) பூ + கொடி = பூங்கொடி – தோன்றல்**

**அல் + திணை = அஃறிணை – திரிதல்**

**நிலம் + வலயம் = நிலவலயம் – கெடுதல்**

**ஆறு + பத்து = அறுபது – கெடுதல், தோன்றுதல்**

**பனை + காய் = பனங்காய் – கெடுதல், தோன்றல், திரிதல்.**

**விருத்த சந்தி :**

*அ ஆவின் முன் ஏ ஐ வரின் நிலைமொழி இறுதியும் வருமொழி முதலுங்கெட 'ஐ' யொன்று தோன்றுவதும் அ ஆவின் முன் ஓ ஔ வரின் நிலைமொழி இறுதியும், வருமொழி முதலுங்கெட ஔ வொன்று தோன்றுவதும் விருத்தசந்தியாகும்.*

**(எ.டு) லோக + ஏகநாயகன் = லோகைகநாயகன்**

**சிவ + ஐக்கியம் = சிவைக்கியம்**

**தரா + ஏகவீரன் = தரைகவீரன்**

**மகா + ஐசுவரியம் = மகைசுவரியம்**

**கலச + ஓதனம் = கலசௌதனம்**

**திவ்விய + ஔடதம் = திவ்வியௌடதம்**

**கங்கா + ஓகம் = கங்கௌகம்**

**மகா + ஔதாரியம் + மகௌதாரியம்.**

**வினாவெழுத்துகள் :**

*எ, யா, ஆ, ஓ, ஏ என்னும் ஐந்து எழுத்துகளும் சொற்களில் அமைந்து வினாப் பொருளைத் தருமானால் வினாவெழுத்து களாகும். இவற்றுள் எ, யா என்பன சொல்லுக்கு முதலில் அமைந்து வினாப் பொருளைத் தரும். ஆ, ஓ என்பன சொல்லுக்கு இறுதியில் அமைந்து வினாப் பொருளைத் தரும். ஏ சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருளைத் தரும். மேலும் இவ்வினா அகவினா புறவினா என இருவகைப்படும்.*

**வேற்றுமையில் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் புணர்தல் :**

*இடைத் தொடரும், ஆய்தத் தொடரும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடரும், உயிர்த் தொடரும் ஆகிய இவற்றின் முன் வருகிற வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியில் இயல்பாகும்.*

**(எ.டு) மார்பு + கடுமை = மார்புகடுமை – இடைத்தொடர்**

**எஃகு + சிறுமை = எஃகுசிறுமை – ஆய்தத் தொடர்**

**நாகு + தீமை = நாகுதீமை – நெடிற்றொடர்**

**வரகு + கதிர் = வரகுகதிர் – உயிர்த்தொடர்**

**வேற்றுமைப் புணர்ச்சியில் ஒற்று இடையே மிகும் நெடிற்றொடர் :**

*நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழியில் உகரம் ஏறி நின்ற டகர, றகர மெய்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டும்.*

**(எ.டு) ஆடு + கால் – ஆட்டுக்கால்**

**சோறு + வளம் – சோற்று வளம்**

**வேற்றுமைப் புணர்ச்சியில் ஒற்று இடையே மிகும் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் :**

*உயிர்த் தொடர்க் குற்றிய லுகர மொழியில் உகரம் ஏறி நின்ற டகர றகர மெய்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டும்.*

**(எ.டு) முரடு + மனிதன் – முரட்டு மனிதன்**

**வயிறு + இடை – வயிற்றிடை**

**ழகரம் பிறக்குமிடம் :**

*மேல்வாய் நுனியை நாக்கின் நுனியானது தடவ ழகரம் பிறக்கும்.*

**ழகர வீற்றின் முன் வல்லினம் புணர்தல் :**

*ழகர மெய்யின் முன் கசதபக்கள் வரின் அல்வழியில் எழுவாய்த் தொடர், உம்மைத் தொகை, வினைத் தொகை ஆகியவற்றில் இயல்பாதலும், பண்புத் தொகை உவமைத் தொகைகளில் மிகுதலும், வேற்றுமையில் மிகுதலும், வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும் விதியாகும்.*

**(எ.டு) வீழ் + தீது = வீழ்தீது – அல்வழியில் இயல்பாயது.**

**யாழ் + கருவி = யாழ்க்கருவி** } *வேற்றுமையில்*
**ஊழ் + பயன் = ஊழ்ப்பயன்** } *மிக்கது*

**குமிழ் + கோடு = குமிழ்க் கோடு** } *வேற்றுமையில்*
**குமிழ்ங் கோடு** } *இனத்தோடு உறழ்ந்தன*

**ழகரவீறு வேற்றுமையில் பெயர் வன்கணத்தோடு புணர்தல் :**

*ழகரவீற்றுப் பெயர் வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகாரவீற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்.*

**(எ.டு) பூழ்க்கால், பூழ்ச் சிறகு.**

**'ள' என்னும் மெய்யெழுத்தின்முன் மயங்கும் மெய்கள் :**

*ளகர மெய்யின் முன் க ச ப வ ய என்னும் ஐந்து மெய்களும் மயங்கும்.*

**(எ.டு) வெள்கி, நீள்சிலை, கொள்ப, கேள்வி, வெள் யானை.**

**ளகரத்திற்குச் சிறப்பு விதி :**

*தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த ளகரம் அல்வழியில் வரும் டகரம் திரிந்தவிடத்து டகரமாகத் திரிதலேயன்றி ஆய்தமாகவுந் திரியும்.*

**(எ.டு) முள் + தீது = முட்டீது, முஃடீது.**

**ளகரம் பிறக்குமிடம் :**

மேல் வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவுதலால் ளகரம் பிறக்கும்.

**ளகரவீற்றுப் புணர்ச்சி :**

ளகரத்தின் முன் வல்லினம் வருமாயின் வேற்றுமையிலும், அல்வழியில் பண்புத் தொகையிலும், உவமைத் தொகையிலும் இறுதி ளகரம் டகரமாகத் திரியும். எழுவாய்த் தொடரிலும் உம்மைத் தொகையிலும் திரியாதியல்பாகும்.

**(எ.டு) முள் + குறை = முட்குறை – வல்லினம் வர வேற்றுமையில் டகரமாகத் திரிந்தது.**

**அருள் + செல்வம் = அருட்செல்வம் – அல்வழியில் – பண்புத் தொகையில் டகரமாகத் திரிந்தது.**

**வாள் + கண் = வாட்கண் – வல்லினம் வர அல்வழியில் – உவமைத் தொகையில் டகரமாகத் திரிந்தது.**

**பொருள்+பெரிது=பொருள்பெரிது–எழுவாய்த்தொடர்**

**பொருள்+புகழ்=பொருள்புகழ்–உம்மைத்தொகை**

வல்லினம் வர அல்வழியில் எழுவாய்த்தொடர் உம்மைத்தொகை ஆகியவற்றில் ளகரமெய் இயல்பாய் நின்றன.

அருள் பெற்றான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், வாள் போழ்ந்திட்டான் என மூன்றாம் வேற்றுமைத் தொகையிலும் வருமொழி வினையாய விடத்துத் திரியாவெனக் கொள்க.

**ளகரவீற்றுப் புணர்ச்சி :**

மொழியிறுதியிலுள்ள ளகர மெய் வல்லினம் வந்தால் வேற்றுமையில் டகர மெய்யாகத் திரியும். அல்வழியில் டகரமாகத் திரிந்தும் திரியாமலும் விகற்பித்தலும் ஆகும். வேற்றுமை அல்வழி இரண்டிலும் மெல்லினம் வந்தால் ணகர மெய்யாகத் திரியும். இடையினம்வரின் இயல்பாகும்.

**(எ.டு) முள் + குறை = முட்குறை – வேற்றுமையில் வலி வர டகரமாகத் திரிந்தது.**

**வாள் + மாண்டது – வாண்மாண்டது**
**வாள் + மாண்பு – வாண்மாண்பு**
} *இருவழியிலும் மெல்லினம் வர ணகரமாகத் திரிந்தது*

**முள் + குறிது – முள்குறிது, முட்குறிது – அல்வழியில் வலி வர உறழ்ந்தது.**

**முள் + வலிது – முள்வலிது**
**தோள் + வலிமை – தோள் வலிமை**
} *இடையினம் வர இயல்பாயின*

**‘ற’ முன் மயங்கும் எழுத்துகள் :**

*றகரத்தின் முன் க ச ப என்னும் மூன்று மெய்களும் இணங்கி மயங்கும்.*

**(எ.டு) கற்க, பயிற்சி, கற்பு.**

**றகரம் பிறக்குமிடம் :**

*மேல் வாயை நாக்கின் நுனி மிகப் பொருந்தின் ‘ற’ என்னும் எழுத்துப் பிறக்கும்.*

**னகரம் பிறக்குமிடம் :**

*மேல் வாயை நாக்கின் நுனி மிகப் பொருந்தின் ‘ன’ என்னும் எழுத்துப் பிறக்கும்.*

**னகரவீற்றுக் குடிப் பெயர்கட்குச் சிறப்பு விதி :**

*னகரத்தை இறுதியிலுடைய சாதிப் பெயர், வல்லினம் வர ஈறு திரியாமல் இயல்பாதலும், அகரச் சாரியை பெறுதலும் வேற்றுமைப் புணர்ச்சியில் நிகழும்.*

**(எ.டு) எயின் + குடி – எயினக்குடி**
**எயின் + சேரி – எயினச் சேரி**

**னகரவீற்றின் கேடு :**

*தனிக் குற்றெழுத்தைச் சாராத னகரம் வருமிடத்து அல்வழி வேற்றுமை ஆகிய இரு வழியிலும் கெடும்.*

**(எ.டு) வான் + நன்று – வானன்று**
**செம்பொன் + நன்று – செம்பொனன்று**
} *அல்வழி*

**வான் + நன்மை – வானன்மை**
**செம்பொன் + நன்மை – செம்பொனன்மை**
} வேற்றுமை

**னகர வீற்றின் இயல்பும் திரிபும் :**

*னகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் றகரமாகத் திரியும்.*

*மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும். அல்வழிப்புணர்ச்சியில் மூன்றினமெய்களும் வந்தாலும் இயல்பேயாம்.*

**(எ.டு) பொன் + தகடு – பொற்றகடு – னகரம் வல்லினம் வர றகரமாகத்திரிந்தது.**

**பொன் + மாட்சி – பொன்மாட்சி**
**பொன் + வண்ணம் – பொன்வண்ணம்** } *வேற்றுமையில் மற்றைய கணங்கள் வர இயல்பாயின*

**பொன் + பெரிது – பொன்பெரிது**
**பொன் + மாண்டது – பொன்மாண்டது**
**பொன் + யாது – பொன்யாது** } *அல்வழியில் இயல்பாயின*

**னகரத்தின் முன் மயங்கும் எழுத்துகள் :**

*னகரத்தின் முன் அவற்றிற்கு இனமாகிய டகர றகரங்களும், க, ச, ஞ, ப, ம, ய, வ ஆகிய ஏழு எழுத்துகளும் மயங்கும்.*

**(எ.டு) கன்று, புன்கு, நன்செய், புன்ஞமலி, இன்பம், நன்மை, பொன்யாது, பொன்வலிது.**

# 2. சொல்

**அகலமாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*நனவு என்னும் உரிச்சொல் இடமும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும்*

**(எ.டு) "நனவுப் புகு விற யிற்றோன்று நாடன்"**

**"நனந்தலையுலகம்"**

"நனவே களமும் அகலமும் செய்யும்"

**அகநிலைச் செயப்படுபொருள் :**

*வினைச்சொல்லின் அகத்தே செயப்படுவதாக நிற்குந் தொழிலைக் காட்டுஞ்சொல்.*

*(எ.டு) வந்தான்; வருதலைப்புரிந்தான்.*

**அகப்பாட்டு வண்ணம் :**

*முடியாத்தன்மையால் முடிந்தது மேல் வருவது அகப்பாட்டு வண்ணமாகும்.*

**அச்சமாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*பே, நா, உரு ஆகிய மூன்று உரிச்சொற்களும் அச்சமாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'மன்ற மார்த்த பேமுதிர் கடவுள்'**

**'நா நல்லார்'**

**'உருமில் சுற்றம்'**

**அச்சக் குறிப்புப் பொருளைத்தரும் இடைச் சொற்கள் :**

*துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றாற் போல்வன அச்சக்குறிப்புப் பொருளைத் தரும் இடைச் சொற்களாகும்.*

**அடிமறிமாற்றுப் பொருள்கோள் :**

*பொருளுக்கு ஏற்ற இடத்தில் எடுத்துக் கூட்டும் அடியினையுடையதும், ஏதேனும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் முதல், இடை, கடை ஆகிய ஏதேனும் ஓரிடத்தில் கூட்டினாலும் பொருளுடன் ஓசை மாட்சியும், பொருட் சிறப்பும் வேறுபடாத அடியினையுடையதுமாகிய பொருள்கோளே அடி மறி மாற்றுப் பொருள் கோள் எனப்படும்.*

**(எ.டு) "மாறாக் காதலர் மலைமறந் தனரே;**
**ஆறாக் கண்பனி வரலா னாவே;**
**ஏறா மென்றோள் வளைநெ கிழும்மே;**
**கூறாய் தோழியான் வாழு மாறே"**

*இதனுள் எவ்வடியை எங்கே கூட்டினாலும் பொருளும் ஓசையும் வேறுபடாமையை அறியலாம்.*

**அடுக்குச் சொல் :**

*ஒரு சொல், விரைவு, வெகுளி, உவகை, அச்சம், துன்பம் முதலிய காரணம் பற்றி இரண்டு முதல் மூன்று முறை அடுக்கிக் கூறப்படும். இஃது அடுக்குச் சொல் எனப்படும். அடுக்குத் தொடர் என்பதும் அது. அடுக்கு என்பது பல ஆதலால்.*

**(எ.டு) உண்டே னுண்டேன், போ போ போ – விரைவு**
**எய்யெய், எறிஎறிஎறி – வெகுளி**
**வருகவருக; பொலிக பொலிக பொலிக – உவகை**
**உய்யேனுய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் – துன்பம்.**

**அடைமொழி :**

*பொருள் இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும், இனமுள்ள பொருள்களுக்கே யன்றி இனமல்லாப் பொருள்களுக்கும் உலக வழக்கு செய்யுள் வழக்கு ஆகிய இரண்டிடத்தும் அடைமொழிகளாக வரும்.*

**(எ.டு)**

| இனமுள்ளன | இனமில்லன |
|---|---|
| பாற்குடம் | உப்பளம் – பொருள் |
| வயல்நெல் | ஊர்மன்று – இடம் |

| | |
|---|---|
| **கார்த்திகை விளக்கு** | **நாளரும்பு – காலம்** |
| **காய்மரம்** | **இலைமரம் – சினை** |
| **வெண்டாமரை** | **செம்போத்து – குணம்** |
| **ஊதுகோல்** | **தோய்தயிர் – தொழில்** |

**அடை நிலைக்கிளவி என்னுந்தனிச்சொல் :**

*அடைநிலைக் கிளவியாகிய 'ஆங்கு' என்னுந் தனிச் சொல், தாழிசைப் பின்னர் நடத்தலைப் பொருந்தியொழுகும். முன்னர் வருதலும் சிறுபான்மையுண்டு.*

**(எ.டு) கலிப்பாவில் காண்க.**

**அண்மை :**

*காலம் இடையீடின்றியும், வாக்கியப் பொருளுணர்ச்சிக்குக் காரணமல்லாத சொல் இடையீடின்றியுஞ் சொல்லப்படுவது அண்மையாகும்.*

**(எ.டு) ஆவைக்கொணா என்பது, யாமத்துக்கு ஒவ்வொரு சொல்லாகச் சொல்லப்படின், வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாகாது. தொடராக விரைவாகச் சொல்லப்படின், வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாதலை அறியலாம்.**

*'பொறுக்கி' என்று சொல்லி இடைவெளிவிட்டுப் பின்னர் 'எடுத்தமாணிக்கம்' என்றால் வசையா? இசையா?*

**அமர்தல் என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*அமர்தல் என்னும் உரிச்சொல் மேவுதல் என்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'அகனமர்ந்து செய்யா ளுறையும்'**

**அரி என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*அரி என்னும் உரிச்சொல் ஐம்மை என்னுங் குறிப்புணர்த்தும் ஐம்மை - அழகு.*

**(எ.டு) 'அரிமயிர்த்திரள் முன்கை'**

**அவாய் நிலை :**

*ஒரு சொல் தனக்கு எச்சொல் இல்லாவிடின் வாக்கியப் பொருணர்ச்சி உண்டாகாதோ அச்சொல்லை அவாவி நிற்றற்கு அவாய்நிலை என்று பெயர். அவாவுதல் அவாவல் = விரும்புதல்.*

**(எ.டு) ஆவைக்கொணா என்றவிடத்து, ஆவை என்பது மாத்திரஞ்சொல்லிக் கொணா வென்பது சொல்லாவிடினும், கொணா வென்பது மாத்திரஞ்சொல்லி ஆவை என்பது சொல்லாவிடினும் வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாகாது. ஆவைக்கொணா என இரண்டுஞ் சொல்லின், அவாய் நிலை காரணமாக வாக்கியப் பொருளுணர்ச்சி உண்டாதலை அறியலாம்.**

**அழுங்கல் என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*அழுங்கல் என்னும் உரிச்சொல் அரவமாகிய இசைப் பொருண்மையையும், இரக்கம் கேடு ஆகிய பண்புகளையும் உணர்த்தும்.*

**(எ.டு) 'உயவுப் புணர்ந்தன்றிவ் வழுங்கலூரே'**

**'பழங்கணோட்ட முதலிய வழுங்கின னல்லனோ'**

**அளை மறி பாப்புப் பொருள் கோள் :**

*பாம்பு, புற்றில் நுழையும் பொழுது தலைமேலாகும்படி நிலைமாறுதல் இயல்பு. அவ்வாறே ஈற்று அடியில் ஈற்றில் நின்ற சொல் அதன் இடையிலும் முதலிலும் சென்று பொருள் கொள்ள அமைவது அளை மறிபாப்புப் பொருள் கோளாகும். அளை = புற்று; பாப்பு = பாம்பு.*

**(எ.டு) 'தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து'**
**'தண்டூன்றித் தளர் வார் தாமும்**
**சூழ்ந்த வினையாக்கை சுட விளிந்து**
**நாற்கதியில் சுழல்வார் தாமும்**
**மூழ்ந்த பிணி நலிய முன்செய்**
**வினையென்றே முனிவார்தாமும்**
**வாழ்ந்த பொழுதினே வானெய்து**
**நெறிமுன்னி முயலா தாரே"**

*இச்செய்யுளில் "வாழ்ந்த பொழுதினே வான் எய்து நெறிமுன்னி முயலாதார்" என்னும் ஈற்றடி மூழ்ந்த .... முனிவார், சூழ்ந்த ... சுழல்வார், தாழ்ந்த... தளர்வார்" எனத்தலைகீழாக இடையிலும் முதலிலும் சென்றடைதலை அறிக.*

**அன்மொழித் தொகை :**

*வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்து தொகைநிலைத் தொடருந் தத்தம் பொருள் படுமளவிற்குத்*

*தொகாது தத்தமக்குப் புறத்தே தாமல்லாத பிறமொழிப் பொருள் படத் தொகுவது அன்மொழித் தொகையாகும்.*

**(எ.டு)**

1. **பூங்குழலி –** இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது **பூவையுடைய** குழலிளையுடையாள் என விரியும்.

   **பொற்றொடியாள் –** மூன்றாம் வேற்றுமைத் தொகைப்புறத்துபபிறந்த அன்மொழித்தொகை. இது, பொன்னாலாகிய தொடியினையுடையாள் என விரியும்.

   **அணியிலக்கணம் –** நான்காம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது **அணிக்கு** இலக்கணம் என விரியும்.

   **பொற்றாலி –** ஐந்தாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது **பொன்னினாகிய** தாலியியையுனைடயாள் என விரியும்.

   **சேரன்குடி –** ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது சேரனது குடிமக்கள் இருக்கும் ஊர் என விரியும்.

   **கீழ் வயிற்றுக்கழலை –** ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது **கீழ் வயிற்றின்கண்** எழுந்த கழலை போல்வான் என விரியும்.

2. **தாழ்குழலி –** வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. **தாழ்ந்த குழலினையுடையாள்** என விரியும்.

3. **கருங்குழலி –** பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. **கருமையான கூந்தலை** உடையவள் என விரியும்.

4. **தேன் மொழியாள் –** உவமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. **தேன்போலும்** மொழினை யுடையாள் என விரியும்.

5. **உயிர் மெய் –** உம்மைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. **உயிரும் மெய்யும்** கூடிப் பிறந்த எழுத்து என விரியும்

***அஃறிணை***

தாழ்வாகிய பகுப்பு, **விலங்கு, பறவை** முதலிய உயிருள்ள வற்றையும் **நிலம், நீர், கல்** முதலிய உயிர் அற்றவற்றையும் குறிக்கும். ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இரண்டு பால்களும் இத்திணைக்கு உரிய பால்களாகும். அல் + திணை = அஃறிணை உயர்திணை அல்லாத திணை

**(எ.டு) களிறு – ஒன்றன்பால்**

**மரங்கள் – பலவின்பால்.**

**அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்கள் :**

*வை, அ, கள், வ் என்னும் விகுதிகளை இறுதியினுடைய பெயர்கள் அஃறிணைப் பலவின் பாற் படர்க்கைப் பெயர்களாம்.*

**(எ.டு) குழையவை, குழையன, மரங்கள், அவ்.**

**ஆகுபெயர் :**

*ஒரு பொருளின் இயற்பெயர், அப்பொருளைக் குறிக்காமல், அப்பொருளோடு தொடர்புடைய பிறிதொரு பொருளிற்குத் தொன்று தொட்டு வழங்கிவரின் அஃது ஆகுபெயர் எனப்படும்.*

**(எ.டு) 'பாவை வந்தாள். பாவை போல்வாளைப் பாவை என்றது ஆகுபெயர்.**

**ஆகுபெயரின் வகைகள் :**

*பொருளாகு பெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர், தொழிலாகுபெயர், எண்ணலளவாகுபெயர், எடுத்தலளவாகுபெயர், முகத்தலள வாகுபெயர், நீட்டலளவாகுபெயர், சொல்லாகுபெயர், தானியாகு பெயர், கருவியாகுபெயர், காரியவாகுபெயர், கருத்தாவாகுபெயர், உவமையாகு பெயர் எனப் பதினாறு வகைப்படும்.*

**ஆக்கவினைக் குறிப்பு :**

*இது காரணம் பற்றி வரும் வினைக் குறிப்பாகும். இதற்கு ஆக்கச் சொல் விரிந்தாயினும் தொக்காயினும் வரும்.*

**(எ.டு) கல்வியாற் பெரியனாயினான்**
**கல்வியாற் பெரியன்.**

**ஆண்பாலை உணர்த்தும் இளமைப் பெயர்கள் :**

*ஏறு, ஏற்றை, ஒருத்தல், களிறு, சேவு, சேவல், இரலை, கலை, மோத்தை, தகர், உதள், அப்பர், போத்து, கண்டி, கடுவன் என்ற பதினைந்தும் ஆண்பாலை உணர்த்தும் இளமைப் பெயர் களாகும்.*

**ஆண்பால் படர்க்கை வினைமுற்று :**

*அன், ஆன் என்னும் இருவிகுதியையும் இறுதியிலுடைய மொழிகள் உயர்திணை ஆண்பாற் படர்க்கை வினைமுற்றுக் களாகும்.*

**(எ.டு)**

| | | | |
|---|---|---|---|
| **இறப்பு** | **நிகழ்வு** | **எதிர்வு** | **குறிப்பு** |
| **நடந்தனன்** | **நடக்கின்றனன்** | **நடப்பன்** | **குழையன்** |
| **நடந்தான்** | **நடக்கின்றான்** | **நடப்பான்** | **குழையான்** |

**ஆறறிவுயிர் :**

*உடம்பினாலும், வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும், செவியினாலும் அறியும் அறிவோடு எப்பொருளையும் பகுத்தறியும் அறிவையும் பெற்றிருப்பது ஆறறிவுயிராகும்.*

**(எ.டு) மக்கள், தேவர், நரகர், அசுரர், இயக்கர் முதலாயினோர்.**

**"மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்பது தொல்காப்பியநெறி, புனைவு நெறிபற்றித், தேவர் நரகர் அசுரர் இயக்கர் என ஒட்ட வைத்தது. நன்னூல்.**

**ஆறாம் வேற்றுமை உருபுகளேற்கும் பெயர்கள் :**

*ஆறாம் வேற்றுமை உருபுகள், தம்மையேற்ற பெயர்ப் பொருளை வருமொழிப் பொருளாகிய தற்கிழமைப் பொருளோடும் பிறிதின் கிழமைப் பொருளோடுந் தொடர்புடைய பொருளாக வேறுபடுத்தும். அவ்வாறு வேறுபட்ட சம்பந்தப் பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்.*

**(எ.டு) சாத்தன் கை – தற்கிழமை**

**சாத்தன் பொத்தகம் – பிறிதின் கிழமை**

**கிழமை – உரிமை.**

**ஆறாம் வேற்றுமையின் உருபுகள் :**

*அது, ஆது, அ என்பவை ஆறாம் வேற்றுமை உருபுகளாகும். இவைகளுள் அது ஆது என்ற உருபுகள் அஃறிணையொருமைப் பெயரையும், அ உருபு அஃறிணைப் பன்மைப் பெயரையும் கொள்ளும். இவ்வுருபுகள் நிற்றற்குரிய விடங்களில் உடைய என்பது சொல்லுருபாக வந்து இருதிணை யொருமைப் பன்புப் பெயர்களையுங் கொள்ளும்.*

**(எ.டு) சாத்தனது கை**

**தனாது கை**

**தன கைகள்**

**சாத்தனுடைய புதல்வன், சாத்தனுடைய புதல்வர்,**

**சாத்தனுடைய வீடு, சாத்தனுடைய வீடுகள்.**

**இசையெச்சம் :**

*முற்றுத்தொடர் மொழியில் அவ்வவ்விடத்திற்கு ஏற்ப இரண்டு முதலிய பல சொற்கள் எஞ்சி நின்று வருவித்துரைக்கப் படுவது இசையெச்சமாகும்.*

**(எ.டு) "அந்தாமரை யன்னமே நின்னை யானகன்றாற் றுவனோ?"**

*இதில், 'என்னுயிரினும் சிறந்த நின்னை' எனப்பல சொற்கள் வருவித்துரைக்கப்படுதலால் இசையெச்சமாயிற்று.*

**இசைப் பொருளுணர்த்தும் உரிச்சொற்கள் :**

*துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் ஆகிய நான்கு சொற்களும் இசைப் பொருளுணர்த்தும் உரிச்சொற்களாகும்.*

**(எ.டு) 'வரி வளை துவைப்ப'**

**"ஆமா நல்லேறு சிலைப்ப"**

**"கடிமரந்தடியு மோசை தன்னூர் நெடுமதில் வரைப்பிற்கடிமனை யியம்ப"**

**'ஏறிரங்கிரு ளிடை'**

**'இசைப்பு' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*இசைப்பு என்னும் உரிச்சொல் இசைப்பொருண்மையை யுணர்த்தும்.*

**(எ.டு) "யாழிசையூப் புக்கும்"**

**இடக்கரடக்கல் :**

*இது தகுதிவழக்கின் வகைகளுள் ஒன்று. இடக்கரான (பெருமக்களிடத்தே சொல்லத் தகாத) மொழிகளை மறைத்து வேறுமொழிகளால் கூறுவது இடக்கரடக்கலாகும். அவை அல் கிளவி என்பதும் இதுவாம்.*

**(எ.டு) மலங்கழுவி வந்தான் – கால் கழுவி வந்தான்.**

**இடப்பொருளுக்குரிய ஏழாம் வேற்றுமை உருபுகள் :**

*கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல், பக்கல், பாங்கர், முகம், மாடு, பால், இன் என்பன ஏழாம் வேற்றுமைக்குரிய இடப் பொருள்களாகும்.*

**(எ.டு) கண் – இற்கண்**

**கால் – ஊர்க்கால்**

**கடை – வேலின்கடை...**

**இடம் :**

*ஒரு வழிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினைநிகழ்ச்சியை இடமென்று கூறுவர். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.*

**இடம் வழுவாமற் காத்தல் :**

*தரல், வரல், செலல், கொடை ஆகிய நான்கு சொற்களும் படர்க்கையை அடையும். இவற்றுள் தரல், வரல் என்னும் இரண்டு சொற்களும் தன்மை முன்னிலைகளை ஏற்கும்.*

**(எ.டு) அவனுக்குத் தந்தான்**
**அவனிடத்து வந்தான்**
**அவனுக்குக் கொடுத்தான்**
**அவனிடத்துச் சென்றான்**
} *நான்கும் படர்க்கையைச் சார்ந்தன*

**எனக்குத்தந்தான், உனக்குத்தந்தான்**
**என்னிடத்து வந்தான்,**
**உன்னிடத்துவந்தான்**
} *தரல், வரல் என்னும் இரண்டும் தன்மை முன்னிலை களை ஏற்றன*

**இடவழுவமைதி :**

*ஓரிடத்தில் பிறவிடச்சொல்லை ஒரோவிடத்துத் தழுவிச் சொல்லுதலும் உண்டு.*

**(எ.டு) "எம்பியை யீங்குப் பெற்றே னென் னெனக் கரிய தென்றான்"**

**இது படர்க்கை இடம் தன்மை இடமாதல்.**

**இடவாகு பெயர் :**

*இடத்தின் பெயர் அவ்விடத்தைக் குறியாமல் அவ்விடத்தில் உள்ள பொருளுக்குப் பெயராகி வருவது இடவாகுபெயராகும்.*

**(எ.டு) ஊர்வந்தது – என்றதில் ஊர் என்னும் இடத்தின் பெயர் அதில் உள்ள மக்களுக்கு ஆயிற்று.**

**இடைச்சொல் ஏ, ஓ முன் வல்லினம் புணர்தல் :**

*இடைச் சொற்களாகிய* ***ஏ, ஓ*** *என்பவற்றின் முன் வல்லினம் வந்தால் இயல்பாகும்.*

**(எ.டு) அவனே + கண்டான் = அவனேகண்டான்**

**அவனோ + கண்டான் = அவனோகண்டான்**

**இடைச்சொல் :**

*பெயரும் வினையும் போலத் தனித்து நடக்கும் ஆற்றல் இன்றிப் பெயரையாவது வினையையாவது சார்ந்து வருஞ்சொல்லே இடைச்சொல்லாகும்.*

**இடைச்சொற்களின் பொருள் :**

***தெரிநிலையும், தெளிவும், ஐயமும், முற்றும், எண்ணும், சிறப்பும், எதிர்மறையும், எச்சமும், வினாவும், விருப்பமும், ஒழியிசையும், பிரிநிலையும், கழிதலும், ஆக்கமும்*** *ஆகிய பதினான்கும் இடைச் சொற்களினுடைய பொருள்களாகும்.*

**இடைச்சொற்களின் வகைகள் :**

*வேற்றுமை யுருபுகளும் விகுதியுருபுகளும், இடைநிலை யுருபுகளும், சாரியை யுருபுகளும், உவமவுருபுகளும், தம் தமக்குரிய பொருளை உணர்த்தி வருகிற* ***ஏ, ஓ*** *முதலியவையும், செய்யுளிசை நிறைத்தற்கே வருபவையும், அசையாய் வருதலே பொருளாக நிற்பவையும்,* ***ஒலி அச்சம், விரைவு*** *ஆகியவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவையும் ஆகிய ஒன்பதும் இடைச் சொற்களின் வகைகளாகும்.*

**இடைப்பிறவரல் :**

*வேற்றுமை யுருபுகளும், வினைமுற்றுகளும், பெயரெச்சங் களும், வினையெச்சங்களும், கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே வருமொழியோடு பொருந்தத்தக்க பிற சொற்கள் வரவும் பெறும். அவ்வாறு வருவதற்கு இடைப் பிறவரல் என்று பெயர்.*

**(எ.டு) சாத்தன் (வயிறார) உண்டான்**

**அறத்தை (அழகுபெறச்) செய்தான்**

**வாளான் (மாய) வெட்டினான்**

**தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான்** | வேற்றுமை

**மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்**

**சாத்தனது (இத்தடக்கை) யானை**

**ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்**

**சாத்தா (விரைந்து) ஓடிவா**

**வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன் – வினைமுற்று**

**வந்த (வடகாசி) மன்னன் – பெயரெச்சம்**

**வந்து (சாத்தனின்றவனூர்க்குப்) போயினான் – வினையெச்சம்**

**இடைநிலை :**

*பகுபதங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் இடைப் பகாப்பதங்களே இடைநிலைகளாகும். இவ்விடை நிலை காலங்காட்டும் இடைநிலை காலங்காட்டா விடைநிலை என இரு வகைப்படும்.*

**இடைப் போலி :**

*இது* ***மூவகைப் போலிகளுள் ஒன்று.*** *சொல்லுக்கு நடுவிற் சில விடத்து ஐகாரத்தின் பின்னும், யகர மெய்யின் பின்னும், வருகின்ற நகரமெய்யோடு ஞகரம் போலியாக வரும்.*

**(எ.டு) மைந்நின்ற = மைஞ்ஞின்ற**

**இடுகுறிப்பெயர் :**

*யாதொரு காரணமும் இன்றி, ஒரு பொருளுக்கே இடப்பட்டுத் தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர் இடுகுறிப் பெயராகும். அப்பெயர்,* ***இடுகுறிப் பொதுப் பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர்*** *என* ***இருவகைப்படும்.***

**(எ.டு) இடுகுறிப் பொதுப்பெயர் – கல்**

**இடுகுறிச் சிறப்புப்பெயர் – கருங்கல்.**

**“எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே”**

என்னும் தொல்காப்பிய நெறிக்கு ஏற்பட்ட சீர் கேடு இது. 'கல்' என்பது கரியது, வலியது, ஒலியுடையது முதலிய பொருளமைந்த சொல். கல் - ஒலிக்குறிப்பாய் மலையைக்குறிக்கும். "கல் எனக் கரைந்து விழும் கடும்புனல்".

**இயல்பு வழக்கு :**

எப்பொருட்கு எச்சொல் இயல்பில் அமைந்ததோ அச்சொல்லாலேயே அப்பொருளைக் கூறுதல் இயல்பு வழக்காகும். அது இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என மூவகைப்படும். அத்தலைப்புகளில் காண்க.

**இயற்கை வினைக் குறிப்பு :**

இது காரணம் பற்றாது இயற்கையை உணர்த்திவரும் வினைக் குறிப்பாம். இது ஆக்கச் சொல் வேண்டாதே வரும்.

**(எ.டு) நீர் தண்ணிது**

**தீ வெய்து.**

**இயற்சொல் :**

செந்தமிழ் நாட்டில் வழங்குஞ் சொல்லாகிய திரி சொற் போலாகாமல், படித்தவர்க்கு மாத்திரமேயன்றிப் படியாதவர்க்கும் தமது பொருள்களைத் தெரிவிக்கின்ற தன்மையையுடைய உலக வழக்குச் சொற்களே இயற்சொற்களாகும்.

**(எ.டு) மண், பொன் – பெயரியற் சொல்**

**நடந்தான், வந்தான் – வினையியற்சொல்**

**அவனை (இதில் உள்ள ஐ) இடையியற்சொல்**

**அழகு, அன்பு – உரியியற்சொல்.**

**'இயைபு' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

இயைபு என்னும் உரிச்சொல் புணர்ச்சிக் குறிப்பை யுணர்த்தும்.

**(எ.டு) "இயைந்தொழுகும்"**

**இலக்கணப்போலி :**

இயல்பு வழக்கின் வகைகளுள் ஒன்று இலக்கணம் இல்லா தாயினும் இலக்கணம் உடையது போல அறிவுடையோரால் தொன்று தொட்டு வழங்கப்படுவது இலக்கணப் போலியாகும்.

**(எ.டு) இல்முன் – முன்றில்**

**இல்வாய் – வாயில்.**

**இலக்கணமுடையது :**

*இதுவும் இயல்புவழக்கின் வகைகளுள் ஒன்று இலக்கண நெறிப்படி வழங்கி வருவது இலக்கணமுடையது.*

**(எ.டு) நிலம், பொன்னன்.**

**இரங்கல் என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு:**

*இரங்கல் என்னும் உரிச்சொல் இசையேயன்றிப் பொருளது கழிவாகிய குறிப்புமுணர்த்தும்.*

**(எ.டு) 'செய்திரங்காவினை'**

**இரட்டைக்கிளவி :**

*இரட்டைச் சொற்கள் அவ்விரட்டிப்பினின்றும் தனித்து ஒலியா.*

**(எ.டு) சல சல மும்மதம் பொழிய.**

**இரண்டாம் வேற்றுமை :**

*இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ ஒன்றேயாம். அதன்பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்பன.*

**(எ.டு) குடத்தைவனைந்தான் – ஆக்கப்படுபொருள்**

**கோட்டையை இடித்தான் – அழிக்கப்படுபொருள்**

**ஊரைச் சேர்ந்தான் – அடையப்படுபொருள்**

**வீட்டை விட்டான் – நீக்கப்படுபொருள்**

**புலியைப் போன்றான் – ஒக்கப்படுபொருள்**

**பொன்னை உடையான் – உடைமைப் பொருள்**

**இரத்தற்கு வருஞ் சொற்கள் :**

***ஈ, தா, கொடு*** *என்னும் மூன்று சொற்களும் முறையே இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் ஆகிய மூவரும் இரத்தற்குப் பயன்படுத்தும் சொற்களாகும்.*

**இருதிணைப் பொதுப் பெயர்கள் :**

***தந்தை, தாய், சாத்தன், சாத்தி, கொற்றன், கொற்றி, ஆண், பெண், செவியிலி, செவியிலிகள், தான், தாம்*** *எனவரும் படர்க்கைப் பெயர்கள் உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டற்கும் பொதுப் பெயர்களாம்.*

**இருதிணைப் பொதுவினை :**

*தன்மை வினைமுற்றுக்களும், முன்னிலை வினைமுற்றுக் களும், வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறு இல்லை, உண்டு என்கின்ற மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும், பெயரெச்சங் களும், வினையெச்சங்களும் இருதிணைக்கும் உரிய பொது வினைகளாகும்.*

**இருதிணை மூவிடப் பொதுப்பெயர் :**

*எல்லாம் என்னும் பன்மைப் பெயர், உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டு திணைகளுக்கும், தன்மை, முனனிலை, படர்க்கை ஆகியமூன்றிடங்கட்கும் பொதுப் பெயராகும்.*

**(எ.டு) நாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம்.**

**இருபெயரொட்டாகு பெயர் :**

*வகரக்கிளவி என்றவிடத்து ஒருபொருட்கு இருபெயர் ஒட்டி நிற்க, அவற்றுள் ஒருபெயர் ஆகுபெயராக நிற்றலால் இருபெயரொட்டாகு பெயராயிற்று.*

*(வகரக்கிளவி என்பதிற் கிளவி என்பது சொல்லை யுணர்த்தும் போது இயற்பெயர்; சொற்குக் கருவியாகிய எழுத்தை உணர்த்தும்போது ஆகு பெயர். வகரக்கிளவி வகரமாகிய எழுத்து எனப் பொருள்படும்)*

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை :**

*ஆகிய என்னும் பண்புருபு மறைந்து நிற்கப் பொதுப் பெயரோடு சிறப்புப் பெயராயினுஞ் சிறப்புப் பெயரோடு பொதுப் பெயராயினும் ஒரு பொருண்மேல் வந்து தொடர்வது இரு பெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.*

**(எ.டு) ஆயன் சாத்தன் – பொதுப் பெயரோடு சிறப்புப்பெயர்.**

**சாரைப்பாம்பு – சிறப்புப் பெயரோடு பொதுப்பெயர்.**

**இருமடியாகுபெயர் :**

*புளி தின்றான் என்புழிப் புளி என்னும் சுவைப்பெயர் அதனையுடைய பழத்திற்காதலால் ஆகுபெயர். புளிமுளைத்தது என்புழிப் புளியென்னும் சுவைப்பெயர் பழத்திற்கு ஆகி, அப்பழத்தின் பெயர் மரத்திற்கு ஆதலால் இருமடியாகு பெயராயிற்று.*

**(எ.டு) மடி = மீளல்.**

**இளமைப்பெயர் :**

*பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி, போத்து என்ற பத்தும் இருதிணைக்கும் உரிய இளமைப் பெயர்களாகும்.*

**இளமைப் பண்பை யுணர்த்தும் உரிச்சொற்கள் :**

*மழவுங்குழவும் ஆகிய இரண்டு உரிச்சொற்களும் இளமைப் பண்பை யுணர்த்துவன வாம்.*

**(எ.டு) 'மழகளிறு'**

**'குழக்கன்று'**

**இறந்தகாலமும் எதிர்காலமுங் காட்டும் விகுதிகள் :**

*து, தும், று, றும் என்னும் விகுதிகள் இறந்தகாலமும் எதிர்காமுங் காட்டுவனவாம்.*

**(எ.டு) வந்து, வந்தும், வருது, வருதும்.**

**சென்று, சென்றும், சேறு, சேறும்.**

**இறந்தகாலம் காட்டும் விகுதிகள் :**

*கு, கும், டு, டும் என்னும் விகுதிகள் இறந்த காலங் காட்டு வனவாம்.*

**(எ.டு) உண்டு (உண்டேன்)**

**உண்டும் (உண்டேம்)**

**உண்கு (உண்பேன்)**

**உண்கும் (உண்பேம்)**

**இறுதிப் போலி :**

*இதுவும் மூவகைப் போலிகளுள் ஒன்று. பால்பகா வஃறிணைப் பெயர்களிடத்து ஈற்றிலே நின்ற மகர மெய் னகரமெய்யோடு ஒத்து நடப்பவை உண்டு. அவ்வாறு வருவது போலி எனப்படும்.*

**(எ.டு) அகம் = அகன், கலம் = கலன் நிலம் = நிலன்.**

**இன்னாமை என்னும் பண்பை யுணர்த்தும் உரிச்சொற்கள் :**

*செல்லலும் இன்னலும் இன்னாமை என்னும் பண்பை யுணர்த்தும் உரிச்சொற்களாகும்.*

**(எ.டு) "மணங்கமழ் வியன் மார்ப னணங்கிய செல்லல்"**

**"வெயில் புறத்தரூஉ மின்னலியக்கத்து"**

**ஈரறிவுயிர் :**

*உடம்பினால் அறியும் அறிவோடு நாவினால் கைப்பு, காழ்ப்பு, துவர்ப்பு முதலிய சுவைகளை அறியும் அறிவையும் பெற்றிருப்பவை ஈரறிவுயிர்களாகும். அவை நந்து, சங்கு, நத்தை, அலகு, நொள்ளை, முரள், இப்பி, கிளிஞ்சல், ஏரல் என்பன.*

**'உகப்பு' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*உகப்பு என்னும் உரிச்சொல் உயர்தல் என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.கா) 'விசும்புகந்தாடாது'**

**'உசா' வென்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*உசாவென்னும் உரிச்சொல் சூழ்ச்சி யென்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'உசாத்துணை'**

**உடனிகழ்ச்சிப் பொருள் :**

*வினை கொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடைய பொருளாம். அது தலைமைப் பொருளும், தலைமையில் பொருளும் என இருவகைப்படும். தலைமைப் பொருளாவது வினை கொண்டு முடியும் பொருளினுயர்வுடையது. தலைமையில் பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளினிழிவுடையது.*

**(எ.டு) மகனொடு தந்தை வந்தான் – உடனிகழ்ச்சிப் பொருள்**

**மன்னவனோடு மந்திரி வந்தான் – தலைமைப் பொருள்**

**மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான் தலைமையில் பொருள்.**

**உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சங்கள் :**

*உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சங்கள் பண்படியாகத் தோன்றி அகரவிகுதி பெற்று வரும்.*

**(எ.டு) மெல்லப் பேசினாள்.**

**'உம்' என்னும் இடைச் சொல் :**

*உம் என்னும் இடைச் சொல் எதிர்மறையும், இருவகைச் சிறப்பும், ஐயமும், இருவகை எச்சமும், முற்றும், எண்ணும், தெரிநிலையும், ஆக்கமும் ஆகிய எட்டுப் பொருளைத்தரும்.*

**(எ.டு)**

**எதிர்மறை :** சாத்தன் வருதற்கும் உரியன் – இதில்வாராமைக்கும் உரியன் எனப் பொருள் படுதலால் எதிர்மறை.

**உயர்வுசிறப்பு :** குறவரும் அஞ்சுங்குன்று – இதில் குறவர் முகமாகக் குன்றின் உயர்வை விளக்குதலால் உயர்வு சிறப்பு.

**இழிவுசிறப்பு :** 'புலையனும் விரும்பாத யாக்கை' – இதில் புலையன் முகமாக உடம்பின் இழிவை விளக்குதலால் இழிவு சிறப்பு.

**ஐயம் :** அவன் வெல்லினும் வெல்லும் – இதில், துணியாமையை உணர்த்துதலால் ஐயம்.

**இறந்தது தழுவிய எச்சம் :** இன்றும் கொற்றன் வந்தான். இதில், முன் கொற்றன் வந்ததல்லாமல் என்னும் பொருளைத் தந்ததால் இறந்தது தழுவிய எச்சம்.

**எதிரது தழுவிய எச்சம் :** கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தந்ததால் எதிரது தழுவிய எச்சம்.

**முற்று :** தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் – இதில் குறைவில்லாமைப் பொருளைத் தருதலால் முற்று.

**எண் (அளவு)** சாத்தனும் கொற்றனும் தேவனும் பூதனும் வந்தார்.

**தெரிநிலை :** ஆணும் அன்று; பெண்ணும் அன்று. ஆயினான். ஆக்கம்; வலியனும்

**உம்மைத் தொகை :**

*எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை யளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்து எண்ணும்மை இடையிலும் இறுதியிலும் மறைந்து நிற்கப், பெயரோடு பெயர் தொடர்வது உம்மைத் தொகையாகும்.*

**(எ.டு)**

**இராப்பகல்; ஒன்றேகால் எண்ணலளவை யும்மைத் தொகை**

**கழஞ்சேகால் ; தொடியே கஃசு எண்ணலளவை யும்மைத் தொகை**

**கலனே குறுணி ; நாழியாழாக்கு**

**சாணரை ; சாண்விரலம்**

**உயிரில்லாப் பொருள்களின் குணப்பண்பு :**

***வட்டம், முக்கோணம், சதுரம்*** *முதலிய பலவகைப்பட்ட வடிவுகளும்,* ***தீ நாற்றம், நறுநாற்றம்*** *என்னும் இருவகை நாற்றங்களும்,* ***வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை*** *என்கின்ற ஐவகை நிறங்களும் ,* ***கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு*** *என்கின்ற அறுவகைச் சுவைகளும்,* ***வெம்மை, தண்மை, வன்மை, மென்மை, நொய்ம்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை*** *என்கின்ற எண் வகை உணர்ச்சிகளும் உயிரற்ற பொருள்களின் குணங்களாகும்.*

**உயிரினங்கட்கு வழக்கில் உள்ள ஆண்பாற் பெயர்கள் :**

*குரங்கினுள்* ***ஏற்றைக் கடுவன்*** *என்று கூறுதலும், கூகையைக்* ***கோட்டான்*** *என்று கூறுதலும், கிளியைத்* ***தத்தை*** *என்று கூறுதலும், பூனையினைப்* ***பூசை*** *என்று கூறுதலும், குதிரையுள் ஆணினைச்* ***சேவல்*** *என்று கூறுதலும், பன்றியை* ***ஏனம்*** *என்று கூறுதலும், ஆண் எருமையினைக்* ***கண்டி*** *என்று கூறுதலும் வழக்கினுள் உள்ளன என்பதாம்.*

**உயிருடைப் பொருள்களின் தொழிற்பண்பு :**

*துய்த்தல், உறங்கல், தொழுதல், அணிதல், உய்த்தல், வாழ்த்தல், அரற்றுதல், வரைதல் முதலியவை உயிருடைப் பொருள்களின் தொழிற்பண்புகளாகும்.*

**உயிருடைப் பொருள் உயிரல் பொருள் ஆகிய இருபொருள்களின் தொழிற்பண்பு :**

*தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் ஆகியவை இருவகைப் பொருள்களின் தொழிற்பண்புகளாகும்.*

**உயிருடைப் பொருள்களின் குணப்பண்பு :**

*அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, காமமயக்கம், எண்ணம், வெறுப்பு, மகிழ்ச்சி, இரக்கம், வெட்கம், வெகுளி, துணிவு, பொறாமை, அன்பு, எளிமை, தளர்ச்சி, துக்கம், இன்பம், இளமை, முதுமை, பகை, வென்றி, மறத்தல், ஊக்கம், மறம், மதம், மறந்து செய்யுங்குற்றம், கற்பு, மடமை, நடுவு நிலைமை ஆகியவை உயிருடைப் பொருள்களின் குணப் பண்புகளாகும்.*

**'உரு' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*உரு என்னும் உரிச்சொல் உட்கு என்னும் பண்பை யுணர்த்தும். உட்கு = அச்சம்; துன்பம்; எ-டு:உட்கார்தல்*

**(எ.டு) 'உருகெழு கடவுள்'**

**உருபு மயக்கம் :**

*எந்த வேற்றுமை யுருபால் எந்த வேற்றுமைப் பொருள் சொல்லப் பட்டதாயினும், உருபு சென்ற வழியே பொருள் சேராமல் அப்பொருள் சென்ற வழியே அவ்வுருபு சேருவது உருபு மயக்கமாகும்.*

**(எ.டு) "நாகு வேயொடு நக்கு வீங்குதோள்" என்றவிடத்து வேய் உடனிகழ்ச்சிப் பொருளாகாது செயப்படு பொருளாய் நிற்றலால் 'ஒடு' உருபை ஐ யுருபாகத்திரித்துக் கொள்ள வேண்டும்.**

**காலத்தினால் செய்த உதவி, காலத்தின்கண் செய்த உதவி.**

**உருபும் வினையும் அடுக்கி முடிதல் :**

*எட்டு வேற்றுமை யுருபுகளும் விரிந்தாயினும் மறைந் தாயினும் ஒன்று பல அடுக்கி வரினும் கலந்து பல அடுக்கி வரினும், வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் ஒன்று பல அடுக்கி வரினும், அப் பலவுந் தம்மை முடித்தற்குரிய ஒரு சொல்லைக் கொண்டு முடியும்.*

| | | |
|---|---|---|
| (எ.டு) | சாத்தனையுங் கொற்றனையும்<br>வாழ்த்தினான் அருளற முடையவன் | உருபுகள் விரிந்தும் மறைந்தும் ஒன்று பல அடுக்கல் மெல்லினம் மிக்கன. |
| | அரசன் பகைவனை<br>வாளால் வெட்டினான் | உருபுகள் விரிந்தும், மறைந்தும், கலந்தும் பல அடுக்கல் |
| | ஆடினான் பாடினான் சாத்தன்<br>இளையண் மெல்லியண்மடந்தை | வினைமுற்று ஒன்று பல அடுக்கல் |
| | கற்ற கேட்ட பெரியோர்<br>நெடிய கரிய மனிதன் | பெயரெச்சம் ஒன்று பல அடுக்கல் |
| | கற்றுக் கேட்டறிந்தோர்<br>விருப்பின்றி வெறுப்பின்றியிருந்தார் | வினையெச்சம் ஒன்று பல அடுக்கல் |

**உருபேலாப் பெயர்கள் :**

***நீயிர், நீவிர், நான்*** *முதலாகிய மூன்று பெயர்களும் எழுவாயல்லாத வேற்றுமைகளை ஏற்கா.*

**உரிச்சொல் :**

*குணமும் தொழிலுமாகிய பல வகைப்பட்ட பொருள்களின் பண்புகளையெல்லாம் தெரிவிக்கிற பெயராகி, ஒரு குணத்தையும், பலகுணத்தையும் தெரிவிப்பவையாய் பெயர்ச்சொல், வினைச் சொற்களைவிட்டு நீங்காதவையாய் செய்யுளுக்கே உரிமை பூண்டு வருபவை உரிச்சொற்களாகும். இவ்வுரிச்சொல் ஒரு குணந் தழுவிய பல உரிச்சொற்கள், பலகுணந்தழுவிய ஓர் உரிச்சொல் என இரண்டுவகைப்படும்.*

**உரையின் பொதுவிலக்கணம் :**

*மூலப்பாடமும், கருத்துரையும் சொற்றிரிபும், சொற் பொருளும், பொழிப்புரையும், எடுத்துக்காட்டும், வினாவும், விடையும், வேண்டியவைகளைத் தந்துரைத்தலும், வேற்றுமையுருபு முதலியவை தொக்கு நிற்பின் அவற்றை விரித்துரைத்தலும், எடுத்துக்கொண்ட அதிகாரம் இதுவாகலின் இச்சூத்திரத்து அதிகரித்த பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைத்தலும், ஐயம் உண்டாகிய விடத்து இதற்கு இதுவே பொருளெனத் துணிந்துரைத்தலும், இவ்வாறு கூறியதனால் வந்தபயன் இதுவென உரைத்தலும், ஆசிரியரது கூற்றுக்களை எடுத்துக்காட்டலும் என்று சொல்லப்பட்ட பதினான்கு வகையாலும் நூலுக்கு உரை உரைக்கப்படும்.*

**'உவப்பு' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*உவப்பு என்னும் உரிச்சொல் உவகை என்னும் பண்பை உணர்த்தும்.*

**(எ.டு) "உவந்துவந்தார்வ நெஞ்ச மோடாய் நலனளைய"**

**உவமையாகுபெயர் :**

*உவமையின் (உபமானத்தின்) பெயர் பொருளுக்கு (உபமேயத்திற்கு) ஆகுவது உவமையாகுபெயர் எனப்படும்.*

**(எ.டு) பாவை வந்தாள் – இதில் பாவை என்னும் உவமையின் பெயர் அதுபோன்ற பெண்ணுக்கு ஆயிற்று.**

**உளப்பாட்டுத் தன்மைப் பன்மை :**

*தன்மை யெழுவாயோடு முன்னிலை யெழுவாயேனும் படர்க்கை யெழுவாயேனும் இவ்விரண்டு எழுவாயுமேனும் அடுக்கிவரின் தன்மைப் பன்மை, பயனிலை கொண்டு முடியும். இது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனப்படும்.*

**(எ.டு) யானும் நீயும் போயினோம்.**

**யானும் அவனும் போயினோம்**

**யானும் நீயுமவனும் போயினோம்.**

**உளப்பாட்டுப் பன்மை முன்னிலை :**

*தன்மையோடு கூடிய முன்னிலை படர்க்கைகள் தன்மையானாற்போல முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலையாகும்.*

**(எ.டு) உண்டனிர் குழையினிர்**
**உண்டீர் குழையீர்** } *நீயும் அவனும்*

**உளப்பாட்டு முன்னிலைப் பன்மை :**

*முன்னிலை எழுவாயோடு படர்க்கை யெழுவாய் அடுக்கிவரின், முனனிலைப் பன்மைப் பயனிலை கொண்டு முடியும். அது உளப்பாட்டு முன்னிலைப் பன்மை எனப்படும்.*

**(எ.டு) நீயுமவனும் போயினீர்.**

**உயர்திணையிற் பாற் பொதுப் பெயர் :**

**ஒருவர், பேதை, ஊமை** *(மூங்கை) என வரும் பெயர்கள், உயர்திணையில் ஆண், பெண் என்னும் இரண்டு பால் கட்கும் பொதுப்பெயர்களாம்.*

**(எ.டு) ஆடவருளொருவர், பெண்டிருளொருவர்.**

**பேதையவன் பேதையவள்**

**ஊமையிவன் ஊமையிவள்**

**உயர்திணை ஆண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்கள் :**

*அன், ஆன், மன், மான், ன் என்னும் விகுதிகளை இறுதியிலுடைய பெயர்கள் உயர்திணை யாண் பாலொருமைப் படர்க்கைப் பெயர்களாம்.*

**(எ.டு) பொன்னன் கோமான்**

**பொருளன் பிறன்**

**திருமன்**

**உயர்திணைப் பலர்பாற்படர்க்கைப் பெயர்கள் :**

***அர், ஆர், கள், மார், ர்*** *என்னும் விகுதிகளை இறுதியிலுடைய பெயர்கள் உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர்களாம்.*

**(எ.டு) குழையர், குழையார், கோக்கள், தேவிமார், பிறர், தச்சர்கள், தட்டார்கள்.**

**உயர்திணை :**

*உயர்வாகிய பகுப்பு மக்கள், தேவர், நரகர் ஆகிய மூவகைப் பிரிவினைரையும் குறிக்கும். ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பால்களும் இத்திணைக்கு உரிய பால்களாகும்.*

*"மக்கள் தேவர் உயர்திணை" என்பது நன். "மக்கள் தாமே ஆறறிவுஉயிரே" என்பது தொல்.*

**(எ.டு) ஆடவர், காளையர் – ஆண்பால்**

**பெண்டிர், மகளிர் – பெண்பால்**

**மக்கள், அவர் – பலர் பால்.**

**உயர்திணை தொடர்ந்த அஃறிணை :**

*உயர்திணை யெழுவாயோடு கிழமைப் பொருள் படத் தொடர்ந்து எழுவாயாக நிற்கும் அஃறிணைப் பொருளாதி யாறும் உயர்திணை வினையான் முடியும்.*

**(எ.டு) நம்பி பொன் பெரியன் – பொருள்**

**நம்பி நாடு பெரியன் – இடம்**

**நம்பி வாழ்நாள் பெரியன் – காலம்**

**நம்பி மூக்குக் கூரியன் – சினை**

**நம்பி குடிமை நல்லன் – குணம்**

**நம்பி நடை கடியன் – தொழில்**

*இங்கே உயர்தினை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயும் முடிந்தமை அறிக.*

**உயர்திணைப்பெண்பா லொருமைப் படர்க்கைப் பெயர்கள் :**

***அள், ஆள், இ, ள்*** *என்னும் விகுதிகளை இறுதியில் உடைய பெயர்கள் உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்களாகும்.*

**(எ.டு) குழையள், மூவாட்டையாள், கன்னி, தமள்.**

**உலக வழக்கத்தைத் தழுவி நடத்தல் :**

*உயர்ந்த மக்கள் கூறுவன சிறந்த நெறியோடு கூடுதலின் அந்நெறி நடத்தல் செய்யுள் வழக்கத்திற்கு முறைமையாகும். எனவே, வழக்கழிய வருவன செய்யுட்கண் வரப்பெறா என்பதாம்.*

**ஊர்வனனவற்றிற்கு இளமைப் பெயர் :**

*பார்ப்பு, பிள்ளை என்னும் இரண்டும் ஊர்ந்து செல்லும் உயிரினங்களின் இளமைப் பெயரைக் குறிப் பனவாம்.*

**(எ.டு) ‘யாமைப் பார்ப்பின் அன்ன” – ஐங்குறுநூறு.**

**“முதலை தின்னும் பிள்ளைத்து என்ப – குறுந்.**

**எடுத்தலளவை யாகுபெயர் :**

*நிறுத்தளக்கின்ற* **தூக்கு, துலாம் கிலோ** *முதலிய பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆகுவது எடுத்தலளவை யாகுபெயராம்.*

**(எ.டு) ஒரு கிலோ கொடுத்தான் – என்றதில் கிலோ என்னும் எடுத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆயிற்று.**

**எண்ணலளவையாகு பெயர் :**

*எண்ணியளக்கின்ற* ***ஒன்று, இரண்டு, அரை, கால்*** *முதலிய எண்ணுப்பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆகுவது எண்ணலளவையாகுபெயராம்.*

**(எ.டு) கால்நோகும் – என்றதில் கால் என்னும் எண்ணலளவுப் பெயர் உடம்பில் அவ்வளவைக் கொண்ட உறுப்புக்கு ஆயிற்று. (கால் ஊன்றல் பொருளும் தரும்)**

**எண்ணுவண்ணம் :**

*எண்ணுப் பயின்றுவருவது எண்ணு வண்ணமாகும்.*

**(எ.டு) "நிலம் நீர் வளி விசும் பென்ற நான்கின் அளப்பரியையே"**

**"நாள்கோள்திங்கள் ஞாயிறுகனையழல்**
**ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத்தனையை"**

**எய்யாமை என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*எய்யாமை என்னும் உரிச்சொல் அறியாமை என்னும் பண்பையுணர்த்தும்.*

**(எ.டு) "எய்யாமை யல்லை நீயும் வருந்துதி"**

**எல்லாவிடத்தும் வரும் அசைச்சொற்கள் :**

*யா, கா, பிற பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், அன்று, ஆம், தான், தாம், இசின், ஐ, ஆர், என், என்ப என்னும் இருபத்தொன்றும் மூவிடத்தும் வரும் அசை நிலையிடைச் சொற்களாம்.*

**'எறுழ்' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*எறுழ் என்னும் உரிச்சொல் வலிமை என்னுங்குறிப் புணர்த்தும்.*

**(எ.டு) "போரெறுழ்த் திணிதோள்"**

**'என' ('என்று') – என்னும் இடைச்சொற்கள் :**

*என என்னும் இடைச்சொல் வினையும், பெயரும், குறிப்பும், இசையும், எண்ணும், பண்பும் ஆகிய ஆறு பொருளிலும் சேர்ந்து வரும்.*

**(எ.டு) மகன் பிறந்தா னெனத் தந்தை மகிழ்ந்தான் – இதில் வினையோடியைந்தது.**

**"அழுக்காறென ஒருபாவி" – இதில் பெயரோடு இயைந்தது. "பொள் ளென வாங்கே புறம் வேரா்" – இதில் குறிப்போடு இயைந்தது. இது விரைவுக் குறிப்பு மொழி.**

**"ஒல்லென ஒலித்தது" – இதில் இசையொடு இயைந்தது.**

**"நிலமென நீரென நெருப்பென" – இதில் எண்ணொடு இயைந்தது.**

**"வெள்ளென விளர்த்தது" – இதில் பண்போடு இயைந்தது.**

**'எ' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*ஏ என்னும் உரிச்சொல் பெருக்கம் என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) "ஏகல்லடுக்கம்**

**ஏகார விடைச்சொல் :**

*ஏகாரவிடைச்சொல் தேற்றமும், வினாவும், எண்ணும், பிரிநிலையும், எதிர்மறையும், இசைநிறையும், ஈற்றசையுமாகிய ஏழு பொருளையுந்தரும்.*

**(எ.டு)**

1. **உண்டே மறுமை:– இது தெளிவுப்பொருளைத் தருதலால் தேற்றம்.**
2. **நீயே கொண்டாய்? – இதில் நீயா கொண்டாய் என வினவுதற் பொருளைத் தருதலாற்றல் வினா.**
3. **நிலமே நீரே தீயே – இதில் நிலமும் நீரும் தீயும் என எண்ணுதலால் எண்.**
4. **அவர்களுள் இவனே கொண்டான் – இதில், ஒரு கூட்டத்திலிருந்து ஒருவனைப் பிரித்து நிற்றலால் பிரிநிலை.**
5. **நானே கொண்டேன் – இதில் நான் கொள்கிலேன் என்னும் பொருளைத் தருமிடத்து எதிர்மறை.**
6. **'ஏயே இவளொருத்தி பேடி' – இதில் வேறு பொருளில்லாமல் செய்யுளில் இசையை நிறைத்து நிற்றலால் இசை நிறை.**
7. **'இயம்புவனெழுத்தே' – இதில் வேறு பொருளில்லாமல் இறுதியில் நிற்றலால் ஈற்றசை.**

**ஏவல் வினை :**

*முன்னிலை ஒன்றற்கே வருவதாய், எதிர்காலத்து மாத்திரமே வருவதாய், முன்னின்றதனைத் தொழிற்படுத்தும் வினை ஏவல் வினையாகும்.*

*(எ.டு) நடமின்.*

**ஏழாம் வேற்றுமையின் உருபுகளுக்குரிய பொருள்கள் :**

*ஏழாம் வேற்றுமை உருபுகள், தம்மையேற்ற பொருள், இடம், காலம், சினைகுணம், தொழில் என்னும் ஆறுவகைப் பெயர்ப் பொருளையும், வருமொழிப் பொருளாகிய தற்கிழமைப் பொருளுக்காயினும், பிறதின்கிழமைப் பொருளுக்காயினும், இடப் பொருளாக வேறுபடுத்தும். அவ்வாறு வேறுபட்ட இடப் பொருளே இவ்வுருபுகளின் பொருள்களாகும்.*

**(எ.டு)**

**மணியின்கண் இருக்கின்றது ஒளி – தற்கிழமை**

**மரத்தின்கண் வாழ்கின்றது பறவை – பிறிதின்கிழமை**

**ஊரின்கண் உள்ளது வீடு – தற்கிழமை**

**ஆகாயத்தின் கண் பறக்கின்றது பறவை–பிறிதின் கிழமை**

**நாளின்கண் நாழிகை உள்ளது**

**வேனிலின்கண் பாதிரி பூக்கும்**

**கையின்கண் உள்ளது விரல் – தற்கிழமை**

**கையின்கண் விளங்குகின்றது வளை – பிறிதின் கிழமை**

**நிறத்தின்கண் உள்ளது அழகு – தற்கிழமை**

**இளமையின்கண் வாய்த்தது செல்வம் – பிறிதின் கிழமை**

**ஆட்டத்தின்கண் உள்ளது நளிநயம் – தற்கிழமை**

**ஆட்டத்தின்கண் பாடப்பட்டது பாட்டு–பிறிதின் கிழமை**

**'ஐ' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*ஐ என்னும் உரிச்சொல் அழகு என்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'ஐதே காமம் யானே'**

**ஐந்தாம் வேற்றுமை உருபுகளேற்கும் பொருள்கள் :**

*ஐந்தாம் வேற்றுமை உருபுகள் தம்மையேற்ற பெயர்ப் பொருளை நீக்கப் பொருளாகவும், ஒப்புப் பொருளாகவும், எல்லைப் பொருளாகவும், ஏதுப் பொருளாகவும் வேறுபடுத்தும். அவ்வாறு வேறுபட்ட நீக்கப் பொருள் முதலியன இவ்வுருபு களின் பொருள்களாகும்.*

| | | |
|---|---|---|
| **(எ.டு)** | **மலையின் வீழருவி**<br>**மலையில் வீழருவி** | *நீக்கப் பொருள்* |
| | **பாலின் வெளிது கொக்கு**<br>**பாலில் வெளிது கொக்கு** | *ஒப்புப் பொருள்* |
| | **சீர்காழியின் வடக்குச் சிதம்பரம்**<br>**சீழ்காழியில் வடக்குச் சிதம்பரம்** | *எல்லைப் பொருள்* |
| | **கல்வியினுயர்ந்தவன் கம்பன்**<br>**கல்வியிலுயர்ந்தவன் கம்பன்** | *ஏதுப் பொருள்* |

**ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் :**

*இன், இல் ஆகிய இரண்டும் ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளாகும். நீக்கப் பொருளிலும், எல்லைப் பொருளிலும் 'இன், இல்' உருபுகளின் மேல் நின்று இருந்து என்பவை சிலவிடத்துச் சொல்லுருபுகளாக வரும்.*

**ஐயறிவுயிர் :**

*உடம்பினாலும், வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும், அறியும் அறிவோடு, செவியறிவையும் பெற்றிருப்பது ஐயறிவுயிராகும். அவை, நாற்கால் விலங்குகளும் பறவையும்.*

**ஒரு குணந்தழுவிய உரிச்சொல் :**

*சால, உறு, தவ, நனி, கழி, கூர் என்பன மிகுதி என்னும் ஒரே குணத்தையுணர்த்தும் உரிச் சொற்களாகும்*

**(எ.டு)** **சால – சாலப்பலர்**

**உறு – உறுபுகழ்**

**தவ – தவப்பல**

**நனி – நனிபேதை**

**கூர் – களிகூர் மனம்**

**கழி – கழிபெருங் காதல்**

**ஒரு பொருட் பன்மொழி :**

*சொல்லின்பந் தோன்றுதற் பொருட்டு ஒரு பொருண்மேல் பல சொற்கள் தொடர்ந்து வருதலும் உண்டு. அவ்வாறு வருதற்கு ஒரு பொருட் பன்மொழி என்று பெயர்.*

**(எ.டு) மீமிசை ஞாயிறு**

**உயர்ந்தோங்கு பெருவரை**

**ஒருமை பன்மை மயக்கம் :**

*ஒருமைப் பாலிற் பன்மைச் சொல்லையும், பன்மைப் பாலிற் ஒருமைச் சொல்லையும் ஒரோவிடத்துத் தழுவிச் சொல்லுதலும் உண்டு.*

**(எ.டு) ‘வெயிலெல்லாம் மறைத்தது மேகம்’ – ஒருமைப் பன்மை மயக்கம்.**

**‘இரண்டு கண்ணும் சிவந்தது’ பன்மையொருமை மயக்கம்.**

**ஒகார விடைச் சொல் :**

*ஓகார விடைச்சொல் ஒழியிசையும், வினாவும், சிறப்பும், எதிர்மறையும், தெரிநிலையும், கழிவும், பிரிநிலையும் அசை நிலையுமாகிய எட்டுப் பொருளையும் தரும்.*

**(எ.டு)**

**படித்தற்கோவந்தான் –** இதில் படித்தற்கன்று; விடுயாடுதற்கு வந்தான் என ஒழிந்த பொருளைத் தருதலால், ஒழியிசை.

**குற்றியோ மகனோ? –** இதில் குற்றியா மகனா என வினாவுதற் பொருளைத் தருதலால், வினா.

**ஓ ஓ பெரியன்! –** இதில், ஒருவனது பெருமையின் மிகுதியைக் காட்டுதலால், உயர்வு சிறப்பு.

**ஓ ஓ கொடியன் –** இதில் ஒருவனது கொடுமையின் மிகுதியைக் காட்டுதலால், இழிவு சிறப்பு.

**அவனோ கொண்டான்** – இதில், அவன் கொண்டிலன் என்னும் பொருளைத் தருமிடத்து, எதிர்மறை.

**ஆணோ அதுவும் அன்று பெண்ணோ அதுவும் அன்று** – இதில், அத்தன்மையில்லாமையைத் தெரிவித்தால் தெரிநிலை.

**நன்மையறியாமற் கெட்டவர்களை** – ஓ ஓ தமக்கு ஒரு நன்மையும் உணரார் என்றதில், கழிந்ததற்கு இரங்குதலால் கழிவு.

**'சொல்லுவேன் கேண்மினோ'** – இதில் சொல்லுவேன் கேண்மின் என பொருள் பட்டு ஓகாரம் வேறு பொருள் இல்லாமல் நிற்றலால் அசைநிலை.

**அவர்களுள் இவனோ கொண்டான்** – இதில் பலரினின்று ஒருவரைப் பிரித்து நிற்றலால் பிரிநிலை.

**'ஓசை' என்னும் குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் :**

*முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குறை, கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்ப்பு, அமலை, துழனி, ஓகை, கரை ஆகியவை ஓசை என்கின்ற குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.*

**(எ.டு) முழக்கு – முழங்குகடல்**

**இரட்டு – குடிஞையிரட்டும்**

**ஒலி – ஒலிபுனலூரன்**

**கலி – கலிகெழுமூதூர்**

**துவை – பல்லியம் துவைப்ப**

**இசை – பறையிசையருவி**

**பிளிறு – பிளிறுவார் முரசு**

**இரை – இரைக்கும் புனல்**

**இரங்கு – இரங்கு முரசினம்**

**அழுங்கு – மாரியழுங்கின மூதூர்**

**இயம்பல் – முரச மதியம்ப**

**இமிழ் – இமிழ் கடல்**

**குளிறு – குளிறுமுரசும்**

**அதிர் – களித்ததிருங்கார்**

**குரை – குரைபுனலாறு**

**கனை – கனைகடல்**

**சிலை – சிலைத்தார் முரசம்**

**சும்மை – சும்மை மிகு நாடு**

**கம்பலை – கம்பலைமூதூர்**

**அரவம் – அரவத்தானை**

**ஆர்ப்பு – ஆர்த்த பல்லியம்**

**‘ஒடு’ - ‘தெய்ய’ என்னும் இடைச் சொற்கள் :**

*ஒடு, தெய்ய என்கின்ற இரண்டும் இசை நிறைப் பொருளைத் தருகிற இடைச் சொற்களாகும்.*

**(எ.டு) “விதைக்குறு வட்டில் போதோடு பொதுள”**

**“சொல்வேன் தெய்ய நின்னோடும் பெயர்த்தே”**

**ஓரறிவுயிர்க்கு உரிய இளமைப் பெயர்கள் :**

*பிள்ளை, குழவி, கன்று, போத்து என்று கூறப்பட்ட நான்கு இளமைப் பெயர்களும் ஓரறிவுயிர்க்கு உரியனவாம். ஆனால், நெல்லும் புல்லுமாகிய இரண்டு ஓரறிவுயிர்களும் இளமைப் பெயர்களைப் பெறாவாம்.*

**ஓரறிவுயிர் :**

*வெப்பம், தட்பம், வன்மை, மென்மை ஆகியவற்றை உடம்பினால் அறியும் அறிவு உடையவை ஓரறிவுயிர் எனப்படும். அவை புல்லும் மரமும் அதன் கிளைப்பிறப்பாகிய கொட்டி தாமரை முதலியனவாம்.*

**ஓரெழுத்தொரு மொழிகள் :**

*உயிர் வருக்கத்தில் ஆறும், மவ்வருக்கத்தில் ஆறும், தவ்வருக்கத்தில் ஐந்தும், பவ்வருக்கத்தில் ஐந்தும், நவ்வருக்கத்தில் ஐந்தும், கவ்வருக்கத்தில் நான்கும், வவ்வருக்கத்தில் நான்கும், சவ்வருக்கத்தில் நான்கும், யவ்வருக்கத்தில் ஒன்றுமாக நெட்டெழுத்துக்களாலாகிய மொழி நாற்பதும், நொ, து ஆகிய இரு குற்றெழுத்து மொழிகளும் சேர்த்து ஓரெழுத்தொரு மொழிகள் நாற்பத்திரண்டாகும்.*

**'கடி' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் :**

*கடி என்னும் உரிச்சொல் காப்பு, கூர்மை, மணம், விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு ஆகிய பண்புகளை உணர்த்தும்.*

**(எ.டு) காப்பு – கடி நகர்**

**கூர்மை – கடிவேல்**

**மணம் – கடிமணம்**

**விளக்கம் – கடிமார்பன்**

**அச்சம் – கடிப்பேய்**

**சிறப்பு – கடியரண்**

**விரைவு – கடிசென்றான்**

**மிகுதி – கடிகாற்று**

**புதுமை – கடிமணம்**

**ஆர்த்தல் – கடிமுரசு**

**வரைவு – கடிமது**

**மன்றல் – கடிவினை**

**கரிப்பு – கடிமிளகு**

**கமம் என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*கமம் என்னும் உரிச்சொல் நிறைவாகிய பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) 'கமஞ் சூன் மாமழை'**

**'கய' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் :**

***கய*** *வென்னும் உரிச்சொல் பெருமை மென்மை ஆகிய பண்புகளையுணர்த்தும்.*

**(எ.டு) 'கயவாய்ப் பெருங்கை யானை'**

**'கயந்தலை மடப்பிடி'**

**கருத்தாவாகு பெயர் :**

*செய்தவன் பெயர் அவனாற் செய்யப்பட்டதற்குப் பெயராக ஆகி வருவது கருத்தாவாகு பெயராகும்.*

**(எ.டு) தொல்காப்பியர் படி – இதில் தொல்காப்பியர் என்னுங்கருத்தாவின் பெயர் அவராற் செய்யப்பட்ட நூலுக்கு ஆயிற்று.**

**கருத்துணர்ச்சி :**

*ஒரு சொல் எப்பொருளைத் தர வேண்டும் என்னுங் கருத்தாற் சொல்லப்பட்டதோ அக்கருத்தைக் கால இடச் சூழலால் (சமய விசேடத்தால்) அறிதல் கருத்துணர்ச்சியாகும்.*

**(எ.டு) மாவைக் கொண்டுவா என்றவிடத்து, மாவென்பது பலபொருளொரு சொல்லாதலால் வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாகாது. இது பசித்தோனாற் சொல்லப்படின் தின்னும் மாவெனவும், கவசம் பூண்டு நிற்பானாற் சொல்லப்படின் குதிரை யெனவும் சொல்லுவான் கருத்து சமய விசேடத்தால் அறியப்படும். அப்பொழுது அக்கருத்துணர்ச்சி காரணமாக வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாதலை அறியலாம்.**

**கருவியாகு பெயர் :**

*காரணத்தின் பெயர் காரியத்துக்கு ஆவது கருவியாகு பெயராகும்.*

**(எ.டு) திருவாய் மொழி ஓதினான் – இதில் மொழி என்னும் கருவியின் பெயர் அதனாலாகிய நூலுக்கு ஆயிற்று.**

**கருவிப் பொருள் :**

*வினைமுதற் றொழிற் பயனைச் செயப்படுபொருளிற் சேர்ப்பது. அக்கருவிப் பொருள் முதற் கருவி செயப்படு பொருளோடு ஒற்றுமையுடையது. துணைக் கருவி முதற் கருவிக்குத் துணையாய் அது காரியப் படுமளவும் உடனிகழ்வது.*

**(எ.டு) மண்ணாற் குடத்தை வனைந்தான் – மகன் முதற் கருவி தண்ட சக்கரங்களாற் குடத்தை வனைந்தான் – தண்ட சக்கரம் துணைக்கருவி.**

**கருவி என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

***கருவி** என்னும் உரிச்சொல் தொகுதி என்னுங் குறிப் புணர்த்தும்.*

**(எ.டு) 'கருவி வானம்'**

**'கவவு' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

***கவவு** என்னும் உரிச்சொல் "அகத்தீடு" என்னுங் குறிப்பை யுணர்த்தும்.*

**(எ.டு) "கவவுக்கை நெகிழாமல்"**

**கவர் என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*__கவர்__ என்னும் உரிச்சொல் விருப்பம் என்னுங் குறிப்பை யுணர்த்தும்.*

**(எ.டு) "கவர் நடைப்புரவி"**

**கழுமென் கிளவியுணர்த்துங் குறிப்பு :**

*கழும் என்னும் உரிச்சொல் மயக்கமாகிய குறிப்பை யுணர்த்தும்.*

**(எ.டு) 'கழுமிய ஞாட்பு' ஞாட்பு – போர்**

**'கன்று' என்னும் இளமைப் பெயர் பெறும் விலங்கினங்கள் :**

*யானை, குதிரை, கழுதை, கடமை, மான், எருமை, மரை, கவரி, கரடி, ஒட்டகம் ஆகிய பத்தும் கன்று என்னும் இளமைப் பெயரைப் பெற்று வரும்.*

**காரண இடுகுறிப் பெயர் :**

*காரணம் கருதிய பொழுது அக்காரணத்தையுடைய பலபொருள்களைக் குறிக்குமாயினும், பல பொருள்களையும் குறிக்கக் காரணம் இருந்தும் அக்காரணத்தை உடைய ஒரு பொருளுக்கே வழங்கி வரும் பெயர் காரண இடுகுறிப் பெயர் எனப்படும். (காரணம், இடுகுறி, காரண இடுகுறி என்பவை பின்னூல் முறை)*

**(எ.டு) முள்ளி, நாற்காலி**

**காரணப் பெயர் :**

*ஒரு பொருளுக்கு யாதானும் ஒரு காரணம்பற்றி வரும் பெயர் காரணப் பெயராகும். அது காரணப் பொதுப் பெயர், காரணச் சிறப்புப் பெயர் என்று இரண்டு வகைப்படும்.*

**(எ.டு) காரணப் பொதுப்பெயர் – அணி**

**காரணச் சிறப்புப் பெயர் – வளையல்**

**காரியவாகு பெயர் :**

*காரியத்தின் பெயர் காரணத்துக்கு ஆகுவது காரியவாகு பெயராம்.*

*(எ.டு) அணி படி - என்றதில் அணி என்னும் இலக்கண மாகிய காரியத்தின் பெயர் அதனை அறிவித்தற்குக் காரணமாகிய நூலுக்கு ஆயிற்று.*

**காலங் காட்டா இடைநிலை :**

*காலங்காட்டா இடைநிலைகள் பெயர்ப் பகுபதங்களுக்கு வரும்.*

**(எ.டு) அறிஞன் – ஞ் – இடைநிலை**

**ஓதுவான் – வ் – இடைநிலை**

**வலைச்சி – ச் – இடைநிலை**

**வண்ணாத்தி – த் – இடைநிலை**

**காலம் :**

*இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனக் கூறப்பட்டியலும் பக்கத்தின் ஆராய்ந்து நோக்கும் பொருள் நிகழ்ச்சியைக் கூறுவது காலமாகும்.*

**காலவழுவமைதி :**

*மூன்று காலங்களிலும் தம் தொழில் இடைவிடாமல் ஒரு தன்மையவாய் நடக்கின்ற பொருள்களில் வினையை நிகழ் காலத்தாற் சொலலத்தகும்.*

**(எ.டு) மலை நிற்கின்றது – இதில் நிற்றல் முக்காலத்திற்கும் உரியவாதலை யறிக.**

**காலவாகு பெயர் :**

*காலத்தின் பெயர் அக்காலத்தைக் குறிக்காமல் அக்காலத்தில் உள்ள பொருளுக்குப் பெயராவது காலவாகு பெயராம்.*

**(எ.டு) கார் அறுத்தது – என்றதில் கார் என்னும் மழைக் காலத்தின் பெயர் அக்காலத்தில் விளையும் பயிர்க்கு ஆயிற்று.**

**'குட்டி' என்னும் இளமைப் பெயர் பெறும் உயிரினங்கள் :**

*கீரி, வெருகு, எலி, மூன்று வரிகளையுடைய அணில் ஆகிய நான்கும் குட்டி என்னும் இளமைப் பெயர் பெறும். மேலும் அவை பறழ் என்னும் இளமைப் பெயரையும் பெற்று வரும்.*

**குணவாகு பெயர் :**

*குணத்தின் பெயர் அதனையுடைய பொருளுக்கு (குணிக்கு) ஆகி வருவது குணவாகு பெயராகும்.*

**(எ.டு) வெள்ளை கொண்டு வந்தான் – இதில் வெள்ளை என்னும் நிறக் குணப் பெயர் அதனையுடைய ஆடைக்கு ஆயிற்று.**

**குரங்கு என்னும் விலங்கு பெறும் இளமைப் பெயர்கள் :**

***குரங்கும்*** *அதன் இனமாகிய* ***முசு, ஊகம்*** *ஆகியவையும், குட்டி, மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு, குழவி என்னும் ஆறு இளமைப் பெயர்களையும் பெற்று வரும்.*

**'குருளை' என்னும் இளமைப் பெயர் பெறும் விலங்கினம் :**

*நாய், பன்றி, புலி, முயல், நரி என்னும் ஐந்து விலங்குகளும் குருளை, குட்டி, பறழ் என்னும் மூன்று இளமைப் பெயர்களைப் பெறும். நாயை ஒழிந்த நான்கு விலங்குகளும் பிள்ளை என்னும் இளமைப் பெயரையும் பெற்று வரும்.*

**குழூஉக் குறி :**

*இது தகுதி வழக்கின் வகைகளுள் ஒன்று. ஒரு கூட்டத்தார் ஒரு காரணத்தால் ஒரு பொருளின் சொற்குறியை நீக்கி வேறொரு சொல்லால் அப்பொருளைக் கூறுவது குழூஉக் குறியாகும்.*

**(எ.டு) பொன்னைத் தட்டார் பறி என்று கூறுவார்.**

**கள்ளைக் குடியர். சொல் விளம்பி என்று கூறுவர்.**

**'குழவி' என்னும் இளமைப் பெயர் பெறுவன :**

***யானை, பசு, எருமை, கடமா, மரை, குரங்கு, முசு, ஊகம்*** *ஆகிய எட்டும் குழவி என்னும் இளமைப் பெயரைப் பெற்று வரும்.*

**குறிப்பின் வரும் இடைச் சொற்கள் :**

***அம்மென, இம்மென, கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, சுஃறென*** *எனவும்,* ***கடகடவென, களகளவென, திடுதிடென, நெறுநெறென, படபடவென*** *எனவும் வருவன ஒலிக்குறிப்புப் பொருளைத் தரும் இடைச் சொற்களாம்.*

**குறிப்பு மொழி :**

*எழுத்தொடும் சொல்லொடும் புணராமல் சொல்லினால் பொருள் உணரப்படும் மொழி குறிப்பு மொழியாகும்.*

**குறிப்பு வினை :**

*பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறையும் அடியாகக் கொண்டு பிறந்து, செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், தொழில் என்ற ஆறனுள் கருத்தா ஒன்றையே காட்டுதல் குறிப்பு வினையின் இலக்கணமாகும்.*

**(எ.டு) குழையன் – பொருள்**

**ஊரன் – இடம்**

**ஓணத்தான் – காலம்**

**கண்ணன் – சினை**

**கரியன் – பண்பு**

**நடையன் – தொழில்**

**குறிப்பு வினையெச்ச விகுதிகள் :**

*அ, றி, து, ஆல், மல், கடை, வழி, இடத்து என்னும் எட்டும் குறிப்பு வினையெச்ச விகுதிகளாகும்.*

**(எ.டு) மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கடை, அல்லாவிடத்து.**

**குறிப்பு வினைப் பெயரெச்சங்கள் :**

*குறிப்பு வினைப் பெயரெச்சங்கள் அகர விகுதி பெற்று வரும்.*

**(எ.டு) கரிய குதிரை.**

**குறிப்பு வினைப் பெயரெச்ச விகுதி :**

*அ என்ற ஒன்று மட்டும் குறிப்பு வினைப் பெயரெச்ச விகுதியாகும்.*

**(எ.டு) கரிய**

**குறிப்பு வினைமுற்று விகுதிகள் :**

***அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈ*** *என்னும் இருபத்திரண்டுங் குறிப்பு வினைமுற்று விகுதிகளாகும்.*

**(எ.டு) கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று, கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர்.**

**'கொல்' என்னும் இடைச்சொல் :**

*கொல் என்னும் இடைச்சொல் ஐயப் பொருளிலும், அசை நிலைப் பொருளிலும் வருகிற இடைச் சொல்லாகும்.*

**(எ.டு) அவன் சாத்தன் கொல், கொற்றன் கொல் – ஐயம்**

**கற்றதனாலாய பயனென் கொல் – அசை நிலை.**

***சித்திரவண்ணம் :***

*நெட்டெழுத்துங் குற்றெழுத்தும் சார்ந்து வருவது சித்திர வண்ணம்.*

**(எ.டு) ஓரூர் வாழினுஞ் சேரிவாரார்**

**சேரிவரினும் ஆரமுயங்கார்**

***சிறப்புப் பெயர் இயற்பெயர் :***

*திணை, நிலம், குலம், குடி, உடைமை, குணம், தொழில், கல்வி ஆகிய காரணம் பற்றி வருஞ் சிறப்புப் பெயரினாலும், காரணம் பற்றாது வரும் இயற்பெயரினாலும், ஒரு பொருளைச் சேர்த்துச் சொல்லுமிடத்துச் சிறப்புப் பெயரை முன் வைத்து இயற்பெயரைப் பின் வைத்தல் சிறப்பாகும்.*

**(எ.டு) குறவன் கொற்றன் – திணை**

**சோழியன் சாத்தன் – நிலம்**

**பார்ப்பான் துரோணன் – குலம்**

**சோழன் நள்ளி – குடி**

**பொன்னன் வளவன் – உடைமை**

**கரியன் கண்ணன் – குணம்**

**நடையன் நாதன் – தொழில்**

**தமிழ்ப் புலவன் கபிலன் – கல்வி**

***சிறப்பையுணர்த்தும் உரிச்சொற்கள் :***

*கூர்ப்பும், கழிவுமாகிய இரண்டு உரிச்சொற்களும் ஒன்றனது சிறத்தலாகிய பண்பையுணர்த்தும்.*

**(எ.டு) 'துனிகூ ரெவ்வமொடு'**

**'கழிகண்ணோட்டம்'**

***சினையாகு பெயர் :***

*சினைப் பொருளின் பெயர் முதற் பொருளுக்கு ஆகுவது சினையாகு பெயராகும்.*

**(எ.டு) வெற்றிலை நாட்டான் – என்றதில் இலை என்னும் சினையின் பெயர் அதன் கொடிக்கு ஆயிற்று.**

***'சாயல்' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :***

*சாயல் என்னும் உரிச்சொல் மென்மையாகிய பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) 'சாயன்மார்பு'**

***சீர்த்தி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :***

*சீர்த்தி என்னும் உரிச்சொல் பெரும் புகழையுணர்த்தும்.*

**(எ.டு) 'வயங்கல் சால் சீர்த்தி'**

***சுழற்சியாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :***

*அலமரலும் தெருமரலுமாகிய இரண்டு உரிச் சொற்களும் சுழற்சியாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) அலமரலாயம்**

**தெருமரலுள்ள மொடன்னை துஞ்சாள்**

***சேர் என்னும் உரிச்சொல் உணர்த்தும் குறிப்பு :***

*சேர் என்னும் உரிச்சொல் திரட்சி என்னுங் குறிப் புணர்த்தும்.*

**(எ.டு) 'சேர்ஞ்' செறி குறங்கு**

**சொல் :**

*ஒருவர் தம் உள்ளக் கருத்தின் நிகழ் பொருளைப் பிறர்க்குத் தெரிவித்தற்கும், பிறர் கருத்தின் நிகழ் பொருளைத் தாம் அறிது கொள்வதற்கும் பயன்படும் ஒலிதான் சொல்லாகும். இது பெயரியற் சொல், பெயர்த்திரி சொல், வினையியற் சொல், வினைத்திரிசொல், இடையியற் சொல், இடைத்திரி சொல், உரியியற் சொல், உரித்திரி சொல், திசைச் சொல், வடசொல் எனப் பத்து வகைப்படும்.*

**சொல் என்னும் பண்பையுணர்த்தும் பல உரிச்சொற்கள் :**

*மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் ஆகிய பதினாறும் சொல் என்னும் பண்பை உணர்த்தும் உரிச் சொற்களாகும்.*

**(எ.டு) மாற்றம் – வாய் மாற்றம்**

**நுகற்சி – அறிந்துநுவல்**

**செப்பு – செப்பலுற்றேன்**

**உரை – உரைப்பவை**

**கரை – அறங்கரை நா**

**நொடி – ஆயிழை நொடியும்**

**இசை – இசையெனப்புக்கு**

**கூற்று – நாங்கள் கூற**

**புகறல் – புகன்ற அன்றியும்**

**மொழி – கண்டது மொழிமோ**

**கிளவி – கிளந்த கிளை முதல்**

**விளம்பு – விளம்பினர் புலவர்**

**அறை – அறைகுவென் சொல்லே**

**பாட்டு – அறம் பாடிற்று**

**பகர்ச்சி – பகர்ந்தனர் புலவர்**

**இயம்பல் – இயம்பலுற்றேன்**

**சொல் மரபு :**

*இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொல்லின் இயற்கையால் யாப்பின் வழிப்பட்டது மரபாகும். சொல்லதிகாரத்தோடு பொருந்தி வருவது இயற் சொல் மரபாகும். தமிழ் நாட்டகத்தும் பல்வகை நாட்டினும் தத்தமக்குரித்ததாக வழங்கும் மரபு திரி சொல் மரபாகும். செந்தமிழ் சூழ்ந்த பன்னிரு நிலத்தினும் வழங்கும் மரபு திசைச் சொல் மரபாகும். வட சொல் மரபாவது திரிந்த வகையாகிய சொல் மரபாகும்.*

**சொல்லாகு பெயர் :**

*சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகுவது சொல்லாகு பெயராகும்.*

**(எ.டு) இந்நூலுக்கு உரை செய்தான் – என்றதில் உரை என்னுஞ் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆயிற்று.**

**சொல்லெச்சம் :**

*முற்றுத் தொடர் மொழியில் (வாக்கியத்தில்) ஒரு சொல் எஞ்ச நின்று வருவித்துரைக்கப்படுவதற்குச் சொல்லெச்சம் என்று பெயர்.*

**(எ.டு) “பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா**
**ரிறைவ னடிசேரா தார்”**

*இதில் சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் எனச் சேர்ந்தார் என்று வருவித்துரைக்கப்படுவதால் சொல்லெச்ச மாயிற்று.*

**தகுதி வழக்கு :**

*பொருள்களுக்கு இயல்பாய் ஏற்பட்ட சொற்களை ஒழித்துத் தகுதியான வேறு சொற்களால் அப்பொருளைக் கூறுதல் தகுதி வழக்காகும். அது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக் குறி என மூனறு வகைப்படும்.*

**தகுதி :**

*பொருட்குத் தடையுணர்ச்சி இல்லாமை தகுதியாகும்.*

**(எ.டு) நீரானனை என்னுமிடத்து, நனைத்தலின் நீர் கருவியாதலால் தடையுணர்ச்சியில்லை. ஆகவே, தகுதி காரணமாக வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாதலை யறிக.**

**'தட' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் :**

*தடவென் கிளவி பெருமை, கோட்டம் ஆகிய பண்புகளை யுணர்த்தும்.*

**(எ.டு) 'வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்'**

**'தடமருப் பெருமை'**

**தன்மையொருமை வினைமுற்று :**

***கு, டு, து, று*** *என்கின்ற நான்கு விகுதிகளையும் இறுதி யிலுடைய குற்றியலுகரமாகிய மொழிகளும், அல், அன், என், ஏன் என்கின்ற நான்கு விகுதிகளையும் இறுதிலுடைய மொழி களும், உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன் பால் என்னும் மூன்றுக்கும் பொதுவாகிய தன்மையொருமைத் தெரிநிலை முற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆம்.* ***கு, டு, து, று*** *என்னும் நான்கும் தாமே காலங்காட்டுதலால் குறிப்பு வினைக்குவாரா. அல்விகுதி இடைநிலையோடு சேர்ந்து தெரிநிலையில் எதிர்காலத்தில் மாத்திரமே வரும்.*

**(எ.டு)**

| இறப்பு | நிகழ்வு | எதிர்வு | குறிப்பு |
|---|---|---|---|
| – | – | உண்டு | – |
| உண்டு | – | – | – |
| வந்து | – | வருவது | – |
| சென்று | – | சேறு | – |
| – | – | செய்வல் | – |
| உண்டவன் | உண்கின்றவன் | உண்பன் | குழையன் |
| உண்டனென் | உண்கின்றனென் | உண்பென் | குழையென் |
| உண்டேன் | உண்கின்றேன் | உண்பேன் | குழையேன் |

**தாப்பிசைப் பொருள்கோள் :**

*செய்யுளிடையில் நின்ற சொல் முதலிலும் இறுதியிலும் சென்று இயைந்து பொருளைப் புலப்படுத்துவது தாப்பிசைப் பொருள் கோள் எனப்படும்.*

**(எ.டு) "உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊன்உண்ண அண்ணாத்தல் செய்யா தளறு"**

*இச்செய்யுளில் 'ஊன்' என்ற சொல் "ஊன்" உண்ணாமையுள்ளது என முதலிலும், 'ஊன் உண்ண' எனப் பின்னரும் சென்றடைவதைக் காணலாம்.*

**'தாய்' என்னுஞ் சொல்லிற்குச் சிறப்பு விதி :**

*தாய் என்னுஞ் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.*

**(எ.டு) தாய் + கை = தாய்கை**

**தாவண்ணம் :**

*இடையிட் டெதுகையான் வருவது தாவண்ணமாகும்.*

**தாவென்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*தாவென்னும் உரிச்சொல் வருத்தம் வலி ஆகிய குறிப்புகளையுணர்த்தும்.*

**(எ.டு) 'தாவினன் பொன்றைஇய பாவை'**

**'கருங்கட்டாக் கலை பெரும் பிறிதுற்றென'**

**'தாழ்' என்பதற்குச் சிறப்பு விதி :**

***தாழ்** என்னுஞ் சொல்முன் கோல் என்னுஞ் வருமொழியாக வந்து பொருந்துமாயின் அகரச் சாரியை பெறும்.*

**(எ.டு) தாழ் + கோல் = தாழக்கோல்**

**தானியாகு பெயர் :**

*தானத்தில் உள்ள பொருளின் பெயர் அதற்குத் தானமான பொருளுக்கு ஆகுவது தானியாகு பெயராம். (தானம் - இடம்)*

**(எ.டு) விளக்கு ஒடிந்தது – என்றதில் விளக்கு என்னும் நெருப்புச் சுடரின் பெயர் அதற்கு இடமான தண்டுக்கு ஆயிற்று.**

**திசைச் சொல் :**

*செந்தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளிலும், பதினெட்டுத் தேயங்களுள் தமிழ்நாடு நீங்கிய பதினேழு நாடுகளிலும் வசிப்பவர்கள் தமது பேசும் மொழிகளிலுள்ள சொற்கள் அப்பொருளோடு செந்தமிழில் வந்து வழங்குவன திசைச் சொற்களாகும்.*

(எ.டு) பசுவைப் **பெற்றம்** என்பது தென்பாண்டி நாட்டுச் சொல்.

தாயைத் **தள்ளை** என்பது குட்ட நாட்டுச் சொல்.

தந்தையை **அச்சன்** என்பது குடநாட்டுச் சொல்.

வஞ்சகரைக் **கையர்** என்பது கற்கா நாட்டுச் சொல்

தோட்டத்தைக் **கிழார்** என்பது வேணாட்டுச் சொல்.

சிறுகுளத்தைப் **பாழி** என்பது பூழி நாட்டுச் சொல்

வயலைச் **செய்** என்பது பன்றி நாட்டுச் சொல்

சிறு குளத்தைக் **கேணி** என்பது அருவா நாட்டுச் சொல்.

***திணைவழுவமைதி :***

***மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு*** *என்னும் இவைகளுள் ஒரு காரணத்தினால் ஒரு திணைப் பொருள் வேறு திணைப் பொருளாகவுஞ் சொல்லப்படும்.*

**(எ.டு)**

1. **ஒரு பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.**
2. **"பசுங்கிளியார் சென்றார்க்கு" என்பது உயர்த்திச் சொல்லுதலால் அஃறிணை உயர்திணையாயிற்று.**
3. **"தம் பொருளென்ப தம் மக்கள்" என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.**
4. **"ஏவவும் செய்கலான் தான் தேரா னவ் வுயில், போஓமளவு மோர் நோய்" என்பது கோபத்தினால் உயர்திணை அஃறிணையாயிற்று.**
5. **"நாம் கடவுளுடைமை" என்பது இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று.**

***திரிசொல் :***

*ஒரு பொருளையே தெரிவிக்கின்ற பல சொற்களாகியும், பல பொருள்களைத் தெரிவிக்கின்ற ஒரே சொல்லாகியும், கற்றவர்களால் மாத்திரமே அறியப்படுகிற பொருளை யுடையவை திரிசொற்களாம்.*

**(எ.டு) கிள்ளை, தத்தை என்பன கிளி என்னும் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்த்திரி சொல்.**

**காசு – குற்றம், பொன், மணி முதலிய பல பொருள்களைக் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்.**

**படர்ந்தான், ஏகினான், சென்றான் என்பவை போனான் என்கின்ற ஒரு பொருள் குறித்த பல வினைத் திரி சொல்.**

**வரைந்தான் – இது நீக்கினான், கொண்டான், எழுதினான் முதலிய பல பொருள்களைக் குறித்த ஒரு வினைத் திரி சொல்**

**தில்லிடைச் சொல் :**

*தில்லென்னும் இடைச் சொல் ஆசை, காலம், ஒழியிசை ஆகிய மூன்று பொருளையுந் தரும்.*

**(எ.டு) "வார்ந்திலங்குவை யெயிற்றுச் சின்மொழி – யரிவை யைப் பெருகதில் லம்ம யானே" – விழைவு**

**"பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே" – காலம்**

**"வருகதில் லம்ம வெஞ்சேரி சேர" – ஒழியிசை**

**துணிவுப் பொருளையுணர்த்தும் விகுதிகள் :**

*விடு, ஒழி என்னும் விகுதிகள் துணிவுப் பொருளை யுணர்த்தும் விகுதிகளாகும்.*

**(எ.டு) வந்து விட்டான், கேட்டொழிந்தான்**

**துயவுவென் கிளவி உணர்த்துங் குறிப்பு :**

*துயவு வென்னும் உரிச் சொல் அறிவு வேறுபடுதலாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'துயவுற் றேம் யாமாக'**

**'துவன்று' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*துவன்று என்னும் உரிச்சொல் தனிமை என்னும் பண்பையுணர்த்தும்.*

**(எ.டு) 'ஆரியர் துவன்றிய பேரிசை மூதூர்'**

**செயப்படு பொருள் :**

*கருத்தாவினது தொழிலின் பலனை அடைவது. அது கருத்திற் செய்யப்படுவதும், கருத்தின்றிச் செய்யப்படுவதும், இருமையற் செய்யப்படுவதும் என மூவகைப்படும். அது அகநிலையாகவும் தானே கருத்தாவாகவும் வரும்.*

**(எ.டு)**

**சோற்றையுண்டான்** என்ற விடத்து, சோறு உண்ணப்படுவதாக வினை முதலால் இச்சிக்கப்பட்ட செயப்படு பொருள்.

**சோற்றைக் குழைவித்தான்** என்றவிடத்து சோறு, குழைக்கப்படுவதாக வினைமுதலால் இச்சிக்கப்படாத செயப்படு பொருள்.

**பதரையும் நெல்லையும் பணத்திற்குக் கொண்டான்** என்றவிடத்து, பதர், கொள்ளப்படுவதாக வினைமுதலால் விரும்பப்படாத செயப்படு பொருள், நெல், கொள்ளப்படுவதாக வினைமுதலால் விருப்பம்பட்ட செயப்படு பொருள்.

**நடத்தலைச் செய்தான்** எனத் தெரிநிலைகள் விரிதுரைக்குமிடத்துச் செயப்படு பொருள் அகநிலையாய் வந்தது.

**தன்னைப் புகழ்ந்தான்** எனச் செயப்படு பொருளே கருத்தாவுமாயிற்று.

***செயப்படு பொருள் குன்றிய வினை :***

*செயப்படு பொருளை வேண்டாது வரு முதனிலை அடியாகத் தோன்றும் வினை செயப்படு பொருள் குன்றிய வினையாகும்*

**(எ.டு) வளவன் நடந்தான்.**

***செயப்படு பொருள் குன்றாத வினை :***

*செயப்படு பொருளை வேண்டி நிற்கும் முதனிலை அடியாகத் தோன்றும் வினை செயப்படு பொருள் குன்றா வினையாகும்.*

**(எ.டு) மாமூலன் உணவு உண்டான்**

***செயப்பாட்டு வினை :***

*படுவிகுதி புணர்ந்த முதனிலை அடியாகத் தோன்றி, வினை முதல் மூன்றாம் வேற்றுமையிலும், செயப்படு பொருள் எழுவாயிலும் வரும் வினை செயப்பாட்டு வினையாம்.*

**(எ.டு) வளவனால் பாடம் படிக்கப்பட்டது**

***செய்யுமென்முற்று :***

*செய்யுமென்னும் வாய்பாட்டுத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள், படர்க்கையிடத்தனவாகிய ஐம்பால்களுள்ளே பலர்பாலொழிந்த நான்கு பால்களுக்கும் பொதுவாய் வரும்.*

**(எ.டு) அவனுண்ணும்**

**அவளுண்ணும்**

**அதுவுண்ணும்**

**அவையுண்ணும்**

**செய்யுளிடத்து வேற்றுமை யுருபு திரிந்து வருதல் :**

*ஐ, ஆன், கு ஆகிய மூன்று உருபுகளுஞ் செய்யுளிடத்து ஒரோவழி அகரமாகத் திரிந்து வரும். அஃறிணையிடத்து ஐ, கு ஆகிய இரண்டு உருபுகளும் அகரமாகத் திரியாது.*

**(எ.டு) காவலோனக் களிறஞ்சும்மே – காவலோனை**

**'புலவரான......... புலவரான்'**

**கடிநிலையின்றே ஆசிரியற்க – ஆசிரியற்கு**

**புள்ளினான் ........... அஃறிணை**

**செய்வினை :**

**படு** *விகுதி புணராத முதனிலை அடியாகத் தோன்றி, எழுவாய்க் கருத்தாவைக் கொண்டு வரும் வினை செய்வினை யாகும்.*

**(எ.டு) பரணன் பாடம் படித்தான்**

**செழுமை என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் :**

*செழுமை என்னும் உரிச்சொல் வளனும் கொழுப்புமாகிய இருவகைப் பண்புகளை உணர்த்தும் உரிச்சொல்லாகும்.*

**(எ.டு) வளம் – "செழும்பல் குன்றம்"**

**கொழுப்பு – "செழுந்தடி ஈன்ற செந்நாய்"**

**செறிவு என்னுங் குறிப்புணர்த்தும் உரிச் சொற்கள் :**

*உறப்பும் வெறுப்பும் ஆகிய இரண்டு உரிச்சொற்களும் செறிவென்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) "உறந்த விஞ்சி"**

**"வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்"**

**தெரிநிலை வினை:**

*கருத்தாவும், கருவியும், இடமும், தொழிலும், காலமும், செயப்படு பொருளும் ஆகிய அறுவகைப் பொருளையுந் தருவது தெரிநிலை வினையாம்.*

**(எ.டு) வனைந்தான்**

**தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு :**

*ஆண்பால் முதலிய ஐம்பால் வினைமுற்றுகளையும் படர்க்கையிடத்திலும், ஒருமை வினைமுற்றையும், பன்மை வினைமுற்றையுந் தன்மையிடத்திலும் முன்னிலையிடத்திலும் வைத்து மூன்று காலங்களிலும் பெருக்கிக் கணக்கிட, படர்க்கை வினைமுற்றுக்கள் பதினைந்து, தன்மை வினைமுற்றுக்கள், ஆறு, முன்னிலை வினைமுற்றுக்கள், ஆறு ஆக தெரிநிலை வினைமுற்றுப் பதம் இருபத்தேழாம்.*

**(எ.டு)**

1. **நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன. இவை இறந்த காலப் படர்க்கை வினைமுற்று.**

   **நடக்கின்றான், நடக்கின்றாள், நடக்கின்றார்கள், நடக்கின்றது, நடக்கின்றன. இவை நிகழ்காலப் படர்க்கை வினைமுற்று.**

   **நடப்பான், நடப்பாள், நடப்பார்கள், நடக்கும், நடப்பன. இவை எதிர்காலப் படர்க்கை வினைமுற்று.**

2. **நடந்தேன், நடந்தோம். இவை இறந்தகாலத் தன்மை வினைமுற்று.**

   **நடப்பேன், நடப்போம் இவை எதிர்காலத் தன்மை வினைமுற்று.**

   **நடக்கின்றேன், நடக்கின்றனம். இவை நிகழ்காலத் தன்மை வினைமுற்று.**

3. **நடந்தாய், நடந்தீர். இவை இறந்தகால முன்னிலை வினைமுற்று.**

   **நடப்பாய், நடப்பீர். இவை எதிர்கால முன்னிலை வினைமுற்று.**

   **நடக்கின்றாய், நடக்கின்றீர். இவை நிகழ்கால முன்னிலை வினைமுற்று.**

**தெரிநிலை வினைமுற்று விகுதிகள் :**

*அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், அ, ஆ, கு, டு, து, று, என், ஏன், அல், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், ஐ, ஆய், இ, இர், ஈர், க, இய, இயர், ஆல், ஏல், மின், உம் என்னும் முப்பத்தெட்டும் தெரிநிலை வினைமுற்று விகுதிகளாகும்.*

**(எ.டு)**

**நடந்தனன், நடந்தான், நடந்தாள், நடந்தனள், நடந்தனர்**

**நடந்தார், நடப்ப, நடமார், நடந்தன, நடவா**

**உண்கு, உண்டு, நடந்தது, கூயிற்று, நடந்தனென்**

**நடந்தேன், நடப்பல், நடப்பம், நடப்பாம், நடப்பெம்**

**நடப்பேம், நடப்போம், உண்கும், உண்டும், வருதும்**

**சேறும், நடந்தனை, நடந்தாய், நடத்தி, நடந்தனிர்**

**நடந்தீர், வாழ்க, வாழிய, வாழியர், மறால்**

**அழேல், நடமின், உண்ணும்**

**தெரிநிலைவினையின் பிரிவு :**

*தெரிநிலை வினைச் சொற்கள் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை என வெவ்வேறு வகையிற் பிரிவு பட்டு நிற்கும்.*

**தெரிநிலை வினையின் பகுதிகள் :**

*நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அஃகு என்ற இருபத்துமூன்று ஈற்றையுடைய சொற்களெல்லாம் செயவென்னும் வாய்பாட்டு ஒருமை யேவலும் மற்றைத் தெரிநிலை வினைகளின் பகாப்பதமாகிய பகுதியும் ஆம்.*

**தெரிநிலை வினைப் பெயரெச்ச விகுதிகள் :**

*அ, உம் என்னும் இரண்டும் தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள்.*

**(எ.டு) செய்த, செய்கின்ற, செய்யும்.**

**தெரிநிலை வினைப் பெயரெச்சத்தின் வகை :**

*செய்த வென்னும் வாய்பாட்டிறந்த காலப் பெயரெச்சம் எனவும், செய்கின்ற வென்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சம் எனவும், செய்யு மென்னும் வாய்பாட்டெதிர்காலப் பெயரெச்சம் எனவும் மூவகைப்படும்.*

**தெரிநிலை வினையெச்ச விகுதிகள் :**

*உ, இ, ய், பு, ஆ, ஊ, என, அ, ன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உம், மல், மை, மே என்னும் இருபத்தெட்டும் தெரிநிலை வினை வினையெச்ச விகுதிகளாகும். இவற்றுள் இறுதியிற் கூறிய மல், மை, மே என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.*

**(எ.டு) நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணா, உண்ணூ, உண்டென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டானாயின், உண்டானேனும், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும், உண்ணாமல், உண்ணாமை, உண்ணாமே.**

**தெரிநிலை வினையெச்சங்களின் வகை :**

*செய்பு என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம் எனவும், செயவென்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கும் உரிய வினையெச்சம் எனவும், செயின் என்னும் வாய்பாட் டெதிர்கால வியையெச்சம் எனவும் தெரிநிலை வினையெச்சங்கள் மூவகைப்படும்.*

**'தெவு' என்னும் உரிச் சொல் உணர்த்துங் குறிப்பு :**

*தெவு என்னும் உரிச்சொல் கொள்ளுதல் என்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'நீர் தெவு நிரைத் தொழுவார்'**

**'தெவ்வு' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*தெவ்வு என்னும் உரிச்சொல் பகைமை என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) 'தெவ்வுப் புலம்'.**

**தொகாநிலைத் தொடர்ப் பாகுபாடு :**

*எழுவாய்த் தொடர் விளித்தொடர், வேற்றுமைத் தொகா நிலைத் தொடர், வினைமுறறுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் எனத் தொகா நிலைத் தொடர் ஒன்பது வகைப்படும்.*

**(எ.டு) சாத்தன் வந்தான் – எழுவாய்த் தொடர்**

**சாத்தா வா – விளித் தொடர்**

**குடத்தை வனைந்தான்**
**வாளால் வெட்டினான்**
**இரப்போர்க்குத்தந்தான்**
**மலையினிழிந்தான்**
**சாத்தனது கை**
**மணியின் கணொளி**
— *வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்*

**உண்டான் சாத்தன்**
**குழையன் கொற்றன்**
— *வினைமுற்றுத்தொடர்*

**உண்ட சாத்தன்**
**கரிய சாத்தன்**
— *பெயரெச்சத் தொடர்*

**உண்டுவந்தான்**
**இன்றிவந்தான்**
— *வினையெச்சத் தொடர்*

**மற்றொன்று – இடைச்சொற்றொடர்**

**கடிக்கமலம் – உரிச் சொற்றொடர்**

**பாம்புபாம்பு – அடுக்குத்தொடர்.**

**தொகாநிலைத் தொடர் :**

*சொற்களுக்கிடையே வேற்றுமையுருபு முதலிய உருபுகள் கெடாமலும், ஒருசொற்றன்மைப் படாமலும் சொற்கள் பிளவுபடத் தொடர்வது தொகாநிலைத் தொடராகும்.*

**தொகை நிலைத் தொடர் மொழிகளிற் பொருள் சிறக்கும் இடங்கள் :**

*தொகை நிலைத் தொடர் மொழிகளுள்ளே வேற்றுமைத் தொகையிலும், பண்புத் தொகையிலும், முன் மொழியிலாயினும் பின் மொழியிலாயினும் பொருள் சிறந்து நிற்கும். வினைத் தொகையிலும், உவமைத் தொகையிலும் முன் மொழியிற் பொருள் சிறந்து நிற்கும். உம்மைத் தொகையில் அனைத்து மொழியிலும் பொருள் சிறந்து நிற்கும். அன்மொழித் தொகையில் இரு மொழியுமல்லாத புற மொழியிற் பொருள் சிறந்து நிற்கும்.*

**தொகை நிலைத் தொடர் :**

*வேற்றுமை யுருபு முதலிய உருபுகள் நடுவே மறைந்து நிற்க இரண்டு முதலிய சொற்கள் ஒரு தன்மைப் பட்டுத் தொடர்வது தொகை நிலைத் தொடராகும். இது வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என ஆறு வகைப்படும்.*

**(எ.டு) நிலங்கடந்தான் – இரண்டாம் வேற்றுமைத் தொகை**

**தலை வணங்கினான் – மூன்றாம் வேற்றுமைத் தொகை**

**கூலி வேலை செய்தான் – நான்காம் வேற்றுமைத் தொகை**

**மலைவீழருவி – ஐந்தாம் வேற்றுமைத் தொகை**

**சாத்தன் கை – ஆறாம் வேற்றுதைத் தொகை**

**காட்டில் மழை பெய்தது – ஏழாம் வேற்றுமைத் தொகை**

**ஊறுகாய் – வினைத்தொகை**

**சதுரப் பலகை – பண்புத் தொகை**

**பவள வாய் – உவமைத் தொகை**

**புற்பூண்டு – உம்மைத் தொகை**

**பூங்கொடி வந்தாள் – அன்மொழித் தொகை**

**தொடர் மொழி :**

*பகாச்சொல், பகுசொல் ஆகிய இவ்விரண்டு சொற்களும் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து நின்று ஒவ்வொரு*

*சொல்லுக்கும் ஒவ்வொரு பொருளாக இரண்டு முதலிய பல பொருள்களைத் தருவது தொடர் மொழியாகும்.*

*(எ.டு) நிலம் கடந்தன், சாலப்பகை*

**தொழிலாகு பெயர் :**

*தொழிலின் பெயர் அதனையுடைய பொருளுக்குப் பெயராக ஆகி வருவது தொழிலாகு பெயராகும்.*

**(எ.டு) வற்றல் உண்டான் – என்றதில் வற்றல் என்னும் தொழிற் பெயர் அத் தொழிலையுடைய ஓர் உணவுக்கு ஆயிற்று.**

**தொழிற் பெயர் விகுதிகள் :**

*தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுந் தொழிற் பெயர் விகுதிகளாம்.*

**(எ.டு) நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தோற்றரவு, வாரானை, நடவாமை, பாய்த்து.**

**நசையாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*நம்பும் மேவும் ஆகிய உரிச் சொற்கள் நசையாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) "நயந்து நாம்விட்ட நன்மொழி நம்பி"**

**"பேரிசை நவிரமே அறையுமே"**

**நடுக்கமாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*அதிர்வும், விதிர்வுமாகிய இரண்டும் நடுக்கமாகிய குறிப்பையுணர்த்தும் உரிச் சொற்களாகும்.*

**(எ.டு) "அதிர வருவதோர் நோய்"**

**"விதிர்ப்புற வறியா வேமக் காப்பினை"**

**'நளி' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் :**

*நளியென் கிளவி பெருமை என்னும் பண்பினையும், செறிவாகிய குறிப்பையும் உணர்த்தும்.*

**(எ.டு) "நளி மலை நாடன்"**

**"நளியிருள்"**

**நன்று என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*நன்று என்னும் உரிச்சொல் பெரிது என்னுங் குறிப் புணர்த்தும்.*

**(எ.டு) "நன்று மரிதுற்றனையாற் பெரும"**

**நான்காம் வேற்றுமை உருபேற்கும் பொருள்கள் :**

**'கு'** *வ்வுருபு, தன்னையேற்ற பெயர்ப் பொருளைக் கோடற் பொருளாகவும் பகைத் தொடர் பொருளாகவும், நட்புத் தொடர் பொருளாகவும், தகுதியுடைப் பொருளாகவும், முதற் காரண காரியப் பொருளாகவும், நிமித்த காரணகாரியப் பொருளாகவும், முறைக்கு இயை பொருளாகவும் வேறு படுத்தும். அவ்வாறு வேறுபட்ட கோடற் பொருண் முதலியன இவ்வுருபின் பொருள்களாம்.*

**(எ.டு) இரப்பவர்க்குப் பொன்கொடுத்தான் – கோடற் பொருள்**

**பாம்புக்குப் பகை கருடன் – பகைத் தொடர் பொருள்**

**சாத்தனுக்குத் தோழன் கொற்றன் – நட்புத் தொடர் பொருள்.**

**அரசர்க்கு இவ்வணி உரியது – தகுதியுடைப் பொருள்**

**குண்டலத்திற்குப் பொன் – முதற்காரண காரியப் பொருள்**

**பொன்னனுக்கு மகன் இவன் – முறைக்கு இயை பொருள்.**

**நான்காம் வேற்றுமையின் உருபு :**

*நான்காம் வேற்றுமையின் உருபு 'கு' ஒன்றேயாம். மேலும் குவ் வுருபு நிற்றற்குரிய சில விடங்களில் பொருட்டு, நிமித்தம் என்பதையும் குவ்வுருபின் மேல் ஆக வென்பதுஞ் சொல்லுருபுகளாக வரும்.*

**நிரனிறைப் பொருள் கோள் :**

*பெயரும் வினையுமாகிய சொற்களையும் அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறு வேறாக வரிசைப்பட நிறுத்தி, முறையாகவேனும் எதிராகவேனும் இதற்கு இது பயனிலை என்று தோன்றும்படி கூறும் பொருள்கோள் நிரனிறைப் பொருள் கோளாகும்.*

(எ.டு) "மாசு போகவும் காய்பசி நீங்கவும்
கலிபுனல் மூழ்கி அடிசில் கைதொட்டு"

இப்பாடலில்

மாசு போக – கலிபுனல் மூழ்குதலும்
காய்பசி நீங்க – அடிசில் கை தொடுதலும்
நிரல் நிரையாக வந்துள்ளதை அறியலாம்

**நிறமென்னும் பண்பையுணர்த்தும் உரிச் சொற்கள் :**

*குருவும் கெழுவுமாகிய இரண்டு உரிச் சொற்களும் நிறமென்னும் பண்பையுணர்த்தும்.*

(எ.டு) "குரு மணித்தாலி"
"செங்கேழ் மென்கொடி"

**நீட்டலளவையாகு பெயர் :**

*நீட்டியளக்கின்ற முழம், சாண், கல், ஓசனை, காதம் முதலிய பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது நீட்டலளவை ஆகு பெயராகும்.*

**(எ.டு) காதம் நடந்தான் – என்றதில் காதம் என்னும் நீட்டலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட தொலைவிற்கு ஆயிற்று.**

**நீர்வாழ் உயிரிகளுக்கு வழங்கும் ஆண்பாற் பெயர்கள் :**

*கடல் வாழ் சுறாவின் ஆணினை ஏற்றை என வழங்குவர். நீருள் வாழும் முதலை முதலிய நீர் வாழ் உயிரிகளின் ஆண் பாற் பெயர் போத்து என்பதாகும்.*

**நுணுக்கம் என்னுங் குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய் என்னும் உரிச்சொற்கள் நுணுக்கம் என்னுங் குறிப்பை உணர்த்தும்.*

(எ.டு) "வேனிலுழந்த வறிதுயங் கோய் களிறு"
"பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை"
"நிழத்த யானை மேய்புலம் படர"
"கயலற லெதிரக் கடும்புனல் சாஅய்"

**நுண்மை என்னும் பண்புணர்த்தும் உரிச் சொற்கள் :**

*நொசிவு, நுழைவு, நுணங்கு என்னும் மூன்று உரிச் சொற்களும் நுண்மை என்னும் பண்பையுணர்த்தும்.*

**(எ.டு) "நொசி மருங்குல்"**

**"நுழை நூற் கலிங்கம்"**

**"நுணங்கு துகினுடக்கம் போல"**

**நெடுமையும் நேர்மையுமாகிய பண்புகளையுணர்த்தும் உரிச் சொற்கள் :**

*வார்தல், போகல், ஒழுகல் ஆகிய மூன்றும் நேர்மையும் நெடுமையுமாகிய பண்புகளையுணர்த்தும் உரிச் சொற்களாகும்.*

**(எ.டு) "வார்ந்திலங்கும் வை யெயிற்று"**

**"வார்கையிற் றெழுகை"**

**"போகு கொடி மருங்குல்"**

**"வெள்வேல் விடத்தேரொடு காருடை போகி"**

**"ஒழுகு கொடி மருங்குல்"**

**"மால்வரை ஒழுகிய வாழை"**

**'நோய்' என்னும் குறிப்புணர்த்தும் உரிச் சொற்கள் :**

*பையுளும், சிறுமையுமாகிய இரண்டு உரிச்சொற்களும் நோயாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) "பையுண் மாலை"**

**"சிறுமை யுறுப செய்பறியலரே"**

**'பசப்பு' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*பசப்பு என்னும் உரிச் சொல் நிற வேறுபாடாகிய பண்பையுணர்த்தும்.*

**(எ.டு) "மையில் வாண்முகம் பசப்பூரும்மே"**

**படர்க்கைப் பெயர்கள் :**

*அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை, அவைகள், தாம், தான், எல்லாம் என்பன படர்க்கைப் பெயர்களாம்.*

**படர் என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*படர் என்னும் உரிச்சொல் உள்ளுதலும் செலவுமாகிய குறிப்புகளையுணர்த்தும்.*

**(எ.டு) "வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி"**

**"கறவை கன்று வயிற்படர"**

**பண்பின் இலக்கணம் :**

*உயிருடையதும் உயிருடையதல்லாததும் ஆகிய இருவகையுள் அடங்குகின்ற பொருள்களினுடைய குணங்கள் பண்புகளாகும்.*

**பண்புப் பகுதிகள் :**

*செம்மை, சிறுமை, சேய்மை, தீமை, வெம்மை, பொதுமை, மென்மை, மேன்மை, திண்மை, உண்மை, நுண்மை ஆகியனவும் இவற்றிற்கு எதிரான வெண்மை, கருமை முதலியனவும் இவை போல்வன பிறவும் பண்புப் பொருளினின்றும் வேறுபொருள் பகுக்கப்படாத நிலையுடைய பதங்களாம்.*

**பண்புப் பெயர் விகுதிகள் :**

*மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்பன பண்புப் பெயர் விகுதிகளாகும்.*

**(எ.டு) நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நான்கு, நன்றி, நன்று, நலம், நன்னர்**

**பண்புத் தொகை :**

***ஆகிய*** *என்னும் பண்புருபு மறைந்து நிற்கப் பண்புப் பெயரோடு பண்பில் பெயர் தொடர்வது பண்புத் தொகையாம். அது வண்ணம், வடிவு, அளவு, சுவை என நான்கு வகைப்படும்.*

**(எ.டு) செந்தாமரை – வண்ணப் பண்புத் தொகை**

**வட்டக் கல் – வடிவுப் பண்புத் தொகை**

**முக்கோணம் – அளவுப் பண்புத் தொகை**

**இன்சொல் – சுவைப் பண்புத் தொகை**

**பணை என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் :**

*பணை என்னும் உரிச்சொல் பிழை, பெருப்பு (பருத்தல்) ஆகிய குறிப்புகளையுணர்த்தும்.*

**(எ.டு) "பணைத்து வீழ் பகழி"**

**"வேய்மருள் பணைத்தோள்"**

**'பயப்பு' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*பயப்பு என்னும் உரிச்சொல் பயன் என்னும் பண்பையுணர்த்தும்.*

**(எ.டு) "பயவாக் களரனையர் கல்லாதவர்"**

**பரத்தலாகிய குறிப்புணர்த்தும் உரிச் சொற்கள் :**

*ஞெமிர்தலும் பாய்தலுமாகிய இரண்டு உரிச்சொற்களும் பரத்தல் என்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) "கருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்துப் பாய்புனல்"**

**பலவின் பாற் படர்க்கை வினைமுற்று :**

*அ ஆ என்கின்ற விகுதிகளை இறுதியிலுடைய மொழிகள் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைத் தெரிநிலை வினை முற்றுங் குறிப்பு வினைமுற்றும் ஆம். இவற்றுள் 'ஆ' என்கின்ற விகுதி எதிர்மறையில் மட்டுமே வரும். உடன்பாட்டில் வாரா.*

*(எ.டு)*

| இறப்பு | எதிர்வு | நிகழ்வு | குறிப்பு |
|---|---|---|---|
| நடந்தன | நடக்கின்றன | நடப்பன | குழையன |

**நடவா (ஆகார விகுதி எதிர்மறையில் வந்தது)**

**பலர்பாற் படர்க்கை வினைமுற்று :**

*அர், ஆர், ப, மார் என்கின்ற நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய மொழிகள் உயர்திணைப் பலர் பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினை முற்றும் ஆம். இவற்றுள் மாரீற்று வினைமுற்றுப் பொதுவிதியால் பெயருடன் முடிவதன்றி வினையுடனும் முடியும்.*

**(எ.டு)**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| நடந்தனர் | நடக்கின்றனர் | நடப்பர் | குழையர் |
| நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் | குழையார் |

நடப்ப

எய்துப மொழிப

**கொண்மார் – என மார் விகுதி வினையுடன் முடிந்தது.**

**பழுது என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*பழுது என்னும் உரிச்சொல் பயனின்மையாகிய குறிப்பையுணர்த்தும்.*

**(எ.டு) "பழுது கழி வாழ்நாள்"**

**பால்வழுவமைதி :**

*மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு என்னும் இவைகளுள் ஒரு காரணத்தினால் ஒருபாற் பொருள் வேறு பாற் பொருளாகவுஞ் சொல்லப்படும்.*

**(எ.டு)**

1. **தன் புதல்வனை 'என் அம்மை வந்தாள்' என்பது உவப்பினால் ஆண்பால் பெண் பாலாயிற்று.**
2. **ஒருவனை 'அவர் வந்தார்' என்பது உயர்த்திச் சொல்லுதலால் ஒருமைப் பால் பன்மைப் பெயராயிற்று.**
3. **"மகிழ்வார்க்கும் அல்லார்க்கும் தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரன்" என்பது சிறப்பினால் ஆண்பால் பெண் பாலாயிற்று.**
4. **"எனைத் துணைய ராயினும் என்னாம் தினைத் துணையுந் தேரான் பிறனில் புகல்" என்பது கோபத்தினால் பன்மைப் பால் ஒருமைப் பாலாயிற்று.**
5. **பெண்வழிச் செல்பவனை (இவன் பெண் என்பது) இழிவினால் ஆண் பால் பெண் பாலாயிற்று.**

**பிண்டத்திற்கு இலக்கணம் :**

*சூத்திரம் பலவற்றைப் பெற்று ஓத்தும் படலமும் இன்றி வரினும், ஓத்துப் பலவுண்டாகிப் படலமின்றி வரினும், படலம் பலவாகி வரினும், அதற்குப் பிண்டம் என்று பெயர் (பிண்டம் = பிடித்து வைக்கப்பட்ட திரளை).*

**(எ.டு) சூத்திரத்தாற் பிண்டமாயது – இறையனார் களவியல்**

**ஓத்தினாற் பிண்டமாயது – பன்னிருபடம்**

**அதிகாரத்தால் பிண்டமாயது – பொருளதிகாரம்**

**பிறிதின் கிழமைப் பொருள் :**

*தன்னின் வேறாய பொருள் பிறிதின் கிழமைப் பொருளாகும். அது பொருள், இடம், காலம் என மூவகைப்படும்.*

**(எ.டு) முருகனது வேல் – பொருட்பிறிதின் கிழமை**

**முருகனது மாலை – இடப் பிறிதின் கிழமை**

**மாரனது வேல் – காலப் பிறிதின் கிழமை**

**பிறவினை :**

*பிறவினையாவது தன்னெழுவாய்க் கருத்தா வல்லாத பிற கருத்தாவின் தொழிலை உணர்த்தி நிற்கும் முதனிலை அடியாகத் தோன்றும் வினையாகும். இப்பிறவினை ஏவுதற் கருத்தாவின் வினையெனப்படும்.*

**(எ.டு) அழகன் நடப்பித்தான்**

**பிறவினை யீறுகள் :**

*வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டும் பிறவினை யீறுகளாகும்.*

**(எ.டு) செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, துயிற்று.**

**புலம்பு என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

***புலம்பு** என்னும் உரிச்சொல் தனிமை என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) "புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி"**

**புல்லின் உறுப்புகள் :**

*தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை, காய், பழம், செதிள், தோல், விழுது என்பன புற்களின் உறுப்பு களாகும்.*

**'புரை' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*புரை என்னும் உரிச்சொல் உயர்பு என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) "புரையமன்ற புரையோர் கேண்மை"**

**புறந்தருதல் என்னுங் குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*பிணையும் பேணும் என்ற உரிச்சொற்கள் புறந்தருதல் என்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) "அரும்பிணை யகற்றி வேட்ட ஞாட்பினும்"**

**"அமரர்ப் பேணியும் ஆகுதி யருத்தியும்"**

**புனிறென் கிளவியுணர்த்துங் குறிப்பு :**

*புனிறென் கிளவி ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) "புனிற்றாப் பாய்ந் தெனக் கலங்கி"**

**பூட்டுவிற் பொருள் கோள் :**

*செய்யுள் முதலிலும் இறுதியிலும் நிற்குஞ் சொற்கள் தம்முள் பொருள் நோக்குடன் அமைதல் 'பூட்டுவிற் பொருள் கோள்' எனப்படும்.*

**(எ.டு) "திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்**
**இறந்துபடின் பெரிதாம் ஏதம் – உறந்தையர் கோன்**
**தண்ணாரமார்பன் தமிழர் பெருமானைக்**
**கண்ணாரக் காணக் கதவு" இதில் திறந்திடுமின் கதவு என நோக்கிற்று.**

**பெண் பாலை உணர்த்தும் இளமைப் பெயர்கள் :**

***பேடை, பெடை, பெட்டை, பெண், மூடு, நாகு, பிணவு, பிடி, கடமை, அளகு, மந்தி, பாட்டி, பிணவு*** *என்ற பதின் மூன்றும் பெண்பாலை உணர்த்தும் இளமைப் பெயர்களாகும்.*

**பெயர் விகுதிகள் :**

*அன், ஆன், மன், மான், ன், அள், ஆள், இ, ள், அர், ஆர், மார், கள், ர், து, அ, வை, வ், தை, கை, பி, முன், அல் என்னும் இருபத்து மூன்றும் பெயர் விகுதிகளாகும்.*

**(எ.டு) குழையன், வானத்தான், வடமன், கோமான், பிறன், குழையள், வானத்தாள், அரசி, பிறள், குழையர், வானத்தார், தேவிமார், கோக்கள், பிறர், அது, குறுந்தாளன், அவை, அவ், எந்தை, எங்கை, எம்பி, எம்முன், தோன்றல்**

**பெயரெச்சம் :**

*பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைச் சொல்லாய்ப் பெயரைக் கொண்டு முடியும் வினை பெயரெச்சமாகும்.*

**(எ.டு) வந்த வளவன்**

**பெயரெச்சங் கொள்ளும் பெயர்கள் :**

*வினை முதற் பெயர் கருவிப் பெயர், இடப் பெயர், தொழிற் பெயர், காலப் பெயர், செயப்படு பொருட் பெயர் என்னும் அறுவகைப் பெயர்களும் பெயரெச்சங் கொள்ளும் பெயர்களாகும்.*

**(எ.டு) உண்ட வளவன் – வினைமுதற் பெயர்**

**உண்ட கலம் – கருவிப் பெயர்**

**உண்ட இல்லம் – இடப் பெயர்**

**உண்ட ஊண் – தொழிற் பெயர்**

**உண்ட நாள் – காலப் பெயர்**

**உண்ட சோறு – செயப்படு பொருட் பெயர்**

**பெண்பாற் படர்க்கை வினைமுற்று :**

*அள், ஆள் என்கின்ற இரண்டு விகுதியையும் இறுதியிலுடைய மொழிகள் உயர்திணைப் பெண்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆம்.*

**(எ.டு)**

| **இறப்பு** | **எதிர்வு** | **நிகழ்வு** | **குறிப்பு** |
|---|---|---|---|
| நடந்தனள் | நடக்கின்றனள் | நடப்பள் | குழையள் |
| நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் | குழையாள் |

**பெயர் :**

*இடுகுறிப் பெயரும், காரணப் பெயரும் ஆகிய இரண்டும் பல பொருள்களுக்குப் பொதுப் பெயராகவும் ஒவ்வொரு*

*பொருளுக்கே சிறப்புப் பெயராகவும் வருவனவாம். (தமிழில் இடுகுறி என ஒன்றில்லை; ஆயினும் நன்னூலார் இடுகுறி குறித்தார்)*

**பொதுமொழி :**

*ஒரு மொழியாக நின்று ஒரு பொருளைத் தந்தும், அதுவே தொடர் மொழியாக நின்று பல பொருளைத் தந்தும் இவ்விரண்டுக்கும் பொது மொழியாக நிற்பதும் பொது மொழியாகும்.*

**(எ.டு) தாமரை – இது ஒரு மொழியாக நின்று ஒரு பொருளைத் தந்தது. அதுவே தா + மரை (தாவுகின்ற மான்) வேறு பொருளைத் தந்ததையும் காண்க.**

**பொருள் கோள்களின் வகை :**

*யாற்று நீர்ப் பொருள் கோள், மொழி மாற்றுப் பொருள் கோள், நிரனிறைப் பொருள் கோள், பூட்டுவிற் பொருள் கோள், தாப்பிசைப் பொருள் கோள், அளைமறி பாப்புப் பொருள் கோள், கொண்டு கூட்டுப் பொருள் கோள், அடிமறி மாற்றுப் பொருள் கோள் என பொருள் கோள் எட்டு வகைப்படும்.*

**பொருளாகு பெயர் :**

*முதற் பொருளின் பெயர் அதன் சினைப் பொருளுக்கு ஆவது பொருளாகு பெயராகும்.*

**(எ.டு) “தாமரை புரையுங் காமர் சேவடி” என்றதில் தாமரை என்ற தண்டின் பெயர் அதன் மலர்க்கு ஆயிற்று.**

**பொற்பு என்னும் உரிச் சொல் உணர்த்தும் பண்பு :**

***பொற்பு** என்னும் உரிச் சொல் பொலிவு என்னுங் குறிப்பையுணர்த்தும்.*

**(எ.டு) “பெருவரையடுக்கம் பொற்ப”**

**மக்கட்கு உரிய இளமைப் பெயர்கள் :**

*குழவி, மகவு என்னும் இரண்டு இளமைப் பெயர்களும் மக்கட்கு வழங்குவனவாம். பிள்ளை எனப் பெருக வழங்கும் பெயர் (ஆண்பிள்ளை, பெண்பிள்ளை) தொல்காப்பியர் மக்கட்கு உரியதாக வழங்கவில்லை. ஆனால் பிள்ளையாட்டு, பிள்ளை நிலை என்பவை மகப் பெயராவன. அவற்றைத் துறைப்படுத்துக் கூறுகிறார்.*

**மதவென்னும் உரிச் சொல் உணர்த்துங் குறிப்பு :**

*மதவென்னும் உரிச் சொல் மடனும், வலியும், மிகுதியும், வனப்புமாகிய குறிப்புகளையுணர்த்தும்.*

**(எ.டு) ‘பதவு மேய்ந்த மதவு நடை நல்லான்’**

**‘கயிறிடு கதச் சேப் போல மதமிக்கு’**

**‘மதவிடை’**

**‘மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே’**

**மந்திரம் :**

*நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமதாணையாற் சொல்லப்பட்ட மறைச் சொல்லே மந்திரமாகும்.*

**மரபு :**

*உலக வழக்கிலுஞ் செய்யுள் வழக்கிலும் எப்பொருட்டு எப்பெயர் வழங்கி வருமோ அப்பொருளை அச்சொல்லாற் கூறுவது மரபாகும்.*

**(எ.டு) யானை மேய்ப்பான் – பாகன்**

**ஆடு மேய்ப்பான் – இடையன்**

**ஆனையிலண்டம்**

**ஆட்டுப் புழுக்கை**

**குதிரைக் குட்டி**

**பசுக்கன்று**

**மரத்தின் உறுப்புகள் :**

*இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, காய், பழம், தோல், செதிள், விழுது என்பன மரத்தின் உறுப்புகளாகும்.*

**மரூஉ :**

*இது இயல்பு வழக்கு வகைகளுள் ஒன்று. தொன்று தொட்டு வருதலின்றி இடையில் எழுத்துக்கள் தோன்றியும், திரிந்தும், கெட்டும், இலக்கணம் சிதைந்து தானே மருவி வழங்குவது.*

**(எ.டு) அருமருந்தன்ன – அருமந்த**

**பாண்டியனாடு – பாண்டி நாடு**

**ஆயிற்று – ஆச்சு**

**தஞ்சாவூர் – தஞ்சை**

**'மல்லல்' என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*மல்லல் என்னும் உரிச்சொல் வளம் என்னும் பண்பையுணர்த்தும்.*

**(எ.டு) 'மல்லன் மால்வரை'**

**'மற்று' என்னும் இடைச் சொல் :**

*மற்று என்னும் இடைச் சொல் வினைமாற்றுப் பொருளையும் அசைத்து நிற்றற் பொருளையும் வேறென்னும் பொருளையுந் தரும்.*

**(எ.டு)**

1. **"மற்றறிவாம் நல்வினை யாமிளைய மென்னாது" இதில் நல்வினையை விரைந்தறிவாம் என்னும் வினையை மாற்றி இனிமேல் விரையாமல் அறிவாம் என்னும் வினையைத் தருவதால் – வினைமுற்று.**
2. **'மற்றென்னை ஆள்க' – இதில், வேறு பொருளின்றி நிற்றலால் அசை நிலை.**
3. **"ஊழிற் பெருவலி யாவுள மற் றொன்று, சூழினும்**

   **தான் முந்துறும்" – இதில் மற்றொன்று என்பது ஊழ்வினைக்கு மறுதலை யாவதோர் உபாயமெனப் பொருள் தருதலால் – பிறிது.**

**'மற்றைய' என்னும் இடைச் சொல் :**

***மற்றையது*** *எனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றை என்னும் இடைச்சொல், முன் சுட்டிய பொருளை ஒழித்து அதற்கு இனமான பொருளைக் குறிக்கும்.*

**(எ.டு) இரண்டு ஆடை உள்ளவிடத்து ஒன்றைக் கண்டு வேண்டாதவன் மற்றையது கொண்டு வா என்றால், அதற்கு இனமாகிய ஆடையையே குறித்து நிற்றலை அறிக.**

**'மறி' என்னும் இளமைப் பெயர் பெறுவன :**

*ஆடு, குதிரை, புள்ளி மான், உழை, புல்வாய் என்னும் ஐந்தும் மறி, குட்டி என்னும் இளமைப் பெயர்களைப் பெறும்.*

**மன்னிடைச் சொல் :**

*மன்னென்னு மிடைச் சொல் அசைத்து நிற்றற் பொருளிலும், ஒழிந்த சொற் பொருளிலும், ஆக்கப் பொருளிலும், கழிதற் பொருளிலும், மிகுதிப் பொருளிலும், நிலை பெறுதற் பொருளிலும் வரும்.*

**(எ.டு) "அது மற் கொண்கன்றேரே" – அசைநிலை**

**"கூரியதோர் வாண்மன்" – ஒழியிசை**

**"பண்டு காடுமன்" – ஆக்கம்**

**"சிறியகட் பெறினே யெமக்கீயுமன்னே" – கழிவு**

**"எந்தை யெமக்கருளுமன்" – மிகுதி**

**"மன்னாவுலகத்து மன்னியதுபுரிமோ" – நிலைபேறு**

**'மா' என்னும் இடைச் சொல் :**

*மா என்னும் சொல் வியங்கோளிடத்து வருகிற அசைச் சொல்லாகும்.*

**(எ.டு) 'விற்கை யுண்கமா கொற்கையோனே' – இதில் உண்க என்னும் வியங்கோளை அடுத்து அசையால் வந்தது.**

**'மாதர்' என்னும் உரிச் சொல் உணர்த்துங் குறிப்பு :**

*மாதர் என்னும் உரிச்சொல் காதல் என்னுங் குறிப்புணர்த்தும்.*

*(எ.டு) 'மாதர் நோக்கு'*

**மாலை என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*மாலை என்னும் உரிச்சொல் இயல்பாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'இரவரன் மாலையானே'**

**முகத்தலளவையாகு பெயர் :**

*முகந்து அளக்கின்ற நாழி, குறுணி, கலம் 'லிட்டர்' முதலிய முகுத்தலளவைப் பெயர்கள் அவ்வளவைக்குறிக்காமல், பொருளைக் குறிப்பது முகத்தலளவையாகு பெயர்.*

**(எ.டு) நாழி கொடு – என்றதில், நாழி என்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆயிற்று.**

**முதல் வேற்றுமை :**

*முதல் வேற்றுமையினது உருபாவது ஐ முதலிய உருபுகளை ஏற்றுத் திரிதலில்லாத பெயராகும். வினையையும், பெயரையும், வினாவையுங் கொள்ள வருதல் அவ்வுருபினது பொருள் நிலையாம்.*

**முதனிலைத் தொழிற்பெயர் :**

*தொழிற்பெயர் விகுதி குறைந்து முதனிலை மாத்திரம் நின்று தொழிற்பெயர்ப்பொருளைத் தருவது முதனிலைத் தொழிற்பெயராகும்.*

**(எ.டு) கெடுவான்**

**முதனிலை திரிந்த தொழிற்பெயர் :**

*தொழிப்பெயர் விகுதி குறைந்து முதனிலை திரிந்து நின்று தொழிற்பெயர்ப் பொருளைத்தருவது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.*

**(எ.டு) பேறு பெற்றான்**

**மும்மடியாகுபெயர் :**

*கார் என்னும் கருநிறத்தின் பெயர் அதனையுடைய முகிலை உணர்த்தும்போது ஆகுபெயர், அம்முகில் பெய்யுங்காலத்தை உணர்த்தும்போது இருமடியாகுபெயர்; அப்பருவத்தில் விளையும் நெற்பயிரை உணர்த்தும்போது மும்மடியாகுபெயர்.*

**மடிதல் = மீளவருதல்.**

**முரஞ்சு என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*முரஞ்சு என்னும் உரிச்சொல் முதிர் என்னுங் குறிப்பையுணர்த்தும்.*

**– முரஞ்சு முதிர்வாகும்.**

**முழுதும் என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*முழுதும் என்னும் உரிச்சொல் எஞ்சாமை என்னுங் குறிப்பையுணர்த்தும்.*

**(எ.டு) “மண்முழுதாண்ட”**

**முற்றுத்தொடர் மொழி :**

*எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருண் முதலியவை களோடு கூடியாயினும் கூடாதாயினும் முடிவுபெற்று நிற்பது முற்றுத்தொடர் மொழியாகும்.*

**'முனைவு' என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*முனைவு என்னும் உரிச்சொல் சினம் என்னுங் குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'சேற்று நிலைமுனைஇய செங்கட் காரான்'**

**முன்னிலை அசைச்சொற்கள் :**

*மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்னும் பத்தும் முன்னிலை மொழியைச் சார்ந்து வரும் அசை நிலையிடைச் சொற்களாகும்.*

**முன்னிலை ஏவற்பன்மை வினைமுற்று :**

*மின் விகுதியை இறுதியிலுடைய மொழிகள் முன்னிலை ஏவற்பன்மை வினைமுற்றாம். ஏவற்பன்மைக்கு ஈர், உம் விகுதிகளும் புதியன புகுதலால் வரும்.*

**(எ.டு) உண்மின், உண்ணீர், உண்ணும்.**

**முன்னிலைப் பெயர்கள் :**

*முன்னிலைப் பெயர்கள், நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர், என்பனவாம். இவற்றுள் நீ முன்னிலையொருமையைக் குறிக்கும். மற்றவை பன்மையைக் குறிக்கும். இம்முன்னிலைப் பெயர்கள் இருதிணை யாண்பால், பெண்பால்களுக்குப் பொதுவாகி வருவனவாம்.*

**(எ.டு) நீ நம்பி, நீ நங்கை, நீ பூதம் – முன்னிலையொருமை**

**நீர்மைந்தர், நீர்மகளிர், நீர் பூதங்கள் – முன்னிலைப்பன்மை**

**முன்னிலைப் பன்மை வினைமுற்று :**

*இர், ஈர் என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைச் சொற்கள், முன்னிலைப் பன்மைத் தெரிநிலைவினைமுற்றுங் குறிப்பு வினைமுற்றுமாம்.*

**(எ.டு)**

| இ.தெரி | நி.தெரி | எ.தெரி | குறிப்பு |
|---|---|---|---|
| உண்டனிர் | உண்கின்றனிர் | உண்டிடீர் | குழையினிர் |
| உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | குழையீர். |

**முன்னிலை வினை :**

*தன்மை படர்க்கை வினைகளுக்கு இனமாய், மூன்று காலத்திற்குந் தனித்தனி வருவதாய் ஏவற்பொருள் தோன்றாததாய் முன்னின்றானது தொழிலையுணர்த்தும் வினை முன்னிலை வினையாகும்.*

**(எ.டு) நடந்தாய், நடக்கின்றாய், நடப்பாய்.**

**முன்னிலை யொருமை வினை முற்று :**

*ஐ, ஆய், இ என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைச் சொற்களும், விகுதி பெறாமலும், பெற்றும் ஏவலில் வருகிற இருபத்து மூன்று ஈற்றுமொழிகளும், ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் மூன்றுக்கும் பொதுவாகிய முன்னிலை யொருமைத் தெரிநிலைவினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆம்.*

**(எ.டு)**

| இ.தெரி | நி.தெரி | எ.தெரி | குறிப்பு |
|---|---|---|---|
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையினை |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் |
| உண்டி | உண்ணாநின்றி | சேறி | வில்லி |

**முன்னம் :**

*இவ்விடத்து இம்மொழியை இவர்க்குச் சொல்லத் தகுமெனக் குறித்து அவ்விடத்து அவர்க்கு அம்மொழியை உரைப்பது முன்னமாகும்.*

**மூவகைப் பெயர்க்கும் பொதுவான விளியுருபு :**

*விளிக்கப் படுகின்ற உயர்திணைப் பெயர், பொதுப் பெயர், அஃறிணைப்பெயர் ஆகிய மூவகைப் பெயர்களிடத்தும் இயல்பாதலும் ஏகாரம் மிகுதலும், இகரம் ஈகாரமாகத் திரிதலும் பெறும் பாலும் விளியுருபுகளாக வரும்.*

**(எ.டு) மாந்தர் கூறீர் – இயல்பு**

**கோவே கூறாய் – ஏகாரம் மிகல்**

**தோழி கூறாய் – இகர நீட்சி**

**அன்னை கூறாய் – இயல்பு**

**பிதாவே கூறாய் – ஏகாரம் மிகல்**

**சாத்தீ கூறாய் – இகர நீட்சி**

**கிளி நல்லாய் – இயல்பு**

**புறாவே வாராய் – ஏகாரம் மிகல்**

**தும்பீ வா – இகர நீட்சி**

**மூவகை மொழிகள் :**

*தனிமொழி, தொடர்மொழி, பொது மொழி என மொழிகள் மூவகைப்படும்.*

**மூவிடைப்பெயர் :**

*பெயர்கள், இடவேற்றுமையினாலே தன்மைப் பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப் பெயர் என மூவகைப்படும்.*

**மூவிடம் :**

*தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூவகைப்படும். தன்னைக் குறிப்பது தன்மையாகும். முன்னால் இருப்பதைக் குறிப்பது முன்னிலையாகும். இவ்விரண்டையுங் குறியாது அயற்பொருளைக் குறிப்பது படர்க்கையாகும்.*

**(எ.டு) சென்றேன்**

**சென்றாய்**

**சென்றார்கள்**

**மூவறிவுயிர் :**

*உடம்பினாலும் நாவினாலும் அறியும் அறிவோடு நன்னாற்றம், தீ நாற்றம் ஆகியவற்றை மூக்கினால் அறியும் அறிவையும் பெற்றிருப்பவை மூவறிவுயிர்களாகும்.*

**(எ.டு) சிதல், எறும்பு அட்டை முதலியன.**

**மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் :**

*ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன மூன்றாம் வேற்றுமையின் உருபுகளாகும். ஆல், ஆன் உருபுகள் நிற்றற்குரியவிடத்துக் கொண்டென்பதும், ஒடு, ஓடு உருபுகள் நிற்றற்குரியவிடத்து உடனென்பதும் சொல்லுருபுகளாக வரும்.*

**மூன்றாம் வேற்றுமையின் பொருள் :**

*ஆல், ஆன் என்னும் இரண்டுருபுகளும், தம்மையேற்ற பெயர்ப்பொருளைக் கருவிப் பொருளாகவும், கருத்தாப் பொருளாகவும் வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட கருவிப் பொருளுங்கருத்தாப் பொருளும் இவ்வுருபுகளின் பொருள் களாகும். ஒடு, ஓடு என்னும் இரண்டுருபுகளும் தம்மையேற்ற பெயர்ப்பொருளை உடனிகழ்ச்சிப் பொருளாக வேறுபடுத்தும். அவ்வாறு வேறுபட்ட உடனிகழ்ச்சிப் பொருளே இவ்வுருபு களின் பொருளாகும்.*

**(எ.டு)** **வாளால் வெட்டினான்**<br>**வாளான் வெட்டினான்** } *கருவி*

**அரசனாலாகிய கோயில்**<br>**அரசனானாகிய கோயில்** } *கருத்தா*

**மைந்தனொடு தந்தை வந்தாத**<br>**மைந்தனோடு தந்தை வந்தான்** } *உடனிகழ்ச்சி*

**மொழிமாற்றுப் பொருள்கோள் :**

*செய்யுளில் கூறப்படும் பொருளுக்குப் பொருத்தமான மொழிகளை ஒரே அடிக்குள் முறை மாற்றி வழங்குதல் மொழி மாற்றுப் பொருள் கோள் எனப்படும்.*

**(எ.டு)** **'சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய**<br>**யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப**<br>**கானக நாடன் சுனை'**

**இச்செய்யுளில்**

**"அம்மி ஆழ சுரை மிதப்ப வரையனைய**<br>**யானைக்கு நிலை முயற்கு நீத்து என்ப**<br>**கானக நாடன் சுனை" என்று மொழி மாற்றிப்**<br>**பொருள் கொள்ள வேண்டும்.**

**யாணர் என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

***யாணர்*** *என்னும் சொல் (வாரி) புதிதாகப் படுதலாகிய குறிப்புணர்த்தும். யாணர் - புதுவருவாயினர்*

**(எ.டு) "மீ னொடு பெயரும் யாணரூர"**

**'யாணு' என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

***யாணு*** *என்னும் உரிச்சொல்* **கவின்** *என்னுங்குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'யாணது பசலை'**

**யாற்று நீர்ப் பொருள்கோள் :**

*திரும்பாமலே ஒரே முகமாக ஓடுகின்ற ஆற்று நீரின் ஓட்டம் போல, சொற்கள் முன்பின்னாக மாறாமல் நேராகவே பொருள் கொள்ளப்படுவது யாற்றுநீர்ப் பொருள் கோளாகும்.*

**(எ.டு) "சொல்லருஞ் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்**
**மெல்லவே கரு இருந்(து) ஈன்று மேல் அலார்**
**செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்**
**கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"**

*சொல்லை மாறிக்கூட்டல் இன்றி இயல்பான ஓட்டத்தில் பொருள் கொள்ளக் கிடப்பது.*

**வம்பு என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

***வம்பு*** *என்னும் உரிச்சொல் நிலையின்மை என்னுங் குறிப்பை யுணர்த்தும்.*

**(எ.டு) வம்புமாரி**

**வய என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*வயவென்னும் உரிச்சொல் வலிமை என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) 'துன்னருந்துப்பின் வயமான்'**

**வயாவென் கிளவியுணர்த்துங் குறிப்பு :**

***வயா*** *வென்னும் உரிச்சொல்* **வேட்கைப் பெருக்கம்** *என்னுங் குறிப்பையுணர்த்தும்.*

**(எ.டு) 'வயாவுறு மகளிர்'**

**வழுக்கள் :**

*இருதிணையும், ஐம்பாலும், மூவிடமும், முக்காலமும் வினாவும், விடையும், பல்வகை மரபுகளும் ஆகிய ஏழும் தம் தம் முறையில் தவறிவந்தால் வழுவாகும்.*

**(எ.டு)**

1. **அவன் வந்தது – திணைவழு**
2. **அவன் வந்தாள் – பால்வழு**
3. **யான் வந்தான் – இடவழு**
4. **நாளை வந்தான் – காலவழு**
5. **கறக்கிற எருமை பாலோசினையோ? – வினாவழு**
6. **பட்டுக்கோட்டைக்கு வழி எது என்றால் கொட்டைப்பாக்கு எட்டுப் பணம் என்பது – விடைவழு**
7. **யானை செலுத்துபவனை இடையனென்பது – மரபுவழு.**

**வழுவமைதி :**

*இலக்கணக் குற்றமுள்ளதாகக் காணப்பட்டாலும் முன்னோரால் ஏற்றுக் கொண்டு அமைக்கப்பட்டன வழுவமைதியாம்.*

**வறிது என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*வறிது என்னும் உரிச்சொல் சிறிது என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) 'வறிது வடக்கிறைஞ்சிய'**

**வறுமை என்னும் பண்பையுணர்த்தும் உரிச்சொற்கள் :**

*இலம்பாடும், ஒற்கமும், வறுமையாகிய குறிப்பை யுணர்த்தும் உரிச்சொற்களாகும்.*

**(எ.டு) 'இலம்படு புலவ ரேற்றகை நிறைய'**

**ஒக்க லொற்கஞ் சொலிய'**

**வாக்கியப் பொருளுணர்வுக்குக் காரணம் :**

*அவாய்நிலை, தகுதி, அண்மை, கருத்துணர்ச்சி ஆகிய நான்கும் வாக்கியத்தின் பொருளை உணர்தற்குக் காரணமாக அமைவனவாம்.*

**வாள் என்னும் உரிச்சொல் உணர்த்தும் பண்பு :**

*வாள் என்னும் உரிச்சொல் ஒளி என்னும் பண்பை யுணர்த்தும்.*

**(எ.டு) வாண்(ள்)முகம்**

**வாழ்த்துதலாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*பரவுதலும், பழிச்சுதலும், வாழ்த்துதலாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'நெல்உகுத்துப் பரவுங் கடவுளு மிலவே'**

**'கை தொழூஉப் பழிச்சி'**

**விடாதவாகு பெயர் :**

*கடுத்தின்றான், புளித்தின்றான் என்றவிடத்துக் கடுவும் புளியுஞ் சுவையாகிய தத்தம் பொருளைவிடாது நின்று தம் பொருளின் வேறல்லாத காய்கனி யென்னும் பொருளை உணர்த்தலால் விடாதவாகுபெயர்.*

**விடுதலாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*தீர்தலும், தீர்த்தலும் ஆகிய இரண்டு உரிச்சொற்களும் விடுதலாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்களாகும்.*

**(எ.டு) "துணையிற் றீர்ந்த கடுங்கண்யானை"**

**"நங்கையைச் செற்றந்தீர்த்துக் கொண்மீன்"**

**விடை :**

*வினாவிய பொருளை அறிவிப்பது விடையாகும். அது சுட்டு, எதிர்மறை, உடன்பாடு, ஏவல், வினாவெதிர் வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என எட்டுவகைப் படும். இவற்றுள் முன்னையது மூன்றும் செவ்வனிறை; பின்னைய ஐந்தும் இறைபயப்பன. இறை = விடை.*

**(எ.டு)**

| வினா | விடை |
|---|---|
| 1. தில்லிக்குவழியாது?........ | இது–சுட்டு |
| 2. இது செய்வாயா? .......... | செய்யேன்–எதிர்மறை |
| 3. இது செய்வாயா? .......... | செய்வேன்–உடன்பாடு |

**4. இது செய்வாயா? ..........நீ செய் – ஏவல்**

**5. இது செய்வாயா? ......... செய்யேனோ – வினாவெதிர் வினாதல்**

**6. இது செய்வாயா? ..........உடம்புநொந்தது – உற்றதுரைத்தல்**

**7. இது செய்வாயா? ..........உடம்புநோம் – உறுவது கூறல்.**

**8. இது செய்வாயா? .......... மற்றையது செய்வேன் – இனமொழி.**

**விட்டவாகு பெயர் :**

*அவ்வூர் வந்தது என்ற விடத்து ஊர் என்பது, இடமாகிய தன் பொருளை விட்டுத் தன்னிடத்திலுள்ள மனிதரை யுணர்த்தலால் விட்டவாகுபெயர்.*

**விதியில்லாவிகாரங்கள் :**

*விதியின்றி விகாரப்பட்டு வருவனவுஞ்சிலவுள. அவை, மருவி வழங்குதல், ஒத்து நடத்தல், தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலை மாறுதல் என எழுவகைப்படும். இவைகளுள், மருவி வழங்குத லொன்று மாத்திரம் தொடர் மொழியிலும், மற்றவை பெரும்பாலுந் தனி மொழியிலும் வரும்.*

**விளியடையாத பெயர்கள் :**

*நுவ்வுடன் எ, ஏ, யா என்னும் மூன்று முதல் வினாவையும் அ, இ, உ என்னும் மூன்று சுட்டையும் முதலாகப் பொருந்திய ன, ள, ர என்னும் மூன்று மெய்யீற்று உயர்திணை முப்பாற் பெயர்களும், வை, து என்கின்ற இரண்டு ஈற்று அஃறிணை யிரு பாற்பெயர்களும், தாம், தான் என்ற இரண்டு பொதுபபெயர்களும் இவைபோல்வன பிறவும் விளி யேலாப் பெயர்களாகும்.*

**(எ.டு) யான், யாம், நாம், நீ, நீர், எல்லீர் எனவும், நுமன் நுமள், நுமர் எனவும், எவன், எவள், எவர், எது, எவை, யாவன், யாவள், யாவர், யாது, யாவை, ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை எனவும் தான் எனவும் வருகின்ற இப்பெயர்கள் விளியேலாப் பெயர்களாகும்.**

**விளையாட்டாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*கெடவரலும், பண்ணையுமாகிய இரண்டு உரிச்சொற் களும் விளையாட்டாகிய குறிப்பை யுணர்த்தும்.*

**(எ.டு) "கெட வர லாய மொடு"**

**"பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்"**

**விளிக்கப் படு பெயர்கள் :**

*இ, உ, ஊ, ஐ, ஓ என்கின்ற உயிர்களும் ன, ள, ர, ல, ய என்கின்ற மெய்களும் ஆகிய பத்து எழுத்துக்களையும் இறுதியிலுடைய உயர்திணைப்பெயர்களும், அவற்றுள் ஓகார உயிரும், நகர மெய்யும் ஒழிநத மற்றை எட்டு எழுத்துக்களுடன் ணகர மெய்யும் ஆகாரவுயிரும் சேர்ந்த பத்து எழுத்துக்களையும் இறுதியாகவுடைய இருதிணைப் பொதுப்பெயர்களும், மொழிக்கு இறுதியில் வரும் இருபத்து நான்கு எழுத்துக்களுள் ஞகர நகரங்களும், ஈறாகாத எகரமும் ஒழிந்த இருபத்தோரெழுத்துக்களையும் இறுதியிலுடைய அஃறிணைப் பெயர்களும் விளிக்கப்படு பெயர்களாகும்.*

**வியங்கோள் வினைமுற்று :**

*க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகளை இறுதியிலுடைய வினைச்சொற்கள் வியங்கோள் வினைமுற்றுக் களாம். அது இருதிணை, ஐம்பால், மூவிடங்கட்கும் பொதுவாக வரும்.*

**(எ.டு)**

**வாழ்க, வாழிய, வாழியர்**

**உண்க, உண்ணிய, நிலீயர்**

**வியல் என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*வியல் என்னும் உரிச்சொல் அகலமாகிய குறிப்புணர்த்தும்.*

**(எ.டு) 'வியனுலகம்'**

**விருத்தியுரையின் இலக்கணம் :**

*சூத்திரத்திலுள்ள பொருளல்லாமலும், அவ்விடங்களுக்கு இல்லாமல் நிறையாத பொருள்களெல்லாம் விளங்குமாறு தானுரைக்கு முரையானும் ஆசிரிய வசனங்களாலும் காண்டிகையுரைக்குக் கூறப்பட்ட ஐந்து உறுப்புக்களாலும் ஐயந்தீரச் சுருங்காது உண்மைப் பொருளை விரித்துரைப்பது விருத்தியுரையாகும்.*

**விரைவுக் குறிப்புத்தரும் இடைச் சொற்கள் :**

பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞெரேலென, சரேலென என்றாற்போல்வன விரைவுக் குறிப்புப் பொருளைத்தரும் இடைச்சொற்களாகும்.

**விரைவுக் குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

கதழ்வும், துனைவும் ஆகிய இரண்டு உரிச்சொற்களும் விரைவாகிய குறிப்பை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

**(எ.டு) 'கதழ்பரிநெடுந்தேர்'**

**'துனைபரி நிவக்கும் புள்ளிமான்'**

**விலங்குகளுக்கு வழங்கும் ஆண்பாற் பெயர்கள் :**

களிறு, ஒருத்தல் ஏறு என்பன வேழத்துள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும் ஒருத்தல். ஏறு என்பன பன்றியுள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். ஒருத்தல், ஏறு, ஏற்றை, போத்து இரலை, கலை என்பன புல்வாயுள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். ஒருத்தல், போத்து, ஏற்றை என்பன புலியுள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். ஒருத்தல், ஏறு, கலை, ஏற்றை என்பன உழையுள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். ஒருத்தல், ஏறு, ஏற்றை என்பன மரையுள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். ஒருத்தல், ஏறு, ஏற்றை என்பன கவரியுள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். ஒருத்தல், ஏறு, ஏற்றை என்பன கராத்துள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். ஒருத்தல் போத்து, ஏற்றை, கண்டி என்பன எருமையுள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். சுறவில் ஆண் ஏற்றை எனப்படும். போத்து, ஏறு, ஏற்றை என்பன பெற்றத்துள் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர்களாகும். முசுவில் ஆண் கலை எனப்படும். குரங்கும், ஊகமும் இவ்வாறே கொள்ளப்படும். கடுவன் எனவும் வரும். மோத்தை, தகர், உதள், அப்பர் என்பன ஆட்டின் ஆண்பாலுக்கு வழங்கும் பெயர் களாகும்.

**விலங்குகளுக்கு வழங்கும் பெண்பாற் பெயர்கள் :**

யானையுள் பெண்ணினைப் பிடி என வழங்குவர். குதிரை, ஒட்டகம், மரை, கழுதை ஆகிய விலங்குகளின் பெண்பாற் பெயர் பெட்டை என்பதாகும். பெட்டை, பெடை, பேடை என்பன பறவைகளின் பெண்பாற்பெயர்களாகும். கோழி, கூகை, மயில்

*ஆகியவற்றின் பெண்பாற் பெயர் அளகு என்பதாகும். பிணை, பிணா, பிணவு, பிணவல் ஆகிய நான்கும் புல்வாய் என்பவற்றின் பெண்பாற்பெயர்களாகும். நவ்வி என்பதன் பெண்பாற்பெயர் பிணை என்பதாகும். உழை, கவரி ஆகியவற்றின் பெண்பாற் பெயர் பிணை என்பதாகும். பாட்டி, பிணவு, பிணவல் என்பன பன்றியின் பெண்பாற் பெயர்களாகும். பிணவு, பிணவல், பாட்டி என்பன நாயின் பெண்பாற் பெயராகும். நரியின் பெண்பாற்பெயர் பாட்டி என்பதாகும். குரங்கு, முசு, ஊகம் ஆகியவற்றின் பெண்பாற் பெயர் மந்தி என்பதாகும். மூடு, கடமை என்பன ஆட்டின் பெண்பாற் பெயர்களாகும்.*

**விழுமம் என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

*விழுமம் என்னும் உரிச்சொல், சீர்மை, சிறப்பு, இடும்பை ஆகிய குறிப்புகளையுணர்த்தும்.*

**(எ.டு) "விழுமியோர் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு"**

**"வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து"**

**"நின்னுறு விழுமங்களைந்தோன்"**

**விறப்பு என்னும் உரிச்சொல் உணர்த்துங்குறிப்பு :**

*விறப்பு என்னும் உரிச்சொல் செறிவு, வெறுவுதல் ஆகிய குறிப்புகளை யுணர்த்தும்.*

**(எ.டு) "விறந்த காப்போடுண்ணின்று வலியுறுத்தும்"**

**"அவ லெறி யுலக்கைப் பாடு விறந்தயல"**

**வினா :**

*அறியக் கருதியதை வெளிப் படுத்துவது வினாவாகும். அது அறியாமை, ஐயம், அறிவு, கொளல், கொடை, ஏவல் என ஆறு வகைப்படும்.*

**(எ.டு)**

**ஆசிரியன் 'இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது?' என்பது – அறி வினா.**

**மாணாக்கன் 'இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது?' என்பது – அறியாமை வினா.**

**குற்றியோ? மகனோ? என்பது – ஐய வினா.**

**தம்பிக்கு ஆடையில்லையா? – கொடை வினா.**

**ஐயா! இரண்டு எழுதுகோல் வைத்துள்ளீரா? – கொளல்வினா**

**தம்பீ! உண்டாயா? – என்பது – ஏவல் வினா.**

**வினைக்குறிப்பின் வகை :**

*ஆக்க வினைக்குறிப்பு, இயற்கை வினைக்குறிப்பு என வினைக்குறிப்புச் சொற்கள் இருவகைப்படும்.*

**வினைச்சொற்களின் பகுப்பு :**

*வினைச்சொற்கள் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்று வகைப்படும்.*

**வினைத்தொகை :**

*பெயரெச்சத்தின் விகுதியுங் காலங்காட்டும் இடை நிலையுங் கெட்டு நிற்க, அதன் முதனிலையோடு பெயர்ச் சொற் றொடராவது வினைத்தொகையாகும்.*

**(எ.டு) தோய் தயிர்.**

**வினைமுதலல்லனவற்றை வினைமுதல் போலச் சொல்லல் :**

*செயப்படு பொருளையும், கருவியையும், இடத்தையும், செயலையும், காலத்தையும் வினைமுதல் போல வைத்து, அவ்வினைமுதல் வினையை அவைகளுக்கு ஏற்றிச் சொல்லுதலும் உண்டு.*

**(எ.டு) இவ்வீடு யான் கொண்டது – செயப்படு பொருள்**

**இவ்வெழுதுகோல் யான் எழுதியது – கருவி**

**இச்சிறையானிருந்தது – இடம்**

**இத்தொழில் யான் செய்தது – செயல்**

**இந்நாள் யான் பிறந்தது – காலம்.**

**வினைமுற்று :**

*பலவகை வினைகளுக்கும் பொதுவாகிய செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறையும் தோன்றச் செய்து, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப்பெயரல்லாத மற்றொன்றையும் பெறாது வருவன தெரிநிலையும் குறிப்புமாகிய வினைமுற்றுக்களாம்.*

**வினையாலணையும் பெயர் விகாரப்படுதல் :**

*வினையாலணையும் பெயர்கள் சிறுபான்மை இயல்பாகியும், பெரும்பாலும் விகாரப்பட்டும் வரும்.*

**(எ.டு) நடந்தானை எனவும் நடந்தோன் எனவும் நடந்தன எனவும் நடந்தவை எனவும் வரும்.**

**வினையுடனுமுடியுந்தன்மை வினைமுற்றுக்கள் :**

*செய்கென்னுந் தன்மை யொருமை முற்றும், செய்குமென்னுந் தன்மைப்பன்மை முற்றும் பெயருடனே யன்றி வினையொடு முடிந்தாலும் வினைமுற்றேயாம்.*

**(எ.டு) உண்டு வந்தேன்**

**உண்கும் வந்தேம்.**

**வினையெச்சம் :**

*தொழிலும், காலமும் விளங்கி பாலும் வினையும் குறைந்து நிற்பன தெரிநிலை வினையெச்சமுங் குறிப்பு வினையெச்சமுமாம்.*

**வினையெச்சங்கொள்ளும் வினைச்சொற்கள் :**

*உடன்பாடும் எதிர்மறையும் பற்றிவருந் தெரிநிலையுங் குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், வினையாலணையும் பெயரும், தொழிற் பெயரும் ஆகிய ஐவகை வினைச்சொற்களும் வினையெச்சங் கொள்ளும் வினைச் சொற்களாகும்.*

**வினையெச்ச வாய்பாடுகள் :**

*செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்பவை இறந்தகாலத்தையும், செய என்பது நிகழ்காலத்தையும், செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்பவை யாறும் எதிர் காலத்தையும் காட்டும் வினையெச்ச வாய்பாடுகளாகும்.*

**(எ.டு)**

| **இறப்பு** | **நிகழ்வு** | **எதிர்வு** |
|---|---|---|
| நடந்து வந்தாள் | நடக்க வல்லன் | வரின் கொள்ளும் |
| உண்குபுபோனான் | | ஆடிய தந்தான் |
| பெய்யாக் கொடுக்கும் | | உண்ணியர் வருவான் |

காணூா மகிழ்ந்தான் கொல்வான் சென்றது

உண்டெனப் போனான் தின்பான்புகுந்தது செய்பாக்கு வந்தான்

**வேற்றுமைத் தொகை :**

*ஐ முதலிய வேற்றுமை யுருபு இடையிலே கெட்டு நிற்கப் பெயரோடு பெயரும், பெயரோடு வினை, வினைக் குறிப்புப் பெயர்களுந் தொடர்வது வேற்றுமைத் தொகையாகும்.*

**(எ.டு)**

**நிலம் கடந்தான் (ஐ) இரண்டாம் வேற்றுமைத்தொகை**

**தலைவணங்கினான் (ஆல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை**

**சாத்தன் மைந்தன் (கு) நான்காம் வேற்றுமைத்தொகை**

**ஊர்நீங்கினான் (இன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை**

**சாத்தன் கை (அது) ஆறாம் வேற்றுமைத்தொகை**

**குன்றக்கூகை (கண்) ஏழாம் வேற்றுமைத்தொகை.**

**வேற்றுமைப் புணர்ச்சி :**

*ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுருபுகளும் இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரச் சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சியாகும்.*

(எ.டு)

வேற்றுமைத் தொகை – உருபு – வேற்றுமை விரி.

மரம் வெட்டினான் – ஐ – மரத்தை வெட்டினான்.

கல் எறிந்தான் – ஆல் – கல்லால் எறிந்தான்

கொற்றன் மகன் – கு – கொற்றனுக்கு மகன்

மலை வீழருவி – இன் – மலையின் வீழருவி

சாத்தன் கை – அது – சாத்தனது கை

மலைநெல் – கண் – மலையின்கணெல்.

**வேற்றுமை யுருபின் முன் வல்லினம் புணர்தல் :**

*ஒடு, ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை யுருபுகளின் முன்னும் அது, ஆது, அ என்னும் ஆறாம் வேற்றுமை யுருபுகளின் முன்னும் வரும் வல்லினம் மிகா.*

**(எ.டு) மகனொடு போனான், சாத்தனோடு வந்தான்**

**தனது கை, தனாதுகை, தன கைகள்.**

**வேற்றுநிலை மெய்ம் மயக்கம் :**

*பதினெட்டு மெய்களிற் க, ச, த, ப என்னும் நான்கையும் நீக்கிய மற்றைப் பதினான்கு மெய்களும் பிறமெய்களோடு கூடும் கூட்டம் வேற்று நிலை மெய்ம் மயக்கமாகும். மெய்யெழுத்தை அடுத்து நிற்கும் மெய் மெய்மயக்கமாகும்.*

**வேற்றுமை :**

*தன்னை ஏற்றுக்கொள்ளுதற்குரிய எல்லாவகைப்பட்ட பெயர்கட்கும் இறுதியில் வந்து அப்பெயர்களின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. அவ்வேற்றுமை, முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டுவகைப்படும்.*

**(எ.டு) வளவன் அடித்தான்**

**வளவனை அடித்தான்**

**வெகுளியாகிய குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள் :**

*கறுப்பும், சிவப்புமாகிய உரிச்சொற்கள் வெகுளியென்னுங் குறிப்பை யுணர்த்தும்.*

**(எ.டு) "நிற் கறுப்ப தோரருங் கடிமுனையள்"**

**"நீ சிவந் திறுத்த நீரழி பாக்கம்"**

**'வை' என்னும் உரிச்சொல் உணர்த்துங் குறிப்பு :**

***வை*** *என்னும் உரிச் சொல் கூர்மை என்னுங் குறிப்பை யுணர்த்தும். வை = நெல்; அதன் நுனைக் கூர்மையால் உரியாயிற்று.*

**(எ.டு) 'வைநுனைப் பகழி'**

# ௩. அகப்பொருள்

**அகத்திணை:-**

உள்ளத்தே நிகழும் இன்பவொழுக்கம். அது கைக்கிளை, குறிஞ்சித்திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத் திணை, நெய்தற்றிணை, பெருந்திணை என ஏழுவகைப் படும்.

**அகத்திணையியல்:-**

இன்பமாகிய ஒழுக்கத்தின் இலக்கணம், இன்பவிலக்கணம், அகத்திணை ஆவது அது.

**அகத்திணைக்குரிய முதல் (அவத்தை) நிலை மெய்ப்பாடுகள்:-**

புகுகின்ற முகத்தினை விரும்புதல், நெற்றி வியர்வையை அடையப் பெறுதல், நகையுண்டாதலை மறைத்தல், மனமழிதலைப் பிறர்க்குப் புலனாகாது மறைத்தல் ஆகிய நான்கும் அகத்திணைக் குரிய முதல் நிலை மெய்ப்பாடுகளாகும்.

**அகத்திணைக்குரிய இரண்டாம் நிலையின் மெய்ப்பாடுகள்:-**

கூந்தலை அவிழ்த்தல், காதிலணிந்த அணியைக் கீழே விழச்செய்து அதனைத் தேடுவதைப் போல நிற்றல், முறையாக அணிந்துள்ள அணிகளைத் தடவுதல், ஆடையைக் குலைத்து உடுத்தல் ஆகிய நான்கும் இரண்டாவது நிலையின் மெய்ப்பாடு களாகும்.

**அகத்திணைக்குரிய மூன்றாம் நிலையின் மெய்ப்பாடுகள்:-**

அல்குலைத் தடவுதல், அணிந்திருந்த அணிகளைக் களைந்து அணிதல், தம்மைச் சார நினைத்தாரைத் தமது இற்பிறப்புச் சொல்லிப் புணர்தற்கு இசை வில்லாரைப் போல மறுத்துக் கூறுதல், வேட்கை மிகுதியால் நாணழிதலில்முயங்கல் விருப்பத்தால் இருகைகளையும் மேலே தூக்குதல் ஆகிய நான்கும் மூன்றாம் நிலையின் மெய்ப்பாடுகளாகும்.

**அகத்திணைக்குரிய நான்காம் நிலை மெய்ப்பாடுகள் :**

*பாராட்டிக் கூறுதல், பெண்களின் இயல்பாகிய மடமை கெடுமாறு சில கூறுதல், ஊரில் உள்ளவர்களும், சேரியில் உள்ளவர்களும் கூறும் அருளில்லாத கூற்றைக்கேட்டு அலர் ஆயிற்றென நாணுதல், தலைமகன் கொடுக்குங் கையுறைப் பொருளைக் கொள்ளுதல், ஆகிய நான்கும் நான்காம் நிலையின் மெய்ப்பாடுகளாகும்.*

**அகத்திணைக்குரிய ஐந்தாம் நிலையின் மெய்ப்பாடு :**

*ஆராய்ந்து உடம்படுதல், வேட்கை நலிதலால் விளையாட்டுத் தொழிலைமறத்தல், தலைவனைக் காண்டல் வேட்கையால் மறைந்தொழுகுதல், தலைமகனைக் கண்ட வழி மகிழ்தல் என்ற நான்கும் ஐந்தாம் நிலைக்குரிய மெய்ப்பாடுகளாகும்.*

**அகத்திணைக்குரிய ஆறாம் நிலையின் மெய்ப்பாடு:**

*பூவுஞ், சாந்தும், துகிலும், முதலியன கொண்டு புறத்தே அழகு செய்ய அகத்தே சிதைவுண்டாதலும், அழகிழந்து தோன்றுதலும், கையுங்களவுமாகப் பிடிபட்ட கள்வரைப் போன்று சொல்லுவன வற்றைத் தடுமாற்றந் தோன்றச் சொல்லுதல், கலங்காது சொல்லுங்கால் செயலறவு தோன்றச் சொல்லுதல் ஆகிய நான்கும் ஆறாம் நிலைக்குரிய மெய்ப்பாடுகளாகும்.*

**அகத்திணைக்கு நிமித்தம் ஆதல்:**

*அகத்திணைக்கே உரியவென்று கூறப்பட்டன இருபத்து நான்கு மெய்ப்பாடுகளாகும், நோக்காமை நோக்கி இன்புறுதல், நோக்குங்காலைச் செற்றார் போல நோக்குதல், மறைந்து காண்டல், தற்காட்டுறுத்தல் போன்ற நிலைகள் பத்தும் அவற்றோடு பொருந்தி நிலை பெற்ற வினையை உடைய நிமித்தமென்று கூறுவர். மேலே கூறப்பட்டவற்றுள் ஐந்திணைக் கண் வருவன ஆறும் கூறப்பட்டது. ஏழாவது நிலை பெருந்திணைப்பாற்படும். எட்டாவது நிலை உன்மத்தம். ஒன்பதாவது நிலை மயக்கம். பத்தாவது நிலை சாக்காடு.*

**அகத்திணைக்குரிய பாடல்கள்:**

*நாடக வழக்கிடத்தும், உலகியல் வழக்கிடத்தும் உள்ள அகப்பொருள் கருத்துகளாகிய கைக்கிளை முதலாகப் பெருந் திணை இறுதியாக அமைத்துக் கூறுபவைகளைக் கலிப்பா,*

பரிபாடல் ஆகிய இருவகைப் பாக்களாலும் கூறப்படும். நாடக வழக்காவது- சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல், உலகியல் வழக்காவது-உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்துக் கூறுவது.

**அகப்பாட்டுறுப்பு :**

அகத்திணையின் பன்னிரண்டுறுப்புகள். அவை இயல்பகத் திணை, வகையகத்திணை, பொதுவகத்திணை, சிறப்பகத்திணை, உவமவகத்திணை, புறநிலையகத்திணை, எதிர்நிலையகத்திணை, காரணம் அல்லது கருவியகத்திணை, காரியவகத்திணை, காரகவகத் திணை, முன்னவையகத்திணை, பின்னவையகத்திணை என்பன வாம்.

**அகப்புறக் கைக்கிளை-**

காமஞ்சாலா இளமைத் தன்மையுடைய தலைமகளிடத் தில் தலைமகன் அவளுடைய குறிப்பினையறியாது பலவற்றைக் கூறுவது.

**அகப்புறத்திணை:**

அகமாகிய ஐந்திணைக்கும் புறனாகிய ஒழுக்கம். அது கைக்கிளையும் பெருந்திணையும் என இருவகைப்படும். (கைக் கிளை-ஒருதலைக் காமம். பெருந்திணை-பொருந்தாக்காமம்)

**அகப்புறப்பாட்டு:**

மடலேறுதல் முதலாகத் தபுதார நிலையீறாகச் சொல்லப் பட்டவற்றில் இயற்பெயர் கோடாமையாம்.

**அகப்புறப் பெருந்திணை**

அகன்றுழிக் கலங்கல் முதலாகத் தலைவியுந் தானும் வன மடைந்து நோற்றல் ஈறாகச் சொல்லப்பட்டனவும் பிறவுங் கூறுதலாம்.

**அகப்புறம்:**

கைக்கிளையும் பெருந்திணையும்; அவை காந்தள், வள்ளி, சுரநடை, முதுபாலை, தாபதம், தபுதாரம், குற்றிசை, குறுங்கலி, இல்லாண்முல்லை, பாசறை முல்லை என்னும் பத்துநுகர்வுகள்.

**அகப்பொருட் கைக்கிளை-**

*ஒருதலைக் காமம். அஃதாவது காமம் நுகர்தற்கமைந்த இளமையையுடைய தலைமகளிடத் துண்டாய குறிப்பினைத் தானறியுமளவும் தலைமகன் அவளைச் சாராது நின்று நெஞ்சொடு கூறுவது.*

**அகப்பொருளுக்குச் சிறப்புவிதி:-**

*மக்களின் அகவொழுக்கத்தை வரையறுத்து உணர்த்தும் அகப்பொருள் விளக்கம் ஐந்திணையிடத்தும் கூறப்படும் புணர்தல் முதலிய ஒழுக்கத்தின் தலைப்பட்டாரைப் பொதுப்பெயரால் கூறுவதல்லது சிறப்பாக ஒருவர் பெயரையும் அமைத்துக் கூறுதல் என்பது இல்லை.*

**அகப்பொருள்:**

*ஐவகை இலக்கணங்களுள் ஒன்று அஃதுண்ணிகழ்ச்சியான சிற்றின்பத்திற்குரிய ஏழுதிணையைக்கூறும். ஏழுதிணைகள்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந் திணை.*

**அகப்பொருட்டுறை:**

*அகப்பாட்டுறுப்புகள் பன்னிரண்டனுள் ஒன்று. அஃதுரைப் போருங் கேட்போருமின்றிப் புலவர் கூற்றாகக் கூறப்படுவது.*

**அகப்பொருட் பெருந்திணை:**

*அகத்தின் கண்ணுள்ள இன்பத்தைச் சிலநாள் நுகர்ந்த தலைவனுந் தலைவியும் பின் இடைக்காலத்து நுகராமைக்கான இடையூற்றுக் கூற்றுக்களை உணர்ந்து கூறுவது.*

**அச்சம்:-**

*இது எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று. அணங்கு, விலங்கு, கள்வர், அரசர் என்னும் நால்வகையானும் அச்சந் தோன்றும். இவற்றுள் அணங்கென்பன. பேயும், பூதமும், பாம்பும், ஈறாகியபதினெண் கணனும் நிரயப் பாலரும் பிறரும் அணங்குதற்றொழிலினராகிய சவந்தின் பெண்டிர் முதலியனவுமாம்.*

**அழுகை:-**

*இது எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று. இழிவும், இழத்தலும், அசைதலும், வறுமையும் என்ற நான்கிடத்தும் அழுகை தோன்றும். இவற்றுள் இளிவென்பது பிறரால் இகழப்பட்டு எளியனாதல் இழத்தலென்பது, தந்தையுந்தாயுமாகிய சுற்றத் தாரையும், இன்பந்துய்க்கும் நுகர்ச்சி முதலியவற்றையும் இழத்தல். அசைதலென்பது தளர்ச்சி; தன்னிலையிற்றாழ்தல். வறுமையென்பது இன்பந்துய்க்காத பற்றுள்ளம்.*

**எடு:-**

**"இல் வழங்கு மடமயில் பிணிக்குஞ்**
**சொல்வலை வேட்டுவ னாயினன் முன்னே"** **(புறம்.252)**

*இது அசைவு பற்றித் தோன்றிய அவலம்.*

**"இன்ன விறலு முளகொல் நமக்கென**
**மூதிற்பெண்டிர் கசிந்தழ நாணிக்**
**கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை."**

**இது இழத்தல் பற்றி வந்த அவலம்**

**அறத்தொடு நிற்றல்-**

*தலைவியின் களவொழுக்கத்தை முறையே வெளிப்படுத்தி நிற்றல். அறதொடு நிற்றலாகும் முறையே வெளிப்படுத்தி நிற்றலாவது, தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்பாள். தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பாள். செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள்.*

*நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்பாள்.*

*தன் ஐயர் = தன் உடன்பிறந்தார்.*

**அறத்தொடு நிலையின் வகை:**

*முன்னிலை மொழி, முன்னிலைப் புறமொழி என இரண்டு வகையினையுடையது. அறத்தொடு நிலை. முன்னிலை மொழியாவது முன்னிற்பார்க்கு நேரே கூறுவது. முன்னிலைப் புறமொழியாவது முன்னிற்பார்க்குக் கூற வேண்டுவனவற்றைப் பிறருக்குக் கூறுவார் போலக் கூறுவது.*

**அறத்தொடு நிலை நிகழுமிடம்:**

*தலைமகன் வரும் வழியில் உண்டாகிய துன்பத்திற்கு அஞ்சியும், தமர் வரைவு எதிர் கொள்ளாதவிடத்தும், வேற்றார் திருமணம் பேசி வருமிடத்தும், தலைவிக்குக் காவல் மிகுந்த விடத்தும் அறத்தொடுநிலை நிகழும்.*

**அறத்தொடு நிற்றற்குரியார்**

*தலைவி தோழிக்கு அறத்தொடுநிற்பாள், தோழி செவிலித் தாய்க்கு அறத்தொடு நிற்பாள், செவிலித்தாய் நற்றாய்க்கு அறத் தொடு நிற்பாள், நற்றாய் தந்தை தமையன் முதலானோர்க்கு அறத்தொடு நிற்பாள்.*

**அறத்தொடு நிற்பார்க்கு வினா நிகழும் இடம்:**

*தலைமகளிடத்தில் வேறுபாடு கண்டவழி தோழி அவளது வேறுபாட்டிற்குக் காரணங்கேட்பாள். செவிலித்தாய் தோழியைக் கேட்பாள். நற்றாய் செவிலித்தாய், தோழி ஆகிய இருவரையும், தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணங்கேட்பாள். அக்காலத்து அறத்தொடு நிற்கும் நிலை உண்டாகும் அறமாவது காதல் கொண்டானை மணத்தல். அறிவர் உரிமை:அறிவரென்பவர் தலைமகனுக்குந் தலைமகளுக்கும் மனத் திண்மையைப் பயக்கும் அறிவுரைகளை வழங்கும் உயர்ந்த குணத்தினை உடைய சான்றோராவர்.*

**இடந்தலைப்பாடு**

*இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து சென்ற தலைமகன் அடுத்த நாள் அவ்விடத்தே வந்து தலைமகளைக் கூடுதல் இடந்தலைப் பாடாம். அது தெய்வந்தெளிதல், கூடுதல், விடுத்தல் என மூன்று வகையினையுடையது. இவற்றுள் தெய்வந் தெளிதலாவது, முன்னே நமக்கவளைக் கூட்டி வைத்த தெய்வம் பின்னும் கூட்டி வைக்கும் எனத் தெளிந்து செல்லுதல். கூடலென்பது தலைவன் தலைவியைக் கூடுதலாம். விடுத்தலென்பது தலைவன் தலைவியை ஆயத்தின்பாற் செல்லவிடுத்தலாம்.*

**இடந்தலைப்பாட்டின் இலக்கணவிரி**

*இயற்கைப் புணர்ச்சியில் அவளைத் தந்த விதி இன்றும் அவ்விடத்திற்குச் சென்றால் தருமெனச் சேர்தலும், இயற்கைப் புணர்ச்சியில் கண்டதுபோல் தலைவியைக் காண்டலும்,*

*புணர்தலும், புணர்ந்தபின்பு தலைவியைத் தலைவன் புகழ்ந்து கூறுதலும், ஆயக்கூட்டத்துள் தலைவியைச் செலுத்துதலும் ஆகிய ஐந்து விரியினையுடையது இடந்தலைப்பாடு.*

**இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம்:**

*களவொழுக்கத்தின் கண் நிகழும் நால்வகைப் புணர்ச்சியுள் இயற்கைப் புணர்ச்சியும் ஒன்று. அஃதாவது ஊழினால் தலைமகன் தலைமகளை எதிர்ப்பட அவ்விருவரும் மனமியைந்து தாமே கூடுவதாம். அப்புணர்ச்சி தெய்வத்தாற் புணரும் புணர்ச்சி, தலைமகளாற் புணரும் புணர்ச்சி என இருவகைப்படும். தெய்வத் தாற் புணரும் புணர்ச்சி முயற்சியின்றி முடிவதாகும். தலை மகளாற்புணரும் புணர்ச்சி முயற்சியால் முடிவதாகும்.*

**இயற்பெயர் வருவதற்கு இடம்:**

*இலக்கியங்களில் ஒருவரின் பெயரைச் சுட்டிக் கூறுதல் புறத்திணையிடத்து வரப்பெறும்.*

**இல்வாழ்க்கை:**

*தலைவனும் தலைவியும் இல்லின்கண் வாழும் வாழ்க்கையின் மேன்மையைக் கூறுதல் இல்வாழ்க்கையாகும். இது கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி, தோழி மகிழ்ச்சி, செவிலி மகிழ்ச்சி என நான்கு வகைப்படும்.*

**இரவுக்குறி:**

*தலைவன் தலைவியை இரவுப்பொழுதில் குறித்த இடத்தில் கூடுதல் இரவுக்குறியாகும்*

**இரவுக்குறியின் வகை:**

*வேண்டல், மறுத்தல், உடன்படல், கூட்டல், கூடல், நீங்கல், பாராட்டல், உயங்கல், பாங்கியிற் கூட்டல் என இரவுக்குறி ஒன்பது வகைப்படும்.*

*வேண்டல் - தலைவன் இரவுக் குறியை வேண்டுதலும், தோழி தலைவியை வேண்டுதலுமாம். மறுத்தல்- தோழியும், தலைவியும் இறையோன் வேண்டுகோளை மறுத்தல்; உடன்படல்-தோழி தலைவன் வேண்டு கோட்கு உடன்படுதலும், தலைவி தோழியின் சொற்கு உடன்படுதலுமாம். கூட்டல்-தோழி தலைவியை அழைத்துச் சென்று குறியிடத்துச் சேர்த்தல். கூடல்- தலைவன் தலைவியைப் புணர்தல்; பாராட்டல்- தலைவன்*

தலைவியைப் புகழ்தலும், தோழி இறைவன் அளித்த கையுறையைப் புகழ்தலுமாம். பாங்கியிற் கூட்டல்-தலைவன் தலைவியை வீட்டிற்குச் செல்ல விடுப்பத் தோழி தலைவியை அழைத்துச் செல்லுதல்; உயங்கல்- தலைவன் இரவுக் குறிக்கண்வரும் வழியினது அருமையை எண்ணித் தலைவி வருந்துதலும், அதனால் தலைவன் வருந்திக் கூறுதலுமாம். நீங்கல்- தோழி தலைவியைக் குறிக்கண் செலுத்தி நீங்குதலும் தலைவியைத் தலைவன் புணர்ந்து நீங்குதலுமாம்.

**இரவுக்குறியின் விரி:**

தலைவன் தலைவியை இரவுக்குறிக்கண் கூட விரும்பித் தோழியிடம் இரவுக்குறி வேண்டுதலும், தலைவன் இரவுக் குறிக் கண் வரும் வழியினது அருமையைத் தோழி தலைவனுக்குக் கூறுதலும், தலைவன் இரவுக்குறிக்கண் வரும் வழியினது எளிமையைக் கூறுதலும், தோழி தலைவன் நாட்டுப் பெண்கள் அணியும் அணியையும், புனைதல், அணிதல் விளையாட்டிடம் முதலியவற்றையும் வினாதலும், தோழியின் குறிப்பறிந்து அவள் நாட்டு அணி இயலைத் தலைவன் வினாதலும், தோழி தன்னாட்டு அணியியலைக் கூறுதலும், தோழி தலைவனை ஓரிடத்து நிறுத்தித் தலைவி நிற்குமிடஞ் சென்று தலைமகன் குறையை யறிவித்தலும், இவ்வாறு தலைவன் குறையைத் தோழி கூறக் கேட்ட தலைவி உடன்படாது தன் நெஞ்சொடு கூறுதலும், இவ்வாறு நெஞ்சொடு புலந்து நின்ற தலைவி பின் பாங்கியோடு உடன்பட்டுக் கூறுதலும், தலைவி இருட்குறிக்கு உடன் பட்டமையைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதலும், தோழி தலைவனைக் குறியிடத்து நிறுத்தித் தாயினது உறக்கத்தை அறிதலும், தலைவிக்குத் தலைவன் வரவைப் பாங்கி உணர்த்தலும், தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு செல்லுதலும், தலைமகளைக் குறியிடத்துச் செலுத்தித் தோழி அகன்று போதலும், தலைவன் தலைவியை எதிர்ப்படுதலும், தலைவன் வரும் வழியை எண்ணித் தலைமகள் வருந்துதலும், தலைவன் தலைவியைத் தேற்றுதலும், தலைவன் தலைவியைக் கூடலும். தலைவியைத் தலைவன் புகழ்தலும், இருட்குறியின் ஏதத்தையஞ்சித் தலைமகள் தலைமகனை இரவுக்குறிக்கண் வரு தலை விலக்கலும், தலைவன் தலைவியை வீட்டிற்குச் செல்லென விடுத்தலும், தோழி தலைவியை அடைந்து கையுறை காட்டலும்,

தலைவியைத் தோழி வீட்டிற்குக் கூட்டிப் போதலும், தோழி தலைமகளை வீட்டில் சேர்த்த பின்பு தலைமகனிடஞ் சென்று இவ்விருளில் நீ வாரல் என்று வரவு விலக்கிக் கூறுதலும், தோழி இவ்வாறு இரவுக் குறி விலக்கிய சொற்கேட்டுத் தலைமகன் மயங்கிக் கூறுதலும், பாங்கி தலைமகனுக்குத் தலைமகளின் துயரத்தைக் கூறி நீர் ஊர்போய்ச் சேர்ந்த செய்தியை யாம் அறியு மாறு குறிசெய்க என்று கூறிவிடுத்தலும், தலைமகன் தன்னூர் சேர்தலும் ஆகிய இருபத்தேழும் இரவுக் குறியின் விரிகளாகும்.

**இரவுக்குறி இடையீடு ;-**

எட்டாம் நாள் இரவுக் குறிக்கண் வந்த தலைமகன் அல்ல குறிப்படுதலால் இடையீடுபட்டுப் போதல். அல்லகுறிப்படுதலாவது-தலைவனும் தலைவியும் தோழியும் தங்களுக்குள் குறித்துக் கொண்டபடி தலைவனால் நிகழ்த்தப் படுதற்குரிய பறவை யெழுப்புதல், நீரிற் கல்லெறிதல், இளநீர் விழச் செய்தல் முதலிய குறிகள் பிறிதொன்றனால் நிகழ்த்தப்படத் தலைவி குறிக்கண் வந்து தலைவனைக் காணாது சென்றாள். பிறகு தலைவன் அங்கு வந்து தலைவியைப் பாராமல் சென்றான். இவ்வாறு தலைவனால் நிகழ்த்தப்படுதற்குரிய குறிகள் பிறிதொன்றனால் நிகழ்த்தப்படு தலின் அஃது அல்ல குறியாயிற்று.

**இரவுக்குறி இடையீட்டின் விரி :**

தலைவிக்குத் தோழி தலைவன் குறியிடத்து வந்தமையை உணர்த்தலும்; தலைவி தான் அல்லகுறியிடத்து நின்று தலைவனைக் காணாமையால் திரும்பி விடியற்காலத்து வந்து பாங்கியுடன் கூறுதலும்; தோழி தலைவன் செய்த தீங்கை எடுத்துக் கூறுதலும், தலைவன் தான் குறித்த குறியிலிருந்து தலைவி அல்லகுறிப்பட்டு வாராமையாற் வருந்தி தன் ஊர்க்குச் செல்லுதலும், ஒன்பதாம் நாள் பொழுது விடிந்த பின் தலைவி வறுங்களங் கண்டு துன்ப மடைதலும், தலைவி தன் துன்பத்தைத் தோழிக்குரைத்தலும், தலைமகளது துன்பத்தைப் பாங்கி தணித்துக் கூறுதலும், ஒன்பதாம் நாள் இருட்குறிக்கண் வந்த தலைவன்மேல் பாங்கி அல்லகுறிப்பட்ட குற்றம் ஏற்றிக் கூறுதலும், தலைவிமேல் தலைவன் அல்லகுறிப்பட்ட குற்றம் ஏற்றிக்கூறுதலும், தலைவி குறிமயங்கியதைத் தோழிதலைவனுக்கு உணர்த்தலும், தலைவன்

கூறிய கொடுமையைத் தோழி தலைவிக்குணர்த்தலும். குறி பிழைத்தது என்பிழையன்று என்று தலைவி வருந்திக் கூறுதலு மாகிய பன்னிரண்டு துறைகளும் இரவுக்குறி இடையீட்டின் அல்ல குறிப்படுதலின் வகைக்குரிய விரிகளாகும். தாய் உறங்காது விழித்திருத்தல், தாய் தூங்கியபின் ஊரில் இருக்கும் நாய்கள் உறங்காமை, நாய் உறங்கியவிடத்து ஊரில் உள்ளமக்கள் உறங்காமை, ஊரார் உறங்கிய விடத்து நகர் காப்போர் துடியடித்துக் கொண்டு விரைந்து ஊர் சுற்றி வருதல், தலைவன் இருட் குறிக்கண் வருதற்கு இடையூறாக நிலவு வெளிப்படுதல், கூகை குழறக் கேட்டதலைவி பயந்து கூறுதல், தலைவன் தலைவி இருவர்க்கும் இடையூறாய்க் கோழிகூவுதல் ஆகிய ஏழும் இரவுக் குறி இடையீட்டின் வருந்தொழிற்கருமை என்னும் வகைக் குரிய விரிகளாகும்.

**இரக்கமொடு மீட்சி :-**

இதுவும் உடன்போக்கிடையீட்டின் வகைகளுள் ஒன்று. தலைவன் தன்னைவிட்டு நீங்கினமையின் தலைவி வருத்தத்துடன் தமர்பின் தன்மனைக்கு மீண்டு வருதல் இரக்கமொடு மீட்சியாம்.

**இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் :**

இதுவும் பாங்கி (தோழி) மதி உடன்பாடு என்னும் களவியல் கிளவித் தொகைக்குரிய வகைகளுள் ஒன்று. தலைவியும் பாங்கியும் ஒருங்கிருந்த போது தலைமகன் தழையும் கண்ணியுங் கொண்டு வந்து ஊர், பெயர் முதலியன வினாயவிடத்துத் தோழி அதற்கு விடையளித்தலும், தலைவன் அப்பாற் சென்றவிடத்துத் தலைவியை நோக்கி அசதியாடி நகுதலும், பாங்கி தன் அறிவின் திறத்தால் தலைவன் தலைவி ஆகிய இருவரது மனக் குறிப்பை ஆராய்தலும் ஆகிய இவைகளால் கூட்ட முண்மையைப் பாங்கி உணர்தலாம்.

**இல்வாழ்க்கையின் விரி :-**

தலைவன் தலைவி முன் பாங்கியைப் புகழ்ந்து கூறுதலும், தலைவனைப் பாங்கி வாழ்த்திக் கூறுதலும், பாங்கி தலைவியைத் திருமண நாளளவும் துன்பப்படாமல் இருந்தவாற்றைக் கூறுகவென்றலும், தலைவன் அளித்த கையுறைப் பொருளையே துணையாகக் கொண்டு வருந்தாது இருந்தேன் என்று தலைவி

கூறுதலும், தலைவனைப் பாங்கி திருமண நாளளவும் நிலைபெற வாற்றிய நிலைமையை வினாதலும், கலியாணமனையில் வந்த செவிலித்தாய்க்குத் தோழி தலைவன் தலைவி ஆகிய இருவரது அன்பும் உறவும் உணர்த்தலும், தலைவன் தலைவி இல்வாழ்க்கை சிறப்பாக இருக்கிறது என்று பாங்கி செவிலித்தாய்க் குரைத்தலும், மணத்திற்குச் சென்று வந்த செவிலி தலைவியைப் பெற்ற நற்றாய்க்குத் தலைவன் தலைவியின் சிறப்பைக் கூறுதலும் செவிலி நற்றாய்க்குத் தலைமகன் இல்வாழ்க்கையின் தன்மையைக் கூறுதலும், செவிலி நற்றாய்க்குத் தலைவன் தலைவி ஆகிய இருவரது காதலையும் அறிவித்தலும் ஆகிய பத்தும் இல்வாழ்க்கையின் விரிகளாகும்.

**இளவேனிற் காலத்தின் தன்மை :**

சித்திரை, வைகாசி ஆகிய இரு மாதங்களும் இளவேனிற் காலமாகும். இப்பருவத்தில் மன்மதன் தேராகிய தென்றல் வீசும். வண்டினமும், கிளியும், பூவையும், அன்றிலும், குயிலும் மகிழ்ச்சியுடன் இருக்கும். மாங்கனியுதிரும் நீர்மலரன்றித் தாழை, புன்னை, செண்பகம் முதலியவை மலரும். கார்ப்பருவத்து மகிழ்ந்த மயில் போன்றவை மெலியும். இவையே இக்காலத்தின் தன்மைகளாகும்.

**இளிவரல் :-**

இது எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்று. ***மூப்பும், பிணியும், வருத்தமும், மென்மையும்*** என்ற நான்கின் பொருட்டினாலும் இளிவரல் தோன்றும். இவற்றுள் **மூப்பு** என்பது தன்னிடத்துத் தோன்றிய மூப்புகாரணமாகத் தோன்றும் இளிவரலும், பிறன்கட் தோன்றிய மூப்பு காரணமாகத் தோன்றும் இளிவரலும் என இரண்டாம். **பிணி** என்பது தன்கண் தோன்றிய பிணிகாரண மாகத் தோன்றும் இளிவரலும் பிறன்கட் தோன்றிய பிணிகாரணமாகத் தோன்றிய இளிவரலும் என இரண்டாம். **வருத்த**மென்பது தன்கட்தோன்றிய வருத்தங்காரணமாகத் தோன்றும் இளிவரலும், பிறன்கட் தோன்றிய வருத்தங் காரணமாகத் தோன்றும் இளிவரலும் என இரண்டாம். **மென்மை**யென்பது மெல்லியல்பு காரணமாகத் தோன்றும் இளிவரல். இளிவரல் - இழிவு.

**உடன் போக்கு :**

இது தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்தற் குரிய கிளவித் தொகைகளுள் ஒன்று. தலைவியின் சுற்றத்தார்க்குத் தெரியாமல் தலைவன் தலைவியைத் தன்னூர்க்கு உடன் கொண்டு செல்லுதல்.

**முன்னிலைப்புற மொழி :-**

முன்நிற்பார்க்குக் கூறவேண்டுவனவற்றைப் பிறருக்குக் கூறுவார் போலக் கூறுவது முன்னிலைப்புறமொழியாகும்.

**உடன் போக்கின் வகை :**

போக்கறிவுறுத்தல், போக்குடன்படாமை, போக் குடன்படுத்தல். உடன்படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் என உடன் போக்கு எட்டு வகைப்படும்.

**உடன்படுதல் :**

இது உடன் போக்கின் வகைகளுள் ஒன்று. தோழியின் அறிவுரையின் படி தலைவியுந் தலைவனும் உடன் போக்கிற்கு உடன்படுதல்.

**உடன்போக்கு நிகழ்ந்த விடத்து அறத்தொடு நிற்றற்கு உரியார் :-**

தலைமகளும், தலைமகனும் புணர்ந்துடன் போய காலத்துத் தோழியும், செவிலியும், நற்றாயும் அறத்தொடு நிற்பார்கள்.

**உடன் போக்கின் விரி :-**

தலைவிக்குக் காவல் மிகுதியாக இருக்கின்றது. ஆகையால் அவளை உன் ஊர்க்கு உடன் கொண்டு செல்வாயாக என்று பாங்கி தலைமகனுக்குக் கூறுதலும், பாங்கியின் கூற்றிற்கு உடன்பட தலைமகன் மறுத்தலும், பாங்கி தலைமகனை உடன்படுமாறு செய்தலும், தலைவியை உடன் கொண்டு செல்லத் தலைவன் உடன்படுதலும், தலைவனுடன் போதலைப் பாங்கி தலைவிக்கு உரைத்தலும், உடன் போக்கினால் நாணழியுமே என்றதற்குத் தலைவி யிரங்கிக் கூறுதலும், இவ்வாறு வருந்திய தலைவிக்குத் தோழி கற்பின் மேம்பாட்டைக் கூறுதலும், தலைவி தலைவனுடன் போதற்கு உடன்படுதலும், தோழி பாலை நிலத்தின் தன்மையைக் கூறியவிடத்துத் தலைவி

*மறுமொழி கூறுதலும், பாங்கி தலைமகளைத் தலைமகற்கு அடைக்கலம் கொடுத்தலும், பாங்கி தலைவியைத் தலைவனுடன் இருள் செறிந்த இடையாமத்தில் விடுத்தலும், தலைமகளைத் தலைமகன் பாலை நிலத்தில் (சுரத்தில்) செலுத்துதலும், தலை மகள் பாலை நிலத்தில் செல்லுதலால் ஏற்பட்ட துன்பத்தைத் தலைமகன் ஆற்றுவித்தலும், தலைமகளை மகிழ்ந்து அவள் கூந்தற்கு மலரைச்சூட்டி, அதனால் பரவய மகிழ்ச்சியடைந்து கூறுதலும், தலைவன் தலைவியர்களின் தோற்றத்தைக் கண்டு இவர்கள் மானிடர்களா? அல்லது தேவர்களா எனக் கண்டோர் ஐயமுற்றுக் கூறுதலும், தலைவன் தலைவியர்மீது கொண்ட அன்பினால் பாலை நிலத்தில் உள்ள எயிற்றியர் ஆடவர் முதலாயினோர் அவர்களது செலவை விலக்கித் தங்கள் பாடியில் தங்கிப் போங்கள் என்று கூறுதலும், இவ்வாறு கண்டோர் கூறியதற்கு, இவ்விடத்தில் நும்பதியில் தங்கிப் போதல் பொருந்தாது, என்பதிப் போதல் வேண்டுமென்று தலைவன் கூறியவழித், தலைவன் தன்பதி அருகில் இருக்கின்ற தென்பதனைக் கண்டோர் கூறுதலும், தலைமகன் தலைமகட்குத் தன்பதி சேர்ந்தமை கூறுதலுமாகிய பதினெட்டும் உடன் போக்கின் விரிகளாகும்.*

**உடன் போக்கிடையீடு :-**

*தலைவியின் சுற்றத்தினர் 'நம் இல்லத்தின்கண் மணந்து கொள்ளாமல் தன்னூரின்கண் மணந்து கொண்டனன் என்று வெறுப்படைதலை அறிந்து தலைவன் தலைவியை உடன் கொண்டு போகையில் தலைவியின் சுற்றத்தார் பின்தொடர்ந்து செல்லத் தலைமகளைத் தலைவன் விடுத்துச் செல்லுதல் உடன் போக்கிடையீடாகும். இது போக்கறிவுறுத்தல், வரவு அறிவுறுத்தல், நீக்கம், இரக்கமொடு மீட்சி என நான்கு வகைப்படும்.*

**உடன்போக்கிடையீட்டின் விரி :-**

*ஐம்பத்தைந்தா நாள், தன்ஊரை விட்டு நீங்குந்தலைவி எதிர் வருவார் தம்மொடு தலைவனுடன் உடன் போக்குச் செல்லுதலைப் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தலும், தலைமகள் தன் செலவை அந்தணர் மூலம் நற்றாய்க்குக் கூறிவிடுத்தலும் அச்செய்தியை நற்றாய்க்கு அந்தணர் மொழிதலும், அந்தணர் கூற்றைக் கேட்ட நற்றாய் முன்னிலைப் புறமொழியால் தலைவியின் களவொழுக்கத்தைத் தலைவியின் தமர்க்கு அறத்தொடு நிற்க,*

தமர் சினந்து குழாங் கொண்டு பின்சேறலைத் தலைவி கண்டு தலைவற்குணர்த்தலும், தலைவியின் தமர் பின் வருதலை யறிந்து தலைவன் தலைவியை விடுத்துச் செல்லுதலும், தமருடன் செல்லுந்தலைவி தலைவன் புறங்காட்டிப் போதலை நோக்கிக் கவலைப்பட்டுத் தேறுதலும் ஆகிய ஆறும் உடன்போக்கிடை யீட்டின் விரிகளாகும்.

**உரிப் பொருள் :**

புணர்தலும், புணர்தல் நிமித்தமும், பிரிதலும், பிரிதல் நிமித்தமும், இருத்தலும், இருத்தல் நிமித்தமும், ஊடலும், ஊடல் நிமித்தமும், இரங்கலும், இரங்கல் நிமித்தமும் என்ற பத்துவகையினையுடையதாம்.

**உவகை :-**

இது எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று. செல்வநுகர்ச்சி, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களால் நுகரும் நுகர்ச்சி, மகளிரொடு புணர்தல், சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் விளையாட்டு ஆகிய நால்வகையானும் உவகை தோன்றும்.

**உள்ளப் புணர்ச்சி நிகழுங் காலம் :**

பழிபாவங்களைக் கண்டு அஞ்சுதலும் (குற்றந்தருஞ் செயல் களைச் செய்யாமையும்) அறிவுடையவனாக இருத்தலும் தலை மகனுக்கு நிலைபெற்ற குணங்களாதலாலும், அச்சம், நாண், பேதமை ஆகியமூன்றுந் தலைமகளுக்கு நிலைபெற்ற குணங் களாதலானும் உள்ளப் புணர்ச்சி, மெய்யுறுபுணர்ச்சி என்னும் இருவகைப் புணர்ச்சியுள்ளும் உள்ளப் புணர்ச்சி முன்னர் நிகழும்.

இவற்றுள், அச்சமென்பது காணாததொன்று கண்டாற் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணம் என்பது பெண்டிர்க்கு இயல் பாகியகுணம். ‘திருநுதல் நாணு’ என்பது அது.

**ஊடலைத்தணிக்கும் வாயில்கள் :**

பாணன், பாடினி, கூத்தர், இளையர், கண்டோர், பாகன், பாங்கன் பாங்கி, செவிலி, அறிவர், காமக்கிழத்தி, காதற்புதல்வன், விருந்தினர், ஆற்றாமை ஆகிய இவர்கள் தலைவன் தலைவியர் களுக்கிடையே ஏற்படும் ஊடலை நீக்குவார்கள்.

**எண்வகை மணம் (ஆரியவழிப் பட்டது) :**

*பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன ஆரிய எண் வகை மணங்களாகும். இவற்றுள்* ***பிரமமாவது****-நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமச்சரியங்காத்தவனுக்குப் பன்னிரண்டு யாண்டு பருவத்தளாய்ப் பூப்பு அடைந்த எழிலார் இளநங்கையை இரண்டாம் பூப்பு எய்தாமைக்கு முன்பே அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பதாம்.* ***பிரசாபத்தியமாவது****-தலைமகன் குரவர் வேண்டத் தலைமகள் குரவர் மறாது உடன்பட்டு அவர்கள் கொடுத்த பரிசுத் தொகைக்கு இரண்டு மடங்காகக் கொடுத்துத் தன்மகளையும் ஒப்பனை செய்து தீமுன்னர்க் கொடுப்பதாம்.* ***தெய்வமாவது*** *வேள்வியாசிரியனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பதாம்.* ***ஆரிடமாவது*** *ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொண்டு கன்னியை ஒப்பனை செய்து தீமுன்னர்க் கொடுப்பதாம்.*

*கான்* ***தருவமாவது****, கொடுப்பாரும் கேட்பாரு மின்றித் தலைமகனுந் தலைமகளுந் தனியிடத்தெதிர்ப் பட்டுத்தாமே கூடு வதாம்.* ***அசுரமாவது*** *தலைமகட்குப் பொன்பூட்டிச் சுற்றத் தார்க்கு வேண்டுவன கொடுத்துக் கொள்வது* ***இராக்கதமண மாவது*** *தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வதாம்.* ***பைசாசமாவது*** *மூத்தோர், கள்ளுண்டுகளித்தோர், துயின்றோர் ஆகியவர்களிடத்துப் புணர்தலும், இழிந்தவளை மணஞ் செய்வதும் பிறவுமாம்.*

*இம்மணங்களுள் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும் பெருந்திணைக்குரிய மணங்களாகும். காந்தருவம் ஐந்தினைக்குரியது. அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய மூன்று மணங்களும் கைக்கிளைக்கு உரியனவாம்.*

**ஐந்திணைக்குமுரிய கைகோள் :**

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணையிடத்துக் களவும், கற்புமென இரண்டொழுக்கம் நிகழும்.*

**ஐந்திணைக்கும் உரிய பொருள்கள் :**

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளும், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்று பொருளானுஞ் சொல்லப்படும்.*

**ஐந்திணை ஒழுக்கத்திற்குப் பொருந்தாதவர் :**

*பிறருக்கு அடிமைத் தொண்டு செய்து வாழ்வோரும், பிறர் ஏவல் வழிநின்று செயல் செய்பவரும், பிறரால் ஏவுதற்குரியாரும் ஐந்திணை ஒழுக்கத்திற்குப் பொருந்தார். அவர்கள் அகப்புறத் திணையாகிய கைக்கிளைக்கும், பெருந்திணைக்கும் உரியராவர். மேலும் அறம், பொருள், இன்பம் கெட மகளிரைக் காதலிக்கும் தலைமக்களும் அகப்புறத்திணையாகிய கைக்கிளைக்கும் பெருந் திணைக்கும் உரியவராவர். ஐந்திணை ஒழுக்கத்திற்கு உரியவர் எவர்க்கும் எதற்கும் அடிமைப்படாத் தம் முரிமையராய் இருந்தால் அன்றி அவர் வாழ்வு சிறப்புறாது என்பது கொண்ட விதி இஃதாம்.*

**ஐயந் தெளிதல் ;**

*தலைவியின் கூந்தலில் வண்டுகள் மொய்த்தலாலும், அணிகள் அணிந்திருப்பதாலும், மார்பு, தோள் முதலியவற்றில் பச்சைக் குத்தியிருப்பதாலும், அசைதலாலும், கண்இமைத் தலாலும், ஆண்மக்களைக் கண்டு அஞ்சுதலாலும், கால்கள் நிலத்தில் தோய்தலாலும், வியர்த்தலாலும், நிழலாடுதலாலும், மாலை வாடுதலாலும் தலைமகன் ஐயம் நீங்கி இவள் மானிட மகளே என்று துணிவான்.*

**எடு :-**

**“ திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்**
**இருநிலஞ் சேவடியுந் தோயு – மரிபரந்த**
**போகித முண்கணு மிமைக்கும்**
**ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.”**

**ஐந்திணையில் மனனழியாத நிலையில் நிகழும் மெய்ப்பாடுகள் :**

*களவு இடையீடு பட்டவிடத்து வருந்தாது இவ்வாறாகி நின்றதெனத் தலைவனை இடித்துக் கூறுதல்; வெறுப்பினைப் பிறர்க்குத் தோன்றாதவாறு உடலின் கண்ணே நிறுத்தல்; கள*

வொழுக்கம் பிறரால் அறியப்படும் எனக் கூட்டத்தின் அகன்று ஒழுகுதல்; புணர்ச்சியை விலக்குதல்; தூதுவிட்டபொழுது சினங் கொள்ளாமை; உறங்கிப் பொருந்துதல்; காதல் அளவு கடந்து வருதல்; உள்ளக் கருத்தினைப் புறத்தே கூறாது மறைத்திருத்தல், தெய்வத்தினை அஞ்சுதல்; அறத்தினைத் தேர்ந்து தெளிதல்; தலைமகனிடத்து இல்லாத குறிப்பினை அவன் மாட்டு இருப்பதாக யெண்ணி வெறுத்தல்; தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்தல்; மனநிகழ்ச்சி யுண்மையைக் கூறுதல்; பொழுதினைமறுத்தல்; தலைமகன் மாட்டு அருள் புலப்பட நிற்கும் நிலை; அன்பு வெளிப்பட நிற்றல்; பிரிவினைப் பொறாமை; களவொழுக்கத்தைக் கூறிய புறஞ்சொல்; அதற்கு உள்ளம் நாணுதல் ஆகிய யாவும் ஐந்திணையில் மனன் அழியாத நிலையில் நிகழும் மெய்ப்பாடுகளாகும்.

**ஐயம் :**

தலைமகன் தலைமகளைத் தனியே நல்வினை வயத்தால் எதிர்ப்பட்டவிடத்து, அவள் வடிவும், அவளை அவன் கண்ட இடமும் சிறப்புடைய ஆய காலத்துத் தலைமகனிடத்து, ‘இவள் மக்களுள்ளாள் அல்லள், தெய்வமோ?” எனத் தலைவி மாட்டு ஐயம் நிகழும்.

**எடு :-**

**“அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.”**

**ஒருசார் பகற்குறி :**

பகற் குறியிடத்துத் தலைவியைப் புணர்ந்து சென்ற தலைமகன் மற்றை நாள் தன் வேட்கை மிகுதியால் பகற் குறியிடத்து வந்து நிற்கப், பாங்கி குறியிடத்துத் தலைவியைச் செலுத்தாது மறுத்துக்கூறத் தலைவன் வருந்திச் செல்லுதல் ஒரு சார் பகற்குறியாகும். இதனை **ஒரு கூற்றுப்பகற்குறி** எனவுங் கூறுவர்.

**ஒரு சார் பகற்குறியின் வகை :-**

இரங்கல், வன்புறை, இற்செறிப்பு ஆகிய மூன்றும் ஒரு சார் பகற்குறியின் வகைகளாகும்.

இரங்கல் - தலைவன் பிரிந்தபொழுது தலைவி வருந்துதலும், அது கண்டு பாங்கி புலம்புதலும், தலைவியைப் புணராத தலைவன் வருந்துதலுமாம். வன்புறை - தலைவியைப் பாங்கி இடித் துரைத்தல். இற்செறிப்பு உணர்த்தல் - தலைவியை வெளியில் போகாதவாறு வீட்டின் கண்ணே செறித்தமையைப் பாங்கித் தலைவனுக்குணர்த்தல்.

**ஒருசார் பகற்குறியின் விரி :**

தலைவன் தலைவியைப் புணராது சென்றவிடத்துத் தலைவியைக் காமநோய்வருத்த மாலைப் பொழுதை நோக்கியும், பாங்கியை நோக்கியும், தன்னுள்ளத்தை நோக்கியும், வருந்திக் கூறுதல். இவ்வாறு தலைவி கூறியதைக் கேட்ட பாங்கி வருந்துதல். தலைவன் தலைவியைச் சந்திக்காமல் நாழிகை நீட்டித்தவிடத்துத் தலைவி வருந்திக் கூறுதல். பாங்கி, நீ இவ்வாறு வருந்துவது முறைமையன்று எனத் தலைவியை இடித்துரைத்தல். இவ்வாறு இடித்துக் கூறிய பாங்கி முன்னால் நிற்க அவள்மேல் வெறுப்பால் அவளை நோக்கிக் கூறாது புறமொழியாகக் கூறுதல். வெறுப்பால் முன்னிலைப் புறமொழி கேட்ட பாங்கி தலைவியை யுபசரித் தலால் வெறுப்பு நீங்கிப் பாங்கி யொடு தலைவி கூறுதல். பாங்கி, நீ இவ்வாறு வருந்தினால் அவ்வருத்தத்தால் நலனழியும், நலனழியவே அன்னைக்கு ஐயந்தோன்றும். அதனால் இற்செறிப்பு வரும். மற்றவர் மணம் பேசி வந்தாலும் வருவர், அதனால் கற்புக்கெடும் என்று தலைவியை அச்சமுறுத்திக் கூறுதல்.

தலைவன் விட்டு நீங்கற்கு அருமையைத் தலைவி நினைந்து தன்னுள் வருந்திக் கூறுதல். தலைவன் வரவைப் பாங்கி தலைவிக்கு அறிவித்தல். தலைவன் வேலிப்புறமாகக் குறியிடத்து வரத் தோழி தங்களுக்குள்ள இற்செறிப்பை அறிவுறுத்தக் கூறுதல். தலைவன் முன்னிலையாக நிற்கத் தோழி தலைமகனைப் பார்க்காதவள் போலப் புறமொழியாய்ப் பறவைகளை நோக்கிக் கூறுவாள் போன்று இற்செறிப்பை அறிவுறுத்தல். பாங்கி தலைமகனைக் குறிவிலக்கல். இவ்வாறு பாங்கி குறிவிலக்கினா ளாயினும் எம்மை மறவாமை வேண்டுமென்று கூறுதல். தலைவியைத் தலைவன் புணராமையால் தன் நெஞ்சொடு

*வருந்திக் கூறுதல் ஆகிய பதினான்கும் ஒருசார் பகற்குறிக்குரிய கிளவிகளாகும்.*

**ஒருவழித் தணத்தல் :-**

*வரைவு கூறிய தோழியோடு வரைதற்கு உடன்பட்ட தலைவன் தன் ஊர்க்கு ஒருவழிப் போய் வருகிறேன் என்று கூறிப் போதல் ஒருவழித்தணத்தலாகும்.*

*தணத்தல் = பிரிதல்.*

**ஒருவழித் தணத்தலின் வகை :**

*தலைவன் தான் ஒருவழித் தணந்து செல்லும் செலவைப் பாங்கிக்குத் தெரிவித்தலும், அவள் அதனைத் தலைவிக்கு அறிவித்தலுமாகிய செலவறிவுறுத்தலும், தலைவன் செலவைப் பாங்கி தடுத்தலாகிய செலவுடன் படாமையும், தலைவன் தான் செல்ல வேண்டியது இன்றியமையாதது என்று கூறிப் பாங்கியை உடன்படச் செய்தலாகிய செலவுடன் படுத்தலும், தலைவன் செல்வதற்குப் பாங்கி உடன்படலாகிய செலவுடன்படுதலும், தலைவன் ஒருவழித் தணந்தபோது தலைவி மனங்கலங்கி வருந்துதலாகிய சென்றுழிக்கலங்கலும், தோழி தலைவியின் மனந்தெளியும் படியான சொற்களைச் சொல்லி அவற்றால் அவள் துன்பம் ஆறும்படி செய்தலாகிய தேற்றியாற்றுவித்தலும், மீண்டு வந்த தலைவன் பாற் பாங்கி வருந்திக் கூறுதலும், தன் பிரிவினால் தலைவிக்கும் தோழிக்கு முண்டாய துன்பத்திற்காகத் தலைவன் வருந்திக் கூறுதலுமாகிய வந்துழி நொந்துரையுமாகிய ஏழும் ஒரு வழித்தணத்தலின் வகைகளாகும்.*

**ஒருவழித் தணத்தலின் விரி :**

*தலைவன் தன்னாட்டிற்கு ஒரு வழித்தணந்து செல்ல விரும்பியதைத் தோழிக்குக் கூறுதலும், தோழி தலைவன் செலவைத் தடுத்தலும், தலைவன் தான் செல்ல வேண்டியதன் இன்றியமையாமையைக் கூறிச் செலவிற்கு உடன்படுமாறு கூறுதலும், பாங்கி தலைவனை ஊர்க்குப் போய் வருகவென விடுத்தலும், தலைவன் செலவைப் பாங்கி தலைவிக் குணர்த்தலும், தலைவன் செலவையறிந்த தலைவி வருந்துதலும், தலைவன் மாலைக் காலமளவும் வாராது வரவு நீடித்தலாற் காம*

*மிகுந்தவதனால் மிகுந்த நினைவோடு கூறுதலும், தோழி தலைவிக்குத் துன்பம் நீங்கும்படி கூறுதலும், தலைவன் செலவு மீண்டமை தலைவிக்குக் கூறுதலும், மீண்டு வந்த தலைவனிடம் தாம்பட்ட பிரிவுத்துன்பத்தைக் கூறுதலும், அதற்குத் தலைவன் நீவிர் எவ்வண்ணம் ஆற்றியிருந்தீர் எனவினாதலும், தலைவியை ஆற்றுவித்திருந்த அருமையைத் தோழி தலைவனுக்குக் கூறுதலு மாகிய பன்னிரண்டும் ஒருவழித் தணத்தலின் விரிகளாகும்.*

**ஓதற்பிரிவு :**

*கல்விகற்பதற்காகப் பிரியும் பிரிவு ஓதற்பிரிவாகும். இப் பிரிவு மூன்றியாண்டு காலவெல்லையினை உடையது. இப்பிரிவின் கண்சென்ற தலைமகன் ஓதுதலைவிட்டு வருதற்கு விரும்புதலும், தலைமகளை நினைத்துப் புலம்புதலும் கூடா.*

**கண்டோர் இரக்கம் :**

*தலைவனுடன் உடன்போக்குச் சென்ற தலைவியின் தோழி மார்களும் தாயும் வருந்துதல் கண்டோர் இரங்கிக் கூறுதல்.*

**கரணம் தோன்றக் காரணம் :**

*மணமக்களிடையே பொய் கூறுதலும், குற்றப்பட நடத்தலும் தோன்றிய பின்னர் தமிழகச் சான்றோர் திருமணத்திற்குரிய சடங்குகளை வரையறை செய்தனர். அஃதாவது, மகளிர் அழகில் மயங்கி அவரைப் பன்முறையில் சிறப்பித்துக் கூறி அவர்கள் காதலைப் பெற்றுப் புணர்ந்த பின்பு அவரை மறந்து வேறு பெண்களை நாடும் ஆடவரும், "கூந்தல் நரைப்பினும் கொங்கை தளரினும் உன்னைக் கைவிடேன்" என்று உறுதி மொழி கூறி விட்டுப் பின்னர் கைவிடும் ஆடவரும் தோன்றிய பின்னர்த் தமிழகச் சான்றோர் திருமணத்திற்குரிய சடங்குகளை வகுத்தனர்.*

**கருப்பொருளின் வகை :-**

*தெய்வம், மக்கள், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்ற பதினான்கும் ஐந்திணைக்கும் உரிய கருப்பொருள்களின் வகைகளாகும்.*

**கருப்பொருட்குச் சிறப்பு விதி :**

ஏதேனும் ஒரு நிலத்திற்குரிய மலரும் பறவையும் அந்த நிலத்திற்கும் அதற்குரிய காலத்திற்கும் பொருந்தாது பிறிதொரு நிலத்திடத்துவரினும், வந்த நிலத்திற்குரிய கருப்பொருளாகவே கொள்ளப்படும்.

**கவல்மனை மருட்சி :-**

தன்னுடைய பெண் காதலனுடன் சென்றதனை உணர்ந்து நற்றாய் வீட்டின்கண் இருந்து வருந்துதல் கவல்மனை மருட்சி.

**கவல்மனை மருட்சியின் விரி :**

நற்றாய் சகுனப் பறவைகளை வணங்குதலும், நற்றாய் பாலை நிலத்தின் வெம்மை குளிருமாறு கூறுதலும், தன் மகளின் மெல்லிய இயல்பாகிய தன்மைக்கு நற்றாய் வருந்துதலும், நற்றாய் தலைவி இளமைத் தன்மைக்கு மனமெலிந்து இரங்கிக் கூறுதலும், நற்றாய் தலைவியது அச்சத்தன்மையை எண்ணித் தான் அச்சமுற்று இரங்குதலும் ஆகிய ஐந்தும் கவல்மனை மருட்சியின் விரிகளாகும்.

**களவின் இலக்கணம் :-**

இன்பமும், பொருளும், அறமும் என்று சொல்லப்பட்ட மூன்றனுள், அன்புடன் புணர்ந்த (கைக்கிளை பெருந்திணை நீங்கிய) ஐவகை ஒழுக்கத்தினிடத்தும் நிகழும் காமக் கூட்டம் ஆரிய முறையில் வரையறை செய்யப்பட்ட எண்வகை மணத்துள், காந்தருவ மணத்தோடு ஒத்த இயல்பினையுடையதாம். காந்தருவ மாவது, கொடுப்பாரும் கேட்பாரும் இன்றித் தலைமகனும் தலைமகளும் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவதாம். அஃதாவது களவு நெறி என்பதாம்.

**களவிற்குக் காரணம் :-**

ஒருவனும் ஒருத்தியும் இல்லறம் நடத்துமிடத்து, அவ்விரு வரையும் மறுபிறப்பினும் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினையாகிய இருவகை ஊழிடத்தும், இருவருள்ளமும் பிறப்பு தோறும் ஒன்றுபட்டு நல்வினைக்கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையால், பிறப்பு, செல்வம், அறிவு, அழகு முதலிய பத்துக் குணங்களினாலும் ஒன்றுபட்ட தலைவனும், தலைவியும் வடகட லிட்ட ஒரு நுகம் ஒருதுளை தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற் போலவும், வெங்கதிர்க் கனலியும், தண்கதிர்மதியமும்

தன்வழி மாறி ஒன்று கூடினாற் போலவும் ஒன்று கூடி ஒருவ ரொருவரைக் காண்டல் காரணமாகத் தமியராய் எதிர்ப்படுவர். இக்கருத்தினை நாற்கவிராசநம்பி காட்சி யென்னுந்துறையில் அமைத்துக் கூறுவர்.

**களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சிக் கொரு சிறப்பிலக்கணம் :**

களவின் வழிவந்த கற்பு, களவின் வழிவாராக் கற்பு என்ற இரண்டனுள் களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி, தலைவி தலைவனுடன் சேர்ந்து உடன் போக்கிற் சென்ற விடத்துக் கொடுத்தற்குரிய தலைவியின் சுற்றத்தார் இல்லாதவிடத்துச் சடங்கொடு மணஞ்செய்து கொள்ளுதலினால், தலைமகள் சுற்றத்தாராற் பெறப்படாத கோட்பாட்டினையுடையதாம்.

**களவிற்புணர்ச்சியின் வகை :**

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற்கூட்டம் என நால்வகையால் களவிற்புணர்ச்சி நடை பெறும்.

**களவொழுக்கின்கண் நிகழும் பிரிவின் வகை :**

ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் என்ற இரண்டும் களவொழுக்கின் நிகழும் பிரிவுகளாம். இவற்றுள் ஒருவழித் தணத்தலாவது, ஓரூரின் கண்ணும், ஒரு நாட்டின் கண்ணும் பிரிதலாம். இப்பிரிவின் கண் தலைமகன் காட்டைக் கடந்தும், நாட்டைக் கடந்தும் செல்லானாகையால் இதற்குக் கால வெல்லை இல்லை. வரைவிடை வைத்துப் பொரு வயிற் பிரிதலாவது, திருமணத்தை இடையிலே வைத்து அத்திருமணத்திற்கு வேண்டும் பொருள் காரணமாகப் பிரிதல். இப்பிரிவின் கண் தலைமகன் நாட்டைக் கடந்தும், காட்டைக் கடந்தும் செல்ல வேண்டியவனாவன். ஆகையால் இப்பிரிவிற்குக் காலவெல்லை இரண்டு திங்களாம்.

**களவுப்புணர்ச்சி நிகழுமிடம் :-**

களவுப் புணர்ச்சி பகற்குறி. இரவுக் குறி என்னும் இரண்டு பகுதியினையுடையது. பகற்குறியாவது இல்லின் எல்லையைக் கடந்த விடத்தில் தலைவன் தலைவியைக் கூடுதல். இரவுக் குறியாவது இல்லின் எல்லையைக் கடவாதவிடத்தில் தலைவன் தலைவியைக் கூடுதல்.

**களவு வெளிப்படுவதற்குமுன் நிகழும் வரவிற்கு இலக்கணம் :-**

*இயற்கைப் புணர்ச்சி முதலாகிய நான்கு வகைப்பட்ட புணர்ச்சியிடத்துந் தலைமகன் தானே தெளிவுபெற்று வரைதலும், தோழியால் தெளிவுப்படுத்தப்பட்டு வரைதலும் உண்டு.*

**களவு வெளிப்பட்டபின் வரைதற்கு இலக்கணம் :**

*புணர்ந்துடன் போய்த் தலைமகன் தன்னூரிடத்தே வரை தலும், மீண்டுவந்து தம்மூரின் கண்ணே வரைதலும், உடன் போக்கு இடையீடுபட்டு வரைதலும், தலைமகளின் பெற்றோர்கள் வழிபட்டுவரைதலும் எனக் களவொழுக்கம் வெளிப்பட்ட பின் வரைதல் நான்கு வகைப்படும். இவற்றுள் மீண்டும் வரைதல் என்பது தலைமகள் மனையின் கண்ணே வரைதலும், தலைமகன் மனையின் கண்ணே வரைதலும் என இரண்டு வகைப்படும்.*

**களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகை :**

*உடன் போக்கு, கற்பொடு புணர்ந்தகவ்வை, மீட்சி என்ற மூன்றும் களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகையாகும்.*

**களவொழுக்கின் கண் புணர்ச்சி நிகழுந்திறம் :**

*களவொழுக்கத்தின்கண் உள்ளத்தாற் புணரும் புணர்ச்சியும், உடலால் புணரும் புணர்ச்சியும் என்ற இருவகைப் புணர்ச்சிகளும் தலைமகனுக்கும் தலைமகளுக்கும் உரியனவாம்.*

**களிறுதரு புணர்ச்சி :-**

*இதுவும் செவிலிக்குப் பாங்கி அறத்தொடு நிற்கும் முறை களுள் ஒன்று. யாம் சோலையில் விளையாடுகையால் ஒரு யானை பாய வரும்போது நின்மகள் அலறிக் கூவ அவ்வழியே வந்தான் ஒருவேந்தன் விரைந்துவந்து நின்மகளை இடப் பக்கத்தில் அணைத்துக் கொண்டு வலக்கையில் வேலெடுத்து யானையொடு பொருது துரத்தினான். அன்றுமுதல் அவள் அவன் நினைவாகவே இருக்கிறாள் என்று தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்குப் பாங்கி புலப்படுத்தல்.*

**கற்பின் இலக்கணம் :-**

*தலைவனும் தலைவியுங் கூடி நடத்தும் இல்வாழ்க்கையின் கண் உண்டாகின்ற உள்ளமகிழ்ச்சியும், ஊடலும், ஊடலுணர்த் தலும், பிரிவும், பிரிந்தவிடத்து உண்டாகின்ற விகற்பம் முதலியன வெல்லாம் கற்பின் இலக்கணமாகும்.*

**கற்பில் நிகழும் பிரிவின் வகை :-**

தலைமகன் பரத்தை மேற்காதல் கொண்டு தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரிக்குச் செல்லும் பரத்தையிற் பிரிவும், தலைவன் கல்வி காரணமாகப் பிரியும் ஓதற்பிரிவும், நாடு காத்தற் பொருட்டுப் பிரியும் காவற்பிரிவும், அரசர் இருவர் போர் செய்தவழி அவரைச் சந்து செய்விப்பதற்குப் பிரியும் தூதிற் பிரிவும், தன் நண்பனாகிய வேந்தனுக்குப் பகைவேந்தரால் இடையூறு நேர்ந்த விடத்து அவ்விடையூற்றை நீக்குதற் பொருட்டுப் பிரியும் துணைவயிற் பிரிவும், பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரியும் பொருள்வயிற் பிரிவும் என ஆறுவகைப் பிரிவும் கற்புக் காலத்து நிகழ்வனவாம்.

**கற்பிற்குரிய கிளவித் தொகை :**

இல்வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு, ஓதற் பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு ஆகிய ஏழும் கற்பிற்குரிய கிளவித் தொகைகளாகும்.

**கற்பு மணம் :-**

கற்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது சடங்கொடு பொருந்திக், கொள்ளுதற்குரிய முறைமையையுடைய தலைவன் கொள்ளுதற்குரிய முறைமையை யுடைய தலைவியைக், கொடுத்தற்குரிய முறைமையையுடை தலைவியின் சுற்றத்தார், தெய்வம், சான்றோர் மணஞ் செய்து கொடுப்ப மணந்து கொள்வதும், தலைவி தலைவனுடன் உடன் போக்கிற் சென்ற விடத்துக் கொடுத்தற்குரிய முறைமையையுடைய தலைவியின் தமர் இல்லாதவிடத்தும் சடங்கொடு கூடியமணம் நடை பெறுவதும் கற்புமணமாகும்.

**கற்புக் காலத்துத் தலைவன்பால் நிகழும் நிகழ்ச்சி :**

இருவகைக் கற்பின் கண்ணுந் தலைமகற்குக் களவிற் புணர்ச்சியும், வதுவைப் புணர்ச்சியும் உண்டு என்பதாம். காதற் பரத்தையர், காமக்கிழத்தியர், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியர் ஆகிய மூவகை மகளிரும் அந்நிகழ்ச்சிகளுக்கு உரிய மகளிராவர். இவர்களுள், காதற்பரத்தை களவிற்புணர்ச்சிக் குரியர். காமக்கிழத்தியும், பின்முறைவதுவைப் பெருங்குலக் கிழத்தியும் வதுவைப் புணர்ச்சிக்குரிய மகளிராவர்.

**கற்பொடு புணர்ந்த கவ்வை :-**

*இதுவும் களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகைகளுள் ஒன்று. தலைவி தலைவனுடைய உடைமையாய்க் கற்பொடு கூடியிருத்தலை அயலார் விரவிய சேரியினர் பலரும் அறிதல்.*

**கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை :-**

*செவிலிபுலம்பல், நற்றாய்புலம்பல், கவர்மனை மருட்சி, கண்டோரிரக்கம், செவிலிபின்தேடிச் சேறல் என்ற கற்பொடு புணர்ந்தகவ்வை ஐவகைப்படும்.*

*கவ்வை-ஆரவாரம், ஒலி.*

**கற்பு :-**

*கற்பிக்கப் படுதலாற் கற்பாயிற்று. கற்பித்தலாவது அறிவும், ஒழுக்கமும், தலைவனாற்கற்பிக்கப் படுதலும், தாய்தந்தையரால் கற்பிக்கப்படுதலும், செவிலித்தாயால் கற்பிக்கப்படுதலும், சான்றோரால் கற்பிக்கப்படுதலும் எனக் கற்பித்தல் பலவகைப்படும்.*

**“கற்பெனப் படுவது சொற்றிறம் பாவை”**

**“கற்பு மனத்திண்மை.”**

**கற்பின்வகை :-**

*களவொழுக்கத்தின் வழியாக வந்த கற்பும், களவொழுக்கமின்றிவந்த கற்பும் என கற்பு இருவகைப்படும்.*

**கற்பிற்புணர்ச்சியின் வகை :-**

*குரவர்களால் திருமணம் செய்விக்கப் பெற்றுப் புணரும் புணர்ச்சியும், தலைவன், தலைவியர்களுள் ஊடல் நேர்ந்த காலத்து அவ்வூடல் வாய்களால் நீக்கப் பெற்றுப்புணரும் புணர்ச்சியும் என கற்பிற்புணர்ச்சி இருவகைப்படும்.*

**காதற் பரத்தையர் இலக்கணம் :-**

*யாவரையும் விரும்பாத இயல்பையுடைய சேரிப்பரத்தையின் மகளிராய்த் தம் அன்பினால் தலைமகனோடு புணர்பவர் காதற்பரத்தையாவர். அக்காதற் பரத்தையர் தலைவனால் திருமணம் செய்து கோடற்கும் உரியர். (பரத்தையரைப் பேசா நூல் திருக்குறள்.)*

**காமக்கிழத்தியர் இலக்கணம் :-**

*சேரிப்பரத்தையர் போலப் பலர்க்கும் உரியாரன்றி ஒருவற்கே உரிமை பூண்டு வருங்குலப் பரத்தையர் மகளிராய்க் காமங்காரணமாகத் தலைமகனால் திருமணம் செய்து கொள்ளப்பட்டவர் காமக்கிழத்தியராவர்.*

**கார்காலத்தின் தன்மை :-**

*வாடைக் காற்று வீசலும்; செம்மூதாயும் (இந்திர கோபமும்) மயிலும், (கேகயப் பறவையும்) தோன்றி மகிழ்தலும்; வெண் காந்தள், செங்காந்தள், கொன்றை, கூதாளம், வேங்கைமரம், காக்கணஞ்செடி, முல்லை, கடம்பு, காயா முதலியன மலர்தலும்; அன்னம்கிளி குயில் அகவலும், கன்றுவருதலும், தாமரைமலர் நீரில் மறைதலும் கார்க்காலத்துத் தன்மைகளாகும்.*

**காவற்பிரிவின் வகை :**

*தலைவன் நாடு காத்தற் பொருட்டுப் பிரியும் பிரிவு காவற் பிரிவாகும். அப்பிரிவு, அறப்புறங்காவல், நாடுகாவல் என இரு வகைப்படும். அறப்புறங்காவலாவது. அறத்திற்கு விடப்பட்ட நிலம், அறச்சாலை முதலியவற்றைக் காத்தலாம்.*

**காவற் பிரிவிற்கு உரியார் :**

*அறப்புறங்காவல் அரசர் முதலிய அனைவர்க்கும் உரியதாம். அரசனும், அரசனாற் சிறப்புப் பெயர் பெற்றவரும் நாடுகாவற் பிரிவிற்குச்சிறப்பாக உரியராவர்.*

**காலமாகிய முதற்பொருளின் வகை :-**

*பொழுது என்னும் முதற்பொருள், பெரும்பொழுது என்றும் சிறுபொழுது என்றும் இரண்டு பாகுபாட்டினை யுடையதாம்.*

**கிழத்தி மகிழ்ச்சி :-**

*தலைவியின் மகிழ்ச்சி. இது தலைவிதான் வருந்தா திருந்ததன் காரணத்தைப் பாங்கிக்கு உரைத்தலால் விளங்கும்.*

**கிழவோன் மகிழ்ச்சி :-**

*தலைவன் மகிழ்ச்சி - இது தலைமகன் தலைவியின் முன் பாங்கியைப் புகழ்தலால் விளங்கும்.*

**குறிஞ்சிக்குரிய பெரும் பொழுதும் சிறுபொழுதும் :**

*கூதிர்காலமும், முன் பனிக்காலமும், யாமப்பொழுதும் குறிஞ்சித்திணைக்குரிய பெரும் பொழுதும், சிறுபொழுது மாகும்.*

**குறிஞ்சிக்கருப்பொருள் :-**

*தெய்வம் - முருகன்*

*தலைமையர் - பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி*

*மக்கள் - குறவர், கானவர், குறத்தியர்.*

*புள் - கிளி, மயில்*

*விலங்கு - புலி, கரடி, யானை, சிங்கம்.*

*ஊர் - சிறுகுடி*

*நீர் - அருவிநீர், சுனைநீர்*

*பூ - வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, காந்தட்பூ.*

*மரம் - சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்*

*உணவு - மலைநெல், மூங்கிலரிசி, தினை.*

*பறை - தொண்டகப்பறை*

*யாழ் - குறிஞ்சியாழ்*

*பண் - குறிஞ்சிப்பண்*

*தொழில் - வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேனழித்தெடுத்தல், கிழங்கு கிண்டி எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல்.*

**குறிப்பறிதல் :**

*தலைமகளுள்ளத்து நிகழுகின்ற வேட்கையினைத் (புணருங்குறிப்பினை) தலைமகனுக்கு அவளது கண்களே விளங்க அறிவிக்கும்.*

**எடு :-**

**"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு**
**நோய்நோக்கொன் றந்நோய் மருந்து."**

**குறையுற உணர்தல் :**

*இது பாங்கிமதி உடன்பாடு என்னும் களவியல் கிளவித் தொகைக்குரிய வகைகளுள் ஒன்று. இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னே தலைமகளின் உயிர்ப்பாங்கியை அறிந்து அவளை வாயிலாகப் பெற்றுக் குறையுறுதலை வலியுறுத்தத் தலைமகன் கண்ணியும் தழையும் ஏந்திச் சார்ந்து நின்று பாங்கியின் ஊரும், பெயரும் கெட்ட பொருளையும் ஒழிந்தவும் வினாவியவிடத்து இவர் யாரெனவும், இவர் மனத்துளதாகிய எண்ணம் யாதெனவும், ஆராய்ந்தும் அவன் உள்ளத்து எண்ணத்தைத் தெளிந்தும் கூட்டமுண்மையைப் பாங்கி உணர்தல் குறையுற உணர்தலாகும்.*

**கூதிர்ப் பருவத்தின் தன்மை :**

*ஐப்பசி, கார்த்திகை ஆகிய இரு திங்களும் கூதிர்ப்பருவ மாகும். இப் பருவத்தில் கூதிர்க் காற்று வீசும். குருகும், அன்னமும், கொக்கும், சங்கும், நண்டும், நத்தையுமென இவை மகிழும். நீர் தெளிவாகத் தோன்றும். மீனினம் வளர்ச்சி யடையும். மேகம் சூற்கொள்ளும். சந்தனம், சிறு சண்பகம், செம்பரத்தை, நாணல் ஆகியவை மலரும். ஈண்டுக் கூறாத பறவைகளும், விலங்குகளும் மக்கட் டொகுதியுடன் வருந்தும். இவையே கூதிர்ப் பருவத்தின் தன்மைகளாகும்.*

**கைக்கிளை நிகழுங்காலம் :**

*களவிற் புணர்ச்சிக்கு முன் கைக்கிளை நிகழும்.*

**கைக்கிளை :**

*அகப்பொருள் வகை ஏழனுள் ஒன்று. ஒருதலைக் காமம் எனப்பட்டுத் தலை மகன் கூற்றாய் நிகழ்வது. காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என்னும் நால்வகையானும் கூற்று நிகழும்.*

**கைக்கிளையில் நிகழும் உரிப்பொருள் :**

*தலைமகளைப் பார்த்தவிடத்துத் தலைமகனுக்கு ஏற்பட்ட மனநிகழ்ச்சி உள்ள நிலைமையும், பிறகு தலைவியின் குறிப்பு அறியும் வரையிலும் நிகழும் நிகழ்ச்சியும், தலைவியை எதிரிட்டுக் காணுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் கைக்கிளையில் நிகழும் உரிப் பொருளாம்.*

**கைக்கிளையின் வகை :**

*காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் ஆகிய நான்கும் கைக் கிளைத் திணையின் வகைகளாகும்.*

**கைக்கிளைக்குரியார் :**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று கூறப் பட்ட ஐவகை நிலத்தரும் கைக்கிளைக்கு உரியவராவார்.

**செப்பல் ;**

இது தலைவன் தலைவியர் உடன்போக்கு மீட்சியின் வகைகளுள் ஒன்று. முன் சென்றோர் தலைவியின் வருகையைப் பாங்கியர்க்குச் சொல்லுதல். செப்பல்-சொல்லுதல்.

**செப்பல் :**

இது தன்மனைவரைதலின் வகைகளுள் ஒன்று. திருமணம் நடந்தமையைத் தோழி செவிலிக்குக் கூறுதலும், அதனைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதலும், தலைமகன் ‘யான் தலைவியை மணந்தமையை நும் சுற்றத்தார்க்குக் கூறுக’ என இகுளைக்குக் கூற அவள் ‘யான் முன்னரே அதனை எம்மவர்க்குக் கூறினென்’ என்றலுமாம்.

**செவிலி உரிமை :**

தலைமகளுடைய நற்றாய்க்குத் தோழியாகித் தலைமகட்கு வருந் துன்பங்களைப் போக்கி, நல்லறிவும் ஒழுக்கமுங் கற்பித்துத் தலைமகளை வளர்த்த தாய் செவிலித் தாயாவாள்.

**செவிலி மகிழ்ச்சி :**

செவிலித் தாயினது மகிழ்ச்சி. இது மணமனை சென்று வந்த செவிலி நற்றாய்க்குத் தலைவியின் கற்பின் தன்மையையும், தலைவன் தலைவியர்களின் வாழ்க்கைத் தன்மையையும், அவ்விருவர்களின் காதலையும் உணர்த்தலால் விளங்கும்.

**செவிலி பின் தேடிச் செல்லலின் விரி:**

வருந்துகின்ற நற்றாயைச் செவிலி தேறுமாறு கூறுதலும், தலைவியைச் செவிலி தேடிப் போகுங் காலத்து வழியிடை எதிர் வரும் முக்கோலுடைய அந்தணரை வினவுதலும் செவிலி வின வியதற்கு முக்கோலுடைய அந்தணர் அது உலகியல் இயல்பு என்று காரண மெடுத்துக் காட்டலும், செவிலித்தாய் பாலை நிலத்துப் பெண்ணொடு புலம்பிக் கூறுதலும், செவிலி குரவு என்னுங் கொடி யொடு வருந்துதலும், செவிலி பாலை நிலத்தின் மேற் காலமுந்திய குறியைக் கண்டு இரங்கிக் கூறுதலும், உடன்போக்குப் போய்த் தலைவனும் தலைவியும் போல்

அன்புகலந்து வழியிடை வருவோர் இருவரைக் கண்டு அவர்களிடம் தலைவியைப் பற்றி செவிலி வினாதலும், செவிலியிரங்கி வருந்துதலை எதிர்வந்தோர் தேற்றிக் கூறுதலும், செவிலி தன் புதல்வியைக் காணாது துன்பம் மிகுதலுமாகிய ஒன்பதும் செவிலி பின்தேடிச் செல்லலின் விரிகளாகும்.

**செவிலி புலம்பலின் விரி:**

தலைவியைக்காணா விடத்துச் செவிலித் தாய் பாங்கியை வினவுதலும், தலைவி தலைவனுடன் உடன் போக்குச் சென்றதைப் பாங்கி செவிலித்தாய்க்கு அறிவித்தலும், தலைவி உடன் போக்குச் சென்றதைப் பாங்கி மூலம் அறிந்த செவிலி வருந்திக் கூறுதலும், தலைவி உடன் போக்குப் போதற்குத் தன் குறிப்பினால் அறிவித்ததன்மையை அறிந்திலேன் என்று தன் அறியாமையை நொந்து கூறுதலும், உடன் போக்குச் சென்ற தலைவி தன்பால் வரச் செவிலி தெய்வம் வாழ்த்தலும் ஆகிய இவை செவிலி புலம்பலின் விரிகளாகும்.

**செவிலி பின்தேடிச் சேறல்:**

உடன் போக்குச் சென்ற தலைவியைச் செவிவி பின்னே தேடிக் கொண்டு செல்லுதல்.

**செவிலி புலம்பல்:**

தன் பெண் காதலனுடன் சென்றதனை உணர்ந்து செவிலித்தாய் புலம்புதல்.

**செவிலி அறத்தொடு நிற்குந்திறன்:**

தலைமகள் வேறுபாடு கண்ட விடத்துச் செவிலித்தாயை நற்றாய் அவ் வேறு பாட்டிற்குக் காரணம் வினாவியவிடத்துச் செவிலி நற்றாய்க்கு முன்னிலைப்புற மொழியால் அன்றி முன்னிலை மொழியான் தலைவியின் களவை வெளிப்படுத்திக் கூறுவாள்.

**செவிலி அறத்தொடு நிற்குந்திறம்:**

செவிலி அறத்தொடு நிற்குங் காலத்து நற்றாய்க்குத் தலைவியின் களவொழுக்கத்தை விளங்க அறிவிக்கும்.

**செலவழுங்கக் காரணம்:**

வீட்டின்கண் தலைவியையும் தன் உள்ளத்தினையும் தேற்றுதற்காகவும், இடைச்சுரத்தினிடத்துத் தன் உள்ளத்

தினைத் தேற்றுதற்காகவும் பிரிவிற்கு வருந்துவானே தவிர தலைமகன் தான் குறிப்பிட்ட செயலுக்குப் போகாமல் இரான். (செலவழுங்கல்- பிரிவிற்குவருந்துதல்.)

**சிறு பொழுதின் வகை:**

மாலை, யாமம், வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல் என்பன சிறுபொழுதின் வகைகளாகும்.

இவற்றுள் மாலையாவது-இராப் பொழுதின் முற்பகுதி யாமமாவது-இராப்பொழுதின் நடுப்பகுதி, வைகறையாவது-இராப்பொழுதின் பிற்பகுதி, விடியலாவது-பகற் பொழுதின் முற்பகுதி, எற்பாடாவது-பகற் பொழுதின் பிற் பகுதி, நண்பகலா வது-பகலின் நடுப்பகுதி.

**தலைமக்கள் நாடிடையிட்டுச் செல்லுங்கால் செல்லுந்திறன்:**

ஓதற்பிரிவு முதலிய பிரிவின் கண் தலைமக்கள் நடந்து செல்லுதலும், குதிரை, யானை முதலியவற்றில் ஊர்ந்து செல்லு தலும், கலத்தில் அமர்ந்து நீர்வழியாகச் செல்லுதலுமாம்.

**தலைமக்கட்காகாத குணம்:**

பொறாமை, அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி, தம்மைப் பெரியராகமதித்தல், பிறனைக் காணாதவிடத்து இகழ்ந்து கூறுதல், கடுஞ்சொல் கூறுதல், மறதி, முயற்சியின்மை, தம்முடைய குலச்சிறப்பை யெண்ணி மதித்து இன்புறுதல், பேதைமை, தான் காதலிக்கப் பட்டாரைக் கண்டவழி அவர் போல்வார் இவர் என ஒப்பிட்டு நினைத்தல் ஆகியவை தலைமக்கட்கு இருத்தல் கூடாத குணங்களாகும்.

**தலைமகள் அறத்தொடு நிற்குமிடம்:**

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்ற மூன்று புணர்ச்சிக் கண்ணும், ஒரு வழித் தணத்தலானும் தலைவன் வரவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலானும், செவிலி தலைமகனைப் பகற் குறி, இரவுக்குறி ஆகிய இடத்தில் காண்டலானும், இற் செறித்தலானும், தனக்குத்துன்பம் மிகுமாயின் தன்னைத் தோழி வினவிய விடத்தும் வினவா விடத்தும் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்பாள்.

**தலைமகளாற் பெறும் இயற்கைப் புணர்ச்சி:**

தலைமகளாற் பெறும் இயற்கைப் புணர்ச்சி தலைமகன் முயற்சியால் முடிவதாகும் இப்புணர்ச்சி வேட்கை யுணர்த்தல்,

*மறுத்தல், உடன்படல், கூட்டம் என்ற நான்கு வகையினை யுடையது.*

*இவற்றுள் வேட்கை உணர்த்தலாவது-தலைவிக்குத் தலைவன் தன்வேட்கையைத் தெரிவித்தல், மறுத்தலாவது-தலைவி அதனை மறுத்தல், உடன்படலாவது-தலைவி புணர்ச்சிக்கு இணங்குதல், கூடுதலாவது-தலைவன் தலைவியைக் கூடுதல்.*

**தலைமகளாற் பெறும் இயற்கைப் புணர்ச்சியின்விரி:**

*இரந்து பின்னிற்றற் கெண்ணல் இரந்து பின்னிற்றல், முன்னிலையாக்கல், மெய் தொட்டுப் பயிறல், பொய் பாராட்டடல், இடம் பெற்றுத்தழாஅல், வழிபாடு மறுத்தல், இடையூறு கிளத்தல், நீடு நினைந்திரங்கல், மறுத்தெதிர்கோடல், வறிது நகை தோற்றல், முறுவற் குறிப்புணர்த்தல், முயங்குதலுறுத்தல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல், முதலிய பதினைந்தும் தலைமகளாற் புணரும் இயற்கைப் புணர்ச்சியின் விரிகளாகும்.*

**தலைவிக்கு ஊடல் நிகழும் இடம்:**

*அயன்மனைப் பிரிவு, அயற்சேரியின் அகற்சி, புறநகர்ப் போக்கு ஆகிய மூவகைப் பரத்தையிற் பிரிவின் கண்ணும் தலைவன் மீது தலைவி ஊடல் கொள்வாள். (ஊடல்- கணவன் மனைவியருக்கிடையில் ஏற்படும் காதற்பிணக்கு)*

**தலைவி அறத்தொடு நிற்குந்திறன்:**

*களவுப் புணர்ச்சியால் அலர் எழுதல் கண்டு தந்தையர் முதலாயினோர் வெறுப்படைந்ததறிந்த தலைவன் பிரிந்து செல்ல பிறிவாற்றாத தலைவி அழ, தோழி அருகில் இருந்து ஆற்றுவித்து அவள் கண்ணீரைத் துடைத்து அழுதற்குக் காரணங் கேட்டலும், தலைமகள் தன் அழுகைக்குக் காரணங் கூறுதலும், தலைவன் தெய்வத்தைக் காட்டிக் கரியென்று சூளுறவு சொல்ல, உண்மையென்று தெளிந்து அதனைப் பாங்கிக்குப் பொருந்தக் கூறுதலும், தலைவி தலைவன் நீங்கினமை கூறலும், தலைமகன் பண்பைத் தோழி பழித்துக் கூறுதலும், அங்ஙனங் கூறக் கேட்ட தலைமகள் சொற்பொருள் ஓரியல்புபட மொழிதலும், தெய்வத்தின் முன்னே பிரியே னென்று ஆணை யிட்டுப் பிரிந்து போனாரால் தெய்வங் கொடுந் தெய்வமாதலால் சீறாதபடி அவர் எங்கட்குக் குற்றஞ் செய்தாரல்லர், நீ பொறுத்துக் கொள் என்று வேண்டிக் கொள்ளுதற்கு இரண்டுபேரும் செல்வோம் என்று தலைவி பாங்கியுடன் கூறுதலும், தன்மெய் வேறு*

*பாட்டாலும், ஊரிலுள்ளார் அலர் தூற்றலாலும் நற்றாய் உள்ளத்தில் வெறுப்பு உண்டாகி என்னைக் காவல் செய்தாள் என்று தலைவி பாங்கிக்குக் கூறுதலும், செவிலித்தாய் இருட்குறியிடத்துத் தலைவன் வரக்கண்டாள் எனத் தலைவி பாங்கிக்குக் கூறுதலுமாகிய ஏழும் பாங்கிக்குத் தலைவி அறத்தொடு நிற்குந்திறனாகும்.*

**தலைமகன் பிரியும் பிரிவிற்குச் சிறப்பு விதி:**

*தலைமகனுக்குக் கூறப்பட்ட அறுவகைப் பிரிவேயன்றி, குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல் ஆகிய நால்வகை நிலத்தினும் தெய்வங்கட்கு நடைபெறும் திருவிழாக் காரணமாகவும், மேற்கூறிய நிலத்தில் வாழும் மக்கள் அறநெறி தவறிய விடத்து அவற்றை நீக்கி அறத்தை நிலை நிறுத்தற் பொருட்டும், தலைமகன் தலைவியைப் பிரிந்து செல்வான்.*

**தலைமகன் பிரிவுக்கு இலக்கணம்:**

*ஓதற் பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு ஆகிய ஐவகை பிரிவுக்குத் தலைமகன் பிரியும் பொழுது தலைவியிடம் தம் பிரிவைச் சொல்லியும் பிரிவான், சொல்லாமலும் பிரிவான். ஆனால் பாங்கியிடத்துத் தன்னுடைய பிரிவைக் கூறிவிடுவான். தலைவன் தலைவியிடம் தம்பிரிவைக் கூறாவிட்டாலும் அவனது குறிப்பால் தலைவன் பிரியப் போகிறான் என்பதைத் தலைவி அறிந்து கொள்வாள்.*

**தலைமகன் செலவழுங்கல்:**

*ஓதற் பிரிவு முதலிய ஐவகைப் பிரிவின் கண்ணும் பிரியுந் தலைமகன் போதற்கேயன்றிப் போகாமைக்கும் உரியவனாவான். (அழுங்கல்=கவலுறல்; செல்லத் தயங்குதல்.)*

**தன்மனைவரைதல்:**

*உடன் போக்குப் போய் மீண்டுவந்த தலைவன் தன்னூர்க்குத் தலைவியைக் கொண்டு சென்று தன் மனையின் கண் வரைந்து கொள்ளுதல். இது வினாதல், செப்பல், மேவுதல் என மூவகைப்படும்.*

**தன்மனைவரைதலின் விரி:**

*தலைவி நற்றாய் தன் இல்லில் மணஞ் செய்யும் விருப்பினாற் செவிலியை வினாதலும், செவிலித்தாய்க்குத் தோழி தலைவன் தலைவியை மணந்து கொண்டமையைத்*

தெரிவித்தலும், தலைவியின் மணம் நடந்தேறியதைச் செவிலி நற்றாய்க்குக் கூறுதலும், தலைவன் தோழிக்கு யான் தலைவியை வரைந்து கொண்டதை நுமர்க்குக் கூறுக வெனக் கூறுதலும், தோழி இச்செய்தியை முன்னமே கூறியதைத் தலைவனுக்குக் கூறுதலும் ஆகிய ஐந்தும் தன் மனைவரைதலின் விரிகளாகும்.

**திணைமயக்கம்:**

ஒரு திணைக்குரிய நிலமொழிந்த முதற்பொருளும், கருப் பொருளும் மற்றொரு திணைக்குரிய முதற்பொருள், கருப் பொருளோடு சேர்ந்துவருவது திணைமயக்கமாம்.

**துணைவயிற் பிரிவுக்கு உரியர்:**

தன் நண்பனாகிய அரசனுக்குப் பகைவேந்தர்களால் துன்பம் நேர்ந்தவிடத்து, அத்துன்பத்தைப் போக்கத் துணையாகத் தலைமகன் பிரியும் பிரிவு துணைவயிற் பிரிவாகும். இப்பிரிவு ஓராண்டு காலவெல்லையினையுடையதாம். இப்பிரிவின் கண் பிரிந்து சென்ற தலைமகனும் வினை நீட்டித்த விடத்துப் பாசறைக் கண்ணேயிருந்து தலைவியை யெண்ணிப் புலம்புதலும் உண்டு.

**தூதிற்பிரிவு:**

அரசர் இருவர் தம்முள் போர் செய்த வழி அப்போரை நிறுத்தி அவரைச் சந்து செய்விப்பதற்குத் தலைவன் பிரியும் பிரிவு தூதிற்பிரிவாகும். இப்பிரிவு ஓராண்டு கால வெல்லையினை யுடையது. இப்பிரிவின் கண் சென்ற தலைமகன் வினை நீட்டித் தவிடத்துப் பாசறைக் கண்ணேயிருந்து தலைவியை யெண்ணிப் புலம்புதலும் உண்டு.

**தெளித்தல்:**

இது மீட்சியின் வகைகளுள் ஒன்று. செவிலித்தாய் நற் றாய்க்குத் தலைவி நெடுந்தூரம் சென்று விட்டதனைக் கூறி அவளைத் தெளிவித்தலும், உடன்போய் மீண்டு வருகையில் தலைவன் தலைவியினது ஊரைச் சேர்ந்தமையைக் கூறித் தலைவியைத் தெளிவித்தலுமாம்.

**தெய்வத்தால் புணரும் இயற்கைப் புணர்ச்சி:**

தெய்வத்தாற் புணரும் இயற்கைப் புணர்ச்சி முயற்சியின்றித் தானே முடிவதாகும். இப்புணர்ச்சி கலந்துழி மகிழ்தல், தலைவியின் அழகினைப் பாராட்டிக் கூறுதல், ஏற்புறவணிதல் என்னும் மூவகை விரியினையுடையதாம்.

**தெளிவு:**

*தலைவன் கூறிய சொல்லைத் தலைவி மெய் எனத் தெளிந்து ஆற்றுதல் தெளிவாகும்.*

**தேற்றல்:**

*இதுவும் உடன் போக்கின் வகைகளுள் ஒன்று. கண்டோர் தலைவன் பதி அணிமையானமையைக் கூறி விடுப்பத் தலைவனுடன் சென்ற தலைவிக்குத் தன்பதி அடைந்ததனைக் கூறித் தலைவன் அவளைத் தேறச் செய்தல்.*

**தோழி உரிமை:**

*செவிலிக்கு மகளாய்ப் பிறந்து நன்மையுந் தீமையும் ஆராயும் அறிவுடையவளாய்த் தலைமகட்குச் சிறந்த துணையாய், அவளது வருத்தத்தைப் போக்குவதற்குரிய அன்புபொருந்திய துணையாக இருப்பவளே தோழியாவள்.*

**நகை:**

*இது எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று. இகழ்தல், இளமை, அறிவின்மை, மடமை என்று கூறப்பட்ட நான்கிடத்தும் நகை தோன்றும். இவற்றுள் இகழ்தல் என்பது தான் பிறரை இகழ்ந்து நகுதலும், பிறரால் இகழப்பட்டவழித் தான் நகுதலும் என இரண்டாம் இளமை யென்பது தான் இளமையாற் பிறரை நகுதலும், பிறரிளமை கண்டு தான் நகுதலும் என இரண்டாம் பேதமை யென்பது அறிவின்மை மடமை யென்பது அறிந்தும் அறியாதது போன்று இருத்தல்.*

**(எ.டு)**

> **"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்" (புறம்–12)**
> **இது எள்ளல் காரணமாக நகை பிறந்தது.**
>
> **"நகையாகின்றே தோழி . . . . . . . . .மம்மர் நெஞ்சினன்**
> **தொழுது நின்றதுவே" (அகம்–56)**

*இது பேதமை காரணமாக நகை பிறந்தது.*

**நற்றாய் அறத்தொடு நிற்குந்திறம்:**

*நற்றாய் அறத்தொடு நிற்குங்காலத்துத் தலைவியின் களவொழுக்கத்தை வாய்திறந்து கூறாள். அதனைத் தலைமகளின் தந்தையும் உடன் பிறந்தாரும் நற்றாயின் குறிப்பினானே அறிந்து கொள்வர்.*

**நற்றாய் புலம்பல்:**

தன்னுடைய பெண் காதலுடன் சென்றதனை உணர்ந்து நற்றாய் புலம்புதல்.

**நற்றாய் புலம்பலின் விரி:**

செவிலித்தாய் நற்றாய்க்குத் தலைவியின் உடன்போக்கை வெளிப்படுத்திக் கூறுதலும், தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த நற்றாய் பாங்கியிடம் நீ இதை முன்னமே அறிவித் திருந்தால் அத்தலைவனுக்கு அவளை மணஞ்செய்து கொடுத் திருப்பனே என்று கூறிப் பாங்கியொடு வருந்துதலும், அவ்வாறு கூறக் கேட்ட பாங்கி வருந்துதலும் பாங்கியின் வருத்தத்தைக் கண்ட நற்றாய் வருந்துதலும். நற்றாய் பாங்கியொடுவருந்துதலும், நற்றாய் அயலாரொடு வருந்துதலும், நற்றாய் தலைவி பழகி விளையாடும் இடங்களோடு நொந்து கூறுதலும், ஆகிய இவையெல்லாம் நற்றாய் புலம்பலின் விரிகளாகும்.

**நிலமாகிய முதற்பொருளின் வகை:**

மலையும் மலைசார்ந்த இடமும், சுரமும் சுரஞ்சார்ந்த இடமும், காடும் காடு சார்ந்த இடமும், வயலும் வயல் சார்ந்த இடமும், கடலும் கடல் சார்ந்த இடமும் என முதற்பொருள் பத்து வகைப்படும்.

**நீக்கம்:**

இதுவும் உடன் போக்கிடையீட்டின் வகைகளுள் ஒன்று. தலைமகன் தலைமகளின் சுற்றத்தார் பின்வருதலை உணர்ந்து தலைமகளை விடுத்துச் செல்லுதல்.

**நெய்தற் கருப்பொருள்:**

| | | |
|---|---|---|
| தெய்வம் | - | வருணன் |
| உயர்ந்தோர் | - | சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி |
| குடிகள் | - | நுளையர், நுளைச்சியர், பரதர்,பரத்தியர், அளவர், அளத்தியர் |
| புள் | - | கடற் காகம் |
| விலங்கு | - | சுறாமீன் |
| ஊர் | - | பாக்கம் , பட்டினம் |
| நீர் | - | உவர்க் கேணி, உவர்நீர் |

| | | |
|---|---|---|
| பூ | - | நெய்தற்பூ தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பம்பூ |
| மரம் | - | கண்டல், புன்னை, ஞாழல் |
| உணவு | - | மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள் |
| பறை | - | மீன்கோட்பறை, நாவாய்ப் பம்பை |
| யாழ் | - | விளரியாழ் |
| பண் | - | செவ்வழிப்பண் |
| தொழில் | - | மீன்பிடித்தல், உப்புண்டாக்கல், அவை விற்றல், மீனுணக்கல், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல். |

**நெய்தற்குரிய பெரும் பொழுதும் சிறுபொழுதும்:**

கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என்ற அறுவகைப் பெரும் பொழுதும், எற்பாடாகிய சிறுபொழுதும் நெய்தல்திணைக் குரியவனவாம்.

**பகற்குறி:**

தலைவன் தலைவியைப் பகற்குறியிடத்துக் கூடுதல் பகற் குறியாகும். குறி= குறிப்பிட்ட இடம். அது கூட்டல், கூடல் , பாங்கிற்கூட்டல், வேட்டல் என நால்வகைப்படும். பாங்கியிற் கூட்டத்திற்குரிய கிளவிகளுள் இறுதியிற் பாங்கி தலைமகனுக்குக் குறியிடங் கூறல் முதலாகத் தலைவன் விருந்தினை விரும்புதல் ஈறாகக் கூறப்பட்ட பன்னிரண்டு கிளவிகளும் இதற்குரிய கிளவி களாகும்.

**பகற்குறி இடையீடு:**

பகற்குறியிடத்து வந்த தலைமகன் குறிக்கட் செல்லாது இடையீடு பட்டுப் போதல் பகற்குறி இடையீடாகும்.

**பகற்குறிஇடையீட்டின் வகை:**

விலக்கல், சேறல், கலக்கம் என மூன்று வகையினை யுடைய தாகும் பகற்குறிஇடையீடு. விலக்கல்- தலைவனும் தலைவியும் குறியிடத்து வருதலை விலக்கல். சேறல்-தோழி, தலைவியை ஆடும் இடத்தினின்று அழைத்துச் செல்லுதல், கலக்கம்- தலைவனை அடையப் பெறாமையால் தலைவி மனங்கலங்குதலும், தலைவியை அடையப் பெறாமையால் தலைவன் மனங்கலங்குதலுமாம்.

**பகற்குறி இடையீட்டின் விரி:**

*தலைவனைப் பாங்கி குறியிடத்து வருவதை விலக்கல். தலைவியைப் பாங்கி குறியிடத்து வருவதை விலக்கல். தலைவி தான் விளையாடிய இடத்தைப் பார்த்து வருந்துதல். பாங்கி விளையாடுமிடம் விட்டு நீங்கித் தலைவியைக் கொண்டு தம்மூர்க்குச் செல்லுதல். தலைவன் குறியிட மாகிய மாதவிப் பந்தரிடத்து வந்து நீட்டித்து நினைந்திரங்குதல். தலைவன் தலைவியில்லாத தினைப்புனத்தை நோக்கி வருந்துதல். தலைவியின் ஊர்தேடிச் செல்ல எண்ணி மயங்கிய நிலையில் தலைவன் கூறுதல் ஆகிய ஏழும் பகற்குறி இடையீட்டின் விரிகளாகும்.*

**படைக்கலப் பயிற்சிக்குரியார்:**

*படைக்கலன்களைக் கற்றலும், யானையும், தேரும், குதிரையும் முதலாயின ஊர்தலும் அரசர், வணிகர், வேளாளர் ஆகிய மூவர்க்கும் உரியனவாம்.*

**பரத்தையிற் பிரிவு:**

*தலைமகன் பரத்தை மேற் காதல் கொண்டு தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரிக்குச் செல்லுதல் பரத்தையிற் பிரிவாகும்.*

**பரத்தையிற் பிரிவின் வகை:**

*அயல் மனைக்குத் தலைவியைப் பிரிந்து செல்லுதல், அயற் சேரிக்குத் தலைவியைப் பிரிந்து செல்லுதல், நகர்ப் புறத்திற்குத் தலைவியைப் பிரிந்து செல்லுதல் எனப் பரத்தையிற் பிரிவு மூன்று வகைப்படும். இவற்றுள் அயல்மனைப் பிரிவு காமக் கிழத்தியர் காரணமாகப் பிரிவான். இரண்டாவது மணஞ் செய்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக்கிழத்தியும், காதற் பரத்தையும் விழவும் காரணமாகத் தலைமகன் அயற்சேரியின் கண்ணேபிரிவான். இளஞ்சோலையில் விளையாடுதல் காரண மாகவும், நீர்விளையாட்டு விளையாடுதல் காரணமாகவும் புதியளாகிய பரத்தையைத் தேர்மேல் ஏற்றிக் கொண்டு நகர்ப்புறத்திற்குப் போவான்.*

**பரத்தையிற் பிரிவு நிகழ்தற்காகக் காலம்:**

*பூப்பு நிகழ்ந்து (வீட்டு விலக்கு) நீராடியபின் பன்னிரண்டு நாளுங் கருத்தரிக்குங் காலமாதலாற் பரத்தையிற் பிரிந்த*

தலைமகன் அப்பன்னிரண்டு நாளுந் தலைமகளைப் பிரியப் பெறான்.

**பாங்கற் கூட்டம்: (பாங்கன்=தோழன் பாங்கு =பக்கம்)**

பாங்கனாற் கூடுங் கூட்டம் பாங்கற் கூட்டமாகும். இது சார்தல், கேட்டல், சாற்றல், எதிர்மறை, நேர்தல், கூடல், பாங்கிற் கூட்டல் என ஏழு வகைப்படும். இவற்றுள் சார்தலாவது-தலைவன் தன் பாங்கனைச் சேர்தல். கேட்டலாவது-பாங்கன் தலைவனது வாட்டத்தைக் கண்டு உனக்கு யாதுற்றது என்று தலைவனைவினாதல். சாற்றலாவது-தலைவன் வாட்டத்தின் காரணத்தைத் தெரிவித்தல். எதிர்மறையாவது-பாங்கன் நினக்கிது தகாது எனத் தலைவனை இடித்துரைத்தல். தேர்தலாவது-தலைவன் சொற்படி தலைவியைச் சென்று பார்த்து வந்த பாங்கன் தலைவன் கருத்திற்கு இசைதல். கூடலாவது-தலைவன் சென்று தலைவியைக் கூடல். பாங்கிற் கூட்டலாவது-நின் உயிர்ப் பாங்கியோடு வருக எனக் கூறித் தலைவன் தலைவியை அவள் பாங்கியர்பாற் செல்லவிடுத்தல்.

**பாங்கற் கூட்டத்தின் விரி:**

தலைவியால் உண்டாகிய இவ்வேட்கை பாங்கனாலன்றித் தீராதென் றெண்ணித் தலைவன் பாங்கினைச் சார்தலும் பாங்கன் தலைவனது உள்ளமும் தோளும் வாடிய வேறுபாட்டைப் பார்த்து நினது இவ்வேறுபாடு ஏற்படக் காரணம் யாது வென்று கேட்டலும், இவ்வாறு கேட்டபாங்கனுக்குத் தலைமகன் தனக்கு ஏற்பட்ட வேறுபாட்டின் காரணத்தை விளம்பலும், தலைவன் கூறிய காரணத்தைக் கேட்ட கற்றறி பாங்கன் இடித்துக் கூறுதலும். பாங்கன் கூறியவற்றைக் கேட்ட தலைவன் அவனது கட்டுரையை மறுத்துக் கூறுதலும், அவ்வாறு கூறிய தலைவனைப் பாங்கன் பழித்துக் கூறுதலும், தலைவன் தன் வேட்கையின் தாங்க முடியாத நிலையைக் கூறுதலும், பாங்கன் தலைவனின் நிலையை யெண்ணித் தன்னுள்ளத்தே யிரங்குதலும், பாங்கன் தலைவன் நிலைகண்டு வருந்தி அவனோடு கூறுதலும், தலைவியைப் புணரா விடில் தலைவன் இறந்து படுவான் என்று அறிந்து, தலைவனை நோக்கி நின்னால் காணப்பட்ட தலைவி எவ்விடத்து நிற்பாள்? அவளது தன்மை யென்ன என்று பாங்கன் வினாதலும். தலைவன் தன்னாற் காணப்பட்ட தலைவி நிற்குமிடம், அவளது தன்மை ஆகியவற்றைக் கூறுதலும். நீ கூறிய குறியிடத்துச்

சென்று தலைவியைக் கண்டு வருகிறேன் என்று தலைவனைத் தேற்றுதலும், தலைவன் கூறிய குறியிடத்துத் தலைவியைக் காணப் பாங்கன் செல்லுதலும், பாங்கன் அவ்விடத்துத் தலைவியைப் பார்த்தலும், தலைவியின் பேரழகைக் கண்டு பாங்கன் காணாமுன்னம் எந்தலைவனை அறிவின்றி இகழ்ந்தனெம் என்று இரங்கிக் கூறுதலும், தலைவியின் கண்வலையிற் சிக்கி அத்தடையோடுந் தலைவன் நம்மிடத்து வந்தது வியப்பென்று பாங்கன் அதிசயித்துக் கூறுதலும், தலைவியைப் பாங்கன் வியந்து கூறுதலும், தலைவி குறியிடத்துத் தனித்து நிற்கின்ற நிலையைக் கண்டுவந்து பாங்கன் தலைவற்குக் கூறுதலும், பாங்கன் கட்டளைப்படி தலைவன் குறியிடத்துச் செல்லுதலும், தலைவன் தலைவியைப் பார்த்தலும், தலைவியைப் புணர்ந்து மகிழ்தலும், தலைவியைப் புகழ்தலும். இனி நீ வருங்கால் நின் உயிர்ப்பாங்கியோடு வருகெனத் தலைவியை நோக்கித் தலைவன் கூறுதலும், தலைவன் தலைவியை ஆயத்துச் செலுத்துதலும் ஆகிய இருபத்தேழு துறைகளும் பாங்கற் கூட்டத்தின் விரிகளாகும்.

**பாங்கிமதி உடன்பாடு:**

மதிஉடன்பாடு: அறிவால் ஒப்புதல். பாங்கி தலைவியின் வேறுபாடு கண்டு புணர்ச்சி உண்மை அறிந்து ஆராய்ந்து தன் மதியை உடன் படுத்தல் பாங்கிமதி உடன் பாடாகும். இது முன்னுறவுணர்தல், குறையுற வுணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என மூவகைப்படும்.

**பாங்கி அறத்தொடு நிற்கும் திறம்:**

முன்னிலைப் புற மொழியும், முன்னிலை மொழியுமாகிய இரண்டினாலும் பாங்கி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்பாள். முன்னிலைப் புற மொழியாவது முன்னிற்பார்க்குக் கூறவேண்டு வனவற்றைப் பிறர்க்குக் கூறுவது போல் கூறுதல். முன்னிலை மொழியாவது முன்னிற்பார்க்கு நேரே கூறுதல்.

**பாங்கி அறத்தொடு நிற்கும் நிலை:**

செவிலித்தாய் தலைமகள் வேற்றுமைக்குக் காரணங் கேட்டவிடத்தும், செவிலித்தாய் வெறியாட்டாளனை யழைத்து மகட்கு நோய் வந்த வழியும், அது நீங்கும் வழியும் சொல்ல

வேண்டுமென்று கேட்ட விடத்து தெய்வம் வந்தாடும் போது பாங்கி அத் தெய்வத்தை ஆடவேண்டா என்று விலக்குதலும், அவ்வாறு வெறி விலக்கியதற்குப் பாங்கியைச் செவிலி காரணம் வினாவிய விடத்தும், பாங்கி பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி ஆகியவற்றால் தலைவியின் களவைச் செவிலித்தாய்க்கு வெளிப்படுத்துவாள்.

**பாங்கியிற் கூட்டத்தின் விரி:**

தலைவன் தன் உள்ளத்தின்கண் தலைவிமேல் கொண்ட காதலைப் பாங்கியிடங் கூறுதல். இவ்வாறு தலைவன் கூறிய தற்குப் பாங்கி குலமுறை பொருந்தாது என மறுத்துக் கூறுதல், தலைவன் தலைவியின் குலத்தை உயர்த்திக் கூறுதல். தலைவன் தலைவியிடத்துக் காதல் கொண்டது அறியாள் போன்று நீ எவளிடத்துக் காதல் கொண்டாய் எனப் பாங்கி வினாதல், தலைவன் தலைவியின் இயல்புகளை இயம்பல். தலைவி தெய்வப் பெண் என்று கூறி அவளை அடைவது அருமையெனத் தலைவனுக்குத் தலைவியது அருமையைப் பாங்கி கூறுதல். தலைவன் தலைவி இன்றியமையாமை கூறல். நின் குறையை நீயே சென்று தலைவியிடங் கூறுக வெனத் தலைவனிடம் பாங்கி கூறுதல். பாங்கியைத் தலைவன் பழித்தல். தலைவி பிறர் துயரம் அறியா ளெனப் பேதைமைமைப் பாங்கி தலைவன் உளங் கொளக் கூறல், தலைவி தனக் கருளின தன்மையையும். அவளது மூதறிவுடைமையையும் தலைவன் பாங்கியிடங் கூறல். இவ்வாறு கூறக் கேட்ட பாங்கி முன் நின்வேட்கை தீர்த்தாள் என்று கூறினாயே, அவ்வாறே இன்னுங் கூடி நின் வேட்கையைத் தீர்த்துக் கொள்கவெனப் பாங்கி கூறுதல். இவ்வாறு கூறக் கேட்ட தலைவன் வேட்கை நோய் தன்னை வருத்துந் தன்மையைப் பாங்கியிடம் கூறுதல். இவ்வாறு கூறக்கேட்ட பாங்கி உலகில் வேட்கை கொண்டோர் சான்றோரை முன்னிட்டு வரைந்து கொள்வர்: அவ்வாறே நீயுந் தலைவியை வரைந்து கொள்க எனக்கூறுதல். அதனைத் தலைமகன் மறுத்தல், எங்களுடைய தமர் புனத்தை இராக்காவல் காக்க வருவர். அவர் நின்னைக் காணில் பொல்லாதவராவர் ஆகையால் நீ இப்புனம் விட்டு நீங்குக என அச்சுறுத்துக் கூறுதல், தலைவன் தான் கொண்டு வந்த தழையுங் கண்ணியுமாகிய கையுறைப் பொருளைப் புகழ்ந்து கூறுதல். பாங்கி அதனை மறுத்தல், ஆற்றாமையாகிய

நெஞ்சினோடு தலைவன் வருந்திக் கூறுதல். இத்துணையும் ஐந்தாம் நாள் நடைபெறும் நிகழ்ச்சிகளாகும்.

மறுநாட்காலையில் வந்த தலைமகன் பாங்கியால் காரியம் நடைபெறாது என்றெண்ணி இனி நாம் மடலேறுதலே செய்ய வேண்டிய செயல் எனத் தன் உள்ளத்தில் கூறிக் கொள்ளுதல், மடலேற்றினை உலகின் மேல் வைத்துப் பாங்கிக்குக் கூறுதல், அம்மடலேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துக் கூறுதல். இவ்வாறு கூறக் கேட்ட பாங்கி கிழி தீட்டிய பிறகல்லவா மடலேறுவது, ஆகையால் எம்முடைய தலைவியது உறுப்புக்கள் தீட்டுதற்கு அருமையுடையன என்று கூறுதல். இவ்வாறு தலைவியின் உறுப்புக்கள் எழுதுவது அரிதென்று கூறிய பாங்கியை நோக்கி, யான் தலைவியின் உறுப்புகளை எழுதவல்லேன் என்று தலைவன் தன்னைத் தானே புகழ்ந்து கூறுதல். அவ்வாறு தலைவன் கூறக்கேட்ட பாங்கி மடலேறத் தகாது என அருண்முறைமை கூறுதல். தலைவன் உயிரைத் தாங்கிக் கொண்டு நிற்கும் நிலைமையாகிய மொழியைப் பாங்கி கூறுதல்.

தலைவி காம இன்பம் நுகர்தற்குரிய பருவம் உடையள் அல்லள் எனத் தலைவியது இளமைத்தன்மையைப் பாங்கி தலைவற்குக் கூறுதல், தலைவிதன்னைத் துன்புறுத்திய திறத்தைப் பாங்கிக்குத் தலைவன் கூறுதல். தலைவியின் காலப்பருவத்தின் அருமையைப் பாங்கி கூறுதல், இவ்வாறு கூறக் கேட்ட தலைவன் மலையகத்து யான் வந்த தன்மையைக் கூறுவாயானால் அவர் யாவரென்று கூறாது நின்னைத் தழுவிக் கொள்வாள் எனத் தலைவியின் செவ்வியெளிமையைப் பாங்கிக் கூறுதல். நீவிர் இருவரும் ஒத்து என்னை மறைத்தபின் இக்களவொழுக்கம் ஒழுகுதற்கு எளிதென நகையாடிக் கூறுதல். பாங்கி நகையாடிக் கூறுதல் பொறாமல் தலைவன் புலந்து கூறுதல். இவ்வாறு வருந்திக் கூறிய தலைவனைப் பாங்கி தேற்றுதல். தலைவன் கொடுத்த தழையுங் கண்ணியுமாகிய கையுறைப் பொருளைப் பாங்கி ஏற்றுக் கொள்ளுதல். பாங்கி கையுறையேற்ற பின்பு தலைவன் துன்பம் நீங்கிக் கூறுதல்.

தலைவனது துன்பத்தைப் போக்க ஒப்புக் கொண்ட பாங்கி தலைவியிடத்துத் தலைவனது குறையை யுணர்த்தல். பாங்கி இவ்வுரை கூறவே தலைவிதான் கேட்டு அறியாள்போல மனத்திற் கருதாதவேறொன்றைக் கருதிக் கூறுதல். தலைவியின் நினைவாக வந்தவனைக் கண்டதைப் பாங்கி தலைவிக்குக்

கூறுதல். தன் களவொழுக்கத்தைப் பாங்கியிடம் தலைவி மறைத்தல். இவ்வாறு மறைத்துக் கூறிய தலைவியை உனக்கு நான் வேறோ என்று உவகையாய்த் தழுவிக் கொண்டு கூறுதல். பாங்கி தலைவன் தந்த கையுறையைப் புகழ்ந்து கூறுதல்.

தலைவன் வேட்கையால் கொண்ட துன்பநிலையைத் தலைவிக்குப் பாங்கி கூறுதல். இவ்வாறு பாங்கி கூறியதற்குத் தலைவி விடை கூறாததால் இனி அவர் வரின் என்னால் மறுத்தற்கு இயலாதெனப் பாங்கி பொருத்திக் கூறுதல். தலைவன் எண்ணமும், குறிப்பும் நம்மிடம் இரப்பவன் போற் காணப்படவில்லை, வேறு எண்ணமுடையவனாகத் தோன்றியதென்று கூறுதல். தோழி தலைவியைச் சினத்தல். தலைவி பாங்கியைச் சினத்தல். இறுதியாகத் தலைவி பாங்கி கையிலுள்ள தலைவனது கையுறையை ஏற்றுக் கொள்ளுதல்.

தலைவி தலைவன் தந்த கையுறைப் பொருளாகிய மாந் தழையை ஏற்றுக் கொண்டதைத் தலைவனுக்குக் கூறுதல். பாங்கி தலைமகனுக்குக் குறியிடங் கூறுதல். பாங்கி தலைவியைக் குறி யிடத்துக் கொண்டு போதல். பாங்கி தலைமகளைக் குறி யிடத்துய்த்து நீங்குதல், தலைவி தலைவனிடத்து எதிர்ப்படுதல். புணர்ந்து மகிழ்தல். புணர்ச்சிக்குப்பின் தலைவன் தலைவியைப் புகழ்தல். தலைமகன் தலைமகளை தோழியர் கூட்டத்திற் செல்ல விடுத்தல். தலைவியைக் குறியிடத்து நிறுத்திப் போயின பாங்கி தலைவன் போயின பின்புதான் கையுறைக்குப் போயின பாவனை யாய்க் கையுறை கொண்டுவந்து காட்டல். தலைவியைப் பாங்கியிற் கூட்டல். தலைமகளை ஆயக் கூட்டத்தில் சேர்த்து விட்டு மறு படியும் திரும்பி வந்து தலைமகன் தலைவியை மறவாமை வேண்டுமென்று தலைவனிடம் பாங்கி கூறுதல். உறவினர் அயலூரிலிருந்து வந்தால் அவர்க்கு உணவு கொடுத்து ஓம்புவது உலகியல்பாகும். அவ்வுலகியல் முறைப்படி தலைமகனை எம்மூர்க்கு வந்து இருந்து போங்கள் எனப் பகற் குறியைப் பாங்கி விலக்குதல். அவ்வுணவினைத் தலைவன் விரும்புதல் ஆகிய அறுபத்தொரு கிளவிகளும் பாங்கியிற் கூட்டத்தின் விரிகளாகும்.

**பாங்கியிற் கூட்டம் :**

பாங்கி கூட்டி வைக்கத் தலைவன் தலைவியைக் கூடுதல் பாங்கியிற் கூட்டமாகும். இக்கூட்டம் இரந்து பின்னிற்றல், சேட் படை, மடற்கூற்று, மடல்விலக்கு, உடன்படல், மடற் கூற்றொழி

தல், குறை நயப்பித்தல், நயத்தல், கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல் எனப் பன்னிரண்டு வகைப்படும்.

இரந்து பின்னிற்றல் - தலைவன் பாங்கியினிடத்துத் தன் குறையைத் தீர்க்க வேண்டும் என இதமாகச் சொல்லுதல். சேட் படை-பாங்கி தலைவன் குறையைத் தீர்க்க உடன்பட மறுத்தல். மடற்கூற்று-தலைவன் மடல் ஏறுவல் எனக் கூறுதல். மடல் விலக்கு - பாங்கி, அவன் மடலேறுதலை விலக்கல். உடன்படல் - பாங்கி தவைனது குறையை முடிக்க நேர்தல். மடற்கூற் றொழிதல் - தலைவனது குறையைத் தீர்க்கப் பாங்கி உடன்பட்டமையின் தலைவன் ‘நான்மடலேறுவல்’ என்று கூறியபடி மடலேறாமல் அதனை விடுத்தல். குறை நயப்பித்தல் - பாங்கி தலைவனது குறையை முடித்தற்குத் தலைவியை விரும்புவித்தல். நயத்தல் - தலைவி தலைவனது குறையை முடிக்க உடன்படல். கூட்டல் - பாங்கி குறியிடத்துத் தலைவியை உய்த்தல். கூடல் - தலைவன் தலைவியைக் கூடுதல். ஆயங்கூட்டல் - பாங்கி தலைவியை அழைத்துச் சென்று பாங்கியரிடத்தில் சேர்த்தல். வேட்டல் - தலைவன் பாங்கியின் சொற்படி விருந்து விரும்பல்.

**பாங்கி மகிழ்ச்சி :**

தோழியினது மகிழ்ச்சி. இது வரையும் நாளளவும் ஆற்றி யிருந்தமையைத் தலைவியையும் தலைவனையும் தோழிவினாவு தலாலும், மணமனைவந்த செவிலிக்குத் தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள அன்பையும் உறவையும் அவர்களின் வாழ்க்கையின் நலத்தினையும் கூறுதலாலும் விளங்கும்.

**பாலைக்குரிய பெரும் பொழுதும் சிறு பொழுதும்:**

இளவேனிற்காலமும், முது வேனிற்காலமும், பின்பனிக் காலமுமாகிய பெரும் பொழுதும், நண்பகலாகிய சிறு பொழுதும் பாலைத்திணைக்கு உரியனவாம்.

**பாலைக் கருப் பொருள்:**

| | | |
|---|---|---|
| தெய்வம் | - | கன்னி (துர்க்கை) |
| உயர்ந்தோர் | - | விடலை, காளை, மீளி, எயிற்றி. |
| குடிகள் | - | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். |
| புள் | - | புறா, பருந்து, எருவை, கழுகு |

| | | |
|---|---|---|
| விலங்கு | - | செந்நாய் |
| ஊர் | - | குறும்பு |
| நீர் | - | நீரில்லாக்குழி, நீரில்லாக் கிணறு |
| பூ | - | குராஅம் பூ, மராஅம்பூ |
| மரம் | - | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் |
| உணவு | - | வழியிற்பறித்த பொருள், பதியிற் கவர்ந்த பொருள் |
| பறை | - | துடி |
| யாழ் | - | பாலையாழ் |
| பண் | - | பஞ்சுரம் |
| தொழில் | - | போர்செய்தல், பகற்கொள்ளையிடுதல். |

**பிரிவுழிக்கலங்கல் :**

புணர்ச்சிக் களத்தினின்று தலைவி பிரிந்த போது தலைவன் கலங்கிக் கூறுதல் பிரிவுழிக் கலங்கலாகும். இது மயங்கிய நிலையில் கூறுதலும், மயக்கந் தெளிந்த பிறகு கூறுதலும் என இரண்டு வகையினையுடையது.

**பிரிவுழிக்கலங்கலின் விரிவு :**

தலைவி காணாததோர் அணிமைக்கண் நின்ற தலைமகன், தலைவி ஆயக்கூட்டத்தில் சேர்ந்தவுடன், அவர் குறுங் கண்ணியும் நெடுந்தோகையும் தளிரும் கொண்டு வந்து வழிபடு வாரும், குற்றேவல் செய்வாரும் பல்லாண்டு கூறுவாருமாய்ச் சூழ்ந்து நிற்க, விண்மீன் நடுவண் தண்மதியம் போல வீற்றிருக் கின்ற தலைவி தனித்து வந்து என்னைக் கூடியது என்ன மாயமோ என்று மயங்கிக் கூறுதலும், தலைவி ஆயக்கூட்டத்திற் செல்லும் போது உயிர்ப்பாங்கி முகத்தை நோக்கிச் செல்லுதல் அறிந்து, அவ்வுயிர்ப் பாங்கியைத் தலைவன் தூதாகப் பெற்று உயிர்வாழ்வதாகக் கூறுதலும், தலைவியின் அழகைப் பரிந்து கொண்டாடலும் தலைவியைத் தந்த பெற்றோர்களைத் தலைவன் வாழ்த்துதலும், இரவில் தலைவி தந்த வேட்கையான் உறக்கம் பெறாது இரவுக் காலத்தை நொந்து கூறுதலும் ஆகிய ஐந்தும் பிரிவுழிக் கலங்கலின் விரியாகும்.

**பிரிவு மகிழ்ச்சி :**

*தலைமகள் தன்னைக் காணாமல் தானவளைக் காண்பதோர் இடத்தின்கண் நின்ற தலைமகன் புணர்ச்சிக் களத்தினின்று பிரிந்து போகின்ற தலைமகளது தன்மையைக் கண்டு மகிழ்தல் பிரிவு மகிழ்ச்சியாகும். இது தன்னெஞ்சொடு கூறுதல், பாகனொடு கூறுதல் என்னும் இரண்டு பாகுபாட்டினையுடையதாம்.*

**பிரிவுடன்படாமை :**

*தலைவன் பிரிவுக்குத் தலைவி உடன்பட மறுத்தல் பிரிவுடன்படாமையாகும்.*

**பிரிவறிவுறுத்தல் :**

*தலைவன் ஓதல், காவல், தூது, துணை, பொருள் ஆகியவை காரணமாகப் பிரியவிருத்தலைத் தோழி தலைவிக்கு உணர்த்தல் பிரிவறிவுறுத்தலாகும்.*

**பிரிவுடன் படுதல் :**

*தலைவன் பிரிவுக்குத் தலைவி உடன்படுதல் பிரிவுடன் படுதலாகும்.*

**பிரிவுடன் படுத்தல் :**

*தோழி தலைவன் பிரிவுக்குத் தலைவியை உடன்படச் செய்தல் பிரிவுடன் படுத்தலாகும்.*

**பிரிவுழிக்கலங்கல் :**

*தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவி வருந்துதல் பிரிவுழிக் கலங்கலாகும்.*

**பின்பனிக்காலத்தின் தன்மை :**

*மாசி, பங்குனி ஆகிய இருமாதங்களும் பின்பனிக்கால மாகும். இக்காலத்து உலவைக்காற்று வீசும். பல பறவை இனமும் கானக் கோழியும் மகிழும். கோங்கும் இலவமும் பூக்கும், பேரீந்துபனை பழுக்கும். பருத்தி வெடிக்கும். இவையே பின்பனிக் காலத்தின் தன்மைகளாகும்.*

**புனல்தருபுணர்ச்சி :**

*இது பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் முறைகளுள் ஒன்று. நின்மகளும் யாமும் ஆற்றில் நீராடினோம். அப்போது ஒரு சுழி வந்து தலைமகளை அமுக்கி இழுத்துச் சென்றது.*

*அவ்வழியே வந்ததலைவன் அவளை எடுத்து வந்தான். அன்று முதல் அவள் அவனையே எண்ணி உடல் மெலிகிறாள் என்று தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலித் தாய்க்குப் பாங்கி அறிவித்தல்.*

**புகழ்தல் :**

*இது உடன் போக்கின் வகைகளுள் ஒன்று. தலைவன் தலைவியை உவந்து கூறுதல்.*

**பூத்தரு புணர்ச்சி :**

*இது செவிலித்தாய்க்குத் தோழி தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்தும் முறைகளுள் ஒன்று. யாம் சோலையில் விளையாடிய காலத்து அவ்வழியே வந்ததலைவன் ஒரு பூவைத் தலைவியிடத்துக் கொடுத்து அணிந்து கொள்கவென்று கூறினான். தலைவியும் அதனைப் பெற்றுக் கொண்டாள். அன்று முதல் அவள் அவன் நினைவாகவே இருக்கிறாள் என்று பாங்கி தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்குப் புலப்படுத்துதல்.*

**பெருந்திணை :**

*தலைமகனுக்கே உரிய மடலேறுதலும், வயது முதிர்ந்த தலைமகன் வயதில் இளையவளாகிய தலைமகளிடத்து இன்பந் துய்த்தலும், வயது முதிர்ந்த தலைமகள் வயதில் இளைய தலைமகனிடத்து இன்பந்துய்த்தலும், தலைமகனும் தலைமகளும் இளமை நீங்கி முதுமையுற்ற காலத்தும் அறத்தின் மேல் மனம் செல்லாது காமத்தின் வயப்பட்டு நிற்றலும், ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மாறுபட்டுவரும் நிகழ்ச்சியும் பெருந்திணை எனப்படும்.*

**பெருந்திணைக்குரிய மெய்ப்பாடு :**

*இன்ப நலத்தினை வெறுத்தல், துன்பத்தின் கண்ணே புலம்புதல்; உருவெளிப்பாடு கண்டு வருந்துதல்; குற்றம் ஆராய்தல்; பசியால் வருந்தி நிற்றல்; பசலை பரவுதல்; உணவு சுருங்குதல்; உண்ணாமையால் உடல் இளைத்தல்; உறங்காமை; கனவை நனவெனமயங்குதல்; தலைவன் கூற்றைப் பொய்யாகக் கொள்ளுதல்; உரைத்த மாற்றத்தை மெய்யே என்று கூறுதல்; தலைவன் குறிப்புகண்டு ஐயப்படுதல்; தலைவன் உறவினரைக் கண்டவிடத்து மகிழ்தல்; அறத்தினை அழித்துக் கூறுமிடத்து நெஞ்சழிந்து கூறுதல்; எவ்வுடம்பாயினுந் தன்னோடு ஒப்புமை கொள்ளுதல்; தலைமகனொடு ஒப்பாகும் என்று மற்றொன்றைக்*

கண்டவிடத்து மகிழ்தல்; தலைமகன் பெயர் கேட்டு மகிழ்தல்; மனங்கலங்குதல் என்பன பெருந்திணைக்குரிய மெய்ப்பாடு களாகும்.

**பெருமிதம் :**

பெருமிதமானது கல்விச் சிறப்பு, தறுகண்மை, புகழ்மை, கொடைத்தன்மை என்று சொல்லப்பட்ட நான்குவகைகளாலும் உண்டாகும். பெருமிதம் - தன்னைப் பெரியனாகமதித்தல். இவற் றுள் கல்வியென்பது-தவம் முதலாகிய வித்தை. தறுகணென்பது- அஞ்சத்தக்கன கண்டவிடத்து அஞ்சாமை. புகழ்மை யென்பது- இன்பமும் பொருளும் மிகுதியாகக் கிடைப்பினும் பழியொடு வருவன செய்யாமை, கொடையென்பது-உயிரும் உடம்பும், உறுப்பும் முதலிய எல்லாப் பொருளுங் கொடுத்தல்.

**பெரும் பொழுதின்வகை :**

கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என பெரும் பொழுது அறுவகைப்படும்.

இவற்றுள், ஆவணித்திங்களும், புரட்டாசித்திங்களும் கார் காலமாகும். ஐப்பசித்திங்களும், கார்த்திகைத் திங்களும் கூதிர் காலமாகும். மார்கழித்திங்களும், தைத்திங்களும் முன்பனிக் காலமாகும். மாசித்திங்களும் பங்குனித்திங்களும், பின்பனிக் காலமாகும்; சித்திரைத் திங்களும், வைகாசித்திங்களும் இளவேனிற் காலமாகும். ஆனித் திங்களும், ஆடித்திங்களும் முதுவேனிற் காலமாகும்.

**பொருள்வயிற் பிரிவு :**

தலைமகன் பொருள் ஈட்டுதல் காரணமாகப் பிரியும் பிரிவு பொருள்வயிற் பிரிவாகும். இப்பிரிவு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நால்வர்க்கும் உரித்தாம். இப்பிரிவு ஓராண்டுக் காலவெல்லையினையுடையது.

**போக்கறிவுறுத்தல் : (அ)**

இது உடன்போக்கிடையீட்டின் வகைகளுள் ஒன்று. ஐம்பத்தாறாம் நாள் தன்னூரை விட்டு நீங்குந் தலைவி எதிர் வந்தவர்களைத் தலைவனுடன் தான் செல்லுதலைத் தோழியர்க்கும் நற்றாய்க்கும் உணர்த்த அனுப்புதலும், அந்தணர்கள் தலைவியின் செலவை நற்றாய்க்குக் கூறுதலுமாம்.

**போக்கறிவுறுத்தல் : (ஆ)**

*இது உடன்போக்கின் வகைகளுள் ஒன்று. தலைவியை உடன் அழைத்துச் செல்லுமாறு தலைவனுக்குத் தோழி கூறுதல்.*

**போக்கல் :**

*இது உடன் போக்கின் வகைகளுள் ஒன்று. தலைவனுடன் தலைவியைப் பாங்கி செல்லவிடல்.*

**போக்குடன் படுத்தல் :**

*இது உடன் போக்கின் வகைகளுள் ஒன்று. உடன் கொண்டு செல்லுதலன்றித் தலைவிக்கு வேறு அடைக்கலம் இன்மையைத் தலைவனுக்கும், கற்பின் மேன்மையைத் தலைவிக்குங் கூறி அவ்விருவரையும் உடன்போக்கிற்கு உடன்படுமாறு செய்தல்.*

**போக்குடன் படாமை :**

*இது உடன்போக்கின் வகைகளுள் ஒன்று. தோழி தலைவியை உடன் அழைத்துப் போகுமாறு கூறியதைத் தலைவனும் தலைவியும் மறுத்தல்.*

**மருதக் கருப்பொருள் :**

| | | |
|---|---|---|
| *தெய்வம்* | - | *இந்திரன்* |
| *உயர்ந்தோர்* | - | *ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி.* |
| *குடிகள்* | - | *உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்.* |
| *புள்* | - | *வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா.* |
| *விலங்கு* | - | *எருமை, நீர்நாய்* |
| *ஊர்* | - | *பேரூர், மூதூர்.* |
| *நீர்* | - | *யாற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர்* |
| *பூ* | - | *தாமரைப்பூ, கழுநீர்ப்பூ, குவளைப்பூ.* |
| *மரம்* | - | *காஞ்சி, வஞ்சி, மருதம்.* |
| *உணவு* | - | *செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி.* |
| *பறை* | - | *நெல்லரிகிணை, மணமுழவு.* |
| *யாழ்* | - | *மருதயாழ்.* |
| *பண்* | - | *மருதப்பண்* |
| *தொழில்* | - | *விழாச் செய்தல், வயற்களை கட்டல், நெல் லரிதல், கடாவிடுதல், குளங்குடைதல், புதுநீராடல்.* |

**மருதத்திற்குரிய பெரும்பொழுதும் சிறு பொழுதும்**

*கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என்ற அறுவகைப் பெரும் பொழுதும், வைகறை விடியல் ஆகிய இருவகைச் சிறுபொழுதும் மருதத்திணைக்குரியனவாம்.*

**மருட்கை :-**

*இது எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று. புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் நான்கிடத்தும் வியப்புத் தோன்றும். இவற்றுள் புதுமையாவது-எவ்விடத்திலும் எக்காலத்திலும் காணப்படாததோர் பொருளைக் கண்ட வழி வியத்தலாம். அது வானூர்தி போவது கண்டு வியத்தல் போல்வன. பெருமையாவது-முன்பு கண்ட பொருள்கள் அவ்வளவிற் பெருத்தன கண்டு வியத்தல். அவை மலையும் யானையும் செல்வமும் முன்பு கண்ட அளவைக் காட்டிலும் மிக்கன கண்டவழி வியப்புத் தோன்றும். சிறுமை யென்பது-மிகவும் நுண்ணியன கண்டு வியத்தல். அது கடுகினுட் துளைபோல்வன. ஆக்கமென்பது-ஒன்றன் வேறுபாடு (பரிணாமம்) கண்டு வியத்தல். அது இளையான் வீரங்கண்டு வியத்தல் போன்றது.*

**மகிழ்ச்சி :**

*இது மீட்சியின் வகைகளுள் ஒன்று. தலைவிக்கு முன் செல்கின்றவர்கள் தலைவியின் வரவைப் பாங்கியர்க்குக் கூறப் பாங்கியர் மகிழ்தலும், பாங்கியர் நற்றாய்க்குக் கூற நற்றாய் மகிழ்தலுமாம்.*

**மாரன் அம்பால்வரும் துயர்**

*சொல்லும் நினைவுமாதல், வெய்துயிர்த்து இரங்கல், மோகம், இறப்பு என்பவை மாரன் அம்பால்வரும் துயராம்.*

**முதற்பொருளின் வகை :**

*நிலம் பொழுது ஆகிய இரண்டும் முதற் பொருளின் வகை களாகும்.*

**முதுவேனிற்காலத்தன்மை :**

*ஆனி, ஆடி ஆகிய இருதிங்களும் முதுவேனிற்காலமாகும். இக்காலத்தில் தூசெழும்படி கோடைக் காற்று வீசும். கானல் தோன்றும். காடை, வானம்படி, காகம், கவுதாரி ஆகியவை மகிழும். மல்லிகை, புளி, பாதிரி ஆகியவை பூக்கும். பாலை,*

காஞ்சிரம், நாவல், இலுப்பை ஆகியவை காய்க்கும். நீர் நிலைகளில் நீர் குறுகும். இங்குக் கூறப்பட்ட உயிரேயன்றி மற்ற உயிர்கள் வாடும். மலர்கள் அழகிழந்து தோன்றும்.

**முல்லைக் கருப்பொருள் :**

| | | |
|---|---|---|
| தெய்வம் | - | நெடுமால் |
| உயர்ந்தோர் | - | குறும்பொறைநாடன், தோன்றல், மனைவி, கிழத்தி. |
| குடிகள் | - | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் |
| புள் | - | காட்டுக்கோழி. |
| விலங்கு | - | மான், முயல். |
| ஊர் | - | பாடி. |
| நீர் | - | குறுஞ்சுனைநீர், கான்யாற்றுநீர். |
| பூ | - | துளசிப்பூ, முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ. |
| மரம் | - | கொன்றை, காயா, குருந்தம். |
| உணவு | - | வரகு, சாமை, துவரை. |
| பறை | - | ஏறுகோட்பறை. |
| யாழ் | - | முல்லையாழ். |
| பண் | - | சாதாரி. |
| தொழில் | - | சாமை வரகு விதைத்தல். அவற்றின் களை கட்டல், அவற்றை அரிதல், கடாவிடுதல், கொன்றைக் குழலூதல், மூவினமேய்த்தல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறாடல். |

**முல்லைக்குரிய பெரும் பொழுதும் சிறுபொழுதும் :**

கார்காலமும் மாலைப் பொழுதும் முல்லைத்திணைக்குரிய காலமாகும்.

**முன்பனிக்காலத்தின் தன்மை :**

மார்கழி, தை ஆகிய இரு மாதங்களும் முன்பனிக் காலமாகும். இக்காலத்துக் கொண்டற்காற்றுவீசும். தூக்கணங் குருவியும், கூகையும், ஆந்தையும் மகிழும். மாவும் சிவந்தியும் மலரும். இலந்தை பழுக்கும். குன்றி காய்க்கும். செந்நெல் விளையும். கரும்பு முதிர்ச்சி அடையும். இவையே முன்பனிக் காலத்தின் தன்மைகளாகும்.

**முன்னுற வுணர்தல் :**

இது பாங்கிமதி உடன்பாடு என்னும் களவியல் கிளவித் தொகைக்குரிய வகைகளுள் ஒன்று. பாங்கற் கூட்டத்துக்கண் தலைவி தலைவனைப் புணர்ந்து மீண்டு வந்து பாங்கிமுன் உற்ற வழிப் பாங்கி, பூவினாலும், சாந்தினாலும், தலைவனுடன் கூடிய கூட்டத்தால் தலைவியிடத்து உளதாகிய நறு நாற்றமும்; கூட்டத் தாற் பிறந்ததோர் அழகும்; தோழியர் கூட்டத்துடன் சேர்ந் தொழுகாது தன்னைத் தனியாகப் பேணியொழுகுதலும்; உண்ணும் அளவிற்குறைதலும்; தான் செய்கின்ற பூப்பறித்தல் நீராடல் முதலிய வினைகளைத் தோழி அறியாதவாறு மறைத்துத் தனியே செய்தலும்; எத்திசையிலும் சென்று விளையாடுபவள். இப்பொழுது குறிப்பிட்ட ஓரிடத்திற்கே செல்லுதலும்; ஓரிடத்திலேயே அதிகமாகப் பழகுதலும் ஆகிய ஏழுவகை மன நிகழ்ச்சிகளைத் துணையாகக் கொண்டு தலைவியை ஐயமுற்று ஆராய்ந்தும் அவற்றால் ஐயந்தெளிந்தும், மெய்யினாலும் பொய்யினாலும் பல்வேறு வகைப்பட்ட இருபொருள் தரும் சொற்களால் ஆராய்ந்தும் பாங்கி கூட்டம் உண்மையை அறிந்து கொள்வாள்.

**மீட்சி :-**

இதுவும் களவுவெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகைகளுள் ஒன்று. புதல்வியைத் தேடிச் சென்ற செவிலி மீண்டு வருதலும், உடன்போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலுமாம்.

**மீட்சியின்வகை :**

தெளித்தல், மகிழ்ச்சி, வினாதல், செப்பல் என்ற நான்கும் மீட்சியின் வகைகளாகும்.

**மீட்சியின் விரி :-**

தலைவி நெடுந்தூரம் சென்றமையைச் செவிலித் தாய் நற்றாய்க் குணர்த்தலும், ஐம்பத்து நான்காம் நாள், தலைவன்

மீட்சியில் தலைவியது ஊரைத்தாம் சார்ந்தமையைத் தலைவிக்குக் கூறுதலும், தமக்கு முன்னால் செல்பவரிடம் தலைவனொடுதான் வருவதைப் பாங்கியர்க்குத் தலைவி கூறிவிடுத்தலும், முன் சென்றவர் தலைவன் தலைவி வருகையைப் பாங்கிக்குக் கூறுதலும், அச்செய்தியைப் பாங்கியர் கேட்டு நற்றாய்க்குக் கூறுதலும், அச்செய்தியைக் கேட்ட நற்றாய் தலைவன் தலைவியைத் தன் இல்லிற்கு அழைத்து வருவானா? அவன் நற்றாய் இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வானா என்பதை வெறி யாட்டாளனிடம் வினவுதலுமாகிய ஆறும் மீட்சியின் விரிகளாகும்.

**மெய்ப்பாடு :**

மெய்யின் கண் தோன்றுவது மெய்ப்பாடு. அஃதாவது. வெண்பளிங்கில் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறத்தே தோன்றுமாறுபோல உள்ளங் கருதியதைச் சொற்றளர்வு, மெய் வியர்ப்பு, கண்ணீர் நிகழ்ச்சி, மெய்விதிர்ப்பு, மெய்வெதும்பல், மெய்ம்மயிரரும்பல் முதலிய குணங்களான் வெளிப்படுத்து வதாம்.

**மெய்ப்பாட்டின் பெயர் :**

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி என்பன மெய்ப்பாட்டின் பெயர்களாகும். இவற்றுள், நகை என்பது-சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என மூன்று வகைப் படும். அழுகை என்பது-துயரம். தானே துயரப்படுதலும், பிறரது துயரங்கண்ட வழி துயரப்படுதலும் என இருவகைப்படும். இளிவரல் என்பது-இழிவு. மருட்கை என்பது-வியப்பு. அச்சமென்பது-பயம். பெருமிதம் என்பது-வீரம். வெகுளி என்பது-கோபம். உவகை யென்பது-காமம் முதலிய மகிழ்ச்சி.

**மெய்ப்பாட்டிற்குரிய பிற இடங்கள் :-**

உடைமை, இன்புறுதல், நடுநிலைமையிற் நிற்றல், எல்லா வுயிர்க்கும் அருள் செய்தல், தன்மை பேணுதல், அடக்கம், நீக்க வேண்டியவைகளை நீக்கி யொழுகுதல், அன்பு, அளவிற் குற்ற மாயினும் குணமாயினும் மிகுதல், பிறரை வருத்தல், சூழ்ச்சி, வாழ்த்துதல், நாணுதல், தூங்குதல், உறக்கத்தின்கண் வாய்ச் சோர்வு படல், சினத்தல், எண்ணுதல், அஞ்சுதல், சோம்பல் கருதுதல், ஆராய்ச்சி, காரிய விரைவு, உயிர்ப்பு, கையாறு, துன்பம், மறதி, பிறராக்கம் பொறாமை, வியர்த்தல், ஐயம், ஒருவனை நன்கு மதியாமை, நடுக்கம் ஆகிய முப்பத்திரண்டும்,

நகை முதலாக உவகை ஈறாகக் கூறப்பட்ட மெய்ப்பாடுகள் அல்லாதவிடத்து மெய்ப்பாடுகளாக வரும்.

**மெய்ப்பாட்டிற்கு ஒப்புமை :**

ஒத்த பிறப்பும், ஒத்த ஒழுக்கமும், ஒத்த ஆண்மையும் ஒத்த வயதும், ஒத்த அழகும், ஒத்த அன்பும், ஒத்த நிறையும், ஒத்த அருளும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும் என்னும் பத்து வகையும் தலைமக்களுக்கு இருக்கவேண்டிய ஒப்புப் பகுதியாம்.

**மெய்ப்பாட்டின் நுட்பம் :**

கண்ணினாலும் செவியினாலும் நன்றாக அறிந்து கொள்ளும் அறிவுடைய மக்கட்கல்லது மெய்ப்பாட்டுப் பொருள் கொள்ளுதல், ஆராய்தற்கு அருமையுடையதாகும்.

**மெய்யுறுபுணர்ச்சி நிகழுங்காலம் :**

தலைமகளைத் தலைமகன் தனியிடத்துக் காணுதலும், இவளைப் பெற வேண்டுமென்னும் உள்ள நிகழ்ச்சியும், இடை விடாது நினைத்தலும், தன் எண்ணம் கைகூடாது வருதலின் உண்ணாமையால் உடல் மெலிதலும், தன் உள்ளத்தில் உண்டா கின்ற வருத்த மிகுதியைப் பிறர்க்கு எடுத்துரைத்தலும், நாணத்தின் எல்லையைக் கடத்தலும், தான் காணுகின்ற பொருள்களெல்லாம் தலைவியின் உறுப்புகளே போலத் தோற்றுதலும், அதுவே, பித்தாதலும், அது காரணமாக மயக்கமுறுதலும், கைகூடாத விடத்து இறந்துபடுதலும் ஆகிய பத்து அவத்தைகளும் ஒருங்கே நிகழுமாயின் தலைமகனுக்கு மெய்யுறு புணர்ச்சி கூடுதற்குரியதாம்.

**மேவுதல் :**

இது தன்மனைவரைதலின் வகைகளுள் ஒன்று. தலைமகன் 'யான் தலைவியை மணந்து கொண்டமையை நுமர்க்குக் கூறுக' எனப் பாங்கியிடங் கூறுதல்.

**வரவு அறிவுறுத்தல் :**

இது உடன் போக்கிடையீட்டின் வகைகளுள் ஒன்று. தலைவியின் சுற்றத்தார் பின்வருதலைத் தலைமகள் கண்டு தலைவனுக்கு உணர்த்தல்.

**வரை விடைவைத்துப் பொருள் வயிற் பிரிதலின் வகை :**

தலைவன் தான் திருமணத்தை இடையிலே வைத்துப் பொருள் காரணமாகப் பிரிந்து போவதைத் தலைவிக்கு

அறிவிக்குமாறு தோழியிடங் கூறுதலாகிய பிரிவறிவுறுத்தலும், தலைவன் பிரிந்து செல்வதற்குத் தோழி உடன்படாமையாகிய பிரிவுடன் படாமையும், பாங்கி உடன்படுதற்குரிய சொற்களைச் சொல்லி அவளை உடன்படச் செய்தலாகிய பிரிவுடன் படுத்தலும், திருமணத்தை இடையில் வைத்துப் பொருள் காரணமாகத் தலைவன் செல்லுதற்குத் தோழி உடன்படுதலாகிய பிரிவுடன் படுதலும், தலைவன் திருமணத்தை இடையே வைத்துப் பொருள் காரணமாகப் பிரிந்த போது தலைவி மனங்கலங்கி வருந்துதலாகிய பிரிவுழிக்கலங்கலும், தோழி தலைவியை இடித்துக் கூறுதலாகிய வன்புறையும், தலைவன் பிரிவினால் உண்டாகிய பொறுத்தற்கரிய துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருத்தலாகிய வன்பொறையும், தலைவன் திரும்பி வரும் வழியில் தன்பிரிவால் தன் தலைவிக்கு உண்டாகக் கூடிய ஆற்றா மையை எண்ணி மனங்கலங்கிக் கூறுதலாகிய வரும் வழிக் கலங்க லும், தலைவன் திரும்பி வந்தபொழுது தலைவி மகிழ்தலாகிய வந்துழிமகிழ்ச்சியும் ஆகிய ஒன்பதும் வரை விடைவைத்துப் பொருள் வயிற்பிரிதலின் வகைகளாகும்.

**வரைவிடை வைத்துப் பொரு வயிற் பிரிதல் :**

திருமணத்தை இடையிலே வைத்துத் திருமணத்திற்கு வேண்டும் பொருள் காரணமாகப் பிரிதல் வரைவிடைவைத்துப் பொருவயிற் பிரிதலாகும்.

**வரைதல் :**

ஐம்பத்தாறாம் நாள் தலைவன் மீண்டு தலைவி மனைக்கண் வாராவிடத்து, தலைவியின் தமர் எதிர் கொண்டு போய் அழைத்து வந்தபின் உலகவழக்கப்படி பலவிதமாக அருங்கலன் முதலிய வேண்டுவன கொடுத்துச் சான்றோரை முன்னிட்டு மணச் சடங்குடனே வதுவை முடித்துக் கோடல் வரைதலாகும்.

**வரைவிற்குரிய கிளவித் தொகை :**

வரைவு மலிவு, அறத்தொடு நிற்றல் என்ற இரண்டும் வரை விற்குரிய கிளவித் தொகையாகும்.

**வரைவு கடாதல் :**

தோழி தலைவனொடு வரைவு கூறிவினாதல் வரைவு கடாதலாகும்.

**வரைவுகடாதலின் வகை :**

தோழியானவள் தலைவியைத் தலைவன் மணந்து கொள்ளுமாறு செய்ய எண்ணித் தலைவனிடம் பொய்யானவற்றைத் தானே புனைந்து கூறுதலும், தலைவன் குறிக்கண் வருதலைப் பொய்யாகவும், வெளிப்படையாகவுந் தோழி மறுத்துக் கூறுதலும், தலைவனிடம், நீ தலைவியை மணந்து கொள்ளாமல் களவின்கண் ஒழுகுதல் நின்னுடைய நாடு முதலியவற்றிற்கு ஏற்புடையதன்று எனத் தோழிகூறுதலும், தலைவனுக்கு மெய்யாயினவற்றைத் தோழி கூறுதலுமாகிய நான்கும் வரைவுகடாதலின் வகைகளாகும்.

**வரைவுகடாதலின் விரி :**

தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலித்தாய் அறிந்து தன்னை வினவியதாகவும், தான் அதற்கு மறைத்துக் கூறிய தாகவும், தோழி தலைவனிடம் கூறுதலும், ஊரில் தலைவியைத் தூற்றும் அலர் விரிந்த தென்று தலைவனுக்கு அறிவுறுத்தலும், களவொழுக்கத்தை நற்றாய் அறிந்தாள் என்று தலைவற்குக் கூறுதலும், நற்றாய் தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணத்தை அறிய வெறியாடுபவனை வினவ எண்ணினாள் என்று தலை மகனுக்கு அச்சமுறுத்திக் கூறுதலும், தலைவியைப் பிறர் மணம் பேசி வந்ததனைத் தலைமகனுக்கு அறிவித்தலும், தோழி தலைவனை நோக்கி நீ மணம்பேசி எங்கள் வளநகர்க்கு வந்தால் எமர் எதிர் கொண்டு வருவாரெனக் கூறுதலும், மணஞ் செய்வதற்குரிய நாளை அறிவித்தலும், தலைமகளின் அறிவின் திறத்தைத் தோழி தலைமகனுக்கு அறிவுறுத்தலும், தோழி தலைவனை இக்குறிக்கண் வராது வேறோர் குறிக்கண் வருக வெனப் பணித்தலும், பகற்குறி வருவானை இருட்குறிக்கண் வருகவெனக் கூறுதலும், இருட்குறிக்கண் வருபவனை பகற் குறிக்கண் வருகவெனக் கூறுதலும், பகற்குறியிலும் இரவுக் குறியிலும் வருகவெனக் கூறுதலும், பகற்குறி இரவுக்குறி ஆகிய இரண்டு குறிகளிலும் வாரற்க எனக் கூறுதலும், தோழி தலைவனிடம் நின்நாட்டிற்கும் ஊருக்கும், குலப்பெருமைக்கும் குடிமைக்கும் புகழுக்கும் வாய்மைக்கும் நீ செய்யும் நல்வினைக்கும் தலைவியை மணந்து கொள்ளாது நடப்பது முறைமையன்று எனக் கூறுதலும், வரும் வழியில் விலங்கால் தோன்றும் அச்சத்தைக் கூறுதலும், தலைமகளது ஆற்றாமையை அவளை மணஞ்செய்து ஆற்றுதல் செய்யத் தலைமகனுக்குக் கூறுதலும், குறியிடத்து நீவருதற்கும் அவள்வருதற்கும் காவல்

மிகுதியாகவுள்ளதென்று தலைமகனுக்குக் கூறுதலும், தலைவியின் காம வேட்கைமிக்கதென்று கூறுதலும், தலைவிக்குக் கனவினால் வந்த துன்பத்தைத் தோழி தலைமகனுக்குக் கூறுதலும், தலைவியின் அழகு அழிந்தமையைத் தலைவனுக்குக் கூறுதலுமாகிய இருபது துறைகளும் வரைவு கடாதலின் விரிகளாகும்.

**வரைவு நிகழுங்காலம் :**

தலைவியின் களவொழுக்கம் வெளிப்படா முன்னும், வெளிப்பட்ட பின்னும் வரைவு நிகழும்.

**வரைதல் வேட்கை :**

ஒன்பதாம் நாள் இரவு இருட்குறி இடையீடு பட்டதனால் பத்தாம் நாள் தலைவி வரைதல் வேட்கையாற் கூறுதல் வரைதல் வேட்கையாகும். அஃது அச்சம், உவர்த்தல், ஆற்றாமை என மூவகைப்படும். அச்சம் - தலைவிதலைவனை அடைதற்கு இடையூறான நிகழ்ச்சிகள் உண்டாகத் தலைவி அஞ்சுதல். உவர்த்தல் - தோழி தலைவனை வெறுத்துக் கூறுதல். ஆற்றாமை - தலைவன் வராமையைத் தலைவி பொறாமல் வருந்துதல்.

**வரைதல் வேட்கையின் விரி :**

தலைமகளைத் தோழி நின் துன்பத்திற்குக் காரணம் யாது எனவினாதலும், தமது களவொழுக்கத்தைச் செவிலி அறிந்து கொண்டமையைத் தலைவி தோழிக்கு அறிவித்தலும், தலைவன் இரவுக்குறிக்கண் வருதற்கு இடையூறாகிய நிகழ்ச்சிகள் நிகழ்தலைத் தோழிக்குத் தலைவி தெரிவித்தலும், நம் நலனுண்ட பாதகர் இருப்பிடத்தை அறிந்து அங்குச் செல்வோம் நீ அஞ்சாதே என்று பாங்கி தலைவிக்குக் கூறுதலும், தோழி தலைவனின் தன்மையைப் பழித்துரைத்தலும், தலைவி தலைவனின் இயல்பைப் புகழ்தலும், தலைவன் கனவில் கூடினனாக, விழித்தபின்பு பொய்யாய்ப் போன துன்பத்தைப் பதினொன்றாம் நாள் தோழியிடம் தலைவி கூறுதலும், தலைவனுடன் கூடப் பெறாமையால் தன் அழகிழந்ததனைத் தோழிக்குத் தலைவி கூறுதலும், தன் துன்பத்தைத் தலைவற்கு உணர்த்தல் வேண்டும் என்று தோழிக்குக் கூறுதலும், யான் காம நோயால் துன்பமடைதலைத் தலைவர்க்கு நீ சென்று கூறுகவெனத் தலைவி கூறியதற்குத் தலைவியை நோக்கித் தோழி சொல்லுதலும்.

உறவினர்களும் அயலாரும் சொல்லும் அலரைக்கருதி அதனால் உண்டாய பயத்தால் தலைமகள் பாங்கியிடங்

கூறுதலும், இருட்குறிக்கண் தலைவன் வந்து செல்லும் வழியைக் கருதி அவ்வழி ஏதத்தால் உண்டாகிய அச்சத்தால் தலைவி கூறுஞ் சொல்லும், காமவேட்கை மிக்குழிக் கடல், கானம், பொழில், விலங்கு, புள்இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறுதலும், தலைவி தன்னிடத்துள்ள துன்பத்தைப் பிறிதொன்றன் மேலிட்டுக் கூறுதலும், தலைவன் வரும் வழியை விலக்கெனப் பாங்கியொடு கூறுதலும், தலைவன் வரும் இருட்குறியை விலக்கெனத் தோழியோடு கூறுதலும், தாய்வெறியாடுதல் கொண்டாள் என்று தலைவர்க்குக் கூறி இருட்குறிவருவதை விலக்கெனத் தலைவி தோழிக்குக் கூறுதலும், பிறர் மணம் பேசி வருவதைத் தலைவர்க்குக் கூறி வரைவு விலக்கெனப் பாங்கிக்குத் தலைவி கூறுதலும், பெரியோரை வரைவு கூறிவர நமர்எதிர்கோடலைச் செய்யென்று தலைவி பாங்கியொடு கூறுதலும் ஆகிய பதினெட்டும் வரைவு கடாதலின் விரிகளாகும்.

**வரைவின் இலக்கணம் :**

வரைவு என்று சொல்லப்படுவது தலைமகன் தலைமகளைக் கொடுத்தற்குரிய முறைமையையுடைய குரவர் முதலாயினோர் கொடுப்பவும், கொடுக்காவிடத்தும் திருமணச் சடங்கொடு பொருந்த மணஞ் செய்து கொள்வதாம்.

**வரைவு மலிதல் :**

வரைவு தொடங்கி நடக்கும் முயற்சி மிகுதல் வரைவு மலிதலாகும். இது பாங்கி வரைவின் பொருட்டு நடக்கும் முயற்சியைத் தலைவிக்குத் தெரிவித்தலும், தலைவன் சுற்றத்தார் மணங்கூறி வந்தபோது தலைவியின் சுற்றத்தார் எதிர்ந்தமையைத் தோழி தலைவிக்குக் கூறுதலும், தம்முடைய சுற்றத்தார் வரைவு எதிர்ந்ததனால் தலைவி மகிழ்தலும், மணம் நேர்ந்த தமர் ஏவலாய்த் தலைவி மணத்தின் பொருட்டுத் தெய்வத்தை வணங்குதல் கண்டு தலைவன் மகிழ்தலும் என நான்கு வகைப்படும்.

**வரைவு மலிதலின் விரி :**

பெண் கொள்ளுதற்குரியார் பெண் கொடுத்தற்குரியார்க்குக் கொடுக்கும் பொருளைக் காதலன் கொடுத்தமையைத் தோழி தலைமகளுக்குக் கூறுதலும், காதலன் கொடுத்த பொருள்களைக் கண்டு, மகட்கு, மணக்காலம் என்று நற்றாய் மகிழும் உள்ளத்து நிகழ்ச்சியைத் தலைவி நினைத்தலும், தலைவன் சுற்றத்தார் மணம் பேசி வந்த விடத்துத் தலைவியின் சுற்றத்தார்

எதிர்ந்தமையைத் தோழி தலைமகட்குக் கூறுதலும், இச்செய்தியைக் கேள்வியுற்ற தலைவி மகிழ்ச்சியடங்காது உள்ளத்தொடு கூறுதலும், தலைவனைத் தோழி வாழ்த்துதலும், தலைவி மணம் பொருட்டாகத் தெய்வத்துக்குச் சிறப்புச் செய்து வாழ்த்திக் கொண்டு நிற்கும் நிலையைப் பாங்கி தலைமகற்குக் காட்டலும், தலைவியின் நிலைகண்ட தலைவன் மகிழ்தலும் ஆகிய ஏழும் வரைவு மலிதலின் விரிகளாகும்.

**வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலின் விரி:-**

தலைவன் தன் திருமணத்திற்கு வேண்டிய பொருள் காரணமாகப் பிரியப் போவதைத் தலைவிக்குக் கூறுமாறு தோழியிடங் கூறுதலும், தோழி, நின்பிரிவை நீயே அவட்குக் கூறுகவெனக் கூறுதலும், தலைவன் காலங்கடக்காமல் விரைந்து வருவேன் என்று பாங்கியொடு கூறி நீங்குதலும், பாங்கி தலைவன் பிரிந்து சென்றதைத் தலைவிக்குக் கூறுதலும், தலைவன் செலவை அறிந்த தலைமகள் வருந்துதலும், இவ்வாறு நீவருந்துவது தகாது என்று தோழி தலைவியை இடித்துக் கூறுதலும், இடித்துக் கூறிய பாங்கியைத் தலைவி மனத்துள் நொந்து கூறுதலும், பாங்கி இடித்துக் கூறியதனை ஊரின் மேல் வைத்துக் கூறுதலும், தலைவர் மீண்டு வருவர் எனத் தோழி ஆற்றுவித்தலும், தலைவன் பிரிந்து சென்ற காலத்து, கார்காலத்திற்கு முன்னே வருவேன் என்று குறிப்பால் கூறிப் போயினான். ஆகையால் அப்பருவங் கண்டு தலைமகள் புலம்புதலும், அவ்வாறு வருந்திய தலைவியின் துன்பம் நீங்கும் வண்ணம் இது கார்கால மேகமன்று, காலமல்லாக் காலத்தில் தோன்றிய மேகம் என்று தோழி கூறுதலும், தலைமகள் தோழி கூறியதனை மறுத்துக் கூறுதலும், தலைவி கார்காலம் வந்ததென்று கூறிய கூற்றைக் கேட்ட பாங்கி, தலைவன்தான் வருகின்ற செய்தியை அறிவித்தற்கு விடுப்ப இப்பொழுது இம்மேகம் வந்து அடைந்ததென்று கூறுதலும், அதைக் கேட்ட தலைமகள் ஆற்றியிருத்தலும், பொருள் திரட்டச் சென்ற தலைமகன் தன் செயல் முடிந்த பிறகு அவ்விடத்துத் தலைவியை நினைத்து வருந்துதலும், செயல் முடிந்து திரும்பி வருங்கால் தேரை விரைந்து செலுத்துகவெனத் தலைவன் பாகனொடு கூறுதலும், தலைவன் வருங்காலத்து மேகத்தை நோக்கிக் கூறுதலும், தோழி வலம் புரியோசையைக் கேட்டுத் தலைவன் வரவைத் தலைமகளுக்குக் கூறுதலும், வலம்புரியைத் தலைவி வாழ்த்துதலும், தலைவன் பிரிந்து சென்ற காலத்து எங்களை நினைத்தீரா எனத் தோழி வினாதலும்,

அதற்குத் தலைவன் உங்களை மறந்தால் அல்லவா நினைப்பதற்கு எனக் கூறுதலும், தலைவியை ஆற்றுவித்திருந்த அருமையைத் தலைமகனுக்குத் தோழி கூறுதலும் ஆகிய இருபத்தொன்றும் வரைவிடைத்துப் பொருவயிற் பிரிதலின் விரியாகும்.

**வரும் வழிக்கலங்கல் :**

வினைமுற்றிய தலைவன் மீண்டு வரும் வழியில் தலைவியின் நிலையை எண்ணி வருந்துதல் வரும் வழிக் கலங்கலாகும்.

**வன்புறை : (அ)**

தலைவன் பிரிந்தவிடத்துத் தலைவி வருந்துவாள். அவ்வாறு வருந்துந்தலைவியைத் தோழி இடித்துக் கூறுதல் வன்புறையாகும்.

**வன்புறை – (ஆ)**

தலைவி ஐயுற்றவழித் தலைவன் ஐயம் நீ ங்க வற்புறுத்திக் கூறுதல் வன்புறையாகும். வன்பு - வலிமை. உறை - உறுத்தல். இது ஐயந்தீர்த்தல், பிரிவுறுத்தல் என இருவகைப்படும். ஐயந்தீர்த்தலாவது தலைவிக்குண்டான ஐயத்தைத் தலைவன் நீக்குதல். பிரிவுறுத்தலாவது தலைவன் தன்பிரிவைத் தலைவிக்கு அறிவித்தல்.

**வன்பொறை :**

தலைவன் பிரிவைத் தலைவி வலிதிற் பொறுத்துக் கொள்ளுதல் வன்பொறையாகும்.

**வாயில் நேர்தல் :**

பாணன் முதலியவர்களின் கூற்றுக்கிணங்கத் தலைமகள் வாயிலை ஏற்றுக் கொள்ளுதல் வாயில் நேர்தலாகும்.

**வாயில் நேர்வித்தல் :**

பாணன், தோழி முதலியோர் தலைமகளை வாயிலை ஏற்றுக் கொள்ளுமாறு செய்தல் வாயில் நேர்வித்தலாகும்.

**வாயில் மறுத்தல் :**

பாணன் முதலியவர்களைத் தலைமகன் வாயிலாக அனுப்பத் தலைவி மறுத்தல் வாயில் மறுத்தலாகும்.

**வாயில் வேண்டல் :**

பரத்தையிற் பிரிந்த தலைமகன் தோழியைத் தனக்கு வாயிலாகுமாறு வேண்டுதல் வாயில் வேண்டலாகும்.

**விலக்கல் :**

*இஃது உடன்போக்கின் வகைகளுள் ஒன்று. தலைவன் தலைவியின் தளர்ச்சி கண்டு அவளுடன் ஓரிடத்தில் தங்கிய போது கண்டோர் அவர்கள் மீது அன்புகொண்டு அவர்கள் செலவை விலக்கித் தங்களோடு தங்கிச் செல்லுமாறு கூறுதல்.*

**வினாதல் : (1)**

*இது தன்மனைவரைதலின் வகைகளுள் ஒன்று. தலைவியின் நற்றாய் 'நம் இல்லின்கண் நம் புதல்விக்குத் திருமணம் நடத்துமாறு தலைமகன் நற்றாயைக் கேட்போமா' என்று செவிலியை வினாதல்.*

**வினாதல் : (2)**

*இது மீட்சியின் வகைகளுள் ஒன்று.*

*உடன்போக்குச் சென்ற தன்மகள் காதலனுடன் வருகின்றாள் என்பதனை அறிந்த நற்றாய் நம் புதல்வியை நம்மனைக்கே கொண்டு வருவானோ? தன்நெடு நகர்க்கே கொண்டு செல்வானோ? என்று வெறியாட்டாளனை வினாவுதல்.*

**வெகுளி :**

*'இது எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று. உறுப்புகள் முதலியவற்றை அறுத்தல், தன்கீழ் வாழ்வோரைத் துன்புறுத்தல், வைதல் அடித்தல், கொலைக்கு ஒருப்படுதல் ஆகிய நான்கு வகையான வெறுக்கத்தக்க செயல்களால் வெகுளி தோன்றும்.*

* * *

# புறப்பொருள்

**அகத்துழிஞையோர்:**

*முற்றப்பட்டோர், மதில்காப்போர் ஆகிய இருதிறத்தாரும் அகத்துழிஞையோராவர்.*

**அகத்தோன் செல்வம்:**

*மதிலின் உட்புறத்தே உள்ள அரசனது படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, நீர்நிலை, ஏமப்பொருண் (பாதுகாப்பு) மேம்படு பண்டங்கள் முதலிய செல்வங்களின் சிறப்பைக் கூறுவது.*

**அகத்தோன் வீழ்ந்த நொச்சி:**

*புறமதிலன்றி உள் மதிலிடத்தும் புறத்தோனால் கைக் கொள்ளப்பட்ட அகத்தோன் விரும்பின மதில் காவல்.*

**(எடு:)**

"இருகன்றி னொன்றிழந்த வீற்றாப் போற்சீறி
யொருதன் பதிசுற் றொழியப்- புரிசையின்
வேற்றரணங் காத்தான் விறல் வெய்யோன் வெஞ்சினத்துக்
கூற்றரணம் புக்கதுபோற் கொன்று"

**அகத்துழிஞை:**

*சினம் மிகுந்த உழிஞை. மறவர் நொச்சியாரைப் போரின்கண் வென்றது, அகத்துழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"செங்கண் மறவர் சினஞ் சொரிவாள் சென்றியங்க
அங்கண் விசும்பின் அணிதிகழும்-திங்கள்
முகத்தார் அலற முகிலுரிஞ்சும் சூழி
அகத்தாரை வென்றார் அமர்."

**அகமிசைக் கிவர்தல்:**

*ஊரில் நடுவண் அமைந்த மதிலும், புறத்தே அமைந்த மதிலும் அன்றிக் கோயிலின் மதிலின் மேல் ஏறி நின்று போர் செய்தற்குப் பரந்து சென்றோன் கூறுபாடே அகமிசைக்கிவர்தலாம்.*

**(எ.டு)**

"வாயிற் கிடங் கொடுக்கி மாற்றினார் தம்பிணத்தாற்
கோயிற் கிடங்கொடுக்கிக் கோண்மறவர்- ஞாயிற்
கொடுமுடிமேய் குப்புற்றார் கோவேந்தர்க் காக
நெடுமுடிதாங் கோட னினைந்து"

*இஃது புறத்தோன் அகமிசைக் கிவர்தல்.*

"புற்றுறை பாம்பின் விடநோக்கம் போனோக்கிக்
கொற்றுறை வாய்த்த கொலைவேலோர்-கொற்றவ
னாரெயின் மேற்றோன்றினா ரந்தரத்துக் கூடாத
போரெயின் மேல் வாழவுணர் போன்று"

*இஃது அகத்தோன் அகமிசைக் கிவர்தல்.*

**அடிப்பட இருத்தல்:**

*உழிஞையரசன் பகைவர் நாடு தன்னகப்படுதற் பொருட்டும் தன்பாற் போர் செய்தற் பொருட்டும் பாசறையிலே நீண்ட காலம் தங்கியது அடிப்பட இருத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஒன்றி யவர்நா டொருவழித்தாய்க் கூக்கேட்ப
வென்றி விளையா விழுமதிலோர்- என்றும்
பருந்தார் செருமலையப் பாடிப் பெயராது
இருந்தான் இகல்மறவர் ஏறு."

**ஆண்பாற்கிளவி:**

*தலைவியின்பால் அவாவுறுதற்குக் காரணமான காமம் எல்லை கடத்தலானே ஏங்கி மயங்கிய தலைவன் கூறியது ஆண்பாற்கிளவி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கயற்கூடு வாள் முகத்தாட் கண்ணிய நெஞ்சம்
முயற்கூடு முன்னதாக் காணின்- உயற்கூடும்
காணா மரபிற் கடும்பகலும் கங்குலும்
நாணாளு மேயா நகை."

**அதரிடைச் செலவு:**

*போர் செய்தற்கு இயலாதவர் ஊரின் கண் தங்கி நிற்க, ஏனைய கரந்தை மறவர் வெட்சி மறவரை அவர் சென்ற வழியே தொடர்ந்து சென்றது அதரிடைச் செலவு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"சங்குங் கருங்கோடும் தாழ்பீலிப் பல்லியமும்
எங்கும் பறையோ டெழுந்தார்ப்ப- வெங்கல்
அழற்சுரந் தாம்படர்ந்தார் ஆன்சுவட்டின் மேலே
நிழற்கதிர்வேல் மின்ன நிரைத்து."

**அரச உழிஞை:**

*உழிஞைவேந்தனது புகழைப் பாராட்டியது அரச உழிஞை என்னும் துறையாம்*

**(எ.டு)**

"ஊக்க முரண்மிகுதி ஒன்றிய நற்சூழ்ச்சி
ஆக்க மவன்கண் அகலாவால்-வீக்கம்
நகப்படா வென்றி நலமிகு தாராற்கு
அகப்படா இல்லை அரண்."

**அரசமுல்லை:**

*போர்செய்யும் களத்தின்கட் பகையை வருத்தும் நெடிய வேலேந்திய காவல் செய்யும் மன்னனது தன்மையைச் சொல்லியது அரசமுல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"செயிர்க்கண் நிகழாது செங்கோல் உயரி
மயிர்க்கண் முரசு முழங்க- உயிர்க்கெல்லாம்
நாவல் அகலிடத்து ஞாயி றனையனாய்க்
காவலன் சேறல் கடன்."

**அரசர்க்குரிய ஐவகைச் செயல்கள்:**

*ஓதலும், வேட்டலும், ஈதலும், படை வழங்கலும், குடி காத்தலும் ஆகிய ஐந்தும் அரசர்க்குரிய கூறுபாடாம்.*

**(எ.டு)**

"ஒருமமுவாள் வேந்த னொருமு வெழுகா
லரசடு வென்றி யளவோ- வுரைசான்ற
வீட்டமாம் பல்பெருந்தூ ணெங்கும் பசுப்படுத்தது
வேட்டநாள் பெற்ற மிகை"

*இஃது வேட்டல்*

"ஆபயன் குன்று மறு தொழிலோர் நூல் மறப்பர்
காவலன் காவா னெனின்"

*இஃது காவல் கூறிற்று.*

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்ட தனோடு நேர்"

*இஃது தண்டம்.*

**அரசவாகை:**

*நுகத்தின் கட் பகலாணி போன்ற நடுவு நிலைமைச் சொல் லினையுடைய வேந்தனது இயல்பினைக் கூறியது அரசவாகை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"காவல் அமைந்தான் கடலுலகங் காவலால்
ஓவல் அறியா துயிர்க்குவகை-மேவருஞ்சீர்
ஐந்தொழில் நான்மறை முத்தீ இருபிறப்பு
வெந்திறல் தண்ணளியெம் வேந்து."

**அரும்பகை தாங்கும் ஆற்றல்:**

*போரிட முடியாத பெரிய பகைக் கூட்டத்தினரையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலாம்.*

**(எ.டு)**

"களம்புகல் ஓம்புமின் தெவ்வீர் போர் எதிர்ந்து
எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே"

**அருளொடு நீங்கல்:**

*இவ்வுலக வாழ்க்கையில் நிகழும் துன்பத்தை உணர்ந்து அதன்கட் பற்று நீங்கியது அருளொடு நீங்கல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கயக்கிய நோயவாய்க் கையிகந்து நம்மை
இயக்கிய யாக்கை இருமுன்- மயக்கிய
பட் படா வைகும் பயன் ஞால நீள்வலை
உட்படாம் போத லுறும்."

**அருளொடு புணர்ந்த அகற்சி:**

*அருளுடைமையோடு பொருந்தின துறவறம்.*

**(எ.டு)**

"தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென் கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்"

**அவிப்பலி:**

*செஞ்சோற்றுக் கடன் அன்றி மற்றையதை எண்ணாத மறவர், பகைவர்கள் நாணுமாறு தம் தலைவன் பொருட்டு முன்பு சொன்ன உறுதிமொழியை மெய்ப்பித்தற்காக வாட்போரின் கண் தமது உயிரைப் பலியாகக் கொடுப்பது அவிப் பலியாகும்.*

**(எ.டு)**

"இழைத்த திகவாமைச் சாவாரே யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்"

**அவையகத்தார் தன்மை:**

*குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை,தூய்மை, நடுவு நிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை, ஆகிய எண்வகைக் குணத்தினைக் கருதிய அவையகத்தாரது நிலைமையாம்.*

**(எ.டு)**

“குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய்மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதலின் பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலு
மழுக்கா றின்மை யாவாஅ வின்மையென
விருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதில் லம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே.

**அவையமுல்லை:**

*குற்றந்தீர நடுவு நிலைமையைச் சொல்லிக் கூறுகின்ற அறங் கூறவையத்துச் சான்றோரது தன்மையைச் சொல்லியது அவைய முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“தொடைவிடை ஊழாத் தொடைவிடை துன்னித்
தொடைவிடை ஊழிவை தோலாத்-தொடைவேட்டு
அழிபடல் ஆற்றால் அறிமுறையேன் றெட்டின்
வழிபடர்தல் வல்ல தவை.”

**அழிபடைதாங்கல்:**

*உழிஞையரால் தமது படை அழிந்தமை பொறாது நொச்சி மறவர் சினந்து தமது மதில் காத்தலின் கண் உறுதி கொண்டது அழிபடை தாங்கல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“பாரிசை பலகடந்து பற்றார் எதிர்ந்தார்
எரிசெய் இகலரணங் கொண்மார்- புரிசை

அகத்தடி உய்யாமை அஞ்சுடர்வா ளோச்சி
மிகத்தடிந்தார் மேனின் றவர்.''

**அறிவன்வாகை:**

*உலகோர் தனது புகழைக் கூறுமாறு . இறப்பு, நிகழ்வு, எதிர் வென்னும் முக்கால நிகழ்ச்சிகளையும் உணர்ந்து கூறும் அறிவனுடைய தன்மையைச் சொல்லியது அறிவன் வாகை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''இம்மூ வுலகின் இருள்கடியும் ஆய்கதிர் போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால்- தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல்.''

**அறுவகைப் பட்ட பார்ப்பனப்பக்கம்:**

*ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறும் பார்ப்பனர்க்கு உரிய கூறுபாடு.*

**(எ.டு)**

''முறையோதி னன்றி முளரியோ னல்லன்
மறையோதி னானிதுவே வாய்மை-யறிமினோ
வீன்றாள் வயிற்றிருந்தே யெம் மறையு மோதினான்
சான்றான் மகனொருவன் றான்''

**இஃது** *ஓதல்.*

''எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு''

**இஃது** *ஓது வித்தற் சிறப்பு.*

''ஈன்ற வுலகளிப்ப வேதிலரைக் காட்டாது
வாங்கியதா யொத்தானம் மாதவத்தோ-னீந்த
மழுவா ணெடியோன் மயக்கஞ்சால் வென்றி
வழுவாமற் காட்டிய வாறு''

*இஃது வேட்பித்தல்.*

“ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்”

**இஃது** *ஈதற் சிறப்பு.*

“தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்துவிடும்”

*இஃது ஏற்றற் சிறப்பு.*

**அன்பு முரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்:**

*மதிலின் உள்ளே யிருப்பவன் வெளியே (புறத்தே) உள்ள வனைத் தன் செல்வ மிகுதியானன்றிப் போர்த்தொழிலான் வருத்தியதைக் கூறுவதாம்.*

**(எ.டு)**

“கலையெனப் பாய்ந்த மாவு மலையென
மயங்கம ருழந்த யானையு மியம்படச்
சிலையலைத் துய்ந்த வயவரு மென்றிவை
பலபுறங் கண்டோர் முன்னா ளினியே
யமர்புறங் கண்ட பசும்புண் வேந்தே
மாக்களி றுதைத்த கணைசேர் பைந்தலை
மூக்கறு நுங்கிற் றூற்றயற் கிடப்பப்
களையாக் கழற்காற் கருங்கனாடவர்
உருகெழு வெகுளியர் செறுத்தன ரார்ப்ப
யுருமிசை கொண்ட மயிர்க்கட்
டிருமுரக சிரங்வூர்கொள்குவமே”

**ஆகோள்:**

*வெட்சி மறவர் பகைவர்களை வென்று கன்றுகளுடன் அவர்களது பசுக் கூட்டங்களைக் கவர்ந்தது ஆகோள் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும்-நடுவூர்க்
கணநிரைக் கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிரை.”

**ஆஞ்சிக் காஞ்சி: அ**

*இறந்துபட்ட அன்பு மிக்க தன் கணவனோடு நெருப்பினுட் புகுந்து உயிர்நீக்கும்மடந்தையினது மிகுதியைச் சொல்லியது ஆஞ்சிக் காஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

“தாங்கிய கேளொடு தானும் எரிபுகப்
பூங்குழை யாயம் புலர்கென்னும்-நீங்கா
விலாழிப் பரித்தானை வெந்திறலார் சீறூர்ப்
புலாழித் தலைக்கொண்ட புண்”

**ஆஞ்சிக்காஞ்சி-ஆ**

*கணவன் உயிரைப் போக்கிய வேலினாலேயே அவனது மனைவி தனது உயிரைப் போக்கிக் கொளினும் ஆஞ்சிக் காஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

“கவ்வை நீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்- அவ்வேலே
அம்பிற் பிறழுந் தடங்கண் அவன்காதற்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று.”

**ஆபெயர்த்துத்தருதல்:**

*வெட்சி மறவர் கைக் கொண்ட ஆக்களைக் குறுநிலமன்ன ராயினுங் காட்டகத்து வாழும் மழவராயினும் மீட்டுத்தருதலாம்.*

**(எ.டு)**

“ஏறுடைப் பெறுநிரை பெயர்தரப் பெயரா
திலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வின் மறவ ரொடுக் கங்காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் னுள்ள
முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கி மான்மேற்
புடையிலங் கொள்வாட் புனைகழ லோயே”

*இது குறுநில மன்னர் நிரை மீட்டது.*

**ஆரெயில் உழிஞை:**

*உழிஞை மறவர் நொச்சியாரின் மதிலினது வன்மையைக் கூறியது ஆரெயில் உழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“மயிற்கணத் தன்னார் மகிழ்தேறல் ஊட்டக்
கயிற்கழலார் கண்கனல் பூப்ப-எயிற்கண்ணார்
வீயப்போர் செய்தாலும் வென்றி அரிதரோ
மாயப்போர் மன்னன் மதில்.”

**ஆர்:**

*தறுகண்மையுடைய சோழன் போர்க்களத்தின்கண் தமக்கு அடையாளமாக அணிந்து கொள்ளும் ஆத்தி மாலையைப் புகழ்ந்தது ஆர் என்னும் துறையாம். (ஆர்-ஆத்திமாலை.)*

**(எ.டு)**

“கொல்களி றூர்வர் கொலைமலி வாள்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேலிளையர்-மல்கும்
கலங்கல் ஒலிபுனற் காவிரி நாடன்
அலங்கல் அமரழுவத் தார்.”

**ஆர் அமர் ஓட்டல்:**

*குறுநில மன்னருங் காட்டகத்து வாழும் மறவரும் போர்த் தொழில் வேந்தரோடு போர்செய்து புறங்காண்டல் ஆர் அமர் ஓட்டலாகும்.*

**ஆளெறிபிள்ளை:**

*ஆனிரையை மீட்டற் பொருட்டு வெட்சி மறவரோடு போர் செய்து ஆற்றாது ஓடி வரும் கரந்தை மறவரை ஒரு மறவன் எதிரே தடுத்து இகழ்ந்து பின்னர்த் தான் ஒருவனுமே சென்று வெட்சி மறவரைக் கொன்று வீழ்த்தியது ஆளெறிபிள்ளை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க ஆளெறிந்து
கொள்ளைகொ ளாயந் தலைக் கொண்டார்- எள்ளிப்

பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்றான் உளன்."

**ஆள்வினை வேள்வி:**

*தான் மேற் கொண்ட தொழில் வெற்றி பெற்ற மன்னனது இல்லறச் சிறப்பைக் கூறியது ஆள்வினை வேள்வி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நின்ற புகழொடு நீடுவாழ் கிவ்வுலகில்
ஒன்ற உயிர்களிப்ப ஓம்பலால்-வென்றமருள்
வாள்வினை நீக்கி வருக விருந்தென்னும்
ஆள்வினை வேள்வி யவன்."

**ஆற்றுப்படையின் இலக்கணம்:**

*பொருள் பெற்று வருகின்ற இரவலன் ஒருவன், பொருள் பெற விரும்பி எதிரே வருகின்ற இரவலன் ஒருவனிடம், தாம் பெற்ற செல்வம் போல அவருக்கும் கிடைத்தற் பொருட்டு, இன்ன வழியே சென்று இன்னானை அடைவீர்களாயின் எம்போன்று பெருஞ் செல்வம் அடைவீர், என்று ஆற்றுப் படுத்துவது ஆற்றுப்படையின் இலக்கணமாகும்.*

**ஆனந்தம்-அ:**

*தன் கணவற்குப் புண்ணோம்பு வாளொருத்தி விரிச்சியும் நிமித்தமும் தீயனவாதல் கண்டு அஞ்சி நடுங்கியது ஆனந்தம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வேந்தார்ப்ப வெஞ்சமத்து வேலழுவம் தாங்கினான்
சாந்தார் அகலத்துத் தாழ்வடுப்புண்-தாந்தணியா
மன்னா சொகினம் மயங்கின வாய்ப்புளும்
என்னாங்கொல் பேதை இனி."

**ஆனந்தம்-ஆ:**

*மிகப்பெரிய போர்ச்செயலில் தலைப்பட்டா னொரு மறவனுக்கு அவன் காதலி இரங்குதலும் ஆனந்தம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“இன்னா சொகினம் இசையா விரிச்சியும்
அன்னா அலம்வருமென் ஆருயிரும்-என்னாங்கொல்
தொக்கார் மறமன்னர் தோலாத் துடிகறங்கப்
புக்கான் விடலையும் போர்க்கு.”

**ஆனந்தப்பையுள்:**

*மூங்கில் போன்ற தோளினையுடைய தலைவி தன் கணவன் இறந்து பட துன்பம் மிக மெலிந்து வருந்தியது ஆனந்தப் பையுள் என்னும் துறையாம்*

**(எ.டு)**

“புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழொளிய மாவிசும்பு சேர-இகழ்வார்முன்
கண்டே கழிகாதல் இல்லையாற் கைசோர்ந்தும்
உண்டே அளித்தென் உயிர்.”

**இயல்மொழி வாழ்த்து: அ**

*இரவலன் புரவலனிடம் இன்ன வள்ளல் இத்தகைய பொருளைக் கொடுத்தார். நீயும் அவர் போன்று எமக்கு வழங்கு வாயாக எனக் கூறுவது இயல் மொழி வாழ்த்து என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்-தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்.”

**இயல் மொழிவாழ்த்து : -ஆ**

*மயக்கமில்லாத பெரிய புகழினையும் குதிரை பூட்டிய தேரினையும் உடைய அரசனது தன்மையினை எடுத்துக் கூறினும் இயல் மொழி வாழ்த்து என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“ஒள்வாள் அமருள் உயிரோம்பான் தானீயக்
கொள்வார் நடுவண் கொடையோம்பான்-வெள்வாள்

கழியாமே மன்னர் கதங்காற்றும் வேலான்
ஒழியாமே ஓம்பும் உலகு.''

**இரவுத்தலைச் சேறல்:**

*மென்மைத் தன்மையுடைய தலைவி செறிந்த இருளை யுடைய நடுயாமத்தே தலைவனைக் காண வேண்டும் என்னும் விருப்பத்தோடே தன் இல்லினின்றும் சென்றது இரவுத்தலைச் சேறல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''பணையாய் அறைமுழங்கும் பாயருவி நாடன்
பிணையார மார்பம் பிணையத்- துணையாய்க்
கழிகாமம் உய்ப்பக் கனையிருட்கண் செல்கேன்
வழிகாண மின்னுக வான்.''

**இரவு நீடு பருவரல்:**

*பகற் பொழுதை வெறுத்துத் தனிமையோடு உறைந்த தலைவி இராப் பொழுதில் காமத்தால் மிகவும் துன்பம் அடைந்தேன் என்று நெஞ்சம் நெகிழ்ந்து சொல்லியது இரவு நீடு பருவரல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''பெண்மேல் நலிவு பிழையென்னாய் பேதுறீஇ
விண்மேல் இயங்கும் மதிவிலக்கி- மண்மேல்
நினக்கே செய்பகை எவன்கொல்
எனக்கே நெடியை வாழியர் இரவே.''

**இருவகைப் பட்ட பிள்ளை நிலை:**

*இருவகைப்பட்ட பிள்ளை நிலையாவது, தன்மேல் வருகின்ற கொடிப் படையை எதிர்த்து நிற்றலும், தன்னுடைய வாள்வன்மையால் பகைவரையும் வீழ்த்தித் தானும் வீழ்ந்து படுவதும் ஆகிய இரண்டு பாகுபாடுகளையுடைய போரில், மறவர்கள் தாமே செய்யும் அஞ்சாமையாம்.*

**(எ.டு)**

''ஏற்றெறிந்தார் தார்தாங்கி வெல்வருகென் றேவினான்
கூற்றினுந் தாயே கொடியளே-போர்க்களிறு

காணா விளமை யார் கண்டிவனோ நின்றிலேன்
மாணாருள் யார்பிழைப்பார் மற்று"

*இஃது வருதார் தாங்கல்.*

"ஆடும் பொழுதி னறுகயிற்றுப் பாவைபோல்
வீடுஞ் சிறுவன்றாய் மெய்ம் மகிழ்ந்தாள்-வீடுவோன்
வாள்வாயின் வீழ்ந்த மறவர்தந் தாயரே
கேளா வழுதார் கிடந்து"

*இது வாள் வாய்த்துக் கவிழ்தல்.*

**இருவரும் தபுநிலை:**

*இருவர் படையும் போர் செய்து மடிந்தமையாலே, இரண்டு மன்னரும் தம்முட் போர் செய்து மடிந்தது இருவரும் தபுநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்தர் இருவரும் விண்படர-ஏந்து
பொருபடை மின்னப் புறங்கொடா பொங்கி
இருபடையும் நீங்கா இகல்"

**இல்லவை நகுதல்:**

*தலைவி தலைவன் செய்யாதனவற்றைச் செய்தனவாகச் சொல்லி நக்கது இல்லவை நகுதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"முற்றா முலையார் முயங்க இதழ்குழைந்த
நற்றார் அகலம் நகைதரலின்- நற்றார்
கலவேம் எனநேர்ந்துங் காஞ்சிநல் லூர
புலவேம் பொறுத்தல் அரிது."

**இல்லாள் முல்லை:**

*காதலுடைய கணவனைத் தொழுதெழும் கற்புடை இல்லாளின் இயல்பு மிகுதியைக் கூறியது இல்லாள் முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கல்லெனீர் வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
ஒல்லும் வகையால் விருந்தோம்பிச்- செல்லுந்தம்
இற்செல்வம் அன்றி இரந்தவர்க் கீகல்லாப்
புற்செல்வம் பூவா புகழ்."

**உட்கோள்: -(அ)**

*வண்டு பொருந்திய மயிரினை யுடைய தலைவனை விரும்பிய தலைவி, அத்தலைவனைக் கூடக் கருதியது உட்கோள் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"உள்ளம் உருக ஒளிவளையும் கைநில்லா
கள்ளவிழ் தாரானும் கைக்கிணையான்-எள்ளிச்
சிறுபுன் மாலை தலைவரின்
உறுதுயர் அவலத் துயலோ அரிதே."

**உட்கோள்: -(ஆ)**

*தலைவி என் நெஞ்சிலே வீற்றிருந்தும், எனது விருப்பத்தின் பெருமையை உணர்ந்திலள் என்று தலைவன் தன் உள்ளத்திலே கருதியது உட்கோள் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கவ்வை பெருகக் கரந்தென் மனத்திருந்தும்
செவ்வாய்ப் பெருந்தோள் திருநுதலாள்-அவ்வாயில்
அஞ்சொல் மாரிபெய் தவியாள்
நெஞ்சம் பொத்தி நிறைசுடும் நெருப்பே."

**உரைகேட்டு நயத்தல்:**

*காமத்துன்பத்தில் அழுந்தியிருந்த தலைவி தலைவனது மொழி கேட்டு விரும்பியது, உரைகேட்டு நயத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆழ விடுமோ அலரொடு வைகினும்
தாழ்குரல் ஏனல் தலைக்கொண்ட-தூழில்

விரையாற் கமழும் விறல்மலை நாடன்
உரையால் தளிர்க்கும் உயிர்.''

**உவகைக் கலுழ்ச்சி:**

*பகைவரது வாளாலே விழுப்புண் பட்டு மாய்ந்தவனது உடலைக் கண்டு, மறக்குடிப் பிறந்த அவனது இல்லாள் உவந்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தது உவகைக் கலுழ்ச்சி என்னும் துறை யாம்.*

**(எ.டு)**

''வெந்தொழிற் கூற்றமும் நாணின்று வெங்களத்து
வந்த மறவர்கை வாள்துமிப்பப்- பைந்தொடி
ஆடரிமா அன்னான் கிடப்ப அகத்துவகை
ஓடரிக்கண் நீர்பா யுக.''

**உழபுலவஞ்சி:**

*வஞ்சி வேந்தன் தன் பகைவருடைய வளப்பம் பொருந்திய நாட்டினைத் தீக் கொளுத்தியது உழபுலவஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

''அயிலன்ன கண்புதைத் தஞ்சி யலறி
மயிலன்னார் மன்றம் படரத்-குயிலகவ
ஆடிரிய வண்டிமிரும் செம்மல் அடையார்நாட்டு
ஓடெரியுள் வைகின ஊர்''

**உழிஞைத்திணை:**

*உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத் திணைக்குப் புறனாம். அது, முழுமையான தலைமையையுடைய பகைவரின் மதிலைக் கைப் பற்றுதலும், அழித்தலுமாகிய வழக் கினை இலக்கணமாகவுடையது. இத்திணையார் உழிஞை மாலையைச் சூடிக்கொள்வர்.*

**உழுதுவித்திடுதல்:**

*உழிஞையார் நொச்சியாரது பலவேறு அரண்களையும் கழுதையாகிய ஏரினைப் பூட்டி உழும்படி செய்து வரகையும் கொள்ளையும் விதைத்தது உழுது வித்திடுதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"எழுதெழில் மாடத் திடனெலாம் நூறிக்
கழுதையோர் கையொளிர்வேல் கோலா-உழுதநற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்
கள்விரவு தாரான் கதம்."

**உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு:**

*பகைவர் நாட்டை வெல்ல வேண்டும் என்று எண்ணிய எண்ணத்தினை முடிக்கின்ற வேந்தனது சிறப்பினை அவன் படைத் தலைவன் முதலியோரும் வேற்றுவேந்தன் பால் தூது செல்வோரும் எடுத்துரைத்தலாம்.*

**உன்னநிலை:**

*வீரக் கழலினையுடைய மன்னனை நிமித்தம் பார்க்கும் மரத்தோடு கூட்டி அவனது மிக்க புகழைக் கூறுவது உன்ன நிலை என்னும் துறையாம். உன்னம் என்பது ஒருவகை மரம். அது நாட்டகத்துக்குக் கேடு வருங்கால் உலறியும் வாராக் காலத்துக் குழைந்தும் நிற்கும் என்பர்.*

**(எ.டு)**

"துன்னருந் தானை தொடுகழலான் துப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க-மன்னரும்
ஈடெலாம் தாங்கி இகலவிந்தார் நீயும்நின்
கோடெலாம் உன்னம் குழை."

**ஊடலுள் நெகிழ்தல்;**

*தலைவி மாலைப் பொழுதிலே தன் நெஞ்சு ஊடிய வழிக் குழைந்தது ஊடலுள் நெகிழ்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"தெரிவின்றி ஊடத் தெரிந்து நங் கேள்வர்
பிரிவின்றி நல்கினும் பேணாய்-திரிவின்றித்
துஞ்சேம் எனமொழிதி தூங்கிருள் மால்மாலை
நெஞ்சே உடையை நிறை."

**ஊரின்கண் தோன்றிய காமப் பகுதி:**

*காதல் மிக்க ஆடவரும் மகளிரும் அழகு பொருந்தக் கூடும் ஊரைப் பாராட்டியது ஊரின் கண் தோன்றிய காமப் பகுதி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஊடிய ஊடல் அகல உளநெகிழ்ந்து
வாடிய மென்தோள் வளையொலிப்பக்- கூடியபின்
யாமநீ டாகென்ன யாழ்மொழியார் கைதொழூஉம்
ஏமநீர்க் கச்சியெம் ஊர்."

**ஊர்கொலை:**

*வெட்சி மறவர்கள் பகைவர் ஊரின்கண் தீ தவழும்படி தம்குதிரைகளை முடுக்கிப் பகைவரது அரண்களை அழித்தது, ஊர் கொலை என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"இகலே துணையா எரிதவழச் சீறிப்
புகலே அரிதென்னார் புக்குப்- பகலே
தொலைவிலார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவிலார் கொண்டார் குறும்பு."

**ஊர்ச்செரு:**

*உழிஞை மறவரால் புகுதற்கரிய காவற் காட்டோடு அகழியும் அப்பகைவரால் சிதைவுறாதபடி நொச்சி மறவர் போர் செய்த மாண்பினைச் சொல்லியது ஊர்ச் செரு என்னும் துறையாம்*

**(எ.டு)**

"வளையும் வயிரும் ஒலிப்பவாள் வீசி
இளையும் கிடங்கும் சிதையத்-தளைபரிந்த
நோனார் படையிரிய நொச்சி விறல்மறவர்
ஆனார் அமர்விலக்கி ஆர்ப்பு."

**எயில்தனை யழித்தல்:**

*மதிலைக் காவல் செய்த நொச்சி மறவரது அழிவைக் கூறியது எயில்தனை யழித்தல் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"அகத்தன ஆர்கழல் நோன்றாள் அரணின்
புறத்தன பேரெழில் திண்தோள்-உறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட
வாட்குரிசில் வானுலகி னான்."

**எயிற்பாசி:**

*உழிஞை மறவர் நொச்சியாரது மதிலிற் சாத்திய ஏணிமேல் ஏறியது எயிற்பாசி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"சுடும ணெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுர ணெஃகங் கழிய- அடுமுரண்
ஆறினா ரன்றி அரவும் உடும்பும்போல்
ஏறினார் ஏணி பலர்."

**எயிற்போர்;**

*மதிலின் கண்ணின்று காவல் செய்யும் நொச்சி மறவரின் போர்த்திறத்தைப் பற்றிப் புகழ்ந்து கூறியது எயிற்போர் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"மிகத்தாய செங்குருதி மேவரு மார்பின்
உகத்தாம் உயங்கியக் கண்ணும்-அகத்தார்
புறத்திடைப் போதந் தடல் புரிந்தார் பொங்கி
மறத்திடை மானமேற் கொண்டு"

**எயிற்கு இவர்தல்:**

*ஒரு காலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப் பகலுக்குள் அழிப்பேம் என்று கூறி அஃது அழித்தற்கு விருப்பங் கொள்ளல்.*

**(எ.டு)**

"இற்றைப் பகலு ளெயிலகம் புக்கன்றிப்
பொற்றாரான் போனகங்கைக் கொள்ளானா-லெற்றாங்கொ
லாறாத வெம்பசித்தீ யாறவுயிர் பருகி
மாறா மறலி வயிறு"

**எரிபரந்து எடுத்தல்:**

*இருவகைப் படையாளும் இருவகைப் பகைப் புலத்துப் பரந்துசென்று எரியை எடுத்துச் சுடுதல்.*

**(எ.டு)**

"களிறு கடை இயதாட்" என்னும் புறப்பாட்டினுள்
"எல்லையு மிரவு மெண்ணாய் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலின்"

**எருமை மறன்:**

*எருமை மறம் என்பது, தனது உடைந்த படைக் கண்ணே ஒரு படைத்தலைவன் சென்று நின்று, அங்ஙனங் கெடுத்த மாற்று வேந்தன் படைத்தலைவனை அவன் எதிர்கொண்டுநின்ற பின்னணியோடு தாங்கின கடாப் போலச் சிறக்கணித்து நிற்கும் தன்மையாம்.*

**(எ.டு)**

"சீற்றங் கனற்றச் சிறக்கணித்துச் செல்லுங்கா
லேற்றெருமை போன்றா னிகல்வெய்யோன்-மாற்றான்
படைவரவு காத்துத்தன் பல்படையைப் பின்காத்
திடைவருங்காற் பின்வருவார் யார்"

**ஏம எருமை:**

*தும்பை மறவன் ஒருவன் பகைவர் களிற்றின்மேல் தன்வேலை எறிந்து பின்னர்த் தன் தோள் வலியானே வெற்றி கொண்டது ஏம எருமை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மருப்புத்தோ ளாக மதர்விடையிற் சீறிச்
செருப்புகன்று செங்கண் மறவன்-நெருப்பிமையாக்
கைக் கொண்ட எஃகங் கடுங்களிற்றின் மேற்போக்கி
மெய்க்கொண்டான் பின்னரும் மீட்டு."

**ஏணிநிலை:**

*உழிஞை மறவர் நொச்சியாருடைய மதிலின்கண் ஏணி சாத்தியது ஏணி நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கற்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும்
விற்பொறியும் வேலும் விலக்கவும்- பொற்புடைய
பாணி நடைப்புரவிப் பல்களிற்றார் சாத்தினார்
ஏணி பலவும் எயில்.”

**ஏணிமிசை மயக்கம்:**

*மதிலின் மீது நன்கு பொருந்துமாறு அமைந்த ஏணியின் மீது ஏறி நின்று மதிலின் அகத்தோனும் புறத்தோனும் போர் செய்தல் ஏணி மிசை மயக்கம் என்னுந்துறையாம்*

**(எ.டு)**

“பொருவரு மூதூரிற் போர்வேட் டொருவர்க்
கொரு வருடன்றெழுந்த காலை-யிருவரு
மண்ணொடு சார்த்தி மதில் சார்த்திய யேணி
விண்ணொடு சார்த்தி விடும்”

**ஏழகநிலை: -அ**

*எம் வேந்தன் ஆட்டுக்கடாமேல் ஏறி ஊர்ந்து விளையாடும் இளைஞனாயிருப்பினும் அரசாட்சித் துறையில் பெரியன் என்று ஓர் இள மன்னனின் சிறப்பைப் பாராட்டுவது ஏழக நிலை என்னும் துறையாம்(ஏழகம்=ஆடு)*

**(எ.டு)**

“எம்மனை யாம் மகிழ ஏழகம் மேற்கொளினும்
தம்மதில் தாழ்வீழ்த் திருக்குமே- தெம்முனையுள்
மானொடு தோன்றி மறலுங்கால் ஏழகத்
தானொடு நேராம் அரசு”

**ஏழகநிலை: -(ஆ)**

*புகழ் பொருந்திய உலகத்தின் கண் ஒரு மன்னன் தனது இளமையை எண்ணாமல் அரசுரிமை மேற்கொண்டு நடத்தலும் ஏழகநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“வேண்டார் பெரியர் விறல்வேலோன் தானிளையன்
பூண்டான் பொழில்காவல் என்றுரையாம்-ஈண்டு

மருளன்மின் கோள்கருது மால்வரை யாளிக்
குருளையும் கொல்களிற்றின் கோடு.''

**ஏறாண்முல்லை:**

*மறப்பண்பு மேலும் வளருமியல்புடைய மறக்குடியின் ஒழுக்கத்தைக் கூறியது ஏறாண்முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்-பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் ஏறு.''

**ஐயம்:**

*மிகுந்த வலிமை பொருந்திய தோளையுடைய தலைவன் ஒரு பூம் பொழிலிடத்து அத்தலைவியைக் கண்ட பின்னர் இன்ன தன்மையுடையாள் இவள் என்று அறியாதவனாய் ஐயமுற்றுக் கூறியது ஐயம் என்னும் துறையாம்*

**(எ.டு)**

''அணங்கு கொல்? ஆய்மயில் கொல்லோ? கணங்குழை
மாதர் கொல்? மாலும் என் நெஞ்சு.''

**ஒருதனி நிலை:**

*தன்படை தளர்தல் கண்ட வஞ்சி மறவன் ஒருவன் தமியனாய்க் கல்லாற் கட்டின அணை வெள்ளத்தினைத் தடுத்தல் போன்று அப்பகைப் படையைத் தடை செய்து நின்ற நிலைமையினைக் கூறியது ஒரு தனி நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடல் முதியாள் வயிற்றிடம்-கூடார்
பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம்.''

**ஒள்வாள் அமலை:**

*வாளேந்திய தும்பை மறவர்கள் போரிற் பட்ட பகை யரசனைச் சூழ்ந்து நின்று அவனது திறம் வியந்து ஆடியது ஒள்வாள் அமலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையார்
ஆளமர் வென்றி அடுகளத்துத்- தோள்பெயராக்
காய்ந்தடு துப்பிற் கழல் மறவர் ஆடினார்
வேந்தொடு வெள்வாள் விதிர்த்து.”

**ஓம்படை :**

*அறிவன் அரசன் முன்னே நின்று இன்ன செயலைச் செய்தல் நினக்குத் தகுதியாம் என்று நன்மையின் பால் மன்னனை ஒப்பு வித்தல் ஓம்படை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“ஒன்றில் இரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே-சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையகத்துள் ஐந்துவென் றாறகற்றி
ஏழ்கடிந்து இன்புற் றிரு.”

**கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்:**

*மூன்று திருக்கண்களையுடைய இறைவனது தழுவுகையை விரும்பின மானிட மகளிரின் காம மிகுதியைச் சொல்லியது, கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“அரிகொண்ட கண்சிவப்ப அல்லினென் ஆகம்
புரிகொண்ட நூல் வடுவாப் புல்லி-வரிவண்டு
பண்ணலங் கூட்டுண்ணும் பனிமலர்ப் பாசூரென்
உண்ணலங் கூட்டுண்டான் ஊர்.”

**கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம்:**

*இமைக்காத கண்களையும் விளங்கும் அணிகலன்களையும் உடைய தெய்வ மகளிர் கடவுளை விரும்பியது கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நல்கெனின் நாமிசையாள் நோமென்னும் சேவடிமேல்
ஒல்கெனின் உச்சியாள் நோமென்னும்-மல்கிருள்
ஆடல் அமர்ந்தாற் கரிதால் உமையாளை
ஊடல் உணர்த்துவதோர் ஆறு."

**கடவுள் வாழ்த்து:**

*உலகங் காக்கும் தொழிலைக் கைக் கொண்ட மன்னவன் கை கூப்பி வணங்குகின்ற அரி, அரன், அயன் என்ற மூவரில் ஒரு கடவுளை விதந்து கூறுவது கடவுள் வாழ்த்து என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வைய மகளை அடிப்படுத்தாய் வையகத்தார்
உய்ய உருவம் வெளிப்படுத்தாய்-வெய்ய
அடுந்திறல் ஆழி அரவணையாய் என்றும்
நெடுந்தகை நின்னையே யாம்."

**கடைநிலை:**

*தொலைவிலிருந்து வருகின்ற வருத்தம் நீங்கும் பொருட்டு வாயில் காத்து நிற்போர்க்கு உரைப்பது கடை நிலையாகும்.*

**(எ.டு)**

"வேற்றுச் சுரத்தொடு வேந்தர்கண் வெம்மையு
மாற்றற்கு வந்தனேம் வாயிலோய்-வேற்றார்
திறைமயக்கு முற்றத்துச் சேணோங்கு கோயி
லிறைமகற்கெம் மாற்ற மிசை"

**கட்காஞ்சி:**

*காஞ்சி மன்னன் தன் வீரர்கட்குக் கள் வழங்கியது கட்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஒன்னா முனையோர்க்கு ஒழிக இனித்துயில்
மன்னன் மறவர் மகிழ்தூங்கா-முன்னே
படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்
விடலைக்கு வெங்கள் விடும்."

**கணிவன் முல்லை:**

*மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், பெரும் பொழுது, அயனம், யாண்டு, ஊழி, எனப் பலவகைப் படும் காலத்தையும், ஞாயிறு முதலிய கோணிலை களையும் கணித்தறியும் காலக் கணிதனுடைய திறத்தைப் புகழ்ந்தது கணிவன் முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"புரிவின்றி யாக்கைபோற் போற்றுப போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத்-திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்
கண்ணி உரைப்பான் கணி."

**கண்டுகண் சிவத்தல்:**

*பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனது நறிய மாலையைக் கண்டு கலங்கித் தலைவி சினந்தது கண்டு கண் சிவத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கூடிய கொண்கன் குறுகக் கொடிமார்பின்
ஆடிய சாந்தின் அணிதொடர்ந்து-வாடிய
தார்க்குவளை கண்டு தரியா இவள்முகத்த
கார்க்குவளை காலுங் கனல்."

**கண்டு கை சோர்தல்:**

*தலைவியினுடைய காமம் கை கடந்து பெருகா நிற்ப, அதனைக் கண்ட தோழி செய்வதறியாது திகைத்தல் கண்டு கை சோர்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆம்பல் நுடங்கும் அணிவளையும் ஏகின
கூம்பல் மறந்த கொழுங்கயற்கண்-காம்பின்
எழில்வாய்ந்த தோளி எவனாங்கொல் கானற்
பொழிலெல்லாம் ஈயும் புலம்பு."

**கண்படை நிலை: -(அ)**

*அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிதுவைகிய வழிமருத்துவரும் அமைச்சரும் முதலியோர் அவர்கட்குக் கண் துயில் கொள்ளலைக் கருதிக் கூறுவது கண்படை நிலையாகும்.*

**(எ.டு)**

"வாய்வாட் டானை வயங்குபுகழ்ச் சென்னிநின்
னோவா வீகையி னுயிர்ப்பிடம் பெறாஅர்
களிறுகவர் முயற்சியிற் பெரிது வருந்தினரே
யுலகங் காவலர் பலர்விழித் திருப்ப
வறிதுதுயில் கோடல் வேண்டுநின்
பரிசின் மாக்களுந் துயில்கமா சிறிதே"

**கண்படைநிலை:-(ஆ)**

*பகைவரை வென்று அவர் நிலத்தைக் கைப்பற்றிய தறுகண்மையுடைய மன்னரது உறக்கத்தைப் பாராட்டியது கண்படைநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கொங்கலர்தார் மன்னருங் கூட்டளப்பக் கூற்றணங்கும்
வெங்கதிர்வேல் தண்தெரியல் வேந்தற்குப்- பொங்கும்
புனலாடை யாளும் புனைகுடைக்கீழ் வைக்க
கனலா துயிலேற்ற கண்."

**கந்தழி:**

*ஆழிப்படையை யுடைய மாயோன் வீரசோ என்னும் அரணத்தினை அழித்த வெற்றியைப் புகழ்ந்தது கந்தழி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மாயவன் மாயம் அதுவால் மணிநிரையுள்
ஆயனா எண்ணல் அவனருளான்-காயக்
கழலவிழக் கண்கனலக் கைவளையார் சோரச்
சுழலழலுள் வைகின்று சோ."

**கபிலை கண்ணிய வேள்விநிலை:**

*கபில நிறப் பசுவினைக் கொடுக்கக் கருதிய கொடையினைக் கூறுவது கபிலைகண்ணிய வேள்வி நிலையாகும்.*

**(எ.டு)**

"பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் கற்றாதந்
தின்மகிழா னந்தணரை யின்புறுப்பச்-சென்னிதன்

மாநிலமே யானுலகம் போன்றது வான்றுகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்று"

**கபிலை கண்ணிய புண்ணிய நிலை:**

*நான்கு மறைகளையும் கற்றுணர்ந்த குளிர்ந்த தன்மை யுடையார்க்குத் தானமாகக் கொடுக்கக் கருதிய ஆவினது தன்மையைக் கூறியது கபிலை கண்ணிய புண்ணிய நிலையாகும்.*

**(எ.டு)**

"பருக்காழும் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கண் கபிலை கொடுத்தான்-செருக்கொடு
இடிமுரசத் தானை இகலிரிய எங்கோன்
கடிமுரசம் காலைச் செய."

**கரந்தை:**

*வெட்சியார் ஆனிரைகளைக் கவர்ந்தமையைக் கேட்ட அப்பசுக் கூட்டத்தையுடைய அரசன் படை மறவர் விரைந்து சென்று வெட்சியாரோடு இடை வழியிற் போர் செய்து தமது ஆனிரைகளை மீட்டது கரந்தைத் திணை எனப்படும்.*

**(எ.டு)**

"அழுங்கனீர் வையகத் தாருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண் டற்றாற்-செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கோடல்
நேரார்கைக் கொண்ட நிரை."

**கரந்தையரவம்:**

*வெட்சியார் தம்முடைய ஆனிரைகளைக் கைப்பற்றிய செய்தியைத் தூதர் மூலம் அறிந்தவுடன், கரந்தையார் தாம் தாம் செய்த தொழிலை நிறுத்தி ஓரிடத்தே கூடிய செய்தியைக் கூறியது கரந்தை யரவம் என்னும் துறையாம்*

**(எ.டு)**

"காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் வெருவந்த தோற்றத்தார்-காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப் பெயர்வு முண்டு."

**கழல் நிலை: (1)**

*கழல் கட்டிய வீரர் மழலைப் பருவத்தினையுடைய ஒருவன் களத்திடை ஓடாது நின்றமை கண்டு அவனைப் புகழ்ந்து அவனுக்குக் கழல் கட்டுதல்.*

**கழல் நிலை: (2)**

*இகலைப் பெருக்கும் மறவர் படுதற் கிடமான போரின்கண் வலிமை மிக்க வீரன் கழல் கட்டியது கழல் நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வாளமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ
கேளலார் நீக்கிய கிண்கிணிக்காற்-காளை
கலங்கழல் வாயிற் கடுத்தீற்றி அற்றால்
பொலங்கழல் கால்மேற் புனைவு."

**களவழி வாழ்த்து:**

*ஒன்பான் இசையில் ஒன்றாகிய வெண்டுறை இசையில் வல்ல யாழ்ப்பாணர் ஒரு மன்னன் போர்க்களத்தில் கொண்ட செல்வத்தினைக் கூறியது களவழி வாழ்த்து என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஈண்டி யெருவை யிறகுளரும் வெங்களத்து
வேண்டியாம் கொண்ட விறல்வேழம்- வேண்டாள்
வளைகள் வயிரியம்பும் வாள்தானை வேந்தே
விளைகள் பகர்வான் விலை."

**களவேள்வி:**

*பேய்கள் வயிறார உண்ணும் படிவாகை சூடிய வேந்தன் பகைவரைக் கொன்று களவேள்வி விட்டது களவேள்வி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பிடித்தாடி அன்ன பிறழ்பற்பேய் ஆரக்
கொடித்தானை மன்னன் கொடுத்தான்-முடித்தலைத்
தோளோடு வீழ்ந்த தொடிக்கை துடுப்பாக
மூளையஞ் சோற்றை முகந்து."

**களவழி பாடுதல்:**

*உழவர்கள் நெற்களத்திடைச் செய்யும் தொழில் யாவும் செய்து அறஞ்செய்யுமாறு போல, அரசன் போர்க்களத்துப் பகைவர்களைக் கொன்று கைக் கொண்ட பொருள்களைப் பரிசிலர்க்கு அளிக்குந்திறத்தினைப் புலவர்கள் களவழியாகப் பாடுதலாம்.*

**(எ.டு)**

"ஓ ஒ வுவமை யுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெல்லாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து"

**களிற்றுடனிலை:**

*வேல் மறவன் ஒருவன் யானை யேறிவரும் மறவனது யானையை வீழ்த்த, அவ்வியானை அவ்வேல் மறவனை வீழ்த்த, அவன் அவ்வியானையின் கீழ் வீழ்ந்து இறந்தது களிற்றுடனிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"இறுவரை வீழ இயக்கற் றவிந்த
தறுகண் தகையரிமாப் போன்றான்-சிறுகண்
பெருங்கைக் களிறெறிந்து பின்னதன் கீழ்ப்பட்ட
கருங்கழற் செவ்வே லவன்."

**கற்கோள்நிலை:**

*உலகம் வியக்குமாறு பறைகள் முழங்கத், துறக்க மெய்திய மறவனுக்குக் கற்கொண்டது கற்கோள் நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பூவொடு நீர் தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப- மேவார்
அழல்மறங் காற்றி அவிந்தாற்கென் றேத்திக்
கழல்மறவர் கைக்கொண்டார் கல்.

**கற்புமுல்லை: (அ)**

*பொன்போல் விளங்கும் சுணங்கினையும் பொலிந்த கண்ணினையும் உடையாளொரு தலைவி, தன் கணவனுடைய நன்மையைப் பாராட்டியது கற்பு முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நெய்கொள் நிணந்தூ நிறைய அமைத்திட்ட
குய்கொள் அடிசில் பிறர்நுகர்க- வைகலும்
அங்குழைக் கீரை அடகு மிசையினும்
எங்கணவன் நல்கல் இனிது."

**கற்புமுல்லை: (ஆ)**

*கணவன் பிரியினும் மகளிர்க்குளதாகிய நிறைகாவலைக் கூறியதும் கற்பு முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மௌவல் விரியும் மணங்கமழ் மால்மாலைத்
தௌவல் முதுகுரம்பைத் தான்தமியள்-செல்வன்
இறைகாக்கும் இவ்வுலகின் இற்பிறந்த நல்லாள்
சிறைகாப்ப வைகும் நிறை."

**கற்புமுல்லை: (இ)**

*தலைவி தன் தலைவனது செல்வம் பெருகும் இல்லத்தின் கண்ணே நிறைந்த பெருவளத்தை வாழ்த்தினும் கற்புமுல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஊழிதோ றூழி தொழப்பட் டுலைவின்றி
ஆழிசூழ் வையத் தகமலிய- வாழி
கருவரை மார்பினெம் காதலன் நல்க
வருவிருந் தோம்பும் வளம்."

**கனவின் அரற்றல்: -(அ)**

*என்னால் விரும்பப் பட்ட இரவு அத்தலைவனொடு வரு மாயின் யான் பிழைப்பேன் எனக் கூறியது கனவின் அரற்றல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நனவினால் நல்கா தவரைக் கனவினாற்
காண்டலின் உண்டென் உயிர்."

**கனவின் அரற்றல்; -(ஆ)**

*வளையலை யுடைய தலைவி அச்சம் பொருந்திய இரவின் கண் கனவிடத்தே காணப்பட்ட தலைவன் ஒளிப்ப வாய் விட்டுப் புலம்பியதும் கனவின் அரற்றல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அயர்வொடு நின்றேன் அரும்படர் நோய் தீர
நயவரும் பள்ளிமேல் நல்கிக்- கயவா
நனவிடைத் தமியேன் வைகக்
கனவிடைத் தோன்றிக் கரத்தல் நீ கொடிதே."

**காஞ்சியின் இயல்பு:**

*'காஞ்சி' என்னும் புறத்திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாகும். அது, துணையாதற்கரிய சிறப்பினால் பலவழியானும் நிலை யில்லாத உலகத்தைப் பொருந்திய நெறியை உடைத்து. அஃதாவது, நிலையாமைப் பொருளது. நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை என மூன்றாம்.*

**(எ.டு)**

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி யுண்டாரும்-வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்திற் கூழெனிற் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற் றன்று"

**காஞ்சித்திணை:**

*வஞ்சி வேந்தன் போர் மேற்கொண்டு தன் நாட்டிடத்தே நிற்க, அந்நாட்டிற்குரிய அரசன் காஞ்சிப் பூ மாலையைச் சூடிக் கொண்டு தன் காவலிடத்தைக் காக்கக் கருதியது காஞ்சித் திணையாகும்.*

**(எ.டு)**

"அருவரை பாய்ந்திறுது மென்பார்பண் டின்றிப்
பெருவரைச் சீறூர் கருதிச்- செருவெய்யோன்
காஞ்சி மலையக் கடைக்கணித்து நிற்பதோ
தோஞ்செய் மறவர் தொழில்."

**காஞ்சி யெதிர்வு:**

*வஞ்சியார் படையினது வரவினைப் பொறாத காஞ்சி மறவனுடைய வெற்றியை மிகுத்துச் சொல்லியது காஞ்சி யெதிர்வு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மன்மேல் வருமென் னோக்கான் மலர்மார்பின்
வென்வேல் முகந்த புண் வெய்துயிர்ப்பத்-தன்வேல்
பிடிக்கலு மாற்றாப் பெருந்தகை யேவத்
துடிக்கண் புலையன் தொடும்."

**காடு வாழ்த்துதல்:**

*பரந்த உலகத்தில் நிலையாமைப் பண்பு நன்கு விளங்குமாறு தன்கண் தோன்றிய பலரும் இறந்து படவும், தான் இறந்து படாது ஊரின் புறத்த வாகிய சுடுகாட்டை வாழ்த்தும் வாழ்த்தாகும்.*

**(எ.டு)**

"உலகு பொதியுருவந் தன்னுருவ மாகப்
பலர்பரவத் தக்க பறந்தலை நன்காடு
புலவுங்கொல் லென்போல் புலவுக் களத்தோ
டி கனெடுவே லானை யிழந்து"

**காடு வாழ்த்து;**

*எஞ்சியோர் பலரும் உணரும் பொருட்டு முழங்கும் பெரிய முழக்கத்தையுடைய சாப்பறை முழங்கும் சுடு காட்டை வாழ்த்தியது காடு வாழ்த்து என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“முன்புறம் தான்காணும் இவ்வுலகை இவ்வுலகில்
தன்புறம் கண்டறிவார் தாமில்லை-அன்பின்
அழுதார்கண் நீர்விடுத்த ஆறாடிக் கூகை
கழுதார்த் திரவழங்கும் காடு.”

**காட்சி: -(அ)**

*காட்சியாவது போர்க்களத்து இறந்துபட்ட வீரர்களின் நினைவுக்குறியாகக் கல் நிறுத்தற் பொருட்டு, அதற்குரிய கல்லைக் காண்பது காட்சியாகும்.*

**(எ.டு)**

“தாழி கவிப்பத் தவஞ்செய்வர் மண்ணாக
வாழிய நோற்றானை மால்வரை-யாழிசூழ்
மண்டல மாற்றா மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டென னின்மாட்டோர் கல்”

**காட்சி: (ஆ)**

*வேலேந்திய தலைவன் பூம் பொழிலிடத்தே காமஞ்சாலா இளமையோள் ஒருதலைவியைக் கண்டு விரும்பியது காட்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா
அரும்பிவர் மென்முலை தொத்தாப்-பெரும்பணைத் தோட்
பெண்தகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேம் காண்டலும் களித்தஎம் கண்ணே.”

**காரணமுந்துறாஉங் காரிய நிலை:**

*காரணத்திற்கு முன்னர்க் காரியம் நிகழ்வது காரண முந்துறா உங் காரிய நிலையாகும்.*

**(எ.டு)**

“தம் புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவேள்- அம்பு
பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வருமென் றிருண்ட மனம்”

**காண்டல் வலித்தல்:**

*காமம் வருத்தலால் மெலிந்து வருந்தும் தலைவி தலைவனைக் கூடுதல் நிமித்தமாக மலை நாட்டையுடைய தலைவனை இரண்டாவது முறையும் காண்பதற்கு உறுதி பூண்டது காண்டல் வலித்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வேட்டவை எய்தி விழைவொழிதல் பொய்போலும்
மீட்டு மிடை மணிப் பூணானைக்-காட்டென்று
மாமை பொன்னிறம் பசப்பத்
தூமலர் நெடுங்கண் துயில்துறந் தனவே."

**காண்டல்:**

*அழகிய நெற்றியையும் மூங்கிலைப் போன்ற தோளினையும் உடைய ஒருதலைவி ஒரு தலைவனைக் கண்டு காமுற்று மெலிந்தது காண்டல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கடை நின்று காமம் நலியக் கலங்கி
இடை நின்ற ஊரலர் தூற்றப்-புடைநின்ற
எற்கண் டிலனந் நெடுந்தகை
தற்கண்ட னென்யான் கண்ட வாறே."

**காதலிற் களித்தல்:**

*தலைவி, மலை நாட்டையுடைய தலைவனது மார்பினைத் தழுவி நீங்குதல் அறியாத காமத்தாலே மகிழ்ந்தது காதலிற் களித்தல் என்னும் துறையாம்*

**(எ.டு)**

"காதல் பெருகிக் களிசெய்ய அக்களியாற்
கோதையும் தாரும் இடைகுழைய-மாதர்
கலந்தாள் கலந்து கடைக் கண்ணாற் கங்குல்
புலந்தாள் புலரியம் போது."

**காந்தள்:**

*முருகப் பெருமான் சூரன்பன்மாவை அழிக்கும் பொருட்டுச் சூடிய காந்தளின் சிறப்பைக் கூறியது காந்தள் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"குருகு பெயரிய குன்றெறிந் தானும்
உருகெழு காந்தள் மலைந்தான்-பொருகழல்
கார்கருதி வார்முரசம் ஆர்க்கும் கடற்றானைப்
போர்கருதி யார்மலையார் பூ."

**கார்முல்லை:**

*பகைவரால் வெல்லுதற்கரிய வலிமை பொருந்திய பாசறை யிடத்தாராகிய நம் தலைவர் வினைமுடிந்து வருவதற்கு முன்னரே முகில் நீரை முகந்து கொண்டு வந்தது என்று கூறுவது கார்முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"புனையும் பொலம்படைப் பொங்குளைமான் திண்தேர்
துனையும் துனைபடைத் துன்னார்-முனையுள்
அடல்முகந்த தானை யவர்வாரா முன்னம்
கடல்முகந்து வந்தன்று கார்."

**கால்கோள்:**

*கால்கோளாவது. நடுகல் நடுவதற்குரிய இடத்தைத் தேர்ந் தெடுத்து அக்கல்லை நடுவதற்குரிய அடிப் படையை நன்நாளில் அமைப்பதாம்.*

**(எ.டு)**

"காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி பெய்து புகைகொளீஇ- மீப்படர்ந்த
காளை நடுகற் சிறப்பயர்ந்து கால்கொண்மி
னாளை வரக்கடவ நாள்"

**காவல்முல்லை: (அ)**

*ஒரு மன்னனுக்குக் காவல் தொழிலின் இயல்பைப் பிறர் எடுத்துக் கூறுதல் காவல் முல்லை என்னும் துறையாம்*

**(எ.டு)**

"ஊறின் றுவகையுள் வைக உயிரோம்பி
ஆறிலொன் றானா தளித்துண்டு- மாறின்றி

வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்
தான்காவல் கொண்டல் தகும்."

**காவல் முல்லை: (ஆ)**

*கடல் சூழ் கண்ணகல் ஞாலத்தின்கண் வேந்தனது காவல் மிகுதியைக் கூறியதும் காவல் முல்லை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"பெரும் பூண் சிறுதகைப் பெய்ம்மலர்ப் பைந்தார்க்
கருங்கழல் வெண்குடையான் காவல்-விரும்பான்
ஒருநாள் மடியின் உலகின்மேல் நில்லாது
இருநாள் வகையார் இயல்பு."

**கிணை நிலை: (அ)**

*செல்வம் பெருகும் அரண்மனையிடத்தே தடாரிப் பறை கொட்டுபவன் தான் பெற்ற வளத்தைக் கூறியது கிணை நிலை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"வெள்ளி முளைத்த விடியல் வயல்யாமை
அள்ளகட் டன்ன அரிக்கிணை-வள்ளியோன்
முன்கடை தட்டிப் பகடுவாழ் கென்னாமுன்
என்கடை நீங்கிற் றிடர்."

**கிணைநிலை: (ஆ)**

*கிணைப் பறையைக் கொட்டுபவன் வேளாளனுடைய புகழைச் சொல்லியதும் கிணை நிலை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"பகடுவாழ் கென்று பனிவயலுள் ஆமை
அகடுபோல் அங்கண் தடாரித்-துகடுடைத்துக்
குன்றுபோற் போர்விற் குரிசில் வளம்பாட
இன்றுபோம் எங்கட் கிடர்."

**குடி நிலை:**

*கரந்தை மறவர்தம் குடியினது வரலாற்றைப் புகழ்ந்து கூறியது குடிநிலை என்னும் துறையாம்*

**(எ.டு)**

"பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர்-கையகலக்
கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி."

**குடுமிகளைந்த புதழ்சாற்று நிலை:**

*நிரைத்த மாலையையுடைய வேந்தன் தன் பகைவருடைய நெடிய அரணை அழித்து அவரது முடியைக் களைந்தமையைப் புகழ்ந்து கூறியது குடுமிகளைந்த புகழ்சாற்று நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பூந்தா மரையிற் பொடித்துப் புகல்விசும்பின்
வேந்தனை வென்றான் விறல்முருகன்- ஏந்தும்
நெடுமதில் கொண்டு நிலமிசையோர் ஏத்தக்
குடுமி களைந்தான்எங் கோ."

**குடை செலவு:**

*காஞ்சி மன்னன் போர் வீரர்கள் முற்படச் சூழ்ந்து செல்ல தனது குடையை நல்ல நாளில் புறவீடு விட்டது குடை செலவு என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"தெம்முனை தேயத் திறல்விளங்கு தேர்த்தானை
வெம்முனை வெற்றி விறல்வெய்யோன்- தம்முனை
நாட்டிப் பொறிசெறித்து நண்ணார் மேற்சென்று
கூடி நாட் கொண்டான் குடை"

**குடைமுல்லை:**

*மிகுந்த வலிமை பொருந்திய மன்னனது குடையைப் புகழ்ந்தது குடைமுல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வேயுள் விசும்பு விளங்கு கதிர்வட்டம்
தாய புகழான் தனிக்குடைக்குத்-தோயம்

எதிர்வழங்கு கொண்மூ இடைபோழ்ந்த சுற்றுக்
கதிர்வழங்கு மாமலை காம்பு.''

**குடை நாட்கோள்:**

உழிஞை வேந்தன் பகைவர் மதிலைக் கொள்ளக் கருதிக் குடையை நல்ல நாளிலே புறப்பட விடுதல் குடை நாட்கோள் என்னும் துறையாம்.

**(எ.டு)**

''நெய்யணிக செவ்வேல் நெடுந்தேர் நிலை புகுக
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக-வையகத்து
முற்றக் கடியரணம் எல்லாம் முரணவிந்த
கொற்றக் குடைநாட் கொள.''

**குடைநிலை:**

போருக்குப் புறப்படும் வஞ்சிவேந்தன் தனது கொற்றக் குடையை நல்ல நாளில் புறவீடு விட்டது குடைநிலை என்னுந் துறையாம்.

**(எ.டு)**

''முன்னர் முரசிரங்க மூரிக் கடற்றானைத்
துன்னருந் துப்பிற் றொழுதெழா-மன்னர்
உடைநாள் உலந்தனவால் ஓதநீர் வேலிக்
குடைநாள் இறைவன் கொள''

**குடை நிழல் இலக்கணம்:**

உலகவொழுக்கத்தை இறப்ப உயர்த்துப் புகழ்ந்து கூறப் படுவது குடை நிழல் இலக்கணமாகும்.

**(எ.டு)**

''மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்
திங்க ளதற்கோர் திலதமா-வெங்கணு
முற்றுநீர் வைய முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை''

**குடை மங்கலம்:**

*நான்கு திசைகளினும் தனது புகழ் பெருகும் படி அரியணைமிசைச் செம்மாந்திருந்த மன்னனுடைய குடையைப் புகழ்ந்தது.*

**(எ.டு)**

"தன்னிழலோர் எல்லோர்க்கும் தண்கதிராம் தற்சேரா
வெந்நிழலோர் எல்லோர்க்கும் வெங்கதிராம்- இன்னிழல்வேல்
மூவா விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்
கோவாய் உயர்த்த குடை."

**குதிரை மறம்: (அ)**

*நொச்சியாரது குதிரையின் மறப்பண்பைப் பாராட்டியது குதிரை மறம் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"தாங்கன்மின் தாங்கன்மின் தானை விறன் மறவர்
ஓங்கல் மதிலுள் ஒருதனிமா-ஞாங்கர்
மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்றார்
உயிருணிய ஓடி வரும்."

**குதிரைமறம்: (ஆ)**

*தும்பை மன்னனது குதிரைப் படையின் தறுகண்மையைச் சொல்லியது குதிரைமறம் என்னும் துறையாம்*

**(எ.டு)**

"குந்தங் கொடுவில் குருதிவேல் கூடாதார்
வந்த வகையறியா வாளமருள்- வெந்திறல்
ஆர்கழல் மன்னன் அலங்குளைமா வெஞ்சிலை
வார்கணையின் முந்தி வரும்."

**குழவிக் கண் தோன்றிய காமப் பகுதி:**

*குழவிப் பருவத்தையுடைய சிறாரிடத்து மங்கையர் காமுறு தலைச் சொல்லியது குழவிக்கண் தோன்றிய காமப் பகுதி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
அரிக்கண்ணி அஞ்சி அலற-எரிக்கதிர்வேற்
செங்கோலன் நுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினும்
எங்கோலம் தீண்டல் இனி."

**குறுங்கலி:**

*தலைவன் தலைவியை அறவே கைவிட்டுப் பிற மகளிரை விரும்புவதற்கு அவன் நெஞ்சத்தே மாறுபட்டெழுந்த காமவேட்கை கெடும்படி கூறியது குறுங்கலி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பண்ணாவாம் தீஞ்சொல் பவளத் துவர்ச் செவ்வாய்
பெண்ணாவாம் பேரல்குற் பெய்வளை-கண்ணாவாம்.
நன்னலம் பீர்பூப்ப நல்கார் விடுவதோ
தொன்னலம் உண்டார் தொடர்பு."

**குற்றிசை:**

*தலைவன் தலைவியோடு இறுதிவரை வாழாது இடையே கைவிட்டது குற்றிசை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கரிய பெருந்தடங்கண் வெள்வளைக்கை யாளை
மரிய கழிகேண்மை மைந்த- தெரியின்
விளிந்தாங் கொழியினும் விட்டகலார் தம்மைத்
தெளிந்தாரில் தீர்வது தீது."

**குற்றுழிஞை: (அ)**

*கிடுகுப் படையை யுடைய உழிஞைப் படை மறவர்கள் கூத்தாடிக் கொண்டு நொச்சியாரது மதிலை அடைதலும் குற்றுழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நிரைபொறி வாயில் நெடுமதிற் சூழி
வரைபுகு புள்ளினம் மான-விரைபடைந்தார்
வேலேந்து தானை விறலோன் விறல்மறவர்
தோலேந்தி ஆடல் தொடர்ந்து."

**குற்றுழிஞை: (ஆ)**

*உழிஞை வேந்தன் நொச்சி மன்னனின் காவற்காட்டைக் கடந்து புகுதலும் குற்றுழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“அந்தரந் தோயும் அமையோங் கருமிளை
மைந்தார் மறிய மறங்கடந்து-பைந்தார்
விரைமார்பின் வில்நரல வெங்கணை தூவார்
வரைமார்பின் வைகின வாள்.”

**குற்றுழிஞை: (இ)**

*பகைவரது மதிலின்மேல் தன் துணைவரையும் எதிர் பாராமல் தான் ஒருவனே யாகிய உழிஞை வேந்தனின் மாறு பாட்டினைப் பெருக்கியது குற்றுழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“குளிறு முரசினான் கொண்டான் அரணம்
களிறும் கதவிறப் பாய்ந்த- ஒளிறும்
அயிற்றுப் படைந்த அணியெழு எல்லாம்
எயிற்றுப் படையால் இடந்து.”

**குற்றுழிஞை: (ஈ)**

*மதிலின் உள்ளே இருந்தவன், தன் மதில் அழியத் தொடங்கிய விடத்துப் புறத்தே (வெளியே) உள்ளவனுடன் தான் ஒருவனேயாகிச் சென்று போர் செய்வதும் குற்றுழிஞையாகும்.*

**(எ.டு)**

“மொய்வேற் கையர் முரண்சிறந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்றார் மார்ப
வெவ்வழி யாயினு மவ்வழித் தோன்றித்
திண்கூ ரெஃகின் வயவர்க் காணிற்
புண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
பைந்தலை யுதைத்த மைந்து மலிதடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிறர்
தீண்டல் தகாது வெந்துறை யரணே”

**கூதிர்ப் பாசறை:**

*பகைவனுக்குக் கூற்றுவனை ஒத்த மன்னன் காமம் வருத்தும் கூதிர்காலத்தும் மறமே நினைந்து பாசறையிடத்துத் தங்கியது கூதிர்ப் பாசறை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கவலை மறுகிற் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை ஒடுங்கத்-துவலைசெய்
கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்
மூதில் மடவாள் முயக்கு.”

**கூட்டத்துக்குழைதல்:**

*தலைவி தலைவனோடு புணர்ந்திருக்கும் பொழுதே அவன் பிரிவான் என்னும் நினைவினால் ஆற்றாளாய் நெஞ்சு நெகிழ்ந்தது கூட்டத்துக் குழைதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“மயங்கி மகிழ்பெருக மால்வரை மார்பில்
தயங்கு புனலூரன் தண்தார்-முயங்கியும்
பேதை புலம்பப் பிரிதியோ நீயென்னும்
கோதைசூழ் கொம்பிற் குழைந்து.”

**கூத்தராற்றுப் படை:**

*வள்ளல் பால் பரிசில் பெற்றுச் சென்ற இரவலனாகிய கூத்தன் தன் எதிர் வந்த கூத்தரை அவ்வள்ளல் பால் செல்லும் வழியிற் செலுத்தியது கூத்தராற்றுப்படை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கொலைவிற் புருவத்துக் கொம்பன்னார் கூத்தின்
தலைவ தவிராது சேறி-சிலைகுலாம்
காரினை வென்ற கவிகையான் கைவளம்
வாரினை கொண்டு வரற்கு.”

**கைக்கிளை:**

*கெடாத அன்பினையும் நுடங்கும் இயல்பினையும் உடையாளொருத்தி ஒரு தலைவனது மாலையை விரும்பியது கைக்கிளை என்னும் துறையாம்.*

*கைக்கிளை-ஒரு தலைக்காமம்.*

**(எ.டு)**

"மங்குல் மனங்கவர மால்மாலை நின்றேற்குப்
பொங்கும் அருவிப் புனல்நாடன்-கங்குல்
வருவான்கொல் வந்தென் வனமுலைமேல் வைகித்
தருவான்கொல் மார்பணிந்த தார்."

**கையறு நிலை: (அ)**

*கையறு நிலையாவது. கணவனோடு மனைவியர் இறந்த விடத்து அவர்கட்பட்ட அழிவுப் பொருளெல்லாம் பிறர்க்கு அறிவுறுத்தித் தாம் இறந்து படாமல் நீங்கிய தோழியரும் பரிசில் பெறும் விறலியரும் மிகவுந் துன்புற்ற நிலையைக் குறிப்பதாம்.*

**(எ.டு)**

"தேரோன் மகன்பட்ட செங்களத்து ளிவ்வுடம்பிற்
றீராத பண்பிற் றிருமடந்தை-வாரா
வுலகத் துடம்பிற் கொழிந்தனள் கொல்லோ
வலகற்ற கற்பி னவள்"

**கையறுநிலை: (ஆ)**

*வாட் போரிலே பட்ட கரந்தை மறவன் நிலைகண்டு அவ னாற் புரக்கப் பட்ட பாணர்கள் தம் செயலுறுதியைக் கூறியது கையறுநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நாப்புலவர் சொன்மாலை நண்ணார் படை யுழக்கித்
தாப்புலி யொப்பத் தலைக் கொண்டான்- பூப்புனையும்
நற்குலத்துள் தோன்றிய நல்லிசையாழ்த் தொல்புலவீர்
கற்கொலோ சோர்ந்திலவெங் கண்."

**கொடிநிலை:**

*சிவன் திருமால் நான்முகன் என்னும் கடவுளர் மூவருடைய கொடிகளுள் ஒன்றனோடு மன்னவன் கொடியை உவமித்துப் புகழ்ந்தது கொடி நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல-ஓங்குக

பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி."

**கொடுப்போர் இன்றியும் நடை பெறும் கரணம்;**

*தலைவி தலைவனுடன் உடன் போக்கிற் சென்ற விடத்துக் கொடுத்தற்குரிய தலைவியின் தமர் இல்லாதவிடத்தும் சடங்கொடு கூடிய மணம் நடை பெறுதல் உளதாம்.*

**(எ.டு)**

"பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி ஆய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே" (குறுந்15)

*இதனுள் 'வாயாகின்று' எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும் 'விடலை' யெனப்பாலை நிலத்துத்தலைவன் பெயர் கூறினமையானும் இது கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்ந்தது.*

**கொடுப்போர் ஏத்திக் கொடா அர்ப் பழித்தல்:**

*தனக்கு ஒன்றைக் கொடுத்தோரைப் புகழ்தலும் கொடாத வரைப் பழித்தலுமாம்.*

**(எ.டு)**

"பாரி பாரி யென்று பல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண் டீண்டு லகுபுரப் பதுவே"

***இது கொடுப்போர் ஏத்தியது.***

"புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்"

***இது கொடாஅர்ப்பழித்தல்.***

**கொடைமை:**

*கொடைமையாவது, படையெடுத்துச் செல்லும் வேந்தர் தத்தம் படையாளர்க்குப் படைக்கலம் முதலிய கொடுத்தலும், பரிசிலர்க்கு அளித்தலும் ஆகிய கொடுத்தலைப் பொருந்தியதாம்.*

**(எ.டு)**

“வேத்தமர் செய்தற்கு மேற்செல்வான் மீண்டுவந்
தேத்துநர்க் கீதுமென் றெண்ணுமோ-பாத்தி
யுடைக்கலி மான்றே ருடனீந்தா னீந்த
படைக்கலத்திற் சாலப் பல”

**கொடைவஞ்சி:**

*நீண் டொலிக்கும் படியும், குறுகி யொலிக்கும் படியும் இடைநிகராய் யொலிக்கும் படியும் இசையினை அளந்து தனது வெற்றியைப் பாடிய இசை வாணர்க்கு வஞ்சி வேந்தன் பரிசில் வழங்கியது.*

**(எ.டு)**

“சுற்றிய சுற்ற முடன்மயங்கித் தம்வயிறு
எற்றி மடவார் இரிந்தோட-முற்றிக்
குரிசி லமையாரைக் கொண்டகூட் டெல்லாம்
பரிசில் முகந்தன பாண்.”

**கொண்டகம் புகுதல்:**

*காமம் பெருகுதலால் தலைவி தலைவனைக் கண்டு அவனை மாலையாலே கட்டி அகப்படுத்துக் கொண்டு தனது இல்லிலே புகுந்தது கொண்டகம் புகுதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கண்டு களித்துக் கயலுண்கண் நீர்மல்கக்
கொண்டகம் புக்காள் கொடியன்னாள்-வண்டினம்
காலையாழ் செய்யும் கருவரை நாடனை
மாலையான் மார்பம் பிணித்து.”

**கொள்ளார்தேஎங் குறித்த கொற்றம்:**

*தன்னை அரசனென்று ஏற்றுக் கொள்ளாதாரும், தன் ஆணைவழி நில்லாதவருமாகிய பகைவரது நாட்டை வெற்றி கொண்ட சிறப்பினைக் கூறுவதாம்.*

**(எ.டு)**

"மாற்றுப் புலந்தோறு மண்டிலமாக் கள்செல
வேற்றுப் புலவேந்தர் வெல்வேந்தர்க்- கேற்ற
படையொலியிற் பாணொலி பல்கின்றா லொன்னா
ருடையன தாம்பெற்று வந்து"

**கொற்ற உழிஞை:**

*உழிஞை வேந்தன் பகையரசர் மதிலைக் கைப்பற்றக் கருதி படையெடுத்துச் சென்றது கொற்ற உழிஞை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"வெள்வாட் கருங்கழற்கால் வெஞ்சுடர்வேல் தண்ணளியான்
கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்- நள்ளாதார்
அஞ்சுவரு வாயில் அருமிளைக் கொண்டகழி
மஞ்சிவரு ஞாயில் மதில்."

**கொற்றம்:**

*படை யெடுத்துச் சென்ற இருபெருவேந்தர் படையாளர் வரவறியாமல் இரவும் பகலும் பலகாலும் தாம் ஏறி அந்நாட்டைக் காவல் புரிந்தோரைக் கொல்வது கொற்றமாம்.*

**(எ.டு)**

"நீணில வேந்தர் நாட்செல் விருப்பத்துத்
தோள்சுமந் திருத்த லாற்றா ராள்வினைக்
கொண்டி மாக்க ளுண்டியின் முனிந்து
முனைப்புல மருங்கி னினைப்பருஞ் செய்வினை
வென்றியது முடித்தனர் மாதோ
யாங்குள கொல்லினி யூங்குப்பெறுஞ் செருவே"

**கொற்றவைநிலை:**

*அறிவு ஒளியினின்றும் நீங்காத வெற்றியையுடைய சூலப் படையை ஏந்திய இறைவியாகிய வெற்றித் திருமகளது அருட் சிறப்பை வியந்து கூறியது கொற்றவைநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி மலிபடைக் கொற்றவை-மீளி

அரண் முருங்க ஆகோள் கருதினடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்."

**கொற்றவள்ளை: (அ)**

*வேந்தனது குறையாத வெற்றிச்சிறப்பினால் பகைவர் நாடு அழிவிற்கு இரங்கித் தோற்றோனை விளங்கக் கூறுவது கொற்ற வள்ளையாகும்.*

**(எ.டு)**

"வேரறுகு பம்பிச் சுரைபரந்து வேளைபூத்து
ஊரறிய லாகா துடைந்தனவே-போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியோர் கோமான்
அகையிலைவேல் காய்த்தினார் நாடு"

**கொற்றவள்ளை: (ஆ)**

*வஞ்சி வேந்தனது புகழை வள்ளைப் பாட்டால் எடுத்தோதி அம்மன்னனின் பகைவர் நாட்டின் அழிவிற்கு வருந்தியதும் கொற்ற வள்ளை என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"தாழார மார்பினான் தாமரைக்கண் சேந்தனவாற்
பாழாய்ப் பரிய விளிவதுகொல்- யாழாய்ப்
புடைத்தேன் இமிர்கண்ணிப் பூங்கண் புதல்வர்
நடைத்தேர் ஒலிகறங்கு நாடு"

**கொற்றவஞ்சி:**

*வஞ்சி வேந்தனது வாட்போரினுடைய வெற்றியைச் சிறப் பித்துக் கூறுவது கொற்றவஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"அழலடைந்த மன்றத் தலந்தயரா நின்றார்
நிழலடைந்தே நின்னையென் றேத்திக்-கழலடையச்
செற்றங்கொண் டாடிச் சிலைத்தெழுந்தார் வீந்தவியக்
கொற்றங்கொண் டெஃகுயர்த்தான் கோ"

**சால்புமுல்லை:**

*பல நற்குணங்களாலும் நிறைந்த சான்றோரது அமைதியைச் சொல்லியது சால்பு முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“உறையார் விசும்பின் உவாமதி போல
நிறையா நிலவுதல் அன்றிக்- குறையாத
வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேறாமோ
சங்கம்போல் வான்மையார் சால்பு.”

**சான்றோர்பக்கம்:**

*பகடு(எருது) புறந்தருகிற வேளாளரும் ஆ (பசு) வினைப் பாதுகாக்கும் வணிகரும் ஆகிய சிறப்பினையுடைய சான்றோரது பாகுபாட்டினைக் கூறுந்திறம்.*

**(எ.டு)**

“யானை நிரையுடைய தேரோ ரினுஞ்சிறந்தோ
ரேனை நிரையுடைய வேர்வாழ்நர்-யானைப்
படையோர்க்கும் வென்றி பயக்கும் பகட்டே
ருடையோர்க் கரசரோ வொப்பு”

**சிருங்காரநிலை:**

*பகைவரும் புகழுமாறு போர்க்களத்தே இறந்து கிடந்த மறவனை மகளிர் தழுவியது சிருங்கார நிலை என்னுந் துறையாம்.*

**(எடு)**

எங்கணவன் எங்கணவன் என்பார் இகல்வாடத்
தங்கணவன் தார்தம் முலைமுகப்ப - வெங்கணைசேர்
புண்ணுடை மார்பம் பொருகளத்துப் புல்லினார்
நுண்ணிடைப் பேரல்கு லார்.

**சுரநடை:**

*மூங்கில் நிறைந்த காட்டிடத்துத் தன்மனைவியை இழந்த தலைவனுடைய தன்மையைச் சொல்லியது சுரநடை என்னுந் துறையாம்.*

**(எடு)**

உரவெரி வேய்ந்த உருப்பவிர் கானுள்
வரவெதிரின் வைவேல்வாய் வீழ்வாய் - கரவினால்

பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையை என்மார்பிற்
கோதையைக் கொண்டளித்த கூற்று.

**சுரத்துய்த்தல்:**

*கடத்தற்கரிய வழியிடத்தும் அகன்ற காட்டின் கண்ணும் வெட்சி மறவர்தாம் கைப்பற்றிய பசுக்கூட்டங்களை வருந்தாமற் செலுத்தியது சுரத்துய்த்தல் என்னுந் துறையாம்.*

**(எடு)**

புன்மேய்ந் தசைஇப் புணர்ந்துடன் செல்கென்னும்
வின்மேல் அசைஇயவை வேல்கழலான் - தன்மேற்
கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்
நெடுவரை நீழல் நிரை.

**செருவிடை வீழ்தல்:**

*அகழியையும் காவற்காட்டையும் பகைவர் சிதைக்காதவாறு காத்துப் போரிலே பட்ட நொச்சி மறவருடைய வெற்றியைக் கூறியது செருவிடை வீழ்தல் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"ஈண்டரில் சூழ்ந்த இளையும் எரிமலர்க்
காண்தகு நீள்கிடங்குங் காப்பாராய்-வேண்டார்
மடங்கல் அனைய மறவேலோர் தத்தம்
உடம்பொடு காவல் உயிர்"

**செலவழுங்கல்:**

*தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லத் துணிந்து பின்னர்ச் செலவழுங்கியது செலவழுங்கல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நடுங்கி நறுநுதலாள் நன்னலம்பீர் பூப்ப
ஒடுங்கி உயங்கல் ஒழியக்-கடுங்கணை
வில்லோர் உழவர் விடரோங்கு மாமலைச்
செல்லேம் ஒழிக செலவு."

**செல்கெனவிடுத்தல்:**

*இருட் பொழுதிலே மற்றொரு தலைவியின்பாற் செல்லும் தலைவனைத் தலைவி கண்டு நீ செல்க என்று கூறிவிட்டது செல்கென விடுத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"விலங்குநர் ஈங்கில்லை வென்வேலோய் சென்றீ
இலங்கிழை எவ்வம் நலியக் - கலங்கிக்
குறியுள் வருந்தாமைக் குன்று சூழ்சோலை
நெறியுள் விரிக நிலா."

**செவியறிவுறூஉ:**

*அறத்தினை ஆராயும் செங்கோலினையுடைய மன்னனுக்கு மறமும் பிறழ்ச்சியுமில்லாத நிலைதலுடைய பெரிய கருத்தினை உணருமாறு கூறியது செவியறிவுறூஉ என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதா யென்றிவர்க்குத் தார்வேந்தே-முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டல் முறை."

**தபுதார நிலை:**

*தபுதார நிலையாவது, தன்மனைவியைக் கணவன் இழந்த நிலையைக் குறிப்பதாகும்.*

**(எ.டு)**

"யாங்குப் பெரிதாயினு நோயள வெனைத்தே
யுயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையிற்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்
தொள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனண் மடந்தை
யின்னும் வாழ்வ லென்னிதன் பண்பே" (புறம்-245)

**தலைக்காஞ்சி:**

*போர்க்களத்திலே பெரும்போர் செய்து பகைவரைக் கலக்கி இறுதியில் மாண்ட மறவனுடைய தலையைப் பாராட்டியது தலைக்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"விட்டிடினென் வேந்தன் விலையிடின்என் இவ்வுலகின்
இட்டுரையின் எய்துவ எய்திற்றால்-ஒட்டாதார்
போர்தாங்கி மின்னும் புலவாள் உறைகழியாத
தார்தாங்கி வீழ்ந்தான் தலை."

**தலைத்தோற்றம்:**

*வெட்சி மறவர் ஆத்திரளைக் கைக் கொண்டு அவர்தம் சுற்றத்தார்கள் மகிழ்தற்கேதுவாக ஊரின் அணித்தே வந்து தோன்றியது தலைத்தோற்றம் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"மொய்யணல் ஆனிரை முன்செல்லப் பின்செல்லும்
மையணற் காளை மகிழ்துடி-கையணல்
வைத்த எயிற்றியர் வாட்கண் இடனாட
உய்த்தன் றுவகை ஒருங்கு."

**தலைமாராயம்:**

*போரிலேபட்ட மறவன் தலையைக் கொணர்ந்தவன் மன மகிழ்ச்சியால் நிரம்பும் படி காஞ்சிவேந்தன் பொருள் வழங்கியது தலைமாராயம் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"உவன்தலை என்னும் உறழ்வின்றி யொன்னார்
இவன்தலையென் றேத்த இயலும்-அவன்தலை
தந்தாற்கு நல்கல் வியப்போ கிளர்ந்தேத்தி
வந்தார்க் குவந்தீயும் வாழ்வு"

**தலையொடுமுடிதல்:**

*போரின்கண் பட்ட கணவனின் தலையைக் கண்ட வழி அத்தலையுடனே அவன் மனைவி இறந்தது தலையொடு முடிதல் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

> "கொலையானாக் கூற்றங் கொடிதே கொழுநன்
> தலையானாள் தையலாள் கண்டே-முலையால்
> முயங்கினாள் வாண்முகஞ் சேர்த்தினாள் அங்கே
> உயங்கினாள் ஓங்கிற் றுயிர்"

**தவத்தை மேற் கொண்டவர்க்கு உரியவை:**

*நீரில் குளித்தல், தரையில் உறங்குதல், தோலை ஆடையாக உடுத்திக் கொள்ளுதல், சடைமுடியை வளர்த்தல், ஊர்ப் புறங்களுக்குச் செல்லாமை, காட்டு உணவினை உட்கொள்ளல், கடவுளரையும் ஞானிகளையும் வணங்குதல் முதலிய எட்டும் தவத்தை மேற் கொண்டார்க்கு உரியனவாம்.*

**(எ.டு)**

> "நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
> சோர்சடை தாழச் சுடரோம்பி-யூரடையார்
> கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
> வானகத் துய்க்கும் வழி"

**எனவும்,**

> "ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
> னெழுமையு மேமாப் புடைத்து"

**எனவும்,**

> "ஆரா வியற்கை யவா நீப்பி னந்நிலையே
> பேரா வியற்கை தரும்"

**எனவும் வரும்.**

*ஏனையவை வந்துழிக் காண்க.*

***தழிஞ்சி:* (அ)**

*வெற்றியும் தோல்வியும் கண்ட அரசர்கள் தம் படையாளர்களுள் போர் செய்த காலத்துப் பகைவரால் ஏவப்பட்ட அம்பு வேல் முதலியன பட்டு அழிந்தவர்களைத்தாம் நேரிற் சென்று பொருள் கொடுத்தும் வினாவியும் தழுவிக் கொள்ளுதல் தழிஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"தழிச்சிய வாட்புண்ணோர் தம்மில்லந் தோறும்
பழிச்சிய சீர்ப்பாசறை வேந்தன்-விழுச்சிறப்பிற்
சொல்லிய சொல்லே மருந்தாகத் தூர்ந்தன
புல்லணலார் வெய்துயிர்க்கும் புண்"

**தழிஞ்சி: (ஆ)**

*வஞ்சி வேந்தன் படை தமது நாட்டினது எல்லையிற் புகாத வாறு அருவழியைக் காஞ்சியார் காத்ததும் தழிஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"குலாவுஞ் சிலையார் குறும்புகொள வெஃகி
உலாவு முழப் பொழிக வேந்தன்-கலாவும்
இனவேங்கை யன்ன இகல்வெய்யோர் காவல்
புனவேய் நரலும் புழை."

**தழிஞ்சி: (இ)**

*போரின்கண் ஒரு மறவன் தனக்கு ஆற்றாது புறங் காட்டுவார்பால் படைவிடாத பேராண்மையுடையனாதலைக் கண்டோர் கூறியது தழிஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினும்
தான்படை தீண்டாத் தறுகண்ணன்-வான்படர்தல்
கண்ணியபி னன்றிக் கறுத்தார் மறந்தொலைதல்
எண்ணியபின் போக்குமோ எஃகு."

**தன்னை வேட்டல்: (அ)**

*தம் வேந்தன் போரின்கண் இறந்தமை பொறாது ஒரு போர் மறவன் அக் களத்திலேயே தனது உயிரைப் போக்கியது தன்னை வேட்டல் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"வானம் இறைவன் படர்ந்தென வாள்துடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத்-தேனிமிரும்

கள்ளவிழ் கண்ணிக்கழல் வெய்யோன் வாளமர்
ஒள்ளழலுள் வேட்டான் உயிர்."

**தன்னைவேட்டல்: (ஆ)**

*வேலினை ஏந்திய தன் கணவனை அவன் பட்ட களத்தே சென்று காணும் பொருட்டு மனைவி சென்றதும் தன்னை வேட்டல் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"கற்பின் விழுமிய தில்லை கடையிறந்து
இற்பிறப்பும் நாணும் இடையொழிய-நற்போர்
அணங்கிய வெங்களத் தாருயிரைக் காண்பான்
வணங்கிடை தானே வரும்."

**தாபத நிலை:**

*தாபத நிலையாவது, காதலனை யிழந்த மனைவி இன்பம் செல்வம் ஆகியவற்றைத் துறந்து தவம் புரிந்து ஒழுகும் நிலையைக் குறிப்பதாம்.*

**(எ.டு)**

"அளியதாமே சிறுவெள்ளாம்ப
லிளைய மாகத் தழையா யினவே யினியே,
பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்
தின்னா வைக லுண்ணும்
அல்லிப்படூம் உம் புல்லா யினவே" (புறம்-248)

**தாபதவாகை:**

*தவம் செய்யும் துறவியர் தாம் மேற்கொண்ட தவவொழுக்கங் களோடு நன்கு பொருந்தி அவ்வொழுக்கத்தினின்றும் பிறழாத தன்மையைச் சொல்லியது தாபத வாகை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி- ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி."

**தாய்தப வரூஉந் தலைப் பெயல் நிலை:**

*போரிடத்து விழுப்புண் படாது புறமுதுகிட்டதால் இறந்துபடுகின்ற பெருஞ்சிறப்பினையுடைய மகனைப் பெற்றதாய் அவனைத் தழுவிக் கொள்ளும் நிலையே தலைப்பெயல் நிலையாகும்.*

**(எ.டு)**

"வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோவே னத்தை நின்னீன் றனனே
பொருந்தா மன்ன ரருஞ்சம முருக்கி
யக்களத் தொழிதல் செல்லாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த வெஃக
மதன்முகத் தொழிய நீ போந் தனையே
யதனா, லெம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை யீன்ற வயிறே"

*(தகடூர் யாத்திரை, புறத்திரட்டு மூதின் மறம்.)*

**தார் நிலை: (அ)**

*தன்படை போர் செய்கின்றமை கண்டு தானும் படையாளர்க்கு முன்னே சென்று வேலாற் போர் செய்து வென்றி மிகுகின்ற வேந்தனை மாற்றோர் சூழ்ந்துழி அது கண்டு வேறோரிடத்தே பொருகின்ற தன்றானைத்தலைவனாயினுந் தனக்குத் துணைவந்த அரசனாயினும் போரைக் கைவிட்டு வந்து வேந்தனோடு பொருகின்றாரை எறிவது தார்நிலையாம்.*

**(எ.டு)**

"வெய்யோ னெழாமுன்னம் வீங்கிருள் கையகலச்
செய்யோ னொளிதிகழுஞ் செம்மற்றே-கையகன்று
போர்தாங்கு மன்னன்முன்புக்குப் புகழ் வெய்யோன்
றார்தாங்கி நின்ற தகை."

**தார்நிலை: (ஆ)**

*தும்பை வேந்தனுக்கு ஒரு மறவன் தூசிப் படையை யானே தடுப்பேன் என்று தனது தறுகண்மையைச் சொல்லியதும் தார்நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய்-எறிசுடர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்தே நின்னோடு
பாங்கலா மன்னர் படை."

**தார் நிலை: (இ)**

*தன் மன்னனைப் பல பகை மன்னர்கள் வளைத்து நெருக்கிய பொழுது ஒரு மறவன் தனியே நின்று அவரனைவரையும் தடுத்தலும் தார்நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"காலான் மயங்கிக் கதிர்மறைத்த கார்முகில்போல்
வேலான்கை வேல்பட வீழ்ந்தனவே- தோலா
இலைபுனை தண்டார் இறைவன் மேல்வந்த
மலைபுரை யானை மறிந்து."

**தானிலை:**

*இரண்டு மன்னர் படைகளும் போர்க்களத்தின் கண் தனது தறுகண்மையைப் புகழ்ந்து கூறுமாறு ஒரு மறவன் சிறப்பு எய்தியது தானிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நேரார் படையின் நிலைமை நெடுந்தகை
ஓரான் உறைகழியான் ஒள்வாளும்- தேரார்க்கும்
வெம்பரிமா ஊர்ந்தார்க்கும் வெல்களிற்றின் மேலார்க்கும்
கம்பமா நின்றான் களத்து."

**தானை மறம்: (அ)**

*போர் செய்தற் கெதிர்ந்த இருவகைப் படைகளும் தம்முள் ஒத்த ஆற்றலுடைமை காரணமாகப் போர் செய்து மடியாமல் விலக்கியது தானைமறம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கழுதார் பறந்தலைக் கண்ணுற்றுத் தம்முள்
இழுதார்வேற் றானை இகலிற்-பழுதாம்

செயிர்காவல் பூண்டொழுகுஞ் செங்கோலார் செல்வம்
உயிர்காவல் என்னும் உரை.''

**தானைமறம்: (ஆ)**

*அரசனுக்கு உறுதி கூறிப் போர் செய்வித்தலும் தானைமறம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''வயிர்மேல் வளைஞரல வைவேலும் வாளும்
செயிர்மேற் கனவிழிப்பக் சீறி-உயிர்மேற்
பலகழியு மேனும் பரிமான்தேர் மன்னர்க்கு
உலகழியும் ஓர்த்துச் செயின்.''

**தானைமறம்: (இ)**

*தும்பை யரசனது வேற்படையின் வன்மையை விதந்து சொல்லிப்பகைவரது அழிவிற்கு இரங்குதலும் தானைமறம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''மின்னார் சினஞ்சொரிவேல் மீளிக் கடற்றானை
ஒன்னார் நடுங்க உலாய்நிமிரின்-என்னாங்கொல்
ஆழித்தேர் வெல்புரவி அண்ணல் மதயானைப்
பாழித்தோள் மன்னர் படை.''

**திறை கொண்டு பெயர்தல்:**

*உழிஞையரசன் நொச்சியான் பணிந்து கொடுத்த திறைப் பொருளைப் பெற்று மீளுதல் திறை கொண்டு பெயர்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''கோடும் வயிரும் இசைப்பக் குழுமிளை
ஓடெரி வேய உடன்றுலாய்ப்-பாடி
உயர்ந்தோங் கரணகத் தொன்னார் பணியப்
பெயர்ந்தான் பெருந்தகையி னான்.''

**துடிநிலை:**

*மறவர், வழிமுறை வழிமுறையாக மறக்குடிக்குத் துடி கொட்டுபவரது குணத்தைப் பாராட்டிக் கூறியது துடிநிலை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"முந்தை முதல்வர் துடியர் இவன்முதல்வர்
எந்தைக்குத் தந்தை யிவனெனக்கு-வந்த
குடியொடு கோடா மரபினோற் கின்னும்
வடியுறு தீந்தேறல் வாக்கு."

**துணிவு:**

*ஐயுறப்பட்ட தலைவியைப் பெரிய நிலவுலகத்திலே நடக்கும் காதலையுடைய மானிட மகளே ஆவாள் இவள் என்று தெளிந்து சொல்லியது துணிவு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"திருநுதல் வேரரும்பத் தேங்கோதை வாடும்
இருநிலம் சேவடியும் தோயும் - அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே."

**தும்பை அரவம்:**

*போர் கருதித் தும்பை சூடிய மன்னன் தன் படை வீரர்களின் வரிசை யறிந்து பரிசு நல்குதல் தும்பை அரவம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வெல்பொறியும் நாடும் விழுப்பொருளும் தண்ணடையும்
கொல்களிறு மாவும் கொடுத்தளித்தான்- பல்புரவி
நன்மணித் திண்டேர் நயவார் தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு."

**தும்பையின் இலக்கணம்:**

*'தும்பை' என்னும் புறத்திணை, நெய்தல் என்னும் அகத் திணைக்குப் புறனாகும். அது தன்னுடைய வலிமையே பொரு*

*ளாகக் கொண்டு, வந்த அரசனை எதிர்த்து, அவனுடைய வலிமையினை அழித்த சிறப்பினை யுடையதாம்.*

**தும்பைத் திணை:**

*பகையரசருடன் போர் செய்தலை எண்ணித் தும்பையாகிய போர்ப் பூவைத் தலையில் சூடியது தும்பை என்னும் திணையாம்.*

**(எ.டு)**

"கார்கருதி நின்றதிரும் கௌவை விழுப்பணையான்
சோர்குருதி சூழா நிலநனைப்பப்- போர்கருதித்
துப்புடைத் தும்பை மலைந்தான் துகளறுசீர்
வெப்புடைத் தானையெம் வேந்து."

**தும்பையின் சிறப்பியல்பு:**

*பகைவரால் எறியப்பட்ட அம்பும் வேலும் ஒன்றன்மேல் ஒன்றாக வந்து பாய்ந்ததால் உயிர் போகிய மறவனின் உடலானது, தனது மறப்பண்பினால் பூமியின்கண் வீழ்ந்து படாது, அட்டையானது (நீர்வாழி சாதி) தனது உடல் இரண்டு கூறுபட்ட விடத்தும் இயங்குமாறு போல நின்று கொண்டு ஆடியதும் இத்தும்பைத் திணையின் இலக்கணமாகும்.*

**(எ.டு)**

"நெடுவேல் பயந்த மார்பின்
மடல்வன் போந்தையி னிற்கு மோற்கு" (புறம் 297)

"எய் போற் கிடந்தா னென்னேறு"

(புறப்பொருள் வெண்பாமாலை -176)

**என வருவன கணையும் வேலும் மொய்த்து நின்றன.**

"வான்றுறக்கம் வேட்டெழுந்தார் வாண்மறவ ரென்பதற்குச்
சான்றுரைப்ப போன்றன தங்குறை-மான்றோர்மேல்
வேந்து தலைபனிப்ப விட்ட வுயிர்விடாப்
பாய்ந்தன மேன்மேற் பல"

**துயரவற்குரைத்தல்:**

*தலைவி, மாலைக் காலத்தே ஆற்றாது வருந்துதலைத் தோழி தலைவனுக்குச் சொல்லியது துயரவற்குரைத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"உள்ளத் தவலம் பெருக ஒளிவேலோய்
எள்ளத் துணிந்த இருள்மாலை- வெள்ளத்துத்
தண்டார் அகலம் தழுஉப்புணையா நீ நல்கின்
உண்டாமென் தோழிக் குயிர்."

**துயிலெடை நிலை: (அ)**

*தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக்கவற்சி யின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் அத்துயிலெடுப்பின் போது புகழ்வதைக் குறிப்பது துயிலெடை நிலையாகும்.*

**(எ.டு)**

"கானம் பொருந்திய கயவாய் மகளிரின்
யானுறுந் துயர நந்திய பானா
ளிமையாக் கண்ணோ டமையாக் காத்தநின்
மூதின் முதல்வன் றுயில்கொண் டாங்குப்
போற்றா மன்னரை யெள்ளிச் சிறிதுநீ
சேக்கை வளர்த்தனை பெரும தாக்கிய
வண்கை யுவண னுயிர்செல வாங்கவ
னன்றுணர்ந் தாங்கு வென்றி மேய
வாடா வஞ்சி மலைந்த சென்னிப்
போரடு தானைப் பொலந்தேர் வளவ
நின்றுயி லெழுமதி நீயு
மொன்றா வேந்தர் பொன்றுதுயில் பெறவே"

**துயிலெடை நிலை: (ஆ)**

*ஒரு வேந்தனை நின்பகை மன்னர்க்கு அருள் செய்ய எழுந் திருப்பாயாக எனக்கூறி உறக்கத்தினின்றும் எழுப்பியதும் துயிலெடை நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அளந்த திறையார் அகலிடத்து மன்னர்
வளந்தரும் வேலோய் வணங்கக்-களந்தயங்கப்
பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்
தூமலர்க்கண் ஏர்க துயில்."

**தூதிடை யாடல்:**

*மாலைக் காலத்தில் தலைவியுற்ற துன்பத்தைக் கண்டு, அத்தலைவியைப் பிரியாதவளாகிய தோழி தலைவியைத் தனியே விட்டுத் தலைவன்பால் தூதாகி நடந்தது தூதிடை யாடல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வள்வாய்ந்து பண்ணுக திண்தேர் வடிக்கண்ணாள்
ஒள்வாள்போல் மாலை உயல்வேண்டும்-கள்வாய
தாதொடு வண்டிமிரும் தாம வரைமார்ப
தூதொடு வந்தேன் தொழ."

**தேர்மறம்:**

*தும்பை வேந்தனுடைய தேரின் நன்மையைச் சொல்லியது தேர்மறம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"செருமலி வெங்களத்துச் செங்குருதி வெள்ளம்
அருமுரண் ஆழி தொடர-வருமரோ
கட்டார் கமழ்தெரியற் காவலன் காமர்தேர்
ஒட்டார் புறத்தின்மேல் ஊர்ந்து."

**தேர்முல்லை:**

*சினந்து வந்த பகைவரது பகைத்தன்மையையடக்கி அவர் களது தேர்கள் பலவற்றையும் வென்று மீண்டு வரும் தலைவரது தேர் வருகையைக் கூறியது தேர்முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"தீர்ந்து வணங்கித் திறையளப்பத் தெம்முனையுள்
ஊர்ந்துநம் கேள்வர் உழைவந்தார்-சார்ந்து
பரிகோட்டம் இன்றிப் பதவார்ந் துகளும்
திரிகோட்ட மாவிரியத் தேர்."

**தொகைநிலை: (அ)**

*தமது புகழினை உலகில் பொன்றாது நிலை நிறுத்திப் போரிட்ட இருபெருவேந்தரும் அவரது படைகளும் ஒருவர்க் கொருவர் தோலாது போர் செய்து எல்லோரும் பட்டது தொகை நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மண்டமர்த் திண்தோள் மறங்கடைஇ மண்புலம்பக்
கண்திரள்வேல் மன்னர் களம்பட்டார்-பெண்டிர்
கடிதெழு செந்தீக் கழுமினார் இன்னும்
கொடிதேகாண் ஆர்ந்தின்று கூற்று."

**தொகைநிலை: (ஆ)**

*வாளுக்கு நீராட்டிய பின்னர், வென்றவன் படைகட்கெல் லாம் சிறப்புச் செய்தற் பொருட்டு ஒருங்கு வருக எனத் தொகுத்தலும் தொகை நிலையாம்.*

**(எ.டு)**

"கதிர்சுருக்கி யப்புறம்போங் காய்கதிர்போல் வேந்தை
யெதிர் சுருக்கி யேந்தெயில்பா ழாக்கிப்-பதியிற்
பெயர்வான் றொகுத்த படைத்துகளாற் பின்னு
முயர்வான் குறித்த துலகு"

**தொகை நிலை: (இ)**

*ஓர் அரசனுடைய மதிலை முற்றிக் கைப்பற்றிய உழிஞை மன்னன் அடியினை அவனது ஏனைப் பகை மன்னர் எல்லாம் அஞ்சி வந்து தஞ்சம் புகுதலும் தொகை நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நாவற் பெயரிய ஞாலத் தடியடைந்து
ஏவ லெதிரா திகல்புரிந்த - காவலர்
வின்னின்ற தானை விறல்வெய்யோற் கம்மதிலின்
முன்னின் றவிந்தார் முரண்."

**தொடாக்காஞ்சி: (அ)**

*ஒரு காஞ்சி மறவனுடைய விழுப்புண்ணைத் தீண்டுதற்குச் சென்ற தொரு பேய் தீண்ட அஞ்சி மீண்டது தொடாக் காஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர்தூய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி-மொய்யிணர்ப்

பூப்பெய் தெரியல் நெடுந்தகைபுண் யாங்காப்பப்
பேய்ப்பெண் பெயரும் வரும்''

**தொடாக் காஞ்சி: (ஆ)**

*இன்பம் தரவல்ல நகை பொருந்திய மனைவி புண் பட்டுக் கிடக்குந் தன் கணவனைப் பேய்கள் நெருங்காதவாறு காப்பது தொடாக் காஞ்சியாகும்.*

**(எ.டு)**

''தீங்கனி யிரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்கு மருப்பி யாழொடு பல்லியங் கறங்கப்
பையப் பெயர்த்து மைவிழு திழுகி
யையவி சிதறி யாம்ப லூதி
யிசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே''

**தொட்ட காஞ்சி:**

*இல்லின்கண் பாதுகாக்கப்படும் மறவனது விழுப்புண்ணைப் பேய்மகள் தீண்டியது தொட்ட காஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

''கொன்றுருத்த கூர்வே லவற்குறுகிக் கூரிருள்வாய்
நின்றுருத்த நோக்கி நெருப்புமிழாச்- சென்றொருத்தி
ஒட்டார் படையிடந்த ஆறாப்புண் ஏந்தகலம்
தொட்டாள் பெருகத் துயில்.''

**தோலின் பெருக்கம்:**

*பகைவரது மதின்மேல் சென்றுழி மதிலகத்தோரால் எறியப் படுகின்ற அம்புமுதலியவற்றைத் தடுத்தற்குரிய கிடுகு கேடயம் முதலிய படைக்கருவிகளின் மிகுதியைக் கூறுவது தோலின் பெருக்கம்.*

**(எ.டு)**

"நின்ற புக ழொழிய நில்லா வுயிரோம்பி
யின்றுநாம் வைக லிழிவாகும்- வென்றொளிரும்
பாண்டி னிரைதோற் பணியார் பகையரணம்
வேண்டி னெளி தென்றான் வேந்து"

**தோல் உழிஞை:**

*வெற்றியோடு புகழையும் உண்டாக்கும் என்று கூறிக் கிடுகுப் படையைப் பாராட்டியது தோல் உழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நின்ற புகழொழிய நில்லா உயிரோம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும்- வென்றொளிரும்
பாண்டில் நிரைதோல் பணியார் பகையரணம்
வேண்டின் எளிதென்றான் வேந்து."

**நடுதல்:**

*நடுகல் நடுவதற்கு அடிப்படை அமைக்கப்பட்ட விடத்து, நடுகல் அமைப்பதற்குத்தேர்ந் தெடுக்கப் பட்ட கல்லை நன்னீரால் தூய்மை செய்து அவ்விடத்து நடுதலாம்.*

**(எ.டு)**

"சீர்த்த துகளிற்றாய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப் படுத் தற்கு நிலைகுறித்துப்-போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் பெயர்பொறித்துக்
கன்னட்டார் கல்சூழ் கடத்து"

**நயத்தல்:**

*கல்லைப் போன்ற திணிந்த தோளையுடைய தலைவனைக் கண்ட நன்னுதல் அரிவை தன் காம விருப்பத்தைக் கூறியது நயத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கன்னவில் தோளானைக் காண்டலும் கார்க்குவளை
அன்னவென் கண்ணுக்கு அமுதமாம்- என்னை

மலைமலிந் தன்ன மார்பம்
முலைமலிந் தூழூழ் முயங்குங் காலே.''

**நயப்புற்றிரங்கல்:**

*தலைவியின் புணர்ச்சியின்பத்தைப் பெரிதும் விரும்பிய தலைவன் சொல்லெதிர் பெறாமையின் அவளைப் பெரிதும் புகழ்ந்து நயப்புற்றிரங்கல் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

''பெருமட நோக்கிற் சிறுநுதற் செவ்வாய்க்
கருமழைக்கண் வெண்முறுவல் பேதை- திருமுலை
புல்லும் பொறியி லேனுழை
நில்லா தோடுமென் நிறையில் நெஞ்சே.''

**நல்லிசை நிலை:**

*போர்க்களத்துத் தன் தலைவன் பகைவரின் வஞ்சகத்தால் கொல்லப்பட்டான் என்றுசினந்து, பெரும்படைத் தலைவன் தலைமயங்கிப் பொருத நல்ல நிலைமையைக் கூறுவது நல்லிசை நிலையாகும்.*

**நலம் பாராட்டல்:**

*காமத்துன்பம் பெருக அணிகலன்களையுடைய அத்தலைவியினது அழகைத்தலைவன் கொண்டாடியது நலம் பாராட்டல் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

''அம்மென் கிளவி கிளிபயில ஆயிழை
கொம்மை வரிமுலை கோங்கரும்பு-இம் மலை
நறும்பூஞ் சாரல் ஆங்கண்
குறுஞ்சுனை மலர்ந்தன தடம்பெருங் கண்ணே.''

**நாடு வாழ்த்து:**

*முழந்தாளின் கீழேயும் நீண்டு தாழ்ந்த பெரிய கையினை யுடைய மன்னனது நாட்டின் வளத்தைக் கூறியது நாடு வாழ்த்து என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"எண்ணின் இடரெட்டும் இன்றி வயற்செந்நெற்
கண்ணின் மலரக் கருநீலம் - விண்ணின்
வகைத்தாய் வளனொடு வைகின்று வென்வேல்
நகைத்தாரான் தான்விரும்பு நாடு."

*இடர் எட்டு : "விட்டில் கிளி நால்வாய் வேற்றரசு, தன்னரசு, நட்டம், பெரும் பெயல் காற்று"*

**நாண்முல்லை:**

*கணவனைப் பிரிந்தாளொருத்தி, தனது நாணே காவலாக வறுமனையிடத்திருந்து தன் கற்புடைமையைக் காத்துக் கொண்டது நாண்முல்லை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"கொய்தார மார்பிற் கொழுநன் தணந்தபின்
பெய்வளை யாட்குப் பிறிதில்லை- வெய்ய
வளிமறையும் இன்றி வழக்கொழியா வாயில்
நளிமனைக்கு நற்றுணை நாண்."

**நாள்மங்கலம்:**

*அறத்தை உண்டாக்கும் செங்கோன்மையையும் அருளையும் விரும்பும் அரசன் பிறந்தநாளினது நன்மையைச் சொல்லியது நாள் மங்கலம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கரும்பகடும் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்
விரும்பி மகிழ்தல் வியப்போ- சுரும்பிமிர்தார்
வெம்முரண் வேந்தரும் வெள்வளையார் தோள்விழைந்து
தம்மதில் தாம்திறப்பர் தாள்."

**நீர்ப்படை:**

*நீர்ப்படையாவது நடுகல் நாட்டுதற்குரிய கல்லைக் கண்ட பின் அதனைக் கொண்டு வந்து நன்னீரால் தூய்மை செய்தலும், பின்னர்ப் பெயரும் பீடும் எழுதி நாட்டிய வழித்தூய்மை செய்தலும் என இருவகைப்படும்.*

**(எ.டு)**

"வாளமர் வீழ்ந்த மறவோன்க லீர்த்தொழுக்கிக்
கேளி ரடையக் கிளர்ந்தெழுந்து - நீள்விசும்பிற்
கார்ப்படுத்த வல்லேறு போலக் கழலோன்க
னீர்ப்படுத்தார் கண்ணீரி னின்று"

***இஃது நீர்ப் படை.***

"பல்லா பெயர்த்து நல்வழிப் படர்ந்தோன்
கல்சொரிந் தாட்டிய நீரே தொல்லை
வான்வழங்கு நீரினுந் தூய்தே யதனாற்
கண்ணீ ரருவியுங் கழீஇத்
தெண்ணீ ராடுமின் றீர்த்தமா மதுவே"

***இது கல்நாட்டியபின் நீராட்டியது.***

**நூழில்: (அ)**

*தன் தலைவன் வஞ்சகத்தால் கொலையுண்டான் என்று எண்ணிய மறவன், அறம் நோக்காது பலரை வெட்டிக் குவித்தல் நூழில் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"வள்ளை நீக்கி வயமின் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழிலாட்டு"

**நூழில்: (ஆ)**

*தும்பை மறவன் ஒருவன் பகைமன்னர் படையைக் கொன்று தனது வேலைத் திரித்து ஆடியதும் நூழில் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆடல் அமர்ந்தான் அமர்வெய்யோன் வீழ்குடற்
சூடல் மலிந்த சுழல்கண்பேய்- மீடல்
மறந்தவேல் ஞாட்பின் மலைந்தவர் மார்பம்
திறந்தவேல் கையில் திரித்து."

**நூழில் ஆட்டு:**

*தும்பை மறவன் ஒருவன் தனது மார்பைப் பிளந்த பகைவர் வேலினைப் பறித்து அப்பகைவர் படை இரிந்தோட எறிந்தது நூழிலாட்டு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மொய்யகத்து மன்னர் முரணினி என்னாங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை - வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த
படுசுடர் எஃகம் பறித்து."

**நெஞ்சொடு மெலிதல்: (அ)**

*தலைவி இரவின்கண் இருள் நெறியில் தலைவன் இருக்கைக்குச் செல்லக் கருதி தனது மனத்தின்கண் விரும்பிய நிலையைச் சொல்லியது நெஞ்சொடு மெலிதல் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"மல்லாடு தோளான் அளியவாய் மாலிருட்கண்
செல்லாம் ஒழிக செலவென்பாய்-நில்லாய்
புனையிழை யிழந்த பூசல்
நினையினு நினைதியோ வாழியென் நெஞ்சே."

**நெஞ்சொடுமெலிதல்: (ஆ)**

*எனது தலைவன்பாற் செல்லத் துணிந்தேன். இதனை மகளிரெல்லாம் அறிக என்று தலைவி கூறினும் நெஞ்சொடு மெலிதல் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"நல்வளை ஏக நலந்தொலைவு காட்டிய
செல்லல் வலித்தேனச் செம்மன்முன்- பில்லாத
வம்ப உரையொடு முயங்கிய
அம்பற் பெண்டிரும் அறைகளம் அலரே."

**நெடுமொழி: (அ)**

*வேந்தனால் ஏனாதி, காவிதி முதலிய பட்டடங்களும், நாடும், ஊரும் பெற்றகாரணத்தால், தானே யாயினும் பிறரேயானும் கூறும் மீக்கூற்றுச்சொல்.*

**(எ.டு)**

"போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றோ- போர்க் கெல்லாந்
தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே
ரேனாதிப் பட்டத் திவன்"

**நெடு மொழி கூறல்: (ஆ)**

*கரந்தை மறவன் ஒருவன் தன் அரசனுக்குத் தனது வீரத்தின் சிறப்பைத் தானே எடுத்துக் கூறியது நெடுமொழி கூறல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
வாளொடு வைகுவேன் யானாக-நாளும்
கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் ஈயப்
பிழிமகிழ் உண்பார் பிறர்."

**நெடு மொழி கூறல்: (இ)**

*தன்னிடத்தில் உள்ள போர்த்தொழிலின் முயற்சியாலே வஞ்சினங்களைத் தன்னோடு கூட்டிக் கூறுதல்.*

**(எ.டு)**

"தானால் விலங்காற் றனித்தாற் பிறன்வரைத்தால்
யானை யெறித லிளிவரவால்- யானை
யொருகை யுடைய தெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்"

**நெடுமொழி வஞ்சி:**

*ஒரு மறவன் தன் பகைவர் படையை நெருங்கித் தனது ஆண்மைத் தன்மையைத் தானே உயர்த்திச் சொல்லியது நெடு மொழிவஞ்சி என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"இன்னா ரெனவேண்டா என்னோ டெதிர்சீறி
முன்னர் வருக முரணகலும்-மன்னர்
பருந்தார் படையமருட் பல்லார் புகழ
விருந்தா யடைகுறுவார் விண்"

**நொச்சித்திணை:**

*பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தமது அரணைப் பாதுகாத்தற் பொருட்டு அவ்வரணகத்துள்ள அரசன் நொச்சிப் பூவைச் சூடி அதைப் பாதுகாத்தல் நொச்சித் திணையாம்.*

**(எ.டு)**

"ஆடரவம் பூண்டான் அழலுணச் சீறிய
கூடரணங் காப்போர் குழாம்புரையச்-சூடினார்
உச்சி மதிவழங்கும் ஓங்கு மதில்காப்பான்
நொச்சி நுதிவே லவர்"

**பகட்டுமுல்லை:**

*வேளாண் தலைவனை உழைப்பாலும் சுமை பொறுத்த லானும் அவனுடைய எருதோடு உவமித்துக் கூறியது பகட்டு முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"உய்த்தல் பொறுத்தல் ஒழிவின் றொலிவயலுள்
எய்த்தல் அறியா திடையின்றி-வைத்த
படுநுகம் பூண்ட பகட்டொடு மானும்
நெடுமொழி எங்கணவன் நேர்."

**பகல் முனிவுரைத்தல்:**

*தலைவனைப் புணர்தல் நிமித்தம் இரண்டாம் முறை காணுதற்கு உறுதி கொண்ட தலைவி, துன்பம் மிக்க நெஞ்சுடையளாய்ப் பகற்பொழுதை வெறுத்துக் கூறியதனைக் கூறுவது பகல் முனிவுரைத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"தன்கண் அளியவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண் நல்கான் எனவாடும்- என் கண்
இடரினும் பெரிதால் எவ்வம்
படரினும் பெரிதாற் பாவியிப் பகலே."

**படை இயங்கு அரவம்:**

*பசுக் கூட்டங்களைக் கவர்தற்கு எழுந்த படை பாசறைப் புறத்துப் பொருந்தும் பேரொலியும், நிரைமீட்டற்கு எழுந்த படை விரைந்து செல்லும் பேரொலியுமாம்.*

**(எ.டு)**

“வெவ்வாய் மறவர் மிலைச்சிய வெட்சியாற்
செவ்வானஞ் செல்வதுபோற் செல்கின்றா- ரெவ்வாயு
மார்க்குங் கழலொலி யாங்கட் படாலியரோ
போர்க்குந் துடியொடு புக்கு”

**படை வழக்கு: (அ)**

*அரசன் படைக்கலம் வழங்கிய பின்னர் வீரக்கழலை யுடைய மறவர் தமது மறப்பண்பினை விதந்து கூறுதல் படை வழக்கு என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

“துன்னருந் துப்பின் தொடுகழலார் சூழ்ந்திருப்பத்
தன்னமர் ஒள்வாளென் கைத்தந்தான்- மன்னற்கு
மண்ணகமோ வைகின்று மாலை நெடுங்குடைக்கீழ்
விண்ணகமும் வேண்டுங்கொல் வேந்து.”

**படை வழக்கு: (ஆ)**

*காஞ்சி மன்னன் தம்மில் இனமொத்த போர் மறவருக்குப் போர்க் கருவிகளை வழங்கியதும் படைவழக்கு என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

“ஐயங் களைந்திட்டடல் வெங்கூற் றாலிப்ப
ஐயிலை எஃக மவைபலவும்- மொய்யிடை
ஆட்கடி வெல்களிற் றண்ணல் கொடுத்தளித்தான்
வாட்குடி வன்க ணவர்க்கு”

**படையறுத்துப் பாழி கொள்ளும் ஏமம்:**

*கையில் உள்ள படைக்கருவிகள் தீர்ந்தவிடத்து, மெய்யினா லேயே போர் செய்து வெற்றியடைதலாம்.*

**(எ.டு)**

“கொல்லேறு பாய்ந்தழிந்த கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்- புல்லிக்கொண்
டாறாத போர்மலைந் துங்கரசர் கண்டார்த்தா
ரேறாட லாய ரென”

**பயந்தோர்ப் பழிச்சல்:**

*இம்மடந்தையைப் பெற்று வளர்த்தோர் நெடுங்காலம் வாழ்க என்று கூறி அத்தலைவியின் இருமுது குரவரைப் பாராட்டியது பயந்தோர்ப் பழிச்சல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கல்லருவி ஆடிக் கருங்களிறு காரதிரும்
மல்லலஞ் சாரல் மயிலன்ன- சில்வளைப்
பலவொளி கூந்தலைப் பயந்தோர் நிலவரை
மலியநீடு வா ழிய ரே."

**பரத்தை கூறல்:**

*பாங்காயினார் கேட்பப் பரத்தை தலைவன் மாலை பெறுதல் எமக் கெளிதென்று கூறியது பரத்தை கூறல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பலவுரைத்துக் கூத்தாடிப் பல்வய லூரன்
நிலவுரைக்கும் பூணவர் சேரிச் செலவுரைத்து
வெங்கட் களியால் விறலி விழாக்கொள்ளல்
எங்கட் கவன்தார் எளிது."

**பரத்தையை ஏசல்:**

*மருத நிலத்தூரையுடைய தலைவனோடு நீர் விளையாட்டினை விரும்பும் மெல்லிய சொல்லினையுடைய தலைவி பரத்தையை ஏசியது பரத்தையை ஏசல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"யாமுயங்கு மென்முலையால் யாணர் வயலூரன்
தேமுயங்கு பைந்தார் திரைமுயங்க -யாமுயங்க
எவ்வையர் சேரி இரவும் இமைபொருந்தாக்
கவ்வை கருதிற் கடை."

**பரத்தை வாயில் பாங்கி கண்டுரைத்தல்:**

*உன் தலைவி சொல் வீணாகுமாறு தலைவன் எம் இல்லிற்கு வருவான் என்று சேரிப்பரத்தையின் தோழி, இற்பரத்தையின் தோழிக்குச் சொல்லியது.*

**(எ.டு)**

“மாணலங் கொள்ளும் மகிழ்நன் தணக்குமேற்
பேணலம் பெண்மை ஒழிகென்பார்- காணக்
கலவ மயிலன்ன காரிகையார் சேரி
வலவன் நெடுந்தேர் வரும்.”

**பரிசில் கடா நிலை:**

*பரிசில் பெற்ற பின் அவனும் அவன் கொடுத்த பெருவளனை உயர்த்துக் கூறி உலக வழக்கியலால் தோன்றும் இரண்டு வகைப் பட்ட விடையாம். இருவகை விடையாவது, தலைவன் தானே விடுத்தலும், பரிசிலன் தானே போகல் வேண்டும் எனக்கூறி விடுத்தலுமாம்.*

**(எ.டு)**

“தென்பரதவர் மிடல்சாய
வட வடுகர் வாளோட்டிய”

*என்று தொடங்கும் புறப்பாடல் (378) இது தானே போவென விடுத்தபின், அவன் கொடுத்த பெருவளனை உயர்த்திக் கூறியது.*

**பரிசில் துறை:**

*மாநிலம் காக்கும் மன்னவன்முன்னே சென்று இரவலன் தான் பெறக்கருதிய பொருள் இஃதெனக் கூறியது பரிசில்துறை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“வரிசை கருதாது வான்போல் தடக்கைக்
குரிசில்நீ நல்கயாம் கொள்ளும்- பரிசில்
அடுகளம் ஆர்ப்ப அமரோட்டித் தந்த
படுகளி நால்வாய்ப் பகடு.”

**பரிசில் நிலை:**

*பரிசிலரை நீங்குத லமையாது நெடிது கொண்டொழுகிய தலைவற்குப் பரிசில் வேட்டோன் தன் கடும்பினது இடும்பை கூறித் தான் பெறக் கருதிய பொருளினைப் பெற்றுப் போகத் துணிந்தது பரிசில் நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“வெல்புரவி பூண்ட விளங்கு மணித்திண்டேர்
நல்கிய பின்னும் நனிநீடப்- பல்போர்
விலங்கும் கடல்தானை வேற்றார் முனைபோல்
கலங்கும் அளித்தென் கடும்பு.”

**பரிசில் விடை:**

*உள்ளம் மகிழுமாறு தனது வெற்றியைப் புகழ்ந்து பாடிய பரிசிலர்க்கு அரசன் பரிசிற் பொருளை வழங்கி அவர் இன்புறுமாறு விடை கொடுத்தது பரிசில் விடை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“படைநவின்ற பல்களிறும் பண்ணமைந்த தேரும்
நடைநவின்ற பாய்மாவும் நல்கிக்- கடையிறந்து
முன்வந்த மன்னர் முடிவணங்குஞ் சேவடியாற்
பின்வந்தான் பேரருளி னான்.”

**பருவமயங்கல்: அ.**

*தலைவியின் ஆற்றாமை கண்டு தோழி காலத்தை ஐயுற்றுத் துன்பம் அடைந்தது பருவமயங்கல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“பெரும்பணை மென்தோள் பிரிந்தாரெம் முள்ளி
வரும்பருவம் அன்றுகொல் ஆங்கொல்- சுரும்பிமிரும்
பூமலி கொன்றை புறவெல்லாம் பொன்மலரும்
மாமயிலும் ஆலும் மலை.”

**பருவமயங்கல்: ஆ.**

*தலைவி, தலைவன் குறித்த பருவம் நிகழ்ந்தும் அப்பருவம் அன்றெனத் தெளிதலும் பருவமயங்கல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“பொறிமயில் ஆலின பொங்கர் எழிலி
சிறுதுவலை சிந்தின சிந்த- நறிய

பவர்முல்லை தோன்றி பரியாமல் ஈன்ற
அவர்வருங் காலமீ தன்று.”

**பள்ளிமிசைத் தொடர்தல்:**

*இரவில் தலைவி உறக்கத்தை ஒழித்துத் தலைவனை அவனது படுக்கையிலேயே பற்றிக் கொண்டது பள்ளிமிசைத் தொடர்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“யானை தொடரும் கொடிபோல யானுன்னைத்
தானை தொடரவும் போதியோ-மானை
மயக்கரிய உண்கண் மடந்தைதோள் உள்ளி
இயக்கருஞ் சோலை இரா.”

**பாசறை நிலை:**

*வஞ்சி சூடிச் சென்ற மன்னன் தனக்குப் பகைவர் பணிந்த பின்னும் மீளானாய்ப் பாசறையிடத்தே தங்கியது பாசறை நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கரும்பொடு காய்நெற் கனையெரி யூட்டிப்
பெரும்புனல் வாய்திறந்த பின்னும்- சுரும்பின்
தொகைமலிந்த தண்குவளைத் தூமலர்த் தாரான்
பகைமெலியப் பாசறையு ளான்.”

**பாசி நிலை:**

*மதிலைக் கொண்ட புறத்தோனும் மதிலைக்காத்த அகத்தோனும் அகழியின் இருகரை மதிலிலும் நின்று கொண்டு தண்ணீர்க் கண் பாசி போற்கிடங் கினிடத்துப் போரிடுவது பாசி நிலையாகும்.*

**(எ.டு)**

“பொலஞ்செய் கருவிப் பொறையுமிப் பண்ணாய்
நிலந்திடர் பட்டதின் றாயிற்- கலங்கமர்மேல்
வேத்தமர் செய்யுங் விரகென்னாம் வேன்மறவர்
நீத்துநீர்ப் பாய்புலிபோ னின்று”

**பாசி மறன்:**

*மதிற்புறத்தன்றி ஊரகத்துப் போரை விரும்புவது பாசிமற னாகும்.*

**(எ.டு)**

“மறநாட்டுந் தங்கணவர் மைந்தறியு மாதர்
பிறநாட்டுப் பெண்டிர்க்கு நொந்தா- ரெறிதொறும்போய்
நீர்ச்செறி பாசிபோ னீங்காது தங்கோமா
னூர்ச்செரு வுற்றாரைக் கண்டு”

**பாதீடு:**

*வெட்சி மறவர்களின் படைத்தலைவன் தன்னுடைய சுற்றத் தாராகிய மறவர்கள் பற்றிக் கொணர்ந்த பசுக்களை, அந்த, அந்த மறவர் ஆற்றிய தொழிலின் தகுதியை அறிந்து அவ்வத் தகுதிகட் கேற்ப வழங்கியது பாதீடு என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

“ஒள்வாள் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்- விள்வாரை
மாறட்ட வென்றி மறவர் தஞ் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை.”

**பாடகச் சீறடி பணிந்த பின் இரங்கல்:**

*தலைவன் குவித்தகையுடனே பாடகம் என்னும் காலணியை அணிந்து தனது அடியில் வணங்கிய பின்னர்த் தலைவி நெஞ்சு நெகிழ்ந்தது பாடகச் சீறடி பணிந்தபின் இரங்கல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“அணிவரும் பூஞ்சிலம் பார்க்கும் அடிமேல்
மணிவரை மார்பன் மயங்கிப்- பணியவும்
வற்கென்ற நெஞ்சம் வணங்காய் சிறுவரை
நிற்கென்றி வாழியர் நீ.”

**பாடாண் பாட்டு:**

*ஒரு மன்னனுடைய புகழும் வன்மையும் பொருளைத் தனக் கெனப் பாதுகாவாத வண்மையும் அருளுடைமையும் என்று*

*கூறப்பட்ட இவற்றை ஆராய்ந்து கூறுவது பாடாண் திணையாம். அஃதாவது பாடப் படுகின்ற ஆண்மகனது இயல்புகளைத் தொகுத்துக் கூறுவது.*

**(எ.டு)**

"மன்னர் மடங்கல் மறையவர் சொல்மாலை
அன்ன நடையினார்க் காரமுதம்- துன்னும்
பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தார்
எரிசினவேல் தானையெங் கோ."

**பாணாற்றுப்படை:**

*பரிசில் பெற்று வருகின்ற பாணன் மலைவழியிடத்தே தன் எதிர்வரும் பாணனைப் பரிசில் பெறும் வழியிலே செலுத்தியது பாணாற்றுப் படை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"இன்றொடை நல்லிசை யாழ்ப்பாண எம்மைப்போற்
கன்றுடை வேழத்த கான்கடந்து- சென்றடையிற்
காமரு சாயலாள் கேள்வன் கயமலராத்
தாமரை சென்னி தரும்."

**பாண்பாட்டு:**

*பாணர், போர்க் களத்தே பட்ட மறவர் தம் உடலைத் தீப் பெய்து அவருடைய புகழைத் தம் யாழினோடிசைத்துப் பாடுதல் பாண்பாட்டு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"தளரியல் தாய்புதல்வர் தாமுண ராமைக்
களரிக் கனல்முழங்க மூட்டி- விளரிப்பண்
கண்ணினார் பாணர் களிறெறிந்து வீழ்ந்தார்க்கு
விண்ணினார் செய்தார் விருந்து."

**பாண் வரவுரைத்தல்:**

*தோழி தலைவனுடைய பாணன் வரவினைத் தலைவிக்கு உணர்த்தியது பாண் வரவுரைத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அஞ்சொற் பெரும்பணைத்தோள் ஆயிழையாய் தாம்கொடியும்
வஞ்சம் தெரியா மருள்மாலை-எஞ்சேரிப்
பண்ணியல் யாழொடு பாணனார் வந்தாரால்
எண்ணிய தென்கொலோ ஈங்கு."

**பாப்ப்பன வாகை;**

*வேள்வி மண்டபத்திடத்தே மறைகளைக் கேட்டுத் தலைமை பெற்ற பார்ப்பனனது வெற்றியை மிகுத்துச் சொல்லியது பார்ப்பன வாகை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஓதங் கரைதவழ்நீர் வேலி உலகினுள்
வேதங்கரை கண்டான் வீற்றிருக்கும்- ஏதம்
சுடுசுடர் தானாகிச் சொல்லவே வீழ்ந்த
விடுசுடர் வேள்வி அகத்து."

**பார்ப்பனமுல்லை:**

*வேந்தர்களின் மாறுபாட்டை விலக்கி ஒற்றுமைப் படுத்தும் பார்ப்பானின் நடுவுநிலைமையைச் சொல்லியது பார்ப்பனமுல்லை என்னும் துறையாம். பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று நிலையினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலையே நடுவு நிலைமையாகும்.*

**(எ.டு)**

"ஒல்லெனீர் ஞாலத் துணர்வோ விழுமிதே
நல்லிசை முச்செந்தீ நான்மறையோன்- செல்லவும்
வென்றன்றி மீளா விறல்வேந்தர் வெம்பகை
என்றன்றி மீண்ட திலர்."

**பாலை நிலை(புறங்காட்டு நிலை):**

*பாலை நிலையாவது, கற்புடைய மனைவி கணவன் இறந்து அவனோடு எரிபுகுதல் வேண்டி எரியை விலக்கினாரோடு உறழ்ந்து கூறுவது புறங்காட்டு நிலையாகும்.*

**(எ.டு)**

“பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் தட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்கோட்டுப் பண்ணிய கருங்கோட் டீம
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே”

**பால்முல்லை:**

*மையுண்ட கண்ணையும் அணிகலன்களையும் உடைய தலைவியை இயற்கைப் புணர்ச்சியின் கண் புணர்ந்த தலைவன், வருத்தம் நீங்கின நெஞ்சுடனே, தனக்குத் தலைவியைத் தந்த ஊழினை வாழ்த்தியது பால்முல்லை என்னும் துறையாம் (பால்-ஊழ்.)*

**(எ.டு)**

“திங்கள் விளங்கும் திகழ்ந்திலங்கு பேரொளி
அங்கண் விசும்பின் அகத்துறைக- செங்கண்
குயிலனைய தேமொழிக் கூரெயிற்றுச் செவ்வாய்ப்
பயில்வளையை நல்கிய பால்.”

**பிரிவிடை அரற்றல்:**

*இளம் பிறையைப் போன்ற நெற்றியை யுடைய தலைவி தனது முன்கையிற் செறித்த வளையல் கழல, வெறுத்து வருந்தி தலைவன் பிரிந்தவிடத்து ஆற்றியிருந்தது பிரிவிடை அரற்றல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஓடுக கோல்வளையும் ஊரும் அலரறைக
தோடவிழ் தாழை துறைகமழக்-கோடுடையும்
பூங்கானற் சேர்ப்பன் புலம்புகொள் மால்மாலை
நீங்கானென் நெஞ்சகத்துள் நின்று."

**பிழைத் தோர்த் தாங்குங்காவல்:**

*தன்னிடத்துப் பிழை செய்தோரைப் பொறுத்தருளும் பாதுகாவலாம்.*

**(எ.டு)**

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தற் றலை"

**பிள்ளைத் தெளிவு:**

*கரந்தை மறவன் போரின்கண் தான்பட்ட விழுப்புண்ணை விரும்பித் துடி முழக்கத்தோடே போர்க்களத்தின்கண் கூத்தாடியது பிள்ளைத் தெளிவு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மேவார் உயிருணங்க மேன்முடித்த பிள்ளையன்
பூவா ளுறைகழியாப் போர்க்களத்துள்-ஓவான்
துடியிரட்டி விட்ட தொடுகழலார் முன்னின்று
அடியிரட்டித் திட்டாடும் ஆட்டு."

**பிள்ளைப் பெயர்ச்சி:**

*தீ நிமித்தம் உண்டாகவும் அதனைப் பொருட்படுத்தாது வெட்சி மறவரோடு போர்செய்து வென்று ஆனிரை மீட்டு வந்த மறவனுக்கு வேந்தன் தண்ணளி செய்தது பிள்ளைப் பெயர்ச்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பிணங்கமருட் பிள்ளை பெயர்ப்பப் பெயராது
அணங்கர்செய் தாளெறிதல் நோக்கி - வணங்காச்
சிலையளித்த தோளான் சினவிடலைக் கன்றே
தலையளித்தான் தண்ணடையுந் தந்து."

**பிள்ளையாட்டு: (அ)**

*கரந்தை மறவன் பகைவருடைய குடரைத் தன் வேலிற் சூட்டி அவ்வேலை அடி நுனியாகத் திருப்பித் திருப்பிப் போர்க்களத்தின் கண்ணே நின்று ஆடியது பிள்ளையாட்டு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய எஃகங் குடர்மாலை-சூட்டியபின்
மாறிரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேறிரிய விம்மும் துடி."

**பிள்ளையாட்டு: (ஆ)**

*பிள்ளையாட்டாவது, வாட்போரால் பகைவரை வென்று மேம்பட்ட அரசிளங்குமரனை, அந்நாட்டு மக்கள் கொண்டு வந்து பாராட்டி அவனுக்குப் பறை முதலிய ஒலிக் கருவிகள் முழுங்கத் துறக்க மாகிய அரசைக் கொடுத்துக் கொண்டாடிய ஆட்டமாகும்.*

**(எ.டு)**

"வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்றலை யொள்வாட் புதல்வற்கண்-டன்புற்றுக்
கான்கெழுநாடு கொடுத்தார் கருதார்க்கு
வான் கெழு நாடு வர"

**பிள்ளை வழக்கு:**

*நிமித்தம் தப்பாதவாறு கூறிய புலவர்கட்குப் பசுக்கூட்டங் களை அதிகமாக வழங்கியது பிள்ளை வழக்கு என்னுந் துறையாம். (பிள்ளை-நன்னிமித்தம்)*

**(எ.டு)**

"புல்லார் நிரைகருதி யாஞ்செல்லப் புள்நலம்
பல்லார் அறியப் பகர்ந்தார்க்குச்- சொல்லாற்
கடஞ்சுட்ட வேண்டா கடுஞ்சுரையா னான்கு
குடஞ்சுட் டினத்தாற் கொடு."

**பிறர்மனைதுயின்றமை விறலி கூறல்:**

*பரத்தையர் சேரியிடத்தே தலைவன்தங்கின நிலையை இத்தன்மைத் தென விறலி தலைவிக்கு எடுத்துக் கூறியது பிறர் மனை துயின்றமை விறலி கூறல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"தண்தார் அணியவாம் தையலார் சேரியுள்
வண்டார் வயலூரன் வைகினமை- உண்டால்
அறியேன் அடிஉறை ஆயிழையால் பெற்றேன்
சிறியேன் பெரிய சிறப்பு."

**பின்தேர்க்குரவை: (அ)**

*தேரோரை வென்ற கோமகற்கே பொருந்திய இலக்கணத் தானே தேரின்பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச் சுற்றம் ஆடுங்குரவையாம்.*

**(எ.டு)**

"வென்று களங்கொண்ட வேந்தன்றேர் சென்றதற்பின்
கொன்ற பிணநிணக்கூழ் கொற்றவை-நின்றளிப்ப
வுண்டாடும் பேய்கண் டுவந்தனவே போர்ப் பரிசில்
கொண்டா டினகுரவைக் கூத்து"

**பின் தேர்க்குரவை: (ஆ)**

*தும்பை மன்னனின் தேரின் பின்னர் வீரக்கழலணிந்த போர் மறவரோடு வளையலை யணிந்த பாண்மகளிர் ஆடியது பின்தேர்க்குரவை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கிளையாய்ந்து பண்ணிய கேள்வியாழ்ப்பாணும்
வளையா வயவரும் பின்னாக்-கொளையாய்ந்து
அசைவிளங்கும் பாடலொ டாட வருமே
திசை விளங்கும் தானையான் தேர்."

**பின்னிலை முயறல்:**

*தலைவி தான்முன்பு இழந்த அழகினைப் பெற விரும்பித் தலைவன் பின் இரந்து நிற்றலை மேற் கொண்டது பின்னிலை முயறல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“மற்கொண்ட திண்தோள் மறவேல் நெடுந்தகை
தற்கண்டு மாமைத் தகையிழந்த-எற்காணப்
பெய்களி யானைப் பிணரெருத்திற் கண்டுயான்
கைதொழுதேன் தான்கண் டிலன்.”

**புகழ்ந்தனர் பரவல்:**

*நிலவுலகத்தின்கண் யாம் இன்னதொரு பேற்றைப் பெறு வோமாக என்று சொல்லித் தெய்வத்தை முன்னிலைப் படுத்தி வாழ்த்துதல் புகழ்ந்தனர் பரவல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“சூடிய வான்பிறையோய் சூழ்கடலை நீற்றரங்கத்து
ஆடி அசையா அடியிரண்டும் -பாடி
உரவுநீர் ஞாலத் துயப்போக என்று
பரவுதும் பல்காற் பணிந்து.”

**புகழ்ச்சினர் பணிதல்:**

*விளங்கிய புகழினையுடைய இறைவனை இவ்வுலக இன்பங்களைப் பெறக் கருதி வாழ்த்தியது புகழ்ச்சினர் பணிதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“ஆடல் அமர்ந்தான் அடியடைந்தார் என்பெறார்
ஓடரி உண்கண் உமையொருபாற் -கூடிய
சீர்சால் அகலத்தைச் செங்கண் அழல்நாகம்
தாராய்த் தழுவப் பெறும்.”

**புணரா இரக்கம்:**

*தலைவி தலைவனது தன்மையினை உணராமையானே தோன்றிய துன்பம் மேன்மேலும் பெருக. அத்தலைவியைப் புணராமையானே உண்டான துன்பத் தோடே தனிமையாகத் தங்கியது புணரா இரக்கம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“இணரார் நறுங்கோதை எல்வளையாள் கூட்டம்
புணராமற் பூசல் தரவும்- உணராது

தண்டா விழுப்படர் நலியவும்.
உண்டால் என்னுயிர் ஓம்புதற் கரிதே.”

**புண்ணொடு வருதல்:**

*உலகம் இருக்கும் வரையும் அதனோடே நிற்குமாறு தன் புகழை நிற்கச் செய்து, தான் தன்னுடல் அழிதற்குக் காரண மாகிய விழுப்புண்ணோடே ஒரு மறவன் வந்தது புண்ணொடு வருதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“வெங்குருதி மல்க விழுப்புண் ணுகு தொறூஉம்
இங்குலிகஞ் சோரும் வரையேய்க்கும்-பைங்கண்
இனம்போக்கி நின்றார் இகல்வாட்டி வேந்தன்
மனம்போல வந்த மகன்.”

**புலவரேத்தும் புத்தேள்நாடு;**

*பிறவி நோய் நீங்குவதற்கான மெய்க்காட்சியினையுடையராய், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்ற ஐம்புலனுணர்ச்சிகளை வென்றவரது வீட்டின் (பேரின்ப உலகம்) தன்மையைக் கூறுவது புலவரேத்தும் புத்தேள் நாடு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“பொய்யில் புலவர் புரிந்துறையும் மேலுலகம்
ஐயமொன் றின்றி அறிந்துரைப்பின்-வெய்ய
பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்று
இகலின் றிளிவரவும் இன்று.”

**புலவர் ஆற்றுப்படை:**

*இறையருள் பெற்ற ஒரு புலவன், அது பெறுந் தகுதியுடைய மற்றொரு புலவனை இறைவன் பால் செல்ல வழிப்படுத்துவது புலவர் ஆற்றுப்படை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும்- பொறிகட்கு
இருளீயும் ஞாலத் திடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழி யவன்.”

**புலவியுட் புலம்பல்:**

*அழகிய தொடியினையுடைய தலைவனது மாலையை அறிந்து ஊடல் கொண்டு தனிமையுற்றது புலவியுட் புலம்பல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஓங்கிய வேலான் பணியவும் ஒள்ளிழை
தாங்காள் வரைமார்பன் தார்பரிந்-தாங்கே
அரும்படர் மூழ்கி அமைமென்தோள் வாட
நெடும்பெருங்கண் நீந்தின நீர்."

**புலவி பொருளாகத் தோன்றிய பாடாண்பாட்டு:**

*வில்போன்ற நெற்றியினையுடையாள் ஒருத்தி தலைவன் மார்பினை யாம் தழுவேம் என்று ஊடிச் சொல்லியது புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மலைபடு சாந்தம் மலர்மார்ப! யாம்நின்
பலர்படி செல்வம் படியேம்- புலர்விடியல்
வண்டினங்கூட் டுண்ணும் வயல்சூழ் திருநகரிற்
கண்டனங் காண்டற் கினிது."

**புலனறி சிறப்பு:**

*பகைவர் நாட்டின்கண் சென்று ஆண்டுள்ள மறைச் செய்திகளை அறிந்து கூறிய ஒற்றர்களுக்கு, மறவர்களைக் காட்டிலும் மிகுதியான ஆக்களைக் கொடுத்தது புலனறி சிறப்பு என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"இறுமுறை எண்ணா திரவும் பகலும்
செறுமுனையுட் சென்றறிந்து வந்தார்-பெறுமுறையின்
அட்டுக் கனலும் அயில்வேலோய் ஒன்றிரண்டு
இட்டுக் கொடுத்தல் இயல்பு."

**புறத்திறை: (அ)**

*உழிஞைப் படை பகைவனின் அரண் புறத்தே சென்று தங்கியது புறத்திறை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"புல்லார் புகலொடு போக்கொழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி-ஒல்லார்
நிறத்திறுத்த வாட்டானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழலி னான்."

**புறத்திறை; (ஆ)**

*பகைவரது காவற் காட்டினது சிறிய வழிகளாலும் பெரிய வாயில்களானும் உள்ளே யிருப்போர் புறம் போகாத படி வளைத்துக் கொண்டு வெட்சியார் அக்காவற்காட்டின் புறத்தே தங்கியது புறத்திறை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"உய்ந்தொழிவார் ஈங்கில்லை ஊழிக்கண் தீயேபோல்
முந்தமருள் ஏற்றார் முரண்முருங்கத் - தந்தமரின்
ஒற்றினான் ஆய்ந்தாய்ந் துரவோர் குறும்பினைச்
சுற்றிறனார் போகாமற் சூழ்ந்து."

**புறத்துழிஞை:**

*உழிஞையார் நொச்சியாரது காவற்காட்டைக் கடந்து உட்சென்று அகழிக்கரையிலே தங்கியது புறத்துழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கோள்வாய் முதலைய குண்டகழி நீராக
வாள்வாய் மறவேந்தன் வந்திறுத்தான்- நீள்வாயில்
ஓங்கல் அரணத் தொளிவளையார் வெய்துயிர்ப்ப
ஆங்கொல் அரிய அமர்."

**புறத்தோன் வீழ்ந்தபுதுமை;**

*அகத்தோனால் காத்து நின்ற இடை மதிலைப் பின்னர், அம்மதிலின் புறத்திருந்தோன் விரும்பிக் கைக் கொள்வது புறத் தோன் வீழ்ந்த புதுமையாம்.*

**(எ.டு)**

“வெஞ்சின வேந்த னெயில்கோள் விரும்பியக்கா
லஞ்சி யொதுங்காதார் யார்யாவர்- மஞ்சுசூழ்
வான்றோய் புரிசை பொறியு மடங்கின
வான்றோ ரடக்கம்போ லாங்கு”

**புறநிலை வாழ்த்து;**

*வழிபடுகிற தெய்வம் நின்னைப் பாதுகாக்கக் குற்றந் தீர்ந்த செல்வமொடு வழிவழியாகச் சிறந்து விளங்குக என்று தெய்வத்தைப் புற நிறுத்தி வாழ்த்துவது புறநிலை வாழ்த்தாகும். அங்ஙனம் வாழ்த்திய அச்செய்யுள் ஆசிரியப்பாவினும் மருட்பாவினும் வரும்.*

**பூக்கொள் நிலை:**

*காஞ்சி மறவர் போர் செய்தற் பொருட்டுத் தம் மன்னன் வழங்கிய பூவினை ஏற்றுக் கொண்டது பூக்கொள் நிலை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

“பருதிசெல் வானம் பரந்துருகி யன்ன
குருகியா றாவதுகொல் குன்றூர்-கருதி
மறத்திறத்தின் மாறா மறவரும் கொண்டார்
புறத்திறுத்த வேந்திரியப் பூ”

**பூசல்மயக்கு: (அ)**

*இறந்துபட்ட தாமரை மலர் போன்ற பாலகனின் சுற்றத்தார் அழுகை யாரவாரத்தைக் கூறியது பூசல் மயக்கு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“அலர்முலை அஞ்சொல் அவனொழிய அவ்விற்
குலமுதலைக் கொண்டொளித்தல் அன்றி- நிலமுறப்
புல்லிய பல்கிளைப் பூசல் பரியுமோ
சொல்லிய வந்தொழியக் கூற்று.”

**பூசல் மயக்கு: (ஆ)**

*வேந்தன் இறந்தமைக்கு உலகோர் இரங்குதலும் பூசல் மயக்கு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"எண்ணின் இகல்புரிந்தோர் எய்தாத தில்போலும்
கண்ணினொளிர் வேலான் கரந்தபின்-அண்ணல்
புகழொடு பூசல் மயங்கிற்றாற் பொங்கும்
அகழ்கடல் வேலி அகத்து."

**பூசல் மயக்கம் (இ)**

*பெரிய புகழினை நிலை நிறுத்தி இறந்துபட்டவனைச் சுற்றிக் கூடிய உறவினர்கள், அவன் இறந்து பட்டமைக்கு அழுவது பூசன் மயக்கமாம்.*

**(எ.டு)**

"இரவலர் வம்மி னெனவிசைத்த லின்றிப்
புரவலன் மாய்ந்துழியும் பொங்கு- முரை மயங்க
வேற்கண் ணியரழுத வெம்பூசல் கேட்டடங்கா
தோற்கண்ணே போலுந் தொடி"

*(தகடூர் யாத்திரை-இரங்கல்-2)*

**பூவைநிலை: (அ)**

*திருமாலுடைய காத்தற் புகழையும், ஏனோர்க்கு உரிய வாய்ப் பொருந்திய பெரிய தலைமையிற் குறையாத படைத்தல், அழித்தல் என்னும் புகழையும், அரசர் தொழிலுக்கு உவமை யாகக் கூறப்படுவது பூவைநிலையாகும்.*

**(எ.டு)**

"குருந்த மொசித்தஞான் றுண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய்- மரம் பெறாப்
போரிற் குருகுறங்கும் பூம்புன னீர்நாட
மார்பிற் கிடந்த மறு"

***இது சோழனை மாயோனாகக் கூறிற்று. (காத்தல்)***

"ஏற்றூர்தி யானு மிகல்வெம்போர் வானவனு
மாற்றலு மாள்வினையு மொத்தொன்றி னொவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயா
மாற்றல்சால் வானவன் கண்"

***இது சேரனை அரனாகக் கூறிற்று. (அழித்தல்)***

**பூவைநிலை: (ஆ)**

*காட்டிடத்தே மலர்கின்ற காயாம் பூவை, ஆனிரை காத்த திருமாலின் திருவுருவோடு உவமித்துப் புகழ்ந்தது பூவைநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம்-மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்."

**பெண்பாற் கிளவி:**

*என்னை அலர் தூற்றும் இவ்வூரினர். எம்மை நினையாத எனது நலத்தைக் கொள்ளை கொண்ட தலைவனை அறிந்திலர் என்று தலைவி கூறியது பெண்பாற்கிளவி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வானத் தியலும் மதியகத்து வைகலும்
கானத் தியலும் முயல்காணும் - தானத்தின்
ஒள்வளை ஓடவும் உள்ளான் மறைந்துறையும்
கள்வனைக் காணாதிவ் வூர்."

**பெருங்காஞ்சி: (அ)**

*எவராலும் தடுக்க முடியாத கூற்றுவன் வருவான் என்று சொல்லப் படுவது பெருங்காஞ்சியாம்.*

**(எ.டு)**

"பல்சான்றீரே பல்சான்றீரே
கயன்முள் என்ன நரைமுதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான்றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்

பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே"

**பெருங்காஞ்சி: ஆ.**

*மலைகள் உயர்ந்து நிற்றற்கிடமான பெரிய உலகத்தின்கண் தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாம் நெறியினைச் சொல்லியது பெருங்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆயா தறிவயர்ந் தல்லாந் தகலிடத்து
மாயா நிதியம் மனைச்செறீஇ- ஈயாது
இறுகப் பொதியன்மின் இன்றோடு நாளைக்
குறுக வருமரோ கூற்று."

**பெருங்காஞ்சி: (இ)**

*பகைவர் படையைத் தடுக்கும் ஆற்றலினையுடைய காஞ்சி மறவர்கள் தங்கள் தங்களது பேராற்றலை மிகப் பெரிய வஞ்சியார் படையினை எதிர்ந்து போர் செய்யும் முகத்தானே வெளிப் படுத்தியது பெருங்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வில்லார் குறும்பிடை வேறுவே றார்த்தெழுந்த
கல்லா மறவர் கணைமாரி-ஒல்லா
வெருவி மறவேந்தர் வெல்களி றெல்லாம்
இருவி வரைபோன்ற இன்று."

**பெருஞ்சோற்று நிலை:**

*வேந்தர் போர்தலைக் கொண்ட பிற்றை ஞான்று போர் குறித்த படையாளருந் தானும் உடனுண்பான் போல்வதோர் முகமன் செய்தல் பெருஞ்சோற்று நிலையாகும்.*

**பெருந்திணை;**

*தன்னை விரும்பாத தலைவன் ஒருவனைத் தான் தழுவ விரும்பி இருளிலே அவனிருக்கைக்குச் செல்வாள் ஒருத்தியின் தன்மையைச் சொல்லியது பெருந்திணை என்னும் துறையாம். (பெருந்திணை- பொருந்தாக்காமம்.)*

**(எ.டு)**

"வயங்குளைமான் தென்னன் வரையகலம் தோய
இயங்கா இருளிடைச் செல்வேன்- மயங்காமை
ஓடரிக் கண்ணாய் உறைகழிவாள் மின்னிற்றால்
மாட மறுகின் மழை."

**பெருமை:**

*தன்னைச் சார்ந்த படை வீரர்கள் பகைவர்முன் நிற்க முடியாமல் ஓடிய விடத்து, விரைந்து வரும் நீர்ப் பெருக்கை ஒரு கற்றூண் நின்று தடுக்குமாறு போலத்தான் ஒருவனே எதிர்நின்று பகைவரை எதிர்த்தலாம்.*

**(எ.டு)**

"கார்த்தரும் புல்லணற் கண்ணஞ்சாக் காளைதன்
றார்ப்பற்றி யோர்தரு தோணோக்கித் -தார்ப்பின்னர்
ஞாட்பினுள் யானைக் கணநோக்கி யானைப்பின்
றேர்க்குழா நோக்கித்தன் மாநோக்கிக் கூர்த்த
கணை வரவு நோக்கித்தன் வேனோக்கிப் பின்னைக்
கிணைவனை நோக்கி வரும்."

**பெரும்படை:**

*நடுகல் அமைத்தபின் கோயிலாக எழுப்பி, அதில் அவன் பீடும் பெயரும் எழுதி, அக்கல்லிற்குப் பெருஞ்சிறப்புகளைச் செய்வது பெரும்படை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"கைவினை மாக்கள் கலுழக்க ணோக்கிழந்து
செய்வினை வாய்ப்பவே செய்தமைத் தோர் - மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேற் பெரிது"

**பெருவஞ்சி :**

*வஞ்சிவேந்தன் இரண்டாவதாகத்தன் பகைவர் நாட்டைத் தீக்கொளீஇயது பெருவஞ்சி என்னும் துறையாம் .*

**(எ.டு)**

"பீடுலா மன்னர் நடுங்கப் பெரும் பகை
ஊடுலாய் வானத் தொளிமறைப்ப- நாடெலாம்

பின்னும் பிறங்கழல் வேய்ந்தன பெய்கழற்கால்
மன்னன் கனல மறம்.''

**பேய்க் காஞ்சி (அ)**

*போர்க்களத்தில் விழுப்புண்பட்டு விழுந்த மறவரைப் பேய் மிகவும் அச்சமுறுத்தியது பேய்க்காஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

''கொட்கு நிமிருங் குறுகுங் குடர்சூடிப்
பெட்ப நகும் பெயரும் பேய்மகள்- உட்கப்
புனலங் குருதிப் புலால்வாய்க் கிடந்து
கனல விழிப்பவர்க் கண்டு''

**பேய்க் காஞ்சி (ஆ)**

*போர்க்களத்துப் பாதுகாக்குஞ் சுற்றம் இல்லாத புண்பட்ட மறவனைப் பேய்கள் காக்கும் நிலையைக் கூறுவது பேய்க்காஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

''புண்ணனந்த ருற்றானைப் போற்றுந ரின்மையிற்
கண்ணனந்த ரில்லாப்பேய் காத்தனவே - யுண்ணு
முளையோரி யுட்க வுணர்வொடு சாயாத
விளையோன் கிடந்த விடத்து''

**பேய்க்குரவை:**

*தும்பை வேந்தனது தேரின் முன்னும் பின்னும் பேய்கள் கூத்தாடியது பேய்க்குரவை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''முன்னரும் பின்னரும் மூரிக் கடற்றானை
மன்னன் நெடுந்தேர் மறனேத்தி- ஒன்னார்
நிணங்கொள்பேழ் வாய நிழல்போல் நுடங்கிக்
கணங்கொள்பேய் ஆடுங் களித்து.''

**பேய் நிலை:**

*போர்க்களத்தே விழுப்புண் பட்டு விழுந்த மறவனைப் பேய் காவல் செய்தது பேய்நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆயும் அடுதிறலாற் கன்பிலா ரில்போலும்
தோயும் கதழ்குருதி தோள்புடைப்பப் - பேயும்
களம்புகலச் சீறி கதிர்வேல்வாய் வீழ்ந்தான்
உளம்புகல ஓம்ப லுறும்."

**பேராண்பக்கம்;**

*பகை மன்னரை ஒரு பொருட்டாக எண்ணாது தன் படையைச் செலுத்துவது பேராண்பக்கமாம்.*

**(எ.டு)**

"மெய்ம்மலி மனத்தி னம்மெதிர் நின்றோ
னடர்வினைப் பொலிந்த சுடர்விடு பாண்டிற்
கையிகந் தமருந் தையணற் புரவித்
தளையவிழ் கண்ணி யிளையோன் சீறின்
விண்ணுயர் நெடுவரை வீழ்புயல் கடுப்பத்
தண்ணறுங் கடாமுபமிந்த வெண்கோட்
டண்ணல் யானை யெறித லொன்றோ
மெய்ம்மலி யுவகைய னம்மருங்கு வருதல்
கடியமை கள்ளுண் கைவல் காட்சித்
துடிய னுண்க ணோக்கிச் சிறிய
கொலைமொழி மின்னுச்சிதர்ந் தனையதன்
வேறிரித் திட்டு நகுதலு நகுமே"

**பேராண் முல்லை:**

*மறவேந்தன் மறவர்கள் உள்ளம் விரும்புமாறு போர்க் களத்தை வென்று கைப்பற்றிய சிறப்பைக் கூறியது பேராண் முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஏந்துவாள் தானை இரிய உறைகழித்துப்
போந்துவாள் மின்னும் பொருசமத்து- வேந்தர்
இருங்களி யானை இனமிரிந் தோடக்
கருங்கழலான் கொண்டான் களம்."

**பையுள்:**

*பையுளாவது, வீரன் இறந்ததற்காக அவனுடைய சுற்றத்தார் அழுதலே யன்றி அவர்தம் மனைவியர் தாமே தத்தம் கணவரைக் கட்டிக் கொண்டு அழுததைக் கண்டோர் அடையும் வருத்தமாம்.*

**(எ.டு)**

"கதிர் மூக் காரல் கீழ்ச் சேற் றொளிப்ப" என்னும் புறப்பாடல்.

**பொருநவாகை:**

*அறிஞர் ஒரு மன்னனுக்கு ஒப்பின்மை தோன்றும்படி நின்னோடு பிறரை ஒப்பு நோக்கி அவரது ஒவ்வாமை காரணமாக யாரையும் இகழ்வதைத் தவிர்க என அறிவுறுத்துவது பொருந வாகை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"வெள்ளம் போல்தானை வியந்து விரவாரை
எள்ளி உணர்தல் இயல்பன்று- தெள்ளியார்
ஆறுமேல் ஆறியபின் அன்றித்தம் கைக்கொள்ளார்
நீறுமேற் பூத்த நெருப்பு."

**பொருநர் ஆற்றுப்படை:**

*பொருநன் ஒருவன் மற்றொரு பொருநனை இன்ன வள்ள லிடத்துச் செல்க என ஆற்றுப் படுத்தது பொருநராற்றுப் படை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"தெருவில் அலமரும் தெண்கண் தடாரிப்
பொருவில் பொருந! நீ செல்லின்- செருவில்
அடுந்தடக்கை நோன்றாள் அமர்வெய்யோன் ஈயும்
நெடுந்தடக்கை யானை நிரை."

**பொருள் மொழிக்காஞ்சி:**

*மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல் புணர்த்தியது பொருள் மொழிக்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஆய பெருமை அவிர்சடையோர் ஆய்ந்துணர்ந்த
பாய நெறிமேற் படர்ந்தொடுங்கித்- தீய

இருளொடு வைகா திடம்படு ஞாலத்து
அருளொடு வைகி அகல்.''

**பொருளொடு புகறல்:**

*உலகின் கண் பொய்ப் பொருளின் பற்றினை நீக்கி மெய்ம்மை யாகிய இறைப் பொருளை விரும்பியது பொருளொடு புகறல் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

''ஆமினி மூப்பும் அகன்ற திளமையும்
தாமினி நோயும் தலைவரும்-யாமினி
மெய்யைந்து மீதூர வைகாது மேல்வந்த
ஐயைந்தும் ஆய்வ தறிவு.''

**பொலிவுமங்கலம்:**

*மன்னன் மனம் உவக்குமாறு அவனுக்கு மகன் பிறத்தலானே பலரும் கொண்டாடியது பொலிவு மங்கலம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்
பெருங்கண் புதல்வன் பிறப்பப்- பெரும்பெயர்
விண்ணார் மகிழ்ந்தார் வியலிடத்தார் ஏத்தினார்
எண்ணார் அவிந்தார் இகல்.''

**பொழுது கண்டு இரங்கல்:**

*உயிர் நிற்றலைப் பொருளாய் நெட்டுயிர்ப் பெறிந்து சுழலும் பொன்வளையலையுடைய தலைவி மாலைப் பொழுதினைக்கண்டு வருந்தியது.*

**(எ.டு)**

''இறையே இறந்தன எல்வளை உண்கண்
உறையே பொழிதலும் ஓவா - நிறையைப்
பருகாப் பகல்கரந்த பையுள்கூர் மாலை
உருகா உயங்கும் உயிர்.''

**போந்தை:**

*முடியுடைத் தமிழ் வேந்தர் மூவருள் சேரன் சூடும் பூமாலையினைப் புகழ்ந்தது போந்தை என்னும் துறையாம். (போந்தை= பனந்தோடு: இது சேர மன்னர்களுக்கு அடையாளப் பூவாகும்.)*

**(எ.டு)**

“குடையலர் காந்தள்தன் கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்; புடைதிகழும்
தேரதிரப் பொங்கும் திருந்து வேல் வானவன்
போர்எதிரிற் போந்தையாம் பூ.”

**போர்க்களத் தொழிதல்:**

*பகைவர் படைக்கலன்களுக்குப்புறங்கொடாத வெட்சி மறவரை, எதிர்த்து இறுதி காறும் போர்செய்து அக்களத்திலேயே மாண்டது போர்க்களத்தொழிதல் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

“உரைப்பின் அதுவியப்போ ஒன்னார்கைக் கொண்ட
நிரைப்பின் நெடுந்தகை சென்றான்- புரைப்பின்று
உளப்பட்ட வாயெல்லாம் ஒள்வாள் கவரக்
களப்பட்டான் தோன்றான் கரந்து.”

**போர்நிலைவகை:**

*கூதிர்ப்பாசறை வேனிற்பாசறை என்னும் இரண்டிடத்தும், போர் மீது கொண்ட வேட்கையால், காதலால் திரிபில்லாத மனத்தனாகி ஆண்டு நிகழ்த்தும் போர்த்தொழிலே போர் நிலை வகையாம்.*

**(எ.டு)**

“மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடைய
மாதர்பாற் பெற்ற வலியளவோ- கூதிரின்
வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலா
னைங்கணை தோற்ற வழிவு”

**போர்மலைதல்:**

*கரந்தையார், ஆனிரையைக் கைப் பற்றிச் சென்ற வெட்சி மறவரை எய்தி அவர் மேலும் செல்லாதவாறு வளைத்துக் கொண்டு போர் செய்தது போர் மலைதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“புலிக்கணமும் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமு மானமுந் தேசும்- ஒலிக்கும்
அருமுனை வெஞ்சுரத் தான்பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து.”

**மகட் பாற்காஞ்சி:**

*ஒருவன் தன் மகளை விரும்பும் அரசனோடு மாறுபடுவது மகட் பாற் காஞ்சியாம்.*

**(எ.டு)**

“அளிய கழல்வேந்தர் அம்மா அரிவை
எளியளென்று எள்ளி உரைப்பிற்- குரியாவோ
பண்போற் கிளவியிப் பல்வளையாள் வாள்முகத்த
கண்போற் பகழி கடிது”

**மகட்பால் இகல்:**

*நொச்சியரசன் மகளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பிய உழிஞை மன்னனது நிலைமையைக் கூறியது மகட்பால் இகல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“அந்தழை அல்குலும் ஆடமை மென்தோளும்
பைந்தளிர் மேனியும் பாராட்டித்- தந்தை
புறமதில் வைகும் புலம்பே தருமே
மறமதில் மன்னன் மகள்.”

**மகள் மறுத்து மொழிதல்:**

*உழிஞையரசன் நொச்சியானது மகளைத் தனக்கு மணம் செய்து தரும்படி வேண்ட நொச்சி மன்னன் மறுத்துக் கூறியது மகள் மறுத்து மொழிதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“ஒள்வாள் மறவர் உருத்தெழுந் தும்பர்நாள்
கள்வார் நறுங்கோதை காரணமாக்- கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால்.”

**மங்கல நிலை: (அ)**

*துயில் நீத்தெழும் மன்னர்முன் மங்கலம் கூறிய மிகுதியைச் சொல்லியது மங்கலநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“விண்வேண்டின் வேறாதல் மங்கலம் வேந்தர்க்கு
மண்வேண்டின் கைகூப்பல் மங்கலம்- பெண்வேண்டின்
துன்னன் மடவார்க்கு மங்கலம் தோலாப்போர்
மன்னன் வரைபுரையும் மார்பு.”

**மங்கல நிலை: (ஆ)**

*நிலைபெறும் சிறப்பினையுடைய ஆக்கத்தை ஒரு மன்னன் எய்தினான் என்று கூறுதலும் மங்கல நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“தீண்டியும் கண்டும் பயிற்றியும் தன்செவியால்
வேண்டியும் கங்குல் விடியலும்- ஈண்டிய
மங்கல ஆய நுகர்ந்தான் மறமன்னர்
வெங்களத்து வேலுயர்த்த வேந்து.”

**மடலூர்தல்:**

*தலைவன் தலைவியைப் பெற இடையூறு மிக்குழி ஊர் அம்பலத்தின் நடுவே பித்தர் போலப் பலவற்றைக் கூறி மடல் மாவைச் செலுத்தியது மடலூர்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“இன்றிப் படரோ டியானுழப்ப ஐங்கணையான்
வென்றிப் பதாகை எடுத்தானாம்- மன்றில்
தனி மடமான் நோக்கி தகைநலம்பா ராட்டிக்
குனிமடல்மாப் பண்ணிமேற் கொண்டு.”

**மணமங்கலம்:**

*பகையை வெல்லும் தோளினையும் எறியும் வேலினையும் உடைய மன்னன் பெண்டிரோடு புணர்ந்த நன்மையைச் சொல்லியது மணமங்கலம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அணக்கருந் தானையான் அல்லியந்தார் தோய்ந்தாள்
மணக்கோல மங்கலம் யாம்பாட- வணக்கருஞ்சீர்
ஆரெயில் மன்னன் மடமகள் அம்பணைத் தோட்
கூரெயிற்றுச் செவ்வாய்க் கொடி."

**மண்ணு மங்கலம்: (அ)**

*பகையரசனின் மதிலையழித்துக் கழுதையேரான் உழுது வெள்ளை வரகுங் கொள்ளும் விதைத்து மங்கல மல்லாதன செய்தவன் மங்கலமாக நீராடுவதைக் குறிப்பது மண்ணுமங்கல மாகும்.*

**(எ.டு)**

"நடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்"

**மண்ணு மங்கலம்: (ஆ)**

*மண்ணு மங்கலமாவது, அரசர்க்குச் சிறப்பெய்திய மிக்க புகழை எய்துவிக்கும் முடி புனைந்து ஆடும் நீராட்டாகும்.*

**(எ.டு)**

"அளிமுடியாக் கண்குடையா னாகுதிநாள் வேய்ந்த
வொளிமுடி பொன்மலையே யொக்கு- மொளிமுடிமேன்
மந்திரத்தா லந்தணர் வாக்கியநீ ரம்மலைமே
லந்தரத்துக் கங்கை யனைத்து"

**மண்ணுமங்கலம்: (இ)**

*போரிட்ட மதிலிடத்து, ஒருவனை ஒருவன் கொன்று, அவன் முடிக்கலம் முதலியன கொண்டு, இறந்து பட்டவன் பெயராலேயே முடிமுனைந்து நீராடுவது மண்ணுமங்கலமாகும்.*

**(எ.டு)**

“மழுவாளான் மன்னர் மருகறுத்து மால்போற்
பொழிலேழுங் கைக் கொண்ட போழ்தி- னெழிமுடி
சூடாச்சீர்க் கொற்றவனுஞ் சூடினான் கோடியர்க்கே
கூடார்நா டெல்லாங் கொடுத்து”

**மண்ணு மங்கலம்: (ஈ)**

*எண்ணுதற்கரிய பெரும் புகழினையுடைய மன்னவன் திரு முழுக்குக் கொள்ளும் சிறப்பைக் கூறியது மண்ணுமங்கலம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாள்
மங்கலம் கூற மலிபெய்திக்- கங்கையாள்
பூம்புனல் ஆகம் கெழீஇயினான் போரடுதோள்
வேம்பார் தெரியலெம் வேந்து.”

**மண்ணுமங்கலம்: (உ)**

*உழிஞை மன்னன் நொச்சியாரது மதிலைக் கைக் கொண்டு மங்கல நீராடியது மண்ணுமங்கலம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“எங்கண் மலர எயிற்குமரி கூடிய
மங்கல நாள்யாம் மகிழ்தூங்கக்- கொங்கலர்தார்ச்
செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி.”

**மழபுலவஞ்சி:**

*வஞ்சிவேந்தன் தனக்குப் பகைவருடையதாகிய நாட்டைக் கொள்ளையிட்டு இல்லங்கள் பாழ்படும் படி ஆண்டுள்ள பொருள்களைக் கைப்பற்றிய செயலைக்கூறியது மழபுலவஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“களமர் கதிர்மணி காலேகம் செம்பொன்
வளமனை பாழாக வாரிக்- கொளன்மலிந்து

கண்ணார் சிலையார் கவர்ந்தார் கழல்வேந்தன்
நண்ணார் கிளையலற நாடு."

**மறக்களவழி:**

*முழவு போன்ற தோளினையுடைய மன்னனை உழு தொழிலையுடைய வேளாளனாக உருவகித்தது மறக்கள வழி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அஞ்சுவரு தானை அமர்என்னும் நீள்வயலுள்
வெஞ்சினம் வித்திப் புகழ்விளைக்கும்- செஞ்சுடர்வேற்
பைங்கட் பணைத்தாட் பகட்டுழவன் நல்கான்
எங்கட் கடையா இடர்."

**மறக்காஞ்சி: (அ)**

*வஞ்சியார் அஞ்சும்படி காஞ்சி வேந்தன் போரைச் செலுத்தியது மறக்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கருந்தலையும் வெண்ணிணமுஞ் செந்தடியு மீராப்
பருந்தோ டெருவை படர- அருந்திறல்
வேறாய மன்னர் வியப்பக் கடாயினான்
மாறா மறவன் மறம்."

**மறக் காஞ்சி: (ஆ)**

*காஞ்சி மறவன் பகைவர் உயர்ச்சியைப் பொறானாய்த் தன் விழுப்புண்ணைப் பிளந்து உயிர் நீத்தலும் மறக்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நகையம ராய நடுங்க நடுங்கான்
தொகையம ரோட்டிய துப்பிற்- பகைவர்முன்
நுங்கிச் சினவுதல் நோனான் நுதிவேலாற்
பொங்கிப் பரிந்திட்டான் புண்"

**மறக்காஞ்சி: (இ)**

*நல்ல குணம் உறுவிலையாகப் பெறுகின்ற பகுதியாராய்ந்து பெறுதற்குப் பட்ட விழுப் புண் தீர்ந்து வாழும் வாழ்க்கை நிலை*

*யின்மையின் அதனை வேண்டாது புண்ணைக் கிழித்து இறப்பதும் மறக்காஞ்சியாகும்.*

**(எ.டு)**

"பொருது வடுப்பட்ட யாக்கை நாணிக்
கொன்றுமுகந் தேய்ந்த வெஃகந் தாங்கிச்
சென்று களம்புக்க தானைதன் னோடு
முன்மலைந்து மடிந்த வோடா விடலை
நடுக னெடுநிலை நோக்கியாங் குத்தன்
புண்வாய் கிழித்தனன் புகழோ னந்நிலைச்
சென்றுழிச் செல்க மாதோ களிறு படி பறந்தலை
முரண்கெழு தெவ்வர் காண
விவன்போ லிந்நிலை பெறுகயா னெனவே"

**மறமுல்லை:**

*தன் மன்னன் தனக்கு வழங்கும் பொருளிடத்துக் கருத்தின்றிப் பகைவெல்லலே குறிக்கோளாகக் கொண்டு சினக்கும் போர் மறவனது தன்மையைச் சொல்லியது மறமுல்லை என்னும் துறை யாம்.*

**(எ.டு)**

"வன்னவில் தோளானும் வேண்டிய கொள்கென்னும்
கன்னவில் திண்டோட் கழலானும்- மன்னன்முன்
ஒன்றான் அழல்விழியா ஒள்வாள் வலனேந்தி
நின்றான் நெடிய மொழிந்து."

**மறனுடைப் பாசி:**

*நொச்சி மறவர் மதில் முற்றிய உழிஞை மறவரோடு பொருது புறங் கொடாது பட்டது மறனுடைப் பாசி என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"பாயினார் மாயும் வகையாற் பலகாப்பும்
ஏயினார் ஏய இகல்மறவர்- ஆயினார்
ஒன்றி யவரற ஊர்ப்புலத்துத் தார்தாங்கி
வென்றி அமரர் விருந்து"

**மன்னைக் காஞ்சி:**

*ஒருவன் இறந்தவிடத்து அவன் இத்தன்மையோன் என்று ஏனையோர் இரங்கிக் கூறும் பொருட்கண் வருவது மன்னைக் காஞ்சியாம்.*

**(எ.டு)**

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா மெமக் கீயு மன்னே
யம் பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே"

*(புறம்-235)*

**மாணார்ச் சுட்டிய வாண்மங்கலம்:**

*பகைவரைக் குறித்த வாள் வென்றியாற் பசிப் பிணி நீங்கிய பேய்ச் சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்துவது வாண்மங்கல மாகும்.*

**(எ.டு)**

"ஆளி மதுகை யடல்வெய்யோன் வாள்பாடிக்
கூளிகள் வம்மினோ கூத்தாடக்- காளிக்குத்
தீரா வெம்பசி தீர்த்துநாஞ் செங்குருதி
நீராட்டி யுண்ட நிணம்"

**மாராயவஞ்சி:**

*வஞ்சிவேந்தனால் சிறப்புப் பெற்ற மறவர்களின் மாண் பினைக் கூறியது மாராயவஞ்சி என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"நேராரம் பூண்ட நெடுந்தகை நேர்கழலான்
சேரார் முனைநோக்கிக் கண்சிவப்ப- போரார்
நறவேய் கமழ்தெரியல் நண்ணார் எறிந்த
மறவேல் இலைமுகந்த மார்பு"

**மாலைநிலை:**

*இறந்துபட்ட தன் கணவனுடனே நெருப்பிலே புகவேண்டித் தலைவி மாலைப் பொழுதிலே நின்றது மாலைநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"சோலை மயிலன்னாள் தன்கணவன் சொல்லிய சொல்
மாலை நினையா மனங்கடைஇக்- காலைப்
புகையழல் வேலோன் புணர்ப்பாகி நின்றாள்
அகையழல் ஈமத் தகத்து."

**முதுஉழிஞை: (அ)**

*மதிலகத்துள்ள நொச்சி மறவருடைய மாண்பினை உழிஞை ஒற்றர் கூறுதல் முது உழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அறியார் வயவர் அகத்திழிந்த பின்னும்
நெறியார் நெடுமதிலுள் நேரார்- மறியாம்
கிளியொடு நேராங் கிளவியார் வாட்கண்
களியுறு காமங் கலந்து."

**முது உழிஞை: (ஆ)**

*உழிஞை மறவர் நொச்சியாரது அரணகத்தே பாய்கின்ற பறவையைப் போன்று யாண்டும் குதித்தது முது உழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கோடுயர் வெற்பின் நிலங்கண் டிரைகருதும்
தோடுகொள் புள்ளின் தொகையொப்பக்- கூடார்
முரணகத்துப் பாற முழவுத்தோள் மள்ளர்
அரணகத்துப் பாய்ந்திழிந்தார் ஆர்த்து."

**முது காஞ்சி:**

*எல்லாப் பொருள்கட்கும் மேலாய் வரும் மெய்ப் பொருளைத் தக்கவிடத்து உணர்த்தி மற்றைய பொருள்களின் நிலையாமையையும் முறைப்படக் கூறியது முதுகாஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“இளமை நிலைதளர மூப்போ டிறைஞ்சி
உளமை உணரா தொடுங்கி- வளமை
வியப்போவல் இல்லா வியலிடத்து வெஃகாது
உயப்போகல் எண்ணின் உறும்.”

**முதுபாலை:**

*கொடுமை மிக்க பாலைநில வழியில் தன் கணவனை இழந்து தனியளாய் நின்று தலைவி வருந்துவதைக் குறிப்பது முது பாலையாம்.*

**(எ.டு)**

“இளையரு முதியரும் வேறுபுலம் படர
வெடுப்ப வெழாஅய் மார்ப மண்புல்ல
விடைச்சுரத் திறுத்த மள்ள விளர்த்த
வளையல் வறுங்கை யோச்சிக் கிளையு
ளின்ன னாயின னிளையோ னென்று
நின்னுரை செல்லு மாயின் மற்று
முன்னூர்ப் பழுனிய கோளியா லத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனுஞ் செம்மலு மெமக்கென நாளு
மானாது புகழு மன்னை
யாங்கா குவள்கொ லளிய டானே”

*(புறம் 254)*

**முதுமொழிக் காஞ்சி:**

*உலகம் புகழும் அறிவுடையோர், ஆராய்வார் உணர்தற் குரிய உலகின்கண் நிகழும் அறம், பொருள், இன்பம், என்னும் மூன்று உறுதிப் பொருளின் முடிந்த நிலைமையினை அறியும் படிக் கூறுவது முது மொழிக்காஞ்சி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“ஆற்றின் உணரின் அருளறமாம் ஆற்றார்க்குப்
போற்றார் வழங்கிற் பொருள்பொருளாம்- மாற்றிப்
புகலா தொழுகும் புரிவளையார் மென்தோள்
அகலா தளித்தொழுகல் அன்பு.”

**முதுமொழிவஞ்சி:**

*ஒரு மறவனுடைய குடி முதல்வனைப் புகழ்ந்து கூறியது முதுமொழி வஞ்சி என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"குளிறு முரசங் குணில்பாயக் கூடார்
ஒளிறுவாள் வெள்ளம் உழக்கிக்- களிறெறிந்து
புண்ணொடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய்
தண்ணடை நல்கல் தகும்"

**முரச உழிஞை:**

*உழிஞை வேந்தனது முரசின் நிலையைக் கூறியது முரச உழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கதிரோடை வெல்களிறு பாயக் கலங்கி
உதிரா மதிலும் உளகொல்- அதிருமால்
பூக்கண் மலிதார்ப் புகழ்வெய்யோன் கோயிலுள்
மாக்கண் முரச மழை."

**முரசவாகை:**

*அரசனது வெற்றிமுரசின் தன்மையைச் சொல்லியது முரச வாகை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மதியோர் நெடுங்குடை மன்னர் பணிந்து
புதிய புகழ்மாலை வேய-நிதியம்
வழங்குந் தடக்கையான் வான்தோய் நகருள்
முழங்கும் அதிரும் முரசு."

**முல்லை:**

*பெரிய மலைபோன்ற மார்பினையுடைய தலைவன் தன்னை விரும்பின காதலையும் மடப்பத்தையும் உடைய தன் தலைவியைப் புணர்ந்த மகிழ்ச்சியினது மிகுதியைக் கூறியது முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஊதை உளர ஒசிந்து மணங்கமழும்
கோதைபோல் முல்லைக் கொடி மருங்குற்- பேதை
குவைஇ இணைந்த குவிமுலை ஆகம்
கவைஇக் கவலை இலம்."

**முற்றுமுதிர்வு:**

*அடைத்திருந்த நொச்சி மன்னனது அரண்மனையின் கண் காலை முரசம் முழங்கக் கேட்ட உழிஞை மன்னனது சினத்தின் மிகுதியைக் கூறியது முற்று முதிர்பு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"காலை முரசம் மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோன் நோக்குதலும்- மாலை
அடுகம் அடிசிலென் றம்மதிலுள் இட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு."

**முற்றுழிஞை:**

*கூத்தப் பெருமான் முப்புரத்தை எரிக்கும் பொருட்டுச் சூடிய உழிஞை மாலையைப் புகழ்ந்தது முற்றுழிஞை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"மயங்காத தார்ப்பெருமை மற்றறிவார் யாரே
இயங்கரண மூன்றும் எரித்தான்- தயங்கிணர்ப்
பூக்கொள் இதழிப் புரிசெஞ் சடையானும்
மாக்கொள் உழிஞை மலைந்து."

**முன்தேர்க் குரவை: (அ)**

*வலிமையுடைய தும்பை மறவர்கள் கணைய மரத்தைப் போன்ற தோளையுடைய தம் மன்னன் தேர்முன் ஆடியது முன் தேர்க்குரவை என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

“ஆனா வயவர்முன் ஆட அமர்க்களத்து
வானார் மின் னாகி வழி நுடங்கும்- நோனாக்
கழிமணிப் பைம்பூண் கழல்வெய்யோன் ஊரும்
குழுமணித் திண்தேர்க் கொடி.”

**முன்தேர்க்குரவை: (ஆ)**

*தேரின்கண் வந்த அரசர் பலரையும் வென்ற வேந்தன் வெற்றிக் களிப்பாலே தேர்த்தட்டிலே நின்று போர்த் தலைவரொடு கை பிணைந்தாடுங் குரவையாம்.*

**(எ.டு)**

“சூடிய பொன்முடியும் பூணு மொளிதுளங்க
வாடிய கூத்தரின்வேந் தாடினான்- வீடிக்
குறையாடல் கண்டுவந்து கொற்றப்போர் வாய்த்த
விறையாட வாடாதார் யார்”

**மூதானந்தம்: (அ)**

*போரிற்பட்ட தன் கணவனொடு இறந்தாளொடு தலைவியின் செயலைக் கண்ட வழிப்போவார் வியந்து சொல்லியது மூதானந்தம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“ஒருயிராக உணர்க உடன்கலந் தார்க்கு
ஈருயிர் என்பர் இடைதெரியார்- போரில்
விடனேந்தும் வேலாற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே உலந்த துயிர்.”

**மூதானந்தம்: (ஆ)**

*ஒரு மறவன் தன் மார்பிலே பகைவருடைய அம்பு பாய் தலால் தான் கருதிய வினையை முற்றச் செய்யானாய் இறந்து படுதலும் மூதானந்தம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“முந்தத்தான் மாவொடு புக்கு முனையமருட்
சிந்தத்தான் வந்தார் செருவிலக்கிக்- குந்தத்தாற்

செல்கணை மாற்றிக் குரிசில் சிறைநின்றான்
கொல்கணைவாய் வீழ்தல் கொடிது.''

**மூதில் முல்லை:**

*மறக்குடிப் பிறந்த மறவர்க்கேயன்றி அம்மறக்குடியிற் பிறந்த மடப்பத்தையுடைய பெண்டிர்க்கும் மறப் பண்பினைச் சிறப்பித்தது மூதில் முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
வெந்திறல் எஃகம் இறைக்கொளீஇ-முந்தை
முதல்வர்கல் தான்காட்டி மூதில் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு.''

**மூவகை நிலை:**

*பகைவர்கள் அஞ்சும் படியான காலாட்படை, யானைப் படை, குதிரைப் படை என்னும் முப்படைகளின் நிலையைக் கூறுவது மூவகை நிலையாகும்.*

**மெலிதல்:**

*தலைவி ஊரார் தூற்றுகின்ற பழிச் சொல்லுக்கு நாணி வருந்தி வாட்டத்துடன் இருப்பது மெலிதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''குரும்பை வரிமுலைமேற் கோல நெடுங்கண்
அரும்பிய வெண்முத் துகுப்பக்- கரும்புடைத்தோட்
காதல்செய் காமம் கனற்ற
ஏதி லாளற் கிழிந்தனென் எழிலே.''

**மெலிவொடு வைகல்:**

*அலர்நாணி வருந்திய தலைவி மேலும் காமம் வருத்து வதால் வளையல்கள் கழலவும், அழகு கெடவும் வருந்திய தலைவியின் தளர்ச்சியின் மிகுதியைச் சொல்லியது மெலிவொடு வைகல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''பிறைபுரை வாணுதல் பீரரும்ப மென்தோள்
இறைபுனை எல்வளை யேக- நிறைபுணையா

யாம நெடுங்கடல் நீந்துவேன்
காம ஒள்ளெரி கனன்றகஞ் சுடுமே."

**யானை கைக்கோள்:**

*உழிஞை மறவர் தம்மோடு பகை கொண்ட நொச்சியாரை வென்று அவர்தம் யானையையும், காவற்படையையும் கைப் பற்றியது யானை கைக்கோள் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"ஏவல் இகழ்மறவர் வீய இகல்கடந்து
காவலும் யானையும் கைக்கொண்டான் - மாவலான்
வம்புடை ஒள்வாள் மறவர் தொழுதேத்த
அம்புடை ஞாயில் அரண்."

**யானைமறம்:**

*தும்பை மன்னனுடைய இளங்களிற்றினது தறுகண்மையைச் சொல்லியது யானைமறம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அடக்கருந் தானை அலங்குதார் மன்னர்
விடக்கும் உயிரும் மிசையக்- கடற்படையுள்
பேயும் எருவையும் கூற்றுந்தன் பின்படரக்
காயுங் கழலான் களிறு."

**வஞ்சிக் காஞ்சி:**

*தன் கணவன் உயிரைப் போக்கிய அந்த வேலினாலேயே தன் உயிரை (இறந்தவன் மனைவி) நீப்பது வஞ்சிக் காஞ்சியாகும்.*

**(எ.டு)**

"இன்ப முடம்புகொண் டெய்துவிர் காண்மினோ
வன்பி னுயிர்புரக்கு மாரணங்கு - தன்கணவ
னல்லாமை யுட்கொள்ளு மச்சம் பயந்ததே
புல்லார்வேன் மெய்சிதைத்த புண்"

(தகடூர் யாத்திரை- புறத்திரட்டு-மூதின் மறம்-8)

**வஞ்சித் திணை: (அ)**

*வஞ்சிப்பூ மாலையைத் தலையிலே சூடி ஓர் அரசன் தன் பகைவன் மண்ணைக் கைப் பற்றுதலைக் கருதியது வஞ்சித் திணையாகும்.*

**(எ.டு)**

“செங்கண் மழவிடையின் தண்டிச் சிலைமறவர்
வெங்கள் மகிழ்ந்து விழவமர- அங்குழைய
வஞ்சி வணங்கார் வணக்கிய வண்டார்ப்பக்
குஞ்சி மலைந்தானெங் கோ”

**வஞ்சித் திணை: (ஆ)**

*வஞ்சி என்னும் புறத்திணை முல்லை என்னும் அகத் திணைக்குப் புறனாகும். மண்ணாசையினாலே மிக்கு விளங்கும் அரசனுடன் மற்றோர் அரசன் சென்று அஞ்சும்படியான போர் செய்தலைக் கருதியது.*

**வஞ்சியரவம்:**

*வஞ்சி வேந்தனுடைய மறவர்குழாம் வாள் முதலிய படைகளுடன் போர் கருதி வெகுண்டு எழுந்தது வஞ்சியரவம் என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

“பௌவம் பணைமுழங்கப் பற்றார்மண் பாழாக
வெளவிய வஞ்சி வலம்புனையச் - செவ்வேல்
ஒளிறும் படைநடுவண் ஊழித்தீ யன்ன
களிறும் களித்துதிருங் கார்”

**வஞ்சினக் காஞ்சி:**

*காஞ்சி மன்னன் தன் பகைவரை வெல்லுதற் பொருட்டுச் சூள் மொழிந்தது வஞ்சினக் காஞ்சி என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

“இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை
வென்று களங்கொள்ளா வேலுயர்ப்பின்-என்றும்
அரணவியப் பாயும் அடையார்மு னிற்பேன்
முரண்அவிய முன்முன் மொழிந்து”

**வஞ்சினம்;**

*இச்செயலைச் செய்யாது ஒழிவே னாயின் யான் இன்ன கேட்டினை அடையக் கடவேன் என்று கூறுவது வஞ்சினம். (வஞ்சினக் காஞ்சியாம்.)*

**(எ.டு)**

"மெல்ல வந்தெ னல்லடி பொருந்தி
யீயென விரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்ச
மின்னுயி ரானுங் கொடுக்குவெ னிந் நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
னுள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி இடறிய சிதடன் போல
வுய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்.
வருந்திப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே"

**வணிகர்க்கு உரியவை:**

*கற்றல், வேள்வி செய்தல், கொடுத்தல், உழவுத் தொழில் புரிதல், வாணிகஞ் செய்தல், பசுக்களை வளர்த்துக் காத்தல் ஆகிய ஆறும் வணிகர்க்கு உரியனவாம்.*

**(எ.டு)**

"ஈட்டிய தெல்லா மிதன்பொருட் டென்பதே
காட்டிய கைவண்ணங் காட்டினார்- வேட்டொறுங்
காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்
தாமரையுஞ் சங்கும்போற் றந்து"

***இது ஈகையைக் குறிப்பது.***

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"

***இது உழவுத் தொழிலின் சிறப்புக் கூறியது.***

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்"

***இது வாணிகச் சிறப்புக் கூறியது.***

*ஏனையவை வந்துழிக் காண்க.*

**வரவெதிர்ந்திருத்தல்:**

*கூர்மையான பல்லையுடைய தலைவி பலவகையாக அணி செய்யப்பட்ட தனது செல்வம் மிக்க மலையிடத்தே தலைவனது வருகையை ஏற்றது வரவெதிர்ந்திருத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"காம நெடுங்கடல் நீந்துங்காற் கைபுனைந்த
பூமலி சேக்கை புணைவேண்டி- நீமலிந்து
செல்லாய் சிலம்பன் வருதற்குச் சிந்தியாய்
எல்லாக நெஞ்சம் எதிர்."

**வல்லாண் முல்லை:**

*ஒரு மறவனது குடி நன்மையையும் ஊர் நன்மையையும் அவனது இயல்பு மிகுதியையும் பாராட்டி அவனது ஆண்மைத் தன்மையினது நன்மையை விதந்து கூறியது வல்லாண்முல்லை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வின்முன் கணைதெரியும் வேட்டைச் சிறுசிறார்
முன்முன் முயலுகளு முன்றிற்றே- மன்முன்
வரைமார்பின் வேல்மூழ்க வாளமுவந் தாங்கி
உரைமாலை சூடினான் ஊர்."

**வள்ளி :**

*அணிகலன்களைத் தாங்கிய மகளிர் தங்கள் மனம் மகிழுமாறு வேலேந்திய முருகக் கடவுளுக்கு வெறியென்னும் கூத்தை ஆடியது வள்ளி என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வேண்டுதியால் நீயும் விழைவோ விழுமிதே
ஈண்டியம் விம்ம இனவளையார்-பூண்தயங்கச்

சூலமொ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனொடு ஆடும் வெறி.''

**வாகை அரவம்:**

*போர் மறவர் பகைவென்று வெள்ளிய வாகைமாலை யினையும் வலிய வீரக்கழலினையும் சிவந்த கச்சினையும் சூடியது வாகை அரவம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''அனைய அமருள் அயில்போழ் விழுப்புண்
இனைய இனிக்கவலை யில்லை-புனைக
அழலோ டிமைக்கும் அணங்குடைவாள் மைந்தர்
கழலோடு பூங்கண்ணி கச்சு.''

**வாகைத்திணை:**

*பகைவேந்தனைப் போரில் வென்று வாகை மாலை சூடி ஆரவாரித்தல் வாகைத்திணையாம்.*

**(எ.டு)**

''சூடினான் வாகைச் சுடர்த்தெரியல் சூடுதலும்
பாடினார் வெல்புகழைப் பல்புலவர்- கூடார்
உடல்வேல் அழுவத் தொளிதிகழும் பைம்பூண்
அடல்வேந்தன் அட்டார்த் தரசு.''

**வாகையின் இயல்பு:**

*'வாகை' என்னும் புறத்திணை, பாலை என்னும் அகத் திணைக்குப் புறனாகும். அது குற்றமில்லாத கொள்கையை உடைய கூறுபாடுகளை (இயல்பை ) மற்றவரினும் வேறுபாடு உண்டாகுமாறு மிகுதிப் படுத்தல் என்பதாம்.*

**வாடைப் பாசறை:**

*மன்னனது அகன்ற பாசறையிடத்து மறவர்கள் நடுங்குமாறு வந்து வீசித் துன்பம் செய்யும் வாடைக் காற்றினது மிகுதியைச் சொல்லியது வாடைப் பாசறை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''வாடை நலிய வடிக்கண்ணாள் தோள்நசை
ஓடை மழகளிற்றின் உள்ளான்கொல்-கோடல்

முகையோ டலம்வர முற்றெரிபோற் பொங்கிப்
பகையோடு பாசறையு ளான்.''

**வாணாட் கோள்:**

*பகைவரது கேட்டினை எண்ணி, வாளையும் நன்னாளில் புறப்படச் செய்தல் வாணாட் கோளாகும்.*

**(எ.டு)**

''முற்றரண மென்னு முகிலுருமுப் போற்றோன்றக்
கொற்றவன் கொற்றவாணாட் கொண்டான்- புற்றழிந்த
நாகக் குழாம்போ னடுங்கின வென்னாங்கொல்
வேகக் குழாக்களிற்று வேந்து''

**வாணிக வாகை:**

*தீவினையினின்றும் விலகித் தொலைவின்கட் சென்ற வணிகனுடைய அறுவகைத் தொழிலையும் உயர்த்திக் கூறியது வாணிக வாகை என்னும் துறையாம்,*

**(எ.டு)**

''உழுது பயன்கொண் டொலிநிரை ஓம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து- முழுதுணர
ஓதி அழல்வழிப்பட் டோம்பாத ஈகையான்
ஆதி வணிகர்க் கரசு.''

**வாயில் நிலை:**

*அரண்மனை வாயிலை அடைந்த ஒரு புலவன் தனது வருகையினை மன்னனுக்குச் சென்று மறையாமற் கூறுகவென வாயில் காவலனுக்குக் கூறியது வாயில் நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''நாட்டிய வாய்மொழி நாப்புலவர் நல்லிசை
ஈட்டிய சொல்லான் இவனென்று- காட்டிய
காயலோங் கெஃகிமைக்கும் கண்ணார் கொடி மதில்
வாயிலோய் வாயில் இசை.''

**வாயுறை வாழ்த்து: (அ)**

*எம்மொழி வழி நிற்பின் பின்னே பயன் பெரிதும் விளையும் என, அறிஞர் மேம்பட்ட தமது மெய்ம் மொழியினை மிகுத்துச் சொல்லியது வாயுறை வாழ்த்து என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"எஞ்சொல் எதிர்கொண் டிகழான் வழிநிற்பிற்
குஞ்சர வெல்படையான் கொள்ளானோ- எஞ்சும்
இகழிடன் இன்றி எறிமுந்நீர் சூழ்ந்த
அகலிடம் அங்கை அகத்து."

**வாயுறைவாழ்த்து: (ஆ)**

*வேம்பையுங் கடுவையும் போன்ற கடுமையான சொற்களைச் சேர்க்காது, இனிய நற்சொற்களை அமைத்துப் பயனுள்ள சொல்லில் பாதுகாப்புச் சொற்களைக் கூறுதலும் வாயுறை வாழ்த்தாகும். (வாயுறை-சொல்மருந்து)*

**வாயுறை வாழ்த்து: (இ)**

*கடுஞ்சொற்களைக் கூறுதலின்றிப் பின்னால் விளையும் நன்மையைக் கருதி வேப்பங்காயும், கடுக்காயும் தின்னுங்கால் கசப்பாயிருப்பினும் உண்ட பின்னர் நோய் நீக்கி இன்பந் தருமாறு போல நன்மை யுண்டாதற்குப் பாதுகாவலான சொற்களாலேயே உண்மையைக் கூறுவது வாயுறை வாழ்த்தாகும்.*

**(எ.டு)**

"எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலி னின்னொன்று மொழிவ
லருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
யளிதோ தானேயது பெறலருங் குரைத்தே"

**வாயுறை வாழ்த்துப் பாடுவதற்குரிய பாடல்:**

*வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறுத்தற் பொருள் ஆகியவை கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றில் வாரா. ஆசிரியப்பா, வெண்பா ஆகிய இரண்டினும் வரும்.*

**வாராமைக்கு அழிதல்:**

*தீ நிமித்தம் கண்ட தலைவி தலைவன் வாரான் எனக்கருதி வருந்தியது வாராமைக்கு அழிதல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"நுடங்கருவி ஆர்த்திழியும் நோக்கருஞ் சாரல்
இடங்கழி மால்மாலை எல்லைத்- தடம் பெருங்கண்
தாரார மார்பன் தமியேன் உயிர்தளர
வாரான்கொல் ஆடும் வலம்."

**வாழ்க்கை புல்லா வல்லாண் பக்கம்:**

*பொருந்தாத வாழ்க்கையினையுடைய வலிய ஆண்மை யினைப் பொருந்தும் பகுதியாம்.*

**(எ.டு)**

"கலிவர லூழியின் வாழ்க்கை கடிந்து
மலிபுகழ் வேண்டு மனத்த- ரொலிகடல்சூழ்
மண்ணகலம் வேண்டாது வான்வேண்டி யீண்டினார்
புண்ணகலாப் போர்க்களத்துப் போந்து"

**வாழ்த்து:**

*நடுகல் நட்டபின் கோயிலாக அமைத்து அதில் அவன் பீடும் பெயருந் தீட்டி அக்கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்துதல் வாழ்த்து என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"ஆவாழ் குழக்கன்றுய் வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுக- லோவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் புலிபுறித்த
பொற்கோட் டிமயமே போன்று"

**வாள்செலவு:**

*வஞ்சியார் போர்க்கழைத்த பின்பு அவர் படையிடத்தே காஞ்சியரசன் வாளினைப் போகவிடுதல் வாள் செலவு என்னுந் துறையாம்.*

**(எ.டு)**

"உணங்கு புலவறா ஒன்னார் குரம்பை
நுணங்கரில் வெம்முனை நோக்கி- அணங்கிய
குந்த மலியும் புரவியான் கூடாதார்
வந்தபின் செல்கென்றான் வாள்"

**வாள்நாட் கோள்:**

*உழிஞை மன்னன் பகைவரது அரணைக் கைப்பற்ற எண்ணி தனது வாளை நல்ல நாளில் புறவீடு விட்டது வாள்நாட் கோள் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வாணாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடும் பேமதிற்-பூணார்
அணிகொள் வனமுலையார் ஆடரங்க மேறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்த்து."

**வாள்நிலை:**

*போருக்குப் புறப்படும் வஞ்சி வேந்தன் தன்வாளை நல்ல நாளில் புறவீடு விட்டது வாள் நிலை என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"அறிந்தவர் ஆய்ந்தநாள் ஆழித்தேர் மன்னன்
எறிந்தில ரொள்வா ளியக்கம்- அறிந்தி கலிப்
பின் பகலே யன்றியும் பேணா ரகநாட்டு
நண்பகலும் கூகை நகும்"

**வாள்மங்கலம்: (அ)**

*இருபெரு வேந்தருள்ளும் வென்றவன் வாளினை வெற்றித் திருவின் மேல் நிறுத்தி நீராட்டுவது வாள்மங்கலமாகும்.*

**(எ.டு)**

"செற்றவர் செங்குருதி யாடற்கு வாள்சேர்ந்த
கொற்றவை மற்றிவையுங் கொள்ளுங்கொள்- முற்றியோன்
பூவொடும் சாந்தும் புகையவி நெய்ந்நறைத்
தேவொடு செய்தான் சிறப்பு"

**வாள்மங்கலம்: (ஆ)**

*கடல் போன்ற பெரிய படையினையும் வலிய யானை யினையும் உடைய வேந்தனது கொற்றவாளைப் புகழ்ந்தது வாள் மங்கலம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கொங்கவிழ் ஐம்பால் மடவார் வியன்கோயில்
மங்கலம் கூற மறங்கனலும்- செங்கோல்
நிலந்தரிய செல்லும் நிரைதண்தார்ச் சேரன்
வலந்திரிய ஏந்திய வாள்."

**வாள் மண்ணுநிலை:**

*உயர்ந்தோர்கள் வாழ்த்துரை வழங்க கடவுள் நீரினால் முழுக்காட்டிய உழிஞையரசனது கொற்றவாளினது மறப்பண் பினைச் சொல்லியது வாள்மண்ணுநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான்-பேர்த்தும்
இடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையார் அறையப் புகழ்."

**வாளோர் ஆடும் அமலை:**

*யானை மீது வருகின்ற பகைவனை எதிர்த்து, அவன் யானையைக் கொன்று, அவனுடன் போரிடும் படை வீரர்களின் பெருமையே வாளோர் ஆடும் அமலையாகும்.*

**(எ.டு)**

"ஆளுங் குரிசி லுவகைக் களவென்னாம்
கேளன்றிக் கொன்றாரே கேளாகி- வாள்வீசி

யாடினா ரார்த்தா ரடிதோய்ந்த மண்வாங்கிச்
சூடினார் வீழ்ந்தானைச் சூழ்ந்து''

**விளக்கு நிலை: (அ)**

*விளக்கு நிலையாவது, விளக்கு எரியும் திறத்திற்கு ஏற்ப வேலின் வெற்றியைக் கூறுவது விளக்கு நிலையாகும்.*

**(எ.டு)**

''மைமிசை யின்றி மணிவிளக்குப் போலோங்கிச்
செம்மையி னின்றிலங்குந் தீபிகை- தெம்முனையுள்
வேலினுங் கோடாது வேந்தன் மனைவிளங்கக்
கோலினுங் கோடா கொழுந்து''

**விளக்குநிலை: (ஆ)**

*கடல்போன்ற படையினையுடைய அரசனது திருவிளக்கின் தன்மையைச் சொல்லியது விளக்குநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந் தோங்கி வரலால்- அளிசிறந்து
நன்னெறியே காட்டும் நலந்தெரி கோலாற்கு
வென் னெறியே காட்டும் விளக்கு.''

**விளக்குநிலை: (இ)**

*பொன்னணிகளால் சிறந்து விளங்கும் வேந்தனைக் கதிரவ னோடு ஒப்பிட்டுக் கூறுதலும் விளக்கு நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

''வெய்யோன் கதிர்விரிய விண்மேல் ஒளியெல்லாம்
மையாந் தொடுங்கி மறைந்தாங்கு- வையகத்துக்
கூத்தவை யேத்துங் கொடித்தேரான் கூடியபின்
வேத்தவையுள் மையாக்கும் வேந்து.''

**விறலிகேட்பத் தோழிகூறல்:**

*பாணனுடைய பாணிச்சிக்கு, தலைவனுக்குத் தன்னை விரும்பிய பரத்தையருடைய முயக்கம் பெறற்கரிய அமிழ்தத் தோடொக்கும் என்று தோழி சொல்லியது விறலி கேட்பத் தோழி கூறல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“அரும்பிற்கும் உண்டோ அலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல்- சுரும்போடு
அதிரும் புனலூரற் காரமிர்தம் அன்றோ
முதிரும் முலையார் முயக்கு.”

**விறலி தோழிக்கு விளம்பல்:**

*தலைவனது முதுமையும் அப்பரத்தையர்க்குப் பெறுதற்கரிய மகிழ்ச்சியை உண்டாக்கும் என்று பாணிச்சி தோழி கேட்பச் சொல்லியது விறலிதோழிக்கு விளம்பல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“உளைத்தவர் கூறும் உரையெல்லாம் நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம்- விளைத்த
பழங்கள் அனைத்தாய்ப் படுகளி செய்யும்
முழங்கு புனலூரன் மூப்பு.”

**விறலியாற்றுப் படை:**

*வெற்றியை யுடைய மன்னனது புகழைப் பாடும் விறலியை ஒருவள்ளலிடத்து ஆற்றுப் படுத்துவது விறலியாற்றுப் படை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“சில்வளைக்கைச் செவ்வாய் விறலி செருப்படையான்
பல்புகழ் பாடிப் படர்தியேல்- நல்லவையோர்
ஏத்த விழையணிந் தின்னே வருதியாற்
பூத்த கொடிபோற் பொலிந்து.”

**வினைமுதிர்ச்சி(முற்றியமுதிர்வு):**

*புறத்தோன் தன் படையைச் செலுத்திப் புறமதிலிற் செய்யும் போரின்றி அகத்தோன் படையை வென்று அப்புற மதிலைக் கைக் கொண்டு உள்மதிலை வளைப்பது வினைமுதிர்ச்சி யாகும்.*

**(எ.டு)**

“கடல்பரந்து மேருச்சூழ் காலம் போற் சென்றோர்
கொடிமதில் காத்தோரைக் கொல்லக்- கடலெதிர்

தோன்றாப் புலிபோ லரண்மறவர் தொக்கடைந்தார்
மான்றே ரான் மூதூர் வரைப்பு"

***இது புறத்தோன் முற்றிய முதிர்வு.***

"ஊர்சூழ் புரிசை யுடன்சூழ் படைமாயக்
கார்சூழ்குன் றன்ன கடைகடந்து - போர் மறவர்
மேகமே போலெயில் சூழ்ந்தார் விலங்கல்போன்
றாகஞ்சேர் தோள்கொட்டி யார்த்து"

***இது அகத்தோன் முற்றிய முதிர்வு.***

**வீற்றினிதிருந்த பெருமங்கலம்:**

*கூற்றுவன் குடியிருந்த கொலைத் தொழிலாற் சிறந்த வேலினையுடைய மன்னன் தனது அரியணை மீது செம்மாந்திருந்த வெற்றியைப் பாராட்டியது வீற்றினிதிருந்த பெருமங்கலம் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"அழலவிர் பைங்கண் அரிமான் அமளி
நிழலவிர்பூண் மன்னர்நின் றேத்தக்- கழல்புனைந்து
வீமலிதார் மன்னவனாய் வீற்றிருந்தான் வீங்கொலிநீர்ப்
பூமலி நாவற் பொழிற்கு."

**வெகுளி:**

*உறுப்புகளைக் குறைத்தல், குடிப்பிறப்புக்குக் கேடு சூழ்தல், கோல் கொண்டலைத்தல், கொலைக்கு ஒருப்படுதல் என்னும் நால்வகையான வெறுக்கத்தக்க செயல்களால் வெகுளி யுண்டாகும்.*

**(எ.டு)**

"முறஞ் செவி மறைப் பாய்பு முரண் செய்த புலி செற்று"(கலி-52)

***இது உறுப்பறையான் வந்த வெகுளி.***

"நெருந லெல்லை யெறிந்தோன் தப்பி
யகற் பெய் குன்றியிற் சுழலுங்கண்ணன்"

*இது குடி கோள் பற்றி வந்த வெகுளி.*

**வெட்சித் திணையின் இலக்கணம்:**

*பகையரசர்கள் மீது படையெடுத்துச் செல்லுதற்கு முன்னாலேயே, அரசனால் விடப்பட்ட முனை ஊரகத்துள்ளார், அப்பகைவர்கள் நாட்டுட் சென்று, அந்நாட்டுப் பசுக்கூட்டங்களை அப்பகைவர்கள் அறியாதவாறு ஓட்டிக் கொண்டு வந்து பாதுகாத்தற்கு வெட்சித்திணை என்று பெயர்.*

**வெருவருநிலை:**

*ஒரு மறவன் உடல், போர்க்களத்தில் பகைவரது வில் உமிழ்ந்த அம்புகள் அவனது அகன்ற மார்பினைப் பிளப்ப, அவ்வுடல் அவ்வம்புகளால் தாங்கப் பட்டு நிலத்தைத் தீண்டாத படி நின்ற நிலையைக் கூறியது வெருவருநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“வெங்கண் முரசதிரும் வேலமருள் வில்லுதைப்ப
எங்கும் பருமத் திடைக்குளிப்பச்- செங்கண்
புலவாள் நெடுந்தகை பூம்பொழில் ஆகம்
கலவாமற் காத்த கணை.”

**வெளிப்பட இரத்தல்:**

*தழையாடை அணிந்த தலைவியினது அழகிய பெண்மை நலத்தைப் புணர்ச்சி இன்மையான் உண்டான துன்பம் அதிகரிக்க இரந்து கூறியது வெளிப் பட இரத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

“உரவொலி முந்நீர் உலாய் நிமிர்ந் தன்ன
கரவரு காமம் கனற்ற- இரவெதிர
முள்ளெயி றிலங்கு முகிழ் நகை
வெள்வளை நல்கான் விடுமென் உயிரே.”

**வெள்ளிநிலை:**

*மன்னனை நோக்கி, நினது செங்கோன்மை காரணமாக வெள்ளிக்கோள் நன்னிலையுடைத்தாகலின் மழை பொழியும் என்றது வெள்ளி நிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"சூழ்கதிர் வான்விளக்கும் வெள்ளி சுடர்விரியத்
தாழ்புயல் வெள்ளந் தருமரோ- சூழ்புரவித்
தேர்விற்றார் தாங்கித் திகழ்விலங்கு வேலோய் நின்
மார்விற்றார் கோலி மழை."

**வெறியாட்டு:**

*தலைவி தலைவன் அளி செய்தற் பொருட்டுத்தாய் அறியாதபடி முருகனுக்கு வெறிக் கூத்தாடியது வெறியாட்டு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"வெய்ய நெடிதுயிரா வெற்பன் அளிநினையா
ஐய நனிநீங்க ஆடினாள்-மையல்
அயன்மனைப் பெண்டிரொ டன்னைசொல் அஞ்சி
வியன்மனையுள் ஆடும் வெறி."

**வென்றோர் விளக்கம்:**

*இருபெரு வேந்தருள் ஒருவர், ஒருவர் மிகை கண்டு அஞ்சிக் கருமச் சூழ்ச்சியாற்றிறை கொடுப்ப அதனை வாங்கினார்க்கு உளதாகிய விளக்கத்தைக் கூறுவது வென்றோர் விளக்கம் என்னுந்துறையாம்.*

**(எ.டு)**

"இருங்கண்யானை யோடருங்கலந் தெறுத்துப்
பணிந்துகுறை மொழித லல்லது பகைவர்
வணங்கா ராதல் யாவதோ மற்றே"

**வேட்கை முந்துறுத்தல்:**

*தலைவன் தனது வேட்கையைக் கூறுவதற்கு முன்னே, தலைவி தனது வேட்கையைத் தலைவனிடம் கூறுதல் வேட்கை முந்துறுத்தல் என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"எழுதெழில் மார்பம் எனக்குரித் தாகென்று
அழுதழுது வைகலும் ஆற்றேன்- தொழுதிரப்பல்

வல்லியம் அன்ன வயவேலாய் வாழ்கென
அல்லியந்தார் நல்கல் அறம்."

**வேத்தியன் மலிபு:**

*கரந்தை மறவர் வலிமை மிக்க மறமன்னனைப் புகழ்ந்து கூறியது .*

**(எ.டு)**

"அங்கையுள் நெல்லி அதன்பயம் ஆதலாற்
கொங்கலர் தாரான் குடைநிழற்கீழ்த்- தங்கிச்
செயிர்வழங்கும் வாளமருட் சென்றடையார் வேல்வாய்
உயிர்வழங்கும் வாழ்க்கை உறும்."

**வேந்தன் சிறப்பு எடுத்துரைத்தல்:**

*வேந்தற்குரிய புகழ் அமைந்த தலைமைகளை ஒருவற்கு உரியவாக அவன்தன் படையாளரும் பிறருங் கூறுதல்.*

**(எ.டு)**

"அத்த நண்ணிய நாடு கெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணிய சென்ற இரவன் மாக்கள்
களிறொடு நெடுந்தேர் வேண்டிங் கடல
வுப்பொய் சாகாட் டுமணர் காட்டக்
கழிமுரி குன்றத் தற்றே
யெள்ளமை வின்றவ னுள்ளிய பொருளே"

**வேம்பு:**

*பாண்டியன் போர்க்களத்தின்கண் தமக்கு அடையாளமாக அணிந்து கொள்ளும் வேம்பினைப் புகழ்ந்தது வேம்பு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"தொடையணிதோள் ஆடவர் தும்பை புனையக்
கொடியணிதேர் கூட்டணங்கும் போழ்தின்- முடியணியும்
காத்தல்சால் செங்கோற் கடுமான் நெடுவழுதி
ஏத்தல்சால் வேம்பின் இணர்."

**வேளாளர்க்கு உரியவை:**

உழுதல், பிறதொழில்கள், விருந்தினரைப் பாதுகாத்தல், விலங்குகளை வளர்த்தல், வழிபடுதல், கல்வி கற்றல் என்னும் ஆறுபகுதிகளும் வேளாளர்க்கு உரியவையாம்.

**வேளாளர்க்குரிய திருமணமுறை:**

அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவர்க்கும் உரிய சடங்குடன் கூடிய மன்றல் விழவு, வேளாண் மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு. இம்முறை முற்காலத்து இருந்தது என்பதூஉம் பிற்காலத்துத் தவிர்க்கப் பட்டது என்பதூஉம் இதனால் அறியலாம்.

**வேளாண்வாகை:**

அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூன்று வகுப்பினரும் நெஞ்சத்தாலே விரும்புமாறு அவர் ஏவல் வழி ஒழுகியது வேளாண்வாகை என்னும் துறையாம்.

**(எ.டு)**

"மூவரும் நெஞ்சமர முற்றி அவரவர்
ஏவல் எதிர் கொண்டு மீண்டுரையான்- ஏவல்
வழுவான் வழிநின்று வண்டார் வயலுள்
உழுவான் உலகுக் குயிர்."

**வேளிர்க்கும் வேந்தன் தொழில் உரித்து:**

முடியுடை வேந்தர்க்குரிய தொழிலாகிய தன்பகை வயிற்றானே சேறலுந் தான்திறை பெற்ற நாடுகாக்கப் பரிதலும், மன்னர்க்குப் பின்னோரான வேளாளரை ஏவிக் கொள்ளுதலும் ஆகிய இலக்கணங்கள் மூன்றும், அம்முடியுடை வேந்தரை யொழிந்த குறு நில மன்னரிடத்தும் பொருந்தும் என்பதாம்.

**(எ.டு)**

"விலங்கிருஞ் சிமயக்குன்றத்தும்பர்
வேறுபன் மொழிய தேஎ முன்னி
வினை நசைஇப் பரிக்கும் உரன்மலி நெஞ்சமொடு
புனைமா ணெஃகம் வலவயினேந்தீச்
செலமன்"

**வேள்விநிலை:**

*முடிவில்லாத புகழையுடைய மன்னன் தேவர்களும் மனம் மகிழும்படி அறக்களவேள்வி செய்த சிறப்புரைத்தது வேள்விநிலை என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"கேள்வி மறையோர் கிளைமகிழ்தல் என் வியப்பாம்
வேள்வி விறல்வேந்தன் தான்வேட்ப- நீள்விசும்பின்
ஈர்ந்தார் இமையோரும் எய்தி அழல்வாயால்
ஆர்ந்தார் முறையால் அவி."

**வெறியாட்டு:**

*மறக்குடி மகளிர் தம்முடைய கணவர் மேற்கொண்ட தொழில் நன்றாக முடியும் பொருட்டு, வேலனொடு வள்ளிக் கூத்தை ஆடியது வெறியாட்டு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"காணில் அரனுங் களிக்குங் கழன்மறவன்
பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண்- வாணுதல்
தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப
வேன்முருகற் காடும் வெறி."

**வேற்றுப்படை வரவு:**

*உழிஞை மன்னன் மதில் முற்றுகையை விட்டு நீங்குமாறு வேற்றரசன் நொச்சி மன்னனுக்குத் துணையாக வந்தது வேற்றுப் படை வரவு என்னும் துறையாம்.*

**(எ.டு)**

"உவனின் றுறுதுயரம் உய்யாமை நோக்கி
அவனென் றுலகேத்தும் ஆண்மை- இவனன்றி
மற்றியார் செய்வார் மழைதுஞ்சு நீளரணம்
முற்றியார் முற்று விட."

**வேற்றொழில் வன்மை:**

*போர்க் கணன்றியும் பெரியோராகிய பகைவரை அத் தொழிற் சிறப்பான் அஞ்ச வைப்பதும் வேற்றொழில் வன்மை யாகும்.*

**(எ.டு)**

"குன்று துகளாக்குங் கூர்ங்கணையான் வேலெறிந்
தன்று திருநெடுமா லாடினா- னென்றும்
பனிச்சென்று மீளாத பல்கதிரோன் சேயோ
டினிச்சென் றமர்பொரா யென்று."

* * *

# 4. யாப்பு

**அகத்திணைக்குரிய செய்யுட்கள் -**

நாடக வழக்கிடத்தும், உலகியல் வழக்கிடத்தும் உள்ள அகப் பொருட் கருத்துகளாகிய கைக்கிளை முதலாகப் பெருந் திணை இறுதியாக அமைத்துக் கூறுபவைகளைக் கலி பரிபாடல் என்னும் இரண்டு பாவகைகளினும் கூறுதல் சிறப்புடைத்து. இவற்றுள் நாடக வழக்காவது சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். உலகியல் வழக்காவது உலகத்தாருடைய ஒழுகலாற்றோடு ஒத்துக் கூறுவது. பாடல் சான்ற புலனெறி வழக்கமாவது இவ்விரு வகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுதியாகக் கூறப்படுகின்ற அகப்பொருளாகும்.

**அகப்பா வகவல்**

அகப் பொருளைத் தழுவி, பத்து உறுப்பினைப் பெற்று, வஞ்சி விரவாது வந்து முடியும் ஆசிரியப்பா அகப்பா வகவலாகும்.

**அகவலுரிச்சீர் - ஈரசைச்சீர்**

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்

**அகவலோசை**

இது ஆசிரியப் பாவிற்குரியது. ஆசிரியத் தளையால் ஏற்படும் ஓசை இது. இவ்வோசை ஏந்திசை அகவலோசை, தூங்கிசை அகவலோசை. ஒழுகிசை அகவலோசை என மூவகைப் படும். நேரொன்றாசிரியத் தளையான் வரும் ஆசியப்பா ஏந்திசை அகவலோசையைப் பெறும். நிரையொன்றாசிரியத் தளையான் வரும் ஆசிரியப்பா தூங்கிசை யகவலோசையைப் பெறும். நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் விரவிவந்த ஆசிரியப்பா ஒழுகிசை யகவலோசையைப் பெறும்.

**அகவற்றுள்ளல்**

வெண்டளையுங் கலித்தளையும் விரவி வரும் ஒருவகைப் பாடல்.

**அகவற்றூங்கல்**

ஒன்றாத வஞ்சித்தளையால் வரும் ஒருவகைப் பாவினம்.

**அக்கரச்சுதகம்**

இருபதுவகைச் சித்திரக் கவிகளுள் ஒன்று. இஃதோர் மிறைக் கவி. ஒரு சொல்லை ஒவ்வோரெழுத்தாக நீக்கிப் பிரித்துப் பொருள்தரப்பாடுவது. இது மாத்திரைச் சுருக்கம் எனவுங்கூறப் பெறும்.

அக்கரம் = எழுத்து.

**அக்கரவர்த்தனம்**

இருபதுவகைச் சித்திரக் கவிகளுள் ஒன்று. அஃது ஓரெழுத் தானொரு மொழியாய்ப் பொருட் பயந்து ஓரெழுத்தேற்றுப் பிறிதொரு மொழியாய்ப் பொருட் பயந்து அவ்வாறு முறையானே ஏற்றவேற்ற வேறுவேறு மொழியாய்ப் பொருட்பயந்து வரப் பாடுவதோர் சித்திரக் கவி.

**அங்கதப் பாட்டு**

ஒருவனுடைய வசையைப் பாடுதல்.

**அங்கமாலை**

ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் சிறந்தனவாகக் கூறும் உறுப்புக்களை வெண்பாவாலாயினும் வெளிவிருத்தத்தாலாயினும் பாதாதிகேசம் (அடிமுதல் முடிவரை) கேசாதிபாதம் (முடிமுதல் அடிவரை) முறை பிறழாமல் தொடர்பாகப் பாடுவது அங்க மாலையாகும்.

**அசை**

அசைநிலை. அலகு ஒன்றேனும் இரண்டேனுங் கொண்டு சீர்க்குறுப்பாய் வருஞ்செய்யுள் உறுப்பு.

**அசைச்சீர்**

*தளைகொள்ளுதற்கு இடனாகி ஓரசையே செய்யுட்களில் சீராகவும் நிற்பது.*

**அசை கூனாதல்:-**

*இரண்டு சீரான் வரும் வஞ்சியடி, முச்சீரான் வரும் வஞ்சியடி ஆகிய இரண்டு அடியினும் அசை கூனாகிவரும்.*

**எடு:-**

"**வாள்** வலந்தர மறுப்பட்டன
**செவ்** வானத்து வனப்புப் போன்றன"

*எனவும்,*

"**அடி** அதர் சேறலின் அகஞ்சிவந்தன"

***எனவும் அசை கூனாகி வந்தவாறு காண்க.***

**அசைநிலையில் ஒற்றளபெடையின் நிலை**

*ஒற்றுஅளபு எடுத்தாலும் உயிரள பெடை போலச் சீர் நிலை பெற்று ஓர் அசையாய் நிற்குந் தன்மையை யுடையது.*

**எடு:-**

"கண்ண் டண்ண் ணெனக் கண்டுங் கேட்டும்"

**அசைச்சீர்**

*ஓரசையே சீராய் நிற்பது அசைச்சீர். இது வெண்பாவின் ஈற்றில் நிற்குந் தன்மையது. நாள், மலர் என்னும் வாய்பாட்டால் கூறப் பெறும்.*

**அசை நிலையில் உயிரளபெடையின் நிலை**

*உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும். அசை ஆகா மையே பெரும்பான்மையாம்.*

**அசையந்தாதி**

*அடியீற்றசை வருமடி முதலசையாய் வர முறையே தொடுப்பது.*

**அடி இயைபுத் தொடை**

*ஓரடியின் ஈற்றுச் சொல் அல்லது எழுத்து மற்ற அடியின் ஈற்றிலும் வரத் தொடுப்பது அடி இயைபுத் தொடையாகும்.*

**எடு:-**

'இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி ஊடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலகமும் அணங்கே.

**அடி எதுகைத் தொடை**

*அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடி எதுகைத் தொடையாகும்.*

**எடு:-**

"எழுவாய் - மழுவாய்
தழுவா - தொழுதே"

**அடிகளின் வகை**

*எழுத்துக்களால் அசையும், அசைகளால் சீர்களும், சீர்கள் தொடரும் விதத்தால் தளைகளும், அத்தளைகளால் அடிகளும் அமைகின்றன. அந்த அடி, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழி நெடிலடி என ஐவகைப்படும்.*

**அடிமறி மண்டில ஆசிரியப்பா**

*ஆசிரியப்பாவின் இலக்கணம் பெற்றுப் பொருள் முற்றிய அளவடிகளால் நடப்பது அடிமறி மண்டில ஆசிரியப்பா. இச் செய்யுளடிகளை இடமாற்றி அமைத்தாலும் பொருள் கெடாது நடக்கும் இயல்பினதாகும்.*

**எடு:-**

"தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே"

*இவ்வகவலுள் எவ்வடியினை எவ்வாறு மாற்றியமைப்பினும் பொருள் நிலை மாறுபடாமையை அறிக.*

**அடிமுரண் தொடை**

அடிதோறும் சொல்லும் பொருளும் வேறுபடத் தொடுப்பது அடிமுரண் தொடையாகும். அது சொல்லும் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலும், சொல்லும் பொருளும் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடு முரணுதலும் என ஐவகைப்படும்.

**எடு:-**

"இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுக்குவித் தன்ன வெண்மண லொருசிறை"

**அடிமோனைத் தொடை**

அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடி மோனைத் தொடையாகும்.

**எடு:-**

"மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங்கமழ
மாலை வந்தவாடை
மாயோள் இன்னு யிர்ப்புறத் தன்றே"

**அடியளபெடைத் தொடை**

அடிதோறும் முதற்கண்ணே அளபெடுத் தொன்றிவரத் தொடுப்பது அடியளபெடைத் தொடையாகும்.

**எடு:-**

"ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுள்
தூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோள்
மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதால்
ஓஒ உழக்குந் துயர்."

**அடியளவு வரையறை இல்லாத பாக்களின் வகை**

கலிவெண்பா கைக்கிளைப் பொருளைப் பற்றிய பாடல். செவியுறை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து

என்னும் பொருண்மைக்கண் வரும் வெண்பாக்கள் எல்லாம் அடியளவு வரையறுக்கப் படா. பொருள் முடிவு பெறும் வரை வேண்டிய அளவானே அடிகள் வரப் பெறும்.

**அடியின் அளவு**

நான்குசீர் ஒன்றாகத் தொடுத்து வருவதனை அடியென்று கூறப்பெறும்.

எடு:- "திருமழை தலைஇய விருணிற விசும்பின்"

எனவும்

"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட"

எனவும்,

"அரியதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்"

எனவும் வந்தன.

**அட்ட மங்கலம்**

கடவுள் காக்க வேண்டுமென்று விருத்தப் பாடல்கள் எட்டுப் பாடுவது அட்டமங்கலமாகும்

அட்டம்=எட்டு.

**அநுராகமாலை**

தலைவன் கனவின் கண் ஒருத்தியைக் கண்டு உண்டு உயிர்த்து இனிமையுறப் புணர்ந்ததைத் தன்னுயிர்ப் பாங்கற் குரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் பாடப் பெறுவது அநுராகமாலை என்று பெயர் பெறும்.

**அந்தாதித் தொடை**

செய்யுளடி யொன்றின் இறுதியிலுள்ள எழுத்தேனும், அசையேனும் சீரேனும் அடுத்த அடியின் முதலாமாறு தொடுப்பது அந்தாதித் தொடையாகும்.

**எடு:-**

"வேங்கையஞ் சார லோங்கிய மாதவி
விரிமலர்ப் பொதும்பர் மெல்லியன் முகமதி
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே"

**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா:-**

தரவு, தாழிசை, தனிச் சொல், சுரிதகம் என்னும் நான்கு உறுப்புக்களோடு, தாழிசைக்கும் தனிச் சொல்லுக்கும் இடையில் அம்போதரங்கம் என்னும் உறுப்பினைக் கொண்டு அமைவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். கரைசாரக் கரைசார ஒருகாலைக் கொருகாற் சுருங்கி வருகின்ற நீர்அலை போல நாற்சீர் அடியும் முச்சீர் அடியும், இருசீர் அடியும் ஆகிய அசை அடிகளைத் தாழிசைக்கும் தனிச் சொற்கும் நடுவே தொகுத்துத் தரவு தாழிசை அம்போதரங்கம் தனிச் சொல் சுரிதகம் என்னும் ஐந்துறுப்புகளையும் உடையது, அம்போ தரங்க ஒத்தாழிசைக் கலிப்பா எனப் பெயர் பெறுவதாயிற்று.

**அம்போதரங்கம்:-**

அராகத்தை அடுத்துவரும் கலிப்பாவின் உறுப்பாகும். தரங்கம் என்றால் அலை. கடல் அலை கரையைச் சேருங்கால் சுருங்குவதுபோல இவ்வுறுப்பும் முதலில் அளவடிகளாலும், பிறகு சிந்தடி குறளடிகளாலும் குறைந்து வரும். அதனால் இதற்கு அம்போதரங்கம் என்ற பெயர் ஏற்பட்டது. அம்போதரங்க அடிகளில் காய்ச்சீர்களும், இயற்சீர்களும் விரவி வரலாம். ஓரசையே சீராகிய அசைச்சீர்களும் வருவதுண்டு. இது பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் என்ற நான்கு உறுப்புகளை உடையது. நாற்சீரடியாய் வருவன பேரெண் எனவும், நாற் சீரோடியாய் வருவன அளவெண் எனவும், முச்சீரோரடியாய் வருவன இடையெண் எனவும், இருசீரோடியாய் வருவன சிற்றெண் எனவுங் கொள்ளப்படும். இவ்வுறுப்பிற்கு அசையடி, பிரிந்திசைக் குறள், சொற்சீரடி எண் என்ற வேறு பெயர்களும் உள்ளன.

**தனிச் சொல்**

கலிப்பாவின் முடிவைத் தெரிவிக்கும் உறுப்பு, பாடலில் கூறப்பட்டுள்ள பொருளோடு தொடர்புடையதாய், ஓரசை அல்லது சீர் தனித்து நிற்றலே இதன் இலக்கணமாகும். இதனை விட்டிசை, கூன், தனிநிலை, அடைநிலை என்றும் அழைப்பர்.

**சுரிதகம்**

கலிப்பாவை முடிக்கும் ஈற்று உறுப்பாகும். இவ்வுறுப்பு பெரும்பாலும் ஆசிரியப்பாவாலும் சிறுபான்மை வெண்பாவாலும் அமையும். இதனை அடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல் என்றும் அழைப்பர்.

## கலிப்பாவின் உறுப்புகள்

தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்பன கலிப்பாவின் உறுப்புக்களாகும்.

### தரவு

இது கலிப்பாவின் முதல் உறுப்பாகும். பாடலின் பொருளைத் தொடங்கித் தருவது இதன் பணியாகும். இது மூன்றடி முதல் பன்னிரண்டு அடிகள் வரைவரும். இதில் புளிமாங்காய், கருவிளங்காய்ச் சீர்களே மிகுதியாக வரும். சில கலிப்பாக்களில் இரண்டு தரவு வருதல் கூடும்.

### தாழிசை

இது கலிப்பாவின் இரண்டாவது உறுப்பு. தாழ்ந்து ஒலிப்ப தால் தாழிசை என்று இதற்குப் பெயர் வரலாயிற்று. தரவு எடுத்துத் தந்த பொருளை வளர்க்குந்தன்மையுடையது. இது புளிமாங்காய், கருவிளங்காய்ச் சீர்களை மிகுதியாகப் பெற்று நடக்கும். தாழிசையின் அடிகள் தரவின் அடிகளைக் காட்டிலும் குறைவாக இருக்கவேண்டும். கலிப்பாவினுள் தாழிசை மூன்றேனும் ஆறேனும் வரலாம். இதற்கு இடைநிலைப்பாட்டு என்ற வேறு பெயரும் உண்டு.

### அராகம்

கலிப்பாவின் மூன்றாவது உறுப்பாகும் இது. கலிப்பா இதைப் பெற்று நடக்கவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. பெறாமல் நடக்கும் கலிப்பாக்களும் உள்ளன. இது கருவிளச்சீர்களை அதிகமாகப் பெற்று நடக்கும். முடுகிச் செல்லும் நடையை உடையதால் இதற்கு முடுகியல் என்ற வேறு பெயரும் உண்டு. அராகம் அளவடியால் நடைபெறும். சிந்தடி, குறளடிகளில் வாரா. மற்ற அடிகளிலும் வரலாம். இது நான்கடிகள் முதல் எட்டடிகள் வரையில் வரலாம். இரண்டடிகளையுடைய நான்கு அராகங்கள் வருதலுமுண்டு.

### அரங்கேற்றுங்காலம்

அகர ஆகாரமும், இகர ஈகார ஐகாரமும், உகர ஊகார ஔகாரமும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும் முறையே உதயாதி. அவ்வாறு நாழிகையுதிக்கும். இவற்றுள் முதல் மூன்று நாழிகையும் உத்தமம், பின்மூன்று நாழிகையுமாகாது; இவ்வைந்து கூற்

றெழுத்துக்களை முதலிலுடைய பாக்களுக்குச் சொன்ன காலத்தில் முற்கூற்றில் அரங்கேற்றவேண்டும்.

**அரசன் விருத்தம்:-**

பத்துக் கலித்துறையும் முப்பது விருத்தமும் கலித்தாழிசையு மாக மலை, கடல், நாடு, வருணனையும், நிலவருணனையும், வாண் மங்கலமும் தோண் மங்கலமும் பாடி முடிப்பது.

**அலங்கார பஞ்சகம்:-**

வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், சந்த விருத்தம் இவ்வகையே மாறி மாறி நூறு செய்யுள் அந்தாதித்துப் பாடுவது.

**அளவடி:-**

நான்கு சீர்களைக் கொண்டது அளவடியாகும். இவ்வடியை நேரடி என்றுங் கூறுப. இவ்வடி வெண்பா ஆசிரியப்பா, கலிவிருத்தம் முதலிய பாக்களுக்கு உரியது. பத்து எழுத்து முதலாகப் பதினான்கு எழுத்தளவும் அளவடிக்கு எல்லை என்பர் தொல்காப்பியர்.

**எடு:-**

“சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே”

**அளபெடைத்தொடை:-**

அடிதொறும் அளபெழுமாறு தொடுப்பின் அஃது அளபெடைத் தொடை எனப்படும். அது உயிரளபெடை ஒற்றளபெடை என இருவகைப்படும்.

**எடு:-**

“மாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கி - உயிரளபெடை.”

“கஃஃ றென்னுங் கல்லதர்க் கானிடைச்
சுஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை”-ஒற்றளபெடை.

**ஆசிடை நேரிசை வெண்பா**

வெண்பாவின் முதற்குறட் பாவினோடு தனிச் சொல் இடைவேறுபட்டு விட்டிசைப்பின் ஒற்றுமைப் படாத தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களை பற்றாசிட்டு ஒற்றுமைப் படுத்தினாற்போல முதல்குறட்பாவின் இறுதிக் கண் ஒன்றும் இரண்டும் அசைசேர்த்து இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வரும் வெண்பாக்கள் ஆசிடை நேரிசை வெண்பா எனப் பெயர் பெறும்.

**எடு:-**

"ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப-மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் தெரிதந் தெருவைபோல்
போத்தறார் புல்லறிவி னார்."

**ஆசிரியத்தளை**

நிலைச்சீர் இயற்சீராக இருத்தல் வேண்டும். அந்த இயற்சீீற்று மாமுன் நேரும், விளமுன் நிரையும் வருவது ஆசிரியத்தளை. இதை மாமுன் நேர் வருவதை நேரொன்றாசிரியத்தளை என்றும், விளமுன் நிரைவருவதை நிரையொன்றாசிரியத்தளை என்றுங் கூறுவர்.

**எடு:-**

"தேனார் கஞ்சச் செம்ம லாதி"

இதில் தேனார்+கஞ் என மாமுன் நேர் வருதலால் இது நேரொன்றாசிரியத்தளை.

"வானோர் மாதர் மங்கலங் களத்திடை"

இதில் மங்கலங்+களத் என விளமுன் நிரை வருதலால் இது நிரையொன்றாசிரியத்தளையாம்.

**ஆசிரியத்தளையின் வகை**

சீரானது பொருந்துகிற இடத்தில், ஓசை ஒத்துவரு மானால் அது ஆசிரியத்தளையாகும். நிலைமொழியாகிய இயற்சீரினின்றும் வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின் நேரொன்றிய ஆசிரியத்தளையாம். நிரையாய் ஒன்றின் நிரையொன்றிய ஆசிரியத்தளையாம்.

**ஆசிரியத்தாழிசை:**

*நான்குசீர்களையும், அதற்கு அதிகமான சீர்களையுங் கொண்ட அளவொத்த மூன்றடிகள் ஒரு பொருள்மேல் மூன்றாக அடுக்கியும், தனித்தும் வரும் செய்யுள் ஆசிரியத் தாழிசையாகும். ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வருவதே சிறப்புடைத்து. நான்கு சீர்களுக்கு அதிகமான சீர்களைப் பெற்றும், கலித்தளை வரப் பெற்றும் ஆசிரியத்தாழிசை வரலாம்.*

**எடு:-**

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்று நம்மானுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ,

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி,

கொல்லியஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி."

*இவை ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை*

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிரைகழ றொழுதனம்.

*இது தனியேவந்த ஆசிரியத் தாழிசை.*

**ஆசிரியத்துறை**

*நான்கடியாய் ஈற்றயல் அடி அளவில் குறைந்து வருவனவும், நான்கடியாய் ஈற்றயல் அடி அளவு குறைந்து இடைமடங்கி வருவனவும், நான்கடியாய் இடையிடை அடிகள் அளவு குறைந்தும் இடை மடங்கியும் வருவனவும் ஆசிரியத் துறையாம். இடை மடங்கி வருதல் என்பது செய்யுளின் இடையில் வந்த ஓரடியோ அவ்வடியின் ஒரு பகுதியோ மீண்டும் மடங்கி வருவது. ஓர் அடியில் எத்தனை சீர் வேண்டுமானாலும் வரலாம்.*

**ஆசிரிய நிலை விருத்தம்**

*பொருள் முற்றுப் பெறாத கழிநெடிலடிகள் நான்கு கொண்டது ஆசிரிய நிலை விருத்தம்.*

**எடு:-**

"விடஞ்சூ ழரவி னிடைநுடங்க மின்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்கண் ணீலமலர் தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்கைத் தண்ணுமையே.

**ஆசிரியப்பாவின் அடியளவு**

*ஆசிரியப் பாடலின் உயர்ந்த அடிக்கு எல்லை ஆயிரம் அடிகளாகும். குறைந்தது மூன்றடிகளாகும். இடைப்பட்ட எல்லா அடிகளாலும் ஆசிரியப்பா வரப் பெறும். 'ஆசிரிய நடைத்தே வஞ்சி' என்பதனால் வஞ்சிப்பாவிற்கும் இந்த அடிவரையறை கொள்ளப்படும். (பின்னே இவ்வடி வரையறை மிகலாயிற்று).*

**ஆசிரியப்பாவில், அடிபற்றிய முடிவுகள்**

*நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயல் அடி மூன்று சீராகவும் முடியும். இடையடி முச்சீரடியாக வருதலுமுண்டு.*

**(எ.டு:-**

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந்தனளே"

*இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது.*

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாராச் சார்ந்து தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே"

*என்ற பாவில் 'சாரனாடன் கேண்மை' எனவும் 'சாரச் சாரச் சார்ந்து' எனவும் முச்சீரடி இரண்டு வந்தன காண்க.*

**ஆசிரியப்பாவின் வகைகள்**

*ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசையாசிரியமாகும். இடையிடை முச்சீர் வருவது இணைக்குறளாசிரியமாகும்.*

எல்லாவடியும் ஒத்துவருவது நிலைமண்டிலவாசிரியமாகும். எல்லாவடியும் ஒத்துவரும் பாட்டில், அதனுள் யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக வைத்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வருவது அடிமறி மண்டில வாசிரியமாகும். முச்சீரடி முதலாக அறுசீரடியீறாக மயங்கி வருவது அடிமயங்காசிரிய மாகும். வெண்பாவடி மயங்கிய ஆசிரியம் வெள்ளடிமயங்கிய ஆசிரியமாகும். வஞ்சியடி மயங்கிய ஆசிரியம் வஞ்சியடி மயங்கிய வாசிரியமாகும்.

**ஆசிரியப்பாவில் வஞ்சிச்சீர்**

இனிய ஓசை அமைய வந்தால் வஞ்சியுரிச்சீரும் ஒரோ விடத்து ஆசிரிய அடிக்கண் வரும்.

**எடு:-**

"மாரியொடுமலர்ந்த மாத்தாட்கொன்றை
குறிஞ்சியொடு கமழுங் குன்ற நாடன்."

என மாசேர்சுரம் புலிசேர்சுரம் என்பன அடிமுதற்கண் வந்தன.

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்**

இயற்சீர் பயின்று அயற்சீர் விரவி நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை ஆகிய ஆசிரியத்தளைகளைப் பெற்று. வேற்றுத் தளை மயங்கிவர, கருவிளங்கனி கூவிளங்கனி முதலிய நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர்களை நீக்கி, அளவடியோடு இடையிடையே சிந்தடி, குறளடிகளும் வர, ஏ, ஓ, என், ஈ, ஆ, ஆய், ஐ என்னும் அசைகளுள் ஒன்றினை இறுதியில் பெற்று அகவலோசை யுடைத்தாய் மூன்றடிகளைச் சிற்றெல்லையாகவும் ஆயிரம் வரையுள்ள அடிகளைப் பேரெல்லையாகவுங் கொண்டு நடைபெறும்.

**ஆசிரியப்பாவில் வெண்சீர்**

இனிய ஓசை பொருந்தி வருகுவதாயின், ஆசிரிய அடிக்கு வெண்பாவுரிச்சீரும் வரப்பெறும்.

**எ.டு:-**

"இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கைத்
தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து"

**ஆசிரிய மண்டில விருத்தம்**

*அடிகள் ஒவ்வொன்றும் பொருள் முற்றி முடியும் ஆசிரிய விருத்தம் ஆசிரிய மண்டில விருத்தம் என்று பெயர் பெறும்.*

**எ.டு:-**

"செங்கயலுங் கருவிளையுஞ் செவ்வேலும்
பொருகணையுஞ் செயிர்க்கு நாட்டம்
பங்கயமு மிலவலரும் பனிமுருக்கம்
பவளமுமே பதிக்குஞ் செவ்வாய்
பொங்கரவி னிரும்படமும் புனைதேரும்
பொலிவழிக்கும் படைவீங் கல்குல்
கொங்கிவருங் கருங்கூந்தற் கொடியிடையாள்
வனமுலையுங் கூற்றங் கூற்றம்."

**ஆசிரிய விருத்தம்**

*ஒத்த அளவையுடைய கழி நெடிலடி நான்கைப் பெற்று நடப்பது ஆசிரிய விருத்தமாகும். எட்டிற்கும் அதிகமான சீர் களைக் கொண்ட அடிகளையுடைய பாவை இரட்டையாசிரிய மென்பர்.*

**எடு:-**

"ஈட்டுவார் தவம லான்மற் றீட்டினா லியைவ தின்மை
காட்டினார் விதியா ரஃது காண்கிற்பார் காண்மி னம்மா
பூட்டுவார் முலைபொருந்தப் பொய்யிடை நையப் பூநீர்
ஆட்டுவா ரமரர் மாத ராடுவார ரக்கர் மாதர்."

**ஆசுகவி**

*(கடும்பாவலன்) ஒரு புலவன், இவ்வெழுத்தினாலாவது, இச் சொல்லினாலாவது. இப்பொருளினாலாவது, இவ் வணியினாலாவது எவ்வகைக் குற்றமும் நேராமல் இன்னவாறு பாடுவாயாக என்று கூறியவுடன் அப்பொழுதே அப்புலவனுடைய கருத்துக்கியைய விரைந்து பாடுவோன் ஆசுகவி என்று கூறப் பெறுவான்.*

**ஆற்றுப் படையின் இலக்கணம்**

*கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியநால்வரும் தாங்கள் வருகின்ற வழியிலே கண்ட தங்களை ஒத்தாரிடம், தாம்*

பெற்ற பெருஞ்செல்வம் போல அவருக்கும் கிடைத்தற் பொருட்டு இன்னவழியே சென்று இன்னானை அடைவீர்களாயின் எம் போன்று பெருஞ்செல்வம் பெறுவீர் என்று ஆற்றுப் படுத்துவது ஆற்றுப் படையின் இலக்கணமாகும்.

**இடைநிலை அளபெடைத் தொடை**

முதல்சீரின் நடுவெழுத்து அளபெடுத்து ஒன்றுவது இடை நிலை அளபெடைத் தொடையாகும்.

**எடு:-**

"சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல்."

**இடைநிலைப் பாட்டு என்னுந் தாழிசை**

தாழிசைகள் தரவில் சுருங்கி வரும். எனவே, தாழிசை நான்கடியின் மிகாமலும், மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும்.

**இணை அளபெடை**

அடிமுதல் இரண்டு சீர்கள் அளபெடுத்து நிற்குமாறு தொடுப்பது இணை அளபெடையாகும்.

**எடு:-**

"தாஅட் டாஅ மரைமல ருழக்கிப்"

**இணைஇயைபு**

அளவடியின் மூன்றாவது நான்காவது ஆகியசீர்கள் ஒரே சொல்லாய் ஒன்றியிருத்தல் இணை இயைபாகும். மேலும் சீர்களின் எழுத்துக்கள் ஒன்றியிருந்தாலும் இணைஇயைபே.

**எடு:-**

"மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே"

**இணை எதுகை**

அளவடியின் முதல் இரண்டு சீர்களில் முதலெழுத்து அள வொத்து நிற்ப இரண்டாவது எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது இணை எதுகையாகும்.

**எடு:-**

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி"

**இணைக்குறள் ஆசிரியப்பா**

*முதலடியும் இறுதியடியும் அளவடிகளாகவும், இடையே சிந்தடி, குறளடி அளவடிகள் விரவிவர, ஆசிரியப்பாவின் இலக்கணத்தைப் பெற்று, மூன்றடிச் சிற்றெல்லையாகவும் பேரெல்லையாகப் பலவடிகளைக் கொண்டு நடப்பது இணைக்குறள் ஆசிரியப்பாவாகும். இப்பாவின் ஈற்றடி அளவடியாக இருப்பது இன்றியமையாதது.*

**எடு:-**

"நீரின் தண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே."

**இணைமணிமாலை**

*வெண்பாவும் அகவலும், வெண்பாவுங்கலித் துறையுமாக, இரண்டிரண்டாக இணைத்து வெண்பாவகவல் இணைமணி மாலை, வெண்பா கலித்துறை இணைமணிமாலை என நூறு நூறு பாடல்கள் அந்தாதித்துப் பாடுவது இணைமணி மாலையாகும்.*

**இணைமுரண்**

*அளவடியின் முதல் இரண்டு சீர்களில் சொற்கள் முரண்படத் தொடுப்பது இணைமுரணாகும்.*

**எடு:-**

"சீரடிப் பேரக லல்கு லொல்குபு"

**இணைமோனை**

*அளவடியின் முதல் இரண்டு சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது இணைமோனையாகும்.*

**எடு:-**

"அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி"

**இயற்சீர் வெண்டளை**

நிலைச்சீர் இயற்சீராக இருத்தல் வேண்டும். வருஞ்சீரின் முதலசை இயற்சீரின் ஈற்றசையோடு மாறுபட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு மாறுபட்டு அமைவதே இயற்சீர் வெண்டளையாகும். மாறுபடுதலாவது, நிலைச்சீரின் ஈற்றசை நேரசையாயின் வருஞ் சீரின் முதலசை நிரையசையாய் இருத்தல் வேண்டும். நிலைச்சீரின் ஈற்றசை நிரையசையாயின் வருஞ்சீரின் முதலசை நேரசையாய் இருத்தல் வேண்டும்.

**எடு:-**

நோய் போற்+பிறர் - மாமுன் நிரை வருதலால் இயற்சீர் வெண்டளை.

**இயற்சீர்**

இரண்டு அசைகளால் அமையும் சீர் இயற்சீர் தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் என்ற வாய் பாட்டால் அழைக்கப் பெறும். இச்சீரை ஆசிரிய உரிச்சீர் என்றும் மாச்சீர் என்றும், விளச்சீர் என்றுங் கூறுவர்.

**இயைபு**

ஞண நமன யரல வழள என்னும் பதினொரு மெய் யெழுத்தும் ஈறாக வருஞ் செய்யுள் இயைபு என்னுஞ் செய்யுளாம். 'ன'கர ஈற்றான் முடிந்த இயைபு உடையது சிலப்பதிகாரம்; 'என்' என முடியும்.

**இயைபுத் தொடை**

அடிதோறும் ஈற்றெழுத்தாயினும் ஈற்றுச் சொல்லாயினும் ஒன்றிவருவது இயைபுத் தொடையாகும். எழுத்து ஒன்றிவருவது எழுத்தடியியைபு எனவும் சொல் ஒன்றிவருவது சொல்லடி யியைபு எனவும் பெயர் பெறும்.

**எடு:-**

"அவரோ வாரார் கார்வந் தன்றே
கொடிதரு முல்லையுங் கடிதரும் பின்றே."

என்பது எழுத்தடியியைபு.

“பரவை மாக்கடற் றொகுதிரை வரவும்
பண்டைச் செய்தி யின்றிவள் வரவும்.”

*என்பது சொல்லடியியைபு.*

**இரட்டைத் தொடை:-**

*செய்யுளின் ஓரடிமுழுவதும் வந்த சொற்களே, ஒரே பொருளிலேனும் அல்லது வேறு வேறு பொருளிலேனும் சீர்களாய் வருவது இரட்டைத் தொடையாகும்.*

**எடு:-**

“வாழுமே வாழுமே வாழுமே வாழுமே
கூழேனு மீவார் குடி.”

*இதில் ஓரடி முழுவதும் வந்த சொல்லே ஒரேபொருளில் வந்தமை காண்க.*

“ஓடையே யோடையே யோடையே யோடையே
கூடற் பழனத்துங் கொல்லி மலைமேலும்
மாறன் மதகளிற்று வண்பூ நுதன்மேலும்
கோடலங் கொல்லைப் புனத்துங் கொடுங்குழாய்
நாடி யுணர்வார்ப் பெறின்.”

*இதில் ஓடையே என்ற சொல் நீரோடை, மலைவழி, நெற்றிப் பட்டம், ஒருவகைச் செடி என்ற பொருளில் வந்து சீர்களாய் அமைந்தமை காண்க.*

**இரட்டை மணிமாலை**

*வெண்பாவுங் கலித்துறையும் மாறி மாறியமைய அந்தாதித் தொடையாக இருபது பாடல்கள் பாடுவது இரட்டை மணிமாலையாகும்.*

**இருகுறள் நேரிசை வெண்பா**

*ஒரு வெண்பாவின் இரண்டாவது அடியில் உள்ள தனிச் சொல்லை நீக்கிய பின் முதலிரண்டடிகளும் சேர்ந்து ஒரு குறள் வெண்பாவாகவும், பின்னிரண்டு அடிகளும் சேர்ந்து மற்றொரு குறள் வெண்பாவாகவும் அமையவேண்டும். இவ்வாறு அமையும் வெண்பாவே இருகுறள் நேரிசை வெண்பாவாகும். இரண்டாவது அடியின் மூன்றாவது சீர் உகரத்தை இறுதியினுடைய இயற் சீராய் நிற்கும் நேரிசை வெண்பாக்களையெல்லாம் இருகுறள் நேரிசை வெண்பா வென்று கொள்ளலாம். இவ்வெண்பா*

நேரிசை வெண்பாவின் இலக்கணத்தைப் பெற்று ஒரு விகற்பத்தாலேனும் இரு விகற்பத்தாலேனும் முடிவுறும்.

**எடு:-**

"கலையி னொளியுங் கவிச்சுவையுங் கஞ்ச
மலரழகு மின்குணமுங் கொண்டு-சிலைமாரன்
கைம்மலரா லன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்."

இவ்வெண்பாவின் உள்ள 'சிலைமாரன்' என்ற தனிச் சொல் நீக்கியபின்,

"கலையி னொளியுங் கவிச்சுவையுங் கஞ்ச
மலரழகு மின்குணமுங் கொண்டு"

எனவும்,

"கைம்மலரா லன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்."

எனவும் இருகுறள் வெண்பாக்களாக அமைவதைக் காணலாம்.

## இருபா இருபஃது

பத்து வெண்பாவும் பத்து அகவலும் அந்தாதித் தொடையாக அமைய இருபது சேர்ந்து வருவது இருபா இருபஃது எனப்படும்.

## இழைபு என்னுஞ் செய்யுள்

ஒற்றொடு புணர்ந்த, வல்லெழுத் தடங்காது ஆசிரியப் பாவிற் கோதப் பட்ட நாலெழுத்தாதியாக இருபது எழுத்து முடிய உள்ள பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத் தொடுப்பது இழைபு என்னுஞ் செய்யுளாம்.

## இறுதிநிலை அளபெடைத் தொடை

முதற்சீரின் இறுதியெழுத்து அளபெடுத் தொன்றுவது இறுதிநிலை அளபெடைத் தொடையாம்.

**எடு:-**

"மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்."

**இன்னிசைச் சிந்தியல் வெண்பா:-**

இன்னிசை வெண்பாவே போலத் தனிச் சொல் இன்றி ஒரு விகற்பத்தானும், இருவிகற்பத்தானும் பல விகற்பத்தானும் மூன்றடியான் வருவனவும், பாவின் முதலடியில் ஒரூஉ எதுகை யுடைய தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தானும், இரு விகற்பத் தானும், பல விகற்பத்தானும் மூன்றடியாய் வருவனவும், முதலிரண்டடிகளிலும் ஒரூஉ எதுகையுடைய தனிச்சொல் பெற்று ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் பல விகற்பத்தானும் மூன்றடியாய் வருவனவும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாகும். இரண்டாம் அடியில் தனிச் சொல் நிற்பின் பா பல விகற்பங்களையுடையதாய் இருத்தல் வேண்டும்.

**எடு:-**

"விழிமதுத்தார் மாறன் மணிவரைமேன் மாதர்
விழியெழுதி னாலுமிணை வெற்பெழுதி னாலும்
மொழியெழுத லாமோ மொழி."

இது தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தான் வந்த சிந்தியல் வெண்பா.

"சுரையாழ அம்மி மிதப்ப - வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

இது முதலடியில் தனிச்சொல் பெற்று இருவிகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

"முல்லை முறுவலித்துக் காட்டின - மெல்லவே
சேயிதழ்க் காந்தள் துடுப்பீன்ற - போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார்."

இது முதலிரண்டடிகளிலும் தனிச் சொல் பெற்றுப் பல விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

**இன்னிசை வெண்பா**

ஒரு விகற்பத்தானும், பல விகற்பத்தானும் வந்து நான் கடியாய்த் தனிச் சொல் இன்றி நடப்பதும், இரண்டாமடியின் இறுதி தனிச் சொல் பெற்று மூன்று விகற்பத்தான் வருவனவும், மூன்றாமடியில் இறுதி தனிச் சொல் பெற்று இரண்டு

விகற்பத்தான் வருவனவும், தனிச் சொல் இன்றிப் பல விகற்பமாகி அடிதோறும் ஒரூஉத் தொடை பெற்று வருவனவும், ஈற்றடி தவிர எல்லா அடிகளிலும் தனிச் சொல்பெற்று வருவனவும், நேரிசை வெண்பாவின் சிறிது வேறுபட்டு நான்கடியான் வருவனவும் இன்னிசை வெண்பாவாம்.

**உத்தி**

ஒரு நூலால் அறிவிக்கப் படும் பொருளை நூல் வழக்கோடும் உலக வழக்கோடும் பொருந்தக் காண்பித்து ஏற்குமிடத்தை அறிந்து இவ்விடத்திற்கு இப்படியாகுமென்று நினைத்துத் தக்கவாறு செலுத்துவது தந்திரவுத்தியாகும். (தந்திரம்-நூல், உத்தி-பொருந்துமாறு).

**உரிச்சீர்**

மூன்று அசைகளால் ஆகும் சீர் உரிச்சீர். தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் என்னும் வாய்பாட்டால் அழைக்கப் பெறும். இச்சீரை வெண்பா உரிச்சீர் என்றும், வெண்சீர் என்றும், காய்ச்சீர் என்றுங் கூறுவர். நிரையசையை இறுதியில் பெற்ற மூன்று அசைகளால் ஆன சீர் தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி கருவிளங்கனி என்னும் வாய் பாட்டால் அழைக்கப் பெறும். இச்சீர் வஞ்சிப் பாவிற்கு உரிய சீராகும். அதனால் இதை வஞ்சியுரிச்சீர் என்றும் தனிச்சீர் என்றும், வஞ்சிச்சீர் என்றும் அழைப்பர்.

**உரிச்சீர்**

இயற்சீர் முடிவுக்குப் பின் அவ்விடத்தில் நேரசை நிற்குமானால் அங்ஙனம் வரும் மூவசைச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் ஆகும்.

**எடு:-**

“தேமாங்காய்-நேர் நேர் நேர்
புளிமாங்காய் - நிரை நேர் நேர்
கூவிளங்காய் - நேர் நிரை நேர்
கருவிளங்காய் - நிரை நிரை நேர்

**உலா**

இளம்பருவமுற்ற தலைவனைக் குலத்தாலும் குடிப்பிறப்பாலும் மங்கலங்களாலும் வழிமுறையாலும் இன்னானென்பது தோன்றக்கூறி அணிகலன்களால் அழகு செய்துகொண்டு

முதன்மையெய்திய பெண்கள் நெருங்கிய அழகிய தெரு விடத்திலே அவன் உலா வருங்கால் பேதைமுதலிய ஏழ்பருவப் பெண்களுங் கண்டு தொழ உலாவந்ததாக நேரிசைக் கலி வெண்பாவாற் கூறுவது உலாவாகும்.

ஐந்து முதல் ஏழளவும் பேதை; எட்டு முதற்பதினொன்றளவும் பெதும்பை; பன்னிரண்டு முதற்பதின்மூன்றளவு மங்கை; பதி னான்கு முதல் பத்தொன்பதளவு மடந்தை; இருபது முதல் இருபத்தைந்தளவும் அரிவை; இருபத்தாறு முதல் முப்பத் தொன்றளவும் தெரிவை; முப்பத்திரண்டு முதல் நாற்பதளவும் பேரிளம்பெண்.

**உலாமடல்**

கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவியின்பம் நுகர்ந்தோன் விழித்தபின் அவள் பொருட்டு மடலூர்வே னென்பதைக் கலி வெண்பாவாற் பாடுவது உலாமடல்.

**உழத்திப் பாட்டு**

இது பள்ளு என்றும் வழங்கப்பெறும். கடவுள் வணக்கம், மூத்தபள்ளி, இளையபள்ளி, குடும்பன் வரவு அவனுடைய பெருமைகூறல், அவர் வரலாறு, நாட்டுவளன், குயிற்குரல் கேட்டல், மழை வேண்டித் தெய்வம் பரவல், மழைக் குறியோர்தல், ஆற்றின் வரவு, அதன்சிறப்பு. இவற்றிற்கிடையே அகப்பொருட் டுறையுங் கூறிப் பண்ணைத் தலைவன் வரவு; பள்ளிகளிருவர் முறையீடு, இளையாளையனுப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செய்தி வினவல், அவனதனைக் கூறல், ஆயரை வருவித்தல், அவர்வரல், அவர் பெருமைகூறல், மூத்த பள்ளி முறையீடு, குடும்பன் வரல், அவனைத் தொழுவில் மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளி உணவு கொண்டு வரல், அவன் அவளோடு கூறல், அவள் அவனைப் பொறுத்துக் கொள்ள வேண்டல், அவள் மறுத்தல், அவன் சூளுறல், அவன் அவளை மீட்க வேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல், விதைமுதலிய வளங்கூறல், உழவர் உழுதல், காளைவெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், பண்ணைத் தலைவனுக்கறிவித்தல், நாற்று நடல், விளைந்தபின் செப்பஞ் செய்தல். நெல்லளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகள் ஏசல், ஆகிய உறுப்புக்கள் இடையிடையே அமையப் பாட்டுடைத் தலைவனுடைய பெருமை ஆங்காங்கு விளங்கச் சிந்தும் விருத்தமும் கலந்துவரப் பாடுவது உழத்திப்பாட்டாகும்.

**உழிஞைமாலை**

*பகைவர் ஊர்ப்புறஞ்சூழ உழிஞைப் பூமாலை சூடிய படை வளப்பத்தைக் கூறுவது உழிஞை மாலையாகும்.*

**உறழ்கலிப்பா**

*ஒருவர் கூறுவதும் மற்றவர் விடை பகர்வதுமாய்ப் பொருள் நடந்து வருங்கலிச் செய்யுள் உறழ் கலிப்பா . சுரிதகம் பெற்றும் பெறாமலும் இடையிடையே அயல்பாக்களின் அடிகள் பெற்றும் பலவிதமாய் உறழ்கலிப்பா வரும். இதன் உறுப்பை வரையறுத்துக் கூறுவதற்கில்லை. நெடிலடிகளும் இப்பாவில் இடம்பெறும்.*

**உறுப்பினகவல்**

*ஒரு பொருண்மேற் பரந்திசைப்பது உறுப்பினகவலாகும்.*

**உற்பவமாலை**

*திருமால் பிறப்புப்பத்தையும் ஆசிரிய விருத்தத்தாற் கூறுவது உற்பவமாலையாகும்*

*உற்பவம்=பிறப்பு*

**ஊசல்**

*ஆசிரிய விருத்தத்தினாலாவது கலித்தாழிசையினாலாவது "ஆடீரூசல்" "அடாமோவூசல்" என்று முடியுமாறு பாடுவது.*

**ஊரின்னிசை**

*பாட்டுடைத் தலைவனுடைய ஊரைச் சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும் எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.*

**ஊர்நேரிசை**

*பாட்டுடைத் தலைவன் ஊரைச் சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும் எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது ஊர் நேரிசையெனப்படும்.*

**ஊர் வெண்பா**

*வெண்பாவால் ஊரைச் சிறப்பித்துப் பாடுவது ஊர் வெண்பாவாகும்.*

**எண்**

முதலில் தொடுத்த உறுப்புப் பெருகிப் பின் தொடுக்கும் உறுப்புச் சுருங்கி வரத் தொடுப்பது எண்ணாகும்.

**எண் செய்யுள்:-**

பாட்டுடைத் தலைவன் ஊரையும் பெயரையும் பத்துமுதல் ஆயிரமளவும் எண்ணுறும்படி ஆசிரியப் பாவாற் பாடப் பெறுவது. இஃதன்றி எட்டுச் செய்யுளே பாடப் பெறுவதெனவுங் கூறுவர்.

**எழுகூற்றிருக்கை:-**

இது சித்திர கவி வகையைச் சேர்ந்தது. முதலில் மூன்று அறைகளும், மேல் இரண்டிரண்டறைகளும் கூடும்படி ஏழுவரை அறைகளாக்கி முறையானே குறுமக்கள் முன்னின்றும், புக்கும், போந்தும் விளையாடும் பெற்றியானும் ஒன்றுமுதலிலும் இறுதியிலும் வரவும், ஒன்றுமுதல் ஏழு எண்கள் வரவும் ஆண்மைத் தன்மை (புருடார்த்தம்) பயக்கும் ஏழுபொருள்கள் வரவும் ஆசிரியப்பாவாற் பாடப்படுவது.

**எழுத்து:-**

யாப்பிலணக்கத்தின் உறுப்பு ஆறனுள் ஒன்று. எழுத்திலக்கணத்தில் கூறிய முதல் சார்பு என்ற இருவகை எழுத்துக்களும் உறுப்பாக அமையும். செய்யுளடிக்கு எழுத்தெண்ணும் போது மெய்யெழுத்துக்கள் எண்ணப்படா. தளைசிதையவருமிடத்துக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் அளபெடையும் தள்ளுண்டுபோம்.

**எழுத்துப் பொருத்தம்**

ஒற்றுப்பட மூன்றும் ஐந்தும் ஏழும் ஒன்பதுமாகிய எழுத்தால் முதன் மொழிக்கு வருவது நன்று. நான்கும் ஆறும் எட்டுமாகிய வெழுத்தால் முதன்மொழிக்கு வருவது தீது.

**ஏந்திசையகவல்**

எழுத்திறந்திசைப்பது ஏந்திசையகவலாகும்.

**ஒத்தாழிசைக் கலிப்பா**

தரவு ஒன்று, தாழிசை மூன்று, தனிச்சொல், சுரிதகம் பெற்று வருவது ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். இது நேரிசை ஒத்தாழிசை, அம்போதரங்க ஒத்தாழிசை, வண்ணக ஒத்தாழிசை என மூன்று வகைப்படும். இம்மூன்று வகைக் கலிப்பாக்களிலும், மூன்று தாழிசைகள் ஒத்துவருதலால் ஒத்தாழிசைக் கலிப்பா எனப் பெயர் பெறுவதாயிற்று.

**ஒருபா ஒருபஃது**

*அகவல், வெண்பா, கலித்துறை இவற்றுள் ஒன்றினால் பத்துப்பாடல் அந்தாதித் தொடையாகப் பாடுவது ஒருபா ஒருபஃது.*

**ஒருபோகு**

*கலியுறுப்புக்கள் சில நீங்கிவரும் மயங்கிசைக் கொச்சகமே ஒருபோகு. இது தாழிசை ஒருபோகு. அம்போதரங்க ஒருபோகு, வண்ணக ஒருபோகு என மூன்று வகைப்படும். தரவின்றித் தாழிசை, தனிச்சொல், சுரிதகம் பெற்றுவருவது தாழிசை ஒருபோகு. தனிச்சொல், சுரிதகம் இன்றித் தாழிசை தனித்து நின்றும் தாழிசை ஒருபோகு ஆதலும் உண்டு. தரவு அல்லது தாழிசையும் இல்லாமல் அம்போதரங்கம், தனிச்சொல் சுரிதகம் பெற்று வருவது அம்போதரங்க ஒருபோகு. தரவு அல்லது தாழிசையின்றி வண்ணக உறுப்பும் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வருவது வண்ணக ஒருபோகு.*

**ஒரூஉ அளபெடை**

*முதற்சீர் நான்காவதுசீர் ஆகிய சீர்களில் எழுத்துக்கள் அளபெடுத்து நிற்பது ஒரூஉ அளபெடையாகும்.*

**எடு:-**

"காஅய்ச் செந்நெற் கறித்துப் போஓய்"

**ஒரூஉ இயைபு**

*ஈற்றுச் சீராக வந்த சொல்லோ எழுத்தோ அதற்கு நான்காவதான சீரில் ஒன்றிவரல் ஒரூஉ இயைபாகும்.*

**எடு:-**

"நிழலே யினியத னயலது கடலே"

**ஒரூஉ எதுகை**

*அடியின் முதல்சீர் நான்காவது சீர் ஆகிய இரு சீர்களிலும் இரண்டாவது எழுத்து ஒன்றி நிற்றல் ஒரூஉ எதுகையாகும்.*

**எடு:-**

"மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய"

**ஒரூஉத் தொடை**

*நாற்சீருள்ளும் இடையிருசீரொழித்து, ஒழிந்த முதற்சீரும் நான்காஞ்சீரும் மோனை முதலாயின ஒன்றி வரத் தொடுப்பது ஒரூஉத் தொடையாகும்.*

**எ.டு.:-**

"*அம்பொற் கொடுஞ்சி நெடுந்தேர் அகற்றி*" - இது ஒரூஉ மோனை.

"*மின்னிவ ரொளி வடந் தாங்கி மன்னிய*" - இது ஒரூஉ எதுகை.

"*குவிந்து சுணங்கரும்பி கொங்கை விரிந்து*" - இது ஒரூஉ முரண்.

"*நிழலே இனியத னயலது கடலே*" - இது ஒரூஉ இயைபு.

"*காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்*" - இது ஒரூஉ அளபெடை.

**ஒரூஉ முரண்**

*அடியின் முதற்சீர் நான்காம் சீர் ஆகிய இருசீர்களின் சொற்கள் முரணி நின்றால் ஒரூஉ முரண்.*

**எடு:-**

"குவிந்து சுணங்கிய கொங்கை விரிந்து."

**ஒரூஉ மோனை**

*அடியின் முதற்சீர் நான்காம்சீர் ஆகிய இருசீர்களில் முதலெழுத்து ஒன்றி நிற்றல் ஒரூஉ மோனையாகும்.*

**எடு:-**

"அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி"

**ஒலியந்தாதி**

*பதினாறு கலை ஓரடியாக வைத்து, இவ்வாறு நான்கடிக்கு அறுபத்துநான்கு கலை வகுத்துப் பலசந்தமாக வண்ணமும், கலைவைப்புந் தவறாமல் அந்தாதித் தொடையில் முப்பது செய்யுளியற்றுவது. சிறுபான்மையெட்டுக் கலையாலும் வரும். வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய இம் மூன்றையும் பத்துப் பத்தாக அந்தாதித் தொடரிற் பாடுவதுமுண்டு.*

**ஓரசைச்சீர்**

*தனித்துவரும் நேரசையும் நிரையசையுமாகிய இரண்டுமாம். இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலும் சிறுபான்மை மற்றவற்றுள்ளும் வரும். இவற்றிற்கு வாய்பாடு நேர்-நாள். நிரை-மலர் என்பன.*

**எடு:-**

"மலர்மிசை யேகினான் மாண்டி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்."

*இக்குறள் வெண்பாக்களின் இறுதியில், வார்-நாள், ரெனின்-மலர் என ஓரசைச் சீர்கள் வந்தவாறு காண்க.*

**கடிகை வெண்பா**

*தேவரிடத்திலும் அரசரிடத்திலும் நிகழுங்காரியம் கடிகை யளவிற்றோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசை வெண் பாக்கள் பாடுவது.*

**கடைநிலை**

*என்வரவைத் தலைவற்கிசையெனக் கடைக்கணின்று வாயில் காப்போனுக்குக் கூறுவது.*

**கட்டளைக் கலித்துறை**

*நெடிலடி நான்கைப் பெற்று அவ்வடிகளின் முதல் நான்கு சீர்கள் வெண்டளை தழுவியதாய் அமைந்து, கடைசிச்சீர்கள் கூவிளங்காய் அல்லது கருவிளங்காய்ச் சீர்களில் ஒன்றைப் பெற்று, பாவின் ஈற்றடி ஏகாரத்தில் முடிவது கட்டளைக் கலித் துறையாகும். இவ்வாறு அமைந்த பாவின் அடிகள் நேரசையை முதலில் உடையதாயின் அடிகள் ஒவ்வொன்றும் பதினாறு எழுத்துக்களையும், நிரையசையை முதலில் உடையதாயின் பதினேழு எழுத்துக்களையும் கொண்டிருக்கும். எழுத்தை எண்ணுங்கால் மெய்யெழுத்தை நீக்கி எண்ணுதல் வேண்டும். அடிதோறும் மோனைத் தொடை அமைய வேண்டும்.*

**எடு:-**

"பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மைசொல்லி
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை ஞானந் தெளிந்தவரே.

**கட்டளைக் கலிப்பா:-**

*நான்கு சீர் கொண்ட இரட்டை அடிகளையுடைய நான் கடிகளைப் பெற்று, தேமா, புளிமா என்னும் மாச்சீரை முதல் சீராகக் கொண்டு நடக்குந் தன்மையது. அதன் முதலசை நேரசை யாயின் (தேமா) அந்த அடி பதினோரெழுத்தும், நிரையசை யாயின் (புளிமா) அந்த அடி பன்னிரண்டு எழுத்தும் பெறும். (எழுத்தை எண்ணுங்கால் ஒற்றெழுத்தை நீக்கி எண்ணுதல் வேண்டும்)*

**எடு:-**

"மனைவி மக்களும் மாண்டு மறைந்தனர்
வாழ்ந்த வீடுங் குடியு மிழந்தனன்
இனிய நட்பினர் யாவரு மேகினர்
ஏழை யாண்டியே காங்கியு மாயினேன்
எனையு மிந்நிலை கண்டனை யின்னுமிங்
கின்ன லேது மிழைத்திட வுள்ளதோ
உனையு மன்னையென் றோதி யழைப்பதோ
உலகெ லாந்தருந் தேவிகா மாட்சியே!"

**கண்படைநிலை**

*அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியவழி மருத்துவர்களும் அமைச்சர்களும் கண் துயில் கோடலைக் கருதிக் கூறுவது.*

**கமகன்**

*மெய்யறிவுத் திறமையினாலாவது கல்விப் பெருமையி னாலாவது ஒருவன் சொல்லிய நூல் விகற்பத்தைத் தான் பயிலா திருந்தும் பொருள் விரிக்க வல்லவன் கமகனாவான்*

**கலம்பகம்**

*வெண்பா கலித்துறை ஒருபோகு முதற்கவியுறுப்பாக முன் கூறிப், புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டுறுப்புகள் பொருந்த, மடக்கு, மருட்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை யென்னுமிவற்றால், இடையே வெண்பா, கலித்துறை கலந்து அந்தாதித் தொடையாற் பாடுவது கலம்பகமாகும்.*

*பிச்சியார், கொற்றியார், இடைச்சியார் என்பனவும் இந்நாளில் இயைந்து வரும். கடவுளர்க்கு நூறும் அந்தணர்க்குத் தொண்ணூற் றைந்தும், அரசர்க்கும், அமைச்சருக்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், வேளாளருக்கு முப்பதுமாகப் பாடப்பெறும்.*

**கலித்தளை**

*நிலைச்சீர் மூவசைகளையுடைய காய்ச்சீராய் இருக்க வேண்டும். வருஞ்சீர் எதுவாயினும் முதலசை நிரையசையாய் இருக்க வேண்டும். இவ்வாறு காய்முன் நிரை வருவது கலித் தளையாகும். இக்கலித்தளை சிறப்புடைக் கலித்தளை, சிறப்பில் கலித்தளை என இருவகைப்படும். சிறப்புடைக் கலித்தளை யாவது நிலைச்சீரும் காய்ச்சீராக விருந்து வருஞ்சீரும் நிரையசையை முதலிலுடைய காய்ச்சீராக அமைவது. சிறப்பில் கலித்தளையாவது நிலைச்சீர் காய்ச்சீராயிருந்து வருஞ்சீர் கனியீற்று உரிச்சீராகவோ அல்லது இயற்சீராகவோ அமைவது.*

**எடு:-**

*செங்கனிவாய் கருநெடுங்கண் - காய் முன்நிரை- சிறப்புடைக் கலித்தளை*

*(கூவிளங்காய் கருவிளங்காய்)*

*மாவீன்ற தளிர்மிசை - சிறப்பில் கலித்தளை.*

*(தேமாங்காய் கருவிளம்)*

**கலித்தாழிசை**

*இரண்டடியும் இரண்டிற்கும் அதிகமான அடிகளையும் பெற்று, ஈற்றடி அளவு மிகுந்தும், ஏனையடிகள் தம்முள் அள வொத்தும் ஒவ்வாமலும் ஒரு பொருள்மேல் மூன்றாக*

அடுக்கியும் தனித்தும் வருவது கலித்தாழிசையாகும். ஈற்றடி மிகுந்தும் ஏனையடிகள் தம்முள் அளவொத்து நடப்பின் அது சிறப்புடைக் கலித்தாழிசையாகும். ஒவ்வாது நடப்பது சிறப்பில் கலித்தாழிசையாகும்.

**எடு:-**

"செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்;
முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னான
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்;
ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்"

இஃது ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி ஈற்றடிமிக்கு வந்த கலித்தாழிசை

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறு நெறியெங்
கேள்வரு போதினெழால் வாழி வெண்டிங்காள்
கேள்வரு போதினெழாதாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்."

இஃது ஒரு பொருள் மேல் தனித்து வந்த கலித்தாழிசை.

**கலித்துறை**

நெடிலடி நான்கு பெற்று நடப்பது கலித்துறையாகும். இதைக் கலிநிலைத்துறை என்றுங் கூறுவர்.

**எடு:-**

"யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளும் கைதையு மெல்லாங் கரியன்றே"

**கலிப்பாவின் இலக்கணம்**

வெண்சீர் மிகப்பெற்று, மாச்சீரும் விளங்கனிச்சீரும் பெறாது, பிறசீர்களும் சிறுபான்மை கலந்து கலித்தளையும் அயற்றளை யுந்தழுவி, துள்ளலோசையுடைத்தாய் தரவு, தாழிசை, அராகம் அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினுள் ஏற்பன கொண்டு புறநிலை வாழ்த்தும் வாயுறை

வாழ்த்தும் அவையடக்கியலும், செவியறிவுறூஉவு மென்னும் அப்பொருண் மேல் வராது, பதின் மூன்று எழுத்து முதலாக விருபதெழுத்தின்காறும் உயர்ந்த எட்டு நிலமும் பெற்று நாற்சீர் அடியால் வருவது கலிப்பாவாகும். அக்கலிப்பா ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா, கொச்சகக் கலிப்பாவென மூவகைப்படும்.

**கலிவிருத்தம்**

அளவடி நான்கைப் பெற்று, துள்ளலோசையின்றி நடப்பது கலிவிருத்தமாகும். பெரும்பாலும் இயற்சீர்களால் அமைவது சிறப்புடையதாகும். பொழிப்பு மோனை பெற்று அமையின் ஓசை சிறப்பாக அமையும்

**எடு:-**

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே."

**கலிவெண்பா**

செப்பலோசை சிதையாமல் வெண்டளை பிறழாத பலவடிகளைக் கொண்டு ஈற்றடி முச்சீரான் முடிவது கலிவெண்பாகும். இதற்கும் பஃறொடை வெண்பாவிற்குமுரிய வேறுபாடு:- இரண்டு செய்யுட்களும் அளவடிகளையுடைய தாய், வெண்டளை பெற்று, செப்பலோசையிற் சிறிதும் சிதையாமல், ஈற்றடி முச்சீரான் முடிவதாயினும் செப்பலோசையிற் சிறிதும் சிதையாமல் நடப்பது பஃறொடை வெண்பாவென்றும், சிறிதேனும் சிதையுமாயின் கலிவெண்பா என்றுங் கொள்ள வேண்டும். பஃறொடை வெண்பா வெளித் தோன்றும் பொருளோடு முடிவது. கலிவெண்பா வெளித்தோன்றும் பொருளோடு உட் பொருளாக வேறோர் பொருளை உட்கொண்டிருப்பது.

**கவி**

வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கு வகைக் கவிகளையும் விரைந்து பாடுவோன் கவி என்று பெயர் பெறுவான்.

**கழிநெடிலடி**

ஆறுசீர் முதல் பதினாறுசீர்கள் வரையில் உள்ள சீர்களால் அமைந்த அடிகள் கழிநெடிலடிகளாகும். ஆயினும் ஆறு, ஏழு,

எட்டுச் சீர்களையுடைய அடிகள் தலையாய கழி நெடிலடி யென்றும், ஒன்பது முதல் பத்துச் சீர்கள் வரையுள்ள அடிகள் இடையாய கழிநெடிலடியென்றும், பத்துக்கு அதிகமான சீர்களைக் கொண்ட அடிகள் கடையாய கழிநெடிலடியென்றுங் கூறுவர். கழிநெடிலடிக்கு அளவு பதினெட்டு எழுத்து முதலாக இருபது எழுத்தளவும் என்பர் தொல்காப்பியர். (நூற்றிருபத்து எட்டுச் சீர்வரை விரிந்தது இது)

**காஞ்சிமாலை:-**

பகைவர் ஊர்ப்புறத்திலே காஞ்சிப் பூமாலை சூடியூன்றலைக் கூறுவது காஞ்சிமாலையாகும்.

**காப்புமாலை:-**

தெய்வங்காத்தலாக மூன்று செய்யுளேனும் ஐந்து செய்யுளேனும் பாடுவது காப்பு மாலையாகும்.

**காப்பியத்தின் இலக்கணம்:-**

அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினுள் ஒன்றும் பலவுங் குறைந்து வருவது காப்பியமாகும். இதனை சிறுகாப்பியமெனினும் ஒக்கும். உலா, மடல், பிள்ளைத் தமிழ், பரணி ஆற்றுப் படை முதலியன இதில் அடங்கும். இஃது ஒருவகைச் செய்யுளானும் பலவகைச் செய்யுளானும், உரை நடை கலந்தும் வரப்பெறும்.

**கீழ்க்கதுவாய் எதுகை**

அளவடியின் மூன்றாவது சீர் நீங்கலாக மற்றைய சீர்களின் இரண்டாவது எழுத்து ஒன்றி வருதல் கீழ்க்கதுவாய் எதுகையாகும்.

எ.டு:- "அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்."

**கீழ்க்கதுவாய் இயைபு**

அளவடியின் 4,3,1 ஆகிய சீர்களில் உள்ள சொல்லோ எழுத்தோ ஒன்றிவரல் கீழ்க்கதுவாய் இயைபாகும்.

எடு:- "பல்லே தளவம் பாலே சொல்லே."

**கீழ்க்கதுவாய் அளபெடை**

அளவடியில் உள்ள மூன்றாவது சீர் நீங்கலாக ஏனைய சீர்களில் உள்ள எழுத்துக்கள் அளபெடுப்பது கீழ்க்கதுவாய் அளபெடையாம்.

எடு:- "மீஇ னாஅர்ந்துகளுஞ் சீஇர்."

**கீழ்க்கதுவாய் முரண்**

*அளவடியின் மூன்றாவது சீர் நீங்கலாக ஏனைய சீர்களில் உள்ள சொற்கள் முரணி நிற்றல் கீழ்க்கதுவாய் முரண்.*

எடு:- "இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும்"

**கீழ்க்கதுவாய் மோனை**

*அளவடியின் மூன்றாவது சீர் தவிர மற்ற சீர்களின் முத லெழுத்து ஒன்றி வருவது கீழ்க்கதுவாய் மோனையாகும்.*

எடு:- "அவிர்மதி யனைய திருநுத லரிவை"

**குழமகன்**

*இளமைத் தன்மையையுடைய குழமகனைப் பெண்கள் புகழ்வதாகக் கலி வெண்பாவாற் பாடுவது.*

**குறட்டாழிசை**

*நாற்சீரான் மிக்க பல சீரான் வரும் அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வருவனவும், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையு மின்றிக் குறள்வெண் செந்துறையிற் சிதைந்து வருவனவும், வேற்றுத்தளை விரவிய குறள்வெண்பாவுமென மூன்றுவகைப் பட்டு வரும்.*

எடு:- "நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கரசாய ஞானநற்
கண்ணி னானடி யேயடை வார்கள் கற்றவரே."

*இது முதலடி பல சீரான்மிக்கு ஈற்றடி குறைந்து வந்தது.*

"அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல் வையி னீரே."

*இஃது அளவொத்து வெண்டளை பெற்று வந்தது.*

"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி."

*இது வேற்றுத்தளை விரவியது.*

**குறத்திப் பாட்டு**

*இஃது இந்நாளில் குறவஞ்சியென்று வழங்குகிறது. தலைவன் உலா வரவு, மகளிர்காமுறல், மோகினி வரவு, உலாப்போந்த தலைவனைக் கண்டுமயங்கல், திங்கள் தென்றல் முதலிய துயரம் பனம், பாங்கி உற்ற தென்னெனவினவல், தலைவிபாங்கி*

*யோடுற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கியோடு தலைவனடையாளங் கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியை மலைவளம் முதலியன வினவல், குறத்திமலை வளநாட்டு வளம் முதலியன கூறல், தலைவன் பதிச்சிறப்பு, கிளைச்சிறப்பு முதலியனகூறல், குறி சொல்லிவந்தமைகூறல், தலைவி குறிவினவல், குறத்திதெய்வம் பரவல், குறிதேர்ந்து நல்வரவு கூறல் தலைவி பரிசிலுதவிவிடுத்தல், குறவன் வரவு, புள்வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்கனொடு குறத்தியடையாளங்கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவனணிமுதலிய கண்டு ஐயுற்று வினவல், அவள் விடைகூறல் முதலிய இத்தகைய பெரும்பான்மையுறுப்புகளால், அகவல், வெண்பா, தரவு, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம் முதலிய செய்யுட்களை இடையிடையே கூறிச் சிந்து முதலிய நாடகத்தமிழாற்பாடுவது குறத்திப்பாட்டாகும்.*

**குறளடி**

*இரண்டு சீர்களைக் கொண்டது குறளடியாகும். இவ்வடி வஞ்சிப்பா, வஞ்சித்துறை ஆகியவற்றிற்கு உரியது. நான்கு எழுத்து முதலாக ஆறெழுத்து இறுதியாக ஏறிய மூன்று நிலத்தையுடைத்து குறளடி என்பர் தொல்காப்பியர்.*

எடு:- ''நாளர் நாடோறும்''

**குறளடி வஞ்சிப்பா**

*வஞ்சியுரிச்சீர் எனப்படும் கனியீற்று மூவசைச் சீர்கள் அல்லது நிரையசையை இறுதியிலுடைய நாலசைச் சீர்கள் இரண்டைப் பெற்று, மூன்றடிகள் சிற்றெல்லையாகவும் பாடுவோரின் உள்ளக் கருத்திற்கேற்ப பலவடிகளைப் பேரெல்லையாகவுங் கொண்டு தனிச் சொல் பெற்று இப் பாவிற்குரிய ஓசையை உடையதாய் ஆசிரியச் சுரிதகத்தால் முடிவது குறளடி வஞ்சிப்பாவாகும்.*

***எடு:-***

''வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழு தேத்தினர்
நாளும்

மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே.''

**குறள்வெண் செந்துறை**

*இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைத்தாய், எந்தத் தளையும் பெற்று, ஓரடியில் எத்தனை சீர்களையும் உடையதாய் அமைந்து நடப்பது குறள்வெண் செந்துறையாகும்.*

**எடு:-**

''ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.''

**குறள்வெண்பாவின் இலக்கணம்**

*வெண்பாவின் ஈற்றடி சிந்தடியாகவும் ஏனையடி அளவடி யாகவும் அமைய இயற்சீர், காய்ச்சீர்களும், வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளைகளும் விரவி வர, ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றைப்பெற்று செப்பலோசையுடைத்தாய் இரண்டடியால் அமைந்து நடப்பது குறள் வெண்பாவாகும். இவ்வெண்பா ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானு வரும். குறுவெண்பாட்டு என்பதும் இது.*

**குளகச் செய்யுள்**

*வேறுபாடல்களை அவாவி பல பாட்டாய் ஒருவனைக் கொண்டு முடிவதும், ஒரு பெயர் கொண்டு முடிவதும் குளகம் என்னுஞ் செய்யுளாம்.*

**எடு:-**

''முன்புலக மேழினையுந் தாயதுவு மூதுணர் வோர்
இன்புறக்கங் காநதியை யீன்றதுவுந் - நன்பரதன்
கண்டிருப்ப வைகியதுவுங் கான்போ யதுமிரதம்
உண்டிருப்பா ருட்கொண்ட தும்''

''வெந்த கரியதனை மீட்டுமக வாக்கியதும்
அந்தச் சிலையினைப்பெண் ணாக்கியதும் - செந்தமிழ்சேர்
நாவலவன் பின்போந்த நன்னீர்த் திருவரங்கக்
காவலன் மாவலவன் கால்.''

*இஃது பெயர் கொண்டு முடிவதற்கு எடுத்துக்காட்டு.*

**கூழை அளபெடை**

*அளவடியின் முதல் மூன்று சீர்களில் எழுத்து அளபெடுத்து நிற்றல்.*

எடு:- "மாஅத் தாஅண் மோஒட் டெருமை"

**கூழை இயைபு**

*அளவடியின் நான்கு, மூன்று, இரண்டாம் சீர்களில் அமைந்த எழுத்தோ சொல்லோ ஒன்றுதல்.*

எடு:- "மாதர் நகிலே வல்லே யியலே"

**கூழை எதுகை**

*அளவடியின் முதல் மூன்று சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவருதல்.*

எடு:- "நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி"

**கூழை முரண்**

*அளவடியின் முதல் மூன்று சீர்களில் அமைந்த சொற்கள் முரணி நிற்றல்.*

எடு:- "சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்."

**கூழைமோனை**

*அளவடியின் முதல் மூன்று சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருதல்.*

எடு:- "அகன்ற வல்கு லந்நுண் மருங்கில்"

**கேசாதிபாதம்**

*கலிவெண்பாவால் முடியிலிருந்து அடிவரை பாடுவது கேசாதிபாதம் எனப் பெறும். கேசம்=முடி. (முடிமுதல் அடி)*

**கைக்கிளை**

*ஒருதலைக் காமத்தை ஐந்து விருத்தப் பாக்களாற் கூறுவது கைக்கிளையாகும். ஐந்தேயன்றி முப்பத்திரண்டு பாடல்களாற் கூறுவதும் உண்டு.*

**கையறுநிலை**

*கணவன் அல்லது மனைவி இறந்தபோது அவர்கட்பட்ட அழிவுப் பொருளெல்லாவற்றையும் பிறர்க்கறிவுறுத்தி இறந்து படாதொழிந்த ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியரும் தனிப்பட நின்று செயலறு நிலையைக் கூறுவது.*

**கொச்சகக் கலிப்பா**

ஒரு தரவு வந்தும், இரண்டு தரவு வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு, தாழிசை, அராகம், அம்போ தரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்புந்தம்முண் மயங்கியும், வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவனவெல்லாங் கொச்சகக் கலிப்பாவாகும். இவற்றுள் ஒரு தரவு வந்தால் தரவுக் கொச்சகக் கலிப்பா என்றும், தரவு இரண்டாய் வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்றும், சில தாழிசை வந்தால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், பல தாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், தம்முண் மயங்கியும் பிறவற்றினோடு மயங்கியும் வருவனவெல்லாம் மயங்கிசைக் கொச்சக்கலிப்பா என்றும் வழங்கப்படும். இக்கொச்சகக் கலிப்பாக்களில், துள்ளலில்லாத வேற்றோசையுடைய அடிகளும் வரக்கூடும். கலிப்பாவிற்குரியன வல்ல என்று விலக்கப்பெற்ற, தேமா, புளிமா, கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் நான்கு வகைச்சீர்களும் கொச்சகக் கலியினுள் வரக்கூடும். இப்பாவில் நெடிலடியும் வரக்கூடும். ஒத்தாழிசை வெண்கலிப்பாக்களுக்கு ஒவ்வாது நடப்பன வெல்லாம் கொச்சகக் கலிப்பாவினுள் அடங்கும்.

**கோவை**

இருவகையாகிய முதற்பொருளும், பதினான்கு வகை யாகிய கருப்பொருளும், பத்துவகையாகிய உரிப் பொருளும் பெற்றுக் கைக்கிளை முதலுற்ற அன்புடைக் காமப் பகுதியவாம் களவொழுக்கமும், கற்பொழுக்கமுங் கூறலே யெல்லையாகக் கொண்டு கட்டளைக் கலித்துறை நானூற்றால் திணை முதலாகத் துறையீறாகக் கூறப்பட்ட பன்னிரண்டகப் பாட்டுறுப்பும் தோன்றப் பாடப் பெறுவது கோவையாகும்.

**சதகம்**

அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஏதேனும் ஒன்றன் மீது நூறு பாடல்கள் பாடுவது சதகமாகும்.

**சாதகக் கவி**

ஓரைநிலையும், திதிநிலையும், யோகநிலையும், நாண் மீன் நிலையும், கிழமை நிலையும், கரணநிலையும், கோள்நிலையும் ஆகிய ஏழுறுப்புகளின் நிலைகளையும் காலக்கணித நூலால் நன்குணர்ந்து அவைகளின் பலனையமைத்து அவைகளால் தலைமகனுக்கு நிகழ்வன கூறுதல் சாதகக் கவி என்னும் பெயர் பெறும்.

**சித்திரவகவல்**

*சீர்தொறும் அகவி வருவன சித்திரவகவலாகும்.*

**சித்திரகவி:-**

*ஏகபாதமும், எழுகூற்றிருக்கையும், காதை கரப்பும், கரந்துறைச் செய்யுளும், கூடச் சதுக்கமும், கோமூத்திரியமும், இரட்டை நாகபந்தமும், அட்ட நாக பந்தமும் அறிந்து பாடுவோன் சித்திரகவியாவான். இச்சித்திரகவி இந்நாளில் இரதபந்தம் கமல பந்தம் முதலிய பலவாக வளர்ந்து விரிந்துள்ளது.*

**சிந்தடி**

*மூன்றுசீர்களைக் கொண்டது சிந்தடியாகும். இவ்வடி வஞ்சி விருத்தம். வெண்பாவின் இறுதி, நேரிசை ஆசிரியப்பாவில் ஈற்றயல் முதலியவிடங்களில் வரும். ஏழெழுத்து முதல் ஒன்பது எழுத்துவரை வருவது சித்தடியாகும் என்பர் தொல்காப்பியர்.*

**எடு:-**

“அன்று மூல மாதியாய்
இன்று காறு மேழையான்
நன்று தீது நாடலேன்
தின்று தீய தேடினேன்.”

**சிந்தடி வஞ்சிப்பா**

*வஞ்சியுரிச்சீர் எனப்படும் கனியீற்று மூவகைச்சீர்கள் அல்லது நிரையசையை இறுதியிலுடைய நாலசைச்சீர்கள் மூன்றைப் பெற்று, மூன்றடிச் சிற்றெல்லையாகவும் பலவடிகளைப் பேரெல்லையாகவுங் கொண்டு தூங்கலோசையுடைத்தாய், தனிச் சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இறுவது சிந்தடி வஞ்சிப் பாவாகும்.*

**எடு:-**

“பாலத்தஞ் செலவிவளோடு படுமாயின்
நீரவத்தை நடவேண்டா வினிநனியென
நஞ்சிறு குறும்பிடை மூதெயிற்றியர்
சிறந்துரைப்பத் தெறுகதிர் சென்றுறும்
ஆங்கட் டெவிட்டனர் கொல்லோ
எனவாங்கு

நொதுமலர் வேண்டி நின்னொடு
மதுகர முற்ற வாடவர் தாமே.''

### சிந்தியல் வெண்பாவின் இலக்கணம்

வெண்பாவின் ஈற்றடி சிந்தடியாகவும், ஏனையடி அளவடி யாகவும் அமைய, இயற்சீர் காய்ச்சீர்களும், இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளைகளும் விரவிவர, ஈற்றடியில் இறுதிக்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றை ஏற்று செப்பலோசையுடைத்தாய் மூன்றடியால் அமைந்து நடப்பது சிந்தியல் வெண்பாவாகும். இச்சிந்தியல் வெண்பா ஒரு விகற் பத்தாலும், இருவிகற்பத்தாலும், பல விகற்பத்தாலும் வரலாம்.

**எடு:-**

''நறுநீல நெய்தலும் கொட்டியுந் தீண்டப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி''

### சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவைப்போல தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கு உறுப்புகளையும் பெற்று வரும். ஆனால், இப்பாவில் தாழிசைகளுக்கிடையில் தனிச் சொல்வரும். அதுதான் இதற்கும் அதற்குமுரிய வேறுபாடு. அதாவது தரவு, தனிச்சொல், தாழிசை; தனிச்சொல், தாழிசை, தனிச்சொல், தாழிசை, தனிச்சொல் சுரிதகம் என்னும் அமைப்பில் வரும். இப்பாவில் வரும் தாழிசைகளின் ஈற்றடிச்சீர் குறைந்து வருமாயின், அப்பொழுது, இது, குறைச்சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா வாகும். தாழிசையின் அடிகள் அளவடிகளாயின் இயற்சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனப் பெயர் பெறும்.

### சின்னப் பூ:-

நேரிசை வெண்பாவால் அரசனது சின்னமாகிய பத்து உறுப்புகளையும் சிறப்பித்து நூறு தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னுந் தொகை படக்கூறுவது.

### சிறப்புப் பாயிரத்திலக்கணம்:-

நூல் செய்தோன் பெயர், நூல்வந்தவழி, நூல் வழங்கும் நிலம், நூலின் பெயர், இந்நூல் முடிந்த பின்பு இந்நூல்கேட்கத் தகும் என்னும் இயைபு, நூலிற் சொல்லப்பட்ட பொருள், இந்நூல் கேட்பதற்குரியோர், இந்நூல் கேட்டலால் உண்டாகும்

பயன், நூல் செய்த காலம், நூல் அரங்கேற்றிய அவை, நூல் செய்தற்குரிய காரணம் ஆகிய பதினொன்றையுங் கூறுவது சிறப்புப் பாயிரமாகும்.

**சீர்**

அசை சிறுபான்மை தனித்தும், பெரும் பாலும் இரண்டு முதலியவாகத் தொடர்ந்தும் வருவதாம். அது ஓரசைச் சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

**செந்துறைச்சிதைவுத் தாழிசைக் குறள்**

இரண்டடியாத் தம்முள் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமின்றிச் செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவனவெல்லாம் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறளாகும்.

**எடு:-**

"பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டலந் தோன்றுமால் வாழி யன்னாய்."

**செந்தொடை**

எதுகை மோனையின்றி வேறுபடத் தொடுப்பது செந் தொடையாகும்.

**எடு:-**

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே."

**செப்பலோசை**

இது வெண்பாவிற்குரிய ஓசை. வெண்டளையால் விளையும் ஓசை இது. இவ்வோசை ஏந்திசைச் செப்பலோசை, தூங்கிசைச் செப்பலோசை, ஒழுகிசைச் செப்பலோசை என மூவகைப்படும். வெண்சீர் வெண்டளையான் வரும் வெண்பா ஏந்திசைச் செப்பலோசையைப் பெறும். இயற்சீர் வெண்டளையான் வரும் வெண்பா தூங்கிசைச் செப்பலோசையைப் பெறும். இயற்சீர், வெண்சீர் வெண்டளைகள் கலந்து வரும் வெண்பா ஒழுகிசைச் செப்பலோசையைப் பெறும்.

**செருக்களவஞ்சி**

போர்க்களத்தில் இறந்த குதிரையுடலையும், யானை யுடலையும், மனிதருடலையும் நாயும் பேயும் காகமும் கழுகுந் தின்று களித்துப் பாடிய சிறப்பைப் பாடுவது செருக்களவஞ்சி யாகும்.

**செவியறிவுறூஉ**

வியப்பின்றி உயர்ந்தோர்கள் நயந்தொழுகல் கடனென அரசர் முதலியோர்க்கு மருட்பாவால் அறவுரை கூறுவது செவியறிவுறூஉ என்று பெயர் பெறும்.

**சொற்சீரடி**

கட்டுரை வகையினால் எண்ணொடு சேர்ந்து நாற்சீரடியின்றி முச்சீரடியானும், இருசீரடியானும் ஒழிந்த அசையினையுடைய தாகியும், ஒரு சீரின் கண்ணே பிறிதொரு சீர் வரத் தொடாது ஓசை வரத் தொடுப்பதும், சொற்றானே சீராந்தன்மையைப் பெற்று நிற்பதும் ஆகிய இவ்வியல்போடு நடப்பது சொற்சீரடியாகும். கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்படுவது; எண்ணென்பது ஈரடியாற் பலவாகியும் ஓரடியாற்பலவாகியும் வருதல்.

**சொற்பொருத்தம்**

முதலில் எடுத்துக் கொண்ட மூவசைச் சீரியவாகிய சொற்கள் மங்கலத்தவாயினும், வகையுளி சேர்ந்தனவும், சிறப்பில் சொல்லும், பலபொருட் கேற்ற சொல்லும், பொருளில் சொல்லும், தோன்றல் திரிதல், கெடுதல் என்னும் விகாரச் சொற்களும் வாழ்த்துப் பாடலின்கண் இடம் பெறாமற் காத்தல் வேண்டும்.

**தசாங்கத்தியல்**

அரசனுடைய பத்து அரசியலுறுப்புக்களைக் குறித்துப் பத்து ஆசிரிய விருத்தங்கள் பாடுவது

தசாங்கம்=பத்துறுப்பு.

**தசாங்கப்பத்து**

நேரிசை வெண்பாவினால் அரசனுடைய பத்துறுப்புக் களைப் புகழ்ந்து பத்துச் செய்யுள் பாடுவது.

**தண்டகமாலை**

வெண்பாவினால் முன்னூறு செய்யுட்கள் பாடுவது தண்டக மாலையாகும்.

**தரவிணைக் கொச்சகக் கலிப்பா**

*இது இரண்டு வகைப்படும்.*

*(1) இடையே தனிச்சொல் பெற்றும், பெறாமலும், இரண்டு தரவுகளைப் பெற்று நடப்பது இயற்றரவிணைக் கொச்சமாகும்.*

*(2) தனிச்சொல்லை இடையில் பெற்று இரண்டு தரவோடு சுரிதகமும் பெற்று நடப்பது சுரிதகத் தரவிணைக் கொச்சக மாகும். இதனை தரவிணைக் கொச்சக ஒருபோகு என்றும் அழைப்பர்.*

**எடு:-**

"வார்பணிய தாமத்தால் வளைக்கையோர் வண்டோச்ச
ஊர்பணிய மதியம்போ னெடுங்குடைக்கீ ழுலாப்போந்தான்
கூர்பணிய வேற்றானைக் கொற்கையார் கோமானே
அவர்க்கண்டு
பூமலர் நறுங்கோதை புலம்பலைப்ப நறுங்கொண்டல்
தூமலர்க்கண் மடவார்க்குத் தொல்பகையே யன்றியும்
காவலற்குப் பெரியதோர் கடனாகிக் கிடவாதே"

*இது தனிச்சொல்லை இடையிலே பெற்ற இரண்டு தரவு களைக் கொண்ட இயற்றர விணைக் கொச்சகம்.*

**தரவுக் கொச்சகக் கலிப்பா**

*கலிப்பாவின் முதல் உறுப்பான தரவு மட்டும் பெற்று வருவதும், தரவோடு தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று நடப்பதும் தரவுக் கொச்சகக் கலிப்பாகும். ஒரு தரவோடு நிற்பதை இயற்றரவு கொச்சகமென்றும், தரவோடு தனிச்சொல்லும், சுரிதகமும் பெற்றும் நடப்பதைச் சுரிதகத் தரவு என்றும் வேறுபடுத்திக் கூறுவர்.*

**எடு:-**

"செல்வப்போர் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையும் மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே."

*இஃது தரவு மட்டும் பெற்று வந்த இயற்றரவு கொச்சகம்.*

**தளை**

நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனுங் கூடி நிற்பது தளையாம். நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வருதல் ஒன்றிவருதலாம். நேர்முன் நிரையும், நிரைமுன் நேரும் வருதல் ஒன்றாதுவருதலாம். அத்தளை நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றா வஞ்சித்தளை கலித்தளை என எழுவகைப் படும்.

**தாண்டகம்:-**

இருபத்தேழு எழுத்து முதலாகவுயர்ந்த எழுத்தடியினவாய் குருவும் இலகுவும் ஒத்து வருவன அளவியற்றாண்டகமெனவும்; எழுத்தொவ்வாதும் எழுத்தலகொவ்வாதும் வந்தன அளவழி தாண்டகமெனவும்; ஒருபொருளைக் குறித்துப் பத்துச் செய்யுளாகக் கூறுவது தாண்டகமெனவுங் கூறுவர்.

**தாரகை மாலை:-**

கண்ணகியைப் போன்ற கற்பினையுடைய மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களை வகுப்பிற் கூறுவது தாரகை மாலையெனப் பெறும்.

**தானைமாலை**

அகவலோசையிற் கெடாமல் ஆசிரியப் பாவினால் முன்னரெடுத்துச் செல்லுங்கொடிப் படையைப் பாடுவது தானை மாலையாகும்.

**தும்பை மாலை**

தும்பைப் பூமாலை சூடிப் பகைவரோடு போர் செய்தலைக் கூறுவது தும்பை மாலையாகும்.

**துள்ளலோசை**

ஓசை உயர்ந்தும் தாழ்ந்தும் துள்ளி நடக்கும் ஓசை துள்ளலோசையாகும். இவ்வோசை கலிப்பாவிற்கு உரியது. இவ்வோசை ஏந்திசைத்துள்ளலோசை, அகவல்துள்ளலோசை, பிரிந்திசைத்துள்ளலோசை என மூவகைப்படும். கலித்தளையால் வருங்கலிப்பா ஏந்திசைத் துள்ளலோசையைப் பெறும். வெண்சீர் வெண்டளையுங் கலித்தளையும் விரவி வருங்கலிப்பா அகவல் துள்ளலோசையைப் பெறும். கலித்தளையோடு பிறதளைகளும் விரவிவருங் கலிப்பா பிரிந்திசைத் துள்ளலோசையைப் பெறும்.

**தூங்கலோசை**

எழுச்சியும் விரைவுமின்றி இடையிடையே தாழ்ந்து ஒலிக்கும் ஓசை தூங்கலோசையாகும். இவ்வோசை வஞ்சிப்பாவிற்குரியது. இவ்வோசை ஏந்திசைத் தூங்கலோசை, அகவல் தூங்கலோசை, பிரிந்திசைத் தூங்கலோசை என மூவகைப்படும். ஒன்றிய வஞ்சித் தளையால் வரும் வஞ்சிப்பா ஏந்திசைத் தூங்கலோசையைப் பெறும். ஒன்றாத வஞ்சித்தளையால் வரும் வஞ்சிப்பா அகவல் தூங்கலோசையைப் பெறும். இருவித வஞ்சித்தளைகளும் விரவி வரும் வஞ்சிப்பா பிரிந்திசைத் தூங்கலோசையைப் பெறும்.

**தூது:-**

ஆண்பாலும் பெண்பாலும் அவரவர் காதலைப் பாணன் முதலிய உயர்திணையோடும், கிளி, மேகம் முதலிய அஃறிணை யோடுஞ் சொல்லித் தூது போய் வாவெனக் கலிவெண்பாவாற் கூறுவது தூது என்னும் நூலாகும். தூது செல்வோரை மற்றவரைக் காட்டிலும் சிறப்பித்து உயர்த்திக் கூறிப் பாடுதல் வேண்டும்.

**தொகை நிலைச் செய்யுள்:- அ**

பொருளாலேனும் அளவாலேனும் விளக்கமாகத் தொகுத்துப் பாடப் பெறுவது தொகை நிலைச் செய்யுள். இஃதன்றித் தொகுக்கப்பட்ட செய்யுட்களையுடைய நூலெனவுங் கூறுவர்.

**தொகைநிலைச் செய்யுள்:- ஆ**

ஒரு செய்யுளோடு மற்றொரு செய்யுளுக்குத் தொடர்பு யாதுமின்றித் தனித் தனியே ஒரு பொருள் உணர்த்துஞ் செய்யுட்கள் பல தொகுக்கப்பட்ட நூல் தொகை நிலைச் செய்யுளாகும். அது ஒருவரால் உரைக்கப்பட்டுப் பலபாக்களாகவும், பலரால் உரைக்கப்பட்டுப் பலபாக்களாகவும் வரும்.

எடு:- ஒருவரால் உரைக்கப்பட்டது-திருக்குறள்

பலரால் உரைக்கப்பட்டது-நெடுந்தொகை (அகநானூறு)

**தொகை நிலைச் செய்யுள் பெயர் பெறும் முறை:-**

பொருளாற்றொகுத்த பெயர் பெற்றனவும், இடத்தாற் றொகுத்தபெயர் பெற்றனவும், காலத்தாற்றொகுத்த பெயர் பெற்றனவும், தொழிலாற்றொகுத்த பெயர் பெற்றனவும், பாட்டாற் றொகுத்த பெயர் பெற்றனவும், அளவாற்றொகுத்த பெயர் பெற்றனவும் என அறுவகையால் தொகை நிலைச் செய்யுள் பெயர் பெறும்.

**எடு:-**

"பொருளாற் றொகுத்தது-புறநானூறு
இடத்தாற் றொகுத்தது-களவழி நாற்பது
காலத்தாற் றொகுத்தது-கார் நாற்பது
அளவாற் றொகுத்தது-ஐங்குறு நூறு
தொழிலாற் றொகுத்தது-ஐந்திணை
பாட்டாற் றொகுத்தது-கலித்தொகை."

**தொடர்நிலைச் செய்யுளின் வகை**

*பொருள் தொடர் நிலைச் செய்யுள், சொற்றொடர் நிலைச் செய்யுள் என தொடர்நிலைச் செய்யுள் இருவகைப்படும். இவற்றுள் பொருள் தொடர் நிலைச் செய்யுளாவது, முற்செய்யுளோடு பிற்செய்யுள் பொருளினால் தொடர்ந்து வரப்பெறும் நூலாம்; ஒரு சரித்திரத்தைக் கூறும் இராமாயணம், சீவகசிந்தாமணி போன்றன இவற்றுள் அடங்கும். சொற்றொடர்நிலைச் செய்யுளாவது, முற்செய்யுளோடு பிற்செய்யுள் சொல்லினால் தொடர்ந்து வரப் பெறும் நூலாம்; அந்தாதியாகப் பாடப்பட்ட நூல்கள் இவற்றுள் அடங்கும்.*

**நயனப் பத்து**

*கண்களைப் புகழ்ந்து பத்துச் செய்யுட்கள் பாடுவது நயனப் பத்து எனப் பெயர் பெறும்.*

**நல்லாசிரியரிலக்கணம்**

*ஒழுக்கமுடைய குடிப்பிறப்பும், அருட் கொள்கையுங் கடவுள் நம்பிக்கையும் உயர்ந்த தன்மையும், கலைகளில் தெளிவும், நூற்பொருளை மாணாக்கர்கட்கு எடுத்துக் கூறும் வன்மையும் நிலத்தையும், மலையையும், துலாக்கோலையும், பூவையுமொத்த தன்மையும் உலகியல் அறிவும், உயர்வாகிய குணங்கள் இவைபோல்வன பிறவும் அமையப் பெற்றவனே நூல்கற்பிக்கும் ஆசிரியனாவான்.*

**நல்லாசிரியராகாதவரிலக்கணம்:-**

*நூல் கற்பிக்குந் திறமின்மையும், இழிந்தகுணமும், பிறரது கல்வி செல்வங் குறித்துக் கொள்ளும் பொறாமையும், பேராசையும், மெய்ப் பொருளை மறைத்துப் பொருளைக் காட்டி வஞ்சித்தலும், கேட்போர் அஞ்சுமாறு பேசுதலும், கழற்குடமும், மடற் பனையும் பருத்திக் குண்டிகையும், முடத்தெங்கும் போன்ற*

பண்பையும், மாறுபாடு கொண்ட கருத்தையுந் தம்மிடத் திலுடையவர் நூல் கற்பிக்கும் ஆசிரியராகுதல் இலராவர்.

**நவமணிமாலை**

வெண்பா முதலாக வேறுபட்ட பாவும், பாவினமுமாக ஒன்பது பாடல்களை அந்தாதியாகப் பாடுவது நவமணிமாலை யாகும்.

**நாமமாலை**

அகவலடியும், கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப் பாவி னால் ஆண்மகனைப் புகழ்ந்து பாடுவது நாமமாலையாகும்.

**நாற்பது**

இடமும், பொருளுங், காலமும், ஆகிய இவற்றுள் ஒன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது நாற்பது என்னும் எண்ணால் வரும் நூலாகும். இது காலம் பற்றி வருவது கார் நாற்பது எனவும், இடம் பற்றி வருவது களவழி நாற்பது எனவும், பொருள் பற்றி வருவது இன்னா நாற்பது இனியவை நாற்பது என்பன போலவும் வழங்கும்.

**நான் மணிமாலை**

வெண்பாவும், கலித்துறையும், அகவலும், விருத்தமும் அந்தாதியாக நாற்பது பாடுவது நான் மணிமாலையாகும்.

எடு:- நால்வர் நான் மணிமாலை.

**நிரை அசை**

குறில் இணைந்துவரினும், குறில் நெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றொடுவரினும், குறில்நெடில் இணைந்து ஒற்றொடுவரினும் நிரையசையாகும்.

எடு:- நெறி - சுறா.

நிறம் - குரால்.

**நிரைபு அசை**

நிரை அசையோடு சேர்ந்து வருகிற குற்றுகரமும், அதனோடு சேர்ந்து வருகிற முற்றுகரமும் நிரைபு அசையாகும்.

எடு:- வரகு, அரக்கு, மலாடு, பனாட்டு, கதவு, புணர்வு, உருமு, வினாவு.

**நிலைமண்டில ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவிற்குரிய எல்லா இலக்கணமும் பெற்று, எல்லா அடிகளையும் அளவடியாகக் கொண்டு நடக்கும் பா நிலைமண்டில ஆசிரியப்பாவாகும். மூன்றடிமுதல் பலவடி களைக் கொண்டு நடைபெறும். ஈற்றயலடியும் அளவடியாகவே இருக்கும். இப்பா என் என்னும் அசையால் முடிவுறுவது சிறப்புடைத்து.

**எடு:-**

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."

**நூலாசிரியர் மேற்கொள்ள வேண்டிய எழுவகைமதம் (கொள்கை)**

பிறர் மதத்திற்கு உடன்படுதலும், பிறர்மதத்தை மறுத்தலும், பிறர் மதத்திற்கு உடன்பட்டுப் பின்பு மறுத்தலும், தானே ஒரு கொள்கையை எடுத்துநாட்டி அதனை வருமிடந்தோறும் நிறுத்துதலும், மாறுபட்ட இரண்டு கொள்கைகளில் ஒன்றை யேற்றலும், பிறர் நூலில் உள்ள குற்றத்தை எடுத்துக் காட்டலும், பிறர்கொள்கைக்கு உடன்படானாகித் தன் கொள்கையையே கொள்ளுதலும் ஆகிய ஏழும் நூலாசிரியர் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகளாகும்.

**நூலின் இலக்கணம்**

சிறப்பு, பொது ஆகிய இருவகைப் பாயிரங்களையும் பெற்று, மூவகை நூல்களில் ஒன்றாகி, நான்கு பொருளாகிய பயனோடு, எழுவகை மதத்தையும் பின்பற்றி, பத்துவகைக் குற்றத்தையும் நீக்கி பத்துவகை அழகுகளோடு முப்பத்திரண்டு உத்திகளைக் கொண்டு, ஓத்து, படலம், என்னும் உறுப்புக் களோடு சூத்திரமும் காண்டிகையுரையும் விருத்தியுரையுமாகிய வேறுபாட்டு நடைகளைப் பெற்று வருவது நூலாகும்.

**நூலின் பாகுபாடு**

சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம் என்பன நூலின் பாகு பாடுகளாகும். இவற்றுள் சூத்திரமாவது ஆசிரியன் யாதானும் ஒரு பொருளைக் குறித்துக் கூறுவது; இனமாகிய பொருள்கள் சொல்லப் படுவது ஓத்தாகும்.

சூத்திரம் ஒத்து ஆகிய இனங்கள் பலவற்றையும் கூறுவது படலமாகும். சூத்திரம், ஒத்து, படலம் ஆகியவற்றை வுறுப்பாக வுடையது பிண்டமாகும்.

**நூலின் பெயர்கள்**

நூல்கள் பொருளானும், இடத்தானும், தொழிலானும், உறுப்பானும், அளவானும், செய்தோன் பெயரானும், செய்வித் தோனது பெயராலும் பெயரமையப் பெறும்.

எடு:- பொருள்பற்றி வந்தது ஆசாரக்கோவை; இடம்பற்றி வந்தது மதுரைக் காஞ்சி; காலம்பற்றி வந்தது வேனில் விருத்தம் தொழில் பற்றி வந்தது யானைத் தொழில்; உறுப்புப் பற்றி வந்தது நயனப்பத்து; எல்லைபற்றி வந்தது கேசாதி பாதம்; செய்தோன் பற்றிவந்தது தொல்காப்பியம்; செய்வித்தோன் பெயர் பற்றி வந்தது பாண்டிக்கோவை முதலியன.

**நூலின் பொதுவியல்பு**

எடுத்துக் கொண்ட பொருளொடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமற் கருதிய பொருளைத் தொகையானும் வகையானுங் காட்டி நின்று விரிந்த வுரையோடு பொருத்தமுடைத்தாகி நுண்ணியதாகி விளக்குவது நூலின் பொது இயல்புகளாகும்.

**நூலின்வகை**

முதல்நூல், வழிநூல், சார்புநூல் என நூல் மூன்று வகைப் படும். இயல்பாகவே வினையினின்று நீங்கி விளங்கிய அறிவினை யுடைய அறிவன் உயிர்களுக்காகச் செய்த நூல் முதல் நூலாகும். முதனூலை முழுவது மொத்துச் சிறிது வேறுபட்டிருப்பது வழிநூலாகும். முதனூல் வழிநூல்களுக்குச் சிறுபான்மை யொத்துப் பெரும் பாலும் வேறுபட்டிருப்பது சார்பு நூலாகும்.

**நூற்குரியகுற்றங்கள்**

குன்றக்கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறு கொளக் கூறல், குற்றமுடைய சொற்களைச் சேர்த்தல், இதற்குப் பொருள் இதுவோ அதுவோ என மயங்க வைத்தல், பொருள் வெளிப்படையாகத் தோன்றச் சொற்களைச் சேர்த்தல், சொல்லத் தொடங்கிய பொருளைவிட்டு இடையிலே மற்றொரு பொருளை விரித்தல், செல்லச் செல்லச் சொன்னடை பொருணடை தேய்ந்து முடிதல், சொற்கள் இருந்தும் ஒரு பயனுமில்லாமற் போதல் ஆகிய பத்தும் நூற்குரிய குற்றங்களாகும்.

**நூற்குரிய பத்துவகை அழகு**

சுருங்கச் சொல்லுதல், விளங்கவைத்தல், படிப்பவருக்கு இன்பத்தைத் தருதல், நல்ல சொற்களைச் சேர்த்தல், சந்தவின்ப முடைத்தாதல், ஆழ்ந்த கருத்தையுடைத்தாதல், படலம், ஓத்து முதலியவைகளைக் காரணகாரிய முறைப்படி வைத்தல், உயர்ந் தோர் வழக்கத்தோடு மாறுகொள்ளாமை, சிறப்பான பொருளைத் தருதல், விளங்கிய எடுத்துக் காட்டுகளையுடைத்தாதல் ஆகிய பத்தும் நூற்குரிய அழகுகளாகும்.

**நூற்குரிய முப்பத்திரண்டு உத்திகள்**

நுதலிப் புகுதல், ஒத்துமுறை வைப்பு, தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல், முடித்துக் காட்டல், முடிவிடங்கூறல், தானெடுத்து மொழிதல், பிறன்கோட் கூறல், சொற்பொருள் விரித்தல், தொடர்ச் சொற்புணர்த்தல், இரட்டுறமொழிதல், ஏதுவின் முடித்தல், ஒப்பின் முடித்தல், மாட்டெறிந் தொழுகல், இறந்தது விலக்கல், எதிரதுபோற்றல், முன்மொழிந்தது கோடல், பின்னது நிறுத்தல், விகற்பத்தின் முடித்தல், முடிந்தது முடித்தல், உரைத்துமென்றல், உரைத்தாமென்றல், ஒருதலைதுணிதல், எடுத்துக்காட்டல், எடுத்தமொழியினெய்த வைத்தல், இன்ன தல்ல திதுவெனமொழிதல், எஞ்சிய சொல்லினெய்தக்கூறல், பிறநூன் முடிந்ததுதானுடன்படுதல், தன்குறி வழக்கம் மிகவெடுத் துரைத்தல், சொல்லின் முடிவினப் பொருள் முடித்தல், ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல், உய்த்துணரவைத்தல் என்பன முப்பத்திரண்டு தந்திர வுத்திகளாகும்.

**நூற்றந்தாதி**

நூறு வெண்பாவிலேனும் நூறு கலித்துறையிலேனும் அந் தாதித் தொடையிற் கூறுவது நூற்றந்தாதியாகும். இந்நாளில் அந்தாதியெனப் பொதுவாக வழங்கப் பெறும் இதனை முப்பது பாக்களாற் பாடுவது முண்டு.

**நூற்பாவகவல்**

விழுமியபொருளைத் தழுவிய சூத்திர யாப் பினவாய் வருவன நூற்பா வகவலாகும்.

**நெடிலடி**

ஐந்து சீர்களைக் கொண்டது நெடிலடியாகும். இவ்வடி கலிநிலைத்துறை, கட்டளைக் கலித்துறை முதலிய பாக்களுக்கு உரியது. பதினைந்து எழுத்தான் அமைவதும். பதினாறு பதினேழு எழுத்தான் அமைவதும் நெடிலடி என்பர் தொல்காப்பியர்.

**எடு:-**

“வென்றான் வினையின் தொகையாக விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின் ஒழியாது முற்றும்
சென்றான் திகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.

**நேரிசை ஆசிரியப்பா**

*ஆசிரியப் பாவிற்குரிய அகவலோசையைத் தரும் ஆசிரியத் தளைகளைப் பெற்று, ஈற்றயல்அடி சிந்தடியாகவும், ஏனையடிகள் அளவடிகளாகவும், அமைய ஏ, ஓ, என், ஈ, ஆ, ஆய், ஐ என்ற அசைகளில் ஒன்றை இறுதியில் பெற்று வருவது நேரிசை ஆசிரியப் பாவாகும். இப்பாவில் வேற்றுத்தளைகள் இரண்டொன்று விரவியும் வரலாம்.*

**எடு:-**

“நிலத்தினும்பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே”

**நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா**

*முன் ஒரு தரவு வந்து, அதன் பின்பு மூன்று தாழிசை வந்து, அதன்பின்பு ஒரு தனிச் சொல்வந்து அதன்பின்பு ஆசிரியத் தானாவது வெண்பாவானாவது ஒரு சுரிதகம் பெற்று வருவது நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவாகும். தரவு, தாழிசை, தனிச் சொல் சுரிதகம் என்னும் நான்குறுப்பிற் கூறப்பட்டமையாலும், உடன்பட்ட ஒலியுடைமையாலும், நுண்பொருள் படக்கூறப் படுதலாலும், மிக்க புகழையுடையதாதலாலும் இப்பாவிற்கு நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா எனப் பெயர் வந்ததென்று கூறுவாருளர்.*

**நேரிசைச் சிந்தியல் வெண்பா**

*சிந்தியல் வெண்பாவிற்குரிய இலக்கணத்தைப் பெற்று இரண்டாம் அடியின் தனிச்சொல் ஒரூஉ எதுகை பெற்று அமைய ஒரு விகற்பத்தாலேனும் இரு விகற்பத்தாலேனும் வரும் மூன்றடிவெண்பா நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும். இப்பா பல விகற்பத்தால் வருதல் கூடாது.*

**எடு:-**

“நல்லா ருறவால் நலம்பெருகுந் நாடோறும்
அல்லா ருறவா லறந்தேயும்-பொல்லார்
தொடர்விடுதல் மேலாந் துணை”

**நேரிசை வெண்பா**

*ஈற்றடி சிந்தடியாய் ஏனையடி அளவடியாய் அமைய, இயற்சீரும் காய்ச்சீர்களும், இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் விரவிவர இரண்டாம் அடியின் ஈற்றில் ஒரூஉ எதுகை உடையதாய், ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய் பாடுகளுள் ஒன்றினை ஏற்று ஒரு விகற்பத் தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வரும் நாலடிச் செய்யுள் நேரிசை வெண்பாவாகும். இதன் ஓசை வன்மை பொருந்தியதாக விருக்கும். இரண்டாவது அடி தனிச் சொல் பெற்றிருப்பினும் அது பல விகற்பமாய்வரின் நேரிசை வெண்பா ஆகாது. விகற்ப மாவது, வெண்பாவின் நான்கடிகளும் ஒரே வகையான எதுகை பெற்றிருப்பின் ஒருவிகற்பம். முதலிரண்டடிகள் ஒருவித எதுகையும் பின்னிரண்டடிகள் வேறுவித எதுகையும் பெற்றிருப்பின் இருவிகற்பாம்.*

**எடு:-**

“மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணை-நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னாடல் சொல்லென்றா ளீங்கு.”

**நேர் அசை**

*குறில் தனித்துவரினும், ஒற்றொடுவரினும், நெடில் தனித்து வரினும், ஒற்றொடுவரினும் நேர் அசையாகும்.*

*எடு:- “உள் ளார் தோ ழி” என நேரசை நான்கும் வந்தவாறு காண்க.*

**நேர்புஅசை**

*நேரசையோடு சேர்ந்து வருகிற குற்றியலுகரமும், அதனோடு சேர்ந்து வருகிற முற்றியலுகரமும் நேர்பு அசையாகும்*

*எடு:- காது, கன்று, காற்று, காது, சார்பு, கல்லு.*

**நொச்சிமாலை**

*புறத்திலே யூன்றிய பகைவர் கோடலன்றி நொச்சிப் பூமாலை சூடித் தன் மதிலைக் காக்குந் திறத்தைக் கூறுவது நொச்சிப் பூ மாலையாகும்.*

**பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா**

*தரவு, மூன்றிற்கு அதிகமான தாழிசைகள், தனிச் சொல், சுரிதகம் ஆகியவற்றைப் பெற்றுவருவது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாகும்.*

**பஃறொடை வெண்பா**

*வெண்பாவிற்குரிய எல்லா இலக்கணங்களையும் பெற்றுப் பல விகற்பமுடையதாய் நான்கின் மிக்க பல வடிகளால் வருவது பஃறொடை வெண்பாவாகும்.*

**எடு:-**

“வையக மெல்லாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந்நாட்டிற் றலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்.”

*இஃது ஏழடிப் பலவிகற்பப் பஃறொடை வெண்பா.*

**பஃறொடை வெண்பாவின் வகை**

*பஃறொடை வெண்பா, நேரிசைப் பஃறொடை வெண்பா, இன்னிசைப் பஃறொடை வெண்பா, என இருவகைப்படும். இரண்டடி ஒரெதுகையும், இரண்டடிக் கொருமுறை ஒரூஉ எதுகையுடைய தனிச் சொல் பெற்றும்; நான்கிற்கு அதிகமான அடிகளைக் கொண்டு நடப்பது நேரிசையையுடைய பஃறொடை வெண்பாவாகும். அடிதோறும் தனிச் சொல் பெற்றும், பெறா மலும், அல்லது சிலவடிகளில் மாத்திரம் தனிச் சொல் பெற்றும், பலவிகற்பங்களையுடைய பலவடிகளால் நடப்பது இன்னிசைப் பஃறொடை வெண்பாவாகும்.*

**பதிகம்**

*ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுள் பாடுவது பதிகமாகும்.*

**பதிற்றந்தாதி**

*பத்து வெண்பா, பத்துக் கலித்துறை, பொருட்டன்மை தோன்ற அந்தாதி முறையிற்பாடுவது பதிற்றந்தாதியாகும். பதிற்றுப் பத்தாந்தாதி என்பதும் இதுவே.*

**பயோதரப் பத்து**

*முலையைப் புகழ்ந்து பத்துச் செய்யுட்கள் பாடுவது பயோ தரப் பத்து எனப்பெறும். பயோதரம்-முலை.*

**பரணி**

*போர்முகத்திலே ஆயிரம் யானையைக் கொன்ற வீரனைத் தலைவனாகக் கொண்டு, கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, பாலை நிலம், காளி கோயில், பேய்களோடு காளி, காளியோடு பேய்கள் கூறத் தான் சொல்லக் கருதிய தலைவன் புகழ்விளங்க அவன் வழியாகப் புறப்பொருள் வெம்போர் வழங்க விரும்பல் ஆகிய வெல்லாம் இருசீரடி முச்சீரடி ஒழித்து ஒழிந்த மற்றடியாக ஈரடி பலதாழிசையாற் பாடுவது பரணியாகும். (வெண் கலிப்பாவாலும் பாடலாம்)*

*எடு:- கலிங்கத்துப் பரணி.*

**பல்சந்த மாலை**

*பத்துப் பத்துச் செய்யுள் வெவ்வேறு சந்தமாக நூறு பாடல்கள் பாடுவது பல் சந்தமாலையாகும்.*

**பவனிக்காதல்**

*பவனி வந்த தலைவன் மீது காதல் கொண்ட தலைவி தோழியிடந் தான் வருந்துவதாகக் கூறுங் கூற்றாகப் பாடுவது பவனிக் காதல்.*

**பன்மணிமாலை**

*கலம்பகத்திற்குக் குறித்த ஒருபோகும் அம்மானையும் ஊசலுமின்றி ஏனையவுறுப்புக்களெல்லாம் வரப்பாடுவது பன்மணிமாலையாம்.*

**பாட்டு**

*இஃது ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்று நான்கு வகைப்படும். (கடும்பா, இன்பா, சித்திரப்பா, விரிபா)*

**பாதாதிகேசம்**

*கலிவெண்பாவால் கால்முதல் மயிர் முடிவரை பாடுவது பாதாதிகேசம் எனப் பெறும். (அடி முதல் முடி)*

**பாயிரத்தின் பெயர்கள்**

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை, என்பன பாயிரத்தின் பெயர்களாம். முகவுரை-நூற்குமுன் சொல்லப் படுவது; நூன்முகம் என்பதும் அது. பதிகம் என்பது-பொதுப்பாயிரத்திற்குரிய ஐந்தையும் , சிறப்புப் பாயிரத்திற்குரிய பதினொன்றையும் தொகுத்துக் கூறுவது. அணிந்துரை என்பது-நூலின் பெருமைகளை விரித்துக் கூறுவது. புனைந்துரை என்பதும் அதுவே. புறவுரை என்பது-நூல் சொல்லிய பொருள் அல்லாதவைகளைச் சொல்லுவது. தந்துரை என்பது-நூலிலே சொல்லப்பட்ட பொருளல்லாதவை களை அதற்குத் தந்து சொல்லுவது.

**பாயிரத்தின் வகை**

பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம், என பாயிரம் இரு வகைப்படும்.

**பிள்ளைக்கவி:-**

இஃதிந்நாளில் பிள்ளைத் தமிழ் என்று வழங்கப் பெறுகிறது. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர், ஆகியவை களை முறையே ஆசிரிய விருத்தத்தால் பத்துப் பத்தாகக் கூறுவது ஆண்பாற்பிள்ளைக் கவி. இவ்வுறுப்பில் இறுதி மூன்றை யொழித்துக் கழங்கு, அம்மானை, ஊசல், என்பவைகளைக் கூட்டிக் கூறுவது பெண்பாற்பிள்ளைக்கவி.

பிறந்த மூன்றாந்திங்கள் முதல் இருபத்தொரு திங்கள் வரை யிலும் ஒற்றித்ததிங்களில் முழுத்திங்கள் பக்கத்தில் பிள்ளைக் கவியை விரும்புக. மூன்றாமாண்டினும் ஐந்தாமாண்டினும் ஏழாமாண்டினும் கொள்ளவும் பெறும். காப்பு ஒன்பது பாட்டாலும் பதினொரு பாட்டாலும் பாடப்பெறும். நிலங்கள் பத்துந்தம்மில் ஒப்பக் கொண்டு பாடுமிடத்தில் ஒற்றைப்படப் பாடுதல் சிறப்புடையது. இரட்டிக்கப் பாடுமிடத்தில் ஓசை பெயர்த்துப் பாடவேண்டும். காப்பு முதற்கண்ணெடுத்த ஆசிரிய விருத்தம் நான்கடிக்கும் எழுத்தொப்பப் பாடுதல் வேண்டும்.

**புகழ்ச்சிமாலை**

அகவலடியும், கலியடியும், வந்து மயங்கிய வஞ்சிப் பாவால் பெண்களின் சிறப்பைக் கூறுவது புகழ்ச்சி மாலையாகும்.

**புறநிலை**

*நீ வணங்குந் தெய்வம் நின்னைப் பாதுகாப்ப நின்வழி சிறந்தோங்குவதாக எனப்பாடுவது புறநிலையாகும்.*

**புறநிலை வாழ்த்து**

*வழிபடு தெய்வம் நின்னைக் காக்கக் குற்றமில்லாத செல்வத்தோடு ஒரு காலைக் கொருகால் சிறந்து வாழ்வாயாகவென்று மருட்பாவாற்பாடுவது.*

**புறப்பாவகவல்**

*பாடாண்துறைமேல் பாடப்படும் ஆசிரியப் பாவெல்லாம் புறப்பா வகவலாகும்.*

**பெயரின்னிசை**

*பாட்டுடைத் தலைவன் பெயரைப் பொருந்த இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும் எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.*

**பெயர் நேரிசை**

*பாட்டுடைத் தலைவன் பெயரைப் பொருந்த நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும், பாடுவது பெயர் நேரிசையெனப் பெயர் பெறும்*

**பெருங்காப்பியம்**

*தெய்வ வணக்கமும், செயப்படுபொருளும், வாழ்த்தும் முன்னுடைத் தாய், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பயனுடையதாய்ப், பாட்டுடைத் தலைவனைக் கொண்டதாய், மலை, கடல், நாடு, நகர், பருவம் முதலியவற்றின் வளங் கூறுதலும், மணமுடித்தல், முடிகவித்தல், பொழில் விளையாட்டு, நீர்விளையாட்டு, உண்டாட்டு, புலவி, கலவி என்றிவற்றைப் புகழ்தலும், மந்திரம், தூது, செலவு, போர் வென்றி என்பவற்றைக் கூறலுமாகிய இவை, தொடர் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பகுதிகளையுடையதாய் இயற்றப்படுவது பெருங்காப்பியமாகும்.*

**பெருமகிழ்ச்சிமாலை**

*பெண்களுடைய அழகு, குணம், ஆக்கம், சிறப்பு, முதலியவைகளைக் கூறுவது பெரு மகிழ்ச்சியாகும்.*

**பெருமங்கலம்**

நாள்தோறுந் தான் மேற்கொள்ளுகின்ற சிறை செய்தல் முதலிய செற்றங்களைக் கை விட்டுச் சிறைவிடுதல் முதலிய சிறந்த தொழில்கள் பிறந்ததற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.

**பொதுச்சீர்**

நான்கு அசைகளால் ஆவது பொதுச்சீராகும். இச்சீரைப் புலவர்கள் அதிகம் கையாள்வது இல்லை. இச்சீர் தேமாந் தண்ணிழல், புளிமாந்தண்ணிழல், கருவிளந்தண்ணிழல், கூவிளந் தண்ணிழல், தேமா நறுநிழல், புளிமா நறுநிழல், கருவிள நறுநிழல், கூவிள நறுநிழல், தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ, கருவிளந் தண்பூ, கூவிளந்தண்பூ, தேமா நறும்பூ, புளிமா நறும்பூ, கருவிள நறும்பூ, கூவிள நறும்பூ என்ற வாய்பாடுகளால் அழைக்கப் பெறும். இச்சீர் பதினாறனுள் நேரசையை இறுதியிலுடைய பொதுச்சீர் எட்டும் வெண்பாவிற்குரிய காய்ச்சீர் போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்டளை யாகவும், ஒன்றாதது கலித்தளையாகவுங் கொள்ளப்படும். நிரையசையை இறுதியில் பெற்ற பொதுச்சீர் எட்டும் வஞ்சிச்சீர் போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளை என்று கொள்ளப்படும்.

**எடு:-**

“பைம்பொற் குன்றே பணையிளவன முலை
அம்புத்துணையே யரிமதருண்கண்
குனிசிலையிரண்டே கொடுநன்புருவம்
பானிறமதியே பழிதீர் நன்முகம்
கொடியேதளிரிடை கொண்மூவேகுழல்
ஆடரவின்பட மாமேகடிதடம்
காந்தளந்துணைமல ரவையேகையும்
பூந்தளிரன்றே புடைபெயர்மெல்லடி
நண்பா
படர்புகழ் மாறன் பராங்குசன்
துடரிவண் பொழிலே தோகைய திடனே.”

**பொதுப் பாயிரத்தின் இலக்கணம்**

நூலினது வரலாறு, ஆசிரியனது வரலாறு. அவ்வாசிரியன் மாணாக்கனுக்கு நூலைச் சொல்லும் வரலாறு. மாணாக்கன்

வரலாறு, அம்மாணாக்கன் பாடங்கேட்கும் வரலாறு ஆகிய ஐந்தையுங் கூறுவது பொதுப் பாயிரமாகும்.

**பொழிப்பு அளபெடை**

அடியின் முதல்சீர் மூன்றாம் சீர் ஆகிய இருசீர்களிலுள்ள எழுத்து அளபெடுத்து நிற்பது பொழிப்பு அளபெடையாகும்.

எடு:- "பூஉக் குவளைப் போஓ தருந்திக்."

**பொழிப்பு இயைபு**

அளவடியின் நான்காம்சீர் இரண்டாம்சீர் ஆகிய சீர்களின் ஈற்றெழுத்து அல்லது சொல் ஒன்றி நிற்றல் பொழிப்பு இயைபாகும்.

எடு:- "மற்றத னயலே முத்துறழ் மணலே."

**பொழிப்பு எதுகை**

செய்யுளின் முதல்சீரின் இரண்டாவது எழுத்தும் மூன்றாம் சீரின் இரண்டாவது எழுத்தும் ஒன்றி வரத் தொடுப்பது பொழிப்பு எதுகையாகும்.

எடு:- "பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி."

**பொழிப்புமுரண்**

அளவடியின் முதல்சீர் மூன்றாம் சீர் ஆகிய இருசீர்களின் சொற்கள் முரணி நிற்குமாறு தொடுப்பது பொழிப்பு முரணாகும்.

எ.க:- "சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கி"

**பொழிப்புமோனை**

அளவடியின் முதல் சீர் மூன்றாம் சீர் ஆகிய இருசீர்களிலும் மோனை அமையத் தொடுப்பது பொழிப்பு மோனையாகும்.

எ.டு:- "அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி."

**போர்க் கெழுவஞ்சி**

பகைவர் மேல் போர் குறித்துச் செல்லுகின்ற வெற்றி வேந்தர்கள் வஞ்சிப் பூமாலை சூடப் புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை ஆசிரியப் பாவாற் கூறுவது போர்க்கெழுவஞ்சியாகும்.

**மங்கலச் சொற்கள்**

க, கா, கி, கீ, சொ, சோ, ந, நா, நி, நீ, யா, வ, வா, வி, வீ என்னும் எழுத்துக்களை முதலாகவுடைய பெயர்களுக்குச் சீர் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

நு, நூ, யூ என்னும் பெயர்களுக்கு எழுத்து என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

கு, கூ, சௌ, து, தூ, தெ, தே, நெ, நே, பு, பூ, மெ, மே, மொ, மோ, மௌ என்னும் பெயர்களுக்குப் பொன் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

கௌ, சை, ம, மா, மி, மீ, மு, மூ வை வௌ என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்டு தொடங்கும் பெயர்கட்குப் பூ என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

கொ, கோ என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட பெயர்களுக்குத் திரு என்பதை யேனும் திங்கள் என்பதை யேனும் மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

கெ, கே என்னும் எழுத்துக்களை முதலாக வுடைய பெயர் கட்கு மணி என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

கை, சி, சீ, தீ, தை, நொ, நோ, பை என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட பெயர்களுக்கு நீர் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

ஔ, சு, சூ, செ, சே, தௌ என்னும் எழுத்துக்களை, முதலாகக் கொண்டு வரும் பெயர்களுக்குச் சொல் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

அ, ஆ, ஒ, ஓ, த, தா, தொ, தோ, யோ என்னும் எழுத்துக் களை முதலாகக் கொண்ட பெயர்கட்குக் கங்கையென்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

ஞெ, ஞொ என்ற எழுத்துக்களை முதலாகக் கொண்ட பெயர்கட்கு வாரணம் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

இ, ஈ, ஞா என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட பெயர்கட்குக் குஞ்சரம் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

ப, பா என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட பெயர்கட்கு உலகம் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

ச, சா, பெ, பே, பொ, போ, வெ, வே என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட பெயர்கட்குப் பார் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும்.

உ, ஊ, எ, ஏ, ஐ, நை, மை என்னும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட பெயர்க்குத் தேர் என்பதை மங்கலச் சொல்லாக எடுக்க வேண்டும். மேற்கூறிய மங்கலச் சொற்களின் வேறு பெயர்கள் வரினும் குற்றமன்று. (கணியமாம் சோதிடம் புகுந்து விளையாடிய போலி விளையாட்டின் விளைவுகள் இன்னவை.)

**மங்கலப் பொருத்தம்**

திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம் இவைகளும் இவைகளின் பொருள் தரும் பிற பொருள்களும் மங்கலச் சொற்களாக வருதலுக்கு ஏற்றனவாம்.

**மங்கலவெள்ளை**

உயர்குலத்தில் பிறந்த இளம் பெண்ணை வெண்பா ஒன்ப தாலும் வகுப்பு ஒன்பதாலும் பாடுவது மங்கல வெள்ளையாகும்.

**மதுரகவி**

தொடையுந் தொடைவிகற்பமுஞ் செறியச் சொற்சுவையும் பொருட்சுவையும் விளங்க உருவக அணி முதலிய அணிகளோடு இனிமை துதையச் செய்யுளியற்றுவோன் மதுரகவி என்று பெயர் பெறுவான். (இன்பாவலர்)

**மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா**

கலியுறுப்பில் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும், கலியுள் வாரா என்ற நேரீற்று இயற்சீரும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும், ஐஞ்சீர் அடியும் வந்து, ஒத்தாழிசைக் கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவனவெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவாகும்.

**மருட்பா**

புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவி யறிவுறூஉ என்னும் நான்கு பொருள் மேலும் வெண்பா முதலாக ஆசிரியப்பா ஈறாக வருவன மருட்பாவாம். அவற்றுள், கைக்கிளை மருட்பாவின் ஈற்றில் வரும் ஆசிரியம் இரண்டே யடியினதாய் அவ்விரண்டடியுள்ளும் ஈற்றயலடி முச்சீரதாய் வரும். மருட்பாவில் வெண்பாவடியும் ஆசிரியவடியும் அளவொத்து நடப்பது சம நிலை மருட்பாவாகும். வெண்பாவடி மிகுந்து ஆசிரியவடி குறைந்து வருவனவும், ஆசிரியவடி மிகுந்து வெண்பாவடி குறைந்து வருவனவும் வியனிலை மருட்பாகும்.

மருள்=மயக்கம், ஒருபாவகையுடன் மற்றொரு பாவகை சேர்தல்.

**மாணாக்கர் இலக்கணம்**

ஆசிரியன் தன் மகனுக்கும், தன்னாசிரியன் மகனுக்கும். அரசன் மகனுக்கும், பொருளை மிகுதியாகக் கொடுப்பவனுக்கும், வழிபாடு செய்வோனுக்கும் தன்னாற் கற்பிக்கப்பட்ட உரையை விரைவில் கற்கும் அறிவுடையோனுக்கும் நூல் கற்பித்தல் முறையாகும் என்பது நன்னூல்.

**மாணாக்கராகாதவரிலக் கணம்**

கள்ளுண்டு களிப்பவன், சோம்பேறி, மானமுடையோன், காமமுடையவன், திருடன், நோயாளி, அறிவில்லாதவன், பிணக்கன், கோபமுடையவன், மிகுதியாகத் தூங்குவோன், அறிவுக் கூர்மை இல்லாதவன், பழைய நூல்களைக் கண்டு அஞ்சுபவன், அஞ்சத்தக்கவைகளைக் கண்டு அஞ்சாதவன், பாவஞ் செய்வோன், பொய்பேசுவோன் ஆகியவர்கட்கு ஆசிரியர் நூலைக் கற்பிக்க மாட்டார். இதுவும் நன்னூல் சரக்கே.

**மாணாக்கர் பாடங் கேட்கும் முறை**

பாடங்கேட்கும் மாணவன் பள்ளிக்குக் குறித்த காலத்தில் செல்லுதல் வேண்டும். ஆசிரியனை வழிபடுதல் வேண்டும். ஆசிரியன் குணத்தையறிந்து, அவன் குறிப்பின் வழியே சென்று அவன் 'அமர்க' என்று கூறிய பின்பு அமர்ந்து படியென்று கூறிய பிறகு படித்தல் வேண்டும். பசித்துண்பவனுக்கு உணவிடத்துள்ள அவாப் போலப் பாடங்கேட்டலிற் ஆசையுடையனாகிச் சித்திரப் பாவைபோல அவ்வசைவறு குணத்தினோடு அடங்கிக் காதானது வாயாகவும் மனமானது கொள்ளுமிடமாகவும் முன் கேட்கப் பட்டவற்றை மீண்டுங் கேட்டு அப்பொருள்களை மறந்து விடாது உள்ளத்தின் கண் நிறைத்துக் கொண்டு ஆசிரியரிடம் விடை பெற்றுச் செல்லுதல் வேண்டும்.

**முதுகாஞ்சி**

இளமை கழிந்து அறிவு மிகுந்தவர்கள், இளமை கழியாதவர்களும் அறிவு நிரம்பப் பெறாதவர்களுமாகிய சிறுவர்கட்கு அறிவு கூறுங் கூற்றாகப் பாடுவது முதுகாஞ்சியாகும்.

**முற்று அளபெடை**

அளவடியின் எல்லாச்சீர்களும் அளபெடுத்து நிற்குமாறு தொடுப்பது முற்று அளபெடையாகும்.

எ.டு:- "ஆஅ னாஅ நீஇ ணீஇர்"

**முற்று இயைபு**

அளவடியின் எல்லாச் சீர்களிலும் இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்று இயைபாகும்.

எடு:- "புயலே குழலே மயிலே யியலே"

**முற்று எதுகை**

அளவடியின் எல்லாச்சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்று எதுகையாகும்.

எ.டு:- "கன்னியம் புன்னை யின்நிழல் துன்னிய"

**முற்றுமுரண்**

அளவடியின் எல்லாச் சீர்களும் சொல்லும் பொருளும் முரண்படத் தொடுப்பது முற்று முரண் தொடையாகும்.

எ.டு:- "துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியாது."

**முற்றுமோனை**

அளவடியின் சீர் தோறும் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது முற்றுமோனையாகும்.

எடு:- "அயில்வே லனுக்கிய யம்பலைத் தமர்ந்த."

**மெய்க்கீர்த்திமாலை**

சொற்சீரடி யென்னுங் கட்டுரைச் செய்யுளால் குலமுறையிற் செய்த சீரிய நிகழ்ச்சிகளைக் கூறுவது மெய்க்கீர்த்தி மாலையாகும்.

**மும்மணிக் கோவை**

ஆசிரியப் பாவும், வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் முறை முறையே மாறி மாறி வர அந்தாதித் தொடையமைய முப்பது பாடல்கள் பாடுவது மும்மணிக் கோவையாகும்.

**மும்மணிமாலை**

வெண்பாவுங் கலித்துறையும் அகவலும் அந்தாதியாக முப்பது பாடுவது மும்மணிமாலையாகும்.

**மேற்கதுவாய் அளபெடை**

அளவடியின் இரண்டாம் சீர் தவிர மற்ற சீர்களில் எழுத்து அளபெடுத்தல் மேற்கதுவாய் அளபெடையாம்.

எ.டு:- "தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல்."

**மேற்கதுவாய் இயைபு**

*அளவடியின் நான்காம் சீர், இரண்டாம் சீர், முதல்சீர் களில் உள்ள சொல்லோ எழுத்தோ ஒன்றி வருதல் மேற்கதுவாய் இயைபு.*

*எ.டு:- "வல்லே நுதலே வேற்கண் கயலே."*

**மேற்கதுவாய் எதுகை**

*அளவடியின் முதல்சீர், மூன்றாஞ்சீர், நான்காம்சீர் ஆகிய சீர்களிலுள்ள இரண்டாம் எழுத்து ஒன்றிவருதல் மேற்கதுவாய் எதுகை.*

*எ.டு:- "என்னையு மிடுக்கண் துன்னுவித் தின்னடை."*

**மேற்கதுவாய் மோனை**

*அளவடியின் முதல் சீர், மூன்றாம் சீர், நான்காம் சீர் ஆகிய சீர்களில் முதலெழுத்து ஒன்றிவருதல் மேற்கதுவாய் மோனை யாகும்.*

*எ.டு:- "அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்."*

**மேற்கதுவாய் முரண்**

*அளவடியின் இரண்டாம் சீரில் உள்ள சொல்லைத் தவிர, மற்றைச் சீர்களில் உள்ள சொற்கள் முரணி நிற்றல் மேற்கதுவாய் முரண்.*

*எ.டு:- "வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்."*

**வசந்தமாலை**

*தென்றலை வருணித்துப் பாடுவது வசந்த மாலையாகும்.*

**வஞ்சித்தளை**

*நிரையசையை இறுதியிலுடைய மூவகைச்சீர் கனிச் சீராகும். இச்சீர் வஞ்சிப் பாவிற்குரியது. இச்சீரை வஞ்சியுரிச்சீர் என்றும், கனிச்சீர் என்றுங் கூறுவர். இக்கனிச்சீர் நிலைச்சீராயின் வருஞ்சீர் முதல் எதுவாயினும் வஞ்சித்தளை அமைந்துவிடும். அஃதாவது கனிமுன் நேர்வந்தால் நேரொன்றிய வஞ்சித்தளை கனிமுன் நிரை வந்தால் நிரையொன்றிய வஞ்சித்தளையாகும்.*

எ.டு:- மழை முகிலென குழல்விரிதரு - கனிமுன் நிரை. நிரையொன்றிய வஞ்சித்தளை.

கலைவீழ்தரு நன்மடவார் - கனிமுன்நேர். நிரை ஒன்றா வஞ்சித்தளை.

**வஞ்சித்தாழிசை**

*இருசீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒருபொருள் மேல் அடுக்கிவருவன வஞ்சித்தாழிசையாகும். இனி, இரு சீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருண்மேல் அடிமறியாய் வருவனவற்றை வஞ்சி மண்டிலத்தாழிசை என்றுங் கூறுவர்.*

**எ.டு:-**

"இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையால் வெயின் மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்;
மடப்பிடியை மதவேழந்
தடக் கையால் வெயின் மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனே காண்;
பேடையை யிரும்போத்துத்
தோகையால் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
யோடுமென் மனனே காண்"

*இவை ஒரு பொருண்மேல் மூன்று அடுக்கி வந்த வஞ்சி நிலைத்தாழிசை.*

**வஞ்சித்துறை**

*இருசீர் அடி நான்காய் ஒரு பொருண்மேல் தனித்து வருவது வஞ்சித் துறையாகும். இனிசீர் அடி நான்காய் ஒரு பொருண்மேல் தனித்து அடிமறியாய் வருவனவற்றை வஞ்சி மண்டிலத்துறை என்றுங் கூறுவர்.*

**எ.டு:-**

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தன காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்"

*இஃது வஞ்சித்துறை.*

"முல்லைவாய் முறுவலித்தன
கொல்லைவாய்க் குருந்தீன்றன

மல்லல்வான் மழைமுழங்கின
செல்வர்தேர் வரவுகாண்குமே"

*இஃது ஒரு பொருண்மே லொன்றாய் அடிமறியாய் வந்த வஞ்சி மண்டிலத்துறை.*

**வஞ்சிவிருத்தம்**

*முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாகும்.*

*இனி முச்சீரடி நான்காய் அடிமறியாகாதே வருவனவற்றை வஞ்சி நிலை விருத்தம் என்றும், அடிமறியாய் வருவனவற்றை வஞ்சி மண்டில விருத்த மென்றுங் கூறுவர்.*

**எ.டு:-**

"கள்ள மாய வாழ்வெலாம்
விள்ள ஞானம் வீசுதாள்
வள்ளல் வாழி கேளனோ
வுள்ள வாறு ணர்த்தினான்."

"சொல்வ லோம்புமின் றோநனி
செல்ல லோம்புமின் றீநெறி
கல்ல லோம்புமின் கைதவம்
மல்லன் ஞாலத்து மாந்தர்காள்"

*இஃது அடிமறியாய் வந்தமையால் வஞ்சி மண்டில விருத்த மாயிற்று.*

**வஞ்சிப்பாவின் இலக்கணம்**

*ஒன்றிய வஞ்சித்தளை ஒன்றா வஞ்சித்தளை ஆகிய தளை களைப் பெற்று, வேற்றுத் தளைகளும் விரவி வர, தேமாங்கனி, முதலிய நால்வகைக் கனிச்சீர்களோடு நிரையசையை இறுதியிலே யுடைய நாலசைச் சீர்களும் அமைய, குறளடி, சிந்தடி ஆகிய இருவகை அடிகளையும் உடையதாய், தனிச் சொல் பெற்று ஏந்திசைத் தூங்கல், அகவற்றூங்கல், பிரிந்திசைத் தூங்கல் ஆகிய ஓசைகளுள் ஒன்றைப் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தால் முடிவது வஞ்சிப்பாவாகும். இப்பா குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என இருவகைப்படும். ஒன்றிய வஞ்சித் தளையால் அமையும் வஞ்சிப்பா ஏந்திசைத் தூங்கலோசையைப் பெறும். ஒன்றாத வஞ்சித்தளையால் அமையும்பா அகவற்றூங்கலோசையைப் பெறும். இருவகைத் தளைகளோடும் பிறதளைகளும்*

விரவிவரின் பிரிந்திசைத் தூங்கலோசையைப் பெறும். இப்பா மூன்றடியைச் சிற்றெல்லையாகவும் அதற்கு மேற்பட்ட பலவடி களைப் பேரெல்லையாகவுங் கொண்டு அமையும்.

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா**

அம்போதரங்க உறுப்பிற்குந் தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப் பெற்றுத் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பால் நடைபெறுவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். விண்ணோர் உயர்வையும் அரசரது பெருமைகளையும் வண்ணித்துக் கூறுதலாலும், வேறொரு வண்ணத்தால் சொல்லப் பட்ட முடுகியலடி யுடைத் தாகலானும் இப்பாவிற்கு வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா என்று பெயர்வந்தது

**வரலாற்று வஞ்சி**

குல முறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையும் கீர்த்தியையும் வஞ்சிப் பாவாற் கூறுவது வரலாற்று வஞ்சி யென்று வழங்கப் பெறும்.

**வருக்கக் கோவை**

அகர முதலிய எழுத்து வருக்கம் ஒவ்வொரு செய்யுளிலும் அகர முறைப்படி அமையப் பாடுவது வருக்கக் கோவையாகும்.

**வருக்கமாலை**

மொழிக்கு முதலாகும் வருக்க வெழுத்தினுக்கு ஒவ்வொரு செய்யுள் பாடுவது வருக்கமாலையாகும்.

**வளமடல்**

அறம், பொருள், இன்பமாகிய பயனை யிழந்து, மங்கையர் காம வின்பத்தைப் பயனெனக் கொண்டு, பாட்டுடைத் தலை மகன் இயற்பெயருக்குத் தக்கதை எதுகையாக நாட்டிக் கூறி, அவ் வெதுகைப் படத் தனிச் சொல்லில்லாமல் இன்னிசைக் கலிவெண்பாவால் தலைமகன் இரந்து குறைபெறாது மடலேறுவதாய் ஈரடி யெதுகையாக வரப்பாடுவது வளமடல் என்னும் நூலாகும்.

**வாகைமாலை**

பகை வரை வென்று புகழ் படைத்து வாகைப் பூமாலை சூடுவதை யாசிரியப் பாவாற் கூறுவது வாகைமாலையாகும்.

**வாக்கி**

*(நாவலன்) அறம் பொருள் இன்பம் வீடென்பன தம்மில் கலக்காமல் கேட்டோர் விரும்ப இலக்கணத்தையாவது இலக்கியத்தை யாவது செஞ்சொல்லால் விளங்கச் சொல்லுபவன் வாக்கியெனப் பெறுவான்.*

**வாதி**

*(தருக்கி) எடுத்துக்கொண்ட பொருளுக்குப் பொருந்திய மேற்கோளும் காரணமும் அவற்றிற்குப் பொருந்திய எடுத்துக் காட்டும் சொல்லி முடிக்க வல்லவன் வாதியெனப் பெறுவான்.*

**வாதோரணமஞ்சரி**

*யானையை வழிப்படுத்தி அடக்கினவருக்கும் எதிர்த்த யானையை வெட்டி யடக்கியவருக்கும் பற்றிப் பிடித்துச் சேர்த்த வருக்கும் வீரத்தன்மையின் சிறப்பை வஞ்சிப் பாவாற் பாடுவது வாதோரணமஞ்சரியாகும்.*

**வாயுறை வாழ்த்து**

*வேம்புங் கடுவும் போல்வன வாகிய வெஞ்சொற்கள் முன்னர்த் தாங்கக் கூடாவாயினும், பின்னர்ப் பயன்றருமென மெய்ப்பொருளூற மருட்பாவாற் கூறுவது வாயுறை வாழ்த்தெனப் பெயர் பெறும்.*

**வாழ்த்துக்குரிய பாக்கள்**

*கடவுள், முனிவர், ஆன், ஆசிரியர், அரசன், மழை, நாடு ஆகியவற்றை நால்வகைப் பாக்களாலும் வாழ்த்துதல் முறையாம்.*

**வித்தாரக் கவி**

*விரிவுக்கவி மறம் கலிவெண்பா மடலூர்தல் இயல்இசை, பாசண்டத் துறை, பன்மணி மாலை முதலிய பலவாக மிகவும் விரித்துப் பாடுவோன் வித்தாரகவி என்னுஞ்சிறப்புப் பெயர் பெறுவான்.*

**விருத்த விலக்கணம்**

*வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், குடை, இவ்வொன்பதையும் பத்துப்பத்து அகவல் விருத்தத்தால் ஒன்பது வகையாகப் பாடுவது விருத்தவிலக்கணமாகும். (விருத் தப்பா-மண்டலிப்பா.)*

**விளக்குநிலை**

*வேலும் வேற்றலையும் வேறுபடா தோங்கியவாறு போலக் கோலொடு விளக்கு மொன்று பட்டோங்குமா றோங்குவதாகப் பாடுவது விளக்கு நிலையாகும்.*

**வெண்கலிப்பா**

*கலிப்பாவின் உறுப்புக்களாகிய தாழிசை அராகம் அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம்முதலியவைகளைப் பெறாமல் தரவு ஒன்றையே பெற்று வெண்பாவைப் போல் ஈற்றடி சிந்தடியாகவும், ஏனையடி அளவடியாகவும், அமைய கலித்தளைகளை மிகுதியாகப் பெற்று, துள்ளலோசை குறை யாமல் வேற்றுத்தளைகளும் கலந்துவர, நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளுள் ஒன்றினை இறுதியில் பெற்று, துள்ள லோசை யுடைத்தாய் அமைவது வெண்கலிப்பாவாகும். இப்பா நான்கடிகள் முதல் பலவடிகளைப் பெற்று நடக்கும்.*

**எ.டு:-**

“வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையால் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரத்த
தொன்மைசால் மிகுகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.”

*இது தன் தளையானும் துள்ள லோசையானும் வந்த வெண்கலிப்பா.*

“ஏர்மலர் நறுங்கோதை யெடுத்தலைப்ப விறைஞ்சித்தண்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
தார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து.”

*இது ஆசிரியத்தளையானும் தன் தளையானும் வந்த வெண்கலிப்பா.*

**வெட்சிமாலை**

*மாவீரன் பகைவரூர்க்குப்போய்ப் பசு நிரை கவர்ந்து வருவதை மிகுத்துக் கூறுவது வெட்சிமாலையாகும்.*

**வெண்டளை**

*நிலைச்சீர் காய்ச்சீராக விருந்து வருஞ்சீரின் முதலசை நேரசையாயிருந்தால் வெண்டளையாகும். அஃதாவது காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளையாகும். இது வெண்பா விற்குரிய தளையாம்.*

**வெண்பாவின் பொது இலக்கணம்**

*வெண்பாவில் ஈற்றடி மூன்று சீர்களாகவும், ஏனையடி நான்கு சீர்களாகவும் அமைய, இயற்சீர், காய்ச்சீர்களும் வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளைகளும் விரவிவர, ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளுள் ஒன்றை ஏற்றுச் செப்பலோசை உடையதாய் அமைவதே வெண்பாவாகும்.*

**வெண்டாழிசை**

*மூன்று அடிகளை உடையதாய், ஈற்றடி சிந்தடியாகவும் ஏனையடி அளவடியாகவும் அமைய, இயற்சீர் காய்ச்சீர்களும், இயற்சீர்வெண்டளை வெண்சீர் வெண்டளைகளும் விரவி வர, ஈற்றடியின் இறுதிச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய் பாடுகளுள் ஒன்றினைப் பெற்று, செப்பலோசையுடைத்தாய், ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் ஒருபொருள்மேல் மூன்று அடுக்கி வருவது வெண்டாழிசை யாகும். இதனை வெள்ளொத்தாழிசை என்றுங்கூறுவர்.*

**எடு:-**

"அன்னா யறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுலம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்.
ஏடி யறங்கொல் நலங்கிளர் சேட் சென்னி
கூடா ருடைபுலம்போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்.
பாவா யறங்கொல் நலங்கவர் சேட்சென்னி
மேவா ருடைபுலம்போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்."

**வெண்டுறை**

*மூன்றடிகளைச் சிற்றெல்லையாகவும், ஏழடிகளைப் பேரெல்லை யாகவுங் கொண்டு, இடையிடை நான்கடியாயினும்,*

*ஐந்தடியாயினும், ஆறு அடியாயினும் வந்து ஈற்றயல் அடியும், ஈற்றயல் அடிகளும் ஒரு சீரோ, பல சீர்களோ குறைந்தும், அளவடி, நெடிலடி, கழிநெடிலடிகளாலும் அமைந்து நடப்பது வெண்டுறையின் இலக்கணம். இதன் எல்லாவடிகளும் ஒத்த ஓசையுடன் வரின் ஓரொலி வெண்டுறை என்றும், முன்னர்ச் சிலவடிகள் ஓரோசையுடனும், பின்னர்ச் சிலவடிகள் வேறு ஓசையுடனும் நடக்குமாயின் வேற்றொலி வெண்டுறை என்றும் வழங்குவர். இச் செய்யுள் மூன்றடிகளை உடையதாயின் சிந்தியல் வெண்பாவிற்கும், நான்கடிகளை உடையதாயின் நேரிசை இன்னிசை வெண்பாக்களுக்கும், ஐந்தடி முதல் ஏழடிவரை உடையதாயின் பஃறொடை வெண்பாவிற்கும் இனமாகக் கொள்வர்.*

**எ.டு:-**

"தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னாம்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்ந்துவிழும் பிளிற்றியாங் கேபோலும்."

**வெளிவிருத்தம்**

*மூன்று அல்லது நான்கு அடிகளைக் கொண்டு ஒவ்வோர் அடியின் ஈற்றிலும் ஒரு சொல்லையே தனிச் சொல்லாகப் பெற்று, எல்லாச் சீர்களும் எல்லாத் தளைகளும் விரவி வர, பாவின் அடியளவும் சீரின் தன்மையும் ஒத்ததாய் அமைய, நான்கு அடிகளும் ஒரெதுகை அமைந்து நடப்பதும், முதலிரண்டு அடிகளும் ஓரெதுகையாகவும், பின்னிரண்டு அடிகளும் ஓரெதுகை யாகவும் அமைந்து நடப்பதும் வெளிவிருத்தமாகும். பாவின் அடியளவு ஒத்து நடத்தலாவது-பாவின் முதலடி சிந்தடியாயின் மற்றைய அடி சிந்தடியாகவும், அளவடியாயின் அளவடியாகவும், நெடிலடியாயின் நெடிலடியாகவும், கழி நெடிலடியாயின் கழி நெடிலடியாகவும் அமைவதாம். சீரின் தன்மை ஒத்தலாவது-முதலடியில் மாச்சீர் நின்ற விடத்தில் மற்ற அடிகளிலும் மாச்சீரும், விளச்சீர் நின்ற விடத்தில் விளச்சீரும், காய்ச்சீர் நின்றவிடத்தில் காய்ச்சீரும் கனிச்சீர் நின்ற விடத்தில் கனிச்சீரும் நிற்பதாம்.*

**எடு:-**

"ஏதங்க ணீங்க வெழிலிளம் பிண்டிக்கீழ்-புறாவே
வேதங்க ணான்கும் விரித்தான் விரைமலர்மேல்-புறாவே
பாதம் பணிந்து பரவுதும் பல்காலும்-புறாவே."

**வெற்றிக் கரந்தை மஞ்சரி**

*பகைவர் கொண்ட நிரை மீட்போர் கரந்தைப் பூமாலையைச் சூடிக் கொண்டு போய் மீட்டதைப் பாடுவது வெற்றிக் கரந்தை மஞ்சரியாகும்.*

**வேனின் மாலை**

*வேனிலையும், முதிர்வேனிலையும் சிறப்பித்துப் பாடுவது வேனின் மாலையாகும்.*

* * *

# 5. அணி

**அக்கரச் சுதகம்**

*ஒரு பொருளைத் தருவதொரு தொடர்மொழியாய்த் தொன்று தொட்டு வருவதைப் புலவன் ஒவ்வோரெழுத்தாகக் குறைத்துக் கூறும் கூறுபாட்டால் தொடர் சொல் ஈரெழுத்துப் பதமும் ஓரெழுத்துப் பதமுமாகச் சுருக்க மெய்திப் பலபொருள் தோன்றுவதாய் வரத் தொடுப்பது அக்கரச் சுதகமாம்.*

"ஒளி கொண்ட புத்தூருறை கோதை தீந்தேன்
றுளி கொண்ட பூந்துளபத்தோன்றலற்கீந்த
தளிகொண்டதையணிந்ததன்றதனைப் பற்றல்
களிவண்டிமிர் தேங்கமழ் **வாசிகை சிகை கை.**"

*(இ.ள்) புகழைப் பெற்று திருவில்லிப்புத்தூருறையுங் கோதை சூடிக் கொடுத்தாள், இனிய தேன் துளிக்குஞ் செய்கையைக் கைக் கொண்ட பூவோடு கூடிய துளவ மாலிகையையுடைய பெரியோனுக் களித்ததுவுமதனைச் சூடியதும் (திருப்புகழ்) அதனைப் பற்றியதும் புலவீர்கள்! கூறுங்காலத்துத் தேனையுண்டு மகிழ்தலையுடைய வண்டுகள் முரலும் வாசிகை சிகை கையாம்.*

***வாசிகை***-*மாலை,* ***சிகை*** *- திருக்குழற்கற்றை.* ***கை*** *- திருக்கை.*

**அக்கரவர்த்தனம்**

*இருபது வகையான சித்திரக் கவிகளுள் ஒன்று. அஃது ஓரெழுத்தானொரு மொழியாய்ப் பொருட் பயந்து ஓரெழுத் தேற்றுப் பிறிதொரு மொழியாய்ப் பொருட்பயந்து, அவ்வாறு முறையானே ஏற்றவேற்ற வேறு வேறு மொழியாய்ப் பொருட் பயந்து வரப் பாடுவதாம்.*

**அக்கரவருத்தனை**

*ஒரு பொருள் தருகின்ற ஒரு தொடர் மொழியின் இறுதியில் ஓரெழுத்தினைப் பிரித்துப் பிறிதொரு பொருள்தர வைத்து அதன் மேல் ஒரோவெழுத்தாகப் பல பொருள் தோன்ற வைப்பது அக்கரவருத்தனையாகும்.*

**எடு :-**

எந்தை திருத்தா ளெழுகங்கை யீறுமா
விந்தமல ராட்கிசைந்த வீறினுக்கு - முந்தெழுத்துஞ்
சித்தசனன் வாண்முதலுஞ் சேயிழையாய் சேர்த்தக்கா
லத்தமெழி லோலைப் பூ வாம்.

**அகமகிழ்ச்சியணி**

*ஒன்றன்குணத்தினாலாவது, குற்றத்தினாலாவது, மற்றொன்றுக்குக் குணமாவது, குற்றமாவது உண்டாதலைச் சொல்லுவது. இஃது அகமலர்ச்சியணி. உல்லாச அலங்காரம் எனவுங் கூறப்பெறும்.*

**அச்சச்சுவை**

*சுவையலங்கார வகைகளுள் ஒன்று அது அச்சமென்னும் மெய்ப்பாட்டால் நெஞ்சில் நிகழுந் தன்மைகள் புறத்துப் புலனாய் விளங்குமாறு பாடுவது.*

**அடுக்கணி**

*சிறப்பை வெளிப்படுத்தவும். அன்பு, துன்பம், மகிழ்ச்சி ஆகியவற்றை மிக்கதெனத் தோற்றும் ஒரு பொருளைத்தரும் பல திரிசொற்களை அடுக்கித் தொடுப்பது அடுக்கணியாகும்.*

**எடு :-**

"என்னுயிர் காத்துப் புரந்தாண்ட வென்னிறைவன்
தன்னுயிர் பட்டிறந்து சாய்ந்தொழிந்தான் - பின்னுயிராய்
மீண்டென்னைக் காத்தோம்ப மேவிப் புரந்தளிப்ப
யாண்டையும் யார்யா யெனக்கு"

*இதில் துன்பத்தின் மிகுதியைக் காட்டப் பலதிரி சொல் அடுக்கி வந்தவாறு காண்க.*

**அதிசயவணி**

*கவிஞன்தான் கருதிய பொருளினது அழகை உவந்து சொல்லுங்கால். உலக நடையிறவாத தன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்புறச் சொல்லுவது அதிசயம் என்னும் அணியாம். அவ்வணி பொருளதிசயம், குணவதிசயம், தொழிலதிசயம், ஐயவதிசயம், துணிவதிசயம், திரிபதிசயம் இடவதிசயம், சினையதிசயம் காலவதிசயம் என்று ஒன்பது வகைப்படும்.*

**எடு :-**

பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா - தொண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.

*(நெருப்பு - இடி.)*

**அநியம வுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. நியமித்த வுவமையை விலக்கிப் பிறிதோர் உவமை புணர்த்துக் கூறுவது அநியமவுவமை யாம்.*

**எடு :-**

"கௌவை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு
மௌவல் கமழுங் குழன்மடவாய் - செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி
அதுபோல்வ துண்டெனினு மாம்"

**அநேகாங்க வுருவகம்**

*இது உருவக அணிவகைகளுள் ஒன்று. ஒரு பொருளின் உறுப்புக்கள் பலவற்றையும் உருவகஞ்செய்து உரைப்பது அநேகாங்க வுருவகமாகும்.*

**எடு :-**

"கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென்று
மைத்தடஞ்சேண் மைந்தர் மனங்கலங்க - வைத்ததோர்
மின்னுளதான் மேக மிகையுளதான் மற்றதுவும்
என்னுளதா நண்பா வினி"

**அந்தாதி**

*ஓரடியின் அல்லது ஒரு செய்யுளின் ஈற்றில் வருஞ்சொல் அடுத்த அடியின் அல்லது அடுத்த செய்யுளின் முதலில்வரத் தொடுப்பது அந்தாதியாகும். அந்தம் ஆதியென்பது, அந்தாதி யென்றாயது; அந்தம்-ஈறு; ஆதி-முதல்; அந்தமே முதலில் வருவது என்பது இதன் பொருள்.*

**அந்தாதி மடக்கு**

*அடிதோறும் வரும் இறுதிச் சொல்லை யதன் மேல் வருமடிக்கு ஆதியாக (முதலாக) வரத் தொடுப்பது அந்தாதி மடக்காகும்.*

**எடு :-**

"நாக முற்றவுங்களிதர நிறாதர் கோனாக
நாக மையிரண் டொருங்கறப் பொருதமைந் நாக
நாகமூலமென்றழைத்த கார்துயிலிட நாக
நாகமொய்த்த பூம் பொழிற்றிருநாகை யென்னாகம்."

**அபாவவேது**

*ஒன்றனது இன்மையைக் கூறுவது அபாவவேதுவாகும். அதுவும் ஞாபகவேதுவின் பாற்படும். இது, என்றுமபாவம், இன்மையதபாவம், ஒன்றினொன்றபாவம், உள்ளதனபாவம், அழிவு பாட்டபாவம் என ஐந்து வகைப்படும்.*

**அயுத்தவேது**

*இதுவும் ஏதுவணியின் பாற்படும். காரணத்திற்குப் பொருத்தமில்லாத காரியம் நிகழ்வது அயுத்தவேதுவாகும். (அயுத்தம் - பொருத்தமின்மை.)*

**எடு :-**

"இகன்மதமால் யானை யநபாய னெங்கோன்
முகமதியின் மூர நிலவால் - நகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல"

*இங்கே, தாமரைகளின் மலர்ச்சியாகிய காரியத்திற்கு நிலாக் கிரணம் பொருத்தமில்லாத காரணமாதலின், தாமரை மலர்ச்சிக்குச் சூரியகிரணமே பொருத்த காரணம்.*

**அரதனமாலையணி**

*சொல்லத் தொடங்கிய பொருள்களை முன்பின் முறை வழுவாது வரச் சொல்லுதலாம். இதனை வடநூலார்* **'இரத்நாவளியலங்கார'** *மென்பர்.*

**எடு :-**

“உனதுபிர தாப முயிரிழந்த தெவ்வர்
மனைவியரா னோருறுப்பின் மண்ணும் - சினவிழியின்
நாரமுநெஞ் சிற்றீயு நாசியிற்கா லும்மறிவின்
ஆரும் வெளியுருவு மாம்”

*இதில், ஐம் பூதங்களும் முறைபிறழாமற் சொல்லப் பட்டன.*

**அவயவவுமை**

*அவயவத்தை உவமித்து அவயவியை உவமிக்காது கூறுவது அவயவவுவமை என்பதாம்.*

**எடு :-**

“மாத ரிலவிதழ்போன் மாண்பிற்றே மாதவனால்
வானோ ரருந்து மருந்து”

**அவயவியுவமை**

*அவயவியை உவமித்து அவயத்தை உவமியாது கூறுவது அவயவியுவமையாம்.*

**எடு :-**

“பொன்னங் கொடியனைய பொற்றொடிதன் றாட்சுவடு
மென்னன் புறத்தோன்று மிங்கிவைக - ளன்னங்
கடிக்கமலஞ் சேரரங்கர் கானிகராங் காளை
யடிச்சுவடு மாங்கவையே யாம்.”

**அவயவவுருவகம்**

*உறுப்புக்களை உருவகஞ்செய்து அவயவியை உருவகஞ் செய்யாது கூறுவது அவயவவுருவகமாகும்.*

**எடு :-**

“புருவச் சிலைகுனித்துக் கண்ணம்பெ னுள்ளத்
துருவத் துரந்தா ரொருவர் - அருவி
பொருங்கற் சிலம்பிற் புனையல்குற் றேர்மேல்
மருங்குற் கொடிநுடங்க வந்து”

**அவயவி வுருவகம்**

*அவயவியை உருவகஞ்செய்து உறுப்புக்களை உருவகஞ் செய்யாது வாளாவே கூறுவது அவயவியுருவகமாகும்.*

**எடு :-**

"வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய
வேரரும்பச் சேந்து விழிமதர்ப்ப - மூரல்
அளிக்குந் தெரிவை வதனாம் புயத்தால்
களிக்குந் தவமுடையேன் கண்"

**அவநுதியணி**

*சிறப்பினதூஉம். பொருளினதூஉம். குணத்தினதூஉமான உண்மையை மறுத்துப் பிறிதொன்றாக உரைப்பது அவநுதி என்னும் அணியாம். (அவநுதி - மறுத்துரைத்தல்.)*

**எடு :-**

"நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணும்
நிறையு நிலைதளரா நீர்மை- அறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து"

*இங்கே அரசனைச் சிறப்பித்தற்கண் 'செங்கோலன்' என்ற சிறப்புண்மையை மறுத்து, 'கொடுங்கோலன்' எனப் பிறிதொரு தன்மையை யேற்றிக்கூறியமை காண்க.*

**அவநுதி யுருவகம்**

*உவமேயத்தை மறுத்து உவமானத்தால் உருவகித்து உவமேயத்தைச் சிறப்பித்தல் அவநுதியுருவகமாகும்.*

*(அவநுதி - உண்மையை மறுத்தல்.)*

**எடு :-**

"பொங்களக மல்ல புயலே யிதுவிவையும்
கொங்கை யிணையல்ல கோங்கரும்பே - மங்கைநின்
மையரிக்க ணல்ல மதர்வண் டிவையி வையும்
கையல்ல காந்தண் மலர்"

*இதனுள், உண்மைப் பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளையுடன் பட்டமையான், அப்பெயர்த்தாயிற்று. மேலும்*

உண்மையாகிய அளகம் முதலியன மறுக்கப்பட்டவாறும், புயல் முதலியனவாக உருவகஞ்செய்யப்பட்டவாறும் அறிக.

**அவிரோதச்சிலேடை**

முன்னர்ச் சிலேடித்த பொருளைப் பின்னர் விரோதியாமற் சிலேடிப்பது அவிரோதச் சிலேடையாகும்.

**எடு :-**

"சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கு - மீதாம்
அனகமதி தோற்றிக் குமுத மளிக்கும்
தனத னிருநிதிக்கோன் றான்"

**அவிருத்த வுருவகம்**

இது உருவக அணி வகைகளுள் ஒன்று. ஒரு பொருட்குப் பொருந்தக்கூடியதன்மை பலவுங்கூட்டி யுருவகஞ் செய்வது அவிருத்த வுருவகமாகும்.

**எடு :-**

"ஓர்பொழுதுந் துஞ்சா தலமந் துறுதுளித்தாம்
போர்புனை வேலண்ணல் பொருட்கேகிற் - சீர்பெருகுந்
தண்ணார் பசுந்துளபத் தார்மார்பன் றஞ்சைமான்
கண்ணா கிய கார்க் கடல்."

**அழிவுபாட்டபாவம்**

இதுவும் அபாவ வேதுவின் பாற்படும். முன்புள்ளது அழிவு பட்ட தன்மையைக் கூறுவதாம்.

**எடு :-**

கழிந்த திளமை களிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கம் - சுழிந்த
கருநெறியுங் கூந்தலார் காதனோய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம்"

**அற்புதவுருவகம்**

கேட்போர் வியக்குமாறு வியப்புச் சுவை தோன்ற உருவகஞ்செய்து உரைப்பது அற்புத வுருவகமாகும்.

**எ-டு :-**

“மன்றற் குழலா ருயிர்மேன் மதன்கடவும்
தென்றற் கரிதடுக்குந் திண்கணையம் மன்றலரைக்
கங்குற் கடலிற் கரையேற்று நீள்புணையாம்
பொங்குநீர் நாடன் புயம்.”

**அற்புதவணி**

*வியப்புத் தோன்று முண்மையினால் பாடுவது அற்புதம் என்னும் அணியாம்.*

**எ-டு :-**

“உண்ணீர்மையற்றவர்க் கண்டாலவர் மன்னுயிர்க்கிரங்கிக்
கண்ணீர் பனிற்றும் புயன்மனுராமன் கைக் கொள்வதொன்றோ
வெண்ணீர்மையுற்ற நிருதரைச் சால வெறுத்தவர் மேற்
புண்ணீர் பனிற்றச்சரமாரியன்று பொழிந்ததுவே.”

**ஆர்வமொழியணி**

*உள்ளத்தில் நிகழ்ந்த ஆர்வம்பற்றி நிகழும் மொழி மிகத் தோன்றச் சொல்வது ஆர்வமொழி என்னும் அணியாம்.*

**எ-டு :-**

“சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்
புல்ல விருதோள் புடைபெயரா - மெல்ல
நினைவோ மெனினெஞ் சிடம் போதா தெம்பால்
வனைதாராய் வந்ததற்கு மாறு”

**இகழ்ச்சி விலக்கு**

*விலக்குதற்குக் காரணமாகிய பொருளை இகழ்ந்து குறிப் பினால் விலக்குவது இகழ்ச்சி விலக்கு என்னும் அணியாம்.*

**எ-டு :-**

“ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மேல்
ஆசை சிறிது மடைவிலாமல் - தேசு
வழுவா நெறியின் வருபொருண்மே லண்ணல்
எழுவா யொழிவா யினி”

**இகழ்ச்சியணி**

*ஒன்றன் குணகுற்றங்களால் மற்றொன்றற்கு அவை உள வாகாமையைச் சொல்லுவது இகழ்ச்சியென்னும் அணியாம்.*

இதனை வடநூலார் **'அவக்ஙியலங்கார'** மென்பர். இவ்வணி இரண்டு வகைப்படும். அவை குணத்தினாற் குணமுண்டாகாமை, குற்றத்தாற் குற்றமுண்டாகாமை என்பனவாம்.

**(1) குணத்தினாற் குணமுண்டாகாமை.**

"ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி"

இதில், கடலின் பெருமைக் குணத்தால் நாழிக்கு அதிக நீர் கொள்ளலாகிய குணமுண்டாகாமை கூறப்பட்டது.

**(2) குற்றத்தாற் குற்றமுண்டாகாமை**

"கமலமலர் தற்கண்டு கூம்புதலாற் காமர்
அமுதகிர ணற்கென் குறைவு"

இதில், கமலங் கூம்புதற் குற்றத்தாற் சந்திரனுக்குக் குறை வாகிய குற்றமுண்டாகாமை கூறப்பட்டது.

**இடைநிலைக் குணத்தீவகம்**

செய்யுளின் இடையில் நிற்கும் பண்புச் சொல் ஒன்று அச் செய்யுளில் பலவிடத்தும் நிற்கும் மற்றைச் சொற்களோடு சேர்ந்து பொருள் விளைவிப்பது இடைநிலைக் குணத்தீவகமாகும்.

**எடு :-**

எடுத்து நிரைகொணா வென்றலுமே வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத் - துடித்தனவே
தண்ணார மார்புந் தடந்தோளும் வேல்விழியும்
எண்ணாத மன்னர்க் கிடம்"

இதில், துடித்தன என்னும் பண்புணர்த்துஞ் சொல் மார்பு என்பது முதலியவற்றோடு சென்றியைந்து பொருள் தந்தமை காண்க.

**இடைநிலைச் சாதித்தீவகம்**

செய்யுளின் இடையில் நிற்கும் சாதியைக் குறிக்கும் ஒரு சொல் அச்செய்யுளில் பலவிடங்களிற் நிற்கும் மற்றைச் சொற் களோடு பொருந்திப் பொருள் விளைவிப்பது இடைநிலைச் சாதித்தீவகம்.

**எடு :-**

"கரமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும் - அரவரைமேல்

நாணா மரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணாம் புனைமாலை யாம்"

*இதில் இடைநின்ற அரவு என்னும் பாம்புகளின் சாதிப் பெயர் 'தொடியாம்' என்பது முதலியவற்றோடு சென்றியைந்து பொருள் தந்தமையான் இஃது இடைநிலைச் சாதித் தீவகமாகும்.*

**இடைநிலைத் தொழிற்றீவகம்**

*செய்யுளின் இடையில் நிற்கும் தொழிலைக் குறிக்கும் ஒரு சொல் அச்செய்யுளில் பலவிடத்தும் நிற்கும் மற்றைய சொற் களோடு சேர்ந்து பொருள் தருவது இடைநிலைத் தொழிற்றீவக மாகும்.*

**எடு :-**

"எடுக்குஞ் சிலைநின் றெதிர்ந்தவருங் கேளும்
வடுக்கொண் டுரந்துணிய வாளி - தொடுக்கும்
கொடையுந் திருவருளுங் கோடாத செங்கோல்
நடையும் பெரும்புலவர் நா"

*இதில் இடையிலே நின்ற தொடுக்கும் என்னும் தொழிலு ணர்த்துஞ் சொல், கொடை, அருள், செங்கோலின் நடை என்ப வற்றோடு சென்றியைந்தமையால், இஃது இடைநிலைத் தொழிற் றீவகமாயிற்று.*

**இடைநிலைப்பொருட்டீவகம்**

*செய்யுளின் இடையில் நிற்கும் பொருட்பெயர் அச்செய்யுளில் பலவிடங்களில் நிற்கும் பலசொற்களோடு பொருந்திப் பொருள் விளைவிப்பது இடைநிலைப் பொருட்டீவகம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"மானமருங் கண்ணாள் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான் - யானைமுகன்
ஓட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினா னம்மேல் வினை"

*இதில், இடைநின்ற யானைமுகன் என்பது உதித்தான் என்பது முதலியவற்றோடு சென்றியைந்து பொருள்தந்து நின்றமையான் இஃது இடைநிலைப் பொருட்டீவகமாயிற்று.*

**இடைமுற்று மடக்கு**

*செய்யுளில் எல்லா வடிகளின் இடையிலும் ஒரேவிதமான சொற்கள் மடங்கி வந்து வேறு வேறு பொருள் வரத் தொடுப்பது இடைமுற்று மடக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

“மனமேங் குழைய குழைவாய் மாந்தர்
இனனீங் கரிய கரிய - புனைவதனத்
துள்வாவி வாவிக் கயலொக்கு மென்னுள்ளம்
கள்வாள வாளவாங் கண்”

*எல்லாவடிகளின் இடையிலும், “குழைய குழைய, கரிய கரிய, வாவிவாவி, வாளவாள” என்று சொற்கள் மடங்கி வந்திருத்தலைக் காண்க.*

**இடையினப் பாட்டு**

*இடையினம் ஆறும் வரத் தொடுப்பது இடையினப் பாட்டாகும்.*

**எடு :-**

“யாழியல் வாய வியலள வாயவொலி
யேழிய லொல்லாவா லேழையுரை - வாழி
யுழையே லியலா வயில்விழி யையோ
விழையே லொளியா லிருள்.”

**இணையெதுகை யலங்காரம்**

*வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா, பரிபாடல் ஏனைப் பாவினமெனத் தோன்றப்பட்ட செய்யுளகத்துப் பெருக வரும் இணையெதுகை நடையினையும் எதுகையலங்கார மென்று கூறப்படும்.*

**இயம்புதல் வேட்கை யுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. பொருளை (உவமேயம்) இன்னது போலுமென்று சொல்ல விரும்புகிறது என்னுள்ளம் என்பதாம்.*

**எடு :-**

“நன்று தீதென்றுணரா தென்னுடைய நன்னெஞ்சம்
பொன்றுதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே - மன்றல்

மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்திற் கொப்பென்
றெடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று"

**இயைபுருவக அணி**

*இது உருவக அணி வகைகளுள் ஒன்று. இது தொடர்பினுள் பல பொருளையும் உருவகஞ் செய்யுங்கால் தம்முள் காரணகாரிய மியைபுடைத்தாக வைத்து உருவகஞ் செய்து பாடுவதாம்.*

**எடு :-**

"செவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரும்
மைவா ரளக மதுகரமும் - செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
துடைத்தாரே யன்றோ துயர்"

**இயைபிலுருவக அணி**

*இது உருவக அணி வகைகளுள் ஒன்று. பலபொருள்களை உருவகஞ்செய்யுங்கால் அப்பொருள்கள் தம்முள் பொருந் தாமையை வைத்து உருவகஞ் செய்து பாடுவது இயைபிலுருவக அணியாம்.*

**எடு :-**

"தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத் - தான
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு"

**இயைபின்மையணி**

*ஒரு வாக்கியத்துள் ஒரு பொருளையே உபமானமாகவும் உபமேயமாகவுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் '**அநந் வயாலங்கார**'மென்பர்; தண்டியாசிரியர் '**பொதுநீங்குவமை**' யென்பார்.*

**எடு :-**

தேனே யனையமொழிச் சேயிழையாள் செவ்வியினால்
தானே உவமை தனக்கு.

**இரங்கல் விலக்கு**

*இரங்கல் தோன்றக் கூறிவிலக்குவது இரங்கல் விலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

ஊச றொழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும்
வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே - தேசு
பொழிலிழக்கு நாளையெம் பூங்குழலி நீங்க
எழிலிழக்கு மந்தோ விவண்.

**இரண்டாமடி முதன் மடக்கு**

*செய்யுளின் இரண்டாம் அடியின் முதலில் நின்ற ஒரே சொல் மடங்கி வந்து வேறுவேறு பொருள் வரத் தொடுப்பது இரண்டாமடி முதன் மடக் கென்னும் அணியாம்.*

**எடு :-**

"கனிவா யிவள்புலம்பக் காவலநீ நீங்கில்
இனியா ரினியா ரெமக்கு."

**இரத்தின மாலையணி**

*வருணிக்கவேண்டிய பொருள்களை யுலகத்திற் புகழ்பெற்ற தாக விருக்கின்ற முறைமை வழுவாமற் கூறுவது இரத்தினமாலை யணி எனப்படும்.*

**எடு :-**

"மாரதுவசத் தின்னுளதாய்க் கூர்மஞ் சார்ந்து வராகமதாய்ச்
சாரு மருந்தூ ணுதிப்பதுமாய்த் தாங்கு மருங்குறு வாமனமா
யாரும் பரசு ராமமுமாய் வனவா சங்கொட லம்பொருந்திப்
பாரக் கலையேந்திப்பரிமு கங்கொண்டிடும் பெண்பருமுலையே."

*இதில், மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், இராகவன், பலராமன், கிருட்டிணன், கல்கி என்று உலகத்தில் புகழ்பெற்ற மாதவனது பத்து அவதாரத்தையும் முறைபிறழாமல் கூறப்பட்டிருப்பது காண்க.*

**இருமை யியற்கை**

*இதுவும் வேற்றுப் பொருள் வைப்பணியின் வகைகளுள் ஒன்று. கூடாததனையும் கூடுவதனையும் ஒருங்கே கூட்டிக் கூறுவது இருமையியற் கையாம்.*

**எடு :-**

"கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைகடலும்
கூவித் தமியோரைக் கொல்லுமால் - பாவாய்!

பெரியோரும் பேணாது செய்வாரே போலும்
சிறியோர் பிறர்க்கியற்றுந் தீங்கு''

*இதில் சிறியோர் பிறர்க்குத் தெளியாமல் தீங்கு செய்தலாகிய கூடுமியற்கையும், பெரியோர் பிறர்க்குத் தெளியாமல் தீங்கு செய்தலாகிய கூடாமையும் ஒருங்கு வந்தன.*

**இல்பொருளுவமை**

*இஃது உவமை வகைகளுள் ஒன்று. முன்பு உலகியலில் இல்லாத பொருளினை உவமையாக்கிப் பாடுவது இல்பொருளுவமையாம்.*

**எடு :-**

''எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்
வில்லோர் புருவத்து வேனெடுங்கண் - நல்லீர்
முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழும்
அகம்போலு மெங்க ளகம்''

**இலேசவணி : (அ)**

*குற்றத்தைக் குணமாகவும், குணத்தைக் குற்றமாகவுஞ் சொல்லுதல் இலேசவணியாகும். இதனை வடநூலார்* ***'இலேசாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

''பறவைக ளெலாமனப் படியே திரிதரக்
குறைவிலிக் கிளிக்குக் கூட்டுச்
சிறைதீங் கிளவியிற் சேர்பய னாமே''

*இஃது, அரசனுக்கு இனியனாய்த் தன்னைவிட்டு நீங்கி அவன் புறத்து நெடுநாட்களாகத் தங்கியிருக்குங் கல்வி சான்ற புதல்வனைப் பார்ப்பதற்கு விரும்பிய தந்தையாற் சொல்லப் பட்டது. இதில், மதுரச் சொல்லாகிய குணம் பஞ்சரச்சிறைக்குக் காரணமாகையாற் குற்றமாகவும், மதுரச் சொல் இல்லாமை யாகிய குற்றம் வேண்டியவாறு திரிதற்குக் காரணமாகையாற் குணமாகவுஞ் சொல்லப்பட்டது.*

**இலேசவணி (ஆ)**

*உள்ளத்தில் கருதியதை வெளிப்படுக்குஞ் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்தனவாக மறைத்துச் சொல்வது இலேசவணியாகும்.*

*சத்துவமென்பன - வெண்பளிங்கிற் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறத்தே தோன்றுமாறுபோல உள்ளங்கருதியது புலனாக்குங்குணங்கள்; அக்குணங்களானவை, சொற்றளர்வு, மெய்வியர்ப்பு, கண்ணீர் நிகழ்ச்சி, மெய்விதிர்ப்பு, மெய் விதும்பல், மெய்ம்மயிரரும்பல் முதலியன.*

**எடு :-**

“கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசேர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று - சொல்லுவரால்
பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.

**இலேசவணி (இ)**

*ஒன்றனைப் புகழ்ந்தாற் போலப் பழித்துக் கூறுதலும், பழித் தாற்போலப் புகழ்ந்து கூறுதலும் ஆகிய இவ்விரண்டும் இலேச வணியின் பாற்படும்.*

**எடு :-**

“மேய கலவி விளைபொழுது நம்மெல்லன்
சாய றளராமற் றாங்குமால் - சேயிழாய்!
போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்”

*இதில், புணர்ச்சிக் காலத்து அறிவழியா மையாற் பழிப் பாயிற்று.*

“ஆடன் மயிலியலி யன்ப னணியாகம்
கூடுங்கான் மெல்லென் குறிப்பறியான் - ஊடல்
இளிவந்த செய்கை யிரவாளன் யார்க்கும்
விளிவந்த வேட்கை யிலன்”

*புணர்ச்சிக் காலத்து அறிவு அழிந்தமையாற் புகழாயிற்று.*

**இறையணி**

*வினாவிற்கு விடையிறுக்குங்காலத்து அவ்விடையில் ஓர் உட்கருத்து வரத்தொடுப்பது இறையணியாகும். (இறை - விடை.)*

**எடு :-**

வழிக்கொண் மன்ன சிலைமய மாகுமிவ்
வுழிச்சிற் றூரிலொ ருவரு மில்லையால்

கழிப்ப யோதர மேன்மையைக் கண்டுதான்
இழுக்க லின்றி யிருப்பை யெனிலிராய்.''

இஃது படுக்கை முதலிய விரும்புகின்ற ஒருவழிப் போக் கனைக் குறித்து மங்கை கூறியகூற்று. இதில் பயோதர பதச் சிலேடையினால் கலவி செய்ய விரும்புவாயாகில் இவ்விடத்திலிரு மூடமக்கள் இருக்கின்ற இக்கிராமத்தில் நமது செய்கையை ஒருவரும் அறிந்து கொள்ளமாட்டார் என்ற கருத்தும் அடங்கியிருக்கிறது. (பயோதரம் - மலை, மார்பு.)

**இன்மை நவிற்சியணி**

யாதேனும் ஒன்றன் இன்மையால் உவமேயப் பொருள் உயர்வோ, தாழ்வோ அடைந்ததாகக் கூறுதல் இன்மை நவிற்சியணியாகும்.

**எடு :-**

''மறங்கொள் கொடியோரி லாமையி னெம் மன்னா
சிறந்துளதுன் பேரவைச் சீர்''

இதில், தீயோர் இல்லாமையினால், அரசனது அவைக்களச் சிறப்புக் கூறப் பெற்றிருத்தலை அறிக.

**இன்மையத பாவம்**

இதுவும் அபாவவேதுவின் பாற்படும். இல்லாமையினது இன்மையைக் கூறுவதாம்.

**எடு :-**

''காரர் கொடிமுல்லை நின்குழற்மேல் கைபுனைய
வாராமை யில்லை வயவேந்தர் - போர்கடந்த
வாளையேய் கண்ணி! நுதன்மேல் வரும்பசலை
நாளையே நீங்கு நமக்கு.''

**இன்சொலுவமை**

இது உவமை வகைகளுள் ஒன்று. உவமேயத்தினும் உவமைக்கொரு மிகுதி தோன்றக் கூறியுவமித்து, இன்ன மிகுதியைப் பெற்றிருந்தாலும் பொருளை ஒப்பதன்றிச் சிறந்தது அன்று என்று கூறுவது இன்சொலுவமையாகும்.

**எடு :-**

"மான்விழி தாங்கு மடக்கொடியே! நின்வதனம்
மான்முழுதுந் தாங்கி வருமதியம் - ஆனாலும்
முற்றிழை நல்லாய்! முகமொப்ப தன்றியே
மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு.

**இன்பவணி**

*இவ்வணி மூன்று வகைப்படும்.*

*(1) முயற்சியின்றி விரும்பப்பட்ட காரியம் முடிதல்.*

**எடு :-**

"தன்னா யகன்விழைந்த தையலையே தூதாக
அன்னான்கண் உய்த்தாள் அணங்கு."

*(2) விரும்பப் பட்ட பொருளினும் அதிகமாகிய பொருள் சித்தித்தல். (கைகூடுதல்)*

**எடு :-**

"மழுங்குவிளக் கைத்தூண்ட மங்கை யெழும்போது
செழுங்கதிர்தோன் றிற்றிருள்கால் சீத்து."

*(3) உபாயம் முடிதற்பொருட்டுச் செய்யும் முயற்சியாற் பலமே சித்தித்தல். (கைகூடுதல்)*

**எடு :-**

"தங்கு நிதியஞ் சனமூ லிகையகழ்ந்தோன்
அங்குநிதி யேகண்டா னன்று."

**ஈற்றடி முதன் மடக்கு**

*செய்யுளின் ஈற்றடியில் முதலில் நின்ற ஒரே சொல் மடங்கி வந்து வேறு வேறு பொருள் வரத் தொடுப்பது ஈற்றடி முதன் மடக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

இவளளவுந் தீயுமிழ்வ தென்கொலோ தோயும்
கவள மதமான் கடத்திற் - றிவளும்
மலையார் புனலருவி நீயணுகா நாளில்
மலையா மலையா நிலம்."

*இதன் ஈற்றடியில் 'மலையா மலையா' என்றொரு சொல் மடங்கினமையறிக.*

**உடன்படல் விலக்கு**

*உடன் பட்டார்ப் போல விலக்குவது உடன்படல் விலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

"அப்போ தடுப்ப தறியே னருள்செய்த
இப்போ திவளு மிசைகின்றாள் - தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
இருளோ நிலவோ வெழும்."

**உடனிகழ்ச்சியணி**

*கற்றோரை மகிழ்விக்கும் உடனிகழ்தலைச் சொல்லு தலாம். இதனை வடநூலார்* ***'சகோக்தியலங்கார'*** *மென்பர். இதற்கு ஒடு, ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமையுருபுவரும்.*

**எடு :-**

"இகந்த பகைவ ரினத்தொடுவேல் வேந்தே
திகந்த மடைந்ததுநின் சீர்."

**உபாயவணி**

*யாதாயினும் ஓர் ஊதியம் பெறுதற்கு மிக்க காரண மென்று கூறப்படும் முக்கியமான தொரு சூழ்ச்சியை யுணர்த்துதல் உபாயவணியாகும். (சூழ்ச்சி - உணர்வோடு உசாவியுண்டான வுறுதியறிவு.)*

**எடு :-**

"சூடிக் கழித்த துளபச் சருகெனினு
நாடித் தருக திருநாகையா - யூடிப்
புலவா ததற்கு நினதருட்கும் பொற்றோள்
கலவாத வெற்குநலங் காண்."

**உபாயவிலக்கு**

*விலக்குவதனை ஒரு உபாயம் (தந்திரம்) காரணமாக விலக்குவது உபாயவிலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

"இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே இளவேனில்
மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தால் - அன்னோர்
தமக்கெம்மைத் தோன்றாத் தகைமையதோர் விஞ்சை
எமக்கின் றருள்புரிந்தே யேகு"

**உயர்ச்சிவேற்றுமையணி**

*உவமானத்தினின்றும் உவமேயத்திற்கு உயர்ச்சியாகிய வேற்றுமை சொல்லப்படுவது உயர்ச்சி வேற்றுமையணியாகும்.*

**எடு :-**

"மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும் - மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்"

*இச்செய்யுளில், முன்னிரண்டு அடிகளால் ஒலியாலும் பெருமையாலும் வெளிப்படையாகக் கச்சிக்கும், கடலுக்கும் ஒப்புமை கூறிப் பிறகு கடலினுங் கச்சிக்கு உயர்வு கூறினமை காண்க.*

**உயர்வு நவிற்சியணி**

*ஒரு பொருளானது தன் சொல்லாற் சொல்லப்படாமல் கேட்போரை மகிழ்விப்பதும், இஃது அஃதன்று என்று தெரிந்துந் தன்விருப்பத்தாற் கொள்ளப் படுவதுமாகிய (ஆரோப நிச்சயத் திற்கு) பொருளாகுதல் உயர்வு நவிற்சியணியாகும். இதனை* ***'அதிச யோக்தியலங்காரம்'*** *என்றுங் கூறுவர். இவ்வணி உருவக உயர்வு நவிற்சி, ஒழிப்புயர்வு நவிற்சி, விரைவுயர்வு நவிற்சி, மிகையுயர்வு நவிற்சி எனப்பல வகைப்படும். இறுதிக் கண் நின்ற மூன்றணிகளும் காரிய விரைவைச் சொல்லுவனவாம்.*

**உயர்வின் வீழ்ச்சியணி**

*மிக உயர்ந்த ஒன்றிலிருந்து மிகத் தாழ்ந்த ஒன்றிற்குத் திடீரென இழிதல் உயர்வின் வீழ்ச்சி என்னும் அணியாம்.*

**எடு:-**

"தாவரு மிருவினை செற்றுத் தள்ளரும்
மூவகைப் பகையரண் கடந்து முத்தியில்

போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே"

*இதில் மிக உயர்ந்த நிலையில் உள்ள பற்றற்ற முத்தர் களையும், மிகத் தாழ்ந்த நிலையில் உள்ள பரத்தையர்களையும் ஒரே வரிசையில் வைத்துப் பாலையின் பசையற்ற தன்மையைத் தோற்றுவித்தலில் இவ்வணி அமைந்திருத்தலையறிக.*

**உய்த்துணர் வணி**

*ஒரு காரியம் முற்றுப் பெறுவதற்கு இஃது இவ்வாறு என ஊகித்தல் உய்த்துணர் வணியாம். இதனை வடநூலார்* ***'சம்பாவவலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"சேடுறுநங் கோன்புகழைச் சேடனவி லத்தொடங்கின்
பீடுறவே முற்றுப் பெறும்"

**உருவக அணியின் இலக்கணம்**

*உவமானம் உவமேயம் என்னும் இரண்டற்குமுள்ள வேறு பாட்டை நீக்கி, ஒன்றென்பதோர் உள்ளுணர்வு தோன்ற ஒற்றுமைப்படுத்திக் கூறுவது உருவக அணியாம். அஃதாவது, உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக் கூறுதலாம். அவ்வாறு கூறுங்கால் முக்கியப் பொருண் முன்னும் உவமப் பொருள் பின்னுமாக வருதல் வேண்டும். இவ்வணியை வடநூலார்* ***'ரூபகாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

கொங்கைக் குரும்பை, வாய்ப் பவளம்.

**உருவக உயர்வு நவிற்சியணி**

*இது உயர்வு நவிற்சியணி வகைகளுள் ஒன்று. உவமேயத்தை அதன் சொல்லாற் சொல்லாமல், உவமானச் சொல்லினால் இலக் கணையாகச் சொல்லுதலாம்.*

**எடு :-**

"புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால் வெள்ளை யன்னஞ்செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே.

*இதில், புயல் முதலிய உவமானச் சொற்களாற் கூந்தல் முதலிய உவமேயங்கள். இலக்கணையாகச் சொல்லப்பட்டன.*

**உருவக வுருவகம்**

*இது உருவக அணிவகைகளுள் ஒன்று. ஒரு பொருளை உருவகஞ்செய்து அதனையே மீண்டும் பிறிதொன்றாக உருவகஞ்செய்து உரைப்பது உருவகவுருவகமாகும்.*

**எடு :-**

"கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப்
பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா - மன்னவநின்
ஆகத் தடஞ்சே வகமாக யானணைப்பல்
சோகித் தருளேற் றுவண்டு."

*இதில், மார்பை மலையாக வுருவகஞ் செய்து அதனையே மீண்டும் களிறாக உருவகஞ் செய்தவாறு அறிக.*

**உலகவழக்கு நவிற்சியணி**

*அஃதாவது, உலக வழக்குச் சொல்லைத் தழுவிக் கொண்டு செலுத்துதலாம். இதனை வடநூலர்* **'லோகோக்தியா லங்கார'** *மென்பர்.*

**எடு :-**

"அண்ணனீ பேசாதைந் தாறுமா தம்வரையில்
கண்ணைமூ டிக்கொண் டிரு."

**உல்லேகவணி**

*புலவனாற் குறிக்கப் பட்டதோர் உவமேயப் பொருட்கு உவமவுருபு மறைந்து நிற்கப் பல்வேறு வகையாய்க் கவர்த்த வினை, பயன், மெய், உரு வென்னுங் காரணங்களால் ஒத்த உவமானப் பொருள்களை அதற்குக் கூறுவது உல்லேகம் என்னும் அணியாம்.*

**எடு :-**

***"என்னாருயிரென்னிரு கண்மணி யென்னிதயத்துள்ளாய்
மன்னார்மிந்த மென்மெய்க் கணியாரம் வகுளப் பிரான்
முன்னாளெனையடிமை கொண்ட பேரருண்மூர்த்தி மண்மே
னன்னாவலர் தம்பிரானுயர் வானவர் நற்றுணையே."***

**உவமையணி**

*இரண்டு பொருள்களுக்கு ஒப்புமையை விளங்கச் சொல்லுவது உவமையணியாம். இதனை வடநூலார் **'உபமாலங்கார'** மென்பர்.*

**உவமைப் பொருள்பின் வருநிலையணி**

*ஒரே பொருளைக் குறிக்கும் வேறு வேறு சொற்கள் ஒரு பொருளைக் குறிக்காமல் உவமைவாயிலாக வேறு வேறு பொருள்களைக் குறிப்பது உவமைப் பொருள் பின்வருநிலையணியாகும்.*

**எடு :-**

"செங்கமல நாட்டம் செந்தாமரை வதனம்
பங்கயச் செவ்வாய் பதுமம்போல் - செங்கரங்கள்
அம்போரு கந்தாள் அரவிந்தம் மாரனார்
தம்போ ருகந்தாள் தனம்."

*இதில், தலைவியின் கண், முகம், வாய், கை, பாதம், தனம் ஆகிய உறுப்புகளுக்குத் தாமரையை உவமானமாகக் கொண்டு, அத்தாமரையைக் கமலம், செந்தாமரை, பங்கயம், பதுமம், அம்போருகம், அரவிந்தம் என்ற சொற்களால் குறித்திருப்பதை அறியலாம்.*

**உவமை யுருவகம்**

*உவமேயம் உவமானம் ஆகிய இரண்டையும் ஒப்புமை காட்டி உருவகஞ் செய்வது உவமை யுருவகமாகும்.*

**எடு :-**

"மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய மதியமே யொக்கும் - மதிதளர்வேன்
வெம்மை தணிய மதராக மேமிகுக்கும்
செம்மை யொளியிற் றிகழ்ந்து"

*இதனுள், முக்கியப் பொருளையுங் குணப்பொருளையும் ஒப்புமை காட்டினமையான் உவமை யுருவகமாயிற்று.*

*முக்கியப் பொருள் - உவமேயம். குணப்பொருள் உவமானம்.*

**உள்ளத னபாவம்**

*இதுவும் அபாவ வேதுவின் பாற்படும். ஓரிடத்தும் ஒரு காலத்தும் உள்ள பொருள் பிறிதோரிடத்தும் பிறிதொரு காலத்தும் இல்லாமையைக் கூறுவதாம்.*

**எடு :-**

"கரவொடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவொடு நிற்பித்த தெம்மை - அரவொடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்"

**உறுப்புக்குறை விசேடம்**

*இதுவும் விசேட வணிவகைகளுள் ஒன்று. கருவிகளுள் குறைவு தோன்றக் கூறிய காரியத்தில் உயர்வுதோன்றக் கூறுவது உறுப்புக்குறை விசேடம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"யானை யிரதம் பரியா ளிவையில்லை
தானு மனங்கன் றனுக்கரும்பு - தேனார்
மலரைந்தி னால்வென் றடிப்படுத்தான் மாரன்
உலகங்கண் மூன்று மொருங்கு."

*இதில், கருவிகளிற் குறை கூறிக் காரியத்தில் உயர்வு தோன்றச் சொன்னமையால் உறுப்புக்குறை விசேடம் பொருந்தி யிருத்தல் காண்க.*

**உறழ்ச்சி யணி**

*ஒத்த வலிமையுள்ள இருபொருள்களுக்குப் பகைமை தோன்றக் கூறுவது உறழ்ச்சியணியாகும்.*

**எடு :-**

தலையையே னும்விரைந்தெந் தார்வேந்தர்க் கோர்நின்
சிலையையே னும்வளைத்தல் செய்.

**உறுசுவையணி**

*உலகத்திலுள்ள பலபண்புடைய சுவையாகியவற்றை யொன்றினுக் கொன்று உயர்வுடையனவாக எண்ணி, இறுதியில் ஒரு சிறந்த சுவையை யெண்ணிய யாவையினும் மிகுந்த சுவை*

*யுடைத் தெனக் கூறுவது உறுசுவையென்னும் அணியாம். இதனைவட நூலார்* ***'சார வலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"நால்வகைத்தாய்த் தோற்ற நயந்தபூந் தேன்சுவையிற்
சால்புடைத்தாமுக்கனியுட் சார்சுவையின் - ஞாலமெலா
மிக்கதெனு மான்பாலுள் வீழ்சுவையினாம் விரும்பத்
தக்கதெனும் பஞ்சதா ரையினி - லக்கடல்வாய்த்
தோற்றமுறும் புத்தேளிர் துப்புரவாந் தெள்ளமுதி
னேற்றமுறு மின்சுவைத்தா மீதென்னுந் - தேற்றமதாங்
கற்றவர்கொ ணாவீறன் காரி தருமாறன்
சொற்றமிழ்ப்பா நல்குஞ் சுவை."

**எடுத்துக்காட்டுப் பிரமாணவணி**

*தோற்ற முதல்வன் (மூலபுருடன்) குறிப்பின்றி யுலகவழக்க மான பழமையைக் கூறுவது எடுத்துக் காட்டுப் பிரமாணவணி யாகும்.*

**எடு :-**

சாகா திருக்கு மனிதனிடந் தனிலே பலவாண் டகன்றேனும்
வாகா மகிழ்ச்சி யானதுவந் தடையு மெனவே மாநிலத்தி
லேகா ணிந்தக் காதைமிக மேன்மை மிசைந்த தாகவுமே
யாகா யமதிற் றெரிந்திடுதல் அகம்போ லறிய வருமெனக்கே.

**எடுத்துக்காட்டுவமை**

*உவம உருபு கொடாமல், உவமான உவமேயங்கள் தனித் தனியாக நிற்கத் தொடுப்பது எடுத்துக் காட்டுவமையாகும்.*

**எடு :-**

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

**எதிர் நிலையணி**

*உவமானத்திற்குக் குறைவுதோன்றச் சொல்லுதலாம். இஃது உவமையணிக்கு எதிரியதாய் நிற்றலின் அப்பெயர் பெற்றது. இதனை வடநூலார்* ***'பிரதீபாலங்கார'*** *மென்பர். இவ்வணி ஐந்து வகைப்படும்.*

*(1) உலகத்தில் உவமானமாய்ப் புகழொடு வழங்குகின்ற பொருளை உவமேயமாக்கிச் சொல்லுதல். இதனை விபரீதவுவமை யென்பார் தண்டியாசிரியர்.*

**எடு :-**

"அதிர்கடல்சூழ் வையத் தணங்குமுகம் போல
மதியுஞ் செயுமே மகிழ்"

*(2) அவர்ணியத்தை உபமேயமாகக் காட்டி வர்ணியத்தை இகழ்தல். (அவர்ணியம் - உவமானம் ; வர்ணியம் - உவமேயம்)*

**எடு :-**

"பொன்செருக்கை மாற்றுமெழிற் பூவை திருமுகமே
உன்செருக்குப் போது மொழிவினிக் - கொன்செருக்கு
மிக்கமக ரக்கடற்பூ மிக்கண் மகிழ்செயலால்
ஒக்கு மதியு முனை."

*(3) வர்ணியத்தை உபமேயமாகக் காட்டி அவர்ணியத்தை இகழ்தல்.*

**எடு :-**

"ஆற்ற லுறுகொலையி லாரெனக்கொப் பென்றந்தோ
கூற்றுவநீ வீண்செருக்குக் கொள்கின்றாய் - சாற்றுவல்கேள்
வெண்டிரைசூழ் ஞால மிசையுனக்கொப் பாகவே
ஒண்டொடிதன் நீள்விழியு முண்டு."

*(4) வர்ணியத்தோடு அவர்ணியத்திற்கு ஒப்புமை இன்றெனச் சொல்லுதல்.*

**எடு :-**

"இறைவி மதுரமொழிக் கின்னமுதொப் பாமென்
றறைவ தபவாத மாம்."

*(5) உவமானத்தை வீணென்று கூறுவது.*

**எடு :-**

"செங்கயற்க ணாயுன் றிருமுகத்தைப் பார்ப்பவர்க்குப்
பயங்கயத்தா லுண்டோ பயன்."

**எதிர்மறையணி :**

*ஒழிப்பணிக்கு வேறாகியும் கேட்போரை மகிழ்விப்ப தாகியும் இருக்கின்ற மறுப்பைச் சொல்லுதலாம். (இது மறுக்க மட்டுஞ் செய்யும். ஒழிப்பணி ஆரோபித்தற் பொருட்டு மறுக்கும்) இதனை வடநூலார் **'ஆக்ஷேபாலங்கார'** மென்பர். இவ்வணி மூவகைப்படும்.*

*தன்னாற் சொல்லப்பட்ட பொருளை ஒரு காரணத் தினால் மறுத்தல்.*

**எடு :-**

"ஒண்கதிர்த் திங்காணீ உன்வடிவை யிங்கெமக்குக்
கண்களிகூ ரக்கடிது காட்டுவாய் - வண்கவின்கூர்
பூண்டாங்கு கொங்கையுடைப் பூவைமுக முண்டதனால்
வேண்டாம்போ எற்றுக்கு வீண்."

*இதில், தான் விரும்பிய நிலவு காண்டலை முகமிருக்கையால் வீணென்று மறுத்தது காண்க.*

*(2) மறுப்புத் தான் தள்ளுண்டு மற்றொரு பொருளைத் தோன்றச் செய்தல்.*

**எடு :-**

"தண்ணறா உண்டளிசூழ் தாமமணி திண்டிறற்றோள்
அண்ணலே யான்றூதி யல்லேன்காண் - வண்ணமிகு
வேயெனுந்தோ ளாள்மெய் விரகதா பம்வடவைத்
தீயெனவே தோன்றுஞ் செறிந்து."

*இதில், அல்லே னென்னும் மறை தள்ளுண்டு, கூட்டுதற்குத் தக்க வஞ்சச் சொல்லை நீக்கி உண்மை கூறுவோர் தன்மையைக் காட்டிக் கொண்டு விரைந்து வந்து அவளைக் காப்பாற் றென்னும் மற்றொரு பொருளைத் தோற்றிற்று.*

*உடன்பாட்டுச் சொல்லால் மறுப்பைக் காட்டுதல்.*

**எடு :-**

"விளைபொருண்மே லண்ணல் விருப்புளையே லீண்டெம்
கிளையமுகை கேட்பதற்கு முன்னே - விளைதேன்
புடையூறு பூந்தாரப் புனைகழலாய் போக்குக்
கிடையூறு வாராம லேகு."

இதில், ஏகு என்னும் உடன்பாட்டுச் சொல்லாற் போகேல் என்னும் மறுப்பு சுற்றத்தழுகையாற் குறிக்கப்பட்ட தலைவிக்கு மென்பதைக் கொண்டு காட்டப்பட்டது.

**எளிதின் முடிபணி :**

ஒருவன் செய்யத் தொடங்கிய காரியம் மற்றொரு காரண உதவியால் எளிதில் முடிதலாம். இதனை வடநூலார் ***'சமாதிய லங்கார'*** மென்பர்.

**எடு :-**

"மதிநுதலாட் கியானூடல் மாற்றத் தொழும்போ
துதவிமுகில் செய்தன் றொலித்து."

**என்றுமபாவம் :**

இது அபாவவேதுவின் வகைகளுள் ஒன்று. எக்காலத்தும் இல்லாமையைக் கூறுவது என்றுமபாவமாகும்.

**எடு :-**

"யாண்டு மொழிதிறம்பார் சான்றவ ரெம்மருங்கும்
ஈண்டு மயில்க ளினமினமாய் - மூண்டெழுந்த
காலையே கார்முழங்கு மென்றயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்."

**ஏகதேச வுருவகஅணி**

இது உருவக அணிவகைகளுள் ஒன்று. ஒரு செய்யுளில் ஓரிடத்து ஒருபொருளை உருவகஞ்செய்யுங்கால் மாட்டேறு பெற வுருவகஞ் செய்து - அப்பொருளோடு இயைபுபடப் பிறிதோர் பொருளைச் செய்யுளகத்து மற்றோரிடத்து மாட்டேறு பெற வுருவகஞ் செய்யாது தொகைநிலை வாய்பாட்டாற் கூறுவது ஏகதேசவுருவக அணியாம்.

**எடு :-**

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் ; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்."

இதில் பிறவியைக் கடலாக உருவகஞ்செய்து. இறைவன் அடியைப் புணையாக வுருவகஞ் செய்யாது விட்டிருத்தலைக் காண்க.

**ஏகாங்கவுருவகம்**

*இது உருவக அணிவகைகளுள் ஒன்று. ஒரு பொருளினது அங்கம் பலவற்றுள்ளும் ஓரங்கமே யுருவகஞ்செய்து ஒழிந்த அங்கங்களை உருவகஞ் செய்யாது கூறுவது ஏகாங்கவுருவகமாகும்.*

**எடு :-**

"காதலனைத் தாவென் றுலவுங் கருநெடுங்கண்
ஏதிலனால் யாதென்னு மின்மொழித்தேன் - மாதர்
மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த
இரண்டினுக்கு மென்செய்கோ யான்."

**ஏகாவளியணி : (அ)**

*ஒரு முதன்மைப் பொருளை முதல் வைத்து அதற்கு உயர் வினையே தருவதாகப் பிறிதொரு கூட்டத்தினுள் ஒரு முதன்மைப் பொருளை அதன்மேல் வைத்து அப்படிப் பலசால்பின் முதன்மைப் பொருள்களை யொன்றோடொன்று ஏற்புடையனவாகத் தொடர்புபடுத்தி முதன்மைப் பொருள் தருமாறு வுரைப்பது ஏகாவளியணியாம்.*

*ஏகாவளியென்பது பலவளையத்தை யொன்றாக்கப்பட்ட சங்கிலி போலத் தொடர்தலின் அப்பெயர்த்தாயிற்று.*

**எடு :-**

"அவையாதல் சான்றோருண் டாயதே சான்றோர்
நவையறு நன் னூலுணர்ந்தோர் நன்னூ - லெவையுமா
மொன்றா மதனை யுணர்த்தலது வுந்திருவைக்
குன்றாதே கூடியதா கும்."

**ஏகாவளியணி : (ஆ)**

*பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றை விசேடியங்களாகவேனும், விசேடணங்களாக வேனும் ஆவது ஏகாவளியாகும். இதனை* ***ஒற்றைமணி மாலையணி*** *எனவுங் கூறுவர்.*

**எடு :-**

"மன்னிவன்கண் காதளவுங் காதுதோண் மட்டியையுந்
துன்னுறுதோள் சானுத் தொடும்."

*இதில் கண் முதலியன விசேடியம்.*

நிறைவெளியு மதியிலங்கு தினகரனு
மவன்கதிர்சேர் நிலவு மன்னோன்
குறைவில்பிறப் பிடமாய புனலுமத
னதுபித்தக் கூறாந் தீயும்
அறைநெறியி னதனிலவி வழங்குபுரு
டனுமவற்குப் பிராண னாகி
உறைவளியு மதுகொண்மண முறுநிலனு
மாமிறையெட் டுருவுட் கொள்வேம்.

*இதில், வெளிமுதலியன விசேடணம்.*

**ஏதுவணி : (அ)**

*யாதானும் ஒரு பொருளிடத்து இதனான் இது நிகழ்ந்த தென்று காரணம் விதந்து கூறுவது ஏதுவென்னும் அணியாம். இவ்வணி **காரகவேது** என்றும் **ஞாபகவேது** என்றும் இரண்டு வகைப்படும். இதனை வடநூலார் **'ஹேத்வலங்கார'** மென்பர்.*

**எடு :-**

"எல்லைநீர் வையகத் தெண்ணிறந்த வெவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால் - முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வந்த புயல்."

**ஏதுவணி - ஆ**

*(1) காரணத்தைக் காரியத்துடன் சேர்த்துச் சொல்லுதல்.*

**எடு :-**

பெருந்திங்கள் தோன்றுமே பெய்வளையார் நெஞ்சில்
பொருந்தூடல் தீர்த்தற் பொருட்டு.

*இதில், ஊடல்தீர்த்தல் - காரியம். தோன்றுதல் - காரணம்.*

*(2) காரணத்தையும் காரியத்தையும் வேறுபடுத்திக் கூறுதல்.*

**எடு :-**

"கூர்கொண்டு வேலுடைநங் கோன்கடைக்கண், பார்வையே
சீர் கொள்கவி வாணர் திரு."

**ஏதுவுருவகம்**

*காரணத்தோடு கூடிவரும் உருவகம் ஏதுவுருவகமாகும்.*

**எடு :-**

"மாற்றத்தாற் கிள்ளை நடையாண் மடவன்னம்."

*இங்கே, கிள்ளை முதலிய உருவகம் மாற்றம் முதலிய ஏதுவோடு கூடி வந்தவாறு அறிக.*

**ஐயவணி**

*ஒன்றினை, இதுவோ, அதுவோ, மற்றொன்றோ என்று ஐயமுறக் கூறுதல் ஐயவணியாம்.*

**எடு :-**

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு."

**ஐயவுவமை**

*இஃது உவமை வகைகளுள் ஒன்று. உவமையையும் பொருளையும் ஐயுற்று உரைப்பது ஐயவுவமையாகும்.*

**எடு :-**

"தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவு வாண்முகங் கொல் - யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம்."

**ஐய விலக்கு**

*ஐயுற்றதனைக் கூறிக் குறிப்பினால் விலக்குவது ஐயவிலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

"மின்னோ பொழிலின் விளையாடு மிவ்வுருவம்
பொன்னோ வெனுஞ் சுணங்கிற் பூங்கொடியோ - என்னோ
திசையுலவுங் கண்ணுந் திரண்முலையுந் தோளும்
மிசையிருளுந் தாங்குமோ மின்."

*இதனுள், மின்னோ கொடியோ என்னும் ஐயம், கண் முதலியவைகளை மின்தாங்குமோ என்பதனால் விலக்கப் பட்டது.*

**ஒப்புமைக் கூட்டவணி : (அ)**

*ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குண முதலாயினவற்றின் மிக்க பொருளைக் கூட வைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாம். அவ்வணி ஒன்றனைப் புகழ்தற்கண்ணும். பழித்தற்கண்ணும் தோன்றும். ஒப்புமைக் கூட்டம் - சமதன்மை யுடையவைகளை ஒருங்கு கூட்டுதல். இதனை வடநூலார்* **'துல்லிய யோகிதை'** *என்பர்.*

**1. புகழொப்புமைக் கூட்டம்**

**எடு :-**

"பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் - நாண்டாங்கு
வண்மைசால் சான்றவருங் காஞ்சி வளம்பதியின்
உண்மையா லுண்டிவ் வுலகு."

*இதில், குழை பொருப்பும், தூண்டா விளக்குமாகிய உயர்ந்த பொருள்களோடு பெரியோரைச் சேர்த்து உயர்த்துக் கூறினமையால், புகழொப்புமைக் கூட்டம் அமைந்திருத்தல் காண்க.*

**2. பழிப்பொப்புமைக் கூட்டம்**

"கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையறுக்குங் கோள்."

*இதில், மூவரிடத்தும் சேர்க்கப்பட்ட இழிதன்மைகளால் பழிப்பொப்புமைக் கூட்டம் அமைதல் காண்க.*

**ஒப்புமைக் கூட்டம் : (ஆ)**

*வருணியங்களாகிய பலபொருள்களாயினும், அவருணியங் களாகிய பல பொருள்களாயினும் பொதுவாகிய ஒரு தருமத்தில் முடித்தலாம். இதனைவடநூலார்* ‘**துல்யயோகிதாலங்கார**’ *மென்பர். இவ்வணி,* **புனைவுளி ஒப்புமைக்** *கூட்டம்,* **புனைவிலி ஒப்புமைக்** *கூட்டம் என இரண்டு வகைப்படும்.*

**எடு :-**

*(1)* **புனைவுளி ஒப்புமைக் கூட்டம்**

“மாமதிதோன் றக்கணவர்த் தீர்ந்தமட வார்முகமும்
தாமரைப்பூ வுஞ்சோர்ந் தன.”

*இதில், சந்திரோதய வருணனையிற் சோர்ந்த தாமரைக்கும், பிரிவுற்ற மாதர் முகங்களுக்கும், வாடுதலாகிய ஒரு கருமத்தால் முடிவு செய்தது காண்க.*

*(2)* **புனைவிலி ஒப்புமைக் கூட்டம்.**

“தீதில் கழைச்சாறுந் தெள்ளமுத முங்கசக்கும்
கோதையிவள் சொல்லுணர்ந் தார்க்கு.”

*இதில் சொல்லின்ப வருணனையில் வருணியங்களாகிய கழைச்சாறு முதலியவைகளுக்குக் கசப்பாகிய ஒரு குணத்திலே முடிவு செய்தது காண்க.*

**ஒப்புமைக்கூட்டம் - (இ)**

*உறவினரிடத்தும் பகைவரிடத்துஞ் சமனாக நடந்ததாகச் சொல்லுதலும் ஓர், ஒப்புமைக்கூட்டமாம்.*

**எடு :-**

“வீரமிகு மன்னனிவன் விட்டார்க்கும் நட்டார்க்கும்
தாரணியி னாக்கினனந் தல்.”

*இதில் நட்டவர்க்கு நந்தல் ஆக்கம்; விட்டவர்க்கு நந்தல் கேடு.*

**ஒப்புமையுவமை :**

*இஃது உவமை வகைகளுள் ஒன்று. உவமேயமே (பொருளே) மற்றொரு பொருளுக்கு உவமையாக வருவது ஒப்புமையுவமையாம்.*

**எடு :-**

“முத்துக்கோத் தன்ன முறுவன் முறுவலே
ஒத்தரும்பு முல்லைக் கொடி மருங்குல்.”

*இதனுள் முத்துக்களை முறுவலுக்கு உவமையாகக் கூறி அம்முறுவலை முல்லை அரும்புகளுக்கு உவமையாகக் கூறியிருத்தலைக் காண்க.*

**ஒப்புப் பிரமாணவணி :**

*ஒப்பான பொருளைக் கூறி மற்றோர் பொருளை விளக்குவது ஒப்புப் பிரமாணவணியாகும்.*

**எடு :-**

“மச்சவிழி யாயுடுவின் மண்டலத்தி லேதினிருப்
புச்சகடா காரமெனப் போந்திருந்த தோவதையு
ரோகணிநா ளென்றறிவு று.”

**ஒப்புமை யேற்றவணி :**

*பலபடி யேறினாற்போல நற்குணத்தானுந் தீக்குணத்தானும் ஒன்றற்கொன்று உயர்ந்ததாகப் பலவற்றைக் கூறி யெல்லாவற்றிலும் மேலாகத் தான் கூறிய பொருளே நிற்பதாகக் கூறுவது ஒப்புமை யேற்றம் எனப்படும்*

**(எடு)**

பயனில் சொல் லின்னா மிக் கின்னா மெய்ப் பாட்டி
னயனில்சொன் னன்னாடா தன்னை - வியந்தனசொல்
லாங்கின்னா பின்னின்றே யம்புற்சொல் லம்மூன்றி
னூங்கின்னா வாழு முயிர்க்கு.

**ஒப்புமைப் புனைவிலி புகழ்ச்சியணி**

*இது புனைவிலி புகழ்ச்சியணி வகைகளுள் ஒன்று. உபமானத்தின் ஒப்புமைத் தொடர்பால் உபமேயந் தோன்றுதலாம்.*

**எடு :-**

“மேதகுசீர்க் காரையன்றி வேறொன் றையுமிரவாச்
சாதகமே புள்ளிற் றலை.”

*இதில், உவமானமாகிய சாதகப்புள் வருணனையில் அதற்கு ஒப்பாகிய ஒரு மன்னனைச் சேர்ந்து பிறரை இரவாத மானியின் செய்தியாகிய உவமேயந் தோன்றிற்று.*

**ஒட்டணி**

*புலவன், தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்தற்குத் தக்க வேறொன்றினைச் சொல்லின் அது ஒட்டென்னும் அணியாகும். இது உவமைப் போலி எனவும், பிறிது மொழிதல் எனவும், நுவலா நுவற்சி எனவுங் கூறப்படும். இவ்வணி அடையும் பொருளும் அயல்பட மொழிதல், அடையைப் பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல், அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல், அடையை விபரீதப் படுத்திப் பொருள் வேறுபட மொழிதல் என நால்வகையானும் வரும். இந்நால் வகையே யன்றி, பொருள் இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகையானும் இவ்வணி வரும்.*

**எடு :-**

"வெறிகொ ளினச்சுரும்பு மேவியதோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும் - நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு."

*இதனுள், தாமரை யென்றது தலைமகளை; காவி என்றது பரத்தையை; வண்டாமரை பிரிந்த வண்டென்றது தலைமகனை. இது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்கு வாயினேர்ந்த தோழி சொல்லியது.*

**ஒருங்குடன் தோற்றவேது :**

*இதுவும் ஏதுவணியின் பாற்படும். காரணமுங் காரியமும் ஒருங்கே நிகழ்வது ஒருங்குடன் தோற்றவேதுவாகும்.*

**எடு :-**

"விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும் - புரிந்தோர்
நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவி
பொறைதளரும் புன்மாலைப் போழ்து."

**ஒருபொருளுவமை :**

*இஃது உவமை வகைகளுள் ஒன்று. பலபொருட்கு ஒரு உவமை காட்டுவதாம்.*

**எடு :-**

"வண்ண வசைமலா் போற்றி ருமுகமுங்
கண்ணுமலரடியுங் கைக்கொண்ட - பெண்ணரசைச்
செந்தமிழ்மா றன்சிலம்பிற் சேர்ந்தகன் றென்பாலுரைக்க
வந்தவனே திண்ணியவனா வான்."

**ஒருபொருளுருவகம் :**

*இது உருவக அணிவகைகளுள் ஒன்று. உயர்திணை அஃறிணை யென்று சொல்லப்பட்ட காட்சிப் பொருளுங் கருத்துப் பொருளும் ஒரு செய்யுளகத்து வந்தால் அவற்றுள் ஒரு பொருளை உருவகஞ் செய்து உரைப்பது ஒரு பொருளுருவகமாகும்.*

**எடு :-**

பிறப்பாரி றப்பார் பிறப்பாய வேலை
துறப்பா னொருபோதுந் தூவார் - சிறப்பாகுஞ்
செய்படைத்ததென்னரங்கர் சேவடிமேன் மானிடராய்க்
கைபடைத்தும் வாழ்ந்த கதை

*இதில், அரங்கன், மானிடர்கை, சேவடி என்னும் உயர்திணை அஃறிணைகளை யுருவகஞ் செய்யாது கருத்துப் பொருளாய பிறப்பென்னும் அஃறிணையை உருவகஞ் செய்திருத்தலை அறிக.*

**ஒருவழிச் சேறல்**

*இதுவும் வேற்றுப் பொருள் வைப்பணியின் வகைகளுள் ஒன்று. ஒரு திறமுரைத்தால் அத்திற மெல்லாவற்றின் மேலும் முழுதும் செல்லாது, சிலவற்றின் மேலே செல்வது ஒருவழிச் சேறல் என்னும் அணியாகும்.*

**எடு :-**

"எண்ணும் பயன்றூக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்கும் - மின்னுறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய்! புகழாளர்க் கெவ்வுயிரும்
காத்தளிக்கை யன்றோ கடன்."

**ஒருவயிற்போலியுவமை**

*இஃது உவமை வகைகளுள் ஒன்று. ஒரு தொடர் மொழிக் கண் பலவுவமைவந்தால், அவ்வந்த உவமை தோறும் உவமைச் சொற்புணராது ஓருவமைச் சொற்புணர்த்துப் பாடுவதாம்.*

**எடு :-**

"நிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா
சுழற்கலவ மேல்விரித்த தோகை - தழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்
யாம்பிரிந்தோர்க் கென்னா மினி."

**ஒருசொல் நான்கடி மடக்கு**

*நான்கு அடிகளாலான பாவில் ஒரு சொல்லே எல்லாவடி களிலும் மடங்கி வந்து வேறு வேறு பொருள் வரத் தொடுப்பது ஒரு சொல் நான்கடி மடக்கு என்னும் அணியாம்.*

*இதனை* ***யமகம்*** *என்று கூறுவர்.*

**எடு :-**

உமாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதர

*இதில் 'உமாதரன்' என்ற சொல்லே எல்லா வடிகளிலும் மடங்கி வந்தமை காண்க.*

**ஒருவினைச் சிலேடை**

*தொடர்ந்து நின்ற சொற்கள் வெவ்வேறு வகையாகப் பிரிக் கப்பட்டுப் பலபொருள் தந்து ஒரு வினையான் முடிவது ஒருவினைச்சிலேடையாகும்.*

**எடு :-**

"அம்பொற் பணைமுகத்துத் திண்தோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க - உம்பர்
நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பம் தரும்.

*இது விநாயகருக்கும் மலைக்குஞ்சிலேடை.*

**விநாயகர்மேற் செல்லுங்கால்**

*பொன் - பொலிவு, பணை - பருத்த, முகம் - முகம், கோடு - மருப்பு, நாகம் - யானை, வம்பு - கச்சு, உறுதல் - கட்டுதல். ஓடை - பட்டம். மலர்தல் - பரத்தல், உம்பர் - முடி. இன்பம் - இந்திர பதம் முதலாய போகம்.*

**மலைமேற் செல்லுங்கால்**

*பொன் - கனகம். பணை - மூங்கில். முகம் - பக்கம். கோடு - சிகரம். நாகம் - மலை. வம்பு - மணம். உறுதல் - உண்டாதல். ஓடை - வாவி. ஒருமரமுமாம். மலர்தல் - பூத்தல். உம்பர் - மேல். இன்பம் - தவத் தொழில் புரிவார்க்கு அவர் வேண்டிய உணவுகளுந் தண்ணீருமாகிய பலவகைப் பண்டங்கள்.*

*இஃது இன்பந்தரும் என்னும் ஒருவினையான் முடிந்தது.*

**ஒழித்துக் காட்டணி**

*ஒரு பொருளை ஓரிடத்து இல்லை யென ஒழித்து வேறோ ரிடத்து உண்டென நியமித்தல் ஒழித்துக் காட்டுதல் என்னும் அணியாம்.*

**எடு :-**

"வெஞ்சிலையே கோடுவன மென்குழலேசோருவன."

**ஒழிப்பணி**

*ஒரு தருமத்தை யாரோபித்தற் பொருட்டு ஒரு தருமத்தை மறுப்பது ஒழிப்பணியாகும். இவ்வணி, வெற்றொழிப்பு, காரண வொழிப்பு, வேறுபாட்டொழிப்பு, மயக்க வொழிப்பு, வல்லோ ரொழிப்பு, வஞ்சகவொழிப்பு என அறுவகைப்படும்.*

**ஒழிப்புயர்வு நவிற்சியணி**

*இது உயர்வு நவிற்சியணி வகைகளுள் ஒன்று. உவமேயத்தை அதன் சொல்லாற் சொல்லாமல், உவமானச் சொல்லினால் இலக் கணையாகக் கூறி ஒழித்தல், ஒழிப்புயர்வு நவிற்சியணியாம்.*

**எடு :-**

"பைந்தொடிநின் சொல்லில் அமுதுளதாற் பாமரர்கள்
இந்துவிடத் துண்டென்ப ரே."

*இதில், அமிர்தமென்னப்பட்ட உவமானத்தினால் சொல்லில் இருக்கின்ற இனிமையாகிய உவமேயஞ் சொல்லப்பட்டுச் நிலவினிடத்து இல்லையென்பதால் ஒழிப்பை உட்கொண்டிருக்கிறது.*

**ஒன்றினொன்றபாவம்**

*இதுவும் அபாவ வேதுவின் பாற்படும். ஒன்றினிடத்து ஒன்றினது இல்லாமையைக் கூறுவதாம்.*

**எடு :-**

“பொய்ம்மை யுடன்புணரார் மேலானார் பொய்ம்மையு
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவாம் - இம்முறையாற்
பூவலர்ந்த தாரார் பிரிந்தாற் பொலங்குழையார்
காவலர்சொற் போற்றல் கடன்.”

**ஒன்றற் கொன்று உதவியணி**

*ஒன்றற்கொன்று உதவி செய்தலைக் கூறுவதாம். இதனை வடநூலார்* ***‘அந்நியோந்நியலங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

“திங்களிர வால்விளங்குஞ் செப்புகதிர்த் திங்களால்
கங்குல் விளங்குமே காண்.”

**ஒட்டியம்**

*உதடும் உதடும் குவிந்தும் கூடியும் நடைபெறும் எழுத்துக்களால் வரத் தொடுப்பது ஒட்டியம் என்னும் அணியாம்.*

**எடு :-**

“குருகு குருகு குருகொடு கூடு
குருகுகுரு கூருளுறு கோ.”

*இஃது இதழ்குவிந்த வோட்டியம். (இதன் பொருள்)*

*மனனே! சங்குசங்கொடுங் குருகென்ற பறவைகள் குருகு களோடுங் திரண்டியங்குங்குருகாபுரியுட் கோவை நினை.*

“பம்மும்பம் மும்பம்மு மம்மம்ம மை மாமை
பம்முமம்ம மும்மேமம் பாம்.”

*இஃது இதழியைந்த வோட்டியம்.*

*(இ-ள்) மை பம்மும் - (தேர்ப்பாகனே உனது தேரைப் பின்னிட்டு விரைந்த) மேகம், (இதன் முன்சென்று தேர்வரும் வழிமேல் விழிவைத்த இல்லறக் கிழத்தியிருந்த நகரின்கட்) படியும். பம்மும் பம்மும் - அதனால் விண்மீன் கணங்களும் மறையும்; இருள் செய்யும். (அவ்வாறு இருள் உண்டாகுமிடத்து) அம்மமம- ஐயோ! ஐயோ! மாமை பம்முமம் மமும் மேமம்பாம் - அழகியமார்பை பசலை தழைவதாம்.*

**ஒட்டிய நிரோட்டியம்**

*ஒட்டியம், நிரோட்டிய மென்னும் இரண்டு தன்மையு மொரு செய்யுளகத்து இரண்டு கூறுபாட்டால் நடைபெறத் தொடுப்பது ஓட்டிய நிரோட்டியம் என்னும் அணியாம்.*

**எடு :-**

“வதுவையொருபோது வழுவாது வாழும்
புதுவைவரு மாதுருவம் பூணு - முதுமைபெறு
நாதனங்க னையே நன்றறிந்தார்க் கேயடியேன்
றாதனென நெஞ்சே தரி.”

*இதில் முன்னடியிரண்டும் ஓட்டியமும் பின்னடியிரண்டும் நிரோட்டியமுமாக வந்த வோட்டிய நிரோட்டியம்.*

**ஓராதுரைத்தல் அணி**

*சொல்லுங் காலத்திற்கு ஏற்றதானதொரு பொருள் தரும் சொற்றொடர் பின்னிகழ்வதை யொட்டிச் சொல்வோர் கருதாத மற்றொரு பொருளைக் குறித்து நிற்குமாயின் அது ஓராதுரைத்தல் அணியாம்.*

**கடைநிலைத் தொழிற்றீவகம்**

*செய்யுளின் இறுதியில் நின்ற தொழிலைக் குறிக்கும் ஒரு சொல் அச்செய்யுளின் பலவிடங்களில் நிற்கும் மற்றைய சொற் களோடு சென்றியைந்து பொருள் தருவது கடைநிலைத் தொழிற்றீவகமாகும்.*

**எடு :-**

“துறவுளவாச் சான்றோ ரிளிவரவுந் தூய
பிறவுளவா வூன்றுறவா வூணும் - பறைகறங்கக்

கொண்டா னிருப்பக் கொடுங்குழையா டெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.''

*இதில் கடைநின்ற வைக்கற்பாற்றன்று என்பது இளிவரவு முதலியவற்றோடு சென்றியைந்து பொருள் தந்தமையால் இது கடைநிலைத் தொழிற்றீவகமாகும்.*

**கடை நிலைப் பொருட்டீவகம்**

*செய்யுளின் இறுதியில் நின்ற பொருட் பெயர். அச்செய்யுளில் பலவிடங்களில் நிற்கும் பலசொற்களோடு பொருந்திப் பொருள் தருவது கடைநிலைப் பொருட்டீவகமாகும்.*

**எடு :-**

''புறத்தன வூரன நீரன மாவின்
றிறத்தன கொற்சே ரியவே - அறத்தின்
மகனை முறைசெய்தான் மாவஞ்சி யாட்டி
முகனை முறைசெய்த கண்''

*இதில் கடைநின்ற கண் என்னும் பொருட் பெயர் புறத்தன என்பது முதலியவற்றோடு சென்றியைந்து பொருள் தந்தமை யான் இது கடைநிலைப் பொருட்டீவகமாயிற்று.*

*இதனுள் கண் - பொருள். புறத்தன - மான். ஊரன - அம்பு. நீரன - தாமரை. மாவின்றிறத்தன - மாவடு, கொற்சேரிய - வாள்.*

**கரந்துறை செய்யுள்**

*ஒரு பாடலைப் பாடி முடித்து, முடித்த அப்பாடலின் இறுதி மொழி ஈற்றெழுத்துத் தொடங்கி, எதிரேறாக இடை யிடையோரெழுத்தாக இடையிட்டு முதன் மொழி முதலெழுத்து அயலடைய முடிக்க மற்றோர் பாடலாக அதனுள்ளே மறைந்துறைவது கரந்துறை செய்யுளாகும்.*

**எடு :-**

போர்வை வாயூராரலரளி பொருகாம
நீர்மையாழ் வாரயலணை தருமிக
வோர்தவா வாழ்தலாமயில் கைமுருகுகு
தார்தராமூதாமணி தகவுருவமும்

**இதனுள் மறைந்த செய்யுள்**

''முருகணிதாரார்
குருகையிலாழ்வார்

கருணையவாயார்
மருளிலராவார்.”

*என்பதாம்.*

**கரவுணர்தல் அணி**

*ஒருவரது மறைவை (கரவை) ஒருவர் தாம் அறிந்து கொண்டதைக் கருத்தோடு கூடிய செய்கையால் தெரிவிப்பது கரவுணர்தல் என்னும் அணியாம்.*

**எடு :-**

“கடிமனைக்குக் காலைவரு காதலரைத் துஞ்சும்
படிவிரித்தா ளோரணங்கு பாய்.”

**கருத்துடை அடையணி**

*அடை மொழிகளைக் கூறும் மூலமாகவோ ஒரு விருத்தாந்தத்தைக் கூறும் மூலமாகவோ ஒரு கருத்தைக் குறிப்பால் தெரிவிப்பது கருத்துடை அடையணியாகும்.*

**எடு :-**

“திங்கள் முடிசேர் சிவனுமது தாபத்தை
இங்ககற்றி யாள்க வினிது.”

*இதில், ‘திங்கள் முடிசேர்’ என்னுமடை மொழியில், தாபத்தை நீக்கவல்லவன் என்னுங்கருத்து அடங்கியிருத்தலைக் காண்க.*

**கருத்துடையடை கொளியணி**

*கருத்தோடு கூடிய சிறப்பைக் கூறுதலாம். இதனை வடநூலார்* ***‘பரிகராவலங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

“முக்கணனே யன்புடையார் மும்மலநீங் கப்பார்க்கத்
தக்கவனென் றென்னெஞ்சே சார்.”

*இதில், முக்கணனென்னும் சிறப்பியம் ஆணவ முதலிய மும்மலங்களையும் நீக்கவல்லனென்னும் கருத்தை உட்கொண்டிருக்கிறது.*

**கற்றோர் நவிற்சியணி**

*மிகுதிக்குக் காரணமாகாததை அதற்குக் காரணமாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் '**பிரௌடோத்தி யலங்கார**' மென்பர்.*

**எடு :-**

"தக்கவிவள் கண்யமுனை தன்னில் அலர்குவளை
ஒக்குங் கருமை உள."

**காட்சியணி : (அ)**

*கண் முதலிய ஐம்புலன்களால் அறியப்படும் செய்திகளைக் கூறுவது காட்சியணியாகும். சுட்டணி, நிதர்சனஅணி என்பனவும் இது.*

**எடு :-**

"இந்தியத்தின் குழுவனைத்து மேபிரதி விம்பமுறு
தந்தலைவன் முகத்ததுதே மாமரத்தின் றளிர்மணத்த
துந்துருசி யது அரும்ப ரொலிப்புளது சீதளநி
வந்ததெனக் களிமதுவால் வளரின்பமடைந்ததுவே."

**காட்சியணி : (ஆ)**

*உவமான உவமேயங்களாகவிருக்கிற இரண்டு வாக்கியங் களின் பொருள்களை யொன்றாகக் கூறுவது காட்சியணியாகும்.*

**எடு :-**

"அறிவிலா மூர்க்கன் றனையனு சரித்தல் யாதது வாரணியமதி
லழுகையுற் றிடுத லாவியிலுடலை யழகுறும் படிதுடைத்திடுதல்
செறிபுன லறுபா ரதிலர விந்தத் தினையா ரோபமே புரிதல்
தினந்தின மூவரா நிலந்தனில் வருடஞ் செய்குத னாயது வாலை
நெறியுறத் திருத்தல் முழுச்செவி டாம னிதனது செவியின்மந் திரத்தி
னிகழுப தேசம் புரிகுதல் குருடாய் நேர்பவ னானனத் தெதிரே
உறுநிழ லாடி காட்டுத லெனவே யுளங்கொடுசற்சன சங்கத்
தொடுநித மிருந்தே செவியுணும் விருந்தே யுறிலது பலவினை மருந்தே."

*இதில், அறிவில்லா மூர்க்கனை யனுசரித்தல் என்ற உவமேய வாக்கியப் பொருளுக்குக் காட்டில் அழுகை யுற்றிடுதல்*

*முதலிய வுவமான வாக்கியப் பொருளுக்கும் யாது அது என்ற சொற்களால் ஒற்றுமை கூறப்பட்டது.*

**காரண ஆராய்ச்சியணி**

*குறைவில்லாத காரணமிருந்துங் காரியம் பிறவாமையைச் சொல்லுவது காரண ஆராய்ச்சியணியாகும். இதனை வடநூலார்* **'விசேடோக்தியலங்கார'** *மென்பர்.*

**எடு :-**

"இறைமதனாந் தீப மெரிவுறா நின்றும்
குறைவிலது நேயமென்னோ கூறு."

*இதில், விளக்காகிய காரணமிருந்துங் காரியம் பிறவாமை காண்க. நேயம் என்பது விருப்பமும் நெய்யுமாம்.*

**காரகவேது**

*கருத்தா, பொருள், செயல், கருவி, காலம், இடம் ஆகிய காரணமாகக் கூறும் அணி காரகவேதுவாகும்.*

**எடு :-**

"எல்லைநீர் வையகத் தெண்ணிறந்த வெவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால் - முல்லைசேர்
தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வந்த புயல்."

**காரணமுந்துறூஉங் காரியநிலை**

*இதுவும் ஏதுவணியின் பாற்படும். காரணத்திற்கு முன்னர்க் காரியம் நிகழ்வதாம்.*

**எடு :-**

"தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவேள் - அம்பு
பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வருமென் றிருண்ட மனம்."

**காரணப் புனைவிலி புகழ்ச்சி யணி**

*இதுபுனைவிலிபுகழ்ச்சியணிவகைகளுள் ஒன்று. உவமானமாகிய காரணத்தால் உவமேயமாகிய காரியந் தோன்றுதலாம்.*

**எடு :-**

> "ஒழுகொளி விரிந்த கதிர்மணி வண்ண
> னுந்தியந் தாமரை வந்தோன்
> முழுமதிக் கலையு ணிறைந்தபே ரழகை
> மொண்டு கொண் டரிபரந் தகன்ற
> மழைமதர் நெடுங்கண் தமயந்தி வதனம்
> வகுத்தனன்."

*இதில், காரணமாகச் சொல்லப்பட்ட சந்திர சாரத்தினால் உயர்வுடைய முகத்தழகாகிய காரியந் தோன்றிற்று.*

**காரணமாலையணி**

*பின்பின்னாக வருவன வற்றிற்கு முன்முன்னாக வருவன வற்றைக் காரணங்களாகவேனும் காரியங்களாகவேனுஞ் சொல்லுவது காரணமாலையணியாம். இதனை வடநூலார் **'காரணமாலா'** என்பர்.*

**எடு :-**

> "நீதியாற் செல்வ நிகழ்செல்வத் தாற்கொடைமற்
> றோதுகொடை யாற்சீர் உள."

*இதில், நீதிமுதலியன செல்வ முதலியவற்றிற்குக் காரணமா தலையறிக.*

> "படர்நரகம் பாவத்தாற் பாவம் மிடியால்
> மிடியீவி லாமையினா மே."

*இதில், நரகம் முதலியன பாவமுதலியவற்றிற்குக் காரிய மாதல் காண்க.*

**காரண வொழிப்பணி**

*இது ஒழிப்பணி வகைகளுள் ஒன்று. சிறப்பு, பண்பு ஆகிய உண்மை நிலைகளைக் காரணத்தோடு ஒழிப்பது காரணவொழிப் பணியாம்.*

**எடு :-**

> "பொங்கு வெம்மை பொழிதலி னாலிது
> திங்க ளன்று தினகரன் தானன்று

கங்கு லாதலி னாற்கட னின்றெழீஇத்
தங்கு றும்வட வைத்தழ லாகுமே.”

**காரியப் புனைவிலி புகழ்ச்சியணி**

*இதுவும் புனைவிலி புகழ்ச்சியணி வகைகளுள் ஒன்று. உவமானமாகிய காரியத்தில் உவமேயமாகிய காரணந் தோன்றுதலாம்.*

**எடு :-**

“மருக்கமழ்பூங் கோதை மடநடையைக் காணில்
செருக்கடையா தன்னத் திரள்.”

*இதில், செருக்கடையாமையாகிய காரியத்தினாலே மெல்லிய நடையழகாகிய காரணந் தோன்றிற்று.*

**காவியலிங்கவணி**

*புலவரால் யாப்பினுள் முதலே வெளிப்படையாகக் கூறப்பட்ட வினையாதொன் றவ்வினைக்கு எதிர்ப்பட்டதனால் உண்டான வினையும் அவ்வினையாலான காரியங்களும் எஞ்சி நிற்க அக்காரியங்களைக் குறித்துண்டாய தொழில் கேட்போருள்ளுறுத்துக் கொள்வதாகிய குறிப்பைத்தருவது காவியலிங்கவணியாம்.*

**எடு :-**

“சேதாம்பல் மலர்த்தடஞ்சூழ் சேறை மாயோன்
சிறைக்கருடன் றுணைப்புயத்திற் செகத்தைத் தாய
பாதார விந்தமலர் பதித்த காலைப்
பணைத்தெழலு மனு வெருவிப் பனுவ லார்ந்த
வேதாவை நோக்கினன்றன் குருவைப் பார்த்தான்
விண்ணவர் கோன் புகரினைவீ டணனும் பார்த்தான்
மூதாதை யொடுமுணர்த்த வுணர்ந்த பின்னர்
முத்த ரொடுந் திருவடிக்கீழ் முன்னி னாரே.”

*இதில் சேறைமாயோன் கருடன் துணைப் புயத்திற் திருவடியைப் பதித்த காலை யென்பதும், அக்கருடன் பணைத்தெழலும் என்பதும் வெளிப்படக்கிளந்தவினை. அக்கருடன் சிறகரை யசைத்துச் சண்ட வாயு வினையெழுப்ப என்னும் அவ்வினையாலாய வினையும், அச்சண்ட வாயும்*

வடவாக்கினியை யெழுப்புதலும், மீண்டும் அவ்வாயுத்தானே சமுத்திரங்களிற் சல முவட்டெடுத்து நிற்கும் நிலையை விட்டு வழிந்து பொங்க வெழுப்புதலுமாகிய மூவகை வினை விளை பயனெஞ்சி யாப்பினுட் கூறப்படாமல் மறைந்து நின்றன.

**குணக்குறை விசேடம்**

இதுவும் விசேடவணி வகைகளுள் ஒன்று. குணத்திற் குறை கூறிக் காரியத்தில் உயர்வு தோன்றக் கூறுவது குணக்குறை விசேடம் என்னும் அணியாம்.

**எடு :-**

“கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்தகொடைச் சென்னி - நாட்டம்
சிவந்தன வில்லை; திருந்தார் கலிங்கம்
சிவந்தன செந்தீத் தெற.”

**குணத்தன்மையணி**

இது தன்மையணி வகைகளுள் ஒன்று. குணத்திலுள்ள பலவிதமான இயல்புகளை உள்ளவாறே அழகுறப் பாடுவது.

**எடு :-**

உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள் - புள்ளலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்.”

இது கடவுளை வணங்குதலால் உண்டாகும் ஆனந்தத்தின் தன்மையைக் கூறியதனால், குணத்தன்மையாம்.

**குணவேற்றுமையணி**

கூற்றினாலாவது குறிப்பினாலாவது பண்பு ஒப்புமை யுடைய இருபொருளை ஒருபொருளாக வைத்து இவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்லுவது குணவேற்றுமை யணியாகும்.

**எடு :-**

“சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானாம்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார் - பொற்றொடியே!

ஆழி யுடையான் மகன்மாயன் செய்யனே
கோழியுடையான் மகன்.''

**குறிநிலையணி**

*புகழ்பொருளை உணர்த்துஞ் சொற்களால் குறித்தறி தற்குத் தகுதியாகிய பொருளைச் சொல்லுதலாம். இதனை வடநூலார்* **'முத்திராலங்கார'** *மென்பர்.*

**எடு :-**

''மந்தா கினியணி வேணிப் பிரான் வெங்கை மன்னவநீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வ தெங்ஙன்
சிந்தா மணியுந் திருக்கோவை யுமெழுதிக் கொளினும்
நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே.''

**குறிப்பு நவிற்சியணி**

*ஒரு பொருளைக் குறித்துச் சொல்ல வேண்டியதை மற்றொரு பொருளைக் குறித்துச் சொல்லுதலாம். ஒட்டணி, பிறிது மொழிதல், நுவலாநுவற்சி என்பனவும் இது. இதனை வடநூலார்* **'கூடோக்தியலங்கார'** *மென்பர்.*

**எடு :-**

''பிறன்புலத்தில் வாய்நயச்சொல் பெட்புடன் கொள்காளாய்
இறைவனடை கின்றனன்விட் டேகு.''

*இதில், மறைவிடத்தில் பிறன்மனையாள்வாய்ச் சொல்லைக் கேளாநிற்கும் விடனைக் குறித்துச் சொல்ல வேண்டியதைப் பிறன் விளைநிலத்தின் நெல்லை மேய்கின்ற எருதைக் குறித்துச் சொல்லியதைக் காண்க. சொல் - நெல்லும், மொழியுமாம்.*

**குறை ஒற்றுமை உருவகம்**

*குறைவில்லாமையைக் காட்டி உருவகிப்பது குறை ஒற்றுமை உருவகம் என்னும் அணியாம்.*

**எடு :-**

''எல்லாரும் ஏத்துபுகழ் ஏந்தலிவன் நெற்றிவிழி
இல்லாத சங்கரனே காண்.''

*இதில் நெற்றிக்கண் சங்கரனுக்கு ஒரு குறையாகக் கொள்ளப் படுகின்றது. அந்தக் குறையும் இல்லாத சங்கரன் என்று ஒருவன் புகழப் பெறுவதால் குறை ஒற்றுமை உருவகம் ஆகின்றது.*

**கூடசதுக்கம்**

*இது சித்திரக் கவிவகைகளுள் ஒன்று. இறுதியடியில் உள்ள எழுத்துக்கள் மற்றை மூன்று அடிகளுள்ளும் மறைந்து நிற்கப்பாடுவது கூட சதுக்கமாம்.*

**எடு :-**

"புகைத்தகைச் சொற்படைக் கைக்கதக் கட்பிறைப் பற்கறுத்த
பகைத்திறச் சொற்கெடச் செற்றகச் சிப்பதித்துர்க்கை பொற்புத்
தகைத்ததித் தித்ததுத் தத்தசொற்றத்தைப் பத்தித்திறத்தே
திகைத்தசித் தத்தைத் துடைத்தபிற் பற்றுக் கெடக்கற்பதே."

**கூட்டவணி**

*இவ்வணி இரண்டு வகைப்படும்.*

*(1) பகையில்லாமல் ஒரு காலத்தில் கூடத்தக்க பொருள் களுக்குக் கூட்டத்தைச் சொல்லுதல்.*

**எடு :**

நின்சீ ருருவு வெளிப்படுத னோக்கி நோக்கி நிலைதளரும்
என்பூ டுருக விளமுலைமேற் புல்லு முனிந்தா யெனவருந்தும்
அன்போ டூடறீர்த்த னன்போ னகைக்கு மகன்றா யென வெளியிற்
பின்போ தருநல் லுணர்விழந்த பித்தர் போலப் பேதுறுமால்."

*இதில், நிலைதளர்தல், புல்லல், நகைத்தல் முதலியன கூடின.*

*(2) பலகாரணங்கள் கூடுதலால் ஒருகாரியம் பிறத்தல்.*

**எடு :-**

"குலமும் உருவுங் குணமுந் திருவும்
நலமுமுயர் கல்வி நயமும் - வலமும்
செருக்கைவிளைக்கின்றனவிச் செம்மற்கு நாளும்
திருக்கறுநன் மாண்பிற் செறிந்து."

**கூடாமை அணி**

ஒரு செயல் தோன்றுதலை அருமையுடையதாகச் சொல்லுவது கூடாமையென்னும் அணியாகும்.

**எடு :-**

"அடுக்கலையோர் கையினா லாயச் சிறுவன்
எடுக்குமென யாரறிவா ரீங்கு."

**கூடாவியற்கை**

இதுவும் வேற்றுப் பொருள் வைப்பணியின் வகைகளுள் ஒன்று. கூடாததனைக் கூடுவதாக்கிப் பாடுவதாம்.

**எடு :-**

"ஆர வடமு மதிசீத சந்தனமும்
ஈர நிலவு மெரிவிரியும் - பாரில்
துதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்
விதிவகையான் வேறு படும்."

இதனுள், குளிர்ச்சியாகிய முத்துமாலை முதலியவற்றில் அழலின் தன்மையாகிய கூடாததனைக் கூடுவதாக நியமங் காட்டி நாட்டினமையை யுணர்க.

**கூடுமியற்கை**

இதுவும் வேற்றுப் பொருள் வைப்பணியின் வகைகளுள் ஒன்று. கூடுவதனைக் கூடுவதாகக் கூறுவது கூடுமியற்கை என்னும் அணியாகும்.

**எடு :-**

"பொய்யுரையா நண்பர் புனைதேர் நெறிநோக்கிக்
கைவளைசோர்ந் தாவி கரைந்துகுவர் - மெய்வெதும்பப்
பூத்தகையுஞ் செங்காந்தள் பொங்கொலிநீர் ஞாலத்துத்
தீத்தகையார்க் கீதே செயல்."

தீத்தகையார் - தீக்குணமுடையார்! தீப்போலும் நிறத்தினை உடைய காந்தட் பூக்கள்.

**கையறல் விலக்கு**

*தத்தமக்கு வேண்டிய பொருண்மேல் முயலும் முயற்சி யின்மை தோன்றக் கூறுவது கையறல் விலக்கு என்னும் அணியாம். கையறலாவது செய்யாதொழிந்த செயல்களுக்கு வருந்துதல்.*

**எடு :-**

“வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
ஆர்த்த வறிவில்லை யம்பலத்துக் - கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து.”

**கைதவவொளிப்பணி**

*கைதவம் முதலிய சொற்களைக் கூறி உவமேயத்தை மறைத்தல் கைதவவொளிப்பணியாம்.*

**எடு :**

“நீரொன்றுசொ லோய்கானிடை நீள்நண்பகல் வெயிலால்
வாரொன்றிய சூடுண்டவண் வதிதாருகள் கிளையின்
சாரொன்றெரி சிகையென்றகை தவமே கொடு நாவைக்
காரொன்றிட நீள்செய்திர வுறுமேயிது காணாய்.”

**சங்கரவணி**

*பாலினிடத்துக் கலந்த நீர்போல வோரணி வெளிப்படை யாய்த் தோன்றிப் பிறிதோரணி குறிப்பினாற் கொள்ளுமாறு இரண்டணியாய் நிற்பன சங்கரமென்னும் அணியாம். இதனைக் கலவையணி யென்பார் அணியிலக்கமுடையார்.*

**எடு :-**

“நறையார் வகுளப் பிரான்குரு கூரனன்னீர்ப் பொருநைத்
துறையான் வழுதி நன்னாட் டெங்கண்மாதுன்னைத் தோய்ந்தமுதுக்
குறையாலரும்பம்பலாயது நாளுங்குறை நயந்துன்
மறையால் வரவரவேயலரானது மன்னவனே.”

*இதில், வறிதே அம்ப லென்னாது அரும்பென்னுங் கிரியை யால் அம்பலாகிய அரும் பென்னும் மாட்டேறில்லாத வுருவகந் தோன்ற, அலராயிற்றெனவே மலர்ந்த போதாயிற்றென வுஞ்*

சிலேடை குறிப்பினாற் கொள்ளப் படுதலால் ஈரணியாதலா னென்க.

**சங்கீரண வணி**

அணிகள் பலவுந் தம்முட் பொருந்த உரைப்பது சங்கீரணம் என்னும் அணியாம்.

**எடு :-**

"தண்டுறைநீர் நின்ற தவத்தா லளிமருவு
புண்டரிக நின்வதனம் போன்றதால் - உண்டோ
பயின்றா ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேல்
முயன்றான் முடியாப் பொருள்."

இதனுள், "தண்டுறை நீர் நின்ற தவம்" என்பது தற்குறிப் பேற்றம் "தவத்தால்" ---------- என்பது காரகவேது "அளிமருவு" என்பது சிலேடை "புண்டரிகம் நின்வதனம் போலும்" என்பது உவமை 'உண்டோ முயன்றால் முடியாப் பொருள்' என்பது வேற்றுப் பொருள் வைப்பு. 'உளம் பருகும் பான் மொழியாய்' என்பது சுவை.

இப்பாட்டிற்கு இவ்வண்ணமே பல அணிகளும் காண்க.

**சமவணி**

இருமொழியும், பலமொழியும் தம்முள் மாத்திரையானும் ஓரெழுத்தானும் வேறுபாடு இல்லாமல் தம்முள் ஒப்ப வருவது சமவணி எனப்படும்.

**எடு :**

"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமா
நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாஞ் - சீரளவு
பாட்டொன் றொழிப்ப விசையா மதனளவு
மீட் டொன் றொழிப்ப மிடறு."

**சமாகிதவணி**

முன்பு தன்னால் முயலப்பட்ட தொழிலினது பயனானது அத்தொழிலாலன்றிப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறி முடிப்பது சமாகிதவம் என்னும் அணியாம். (சமாகிதம் - துணைப் பேறு.)

**எடு :-**

"அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை - பெருமான்
அணியாக மாரத் தழுவினா டான்முன்
தணியாத வூட றணிந்து."

**சமாதானவுருவகம்**

*இது உருவக அணிகளுள் ஒன்று.*

*ஒரு பொருளை நன்றாக உருவகஞ்செய்து, அதனையே தீங்கு தருவதாகக் கூறி, அத்தீங்கும் அப்பொருளாலே வருகின்ற தன்று என்பதற்குப் பிறிதோர் காரணங்கூறித் தொடுப்பது சமாதானவுருவகம். இதனை நட்புருவகமென்பார் மாறனலங்கார முடையார்.*

**எடு :-**

"கைகாந்தள் வாய்குமுதங் கண்ணெய்தல் காரிகையீர்!
மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கம் - இவ்வனைத்தும்
வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன்
றின்மையே யன்றோ வெமக்கு."

**சமுச்சயவுவமை :**

*இஃது உவமை வகைகளுள் ஒன்று. அதனை யொப்பது இதனானே யன்றி இதனாலும் ஒக்கும் என்பதாம்.*

**எடு :-**

"அளவே வடிவொப்ப தன்றியே பச்சை
இளவேய் நிறத்தானு மேய்க்கும் - துளவேய்
கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரம்
தொலைக்குமரி யேறுகைப்பா டோள்."

**சமுச்சியவணி : (அ)**

*ஒரு பொருட்கு இன்பமாதல் துன்பமாதல் உற்றதை யொன்றொன்றாயே கூறாது பலவாகக் கூறுவதுஞ் சமுச்சியம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"கடிதுமலர்ப் பாணங் கடிததனிற் றென்றல்
கொடிதுமதி வேயுங் கொடிதாற் - படிதழைக்கத்
தோற்றியபா மாறன் றுடரியின்மா னின்னுயிரைப்
போற்றுவதார் மன்னா புகல்."

*இதனுள், துன்பஞ் செய்வதை யொன்றாயே கூறாது பல வாகவே திரட்டிக் கூறியவாறு காண்க.*

**சமுச்சியவணி : (ஆ)**

*இன்பமுந் துன்பமும் இருவயிற் பிறந்ததாகக் கூறுவனவும் சமுச்சியவணியாம்.*

**எடு :-**

"காரி தருமாறன் காசினிமீ தேயுதிப்ப
வாரியர்மெய் பூரித் தகமகிழ்ந்து - பேரின்ப
முள்ளத் துடிக்கு முறுவலத்தோள் வாதியர்மெய்
துள்ளத் துடித்ததிடத் தோள்."

**ஞாபகவேது :**

*கருத்தா, கருவி, பொருள், செயல், காலம், இடம் ஆகிய காரணமின்றிப் பிறகாரணத்தினால் உய்த்துணரத் தோன்றுவது ஞாபகவேது என்னும் அணியாம்.*

**எடு :**

"காதலன்மே லூடல் கரையிறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப - மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து."

**சாதிக் குறைவிசேடம்**

*இது விசேடவணிவகைகளுள் ஒன்று. சாதியில் குறைவு பாடுகாட்டிக் காரியத்தில் உயர்வு தோன்றச் சொல்லுதலாம்.*

**எடு :**

"மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட
ஆயனார் மாறேற் றமர்புரிந்தார் - தூய

பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற்
புரந்தரனும் வானோரும் போல்."

*இதில், 'ஆயனார்' என்று கூறி உயர்ந்த தேவர்களை வெல்லுதலாகிய காரியத்தில் உயர்வு விளங்கக் கூறினமையால் சாதிக்குறைவிசேடம் அமைதல் காண்க.*

**சாதித்தன்மையணி**

*தன்மையணி வகைகளுள் ஒன்று. சாதியிலுள்ள பல விதமான தன்மைகளை உள்ளவாறே அழகுபடுத்திப் பாடுவது. சாதியாவது ஒரு நிகரனவாகிய பலபொருள்களுக்குப் பொதுவாக நிற்பதோர் தன்மையாம்.*

**எடு :**

"பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற - மெய்த்தவத்தோர்
ஆகத்தா னம்பலத்தா னாரா வமுதணங்கின்
பாகத்தான் சூடும் பணி."

*இது பாம்புச் சாதியின் தன்மையைக் கூறியதனால், சாதித் தன்மையாயிற்று.*

**சித்திரவணி**

*காதால் அறிந்தவற்றைக் கண்ணாற்கண்டாற்போலப் பிறர் தெளிவாக உணர எடுத்த பொருளை விரித்துக் காட்டல் சித்திர வணியாகும்.*

**எடு :-**

"அவிர்பூ ணொலியா மலடக் கினளாய்க்
கவர்வான் வரல்கண் டுமகன் றிலதாற்
றுவர்வாய் மயிறொட் டிடலா குமென
நவைதீ ரனமெல் லநடந் ததுவே."

**சிலேடையணி**

*ஒரு வகையா நின்ற தொடர் சொல் பலபொருள்களது தன்மையைத் தெரிவிப்பது சிலேடை என்னும் அணியாம். அது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இரண்டு வகைப்படும்.*

**எடு :-**

மடையன் - சமையல் செய்பவன், முட்டாள்.

**சிலேடையின் முடித்தல்**

*இது வேற்றுப் பொருள் வைப்பணியின் வகைகளுள் ஒன்று. முன்னர் வைத்த பொருளையும், பின்னர் வைத்த பொருளையும் இணைக்கும் ஒரு சொற்றொடரால் சொல்லுவது சிலேடையின் முடித்தல் என்னும் அணியாகும்.*

**எடு :-**

"எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும் - முற்று
முடியாப் பரவை முழங்குலகத் தென்றும்
கொடியார்க்கு முண்டோ குணம்."

*இதில் கொடியார் என்றது முல்லைக் கொடிகளையும் கொடியவர்களையும் உணர்த்தியது. இதனுள் கொடுமையுடை யார்க்கும் கொடிக்குஞ் சிலேடை வந்தவாறு காண்க.*

**சிலேடையுருவகம்**

*ஒரு பொருளையொரு செய்யுளகத்து இருபொருள் பயப்பதாகப் பலவிடத்தினும் புணர்த்தி இறுதியில் இருபொருள் பயப்பதாக வுருவகஞ் செய்து பாடுவது சிலேடையுருவகமாகும்.*

**எடு :-**

"விற்புடைக்கீழ் மன்னி மிகுநாணி டைதழீஇச்
சுற்றுடைமாண் கோதைத் தொடை செறியும் - பொற்புடைத்தாம்
பாணிழையா வண்டுலவும் பைந்துளவ மாலுறையூர்
மாணிழையார் சேயரிக்கண் வண்டு."

*இது கண்ணிற்கும் அம்பிற்கும் சிலேடை.*

**சிறப்பணி**

*ஒப்புமையாற் பொதுமையுற்றிருந்த இரண்டு பொருள் களுக்கு ஒரு காரணத்தால் சிறப்புத் தோன்றக் கூறுவது சிறப்பணியாகும். இதனை வடநூலார்* ***'விசேடாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"விதுவெழலுஞ் சோர்வுறலான் மின்னார் முகத்தின்
பதுமமலர் வேறு படும்."

**சிறப்புநிலையணி**

*இவ்வணி மூன்று வகைப்படும்.*

*1. புகழ்பெற்றதாகிய அடிப்படை இல்லாதிருப்பச் செயல் நிகழ்வைச் சொல்லுதல்.*

**எடு:-**

"தினகரனில் லாமலவன் செய்ய கதிர்கள்
இனிதிலங்குந் தீபத் திருந்து."

*2. ஒரு பொருளைப் பலவிடங்களில் இருப்பதாகக் கூறுதல்.*

**எடு :-**

"ஆயிழை நல்லாள் அகம்புறமுன் பின்னெங்கும்
மேயவெனக் குத்தோன்று மே."

3. சிறுசெயல் செய்யத் தொடங்கி அருமையாகிய மற்றொரு செயல் செய்தல்.

**எடு :-**

"மாட்சியினிற் காண்பேற்கு வள்ளலே கற்பகநற்
காட்சியுங்கிட் டிற்றெளிது காண்."

**சிறப்புருவகம்**

*இது உருவக அணி வகைகளுள் ஒன்று. ஒரு பொருளை எடுத்துக் கொண்டு அதற்குச் சிறந்த அடைகளை உருவகஞ் செய்து அவற்றானே அப்பொருளை உருவகமாக்கியுரைப்பது சிறப்புருவகமாகும்.*

**எடு :-**

"விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானாச்
சுரநதிபா யுச்சி தொடுத்த - அரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்ட பெருநாவாய்
ஆம்பொலிவிற் றாயினதா லின்று."

*இதனுள், நான்முகன் மீகானாகவும், சுரநதி பாயாகவும், அரிதிருத்தாள் கூம்பாகவும் உருவகஞ் செய்யப் புவி நாவாயாக உருவகிக்கப்பட்டமை காண்க.*

**சிறப்புப் புனைவிலி புகழ்ச்சி**

*இது புனைவிலி புகழ்ச்சியணி வகைகளுள் ஒன்று. உவமான மாகிய சிறப்புப் பொருளால் உவமேயமாகிய பொதுப்பொருள் தோன்றுதலாம்.*

**எடு :-**

"மன்னு மிருகமதைத் தாங்கு மதிகளங்கன்
என்னு பெயர்கொண் டிழிவுற்றான் - பன்மிருகக்
கூட்டங்கொல் சீயமிடல் கொண்மிருக ராசனெனப்
பீட்டினொடு கொண்டதொரு பேர்."

*இதில், கொடியவன் புகழடையான், மெல்லியன் புகழை யடைவானென்கிற பொதுப் பொருள் தோன்றச் சிறப்புப் பொருள் சொல்லப்பட்டது.*

**சிறுமையணி**

*வந்து தங்கும் பொருளிலும் அது வந்து தங்கும் இடம் சிறியது என்று சொல்லுவது சிறுமையணியாம். இதனை வடநூலார் **'அல்பாலங்கார'** மென்பர்.*

**எடு :**

"விரலாழி கைவளையாய் விட்டதினி ஆர்த்து
வரலாழிக் கென்செயுமெம் மாது."

**சுவையணி**

*உள்ளே நிகழ்ந்த தன்மை நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்பட வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம் என்னும் ஒன்பது வகை மெய்ப்பாடுகளும் அமையப் பாடுவது சுவையணியாகும்.*

**எடு :-**

"சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
ஈர்ந்திட் டுயர்துலைநா வேறினான் - நேர்ந்த

கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு''

**சுருங்கச் சொல்லலணி**

*அடைமொழியின் ஒப்புமையாற்றலால் அல்பொருட் செய்தி தோன்றப் புகழ் பொருட் செய்தியைச் சொல்லுவது சுருங்கச் சொல்லலணியாம். இதனை வடநுலார்* ***'சமா சோக்தியாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

''கொந்தார் குழல்சரியக் கோல முகம்வியர்ப்பச்
சந்தார் திதலைத் தனமசையப் - பந்தேநீ
சிற்றிடையா ளார்வமொடு தீண்டிவிளை யாடுதற்கு
நற்றவமென் செய்தாய் நவில்.''

*இதில், பந்தின் செயல் வருணிக்கப்பட்டுக் கொண்டிருக்க மாறாம் புணர்ச்சியில் இச்சையுடைய நாயகன் செயல் தோன்றிற்று.*

**செம்மொழிச் சிலேடை**

*சொல் நின்ற நிலை குலையாமல் ஒரே சொல் பலபொருள் தந்து நிற்பது செம்மொழிச்சிலேடை என்னும் அணியாம்.*

**எடு :-**

''செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்.''

*இஃது ஆதித்தனுக்குஞ் சோழனுக்குஞ்சிலேடை.*

**சொற்பின் வருநிலையணி**

*ஒரு செய்யுளுள், முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பல விடத்தும் வந்து, அச்சொற்குப் பொருள் வேறாயின் அது சொற்பின்வருநிலையணியாம்.*

**எடு :-**

''மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோ ளாதரித்த மாலையார் - மாலிருள்சூழ்

மாலையின் மால்கடலார்ப் பமதன் றொடுக்கு
மாலையின் வாளி மலர்."

இதில், மால், மாலை என்னும் இரு சொற்களும் செய்யுளில் பலவிடத்தும் வந்து வெவ்வேறு பொருள் பயந்து நின்றமையான் இது சொற்பின் வருநிலையணியாயிற்று.

**சொற்பொருட் பின்வருநிலையணி**

ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பல விடத்தும் வந்து ஒரே பொருளைத் தருமாயின் அது சொற் பொருட் பின் வருநிலையணியாம்.

**எடு :-**

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

இதில், சொல் என்னும் சொல் செய்யுளின் பலவிடத்தும் வந்து ஒரே பொருளைத் தந்தமையான் இது சொற்பொருட் பின்வருநிலையணியாயிற்று.

**சொல்விலக்கணி**

புகழினும் இகழினும் தானே உரைத்த சொல்லாராயா துரைத்தன் மறுத்து மற்றதின் மிக்க பிறிதொன் றுரைப்பது சொல்விலக்கணியாகும்.

**எடு :-**

"தானைவேந் தென்பான்றான் றானமா யொன்றீயான்
யானென்றொன் றீயா னவனென்றே - னேனையவர்
கொள்பொருள் கொள்வான் குடியலைத்து நோயீவான்
றெள்பொரு டேற்றாச் சினத்து."

**தகுதியணி**

இவ்வணி மூன்று வகைப்படும்.

(1) தகுதியாகிய இரண்டு பொருள்களுக்குத் தொடர்பைச் சொல்லுதல்.

**எடு :-**

“இந்தத் தரளவடம் ஏந்திழைநின் கொங்கைகளில்
சந்தமுறச் சேர்தல் தகும்.”

*(2) காரியத்தை அதன் காரணத்தோடொத்த செய்கையுள்ள தாகச் செல்லுதல்.*

**எடு :-**

“கானந் தனிலுதித்தக் கானந் தனையழித்திட்
டூனஞ்செய் தீயின் உதித்த புகை - தானும்
எழிலி கருவாகி யீர்ம்புனலைப் பெய்தத்
தழலை அவித்தல் தகும்.”

*(3) விரும்பத் தகாததை அடையாமல் விரும்பப்பட்டதை யடைதல்.*

**எடு :-**

“பொற்கொடிநீர் நின்று புரிதவத்தாற் கஞ்சமலர்
சொற்கவினின் தாளுருவாய்த் தோன்றியே - நற்கதியைச்
சேர்வுற் றனவுலகிற் செய்யதவ நற்கதியைச்
சார்விக்கு மென்பதுமெய் தான்.”

*இதில், நற்கதி - விண்ணுலகமும் நல்ல நடையுமாம்.*

**தடுமாறுத்தியலங்காரம்**

*ஒரு காரணத்திலான தொரு காரியமே, அக்காரியத்தால் தோற்றமானது அக்காரணமென உரைதடுமாறக் கூறுவது தடு மாறுத்தியலங்காரமாம். இதனை வடநூலார் அன்னி யோன்னிய வலங்காரமென்பர்.*

**எடு :-**

“வையந் திருநாரணன் றோற்றம் வண்டமிழோ
ரையன் மகிழ்மாற னாலென்னுந் - துய்யமகிழ்த்
தாமத்தான் றோற்றமும் பொற்றாமரையாள் கேள்வனருட்
சேமத்தா லென்னுந் தினம்.”

**தலைதடுமாற்றவுவமை**

*முதலில் வந்த உவமப்பொருள் இடையிலும், இறுதியில் வந்த உவமேயப் பொருள் முதலிலும், இடையினின்ற வுவமவுருபு இறுதியில் தொக்கதும் விரிந்ததுமாகப் புணர்த்துப் பாடுவது தலைதடுமாற்றவுவமையாம்.*

**எடு :-**

"மையமருண்கண் காவி வாய்பவளந் தோளிணைவே
யைய விடைநுண்ணூ லகலல்குல் - பையரவங்
கஞ்சத் திருமாது காதலிக்கு மார்பகத்தான்
றஞ்சைத் திருமான் றனக்கு."

**தற்குறிப்பேற்ற வணி**

*பெயரும் பொருளும் பெயராத பொருளும் என்னும் இரண்டு பொருட் கண்ணும் இயல்பாக நிகழும் தன்மையை நீக்கிப் புலவன் தான்கருதிய வேறொரு தன்மையினை அவற்றின் கண் ஏற்றிக் கூறுவது தற்குறிப் பேற்றம் என்னும் அணியாம். இவ்வணி அன்ன போல என்பவை முதலாகிய சில உவமைச் சொல் புணர்ந்து விளங்குந்தன்மையுடையது.*

**எடு :-**

"மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉம்
தேயுந் தெளிவிசும்பி னின்று.

**தற்குணவணி**

*யாதாயினும் ஒரு முக்கியப் பொருளினது குணத்தைச் சார்ந்த விடத்து அக்குணத்தை மற்றொரு பொருள் பற்றுதல் தற்குணம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"காமர் திருப்பாற் கடலுங் கருங்கடலா
நாமந் தனைப்பயிலு நாடோறும் - பூமடந்தை
சீர்மேனி யைத்தழுவுந் தேவேச னாகணையான்
கார்மேனி வண்ணங் கவர்ந்து."

**தற்பவ வணி**

*யாதொரு காரணத்தினால் யாதொன்று இரக்கப் பட்டதோ அது மீண்டும் அப்பொருட்காகப் பிறந்த தென்பது தற்பவம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"போர்ப்பட்ட வேற்கண் பொருநோக் கினுக்கிலக்காய்
நேர்பட் டிறந்த நிறைமன்னோ - கூர்பட்ட
நேமியான் முட்டத்து நேரிழைதன் னாணோக்கிற்
காமியா வந்ததுவே காண்."

**தன்குண மிகையணி**

*ஒரு பொருளின் சேர்க்கையால் மற்றொரு பொருளின் இயற்கைக் குணம் மிகுதலாம். இதனை வடநூலார் **'அறு குணாலங்கார'** மென்பர்.*

**எடு :-**

"வார்செவிசேர் காவிமலர் மானனையாய் நின்கடைக்கண்
பார்வையினான் மிக்ககரும் பண்பு."

**தன்மேம் பாட்டுரையணி**

*ஒருவன் தன்னைத்தானே புகழ்வது தன்மேம் பாட்டுரை என்னும் அணியாம்.*

**எடு :-**

"எஞ்சினா ரில்லை யெனக்கெதிரா வின்னுயிர்கொண்
டஞ்சினா ரஞ்சாது போயல்க - வெஞ்சமத்துப்
பேரா தவராகத் தன்றிப் பிறர்முதுகிற்
சாராவென் கையிற் சரம்."

*எனக்கெதிரே நின்று போர் செய்து பிழைத்தாரில்லை, என்பது இதன் பொருள். இதனால் தற்புகழ்ச்சி வெளிப்படல் காண்க, இத்தற்புகழ்ச்சி புறப்பொருளிலக்கணத்தில், நெடுமொழி கூறல் என்றும், நெடுமொழி வஞ்சி யென்றும் கூறப்படும்.*

**தன்மையணி**

*எவ்வகைப் பட்ட பொருளாக இருந்தாலும் அப்பொருளின் உண்மைத் தன்மையினைக் கேட்போர் மனம் மகிழுமாறு தக்க*

*சொற்களை அமைத்துப் பாடுவது தன்மை என்னும் அணியாம். இதைத்தன்மை நவிற்சி எனினும் அமையும். இது எல்லா அணி கட்கும் பொதுவாம். இவ்வணி, பொருட்டன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழிற்றன்மை என நான்கு வகைப்படும்.*

**திட்டாந்த வணி**

*யாதாயினும் ஒருபொருட்கு எய்திய நன்மை தீமைக் கூறு பாட்டை புலவனுட் கொண்டதனைத் தன்னாற் கூறப்படும். செய்யுளகத்து முதலில் கூறி, அதன் பின்னர் அதனோடு ஒப்புமை கொள்ளுமாறு தெளிவைத் தரும் மற்றொரு பொருளின் கூறு பாடும் அச்செய்யுளகத்துக் கூறுவது திட்டாந்தம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"ஆதித் திருமா லடியார் நிரப்பிடும்பை
வாதிக் கினும்வளர்ப்பார் வண்மையே - பாதிப்
பிறையாகி யும்மதியம் பேரிருள் சீத்தற்குக்
குறையா குறையா குணம்."

**திரிபணி**

*உவமானப் பொருளானது அப்பொழுது நிகழ்கின்ற செய்கையிற் பயன்படுதற்பொருட்டு உவமேயத்தின் உருவத்தைக் கொண்டு விளங்குதலாம். (பரிணமித்தலாம்) இதனை வடநூலார்* ***'பரிணாமாலங்காரம்'*** *என்பர்.*

**எடு ;-**

"செய்ய வடிக்கமலத் தாலத் திருந்திழையாள்
பைய நடந்து பசும்பொழிலுற் - றுய்ய
அலர்கட் குவளையினா னோக்கியகத் தன்பிற்
சிலசொற் றனளே தெரிந்து."

*இதில், கமலமுங் குவளையுமாகிய உவமானப் பொருள்கள் நடத்தலும் நோக்கலுமாகிய செய்கையில் உவமேய வடிவத்தைக் கொண்டு திரிந்தன. அடியுருக் கொண்டு திரிந்த கமலமெனவும், கண்ணுருக் கொண்டு திரிந்த குவளை யெனவும் விரித்துரைத்துக் கொள்க.*

**திரிபணி**

*செய்யுளடிகளின் ஓரடியில் வந்த எழுத்துக்களின் முதல் எழுத்துத் தவிர மற்ற வெழுத்துக்கள் பலவடிகளிலும் பொருள் வேறுபாட்டோடு தொடர்ந்து வருமாயின் திரிபணி ஆகும்.*

**எடு :-**

"சோதிமதி வந்துதவழ் சோலைமலை யோடிரண்டாய்
மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே - போதில்
இருபாற் கடலா னிபமூர்ந்தார்க் கெட்டாத்
திருப்பாற் கடலான் சிலம்பு."

*இதில் மூன்றாம் அடியில் உள்ள இருபாற் கடலான் என்பதும், நான்காம் அடியில் உள்ள திருப்பாற் கடலான் என்பதும் சேர்ந்து திரிபணியாகும். இவற்றில்* ***இ, தி*** *என்ற முதலிரண்டு எழுத்துக்கள் தவிர மற்றெழுத்துக்கள் ஒன்றாயிருக் கின்றன. ஆனால் இவற்றையும் பிரித்தால் முன்னது. இருப்பாற்கு + ஆடல் + ஆன்" என்றும் பின்னது "திரு+பால்+கடலான்" என்றும் பிரிந்து பொருள் வேறுபடுகின்றன.*

**தீவகவணி**

*ஓரிடத்து வைக்கப்பட்ட விளக்கானது பலவிடங்களிற் சென்று பொருள்களை விளக்குதல் போல, குணத்தானும், தொழிலானும், சாதியானும், பொருளானும் குறித்து ஒருசொல் ஓரிடத்து நின்று செய்யுளிற் பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள்தருவது தீவகம் என்னும் அணியாம். அது முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்றாம்.*

*(தீவகம் - விளக்கு)*

**தீங்குப் பொருட் காட்சியணி**

*ஒருவன் தன்னிடத்திலிருக்கின்ற செய்கையால் தீமைதரும் செயலைப் பிறருக்குச் செய்தால் தீங்குப் பொருட்காட்சியணி யாகும்.*

**எடு :-**

"அற்பன் மேன்மை யுற்றுவிளை யாட்டாகக்கீழ் வீழ்வனெனுஞ்
சொற்பு கலுகின்றது வாய்விண் டுலங்கு பொருப்பி னதுசிகரத்

திற்ப ரவியுற் றிருந் திடுநீர்த் திவலைக் குழுமென் சிறுகாலாற்
பொற்பின் மடந்தாய் பாரசைவு பொருந்திக் கீழ்வீழ்கின்றதுவே."

**துன்பவணி**

*விருப்பப்பட்ட பொருளைக் குறித்து முயற்சி செய்ய அதற்குப் பகைப் பொருள் கிடைத்தலாம். இதனை வடநூலார்* ***'விசாத நாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"சோருஞ் சுடர்விளக்கைத் தூண்டு கையிலவிந்த
தாருமிடர் கூர வகத்து."

**துணைசெயல் விலக்கு :**

*துணை செய்வாரைப் போலக் கூறி விலக்குவது துணை செயல் விலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

"விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெம்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே - விளைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்
கிடையூறு வாராம லேகு."

**தூரகாரிய வேது**

*இது ஏதுவணியின் பாற்படும்*

*ஒருவழிக் காரணம் நிகழப் பிறிதொரு வழிக்காரியம் நிகழ்வது தூரகாரியவேதுவாகும்.*

**எடு :-**

"வேறொரு மாதர்மேல் வேந்த னகநுதியால்
ஊறுதர விம்மா துயிர்வாடும் - வேறே
இருவரே மெய்வடிவி னேந்திழை நல்லார்
ஒருவரே தம்மி லுயிர்."

**தெரிதரு தேற்றவுவமை :**

*இது உவமைவகைகளுள் ஒன்று. ஐயுற்றதனைத் தெரிந்து துணிந்து கூறுவது தெரிதரு தேற்றவுவமையாம்.*

**எடு :-**

“தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியும்
காமர் மதியும் கறைவிரவும் - ஆமிதனால்
பொன்னை மயக்கும் புனைசுணங்கினார் முகமே
என்னை மயக்கு மிது.”

**தொகையுவமை**

*உவமேயம் ஒழிந்த மூன்றனுள், ஒன்றும் பலவுந் தொகுத லாலாகிய ஏழுமாம். அவை உருபுத் தொகை, பொதுத்தன்மைத் தொகை பொதுத்தன்மையுருபுத் தொகை. உவமானத்தொகை உருபுவுவமானத்தொகை, பொதுத்தன்மையுவமானத் தொகை, பொதுத்தன்மை யுருபுவமானத்தொகை எனப் பெயர் பெறும்.*

**எடு :-**

“புயற்கருங் குழலாள் காந்தட் போதினை நிகர்க்கும் கையாள்
கயற்கணாள் முகத்திற் கொப்பாங் காந்திகொள் பொருளுண்டோவாய்
நயச்சிவப்புளதொன் றில்லை நாசிபோல் வதுமற்றாகும்
குயிற்கிள வியினாள் பாவை குணத்தையார் குறிக்கவல்லார்.”

*இதில் அவ்வேழும் முறையே காண்க.*

**தொகையுருவக அணி**

*இது உருவக அணி வகைகளுள் ஒன்று ஆகிய ஆக என்னும் மாட்டேற்றுச் சொல்லைத் தொகுத்துக் கூறுவதாம்.*

**எடு :-**

“அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டும்
கொங்கை முகிழுங் குழற்காரும் - தாங்கியதோர்
மாதர்க் கொடியுளதொ னண்பா! வதற்கெழுந்த
காதற்குளதோ கரை.”

**தொடர்புயர்வு நவிற்சியணி : (அ)**

*இதுவும் உயர்வு நவிற்சியணி வகைகளுள் ஒன்று தொடர்பு இல்லாதிருப்பத் தொடர்பைக் கற்பித்தலாம்.*

**எடு :-**

“அகழு மிஞ்சியு மண்டத்தி னடிமுடி காறும்
புகுது மென்றுதம் மாற்றலான் முரணுபு புகுங்கால்

இகலும் வெஞ்சினச் சேடனோ டிராகுவென் றுரைக்கும்
நிகரில் பாம்புக ணெறியிடைக் காண்டலு நின்ற."

*இதில், தொடர்பு இல்லாமையால் தொடர்பு கூறப்பட்டது.*

**தொடர்புயர்வு நவிற்சியணி : (ஆ)**

*இதுவும் உயர்வு நவிற்சியணிவகைகளுள் ஒன்று. தொடர்பு இருக்கத் தொடர்பு இல்லாமையைக் கற்பித்தலும் தொடர்புயர்வு நவிற்சியணியாம்.*

**எடு :-**

"அற்பகத்தின் மன்னவனே நீயருள்செ யாநிற்பக்
கற்பகத்தை யாம்விரும்போங் காண்."

*இதில், கற்பகத்தை விரும்புதலின் தொடர்பிருக்க, அதில் அதனது இல்லாமை கூறப்பட்டது.*

**தொடர்நிலைச் செய்யுட் குறியணி**

*கருதிய பொருளைச் சொற்றொடரினாலாயினும் சொல்லினாலாயினும் அவ்விரண்டி னாலாயினும் வைப்பதாம். இதனை வடநூலார்* ***'காவிய வலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"காம நினைவென்றேன் கண்ணுதலோன் என்மனத்தின்
மீமருவு கின்றான் விடாது."

*இதில் பின் சொற்றொடரைக் கொண்டு வெல்லுதல் நிறுவப் பட்டது.*

"மிளிர்நீறே யீசன் விழிமணியே வாழி
தெளியுமையான் மீதணியுஞ் சீரால் - உளதாய
இன்பவொளி யைக்கவர்வீ டென்னுமோ கத்தழுந்தற்
கன்பினேன் செய்வே னமைந்து."

*இதில், வீடடைதலை அழுந்திய பற்றாகச் சொல்லுதலால் அறிக.*

"கலைதேர் புலமைநிறை காரிகைபா லோர்தன்
தலைமேற்கோட் பட்டதெக்கே சஞ்சீர் - நிலையதற்குப்

பேசுவிலங் காங்கவரி பின்புறங்கொள் சாமரையை
ஏசறையார் சொல்வார் இணை."

*இதில், புலமையிற் சிறந்த காரிகையாற் சிரமேற் கொள்ளப் பட்ட தெக்கேச மென்னும் தொடர்ப்பொருளும், விலங்கு பின்புறங்கொண்ட என்னும் சொற்பொருளும் சேர்ந்து காரிகை கூந்தற்குச் சாமரை யொப்பாகாமை முடிக்கப்பட்டது.*

**தொடர்நிலைச் செய்யுட் பொருட் பேரணி**

*ஒரு பொருளைச் சொல்லத் தண்டபூபிகா நியாயம் என்பர். மற்றொரு பொருள் தோன்றுதலாம்.*

**தண்டாபூபிகா நியாயம்**

*தண்டத்தைப் பெற்றுக் கொள்வதனால் அதனிற்சேர்த்து வைத்த அப்பம் முதலிய உணவு கொள்ளப்படுதலுந் தானே விளங்கல். இதனை வடநூலார்* ***'காவியார்த்தா பத்தியலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"மங்கைமுகம் திங்களையே வாட்டிற் றறைகுவதென்
பங்கயமென் போதுபடும் பாடு."

**தொடர் முழுதுவமையணி**

*இரண்டு தொடர்களில் இயல்பான அறத்தைத் தனித் தனியாக வெவ்வேறு சொற்களால் சொல்லுதலாம். இதனை வடநூலார்* ***'பிரதி வஸ்தூபமாலங்கார'*** *மென்பர். இவ்வணி நிகர் தொடர்முழுதுவமை, முரண் தொடர் முழுதுவமை என இருவகைப்படும்.*

**எடு :-**

(1) "தாபத்தி னால்விளங்கும் வெய்யோன் தராபதிநீள்
சாபத்தி னால்விளங்குந் தான்."

(2) "கற்றோ னருமைகற்றோ னேயறியும் வந்திமகப்
பெற்றோ ளருமையறி யாள்."

*இதில், கற்றோனே அறியு மென்றதற்கு, மலடி அறியாள் என்பதாற் றோன்றும், பெற்றவளே அறிவாளென்பது உவமானம்.*

**தொல்லுருப் பெறலணி**

*இவ்வணி இருவகைப்படும். இதனை வடநூலார்* ***'பூர்வ ரூபாலங்கார'*** *மென்பர்.*

*(1) ஒன்று மற்றொன்றன் குணத்தை யடைந்திருந்தும் மீண்டுந் தன் குணத்தையே அடைதலாம்.*

**எடு :-**

"நித்தன் களக்கறையா னீலுருக்கொள் சேடனுன்சீர்
உற்றடைந்தான் தன்முன் னுரு."

*(2) ஒரு பொருள் வேறுபாட்டை யடைந்த போதிலும் பழைய திசையைச் சொல்லுதலாம்.*

**எடு :-**

"வளியால் விளக்கவிந்து மாறுளத்தி னாணம்
ஒளிமே கலைசெயலால் உண்டு."

**தொழிற் குறைவிசேடம்**

*இது விசேடவணி வகைகளுள் ஒன்று. தொழிலில் குறைவு தோன்றக் கூறிக் காரியத்தில் உயர்வு தோன்றக் கூறுவது தொழிற் குறை விசேடம் என்னும் அணியாகும்.*

**எடு :-**

"ஏங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா - நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை."

*சோழனுடைய யானைகள், போரணிபூண்ட மாத்திரத்திலே பகைவர் தோல்வியுற்று விலங்கிடப்பட்டனரென்பது இதன் கருத்து. போரணி பூண்டு போய்ப் பகைவருடன் எதிர்த்துப் போர் செய்தலாகிய தொழில்களில் போரணி மாத்திரமே கூறிக் குறைபாடு விளக்கிக் காரியத்தில் உயர்வு தோன்றச் சொன்னமையால் இது தொழிற்குறை விசேடமாயிற்று.*

**தொழிற்றன்மையணி**

*தன்மையணி வகைகளுள் ஒன்று. தொழிலிலுள்ள பலவித மான இயல்புகளை உள்ளவாறே அழகுறுத்திப் பாடுவது.*

**எடு :-**

"சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும் - வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு."

*இது வண்டின் தொழிலைக் கூறியதனால் தொழிற்றன்மை. சூழ்ந்து முரலுதல் முதலியன தாதுண்ணுதற்கண் இயல்பாக நிகழுந்தன்மைகள்.*

**தொகைவிரியுருவக அணி**

*இது உருவக அணி வகைகளுள் ஒன்று. ஆகிய, ஆக என்னும் உருவக உருபுகள் மறைந்தும், விரிந்தும் நிற்கப் பாடுவதாம்.*

**எடு :-**

"வையந் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டுவன் சொன்மாலை
இடராழி நீங்குவே யென்று."

**நற்பொருட்காட்சியணி**

*ஒருவன் தன்னிடத்திலிருக்குஞ் செய்கையால் மற்றவருக்குத் தீங்கான பயனையாவது நன்மையான பயனையாவது அறிவிப்பது நற்பொருட் காட்சியணியாகும்.*

**எடு :-**

"இல்லறத்தோர் சாதுகட் கின்னதிதி பூசையினை
எல்லைசெய வேண்டுமென வேயுணர்த்தும் - நல்லுதய
மாமலைதன் பாலே வருமிரவி யைக்கொளுஞ்சூ
டாமணித்தா னத்தினிலே டா."

**நான்கடி முற்று மடக்கு**

*நான்கு அடிகளைக் கொண்ட பாவில் ஒரே விதமான சொற்கள். எல்லா வடிகளிலும் மடங்கி வந்து வேறு வேறு பொருள் வரத் தொடுப்பது நான்கடி முற்று மடக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

“வானக கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின.”

*(இ.ள்) மேகம் கடலினிடத்துற் கொடுக்கும் ஓசையோடு கூடியிருந்தன. வானத்தை வவ்விக் கொள்ளும் எழுச்சியவாயின; விண்ணகத்தை ஒக்கும் புகழை உடையன; மரங்களை உச்சியிலே உடையன பெரிய மலைகள்.*

**நிகழ்வின் நவிற்சியணி**

*முன் நடந்ததையேனும் பின்நடப்பதை யேனும் அப்போது நடக்கிறதாகச் சொல்லுவது நிகழ்வின் நவிற்சியணியாம். இதனை வடநூலார்* ***‘பாவிகாலங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

“பிரிவுணர்ந்த அந்நாளப் பேதைவிழிக் கஞ்சம்
சொரிதரளம் யான்றூர நாட்டில் - மருவலுறும்
இப்போதுங் காண்கின்றேன் என்செய்கோ இங்கிதற்குத்
துப்போது தோழநீ சூழ்ந்து.”

**நிதரிசன வணி**

*ஒரு வகையால் நிகழ்கின்ற ஒன்றற்குப் பொருந்தியதொரு பயனைப் பிறிதொன்றற்கு நன்மை புலப்பட நிகழ்வதாதல், தீமை புலப்பட நிகழ்வதாதல், செய்வதெனச் சொல்லுவது நிதரிசன மென்னும் அணியாம்.*

**எடு :-**

“பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும் - அறிவுறீஇச்
செங்கமல மெய்ம்மலர்ந்த தேங்குமுத மெய்யயர்ந்த
பொங்கொளியான் வீறெய்தும் போது.”

*பொங்கொளியான் - சூரியன். வீறு - ஒளி; பெருமை.*

**நிந்தை யுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. உவமையைப் பழித்து உவமிப்பது நிந்தையுவமையாம்.*

**எடு :-**

“மறுப்பயின்ற வாண்மதியு மம்மதிக்குத் தோற்கும்
நிறத்தலரு நேரொக்கு மேனும் - சிறப்புடைத்துத்
தில்லைப் பெருமா னருள்போற் றிருமேனி
முல்லைப்பூங் கோதை முகம்.”

**நியமவுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. இன்னதற்கு இன்னதே யுவமையாமெனத் தேற்றேகாரம் புணர்த்துத் துணிந்து சொல்லுவது நியம வுவமையாகும்.*

**எடு :-**

“தாதொன்று தாமரையே நின்முக மொப்பதுமற்
றியாதொன்று மொவ்வா திளங்கொடியே! - மீதுயர்ந்த
சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர்.”

**நியமவிலக்குச்சிலேடை**

*சிலேடித்த பொருளை நியமஞ் செய்து அந்நியமத்தை விலக்குதல். நியமம் - உறுதி.*

**எடு :-**

“சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன
இறைவநீ காத்தளிக்கு மெல்லை - முறையில்
கொடியன குன்றத்தின் மாளிகையே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள.”

*இதனால் சிறைபடுதலுங் கொடுமையும் இவன் காக்கின்ற நிலத்தின்கண் இல்லையெனக் கிடந்தவாறு கண்டு கொள்க.*

**நியமச்சிலேடை**

*பல பொருள்களுக்குப் பொருந்துமாறு சிலேடித்ததைத் தேற்றேகாரம் புணர்த்தி ஒன்றற்கு நியமமாக்குவது நியமச் சிலேடையாகும்.*

**எடு :-**

“வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே - பண்ணீர்மை
மென்கோல யாழே யிரங்குவன வேல்வேந்தே
நின்கோ லுலாவு நிலத்து.”

**நிரனிறையணி : (அ)**

*சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது, நிரனிறையணியாகும்.*

**எடு :-**

“காரிகை மென்மொழிய னோக்காற் கதிர்முலையால்
வார்பருவத் தாலிடையால் வாய்த்தளிரால் - நேர்தொலைந்த
கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லி கவிர்மென் மலர்.”

*இதில், சொல்லப்பட்ட உவமேயப் பொருள்களுள்ளும், உவமானப் பொருள்களுள்ளும் சொல்லாற் பண்ணும், பார்வையால் வேலும், தனத்தாற் கோங்கரும்பும், புருவத்தால் வில்லும், இடையால் கொடியும், வாயால் முருக்க மலரும் என முறையே நேர்நேராக இயையப்பொருள் பட்டு நிற்றல் காண்க.*

**நிரனிறையணி : (ஆ)**

*வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பு உள்ளவைகளை அம்முறையே சொல்லுவது நிரனிறையணியாகும்.*

**எடு :-**

“தரியலர்க்குந் தன்னிற் பிரியலர்க்கும் எங்கோன்
தெரிதுன்பும் இன்புஞ் செயும்.”

**நிரோட்டம்**

*இதழ்குவிக்கும் உயிரெழுத்தும் மெய்யெழுத்துங் கலவாமற் பாடுவது நிரோட்டம் என்னும் அணியாம்.*

**எடு :-**

“எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கரிய செயல்.”

**நினைப்பணி**

*ஒரு பொருளைப் பார்த்து அதோடு ஒப்புமையுடைய மற்றொரு பொருளை நினைத்தலில் அமைவது நினைப்பணி யாகும்.*

**எடு :-**

"காதலுறு கஞ்சமலர் கண்ட வெனதுமனம்
கோதைமுகம் தன்னைநினைக் கும்."

**நுட்பவணி**

*பிறர் கருத்தை யறிந்து கொண்டு வெளிப்படையாகக் கூறா மல் குறிப்பினானாதல், தொழிலினானாதல் அரிதாக நோக்கி யுணருந் தன்மையுடையதாய்க் கூறுவது நுட்பம் என்னும் அணி யாம். இதனை வடநூலார்* **'சூட்சுமாலங்கார'** *மென்பர்.*

**எடு :-**

"காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்
பேதைய ராயம் பிரியாத - மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு."

*இதில், மாதர் கூட்டத்திலிருக்கின்ற தலைவி தலைவன் கருத்தை அறிந்து தன் செய்கையால் இரவிடை வருக வென்று சொல்லியது காண்க.*

**நுகர்ச்சியின்மையணி**

*ஒரு பொருளின் நுகர்வுக்கு வாராமையை அதன் இன்மைக்குச் சான்றாகக் கூறுவது நுகர்ச்சியின்மையணியாகும்.*

**எடு :-**

"மதியூ கிகளா யிருப்பருமன் மருங்கைப் பாரா திலையென்றே
யதிக பலமாய்த் தீர்மானித்தாரேன் முலையி னிருவரைகள்
பதியாதார மின்றியிருப் பமையாலிதும கரத்துவசன்
விதியிந் திரசா லத்தொழிலா மிகச் சயிக்கின் றாமம்மா."

**நெடுமொழியணி**

*போரை விரும்பினவொருவன் மண்ணினும் விண்ணினும் தனக்கு ஒருவர் நிகரில்லையெனத் தன்னைத்தான் உயர்த்திக் கூறுதல் நெடுமொழியென்னும் அணியாம்.*

**எடு :-**

"அரசர் மறவ ரகத்துதித்த பொன்னை
முரசதிரக் கொண்டிட மான்மோகூர் - வரையயலே
யானைமேல் வந்தா ரரம்பையரை வேட்டவரும்
வானையே சார்ந்தார் மடிந்து."

**பதப் பொருட் காட்சியணி**

*காட்சியணி வகைகளுள் ஒன்று. உவமான உவமேயங் களுள் ஒன்றில் ஒன்றனது இயல்பைக் கூறுதலாம்.*

**எடு :-**

"குவளை மலரழகைக் கொண்டனசீ ரார்ந்து
கவினுமிளந் தோகாய்நின் கண்."

"மருத்தகுகோ தாய்நின் வதனத் தொளியைத்
தரித்துளதா லொண்சீர்ச் சசி."

*இவற்றுள், முறையே உவமேயத்தில் உவமான இயல்பும், உவமானத்தில் உவமேய இயல்பும் கூறப்பட்டன.*

**பரிசங்கையணி :**

*உயர்திணை அஃறிணை யென்னும் இரண்டு திணையின் கண்ணொரு திணைக்கண் ணொருகூட்டத் தொரு பொருளினைப் பிரித்து உயர்த்திக் கூறுவது பரிசங்கையென்னும் அணியாம்.*

**எடு :-**

"பதிகளி னதிபதி யரங்கநன் பதியே
நதிகளி னதிபதி பகீரத நதியே
நிதிகளி னதிபதி சங்க நிதியே
யெதிகளி னதிபதி பூதூ ரெதியே."

**பரியாயவணி**

*யாதாயினும் ஒருபொருள் பழமைத்தாகித் தொடர்புறப் பலவாயினும் பலமுறையே பலபிறப்புப் பயின்றதென்று கூறுவதும் பரியாய வணியாம்.*

**எடு :-**

“அன்று மலரி லமிர்திற் கொழுமுனையிற்
றுன்று துழாய்க்காட் டிற்றோன்றியே - யின்று
நினையிற் றமிழ்மாற னீள்குன்றவாணர்
மனையிற் பிறந்தனள்பூ மாது.”

**பலப்பட புனைவணி**

*இவ்வணி இரண்டு வகைப்படும்.*

*(1) ஒரு பொருளிற் பலரும் பல இயல்புகளினாலே பலபொருள் களைக் கூறுதல்.*

**எடு :-**

“ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.”

*(2) ஒருவரே ஒருபொருளில் கருத்து வேறுபாடுகளால் பல பொருள்களைக் கூறுதல்.*

**எடு :-**

“செல்வ மதிற்றனதன் செப்புகொடை யிற்கன்னன்
கல்விதனிற் சேடனிவன் காண்.”

**பலவயிற் போலியுவமை**

*இது உவமைவகைகளுள் ஒன்று. ஒரு தொடர் மொழிக் கண் பல உவமை வந்தால் வந்த உவமை தோறும் உவமைச் சொல் தோன்றப் புணர்த்துப் பாடுவது பலவயிற் போலியுவமையாம்.*

**எடு :-**

“மலர்வாவி போல்வரான் மாதர் கமல
மலர்போலு மாதர் வதனம் - மலர்சூழ்
அளிக்குலங்கள் போலு மளக மதனுட்
களிக்குங் கயல்போலுங் கண்.”

**பரவசவிலக்கு**

*தன்வயமல்லாமை தோன்றக் கூறி விலக்குவது பரவச விலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

“செல்கை திருவுளமேல் யானறியேன் றேங்கமழ்தார்
மல்ல கலந்தங்கு மதர்விழியின் - மெல்லிமைகள்
நோக்குவிலக்குமே னோவா ளிவள்காதல்
போக்கி யகல்வாய் பொருட்டு.”

**பரிவருத்தனை யணி**

*பொருள்கள் ஒன்றற்கு ஒன்று கொடுத்து ஒன்று கொண்டன வாகச் சொல்லுவது பரிவருத்தனை என்னும் அணியாம்.*

**எடு :-**

“காமனை வென்றோன் சடைமதியுங் கங்கையும்
தாம நிழலொன்று தாங்கொடுத்து - நாமப்
பருவா ளரவின் பணமணிக டோறும்
உருவா யிரம்பெற் றுள.”

**பரியாயவணி : (அ)**

*யாதாயினும் ஒரு பொருள் பழமைத்தாகித் தொடர்புறப் பலவாயினும். பலமுறையே பலபிறப்புப் பயின்ற தென்று கூறுவதும் பரியாயம் என்னும் அணியாகும்.*

**எடு :-**

“அன்று மலரில மிர்திற் கொழுமுனையிற்
றுன்று துழாய்க்காட்டிற் றோன்றியே - யின்று
நினையிற் றமிழ்மாற னீள்குன்ற வாணர்
மனையிற் பிறந்தனள்பூ மாது.”

**பரியாயவணி : (ஆ)**

*தான் கருதியதனைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறி தொன்றினைக் கூறுவது பரியாயம் என்னும் அணியாகும். பரியாயம் - திறமாக அறிவிக்குஞ் சொல்.*

**எடு :-**

"மின்னிகரா மாதே! விரைசாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ - தன்னிகராம்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
இந்தீ வரங்கொணர்வல் யான்."

*இது, குறியிடத்து உய்த்து நீங்குவாள் கூறியது; அஃதாவது, தலைவனுக்குக் குறிப்பிட்டவிடத்தில் தலைவியைக் கொண்டு வந்து நிறுத்திச் செல்லுந்தோழி, அப்போது தான் அங்கு நிற்பது அவர்களின்பத்துக்குத் தடையாகுமென்று அவ்விடத்தை விட்டு நீங்கிச் செல்லக் கருதி ஒரு காரணமாகச் சொன்னது. இதில், தான் கருதியதனைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைக் கூறியதாகிய பரியாய அணி. அமைந்திருத்தல் காண்க.*

**பலவினைச் சிலேடை**

*தொடர்ந்து நின்ற சொற்கள் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டுப் பலபொருள்தந்து பலவினையால் முடிவது பலவினைச் சிலேடையாகும்.*

**எடு :-**

"தவிரா மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக் - குயிலிசையும்
மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலார்
இன்னுயிரை யீர்க்கின் றன.

*இது குயிற்குரலுக்கும், மடவார் கண்ணுக்குஞ் சிலேடை.*

**குயிற்குரல்மேற் செல்லுங்கால்**

*மது - தேன். செவி மருவி - செவியுட்புக்கு. செந்நீர்மை - கோடாத தன்மை. மேவலார் - பிரிந்தார். இன் - சாரியை.*

**கண்ணின் மேற் செல்லுங்கால்**

*மது - கள். செவிமருவி - செவியளவுஞ்சென்று, செந்நீர்மை - சிவந்தகுளிர்ச்சி. மேவலார் - புணராத்தலைவர். இன்னுயிர் - இனிய உயிர்.*

*இது நீண்டு, மருவி என்பன முதலிய பலவினைபற்றி வந்தமை காண்க.*

**பலபொருளுவமை**

*இஃது உவமை வகைகளுள் ஒன்று. ஒரு பொருட்குப் பல வுவமை காட்டுவது பலபொருளுவமையாம்.*

**எடு :-**

"வேலுங் கருவிளையு மென்மானுங் காவியும்
சேலும் வடுவகிருஞ் செஞ்சரமும் - போலுமால்
தேமருவி யுண்டு சிறைவண் டறைகூந்தற்
காமருவு பூங்கோதை கண்."

**பலபொருளுருவகம்**

*இஃது உருவக அணி வகைகளுள் ஒன்று. உயர்திணை அஃறிணை யென்று சொல்லப்பட்ட காட்சிப் பொருளுங் கருத்துப் பொருளும் ஒரு செய்யுளகத்து வந்தால் அவ்விரு பொருளையும் உருவகஞ் செய்து தொடுப்பது பலபொருளுருவக மாகும்.*

**எடு :-**

"தீதற்ற மெய்ஞ்ஞானத் தெப்பமுடன் மேதகுநாள்
வேதக் கடல்கடந்த வித்தகத்தாற் - கோதற்ற
வந்தாமத் தீவினுட் புக்காழியா ணாமணியைத்
தந்தானம் பூதூர்வந் தான்."

**பாவகக் கலவையணி**

*பலகருத்துகள் மேன்மேலாக வுண்டாவது பாவகக் கலவை யணியாகும்.*

**எடு :-**

"செயத்தகைமையில்லாத வீதெங் கேசந்
திரகுல மெங்கேயினுநா மிவட்காண் போமோ

வயத்துமற மணுகாமைக் கலவா நூறேர்
வாஞ்சினத்து மவள்முகமோ மருவுமேநன்
னயத்தினிலை மதியறத்தோர் நடையென் சொல்வார்
நாடுமவள் சொற்பனத்து மறியாளேயி
தயத்துணையே தயிரியங் கொள்வாய்நீ யெந்தத்
தருணனவ ளிதழ்பருகச் சார்குவானோ.''

**பாவகச் சேர்க்கையணி**

*ஒன்றுக் கொன்று பகைமையாக விருக்கின்ற இரண்டு கருத்துக்களை உறுப்பாகக் கொண்டது பாவகச் சேர்க்கையணி யாகும்.*

**எடு :**

''ஒருகண முண்டாம்விரகத் துயர்சகியாத் தலைவியைக்
கண்டோனுமேலாம்
பொருதலினா டம்பரத்தைக் கேட்டோனுமாகு நின்பாற் புளகத்தாலே
தெரிகணைசேர் மதன்றூணிபோல மலிந்திடுநல் வெற்றி
பரிவுறுமங் கலப்பாலி கைபோன்மின்னிடுமொருக போலந்தானே.''

**பாவகத்தோற்றவணி**

*கருத்துத் தோன்றுவதற்கு உறுப்பாக விளங்குவது பாவகத் தோற்றவணியாம்.*

**எடு :-**

''தயவா கரநின் னுறாவை யொப்பதாக வெனதன் னேயனைய
நயவோ திமிங்கால் கொடுவரைந்து நான்பார்த்திடகாட் டியதுன்னை
யயலே காண்நின் றவளாகியமர்ந்தித் தினத்தை யகற்றும் விருப்
புயர்வே னதனா லிப்போதிங் குறவே தயவு புரிகவே.''

*இதில், சிருங்கார ரசத்திற்கு நாயகன் வரவு முதலியவை களாலுண்டாகும் மதிவிளக்கம் என்ற நளன் தொடர்பான தமயந்தியினது கருத்தினுதய மங்கமாக விளங்குகின்றது காண்க.*

**பாவிக வணி**

*காவியப் பண்போடு, நிகழ்ச்சிகளை நிகழ்காலத்தில் நடப்பன போலப் படைத்து அதியற்புதமாகக் கூறும் தொடர்நிலைச் செய்யுட்களைக் கொண்ட ஒரு நூலின் முழுமையில் அமைவது பாவிக வணியாம்.*

எடு:-

"பொறையிற் சிறந்த கவச மில்லை."

**பிரதீபவணி**

*உலகத் தியாதாயினும் ஒளிமயமாம் ஒரு முக்கியப் பொருட்கு ஒப்புடையனவாம் பொருளால் அடையுங் காரியத்தை அம் முக்கியப் பொருளான் மிகவும் எய்தப் பெற்றதாயதனை மதித்து நல்லதெனவுரைப்பது பிரதீபம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"வேலா வலயம் விளக்கிய காரிருளைத்
தோலா துடற்றுஞ் சுடர்மயமாங் - கோலா
கலத்தமிழ்வே தச்செங் கதிருதிப்ப வும்பர்
தலக்கதிரென் வேண்டுமினித் தான்."

**பிரத்திய நீகவணி**

*யாதாயினும் ஓர் உவமேயப் பொருட்கு ஒரு திறத்தால் தோற்ற வுவமைப் பொருளத்திறத்தால் அதற்கு ஒத்ததோர் உவமப் பொருண்மேல் அமர்விளைப்பதாகக் கூறுதல் பிரத்திய நீகம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"தேமலர்வா விப்புதுவைச் செல்விமுகப் பொற்பினுக்குத்
தூமதியந் தோற்றதற்பின் றோலாத - காமருசீ
ரந்தா மரைமே லமர்விளைக்கும் கங்குலின்கண்
வந்தாடல் பெற்ற மதி."

**பிரிநிலை உயர்வு நவிற்சியணி**

*இதுவும் உயர்வு நவிற்சியணி வகைகளுள் ஒன்று. உலகத்தில் புகழ் பெற்று விளங்குவதாகிய தீரம், உருவம், செல்வம் முதலியவை கட்கு இனமாகிய தீராதிகளைப் பிரித்துச் சொல்லுதலாம்.*

**எடு :-**

"பாந்தண் முடியிற் பரிக்குங் குவலயத்தில்
வேந்தனது தீரமொன்றும் வேறு"

**எனவும்**

"போதார் மலர்க்கூந்தற் பூவை யிவள்படைப்புச்
சாதா ரணமான தன்று."

*எனவும் வரும். இவைகளில், தீரத்திலும் படைப்பிலும் இருக்கின்ற ஒற்றுமையில் வேற்றுமை கூறப்பட்டது.*

**பிரிநிலைநவிற்சியணி**

*பெயர்ச் சொற்களுக்கு உறுப்பாற்றலான் மற்றொரு பொருளைத் தந்துரைத்தலாம். இதனை வடநூலார்* ***'நிருக்தியலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"நலரையில ராக்குபழி நண்ணுதலால் வேத
அலரவனென் றுன்னையறை வார்"

**பிரிமொழிச் சிலேடை**

*தொடர்ந்து நின்ற சொற்கள் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டுப் பலபொருள் கொடுத்து நிற்பது பிரிமொழிச்சிலேடையாகும்.*

**எடு :-**

"தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய"

*இதில், தள்ளா + இடத்து + ஓர், எனப் பிரிந்து நின்று அழகு கெடாத நிலங்களிலுண்டாய உழும் எருது எனவும்,*

*தள்ளா + விடத்தேர் எனப்பிரிந்து நின்று அசையாத விடத்தேர் எனவும் வெவ்வேறு பொருள்வந்தவாறு அறிக.*

**பிறப்புப் பிரமாணவணி**

*நேரக்கூடியதைச் சொல்லுவது பிறப்புப் பிரமாணவணியாகும்.*

**எடு :-**

"பரனே பதகற் கிதுவரையுண்
டாகாத்துயர மினி யென்னோ
வரநேர் ந்திடுவ தத்தனையும்
பொறுத்தேன் மாறாத் துயரெனுட
னுரமா யுதித்த தானாலு
முன்பாற் சரணமடைந்தவற்குத்
திரமா மிழிவு வந்து பொருந்
திடுத னினக்குப் பெருமையன்றே.

**பிறவணியலங்காரம்**

*ஒருவர்க்குப் பொன்னினாலாதல் மணியினாலாதல் பொற் கொல்லராற் செய்யப்பட்டு அழகு கொடுக்கும் அணிகளையும் இகழ்ந்திடுந்தன்மைத்தாக அவர்க்கு அழகு கொடுப்பதான பிற வணிகள் புலவராற் கூறப்படுவது பிறவணியென்னும் அணியாம்.*

**எடு :-**

"கைக்கணியொன் றீகை கருத்திற் கணிஞான
மெய்ச்செவிகட் கேற்றவணி மேதகுநூ - லுய்த்தறிதல்
சென்னிக் கணிமாறன் சேவடிமேற் கொண்டிறைஞ்சல்
என்னுக் கணிவே றினி."

**பிறிதாராய்ச்சியணி**

*இவ்வணி அறுவகைப்படும்.*

*(1) உலகறி காரணமில்லாதிருப்பக் காரியம் பிறத்தலைச் சொல்லுதல்.*

**எடு :-**

"கடையாமே கூர்த்த கருநெடுங்கண் தேடிப்
படையாமே யேய்ந்தனம் பாவாய் - நடை ஞெமியக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
றாட்டாமே சேந்த அடி."

*இதில், கடைதல் முதலிய விளங்கிய காரணமில்லாமல் கூர்மையாதல் முதலிய காரியஞ் சொல்லப்பட்டன. இவற்றிற்கு இயல் பென்னும் பிறிதோர் காரணம் ஆராய்ந்து கொள்ளப் பட்டது.*

*(2) காரணத்தினது தருமமாவது சம்பந்தமாவது குறைவாக இருப்பக் காரியம் பிறத்தலைச் சொல்லுதல்.*

**எடு :-**

"திண்மையுங் கூர்மையுமில்லாக் கணைகளைச் சிந்துபுவன்
கண்மையின் மூவுலகங்களும் வென்றவக் காமனிகல்
உண்மையுணர்ந்து மொருநீ மறந்திடி னொண்டொடிதன்
பெண்மையென் பாடுபடும்புக லாயெம் பெருந்தகையே."

*இதில் வெல்லுவதற்கு ஏதுவாகிய அம்பிலே திண்மையுங் கூர்மையுங் குறைவாம்.*

*(3) காரியம் பிறத்தற்குத் தடையுளதாகவும் அது பிறத்தலைச் சொல்லுதல்.*

**எடு :-**

"அடுத்த நின்பிரதாப வருக்கனீர்
உடுத்த பார்மிசை மன்னவ வொண்குடை
விடுத்த வேந்தரை விட்டுவி டாதுமேல்
எடுத்த வேந்த ரினத்தைக் கனற்றுமே."

*இதில், பாதுகாப்பான குடை இருப்பவுஞ் சுடுதலாகிய காரியம் பிறந்தது.*

*(4) காரணமல்லாத மற்றொன்றாற் காரியம் பிறத்தலைச் சொல்லுதல்.*

**எடு :-**

"வழுவாத மானிவள்பால் வண்சங்கி னின்றும்
எழுமேநல் யாழி னிசை."

*(5) பகையாகிய காரணத்தினின்றுங் காரியம் பிறத்தலைச் சொல்லுதல்.*

**எடு :-**

சீர்தரு சோமன் பொழிசீ தளக்கதிர்கள்
சோர்தரவெம் மாதைச் சுடும்."

*(6) காரியத்தினின்றும் காரணம் பிறத்தலைச் சொல்லுதல்.*

**எடு :-**

"மற்பெருவள் ளாலுதித்த தேர்பெறுநின் வண்கையெனும்
கற்பகத்திற் சீர்ப்பாற் கடல்."

*இதில் சீர்ப்பாற்கடல் என்பது புகழாகிய பாற்கடல்*

**பிறிதின் குணம் பெறலணி**

*ஒரு பொருளானது தன்குணத்தை இழந்து பிறிதொன்றின் குணத்தைக் கவர்தலாம். இதனை வடநூலார்* ***'தத்குணாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"இவண்மூக் கணிமுத் திதழொளியாற் பெற்ற
துவண்பதும ராகத் தொளி."

*இதில், குணம் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலியன.*

**பிறிதின் குணம் பெறாமையணி**

*ஒருபொருளானது தன்னோடு தொடர்புடைய பிறிதொன்றன் குணம் அடையாமையைத் தெரிவிப்பது பிறிதின் குணம் பெறாமை யென்னும் அணியாம். இதனைவடநூலார்* ***'அதத் குணாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"புனைகழற்கா னங்கோன் புகழ்திசைவே ழுங்கள்
நனைமதத்திற் றோய்ந்து நயவார் - மனைவியர்வாட்
கண்மை யறத்துடைத்துங் காமர் மதிபோல
வெண்மையுடைத் தாய்விளங்கு மே."

**பிறிதுரையணி**

*ஒருவரை முன்னிலையாக்கிப் பேசுங்காலத்து அவர்களை நீக்கி யகன்றவராயினும் நல்லறிவில்லா விலங்கு, பறவை, மலை, மரம் முதலாயினவற்றை முன்னிலையாக்கிப் பேசுவது பிறிதுரை யணி எனப்படும்.*

**எடு :-**

"என்னெஞ் சொப்ப விருபொழுதும் விருட்பொழிலே
புன்னெஞ் சொப்ப வுயிரெல்லா நிழற்றுயருட்
டன்னெஞ் சொப்பத் தந்தோம் புந்திதயைப் பெருமா
னின்னெஞ் சொப்ப நிறுத்தினையே காடென்றான்." -தேம்பாவணி.

**பின்வருநிலையணி**

*ஒரு செய்யுளுள் முன்னர்வந்த சொல்லாவது பொருளாவது பின்னர்ப் பலவிடத்தும் வருமாயின் அது பின்வருநிலையென்னும் அணியாம். அவ்வணி சொற்பின் வருநிலையணி. பொருட் பின்வருநிலையணி, சொற்பொருட் பின்வருநிலையணி உவமைப் பொருட் பின்வருநிலையணி என நான்கு வகைப்படும்.*

**புகழாப் புகழ்ச்சியணி**

*பழித்தல் போலும் தன்மையால் ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி என்னும் அணியாம். இதனை அணியிலக்கணமுடையார் வஞ்சப்புகழ்ச்சியணி என்பார்.*

**எடு :-**

"போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தாற் றாங்குவதூஉம் - நீர்நாடன்
தேரடிக்கூர் வெம்படையாற் காப்பதூஉஞ் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த வுலகு."

*இதில், 'திருமால் எவ்வித இடருமின்றி ஓரடியின் வைத்த உலகைச் சோழன் பலவிதமாக இடர்பட்டுப் பாதுகாக் கின்றனன்' எனப் பழித்தாற்போலக் கூறியதால், பூமி முழுவதையும் சோழன் சக்கரவர்த்தியாக ஒருங்கே ஆட்சி புரிகின்றனன்" என்ற புகழ்ச்சி தோன்றுதல் மூலம் புகழாப் புகழ்ச்சியணி அமைந்திருத்தல் காண்க.*

**புகழுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. உவமையைப் புகழ்ந்து உவமிப்பது புகழுவமையாம்.*

**எடு :-**

"இறையோன் சடைமுடிமே லெந்நாளுந் தங்கும்
பிறையோர் திருநுதலும் பெற்ற - தறைகடல்சூழ்
பூவலயந் தாங்கு மரவின் படம்புரையும்
பாவைநின் னல்குற் பரப்பு."

**புகழ் பொருளுவமையணி**

*இரண்டு வாக்கியங்களுள் முன்னதில் உவமானமாகச் சொல்லப்பட்டதைப் பின்னதில் உவமேயமாக்கியும், உவமேய மாகச் சொல்லப்பட்டதை உவமானமாக்கியுஞ் சொல்லுதல். இதனைத் தண்டியாசிரியர் இதர விதர மென்பர்.*

**எடு :-**

களிக்குங் கயல்போலு நுங்கணுங் கண்போல்
களிக்குங் கயல்போல் கனிவாய்த் - தளிர்க் கொடியீர்

தாமரை போன்மலரு நும்முக நும்முகம்போல்
தாமரையுஞ் செவ்வி தரும்.

*எனத் தொன்று தொட்டு வரும் உவமான உவமேயங்களை அவ்வாறு சொல்வதும் அது. இதன் கருத்து மூன்றாவது ஒப்பது ஒன்று இன்று என்பதாம்.*

*உவமேயம் - வர்ணியமென்றும்; புகழ்பொருளென்றும்; புனைவுளியென்றும்; உவமானம் - அவர்ணியமென்றும், அல்பொரு ளென்றும், புனைவிலி யென்றுஞ் சொல்லப்படும்.*

**புணர்நிலையணி**

*வினையாலும் பண்பாலும் இரண்டு பொருள்களுக்கு ஒன்றே பொருந்தச் சொல்லுவது புணர்நிலை என்னும் அணியாகும்.*

**எடு :-**

"பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போதுடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால் - தாங்காதல்
வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி
உய்க்குந் தமியா ருயிர்."

**புனைவிலி புகழ்ச்சியணி**

*உவமானத்தை வருணிக்க அதனது தொடர்பால் உவமேயந் தோன்றுதல் புனைவிலி புகழ்ச்சியணியாம். இவ்வணி ஒப்புமைப் புனைவிலி புகழ்ச்சி, பொதுப் புனைவிலி புகழ்ச்சி, சிறப்புப் புனை விலிப் புகழ்ச்சி, காரணப் புனைவிலிப் புகழ்ச்சி, காரியப் புனைவிலிப் புகழ்ச்சி என ஐவகைப்படும்.*

**புனைவுளி விளைவணி**

*கூறப்பட்ட உவமேயத்தினால் தொடர்பாகிய மற்றோர் உவமேயம் தோன்றுதலாம். இதனை வடநூலார்* ***'பிரஸ்து தாங்குராலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

'அம்புயநற் போதிருப்ப அஞ்சிறைவண் டேகொடுமுள்
பம்புகைதை யாலென் பயன்."

*இதில், குளக்கரையில் தலைவனுடன் விளையாடுந்தலைவி சொல்லிய உவமேயமாகிய வண்டின் செயலினால், அழகுமிக்க*

*வளாகிய அவளைவிட்டு அச்சமுறுத்தும் பரத்தைபாற் செல்லுந் தலைவன் நிந்தையாகிய மற்றோருவமேயந் தோன்றிற்று.*

**பெருமையணி : (அ)**

*இவ்வணியை வடநூலார் **'அதிகாலங்கார'** மென்பர். இது இரு வகைப்படும்.*

*(1) பெரிய ஆதாரத்தினும் ஆதேயத்தைப் பெரிதாகச் சொல்லுதல். ஆதாரம் - அடி; ஆதேயம் - தாங்கப்படுவது.*

**எடு :-**

"உலக முழுதடங்கு மாவிசும்பில் உன்றன்
அலகில் குணமடங்கா வாம்."

*(2) பெரிய ஆதேயத்தினும் ஆதாரத்தைப் பெரிதாகச் சொல்லுதல்.*

**எடு :-**

"மன்சீர் உலகெவ் வளவுபெரு மைத்தளவில்
உன்சீ ரடங்கி உள."

**பெருமையணி ; (ஆ)**

*ஒன்றனுடைய பெருமையைக் கேட்போர் வியக்கும் வண்ணங் கூறுவது பெருமையென்னும் அணியாம்.*

**எடு :-**

"உலக முழுதடங்கு மாவிசும்பி லுன்றன்
அலகில் குணமடங்கா வாம்."

**பொதுப் புனைவிலி புகழ்ச்சி**

*இது புனைவிலி புகழ்ச்சியணி வகைகளுள் ஒன்று. அவருணய மாகிய பொதுப் பொருளால் வருணியமாகிய சிறப்புப் பொருள் தோன்றுதல்.*

**எடு :-**

"மைந்தகேள் கல்வி வளமுணரா மாந்தரெலாம்
அந்தகரே யாவ ரவர்வடிவில் - சந்தம்
தவழ்திரைக ளார்த்தெழூஉந் தண்கடல்சூழ் வையத்
தவிழ்முருக்கம் பூவினிற மாம்."

*இதில், தந்தை விளையாட்டுச் சிந்தையுடைய மைந்தற்கு அறிவு கொளுத்தலாகிய சிறப்புப் பொருள் தோன்றப் பொதுப் பொருள் சொல்லப்பட்டது.*

**பொதுமையணி :**

*ஒப்புமையால் இரண்டு பொருள்களுக்கு சிறப்புத் தோன்றக் கூறுதலாம். இதனைவடநூலார்* ***'சாமானியாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"வண்பதும வாவி யடைந்தமட வார்வதனம்
பண்பின் அறியப் படா."

**பொய்த்தற் குறிப்பணி :**

*ஒரு பொருளைப் பொய்யாக்குவதற்கு மற்றொரு பொய்ப் பொருளைக் கற்பித்தல் பொய்த்தற்குறிப் பணியாம். இதனை வடநூலார்* ***'மித்தியாத்தியவசிதியலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"வான்பசுந்தோன் போற்சுருட்ட வல்லோன் பசுபதியைத்
தான்பரவா தெய்துறூஉம் வீடு."

"விண்மலர்த்தார் வேய்ந்தோனே வேசையரைத் தன்வசமாப்
பண்ணுதற்கு வல்லனென் பார்."

**பொருட்குறைவிசேடம் :**

*இது விசேடவணிவகைகளுள் ஒன்று. பொருளில் குறைவு தோன்றக் கூறிக் காரியத்தில் உயர்வு தோன்றச் சொல்லுவது பொருட்குறை விசேடம் என்னும் அணியாம்.*

**எடு :-**

"தொல்லை மறைதேர் துணைவன்பா லாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர் - மெல்லியலாள்
ஓங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை."

*இதில், "இருநாழிகொண்டு" என்று பொருட்குறை காட்டி, 'அதனைக் கொண்டு உயிரனைத்தும் ஊட்டும்' எனக்*

*காரியத்தில் உயர்வு தோன்றக் கூறினமையால் பொருட்குறை விசேடம் அமைந்திருத்தல் காண்க.*

*மெல்லியலாள் - உமைதேவி.*

**பொருட்காட்சியணி**

*இது காட்சியணி வகைகளுள் ஒன்று. தன் செய்கையினால் நற்பொருளாயினுந் தீப்பொருளாயினுந் தெரிவிக்கப் பாடுதலாம்.*

**எடு :-**

"ஆதவனற் செல்வந் தனக்குப் பலனடுத்தோர்க்
கீத லெனில்விளக்கா நின்றெழீஇத் - தாதொடுதேன்
மல்கு கமல மலர்க்கொருதன் காந்திவளம்
நல்குகின்றான் பேருலகில் நன்கு."

***இது நற்பொருட்காட்சி.***

"வெண்மதிதோன் றத்திமிரம் வேந்தன் பகையழிதல்
உண்மையெனல் காட்டிற் றொழிந்து."

இது தீப்பொருட் காட்சி.

**பொருட்டன்மையணி**

*இது தன்மை அணிவகைகளுள் ஒன்று. பொருளிடத் துள்ள பலவிதமான இயல்புகளை உள்ளவாறே அழகுபடுத்திப் பாடுவது.*

**எடு :-**

"நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன் - தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
எம்மா னிமையோர்க் கிறை."

*இஃது ஒருருவின் தன்மையைக் கூறியதனால், பொருட்டன்மையாம்.*

**பொருட்பின் வருநிலையணி**

*ஒரு செய்யுளுள் ஒரே பொருளைக் குறிக்கும பல சொற்கள் அடுக்கி வருமாயின் அது பொருட்பின் வருநிலை யணியாம்.*

**எடு :-**

"அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை - மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை."

*இதனுள், அவிழ்தலும், அலர்தலும், நெகிழ்தலும், விள்ளலும், விரிதலும், மலர்தல் என்னும் ஒருபொருள் மேல் நின்றனவாதலின் அப்பெயர்த்தாயிற்று.*

**பொருட்பேற்றுப் பிரமாணவணி**

*ஒரு பொருளிருப்பினான் மற்றொரு பொருளினிருப்புக் கிடைக்குமிடம் தோன்ற வுரைப்பது பொருட்பேற்றுப் பிரமாண வணி எனப்படும்.*

**எடு :-**

"கனத்திடுச கனமுடையாய் கமழுனிடை யிருக்குமென
மனத்துறுதி படுத்துவது மன்னுசித மேயவிதம்
வனத்தொடிலா விடினசில மாபாரத் தினதிருப்பெத்
தினத்திலுமெவ் விதமேலாத் திகழ்ந்திருக்கப் பெற்றிடுமே."

**பொருண்மொழியணி**

*ஆன்ம வளமான உண்மைப் பொருள் புலவனாற் செய்யு ளிடத்து உணர்த்தப் படுவது பொருண்மொழி என்னும் அணியாம்.*

**எடு :-**

"இந்த வுடல்பெற்றி ருக்கப் பெறுபொழுதே
நந்தி புரவிண்ண கர்மாலைச் - சிந்திப்பா
ரன்றறிவா மென்னா தறஞ்செய்வார் பேரின்பஞ்
சென்றறிவார் நெஞ்சே திடன்."

**மடக்கணி**

*ஒரு தொடர் இடைவிட்டாயினும் இடைவிடாது தொடர்ந் தாயினும் வெவ்வேறு பொருள்படுமாறு திரும்பத் திரும்ப வருதல் மடக்கணியாகும்.*

**மடங்குதல் நவிற்சியணி**

*ஒருவர் ஒரு பொருளை அறிவுறுத்தற்குச் சொல்லிய சொல்லுக்கு மற்றொருவர் சிலேடையினால் மற்றொரு பொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார்* ***'வக்ரோக்தியலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"என்பிழைநெஞ் சிற்பொறுமென் றோதவர சென்பிழையே
மன்பொறுக்கி நெஞ்சிலென்றாள் மாது."

**மயக்கவணி**

*ஒப்புமையினால் ஒருபொருளை மற்றொரு பொருளாக அறிதலாம். இதனை வடநூலார்* ***'பிராந்தி மதாலங்கார'*** *மென்பர். அது ஆகாததை அதுவென அறிதல்.*

**எடு :-**

"மழைக்கண் மங்கையர் பயிறர மரகத மணியின்
இழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த பைந்தரு நீழலிற் குலவுமா னினங்கள்
தழைத்த புல்லென விரைவொடு தனித்தனி குறிக்கும்.'

*இதில், மரகத மணிக்கதிரைப் புல்லென அறிந்தது மயக்கவணியாகும்.*

**மயக்க வொழிப்பணி**

*இது ஒழிப்பணிவகைகளுள் ஒன்று. ஒருபொருளை மற்றொரு பொருளென்று கொள்ளும் மயக்கத்தை உண்மை கூறி ஒழிப்பதாம்.*

**எடு :-**

"மனக்கினிய தோழி மடந்தைமுக நோக்கி
உனக்குடலி னொன்றியெழு வெப்பந் - தனக்குச்
சுரநோயோ காரணநீ சொல்லெனவ தான்று
பொருமார னென்றனளப் பொன்."

**மருட்கையுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. உவமை கூறுவான் மருட்கை வயத்தனாகி யொரு பொருட்குக் கூடாத பண்பினைக்*

*கூடுவதாகக் கொண்டு அதனை யொன்றிற்கு உவமையாக்கி யுரைப்பது மருட் கையுவமையாம். இதனைத் தண்டியாசிரியர் கூடாவு வமை யென்பர்.*

**எடு :-**

"தாகம் பெறநுகர்தீந் தண்மருந்து கைத்தழலின்
வேகம் பயின்ற விதிபோலு - மோகம்
படையாத மாறன் பனிவரைமே லென்னோய்
துடையாது நீயுரைக்குஞ் சொல்."

**மலர்ச்சியணி**

*சிறப்புப் பொருளைச் சாதித்தற்குப் பொதுப் பொருளையும், மீண்டும் அப்பொதுப் பொருளைச் சாதித்தற்கு மற்றொரு சிறப்புப் பொருளையுஞ் சொல்லுதல் மலர்ச்சியணியாம்.*

**எடு :-**

"தேடு மணிபலவுஞ் சேரிமைய மால்வரைக்குக்
கூடுபனி யாலோர் குறைவுண்டோ - நீடுபல
இன்குணத்திற் குற்றமொன் றிந்து பலகதிரின்
புன்களங்கம் போலடங்கிப் போம்."

**மறுபொருளுவமை**

*இது உவமைகளுள் ஒன்று. முன்னர் வைத்த பொருட்கு ஒப்பாகக் கூடிய ஓர் பொருளைப் பின்னர் வைத்துக் கூறுவது மறுபொருளுவமையாம்.*

**எடு :-**

"அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா
நின்னையா ரொப்பார் நிலவேந்தர் - அன்னதே
வாரிபுடை சூழ்ந்த வையகத்திற் கில்லையால்
சூரியனே போலுஞ் சுடர்.

**மறையணி**

*பொதுக் குணத்தினால் இரண்டு பொருள்களுக்கு வேற்றுமை தோன்றாமையாம். இதனை வடநூலார்* ***'மீலிதாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

“பேதமுறத் தோன்றாதிப் பேதையியற் கைச்சிவப்பார்
பாதமுற ஊட்டியசெம் பஞ்சு.”

**மறைப்பு இறையணி**

*இது இறையணி வகைகளுள் ஒன்று. ஓர் எண்ணத்தைத் தன்னுள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கின்ற மறுமொழியைச் சொல்லுதலாம்.*

**எடு :-**

“மாயையை யகன்றா னடக்கக்கா லெழுமோ
வாயிடை மாற்றமொன் றுண்டோ
போயொரு விடய முணமனம் வருமோ
பொருந்துறு பகலிர வுளவோ
காயமு முயிருங் கலந்துவாழ் வுறுமோ
கண்டன மெனவினை யொருவந்
நீயறி வுறவிங் குரைப்பவ ருளரோ
நேரிழா யென்றன னிமலன்.”

*இதில், மாயை பிரிவு அப்பெயரினள் பிரிவுள் மறைந்தது.*

**மறையாமையணி**

*பொதுக் குணத்தினால் ஒற்றுமையுடைய இரண்டு பொருள் களுக்கு ஒருகாரணத்தால் வேற்றுமை தோன்றக் கூறுதலாம்.*

**எடு :-**

ஒழுகுறு மருவி யீட்ட மொலியினா னகுவெண் டிங்கள்
பழகுறு முடற்க ளங்காற் பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழகளி றுமிழ்ம தத்தான் மலர்மிசைக் கடவுளூர்தி
அழகுறு நடையா லன்றி யறிதரப் படாவக் குன்றில்

**மற்றதற்காக்கலணி**

*இவ்வணி மூன்று வகைப்படும்.*

*(1) ஒரு காரியத்தினது உலகறிகாரணத்தை ஒருவன் அதற்குப் பகையாகிய காரியத்திற்குக் காரணமாக்குதல்.*

**எடு :-**

“உலகைமகிழ் விக்கும் உயர்மலர்கொண் டேவேள்
உலகை வருத்தும் உடன்று.”

*(2) ஒருவன் ஒரு காரியத்திற்குச் சாதனமாகக் கொண்ட பொருளை மற்றொருவன் அதற்குப் பகையாகிய காரியத்திற்குச் சாதனமாகக் கொள்ளுதல்.*

**எடு :-**

“கண்ணாற் கொலப்பட்ட காமனையிக் காரிகையார்
கண்ணாலுய் விக்கின்றார் காண்.”

*(3) ஒரு காரியத்தை உண்டாக்குதற்கு ஒருவரால் உட்கொள்ளப்பட்ட பொருளான் மற்றொருவர் அதன் பகைக் காரியத்தை நன்றாகச் சமர்த்தித்தல்.*

**எடு :-**

“உலுத்தன் மிடிவருமென் றுள்வெருவி நல்கான்
நிலத்தென் றொருவ னிகழ்த்த - நலத்திசைகூர்
வள்ளலுமவ் வச்ச மருவியே நல்குமென
விள்ளலுற்றான் மற்றொருவன் மெய்.”

**மாலைமாற்று**

*மாலை எந்தப் பக்கந் திருப்பினாலும் அஃது ஒரே தன்மையாய் இருத்தல் போல ஒரு செய்யுளை எவ்வாறு மாற்றிப் படித்தாலும் ஒரே தன்மைத்தாயிருப்பது மாலைமாற்றாகும்.*

**எடு :-**

“வாமனாமானமா
பூமனாவானவா
வானவானாமபூ
மானமானாமவா.”

*இவ்வஞ்சித்துறை இறுதியிலே தொடங்கிப் படிக்கும் போது, முதற்கணின்று படிக்கும்போது முடிந்தது போல முடிந்தவாற்றையறிக.*

**மாலையணி**

*காரணகாரியத் தொடர்புடன் சொற்கள் நடப்பதில் மாலை அணி அமையும்.*

**எடு :-**

"நீதியால் செல்வமும் செல்வத்தாற் கொடையும்
கொடையாற் சீரும் உள."

*இதில், நீதி செல்வத்திற்கும், செல்வம் கொடைக்கும், கொடை சீருக்கும் காரணமாதலையறிக.*

**மாலை விளக்கணி**

*தீபகத்தையும் ஏகாவளியையும் சேர்த்துச் சொல்லுவது மாலை விளக்கணியாகும். இதனை வடநூலார் **'மாலா தீபகாலங்கார'** மென்பர்.*

**எடு :-**

"மனைக்கு விளக்க மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர் - மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விதனக்
கோதிற் புகழ்சால் உணர்வு."

*இதில், எல்லா வாக்கியங்களுக்கும் விளக்கமென்னும் ஒரு சொல் முடிபாய் வருதலால் தீபகவிதியும், மடவாள் முதலிய வற்றை முன்முன்னாக வரும் மனை முதலியவற்றிற்கு விசேடியங் களாகச் சொல்லுதலால் ஏகாவளி விதியும் வந்தன.*

**மாலையுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. ஒரு பொருட்குப் பல வுவமை வந்தால் அவை ஒன்றி னொன்றிடைவிடாது தொடர்ச்சி யுடையவாகப் புணர்த்து இறுதிக்கண் பொருள் கூட்டி முடிப்பது மாலையுவமையாம்.*

**எடு :-**

"மலையத்து மாதவனே போன்று மவன்பால்
அலைகடலே போன்று மதனுட் - குலவும்
நிலவலயமே போன்று நேரியன்பா னிற்கும்
சிலைகெழுதோள் வேந்தர் திரு."

**மாறு படுபுகழ்நிலையணி**

*புலவன், தான்கருதிய பொருளை மறைத்து அதனைப் பழித்தற்கு வேறொன்றினைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலை என்னும் அணியாம்.*

**எடு :-**

"இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லும் - ஒருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர்."

*இது செல்வந்தர்களை யடைந்து யாசித்து அவர்பின் சென்று குறைவுற்று வருந்தும் இரவலனை இழித்துக் கூறியதாக அமைந்தது. இதில் மானைப் புகழ்தலால் இரவலனது நிந்தை தோன்றி மாறுபடுபுகழ் நிலையணி அமைந்திருத்தல் காண்க.*

**மாற்று நிலையணி**

*இழிவாகிய பொருள் ஒன்றைக் கொடுத்து அதற்கு மாறாக உயர்வாகிய பொருளை வாங்குதலைச் சொல்லுவது மாற்று நிலையணியாகும்.*

**எடு :-**

"சடாயு கிழவுடம்பைத் தான்கொடுத்துப் பெற்றான்
கெடாததொரு கீர்த்தி யுடம்பு."

**மிகுதி நவிற்சியணி**

*வியப்படையத் தக்கதாகவும் பொய்யாகவும் இருக்கின்ற கொடை. நலம் முதலியவற்றைப் புகழ்தலாம். இதனை வடநூலார் '**அதியுக்தியலங்கார**' மென்பர்.*

**எடு :-**

"ஓதுபுகழ்த் தாதாவாய் நீயுறவிப் போதுலகில்
ஆதுலர்கள் கற்பகமா னார்."

***இது பெருங்கொடை.***

"உன்பிரதா பத்தழலின் வற்றுகட லொன்னலர்மான்
அன்னவர்கண் ணீரினிறைந் தற்று."

***இது நலம்.***

**மிகையுயர்வு நவிற்சியணி**

*காரியத்தை முன்னுங் காரணத்தைப் பின்னும் நிகழ்வன வாகக் கூறுதல் மிகையுயர்வு நவிற்சியணியாம்.*

**எ-டு :-**

"வணங்கியிறை யின்சொல் வழங்குமுனம் பேதைக்
குணங்கூட னீங்கிற் றுளத்து."

*இதில், காரண காரியங்களின் முன்பின் நிகழ்தலாகிய முறையில், முறை பிறழ்வு கூறப்பட்டது.*

**முதனிலைப் பொருட்டீவகம்**

*செய்யுளில் முதலில் நிற்கும் பொருட்பெயர் அச்செய்யுளில் பலவிடத்தும் நிற்கும் மற்ற சொற்களோடு சேர்ந்து பொருள் விளைவிப்பது முதனிலைப் பொருட்டீவகமாகும்.*

**எ-டு :-**

"முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி
புரிகுழன்மேன் மாலை புனைந்தான் - சரணளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலா னிடைகிழித்தான் வெற்பு."

*இதில் முதலில் நின்ற முருகவேள் என்ற பொருட்பெயர் தடிந்தான் என்பது முதலியவற்றோடு சென்றியைந்து பொருள் தந்தமை காண்க.*

**முதனிலைக் குணத்தீவகம்**

*செய்யுளில் முதலில் நின்ற பண்புச் சொல் அச்செய்யுளில் பலவிடத்தும் நிற்கும் மற்றச் சொற்களோடு சேர்ந்து பண்புப் பொருளைத் தருவது முதனிலைக் குணத்தீவகமாகும்.*

**எ-டு :-**

"சேந்தன வேந்தன் றிருநெடுங்கண் டெவ்வேந்தர்
ஏந்து தடந்தோ ளிழிகுருதி - பாய்ந்து
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து"

*இச்செய்யுளில் முதலில் உள்ள சேந்தன என்னும் பண்பு, கண், தோள், திசை முதலியவற்றோடுஞ் சென்று சேர்ந்து பொருள் தந்தமையால் இது, முதனிலைக் குணத்தீவகமாயிற்று.*

**முதனிலைத் தொழிற்றீவகம்**

*செய்யுளில் முதலில் நின்ற தொழிலைக் குறிக்கும் ஒருசொல் அச்செய்யுளில் பலவிடத்தும் நிற்கும் மற்ற சொற்களோடு சேர்ந்து பொருள் விளைவிப்பது முதனிலைத் தொழிற்றீவகமாகும்.*

**எடு :-**

"சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்பும் - திருமான
ஆரந் தழுவுந் தடந்தோ ளகளங்கன்
கோரந் தொழுத கொடிக்கு."

*சோழன் உலாப்போன காட்சியைக் கண்டு அவ்வளவிலே அவன்பால் தனக்குண்டாய கழிபெருங்காதலை ஆற்றாளாகிய ஒருபெண் உடல் மெலிந்து, கைவளை கழன்றுவிழ, உடம்பின் அழகு குறையக், கச்சுத் தளர்ச்சியுற, நின்றனள் என்பது இதன் கருத்து. இதில் சரியும் என்னும் வினைச் சொல் சங்கு முதலிய வற்றோடு சென்றியைந்து பொருள் தந்தமையால், இது முதனிலைத் தொழிற்றீவகம் ஆயிற்று.*

**முதனிலைச் சாதித் தீவகம்**

*செய்யுளின் முதலில் நின்ற சாதியைக் குறிக்குஞ்சொல் அச்செய்யுளில் பலவிடத்தும் நிற்கும் மற்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைவிப்பது முதனிலைச் சாதித்தீவக மாகும்.*

**எடு :-**

"தென்ற லனங்கன் றுணையாஞ் சிலகொம்பர்
மன்றற் றலைமகனாம் வான்பொருண்மேற் - சென்றவர்க்குச்
சாற்றிவிடுந் தூதாகும் தங்கும் பெரும்புலவி
மாற்ற வருவிருந்து மாம்."

*இதில், தென்றல் என்றது அங்ஙனம் பலவாகிய காற்றுகள் அனைத்தையும் உணர்த்தி முதலில் நின்று, 'துணையாம்' என்பது முதலியவற்றோடு சென்றியைந்து நின்றமை காண்க.*

**முதலடி முதன் மடக்கு :**

*செய்யுளின் முதலடியில் ஒரே சொல் மடங்கி வந்து வேறு வேறு பொருள் வரத் தொடுப்பது முதலடி முதன் மடக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

“துறைவா துறைவார் பொரிற்றுணைவர் நீங்க
உறைவார்க்கு முண்டாங்கொல் சேவல் - சிறைவாங்கிப்
பேடைக் குருகாரப் ‘புல்லும் பிறங்கிருள் வாய்
வாடைக் குருகா மனம்.”

**முயற்சிவிலக்கு**

*முயற்சி தோன்றக் கூறி விலக்குவது முயற்சி விலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

“மல்லணிந்த தோளாய்! இதென்கொலோ வான்பொருண்மேற்
செல்க விரைந்தென் றுளந்தெளிந்து - சொல்லுதற்கே
என்று முயல்வலியா னேகனீ யென்றிடையே
தோன்றுகின்ற தென்வாயிற் சொல்.”

**முரண்மேல் விளைவணி**

*பகைமை முன்பு விளங்கிப் பின்பு உண்மைப் பொருள் விளங்கத் தொடுப்பது முரண்மேல் விளைவணியாகும்.*

**முரணித் தோன்றல்**

*இது வேற்றுப் பொருள் வைப்பணியின் வகைகளுள் ஒன்று. தம்முள் மாறுபட்டிருக்கும் இயல்புடைத் தாய பொருளை வைத்துப் பாடுவதாம்.*

**எடு :-**

“வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு முகிறன்னைப் பேணுவரால் - வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்.”

**முரண்விளைந்தழிவணி**

*ஓரிடத்து உள்ளனவுங் காரிய காரணங்கள் ஆகாதனவு மாகிய இரண்டு தருமங்களுக்கு மேன்மேலுந் தோன்றியழியும் பகைமையைச் சொல்லுவது முரண்விளைந்தழிவணியாகும். இதனை வடநூலார்* ***‘விரோதாபாசாலங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

"சந்தமிலா வாயுறினுஞ் சந்தம் உடையனவே
கொந்தவிழ்தாரப் பாவை குயம்."

*இதில், சந்தமில்லனவற்றைச் சந்தமுடையனவேயா மென்னும் பகைமை அழகுடையன என்னும் பொருளால் அழிந்தது.*

**முரண்வினைச்சிலேடை**

*தொடர்ந்து நின்ற சொற்கள் வெவ்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டு பலபொருள் தந்த மாறுபட்ட வினையான் முடிவது முரண் வினைச் சிலேடையாகும். முரண் - மாறுபாடு.*

**எடு :-**

"மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலைத் துணைமேவ லார்கடிய - வேலைமிசை
மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன் பொழில்கள்
புக்கார் கலியடங்கும் புள்."

*இது பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்குஞ்சிலேடை.*

**பிரிந்தார்மேற் செல்லுங்கால்**

*மாலை - மயக்கம். மதி - கருத்து. திரிதல் - வேறுபடுதல். மணம் - வாசம். துணை மேவலார் - தம் துணைவரைப் பிரிந்தார். கடிய - அஞ்ச.*

**புணர்ந்தார் மேற்செல்லுங்கால்**

*மாலை - அந்திப் பொழுது. மதி - திங்கள். திரிதல் - உலாவல். மணம் - கூட்டம். துணைமேவலார் - துணைவரைப் பிரிந்தார். கடிய - விளங்க.*

*இங்கு அடங்காது ஆர்க்கும், ஆர்கலி அடங்கும் என வந்த வினைகள் ஒன்றற் கொன்று முரணாகுமாறு காண்க.*

**முழுவதுஞ் சேறல்**

*இது வேற்றுப் பொருள் வைப்பணியின் வகைகளுள் ஒன்று. ஒருதிறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின் மேலும் முற்றச் செல்லவுரைப்பதாம்.*

**எடு :-**

“புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன் - மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்.”

**முறையிலுயர்வு நவிற்சியணி**

*இதுவும் உயர்வு நவிற்சியணி வகைகளுள் ஒன்று. காரணமுங் காரியமும் ஒரே காலத்தில் நிகழ்வனவாகச் சொல்லுதலாம்.*

**எடு :-**

“மன்னநின் கணையு மொன்னலர் கூட்டமும்
ஏககா லத்தினா ணிகந்தோ டினவெனில்
உன்புகழ்த் திறத்தினை யுணர்ந்து
மன்பதை யுலகுள்யார் பாடவல் லாரே.”

*இதில், அம்பினது தாக்குகையாகிய காரணத்திற்கும் அரசர்களின் ஓட்டமாகிய காரியத்திற்கும் முன்பின் தோன்றுந் தன்மையினால் ஒரு காலத்திலுண்டாகுகை கற்பிக்கப்பட்டது.*

**முறையிற் படர்ச்சியணி**

*முறையாக ஒருபொருள் பல இடங்களிற் சென்றடை தலையேனும், ஓரிடத்திற் பலபொருள் சென்றடைதலையேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார்* ***‘பரியாயாலங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

“நஞ்சமே நீ பண்டை நாளி னதிபதிதன்
நெஞ்சிலிருந் தாங்கதன்பி னீங்கியே - செஞ்சடிலச்
சங்கரனார் கந்தரத்திற் சார்ந்திக் கொடியோன் வாய்த்
தங்குதியிக் காலந் தனில்.”

*எனவும்,*

“முன்னா ளிருவர்க்கும் யாக்கையொன் றாகமுயங்கினம்யாம்
பின்னாட் பிரியின் பிரியையென் றாயினம் பேசலுறும்
இந்நாட் கணவன் மனைவியென் றாயின மெண்ணினினிச்
சின்னாளி லெப்படி யோமன்ன நீயிங்குச் செப்புகவே.”

**முற்றுருவகம்**

*இது உருவக அணி வகைகளுள் ஒன்று. உறுப்பு, உறுப்பி ஆகியவைகளை ஏற்ற இடத்தோடும், பிறவற்றோடும் முற்ற உருவகஞ் செய்துரைப்பது முற்றுருவமாகும்.*

**எடு :-**

"விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல் - பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து."

**முற்றுவமை**

*உறுப்பு உறுப்பிகளை யொரு செய்யுளகத்து தொக்க வுவமிப்பது முற்றுவமையாம்.*

**முன்னவிலக்கணி**

*ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்கின் அது முன்னவிலக் கென்னும் அணியாம். அவ்வணி இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைப்பட்ட காலங்களோடும் கூடிவரும்.*

**எடு :-**

"பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின்
மேலன்று கண்டுயின்றாய் மெய்யன்பர்-ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்."

**எடு :-**

*உலக முழுவதும் உண்ணப்பட்ட காலத்து ஆலிலை யொன்று தனியாக இருந்ததென்பது பொருந்தாது என அது குறிப்பால் விலக்கப்பட்டது.*

**மூன்றாமடி முதல் மடக்கு**

*செய்யுளின் மூன்றாம் அடியின் முதலில் நின்ற ஒரே சொல் மடங்கி வேறு பொருள் வரத் தொடுப்பது மூன்றாமடி முதன் மடக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

“தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப் பெருந்தகைக்கு
ஓங்காரத் துட்பொருளா மொண்சுடர்க்கு - நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்.”

*இதன் மூன்றாமடியில், “மருளா மருளா” என்ற ஒரு சொல் மடங்கி வந்திருத்தலைக் காண்க.*

**மேன்மேலும் உயர்ச்சியணி**

*மேன்மேலும் ஒன்றற்கொன்று உயர்குணத்தாலாவது, இழிகுணத்தாலாவது உயர்வாதலைச் சொல்லுவது மேன் மேலுயர்ச்சியணியாகும்.*

**எடு :-**

“தேன்மதுர மாமதனில் தெள்ளமுத மேமதுரம்
மான்சொலதி னும்மதுர மாம்.”

***இஃது உயர்வு.***

“நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர்புகை நுட்பம் - தேரின்
நிரப்பிடும் பையாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.”

***இஃது இழிவு.***

**மோகவுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. ஒரு பொருளின் மேல் எழுந்த வேட்கையால் அதற்கு உவமையாகக் குறிக்கப்பட்டவதன் மேலும் வேட்கை நிகழ்ந்ததாகக் கூறுதல் மோகவுவமையாம்.*

**எடு :-**

“அம்பவள மொன்றிருப்ப வன்புறுமா தொண்டையெனச்
செம்பதுமத் தேனேநின் செவ்வாயை - விம்பமுநே
ராதற் கதைவிரும்பு மாழியான் கோழியூர்க்
காதற் சிறப்புடையேன் கண்.”

**யுக்தி அணி**

*தனது உள்ளக் கருத்தைப் பிறரறியாதவாறு யுக்தியால் மறைப்பது யுக்தியணியாகும்.*

**எடு :-**

“மாணிழையா ளன்பன் வடிவைப் படத்தெழுதும்
பாணிலங் கோர்சிலர்தன் பாங்குற - நாணிமுகம்
கோட்டினாள் சித்தரித்த கோலவுரு வின்கரத்தில்
தீட்டினாள்கன் னத்தின் சிலை.”

**யுத்தவேது**

*இதுவும் ஏதுவணியின் பாற்படும்.*

*காரணத்திற்குப் பொருத்தமான காரியம் நிகழ்வது யுத்த வேதுவாகும்.*

*யுத்தம் - பொருத்தம்.*

**எடு :-**

“பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்ன ரசைந்து முகுளிக்கும் - தன்னோர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்த நூறா யிரம்.”

*இங்கே, கையாகிய தாமரையின் குவிவு காரியம் எனவும், வேற்படையின் ஒளியாகிய நிலாக் கதிர் அக்குவிவுக்குப் பொருத்தமான காரணம் எனவும் அறிக.*

**வக்கிரவுத்தி**

*வெளிப்படையாக விளிக்குமிடத்தும் வினாவுமிடத்தும் முன்னின்ற பொருண்மையை மறைத்துப் பிறிதொன்றாக வெதிர் மொழி கொடுத்தவிடத்து மீண்டுந் தெளிவிப்பனவாய் நிரைத்த தொடர் மொழி தோறும் அம்முன்னின்றவர் இரட்டுகிற இசை திரிநிலைத்தாயுரைப்பது வக்கிரவுத்தியாகும்.*

**எடு :-**

“அஞ்சக்கரனோ வென்றேன்சங்கரனா மென்றான்றனியாழி
மிஞ்சத்தரித்ததிருத்தேர் வெய்யவனோ வென்றேன் வெயிலென்றான்

செஞ்சொற்பாிதிவலம் பயில்விண் டோவென்றேன் பொற்சிலம் பென்றான்
வஞ்சர்க்கிரங்காவரங்கனுக் கென்மாலெப்படியே மொழிவனே.''

**வஞ்சகவொழிப் பணி**

*இது ஒழிப்பணிவகைகளுள் ஒன்று. வஞ்சகம், கவடம் பெயர் முதலிய சொற்களால் உவமேயத்தினது தருமத்தை மறுத்தல்.*

**எடு :-**

''இம்மடந்தை கட்கடை நோக் கென்னும் பெயரினைக்கொண்
டம்மதவேள் வாளி யடும்.''

**வஞ்சப் பழிப்பணி**

*நிந்தையினால் நிந்தை தோன்றுதலாம். இதனை வடநூலார்* **'வியாஜநிந்தாலங்கார'** *மென்பர்.*

**எடு :-**

''நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
இறையே தவறுடையான்.''

*இதில், இறைவன் நிந்தையால் தீச் செய்கையுடைய மற்றொருவர் நிந்தை தோன்றிற்று.*

**வல்லோ ரொழிப்பு**

*இது ஒழிப்பணி வகைகளுள் ஒன்று. பிறர் ஐயமுற்று வினவிய தஞ்சொல்லின் உண்மைப் பொருளை வல்லோர் அச்சொல்லுக்கு மற்றொரு பொருளைக் கற்பித்து மறுத்தல்.*

**எடு :-**

''இலங்கயிற்க ணாளிகுளைக் கென்காலைப் பற்றிப்
புலம்பியதுண் டென்று புகல - விலங்கியயல்
நின்றுவரு மற்றொருத்தி நின்கணவ னோவென்ன
அன்றுசிலம் பென்றா ளவள்.''

**வல்லோர் நவிற்சியணி**

*அஃதாவது, அவ்வுலக வழக்குச் சொல்லே மற்றொரு பொருளை உட்கொண்டிருத்தலாம். இதனை வடநூலார் **'சேகோக்தியலங்கார'** மென்பர்.*

**எடு :-**

"பறிமலர்ப்பூங் குஞ்சியாய் பாம்பேபாம் பின்கால்
அறியுமுல கத்தென் றறி."

*இஃது, ஒருவன் மற்றொருவன் செய்தியைத் தன்னைக் கேட்க, அவன் அருகில் இருக்கின்றவனைக் காட்டி இவனுக்கே அது தெரியுமென்று சொல்லுங் கருத்தையுட் கொண்டிருத்தல் காண்க.*

**வல்லினப் பாட்டு**

*வல்லின வெழுத்தாறும் வந்து ஒழிந்த இடையினம் மெல்லினம் ஆகிய இரண்டின மெய்களும் வராமல் பாடுவது வல்லினப் பாட்டாகும்.*

**எடு :-**

"துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோட
றொடுத்த தொடைகடுக்கை பொற்போற் - பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் காட்டிற்றுக் காடு."

**வனப்புநிலையணி**

*விளக்கிக் கூறவுரிய கருத்துக்கு அடைமொழியாகக் கூற வேண்டிய செய்தியை மறைத்து அதுபோல்வதாகிய பிறிதொரு செய்தியை அடைமொழி ஆக்குதல்.இதனை வடநூலார் **'லலிதாலங்கார'** மென்பர்.*

**எடு :-**

"பெருகறல்முற் றும்போன பின்கரைகோல் லற்குத்
திருவனையாள் வேட்டல் செயும்."

*இதில், சிறிது அன்போடு வந்த நாயகனை இகழ்ந்து, மற்றொருத்தியிடத்து அவன் போனபின்பு தன்னைத் தூதுவிட விரும்பிய நாயகியைக் குறித்துத் தூதிதான் சொல்ல வேண்டியதற் கொத்த நீர் போயபின் கரை கோலல் கூறினாள்.*

**வன்சொல் விலக்கு**

*கடுஞ்சொற்களைக் கூறிக் குறிப்பினால் விலக்குவது வன் சொல் விலக்கணியாம்.*

**எடு :-**

"மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகுநினக்கு - நெய்யிலை வேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள உழலுமாம் கூற்று."

**வாக்கியப் பொருட்காட்சியணி**

*இது காட்சியணி வகைகளுள் ஒன்று. இரண்டு வாக்கியப் பொருள்களுக்கு ஒற்றுமையைக் கூறுவதாம்.*

**எடு :-**

"முறைகெழு வள்ளற்கு முனிவின்மை திங்கட்
கறைகளங்க மில்லாமை யாம்."

*இதில், கோவமில்லாமையில் களங்கமில்லாமை கூறப் பட்டது.*

**வாழ்த்தணி**

*இன்ன தன்மையை யுடையார்க்கு இன்னது நிகழ்க என்று புலவர்கள் தாம் கருதிய தனை விதிப்பது வாழ்த்தென்னும் அணி யாம்.*

**எடு :-**

"மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர் - காவிரிநாட்
டண்ண லனபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை."

**வாழ்த்து விலக்கு**

*வாழ்த்தி வைத்து விலக்குவது வாழ்த்து விலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

"செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க - வெல்லும்

அடற்றோர் விடலை யகன்றுறைவ தாங்கோர்
இடத்தே பிறக்க வியாம்."

*இங்கே, ஆக, மல்க, சிறக்க என்று வாழ்த்தி, "விடலை யகன்றுறைவ தாங்கோர் இடத்தே பிறக்க" என்பதனால் மரணம் ஏற்படும் என்பது பெறப்படக் கூறிச் செல்லுதலை விலக்கிய வாறு காண்க.*

**விகாரவுவமை**

*இது உவமை வகைகளுள் ஒன்று. ஓர் உவமையை விகாரப் படுத்தியுவமிப்பதாம்.*

**எடு :-**

சீத மதியி னொளியுஞ் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சியுங்கொண்டு - வேதாதன்
கைம்மலரா னன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்.

**விசேடவணி**

*எடுத்துக் கொண்ட பொருட்குக் குணத்தானுந் தொழி லானும் பொருளானும் உறுப்பினானுங் குறைபாடுள்ளதாகக் கூறி அக்குறை காரணமாவதற்கு மேன்மை தோன்றவுரைப்பது விசேடவணியாகும்.*

**எடு :-**

"யானை யிரதம் பரியா ளிவையில்லைத்
தானு மனங்கன் தனுக்கரும்புந் - தேனார்
மலருமம் பாயினு மார னமர்செய்
துலகுகைக் கொண்டா னொருங்கு."

**விடையில் வினாவணி**

*மறுமொழிவேண்டாமையும் முன்னிலை அல்லாரையும் அறிவில்லாதவற்றையும் வினவினாற்போல வுரைப்பதும் விடையில் வினாவணி எனப்படும்.*

**எடு :-**

"கண்பட் டுறங்கவென் னிறையோன் கண்டேனோ கண்டணைத் தேனோ
பண்பட் டினிய மழச் சொற்பகர வினிதிற் கேட்டேனோ

புண்பட் டுளையென் னெஞ்சுவப்பப் பூங்கண் ணென்மேன் மலாந்தனவோ
வெண்பட் டிறப்ப வுயிர்செலவோ வென்மே லிரங்குந்தயை யிதுவோ.''

**விதியணி**

புகழ்பெற்று விளங்கும் பொருளின் விதியானது ஒரு அபிப்பிராயத்தோடு கூடி வருதலாம். இதனை வடநூலார் **'வித்யலங்கார'** மென்பர்.

**எடு :-**

''குயில்குயிலே யாகுங் குவலத்திற் சீர்மிக்
குயர்வசந்த காலம் உறின்.''

*இது, குயிலுக்குக் குயிற்றன்மையை விதித்தல் வீணாம். இளவேனில் வரின் மதுரவோசையைச் செய்யுமென்பதையுட் கொண்டிருக்கிறது.*

**விநோத்தியவணி**

*யாதாயினுந் தலைமைத்தாய முதன்மைப் பொருள் உண்மை யாகிய மற்றொரு முதன்மைப் பொருளோடும் பொருந்த வில்லையாயின் முதன்மையல்லவென்று வேறுபடுத்திச் சொல்லுவது விநோத்தியவணியாம்.*

**எடு :-**

''சொல்லாற் பொருளாற் சுவைபெற் றலங்கார
மெல்லா மிழுக்கின்றி யன்றாலும் - புல்லாணி
மன்னிலங்கும் பேரூர் வளம்பரவாப் பாவினையே
நன்னிலங்கைக் கொள்ளா நயந்து.''

**விபரீதம்**

*இதுவும் வேற்றுப் பொருள்வைப்பணியின் வகைகளுள் ஒன்று. விபரீதப் படப்பாடுவதாம்.*

**எடு :-**

''தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங் கடிந்தான் - உலகிற்
றனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேற் றப்பாம்
வினையும் விபரீத மாம்.''

இதனுள், நல்வினைப் பயன் தீதாகவும், தீவினைப் பயன் நன்மையாகவும் வந்து விபரீதமானது காண்க.

**விபரீதவுவமை**

இது உவமை வகைகளுள் ஒன்று. தொன்று தொட்டு உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளாய் வருவதனை உவமையாக்கி யுரைப்பது விபரீத உவமையாம்.

**எடு :-**

"திருமுகம் போன் மலருஞ் செய்ய கமலம்."

**விபாவனையணி**

ஒன்றன் செயலைக் கூறுங்கால் அச்செயலுக்குப் பலரும் அறியவரும் காரணத்தை நீக்கிப் பிறிதொரு காரணத்தை இயல்பாக வேனும் குறிப்பாகவேனும் வெளிப்பட வுரைப்பது விபாவனையணியாகும். அது அயற்காரணவிபாவனை, இயல்பு விபாவனை, வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தும் விபாவனை, பொதுவகையால் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்தும் விபாவனை எனப் பலவகைப்படும்.

**எடு :-**

"தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் - வாயிலார்
இன்றிச் சிலரூட நீர்ந்தா ரமரின்றிக்
கன்றிச் சிலைவளைக்குங் கார்."

ஈண்டு வேதல் முதலியவற்றிற்கு உலகறி காரணமாகிய நெருப்பு முதலியவைகளை நீக்கக் கார்ப்பருவ மென்பதாகிய ஒரு காரணம் ஊகிக்கப் படுவதால் இது விபாவனை யணியாயிற்று.

**வியநிலையுருவகம்**

இது உருவக அணி வகைகளுள் ஒன்று. ஒன்றன் அங்கம் பலவற்றையும் ஒரு செய்யுளில் கூறி, அவற்றுள் சிலவற்றை யுருவகஞ்செய்து சிலவற்றையுருவகஞ் செய்யாது உறுப்பியை யுருவகஞ் செய்து பாடுவது வியநிலையுருவகமாகும்.

**எடு :-**

“வையம் பரவும்கிழ் மாறன் செவ்வாயுந்
துய்ய நயனத் துணைப்போதுஞ் - செய்ய
முகத்தா மரையுடன் கைம்முத்திரை யுங்கண்ட
சுகத்தார்க்கு முண்டோ துயர்.”

**வியப்பணி**

*ஒரு சிறந்த பயனைக் கருதி, அதற்கு வேறான ஒன்றைச் செய்ததாகக் கூறுவது வியப்பணியாகும்.*

**எடு :-**

“ஓதுந் திறத்தி லுயர்ந்தோர்கள் தாழ்குவரெப்
போதுமுயர் வெய்தற் பொருட்டு.”

**வியப்பு இறையணி**

*இஃது இறையணி வகைகளுள் ஒன்று. ஒருவினாவிற்கு அதனையே விடையாகவும் பலவினாக்களுக்கு ஒன்றே விடையாகவுஞ் சொல்லுதலாம்.*

**எடு :-**

“என்பணி பூண்டா னிறைவன்.”

*இதில், என்பணி - யாது அணியெனவும், எலும்புப் பூணெனவுமாம்.*

**விரிவுவமை**

*உவமானமும், உவமேயமும், பொதுத்தன்மையும், உவமை யுருபும் ஆய நான்கும் விரிந்து வருவது விரிவுவமையாம்.*

**எடு :-**

“பால்போலு மின்சொல் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போல் பிறழுந் திருநெடுங்கண் - மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புன்னாடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ தவர்.”

*இதில், பால்போலும் இன்சொல் என்புழி, பால் - உவமானம், சொல் - உவமேயம், இனிமை - பொதுத்தன்மை, போலும் - உவமையுருபு.*

**விரியுருவக அணி**

*இது உருவக அணி வகைகளுள் ஒன்று. ஆகிய ஆக என்னும் உருவக உருபுகள் விரிந்து நிற்கப் பாடுவது விரியுருவக அணியாம்.*

**எடு :-**

"கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக
அங்கை மலரா வடிதளிராத் - திங்கள்
அளிநின்ற மூர லணங்கா மெனக்கு
வெளிநின்ற வேனிற் றிரு."

**விரூபகவுருவகம்**

*இது உருவக அணிவகைகளுள் ஒன்று. ஒரு பொருட்குக் கூடாததன்மை பலவுங்கூட்டி உருவகஞ் செய்து பாடுவது விரூபக வுருவகமாகும். இதனை விருத்த வுருவகம் என்பார் மாறனலங் காரமுடையார்.*

**எடு :-**

"தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது
முண்மருவுந் தாண்மேன் முகிழாது - நண்ணி
இருபொழுதுஞ் செவ்வி யியல்பாய் மலரும்
அரிவை வதனாம் புயம்."

**விரைவுயர்வு நவிற்சியணி**

*இதுவும் உயர்வு நவிற்சியணி வகைகளுள் ஒன்று. காரண வுணர்ச்சி மாத்திரத்திலே காரிய முண்டாதலைக் கூறுவது விரைவுயர்வு நவிற்சியணியாகும்.*

**எடு :-**

"அருளாக்கு நல்லறமுண் டாக்குமின்புண் டாக்கும்
தெருளாக்கு மென்றுளங்கொல் செம்மல் - பொருளாக்கற்
கேழையான் செல்வ னெனப்புகலா நிற்பவிரல்
ஆழிவளை யாயிற் றவட்கு."

*இதில், பிரிவுணர்ச்சியினாலே தானே நாயகியின் வாட்டாகி காரியம் மோதிரம் வளையாயிற் றென்பதனால் விளங்கிற்று.*

**விரோதவணி**

*மாறுபட்ட சொல்லானும் பொருளானும் மாறுபாட்டுத் தன்மை விளைவு தோன்ற உரைப்பது விரோத மென்னும் அணியாம்.*

**சொல் விரோம்**

**எடு :-**

“காலையு மாலையுங் கைகூப்பிக் காறொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம் - கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.”

*இதில், காலை, மாலை; கைகூப்புதல், கால் தொழுதல்; மேல், கீழ்; கருமை வெண்மை; செம்மை, பசுமை என்பன ஒன்றோ டொன்று மாறுபட்டு விரோத வணி அமைந்திருத்தல் காண்க.*

**விரோதச் சிலேடை**

*முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னர் விரோதிப்பச் சிலே டிப்பது விரோதச்சிலேடையாகும்.*

**எடு :-**

“விச்சா தரனேனு மந்தரத்து மேவானால்
அச்சுத னேனுமம் மாயனல்லன் - நிச்ச
நிறைவான் கலையா னகளங்க னீதி
இறையா னநகனெங் கோ.”

**விலக்கணி**

*பிரசித்தமானதாகியும் அபிப்பிராயத்தோடு கூடியுமிருக் கின்ற விலக்கைச் சொல்லுதலாம். இதனை வடநூலார்* ***‘பிரதிஷேதாலங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

“சூதாடு வோய்சூத மன்று சொரிகணைகள்
மீதோடு பூசலிது மெய்.”

*இதில், போரிற் சூதத் தன்மையின் இல்லாமை பிரசித்தமாக உளதாகவும், அன்றென்னும் விலக்கு நீ சூதாட்டத்தன்றிப்*

*போரிற் சமர்த்தன் அல்லையென்னும் இகழ்ச்சியை உட்கொண்டிருக்கின்றது. இது சகுனிக்குச் சொன்னது.*

**விறல் கோளணி : (அ)**

*வலிமையுடைய பகையின் மேலாவது, அதனது துணையின் மேலாவது தனது வீரத்தைச் செலுத்துதலைச் சொல்லுவது விறல் கோளணியாகும். இதனை வடநூலார்* ***'சமாதியலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"வண்டினந்தே னூட்டுமரை வாட்டலிற்சீற் றங்கொடுபோய்க்
கண்டதுதிங் கட்குக் களங்கு" - இது பகை.

"தாக்குவிழிக் குத்துணையாய்ச் சார்ந்திலங்கு காதைக்கீழ்
ஆக்கிநின்ற நீலத் தலர்" - இது பகைத்துணை.

**விறல் கோளணி : (ஆ)**

*வலிமை பொருந்திய பகைவனிடத்துத் தன் வலிமையைச் செலுத்தமுடியாமல் அவனைச் சேர்ந்தவர்களிடத்துத் தன் வன்மையைச் செலுத்துவது விறல் கோளணியாகும்.*

**எடு :-**

"மாரனம் மேரெனுஞ்செல் வங்கவாந்தோற் சேர்ந்தவனென்
றோருதலுற் றுன்பா லுறுமழுக்கா - றாருதலா
வன்பெதுவு மின்றி யமர்புரிந்து வாட்டுகிறா
னென்பெண் மகவதனை யே."

**வினாவில் விடையணி**

*ஒன்றைக் கூறுங்கால் பிறரெதிர் பிறிதொன்றை யுணர்ந்து வினாவினதாகச் சொல்லித்தன் பொருள் விளங்க மறுமொழி கூறுவது வினாவில் விடையணியாகும்.*

**எடு :-**

"நெடிதுநா ளுற்றநோய் மருந்தி னீர்மையாற்
கடிதுதீர் தரலருங் கருமமா மென்பாய்
நெடிதுநா ளுற்றநோய் நீள மீண்டுயிர்
கடிதுமாய்ந் தொழிதரக் கடுவுண் பாவதேன்."

**வினாவுத்தரம்**

*வினாவினதொரு சொற்றொடரைப் பிரித்து அவ்வாறு பிரித்த சொல் தோறும் வினாயதற்கு விடையாகச் சொற்பொரு ளுரைத்து இறுதியில் அவ்வினாயதற்கு விடையான அச்சொற் றொடர் முழுவதும் ஒரு பொருளாக்கியுரைப்பது வினாவுத்தர மாகும்.*

**எடு :-**

"பூமகள் யார்? போவானை யேவுவா னேதுரைக்கும்
நாமம் பொருசரத்திற் கேதென்பர்? தாமழகின்
பேரென்? பிறைசூடும் பெம்மா னுவந்துறையுஞ்
சேர்வென்? திருவேகம் பம்."

*இதனுள், 'பூ மகள் யார்?' 'திரு" எனவும்; 'போவானை ஏவுவான் ஏதுரைக்கும்?' 'ஏகு' எனவும்; 'நாமம் பொருசரத்திற் கேதென்பர்? 'அம்பு' எனவும்; 'அழகின் பேரென்?' 'அம்' எனவும் கூட்டித் 'திருவேகம்பம்' எனக் கொள்க.*

*(கு.ரை) திரு+ஏகு+அம்பு+அம்=திருவேகம்பம்.*

**விளக்கணி**

*உவமேயங்களும் உவமானங்களும் ஒரு வினையால் முடிவது விளக்கணியாகும். இதனை வடநூலார்* ***'தீபகாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"ஆதபத்தாற் சூரி யனும்பிரதா பத்தினால்
மேதகுவேந் தும்விளங்கு மே."

*இதில், சூரியனும் வேந்தனும் விளங்குதலாகிய ஒரு வினையால் முடிந்தன.*

**வினைமுதல் விளக்கணி**

*ஒரு வினைமுதலைச் சேர்ந்த முறையுள்ள பல செய்கை களை முறை பிறழாமற் சொல்லுதலாம். இதனை வடநூலார்* ***'காரக தீபகாலங்கார'*** *மென்பர்.*

**எடு :-**

"துயில்கின்றான் வாசநீர் தோய்கின்றான் பூசை
பயில்கின்றான் பல்சுவைய உண்டி - அயில்கின்றான்

காவல னென் றோங்கு கடை காப்பவராற் றள்ளுணமிப்
பாவலரைப் பொன்னேகண் பார்.”

**வீறுகோளணி**

*செல்வ மிகுதியை யேனும், புகழத்தக்க ஒரு வரலாற்றைப் புகழ் பொருளுக்கு அங்கமாக வேனும் பாடுதலாம். இதனைவட நூலார்* ***‘உதாத்தாலங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

“மணிப்பொற் குழைகொண்டு கோழி யெறிவாழ்க்கை
அணிப்பொற் கொடிகாண் அவள்.”

***இது செல்வ மிகுதி.***

“உமையாள் அருந்தவஞ்செய் ஒண்கச்சி யூரே
எமையாள் பரமற் கிடம்.”

***இது புகழ் பொருளுக்கு அங்கம்.***

**வெகுளிவிலக்கு :**

*கோவம் தோன்றக் கூறி விலக்குவது வெகுளிவிலக்கு என்னும் அணியாம்.*

**எடு :-**

“வண்ணங் கருக வளைசரிய வாய்புலர
எண்ணந் தளர்வே மெதிர்நின்று - கண்ணின்றிப்
போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால்
யாதும் பயமிலமே யாம்.”

*இங்கே, தலைவன் பிரிவின் வண்ணங்கருகுதல் முதலிய நிகழ எதிர் நின்று “யாதும் பயமிலமே யாம்” என்றதனால் வெகுளி தோன்றக் கூறிச் செலவை விலக்கியவாறு அறிக.*

**வெளிப்படை நவிற்சியணி :**

*அஃதாவது, சிலேடையான் மறைத்த பொருளைப் புலவன் வெளிப்படுத்தலாம். இதனை வடநூலார்* ***‘விவ்ருதோக்திய லங்கார’*** *மென்பர்.*

**எடு :-**

"பிறன்புலத்தில் வாய்நயச் சொல்பெட்புடன் கொள்காளாய்
இறைவனடை கின்றனன் விட்டேகு - துறையி னெனப்
பண்பி னுணரப் பகர்ந்தான் குறிப்பாக
நண்பினுயர் பாங்க னயந்து."

**வெற்றொழிப்பணி**

*இவ்வணி ஒழிப்பணிவகைகளுள் ஒன்று. உவமானத்தின் தன்மையை விளக்குதற் பொருட்டு உவமேயத்தின் தன்மையை ஒழித்தலாம்.*

**எடு :-**

"மதியன் றிதுபுகலின் வானதியிற் றோன்றும்
புதியதொரு வெண்கமலப் பூ."

**வேண்டலணி**

*குற்றத்தாற் குண முண்டாதலைக் கண்டு அக்குற்றத்தை வேண்டுதலாம். இதனை வடநூலார் **'அநுக்ஞ்யாலங்கார'** மென்பர்.*

**எடு :-**

"வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
விருந்து செய் துறுபெரு மிடியும்
கொண்டநல் விரதத் திளைக்கும்யாக் கையுநீ
கொடியனேற் கருளுநா ளுளதோ."

**வேறுபாட்டொழிப் பணி**

*இதுவும் ஒழிப்பணி வகைகளுள் ஒன்று உவமேயத்தில் மிகுத்தற் பொருட்டு மற்றொரு பொருளின் வினையை ஒழிப்பதாம்.*

**எடு :-**

"தெரியு மிதுதிங்க ளன்று செழும்பூண்
அரிவைமுக மேதிங்க ளாம்."

*இதில், திங்களின் வினை அதனிடத்து ஒழிக்கப்பட்டு உவமேயமாகிய முகத்தில் கூறப்பட்டது.*

**வேற்றுமை யணி**

வெளிப்படையாகக் கூறுங் கூற்றினாலாவது குறிப்பினாலாவது ஒப்புடைய இருபொருளை ஒருபொருளாக வைத்துக் கூறிப் பின்னர் இவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்லுவது வேற்றுமை யணியாகும்.

**எடு :-**

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
மறுவாற்றும்; சான்றோர் அஃதாற்றார்; தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்."

இதில், திங்களுக்கும் சான்றோருக்கும் ஒப்புமை கூறிப் பின்னர் இரண்டற்கும் வேற்றுமை கூறியதைக் காண்க.

**வேற்றுமை யுருவகம்**

உவமேயம் உவமானம் ஆகிய இரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் காட்டிப் பின் அவற்றுள் வேற்றுமை தோன்ற உருவகம் செய்து உரைப்பது வேற்றுமையுருவகமாகும்.

**எடு :-**

"வையம் புரக்குமான் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும் - கையாம்
இருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கும்
ஒருகார்ப் பருவமுடைத்து."

இதனுள் குணப் பொருளையும், முக்கியப் பொருளையும் வையம் புரக்கும்' என் றொப்புமை காட்டிக், 'கைக் காருக்குப் பருவமில்லை; ஏனைக் கார் பருவமுடைத்து" என வேற்றுமைப் படுத்திக் கூறினமையைக் காண்க.

**வேற்றுப் பொருள் வைப்பணி : (அ)**

பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும் சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் உறுதிப்படுத்திக் கூறுவது வேற்றுப் பொருள் வைப்பு என்னும் அணியாம்.

**எடு :-**

"புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன் - மறைந்தான்

புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்?"

*இதில் முன்னிரண்டு அடிகளில் கூறப்பட்ட 'கதிரவன் மறைவு' சிறப்புப் பொருள்; பின்னிரண்டு அடிகளில் சொல்லப்பட்ட 'உலகத்தில் தோன்றியவர்கள் இறப்பார்கள்' என்பது பொதுப் பொருள்.*

*சிறப்புப் பொருளை உறுதிப்படுத்தி முடிப்பதற்குப் பொதுப் பொருள் கூறப்பட்டிருக்கிறது.*

**வேற்றுப் பொருள் வைப்பணி : (ஆ)**

*ஒரு பொருளின் திறத்தைக் கூறத் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு வலிமையுடைய பிறிதொரு பொருளை உலக மக்களால் அறியப்படும் முறையில் வைத்துக் கூறுவது வேற்றுப் பொருள் வைப்பென்னும் அணியாம்.*

**எடு :-**

"நிறைவாரி யைத்தாண்டி நின்றா னனுமன்
அறைபெரியோர்க் கென்னோ அரிது."

❀ ❀ ❀